

# எழுத்தாளன்

**EZHUTHALAN**

சிறப்பு மலர்



well-remembered
name for Quality
and Service

# Vincents

**For Aerated Waters**
**Bread, Cakes, Biscuits Etc.**
**Restaurateurs & Caterers**

Head Office: **TIRUCHIRAPALLI.**
Branches: Madras, Madura, Tinnevelly, Salem, Coimbatore, Kumbakonam & Karaikudi.

சிறப்பு மலர்

எழுதுகோல் தெய்வம்
இந்த எழுத்தும் தெய்வம்

CONNEMARA PUBLIC LIBRARY
26 NOV 1963
MADRAS

# எழுத்தாளன்

தமிழ் எழுத்தாளர்களின் சொந்தப் பத்திரிகை

**EZHUTHALAN WRITERS' OWN PUBLICATION**

TAMIL & ENGLISH MONTHLY

**FORMERLY THE WRITER**

ஆசிரியர் அ.வெ.ர. கிருஷ்ணசாமி

இடையின்றி அணுக்க ளெலாஞ் சுழலுமென
இயல் நூலார் இசைத்தல் கேட்டோம்
இடையின்றிக் கதிர்க ளெலாஞ் சுழலுமென
வானூலார் இயம்புகின்றார்
இடையின்றித் தொழில் புரிதல் உலகினிடைப்
பொருட் கெல்லாம் இயற்கையாயின்
இடையின்றிக் கலை மகளே! நினதருளில்
எமதுள்ளம் இயங்கொணாதோ. —பாரதி.

★

விலை: ரூ. 4-00.

★

எழுத்தாளன் அலுவலகம்,
24, தேரடிக் கடைத்தெரு :: திருச்சிராப்பள்ளி-2.

# பொருள் அடக்கம்


| எண் | தலைப்பு | | | பக்க எண். |
|---|---|---|---|---|
| 1. | தலையங்கம் | — | | 1 |
| 2. | மலர் மணம் | — | | 3 |
| 3. | உள்ளுணர்வு பெறுவீர் | — | டாக்டர் ராதாகிருஷ்ணன் | 5 |
| 4. | ஆக்க பூர்வமான சர்ச்சை தேவை | — | என். மகாலிங்கம் | 7 |
| 5. | கடிதங்களில் பாரதி | — | ரா. அ. பத்மநாபன் | 10 |
| 6. | இலக்கியம் எதற்கு? | — | பேராசிரியர் அ. சீனிவாச ராகவன் | 13 |
| 7. | பேனா முனை | — | சுவாமி சுத்தானந்த பாரதியார் | 15 |
| 8. | புதியன புகுதல் | — | கு. அருணாசலக் கவுண்டர் | 16 |
| 9. | சிந்தனைத் தொடர்பு | — | டாக்டர். மெ. சுந்தரம் | 18 |
| 10. | பர்மிய மொழியில் திருக்குறள் | — | நாக. வேலாயுதம் | 20 |
| 11. | கல்வியிற் கரையிலாக் காசி | — | பேராசிரியர் கிருஷ்ண மோகன் குப்தா | 22 |
| 12. | மட்டக் களப்புத் தமிழகம் | — | அ. வல்லநாட்டான் | 24 |
| 13. | நதியின் கரையில் | — | டி. எஸ். கே. | 25 |
| 14. | பாசத்தின் பிழை | — | வல்லிக்கண்ணன் | 29 |
| 15. | திருகுவலி | — | "ஸ்ரீ ரா" | 34 |
| 16. | இதயம் இருப்பது ஏன்? | — | கோவி மணிசேகரன் | 36 |
| 17. | எதற்காக ரேடியோ நாடகம்? | — | சுகி. சுப்பிரமணியன் | 39 |
| 18. | ஜல சமாதி | — | "மஹி" | 42 |
| 19. | எது கதை? | — | "மாயாவி" | 46 |
| 20. | சில பச்சை உண்மைகள் | — | நா. பார்த்தசாரதி | 48 |
| 21. | எழுத்தாளரின் இன்றைய கடமை | — | அ. மு. பரமசிவானந்தம் | 51 |
| 22. | எழுத்தாளன் ஆவதென்றால்? | — | டி. என். சிவதாணு | 52 |
| 23. | கண்ணகியின் தவறு | — | கருமுத்து தி. மாணிக்கவாசகம் | 53 |
| 24. | நடிப்புச் சீர்திருத்தம் | — | தி. க. ஷண்முகம் | 55 |
| 25. | புதுமை வேண்டும் | — | புலவர் சி. அரசப்பனார் | 58 |
| 26. | உரிமை | — | ஏ. எஸ். ராகவன் | 61 |
| 27. | விளிநயம் | — | இரா. இராதாகிருஷ்ணன் | 65 |
| 28. | கலை என்றால் என்ன? | — | கலை அன்பன் | 68 |
| 29. | பாமரக் கவிஞர்கள் | — | கனக சவுந்தரி இளந்திரையன் | 70 |
| 30. | கர்வம் | — | கவிஞர் துரைசாமி | 72 |
| 31. | இரு கடிதங்கள் | — | எஸ். சுப்பையன் எம். ஏ. | 75 |
| 32. | அமைச்சூர் நாடகம் | — | ரா. நீலமேகம் | 77 |
| 33. | காலம் | — | ஆ இரத்தினவேலு | 80 |
| 34. | புலி வந்தது | — | தி. சா. ராஜு | 81 |
| 35. | மரபு மறவேல் | — | சித்தலிங்கம் | 84 |
| 36. | இலக்கிய நிருபர்கள் தேவை | — | தம்பி சீனிவாசன் | 85 |
| 37. | மாமழை | — | பி. ஜே. லூயிஸ் | 86 |
| 38. | ஒன்றே குலம் ஒருவனே தேவன் | — | வா. கோ. பா. | 88 |
| 39. | வயதின் குற்றம் | — | கே. ஜெயலக்ஷ்மி | 90 |
| 40. | சகோதர பாசம் | — | செல்லம் | 94 |
| 41. | ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு | — | பி. ராமச்சந்திரன் | 96 |
| 42. | அறிமுகம் | — | பி. எஸ். ஆர். ராவ் | 97 |
| 43. | பரிபாஷை | — | மாறன் | 98 |
| 44. | இந்திய நாணயங்கள் | — | க. துளசிராமன் | 102 |
| 45. | இரவும் பகலும் | — | ராஜம் கிருஷ்ணசாமி | 106 |
| 46. | சோலையில் புகுவோர்க்கு | — | ராதிகா | 108 |
| 47. | நிறைவு | — | உமா குருமூர்த்தி | 110 |
| 48. | மலரா மொட்டு | — | "ஜீவா" | 115 |
| 49. | சின்னப் பெண்ணே! | — | அய்யம்பேட்டை அமுது | 123 |
| 50. | இருப்பும் சிரிப்பும் | — | புரிசை சு. முருகேசன் | 124 |

| எண் | தலைப்பு | | | | பக்க எண் |
|---|---|---|---|---|---|
| 51. | தென்னாட்டுத் திருக்கோயில்கள் | — | வி. வி. திலக் சாஸ்திரி | ... | 130 |
| 52. | ஓதாமல் ஒரு நாளும் | — | கே. எஸ். மஹாலிங்கம் | ... | 140 |
| 53. | விதியின் விளையாட்டு | — | கி. ரா. ஷண்முகம் | .... | 141 |
| 54. | பயிர்த் தொழிலில் பண்டைய தமிழகம் | — | ரகுபதி சாமிநாதன் | ... | 143 |
| 55. | கவிஞர் ரவீந்திரர் | — | விஷ்ணு பாத பட்டாச்சார்ஜி | ... | 146 |
| 56. | கம்பனின் சோக நாடகம் | — | ரா. கி. சாரி | .... | 148 |
| 57. | Arround Temples of Art | — | T. M. Bhaskar Thondaiman M.A., I.A.S. | | 152 |
| 58. | Greatness of Tamil Literature | — | Kali Prasad Khaidan, Bar-at-law, | ... | 155 |
| 59. | Kalki : A- Profile | — | PA. NAA. Thiyagarajan | .... | 161 |
| 60. | Tamil Literary Journals | — | Somalay | ... | 163 |
| 61 | .Tamil Nad and Bengal | — | Dr. Suniti Kumar Chatterji | ... | 166 |
| 62. | Nellaiappar or Lord of the Paddy. | — | L. C. Richard | ... | 167 |
| 63. | The Glory of the Holy Galaxy | — | G. Vanmikanathan | .... | 170 |
| 64. | Kannan-My Lover | — | V. G. Srinivasan | ... | 172 |
| 65. | The Beacon Festival At Tiruvannamalai | — | V.V. Tilak Sastry | ... | 173 |
| 66. | Tirukovilur | — | G. C. Pattabiram | .... | 177 |
| 67. | Culture and the University | — | Kodumudi Rajagopalan | .... | 179 |
| 68. | பாரதி காட்டும் பாதை | — | ரா. உமாமகேசுவரன் | ... | 184 |
| 69. | யான் பெற்ற இன்பம் | — | சாலை இளந்திரையன் | ... | 185 |
| 70. | செஞ்சொற் சிலம்புடையாள் | — | நாவற்குழியூர் நடராஜன் | ... | 186 |
| 71. | எனது பகைவன் | — | குயிலன் | ... | 187 |
| 72. | வரம் | — | என், எஸ். சிதம்பரம் | .... | 187 |
| 73. | நேரு மகன் | — | ஜகன் | ... | 187 |
| 74. | எழுத்தாளர்க்கு | — | அரங்க சீனிவாசன் | .... | 188 |
| 75. | நீ போய்ச் சொல்வாய் | — | கவிஞர் சக்திக் கனல் | .... | 188 |
| 76. | காணிக்கை | — | கலைமோகன் | ... | 189 |
| 77. | மனை விளக்கு | — | தமிழழகன் | .... | 189 |
| 78. | பெருமூச்சு | — | ரெ. பொன்ராசன் | ... | 189 |
| 79. | தித்திக்கும் தேன் தமிழ் | — | இளங்கோவன் | ... | 189 |
| 80. | பாவமுதே கண் வளராய் | — | தே. ப, பெருமாள் | ... | 190 |
| 81. | கவிதை | — | என். ராகவன் | ... | 190 |
| 82. | மனப் பறவையே | — | கவிஞர் இளங்கம்பன் | .... | 190 |
| 83. | என்றாலும் சிறப்புறுவேன் | — | ம, க. சிவசுப்ரமண்யன் | ... | 191 |
| 84. | உலகம் வாழ | — | தமிழ்ச் செழியன் | ... | 191 |
| 85. | நீ இருக்கப் பயமில்லை | — | இரா. பாண்டுரங்கம் | ... | 191 |
| 86. | செந்தாமரை நீயோ ? | — | எம். மாரிமுத்து | ... | 191 |
| 87. | வங்க இலக்கிய நிலையங்கள் | — | சோமலே | ... | 192 |
| 88. | காந்தியடிகள் கற்ற குறள் | — | காந்தி அண்ணாமலை | ... | 193 |
| 89. | சில சொந்த நினைவுகள் | — | பி. என். வெங்கடாச்சாரி | ... | 196 |
| 90. | ஜீவசங்கமம் | — | தேவிகா | ... | 198 |
| 91. | மாதவி | — | ரமணி சுபாஷ் | .... | 200 |
| 92. | சிந்தித்துச் செயல்படுவோம் | — | டி. எல். பஞ்சாபகேசன் | ... | 202 |


## குழந்தை இலக்கியப் பிரிவு


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 93. | இலக்கியம் படைப்போருக்கு | — | தமிழ்ப் பெரியார் மயிலை சிவமுத்து | .... | |
| 94. | பத்து பைசா பலூன் | — | குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா | ... | |
| 95. | உலக இயல்பு | — | நாக முத்தையா | .... | |
| 96. | கூண்டுக் கிளி | — | தணிகை உலகநாதன் | ... | |
| 97. | ஆசிரியர் பெருமை | — | வே. அய்யாசாமி | ... | |
| 98. | முல்லை | — | தென்றல் | .... | |
| 99. | காளைக் கன்று | — | எ. ந. கணபதி | .... | |
| 100. | நிமிர்ந்து நில்லடா | — | டி. எஸ். மணி | ... | |
| 101. | சிலந்தி சொல்லும் சேதி | — | எஸ். பி. அமலன் | .... | |
| 102. | காக்கை | — | ஆதி. சீனிவாசன் | ... | |
| 103. | தாத்தா பெருமை | — | இரா. ஷண்முகம் | ... | |
| 104. | நல்லவை கேள் | — | அரசெயினன் | ... | |
| 105, | மலர்கள் | — | தெ. தமிழ்க் குமரன் | .... | |
| 106. | கைக்குட்டை | — | அழகனார் | .... | |
| 107. | தம்பியின் ஆசை | — | திருச்சி பாரதன் | ... | |
| 108. | நன்றி | — | ஆசிரியர் | .. | 210 |

# INDEX to ADVERTISERS


| | | Page |
|---|---|---|
| 1. | A. V. M. Studio .... ... | II |
| 2. | Abbai Maligai .... — | 205 |
| 3. | Ammapet Hand-Loom Weavers' Co-op. Society Ltd. ... | 87 |
| 4. | Andipatti Co-operative Stores Ltd. ... | 194 |
| 5. | Anupparpalayam Brass Vessel Workers' Co-op Society Ltd. .... | XVI |
| 6. | Arni Co-operative Town Bank Ltd. ... | 144 |
| 7. | Arunachalam Chettiar Sons, A. P. ... | 119 |
| 8. | Ashtanga Ayurveda Sala — | 99 |
| 9. | Attayampatti Hand-Loom Weavers' Co-op Society Ltd. ... | 76 |
| 10. | Apeejay Group Enterprises ... | 182 |
| 11. | Bank of Madurai Ltd. .... | 207 |
| 12. | Babuji Hand-Loom Weavers' Society ... | 208 |
| 13. | Bhavanarishi Padma Salia Weavers' Co-op Society Ltd ... | 204 |
| 14. | Blue Mountain Estates & Industries Ltd., | 209 |
| 15. | Bombay Ananda Bhavan .... | 208 |
| 16. | Chain Engineering Co. .... | VI |
| 17. | Chakrapani Chetty & Sons (P) Ltd., | 101 |
| 18. | Chandra Corporation ... ... | 150 |
| 19. | Chennimalai Weavers' Co-op. Society | V |
| 20. | Co-operative central Bank Ltd., Tanjore. .... | XVI |
| 21. | Co-operative Fire & General Insurance. | 122 |
| 22. | Duraisamy Pillai & Bros. S. ... | 175 |
| 23. | De-Luxe Photo Service .... | 125 |
| 24. | Dhandayudapani Foundry Private Ltd. | XII |
| 25. | Dindigul Leather Workers' Co-op. Society Ltd. ... | XVIII |
| 26. | Fertilisers & Chemicals Travancore Ltd. | 127 |
| 27. | Government of Madras .... | I |
| 28. | Government of Madras ... | III |
| 29. | German Radio House .... | 79 |
| 30. | Geetha Paper Agencies .... | 91 |
| 31. | Grand Trunk Roadways .... | 149 |
| 32. | Guruvarajapet Co-operative Weavers' Society Ltd. ... | 184 |
| 33. | Indo Swiss Synthetic Gem Mfg. Co. Ltd., ... | XIX |
| 34. | Jakkampatti Sri Ayyappan Saliar H. L. Weavers' Co-operative Society Ltd., .... | 205 |
| 35. | Kali Aerated Water Works .... | XIV |
| 36. | Kanaka Metal Industries ... | XIV |
| 37. | Kandaswamy Pillai Son S. V. .... | 47 |
| 38. | Karur Vysya Bank Ltd., ... | 59 |
| 39. | Krishna Rice & Oil Mills .... | 199 |
| 40 | Kumudam ... | XIX |
| 41. | Kanaka Soap Works. .. | XX |
| 42. | Madras Type Foundry ... | VII |
| 43. | Dr. Mathuram Sons. A. ... | IX |
| 44. | Money R. S. .... | X |
| 45. | Mathurai Bharathi Weavers' Co-operative Society Ltd., ... | XVIII |
| 46. | Mathurai District Central Co-operative Bank Ltd., .... | 169 |
| 47. | Mathurai Industrial Weavers' Co-operative Society Ltd. ... | 206 |
| 48. | Mathurai Ponvizha Weavers' Co-operative Society Ltd., ... | 207 |
| 49. | Mathurai Sri Srinivasa Perumal Weavers' Co-operative Society Ltd., .... | 204 |
| 50. | Mathurai Thilakar Weavers' Co-operative Society Ltd., — | 103 |
| 51. | Mathurai Tamilnad Weavers' Co-operative Society Ltd., ... | XVI |
| 52. | Mathurai Thiru. Vi. Ka. Weavers' Co-operative Society Ltd., ... | XIV |
| 53. | Mathurai Thiruvalluvar Weavers' Co-operative Society Ltd., ... | 176 |
| 54. | Mathurai Vasuki Saliar Weavers' Co-operative Society Ltd., .... | 204 |
| 55. | Mangalam Kizhar H. L. Weavers' Co-operative Society Ltd., — | 111 |
| 56. | Mani's Confectionery Works ... | 126 |
| 57. | Madam Santhi Vinayagar Weavers' Co-operative Society Ltd., ... | 184 |
| 58. | Mettur Chemical & Industrial Corporation Ltd., ... | 67 |
| 59. | Munnal Panjamuka Vinayagar West H. L. Weavers' Co-operative Society Ltd. | 100 |
| 60. | Munnal Panjamuka Vinayagar East Weavers' Co-operative Society Ltd. ... | 206 |
| 61. | Meenakshi Paper Stores .... | 176 |
| 62. | Meenakshi Puthaka Nilayam ... | 166 |
| 63. | Meenakshi Group of Mills — | 160 |
| 64. | Nathan Stores .... | 78 |
| 65. | Narasingapuram Valluvar Weavers' Co-operative Society Ltd., ... | 150 |
| 66. | Narayanaswamy Iyer P. R. | III cover |
| 67. | Narayanaswamy Iyer & Co., P. R. ... | 201 |
| 68. | Narayana Vilas Coffee Hotel .... | 206 |
| 69. | Nelson & Co ... | XVII |

| | | Page |
|---|---|---|
| 70. | Newton Type Foundry ... | X |
| 71. | M/s Norton & Co. ... | XIII |
| 72. | The Omega Insulated Cable Co. ... | 183 |
| 73. | Pathi & Co., R. S. ... | XV |
| 74. | Pasupathi Maligai & Ghee Stores ... | 207 |
| 75. | Ponniah Nadar & Sons A. V. ... | 195 |
| 76. | Punchai Sangenthi Padmasala H. L. Weavers' Co-operative Society Ltd., ... | 204 |
| 77. | Puthuppunal Pathippagam ... | 208 |
| 78. | Puvalur Sri Ramakrishna Vilas ... | 129 |
| 79. | Puvalur Padmasala H. L. Weavers' Co-operative Society Ltd. ... | 206 |
| 80. | P. V. S. Meenambika Devanga Weavers' Co-operative Society Ltd. ... | 203 |
| 81. | Rathinam T. A. S. ... | 145 |
| 82. | Ramanathapuram Dt. Co-operative Central Bank Ltd. ... | 175 |
| 83. | Ramaswami Chettiar & Sons A.K.M. ... | 176 |
| 84. | Radio House ... | 178 |
| 85. | Rajendra Tutorial College | Last Cover |
| 86. | Radhakrishna Chettiar Sons G. ... | XX |
| 87. | Sri Rama Vilas Pathirakadai ... | 64 |
| 88. | Sahitya Akademy ... | IV |
| 89. | Samson Areated Water Works ... | XX |
| 90. | Sabapathi S. ... | 151 |
| 91. | Screwmans ... | 154 |
| 92. | Selvam Photo Studio ... | 74 |
| 93. | Sellur Weavers' Co-operative P. & S, Society Ltd., ... | 203 |
| 94. | Shanmugam & Co. N. V. | Art Insertion |
| 95. | Shenbaka Nadar AR. A. & Valasubramanya Nadar P.V.P. Co., ... | 199 |
| 96. | Silk House ... | 207 |
| 97. | Subbiah K. P. ... | 205 |
| 98. | Sundara Vilas ... | VI |
| 99. | Swami J. M. ... | 128 |
| 100. | The South India Co-operative Spinning Mills Ltd., ... | VIII |
| 101. | The South Madras Electric Supply Corporation Ltd. ... | 203 |
| 102. | Tamil Nad Daily ... | 113 |
| 103. | Tamil Nad H. L. Weavers' Co-operative Society Ltd. .. | XI |
| 104. | Tiruchirapalli Co-operative Metal Rolling Mills Ltd. ... | 142 |
| 105. | Tiruchirappalli Dt. Co operative Supply & Marketing Society Ltd., ... | XVI |
| 106. | The Tiruchirappalli Dt. Co-operative Central Bank Ltd. ... | 149 |
| 107. | The Tiruchirappalli Market Committee | 107 |
| 108. | Varadarajan & Bros. K. R. ... | X |
| 109. | Vincent & Co (P) Ltd. | II Cover |



இன்றே இங்கே இதுவே வீடென
இனிதின் உணர்த்திய எங்கள் உடையவர்




உயிர்களெலாந் தெய்வமன்றிப் பிறவொன்றில்லை
ஊர்வனவும் பறப்பனவும் நேரே தெய்வம்
இயலுகின்ற ஜடப்பொருள்களனைத்தும் தெய்வம்
எழுதுகோல் தெய்வம் இந்த எழுத்தும் தெய்வம்

# தமிழ்த் தொண்டர் திருவடிகளுக்கு

உலக மெல்லாம் ஒரு பெரும் கனவு. அந்தக் கனவுக்குள் மானிட வாழ்க்கை ஒரு குட்டிக் கனவு. இந்தச் சிறு கனவு வாழ்க்கையில் அடுத்த வரைப் பகைத்து, வெறுத்துக், கலகமிட்டு, இடர் செய்து, அகங்கரித்துக், கவலைப்பட்டு எந்த மனிதனும் மறைவது நீதமல்ல; அது வாழ்க்கையுமல்ல.

பெறுதற்கரிய பிறப்பில், செயற்கரிய செயல் செய்து, தான் இன்புற்று, மற்றோரையும் இன்புறச் செய்து வாழ்வாங்கு வாழ்வதே வாழ்க்கை. இந்தப் பேருண்மையை உலகத்திற்கு எடுத்துரைத்த மகரிஷிகள், பக்தர்கள், மேதைகள்,—இவர்களின் மரபின் தோன்றல்களே இன்றைய எழுத்துலகச் சிற்பிகள்.

ஏடும் எழுத்தாணியும்கூட இல்லாத காலம் தொட்டுத் தாம் கண்ட பேருண்மைகளை மக்கள் சமூகத்திற்கு எடுத்துரைத்து, மக்களை மக்களாக வாழச் செய்த அந்தப் பேருபகாரிகளே இன்றைய எழுத்தாளர்களின் முன்னவர்கள்.

தொடர்ந்து படரும் மக்கள் சமுதாயத்திற்குத் தொடர்பு அறுது, பேருண்மைகளை எடுத்துக் கூறியும், எழுதி வைத்தும், சிரிக்கப் பேசியும் அழ வைத்தும், கசப்பானவைகளாக இருந்த போதும் அன்புடன், பரிவுடன் உண்மைகளைக் கூறியும் வரும் எழுத்தாளர்கள், சமுதாயத்தின் காவலர்களாக என்றும் விளங்கி வருகிறார்கள். இவர்கள் இன்றைய உலகத்தின் ஆசாரியர்கள். வேதநூல் கூறும் பிராமணர்களும் இவர்களேதான்.

எழுத்தாளர்கள் சங்கம் இன்று நேற்றுத் தோன்றியதல்ல. மகரிஷி காலம் தொட்டே எழுத்தாளர்கள், படைப்பாளர்கள் சங்கம் உருப்பெற்று வளர்ந்து வந்திருக்கிறது. எழுத்தாளர்கள் சங்கம் சமயாசாரியர் காலத்து மக்கள் மேம்பாட்டிற்காக உத்தி பிரிந்து வழி காட்டிய போதிலும், பின்னர் பெரியோர்கள் சொன்ன கருத்தில் கவனம் கொள்ளாது சமய, மதப் பிரிவுகளின் பலாபலத்தை வளர்த்து மக்கள் திசை மாறிப் போனதும் உண்டு.

சாதி, மத, இன வேறுபாட்டால் பிரிவுபட்ட சமுதாயம், தமிழகத்தைப் பொறுத்தவரை, தமிழ் மொழி மூலம் ஒரு குடும்பப் பாசத்தை வளர்த்தே வந்திருக்கிறது. சைவரும், வைணவரும், பௌத்தரும், சமணரும், இஸ்லாமியரும், கிருஸ்தவரும் குணத்தால், கொள்கையால் வேறுபட்டாலும் தமிழ் வளர்க்கும் குறிக்கோளில் அனைவரும் ஒன்று பட்டு சிறந்தே விளங்கி வந்திருக்கிறார்கள். இவர்கள் காட்டிய தமிழ் அன்புக்கு எதிர் நிற்கக் கூடியவர்கள் என, இன்றைய காலத்தும் எவரும் எழுந்து நிற்க முடியாது என்று துணிந்து கூற முடியும்.

கருத்து, லட்சியம், மார்க்கம், குறிக்கோள் அடிப்படையில் எழுந்த எழுத்தாளர் சங்கங்கள், வேத காலம் முதல், மொழி, எல்லைக்கப்பாலும் நிலப்பரப்புக்கப்பாலும் சென்று பணி புரிந்த போதும், தமது மொழியையும் அதன் சிறப்புமிக்க வளத்தையும் பரப்பத் தவறவில்லை. அதேவழியில், அதே நிலையில் இன்று தமிழ் எழுத்தாளர் சங்கம் பணி புரிந்து வருகிறது.

படைப்பிலக்கியம் உருவாக்குவோர் சங்கம் கூடிச் சாதிப்பதற்கு என்ன இருக்கிறது என்ற முனகல் சப்தம் காதில் விழாமல் இல்லை. தனித்துக் கடுந்தவம் செய்து சித்தியைப் பெற்ற மகா யோகியும் கூட, கானகத்தை விட்டு நாட்டுக்கு வந்து தெருத் தெருவாக, வீடு வீடாக நின்று மக்களின் நிலையை கணிக்கவேண்டும் என்று கூறுகிறது நமது ஞான மார்க்கம். எழுத்தாளனும் இதற்கு விதிவிலக்கு அல்ல. தான் மற்றவர்களுடன் ஒன்றிக் கலந்து பழகமுடியாதவன் தன் எழுத்தால், சொல்லால் மக்கள் சமுதாயத்தை ஒன்றுபடுத்த முடியும் என்று எவ்வாறு கருதலாகும் ?

தன் சிந்தனை வலிமையாலும், கற்பனைத் திறத்தாலும், தான் கண்ட சத்திய தரிசனக் காட்சியாலும் தனித்துத் தன்னிச்சையாக வாழும் அந்தக் கருத்தாளனை, எழுத்தாளனை, சொல்லாளனை மக்கள் சமூகத்தின் மத்தியில் கொண்டு வந்து நிறுத்தி, பேசத் தெரியாத மக்களின் பிரதிநிதியாக அவனைப் பேச வைப்பதும், காலத்தின் தேவையை அவன் உணர வைப்பதும் எழுத்தாளர் சங்கத்தின் திருப்பணியாகும்.

"நான் சொல்வதைப்போல் செய். செய்வதைப் போலச் செய்யாதே" என்பது உழுத்துப் போன சொல்லடுக்கு. சொல்லும் செயலும் ஒன்று பட்டாலன்றி மக்கள் மனதில் எவரும் இடம் பெற முடியாது தவறி இடம் பெற்றாலும் அது நிலைத்து நிற்காது.

கேவலம் செத்தை என்று ஒதுக்கப்படும் சிறிய வைக்கோல் துணுக்குகளை ஒன்று சேர்த்து ஒரு கயிறுக்கினால் மதயானையைக் கூட கட்டிவிட முடியும். மென்மையான பஞ்சை எடுத்து நூலாக்கினால் மானத்தை மறைக்கத் துணியாக்கக்கூடும். தனித்து விழும் மழைத் துளிகளே ஒன்று சேர்ந்து நதிப் பிரவாகமாகவும், கடல் நீராகவும் விளங்குகிறது. கூட்டுறவு, சங்கமம், உலகுக்கு எடுத்துக் காட்டும் மாறாத நியதிகள் இவை.

அணுசக்தியைப் பிளக்க வேறுபாடின்றி அனைவரும் ஒன்று கூடினர். அதனைப் பயன்படுத்தும் முறையில் வேறுபட்டதால் உலகம் அமைதி இழந்து அவதியுறுகிறது. விஷத்தன்மை கொண்ட ஆயுத பலத்தால், தமது பலாபலத்தை உருவாக்கும் வல்லரசுகளும், அதிகாரத்தைக் கைப்பற்ற வெறிகொண்டு, மக்களைத் திசை திருப்பும் தீயசக்திகளும், குழப்பத்தை உருவாக்கித் தம்மை அதில் உருவாக்கிக்கொள்ள நினைக்கும் அசுர சக்திகளும் குட்டிக் கனவான மனித வாழ்க்கையை சீரழிக்கப் பாய்ந்தோடி வருகையில், அந்தத் தீய சக்திகளைத் தடுத்து நிறுத்தி, மக்களைக் காத்து அவர்களை நல்வழியில் கொண்டு செலுத்தச் சிந்தனை வலிவும், சொல்லாற்றலும், எழுத்துத் திறமும், மக்கள் உள்ளத்தைப் புரிந்து நல்வழி காட்டும் பெருந் திறலும் உள்ள எழுத்தாளர்கள் தங்கள் தனிநிலை விட்டு ஒன்றுபட வேண்டாமா?

இந்தக் குறிக்கோளைத் தனது லட்சியமாகக் கொண்டு செயலாற்றி வருகிறது தமிழ் எழுத்தாளர் பெருமன்றம். எழுத்தாளர்கள் நடத்தும் விழாக்களில் ஒன்றுபட்டு மக்கள் காட்டும் ஆதரவும், ஆர்வமும், உற்சாகமும், பெருமிதமும், உள நிறைவும் இதனை மெய்ப்பிக்கின்றன.

ஆசாரியன் கட்டளையை மீறிய பாபத்திற்கு நரகமே கிட்டும் என்றறிந்தும், தான் சொல்லும் ஒரு தெய்வீக வாசகத்தின் மூலம் அதனைக் கேட்கும் மக்கள் அனைவரும் மேனிலையைப் பெறுவார்கள் என்றறிந்ததும், கோபுரத்தின் உச்சி மீதேறித் தன் சக்தி கொண்ட மட்டும் உரக்கக் கூவித் தெளிபொருள் உரைத்த செந்தமிழ்ச்செல்வர் ஸ்ரீ ராமானுஜர் பொன்னடிகளுக்கு எழுத்தாளன் சிறப்பு மலரை உரிமையாக்கி வணங்குகிறோம்.

தாங்கள் பெற்ற ஞானமும், நெஞ்சுரமும், சித்த வலிமையும், மெய்த்துணிவும், பெருங்கருணையும் தமிழ் எழுத்தாளர் ஒவ்வொருவருக்கும் கிட்ட வேண்டும் என்று அநதத் தூய தமிழ்த் தொண்டர் திருவடிகளை கண்ணிலொற்றி வணங்கும் தமிழ் எழுத்தாளன்,

*அ. வெ. ர. கிருஷ்ணசாமி,*
ஆசிரியர்.




தேசபக்தியும் தெய்வ நம்பிக்கையும், தெளிந்த ஞானமும் உலகுக்கருளி தியாக வாழ்வுக்குத் தானே ஒரு இலக்கணமாகத் திகழ்ந்த அருள் திரு. விவேகாநந்தப் பெருஞ் ஜோதியின் நூற்றாண்டு விழாவையொட்டி அந்த திவ்யமூர்த்தியின் திருவுருவத்தை எழுத்தாளன் சிறப்பு மலர் முகப்பிலே வெளியிடுவதில் பெருமிதம் அடைகிறோம். அருட்பார்வை நிறைந்த விவேகானந்த ஞான தீபத்தின் ''தெய்வங்களாகுங்கள்! பிறரைத் தெய்வங்களாக்குங்கள்.'' என்ற சத்திய வாசகம் தமிழ் எழுத்தாளர்களுக்கு அவர் விடுத்துச் சென்ற கட்டளையாக ஏற்று உயர்வடைவதிலே மகிமையுண்டு.

''உடையவர்'' என்றால் எல்லோரும் உடையவராகிவிட முடியாது? தெய்வத்திருவருளும், செந்தமிழும் கொண்டு உடையவர் என்று உலகமெல்லாம் போற்றிப் புகழ்ந்து பொன்னடி வணங்கும் ஸ்ரீ ராமானுஜர் திருவடிகளில் எழுத்தாளன் சிறப்பு மலரை உரிமையாக்கி அந்த திருவுருவத்தை வெளியிடுவதிலே நிறைவு இருக்கிறது.

இம்பர் வாழ்வின் இறுதி கண்டு உண்மையின் இயல்புணர்த்திய ஆதிசங்கரரின் திருவுருவும், பரம் பொருட்பற்றே சிற்றுயிர்ப் பாங்கெனும் மகத்துவங் கண்ட மத்துவக் குருபரன் திருவுருவும் எழுத்தாளன் சிறப்பு மலரில் அணி செய்கிறது. சமயாசாரிகள் மூவரும் எழுத்துலக முன்னவர்கள். மொழியின் எல்லை கடந்து பாரதத்தை என்றும் தமது அருளாட்சியால் ஆண்டு வரும் அருளாளர்கள். இன்றைய தமிழ் எழுத்தாளர்களும் இத்தகைய உன்னத நிலைக்கு உயர வேண்டும் என்ற தாபத்தை விளக்குவதற்கு முப்பெரும் திருவுருங்களை வெளியிட்டு மகிழ்வதில் பொருள் இல்லாமல் போகவில்லை.

மாண்புமிக்க நமது ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் அண்மையில் தென்னகத்துக்கு வருகை தந்தபோது ஆங்காங்கு அவர் நிகழ்த்திய சொற்பொழிவுகளில் எழுத்தாளர்களுக்கு விடுக்கும் நல்லுரையும், கருத்துரையும் நிறைந்திருந்தது. அதனைத் தொகுத்துச் சொல்லேர் உழவர்களின் சிந்தனைக்குவைப்பதில் பயன் மிக்க செயல் செய்தோம் என்ற நிறைவு கொள்ளுகிறோம்.

தேசத்தின் வளத்தை சீர்படுத்த, தேசீய ஒருமைப்பாடு அசைக்க முடியாத அளவு நிலைபெற, ஆக்கபூர்வமான யோஜனைகளை அழகு தமிழில் கொடுத்திருக்கிறார், கோவை திரு. என். மகாலிங்கம். அவரது கருத்து நிறைவேறுமானால், பிரிவினைக் கிளர்ச்சியும் மொழி சிக்கலும் நிச்சயம் தீர்ந்துபோகும்.

பாரதியின் இலக்கியங்களில் ஊறித் திளைக்கும் தமிழன்பர்களுக்குப் பாரதியின் கடிதங்களைத் தேடி சிறப்புடன் தொகுத்துக் கொடுத்திருக்கிறார் திரு. ரா. அ. பத்மநாபன். பாரதியின் கடிதங்களில் உள்ள சிறப்பை, தெளிவை, நம்பிக்கையை, பாரதியின் எழுத்தாண்மையை பக்தியுடன் தொகுத்துக் கொடுக்க ரா. அ. பத்மநாபன் கிடைத்தது நமது பாக்யம்.

இலக்கியம் எதற்கு? என்று கேட்பவர்கள் நம்மிடையே இல்லையென்று சொல்ல முடியுமா? எத்தனையோ பேர் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களெல்லாம், தயவு செய்து அதிகமில்லை, இரண்டே பக்கங்களில், அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றத்தின் தலைவர் பேராசிரியர் திரு. அ. சீனிவாசராகவன் தரும் விளக்கத்தைப் படித்துப் பயன் அடைவார்களாக. மனிதன் வாழவேண்டாமா? அதற்குத்தான் இலக்கியம் என்று பரிவோடு சொல்லுகிறார் அவர்.

தனித்தமிழ் வாதிகளிடம் நமக்கு நிறைந்த அனுதாபம் உண்டு. புதியன புகுதல் என்ற தலைப்பில் பேராசிரியர் திரு. கு. அருணாசலக் கவுண்டர் அவர்கள் அடித்துக் கூறும் கருத்துக்களைப் படிப்பவர்கள் உள்ளத்தில் தனித்தமிழ் வாதிகளிடம் பரிதாபமே ஏற்பட்டுவிடும். ஆகாய தாமரை, குதிரைக் கொம்பு போன்று தனித் தமிழ் என்பதும் ஒரு இல்பொருள் தானே?

தமிழ் மொழி இன்னும் சிறப்புற்று உயர்வு பெற வேண்டுமானால் பிறர் சிந்தனைகளையும் ஏற்று மகிழும் உள்ளம் தமிழருக்கு இருந்தே தீரவேண்டும். உள்ளம் வளர மொழி வளரும் என்ற நல்ல மருந்தைத் தருகிறார் தமது சிந்தனைத் தொடர்பு என்ற கட்டுரை மூலம் டாக்டர். மெ. சுந்தரம் அவர்கள்.

நமது தமிழ் மறையான திருக்குறள் பர்மிய மொழியில் மொழிபெயர்ப்பு நடைபெற்று நிறைவு பெற்ற சேதியைத் தந்து பர்மிய மொழித் திருக்குறள் முதல் அடியை படம் எழுதி அனுப்பியிருக்கிறார் இரங்கூன் அன்பர் திரு. நாகவேலாயுதம் அவர்கள்.

வங்கத் தாயின் தவப் புதல்வர்களில் ஒருவரான பாரிஸ்டர். திரு. கெய்த்தான் தமிழ் இலக்கியத்தின் மகோன்னதத்தைப் பற்றி ஆங்கிலத்தில் எழுதியிருக்கும் கட்டுரையைப் படிப்பவர்கள் பூரிப்படையலாம், மிடுக்கு நடைபோடலாம். இத்தகைய சிறப்பு மிக்க பெருமகனாரின் திருக்கரத்தால் அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்ற அமைப்பு மாநாடு தொடங்கி வைக்கப்பட்டது. அவர் ஏற்றிவைத்த திருவிளக்கு அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றம்.

தமிழ் மொழிக்கும் வங்க மொழிக்கும் உள்ள தொடர்பைப் பற்றி வங்க சட்ட மன்றத்தின் தலைவரும், தமிழன்பருமான திரு. சுனீத் குமார் சட்டர்ஜீ அவர்களின் ஆங்கிலக் கட்டுரை கருத்துச் செறிந்து குறள் வடிவு கொண்டிருக்கிறது.

மகாகவி ரவீந்திரரைப் பற்றி முத்து முத்தான தமிழ் எழுத்துக்களிலே சித்தரித்திருக்கிறார் விஷ்ணு பாத பட்டாசார்ஜீ. வங்கத்தாயின் புதல்வரான இவர் தொடர்ந்து தமிழில் எழுதவேண்டும் என்ற வேண்டுகோள் விடத் தூண்டுகிறது நமது உள்ளம்.

ஹிந்தி மொழி பேராசிரியர் திரு. கிருஷ்ணமோகன் குப்தா நமது புனித பூமியாகிய காசி நகரைப் பற்றி புதுமையான கருத்தைத் தருகிறார் 'கல்வியில் கரை யிலாக் காசி' என்ற கட்டுரையில். பேராசிரியர் இப் பொழுது தமிழ் படித்து வருகிறார். அடுத்து வரும் கட்டுரைகளைத் தமிழிலேயே எழுதவேண்டும் என்று கேட்டுக்கொள்வோம்.

தமிழகம் ஒன்றல்ல; இரண்டு. இதோ, மட்டக் களப்புத் தமிழகம் என்று எத்தனை எத்தனை சுவை யுடன் புதிய புதிய சொற்களைக் காட்டி நம்மை மடக்கு கிறார் நண்பர் வல்லநாட்டான் அவர்கள்.

தென்னாட்டுத் திருக்கோவில்களைப் பற்றி எவ் வளவோ எழுதலாம். இடமில்லையே என்ற ஏக்கத் துடன் ரசத்துளிகள் போல வெகுப் பிரயாசையுடன் படங்களுடன் காட்சிக்கு வைத்து ஆசையை மூட்டு கிறார் பேரன்பர் திலக் சாஸ்திரியார் அவர்கள்.

இந்திய நாணயங்களின் வரலாற்றை சரித்திர சான்றுகளுடன் தருகிறார் திரு துளசிராமன். இலக்கிய சங்கங்களைப் பற்றி நமக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறார் திரு. சோமலெ. காந்தியடிகளின் தமிழ் எழுத்தைப் படம் பிடித்துத் தருகிறார் 'காந்தியடிகள் கற்ற குறள்' என்ற கட்டுரையில் இரங்கூன் அன்பர் திரு. காந்தி அண்ணாமலை. கல்கத்தாவிலுள்ள தேசீய நூல் நிலையத் தைப் பற்றி பேரன்பர் வெங்கிடாச்சாரியின் கட்டுரை நமக்கு ஒரு வழிகாட்டி எனலாம். தமிழில் வெளிவந்த பத்திரிகைகளைப் பற்றி கூடியமட்டும் கிடைத்த ஆதா ரங்களை வைத்து திரு. சோமலெ ஆங்கிலத்தில் கட்டுரை வரைந்திருக்கிறார். பேராசிரியர் கல்கியைப் பற்றி ஆங்கிலத்தில் மற்றவர்களுக்கு எடுத்துக் கூறு கிறார் அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெரு மன்றத்தின் செயலாளர்களில் ஒருவரான திரு. ப. ந. தியாகராஜன். திருக்கோயில்களின் சிற்ப நுணுக்கங் களைத் தமக்கே உரிய பாணியில் ஆங்கிலத்தில் சொல்லுகிறார் திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டை மான். நெல்லையப்பர் ஆலயத்தின் சிறப்புக்களை யெல் லாம் திரு. ரிச்சர்டு, கலையழகும், கருத்தழகுடனும் தொகுத்துக் கொடுத்திருக்கிறார்.

சேக்கிழார் பெருமானின் செந்தமிழ்ப் பாமாலையை ஆங்கிலத்தில் அற்புதமாக மொழிபெயர்த்துத் தருகிறார் பெரும் புலமைமிக்க திரு. வன்மீகநாதன் அவர்கள். மகாகவி பாரதியின் 'கண்ணன் என் காதலன்' என்ற பாடலை திரு. வி, ஜி. எஸ், ஆங்கிலத்தில் தந்திருக் கிறார். திருவண்ணாமலையைப் பற்றி திலக் சாஸ்திரி யாரின் கட்டுரை சிறப்புடையது, திருக்கோவிலூரைப் பற்றி திரு. ஜி. சி. பட்டாபிராமன் கட்டுரையும், நாக ரிகமும் நமது சர்வகலாசாலைகளும் என்ற தலைப்பில் கொடுமுடி ராஜகோபாலன் சிறந்ததொரு கட்டுரையை வழங்கியிருக்கிறார்.

### சிறுகதை

திருவாளர்கள் டி. எஸ். கோதண்டராமன், வல்லிக் கண்ணன், ஸ்ரீ. ரா., கோவி மணிசேகரன், மஹி, தி. சா. ராஜு, ஏ. எஸ். ராகவன், ஜீவா, கி. ரா. சண் முகம் ஆகிய ஒன்பது சிறுகதை சிற்பிகளின் எழுத்தோ வியங்கள் மலருக்கு அணி செய்கின்றன.

### கட்டுரை

திருவாளர்கள் மாயாவி, நா.பார்த்தசாரதி, லூயிஸ், வா. கோ. பா., ராமச்சந்திரன், இரத்தினவேலு, பி. எஸ். ஆர். ராவ், மகாலிங்கம், உமாமகேசுவரன், டி. எல். பஞ்சாபகேசன் ஆகிய பத்து பேருடைய கருத் தோவியங்கள் மலரில் மணம் வீசுகின்றன.

### நாடகம்

திருவாளர்கள் டி. என். சிவதாணு, தி. க. சண் முகம், வி. துரைசாமி, ரா. நீலமேகம், மாறன், சுகி சுப்ரமண்யம் ஆகிய அறுவர் நாடக இலக்கியத்தை ஆறு கோணத்தில் சித்தரித்திருப்பது மலரின் சிறப் புக்குச் சிறப்பு தருவதாகும்.

### மாதர்

திருமதிகள் கனகசவுந்தரி இளந்திரையன், ரகுபதி சுவாமிநாதன், கே. ஜயலட்சுமி, செல்லம்மாள், உமா குருமூர்த்தி, தேவிகா, ராதிகா, ராஜம் கிருஷ்ணசாமி, ரமணி சுபாஷ் ஆகிய ஒன்பது பேர் சிறுகதை, கட் டுரை, விமரிசனம், ஆய்வு ஆகிய நிலையில் நின்று தங்கள் எழுத்தோவியங்கள் மூலம் மலருக்கு மணம் தருகிறார்கள்,

### விமர்சனம்

திருவாளர்கள் பெரும் புலவர் புரிசை முருகேச முதலியார், கருமுத்து தி. மாணிக்கவாசகம், நாவலர் அரசப்பனார், பேராசிரியர் ராதாகிருஷ்ணன், சித்த லிங்கம், சுப்பையன், அ. மு. பரமசிவானந்தம் ஆகி யோரும், தம்பி சீனிவாசன், கலையன்பன், ரா. கி. சாரி ஆகிய பத்து பெரியோர்கள் சிறந்த விமரிசனம் தந்து மலரை சிறப்பித்திருக்கிறார்கள்.

### குழந்தை இலக்கியம்

திருவாளர்கள் பெரியார் மயிலை சிவமுத்து. குழந் தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, நாக முத்தையா, புலவர் தணிகை உலகநாதன், அய்யாசாமி, தென்றல், எ. ந. கணபதி, டி. எஸ். மணி, அமலன், ஆதி சீனிவா சன், இரா. சண்முகம், அரசெயினன், தமிழ்க் குமரன், அழகனார், திருச்சி பாரதன் ஆகிய குழந்தை இலக் கிய உலகத்தின் ஆதார சக்திகளாக விளங்கும் பதி னைந்துபேர் குழந்தை இலக்கியத்தைப் படைத்து தேன் சுவை சொட்டத் தந்திருக்கிறார்கள்.

### கவிதை

திருவாளர்கள் : கவியோகி சுவாமி சுத்தானந்த பாரதியார், கவிஞர் சாலை இளந்திரையன், நாவற் குழி யூர் நடராஜன், குயிலன், என். எஸ். சிதம்பரம், தமிழ ழகன். ஜகன், சக்திக் கனல், அரங்க சீனிவாசன், பொன்ராசன், இளங்கோவன், இளங்கம்பன், என். ராகவன், தமிழ்ச் செழியன், பாண்டுரங்கன், அய்யம் பேட்டை அமுது, கலை மோகன். எம். மாரிமுத்து. தே. ப. பெருமாள், புலவர் சிவசுப்ரமண்யம் ஆகிய கவிஞர்கள் இருபதுபேர் கவிதைகளை யாத்து மலருக்கு மணம் தந்திருக்கிறார்கள்.

ஒரு நூற்று ஐவர் தமது இலக்கியப் படைப்பால் இந்த சிறப்பு மலரை சிறப்பித்திருக்கிறார்கள் என்பது தமிழகம் பெருமைப்படவேண்டிய செய்தியல்லவா ?

எழுத்தாளன் மலருக்கு மணம் தந்த இந்த பெரு மக்கள் அனைவருக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரி வித்துக் கொள்ளுகிறேன். பேராசிரியர் சீனிவாசராவன் பேராசிரியர் கு. அருணாசலக் கவுண்டர், டாக்டர் மெ. சுந்தரம் ஆகிய மூவரின் பேச்சுகளை வெளியிட அனுமதி தந்த திருச்சி வானொலி நிலையத்தாருக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அ. வெ. ர. கிருஷ்ணசாமி.

# உள்ளுணர்வு பெறுவீர்

## ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன்

★

நாட்டின் பல்வேறு பாரம் பரியங்களை ஒரு தலை முறையினரிடமிருந்து, மறு தலைமுறையினருக்குத் தெரியப்படுத்துவதற்கான சாதனம் சர்வகலாசாலை. ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு வழி செய்பவை சர்வகலாசாலைகள். உயிருள்ள மனிதர்கள் உள்ள சர்வகலாசாலையின் நோக்கம் அந்த மனிதர்களைப் பூர்ண மனிதர்களாக்குவதுதான். கல்வியின் நோக்கம் மனிதனைச் சிந்தித்துச் செயல்படச் செய்வதுதான். சிந்தனை யின்றேல் பெரும் சாதனை எதுவும் உருவாகாது. உலகில் உள்ள முன்னேற்றம் அனைத்தும் உயர் சிந்தனையாளர்களால் உருவானவையே. எனவே சிந்தனையாளர்களை ஒதுக்கிவைப்பது தவறு. 1942–ல் சிகாகோ சர்வகலாசாலையில் அணுவானது பிளக்கப்பட்டபோது, அந்த அணுவைப் பிளப்பதில் ஒத்துழைத்தவர்கள் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள். அவர்களனைவரும் சேர்ந்து சிந்தித்துச் செயல்பட்டு அணுவைப் பிளந்ததால் ஏற்பட்ட சக்தியினைச் சரிவரப் பயன்படுத்தி இருந்தால் இம் மண்ணுலகமே விண்ணுலகமாகத் திகழ்ந்திருக்கும்.

சிந்திப்பது சுலபமில்லை. சிந்தனை செய்து கூறுபவன் ஒருவன். அவன் கூறியதைத் திருப்பிச் சொல்வோர் ஆயிரம்பேர்கள். ஆனால் சிந்தனை வழியில்தான் முன்னேற்றம் பெற முடியும். வலிநீக்கி அல்லது அணு சக்தி போன்ற புது கண்டு பிடிப்புகள் பலவும், சிந்தனைவழியின் மூலம் வெளிப்பட்டவையே. சிந்தனை மட்டும் போதாது. சிந்திப்பது சரியானதாகவும், இருக்கவேண்டும். "சரியானது என்ன என்று நமக்குத் தெரியும். ஆனால் அதனைச் செய்யத்தான் முடிவதில்லை. தவறு எது என்று நமக்குத் தெரியும். ஆனால் அதனைச் செய்யாதிருக்கத்தான் முடிவதில்லை." என்று வட மொழியில் ஒருபழமொழி உண்டு. எனவே சரியானதை விரும்பவும், தவறானதை வெறுக்கவும் மக்களைப் பயிற்றுவிக்க வேண்டும்.

இனி கல்வியின் இரண்டாவது நோக்கம் நேர்மையான, கண்ணியமான உணர்ச்சி இவையிரண்டிருந்தால் சரியான முறையில் செயலாற்ற இயலும். எனவே அறிவால் மட்டுமின்றி உணர்ச்சியாலும், சரியானதைப் புரிந்து கொள்ளவேண்டும். மனிதன் சின்னபின்னமடையாதிருக்க நாகரிக உணர்ச்சி தேவை. ஹிட்லர் ஆட்சியில் ஜெர்மனியில் அறிவுச் சிந்தனை உச்ச நிலையில் தானிருந்தது. ஆனால் அது தவறான வழியே சென்றது. அதனால்தான் சரியான முறையில் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.



டாக்டர் ராதாகிருஷ்ணன்

சாந்த நிலை, அண்ட சராசரத்தின் மர்மங்களைத் துருவி அறிதல், ஒருவருக்கொருவர் உதவுவதற்கே அனைவரும் பிறந்தோம் என உணர்தல், பொது வேலைகளைச் செய்ய அனைவரும் சக கூட்டாளிகளே தவிர போட்டியாளர்கள் அல்ல என்று உணர்தல், அனைத்திற்கும் ஏற்றதாக மனிதன் உருவாக்கப்பட்டிருக்கிறான். ஆழ்ந்த உட் சிந்தனையில்தான் அமைதி நிலை ஏற்படும். அப்போது தான் பொது வேலையில் தங்களது மனதை அனைவரும் செலுத்த முடியும்.

வேறு எவருக்குமே இல்லாத ஆத்மா மனிதனுக்கு உள்ளது. சகல சாஸ்திரங்களின் முடிவும் ஆத்மாவை உணர்வதே யாம் மதம் உட்பட எதனையுமே பகுத்தறிவிலிருந்து விலகியதாகக் கருத வேண்டாம் என்பது நமது தீர்க்கதரிசிகளின் உபதேசம். "உலக மகா அதிசயங்களைக் காணுகையில் அவற்றின் பின் சாஸ்வத தர்மம் உள்ளது என்ற உணர்ச்சியிலிருந்து தப்பிக்க என்னால் இயலவில்லை" என்று ஈன்ஸ்டின் கூறினார். பி, பி. சி. நிகழ்ச்சி யொன்றில் என்னுடன் பேசுகையில் "எதையோ இழந்துவிட்டதாக நான் உணர்கிறேன்" என்று பெர்ட் ராண்ட் ரஸ்ஸல் என்னிடம் கூறினார். எல்லோரும் சத்தியத்தைத் தொழுகிறார்கள், சத்தியத்தை உணர்ந்தால் தான் விடுதலை பெறமுடியும்.

ஞானமின்றேல் மோட்சமில்லை யென்று சங்கரர் கூறி யிருக்கிறார். ஊடுருவிப் பார்த்தால்தான், மேற்புறம் காணப்படுவது போல உட்புறமில்லை என்பது புலனாகும். உட்புறம் மர்மம் புதையுண்டு இருக்கிறது. அந்த மர்மத்தை உணர்ந்து கொள்ளாவிட்டால் அனைவரும் மனிதப்பிராணிகளாகவே இருப்பர். ஒவ்வொரு நபரிடத்தும் உள்ள ஆத்மாவினால் தான் உலகமே இயங்குகிறது. அதுவே அன்பு உணர்ச்சி, அதுவே கருணை உணர்ச்சி, உன்னதமான மர்மம் ஒன்று உண்டு. அதுதான் ஆத்மா என்று நம்பினால் ஒவ்வொருவரிடமும், மரியா

தையான நடத்தை ஏற்படும். நாம் எவ்வளவோ தவறுகளைச் செய்துகொண்டே யிருந்தாலும், உலகம் அதன் போக்கில் நடந்துகொண்டே தான் இருக்கும். எனவே வாழ்க்கையின் ரகசியங்களை உணர நாம் சிந்திக்க வேண்டும். நன்கு செயல்படவேண்டும். மனிதனாக இருக்கவேண்டும். படித்தவர் என்று தம்மைக் கூறிக் கொள்ளும் எவரும்சுதந்திரமாகச் சிந்தித்துப் பெருமையாகவும், நேர்மையாகவும் செயல்படவேண்டும்.

"ஏன் கஷ்டப்படுகிறீர்கள் என்று நம்மை யாராவது விசாரித்தால், நவக்கிரகங்களையோ கடவுளையோ பழிக்கவேண்டாம். நமது நேர்மையின்மை, நாமாக மேற்கொண்ட லட்சியங்களை நாமே மதிக்காமல் நடத்தல் ஆகியவை தான் காரணம் என்று ஒப்புக்கொண்டால் போதும்.

மனம் தெளிவாக அமைதியாக இருந்து இதைப் பற்றி யோசித்து நம்மிடம் என்ன தவறு இருக்கிறது? எதனுல் நமது நாடு இப்படிப்பட்ட நிலையிலிருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க முயலவேண்டும். நமது அந்தரங்கத்தில் ஏற்பட்டு இருக்கின்ற போராட்டங்களும் நெருக்கடிகளுமே வெளி உலகில், சமுதாயத்தில் பெரிய அளவில் பிரதிபலிக்கின்றன. நமது உள் வாழ்வு சிதறிக் கிடக்கிறது. நிறைவேருத பலப்பல ஆசைகள். நமது மனத்தில் கொந்தளிக்கின்றன. ஒன்றுக் கொன்று முரணுன சிந்தனைகள் மண்டையைக் குழப்புகின்றன. நமது மனஅரங்கத்தில் இந்த நிலைமைதான் சமுதாயத்திலும் நிலவுகிறது.

ஐக்கியமடைந்த ஒரு மாபெரும் இந்தியாவை, அந்த இந்தியாவின் மூலமாக ஐக்கிய உலக சமுதாயம் ஒன்றை ஸ்தாபிக்க வேண்டும் என்ற ஒரு பெரும் லட்சியத்தை உறுதியாகக் கடைபிடிப்போமாக, மனித இனத்தில் ஒரு பகுதிதான் இந்தியர். இந்த உலக நோக்கத்துடன் பணிகளில் நாம் ஈடுபட்டால் அவற்றின் உண்மையான மதிப்பை அறிந்து செயல்பட வழி கிட்டும்.

அற்பத்தைப் பெரிதுபடுத்திச் சண்டைபிடிக்க வேண்டாம். நமது வாழ்க்கைக்குப் பிறகும் நிலைத்து நிற்கக்கூடிய மாண்புமிக்க ஏதாவதொன்றைச் செய்வதில் கவனத்தைச் செலுத்துவோம்.

ஜனநாயகத்திலும், ஒவ்வொரு மனிதனிடத்தும், தெய்வத்தன்மை உள்ளுறைந்து கிடக்கிறது என்பதிலும் நம்பிக்கை கொள்வோம். மனிதனை இழிவுபடுத்துதல் இறைவனை இழிவு செய்வதாகுமென்பதைப் புரிந்து கொள்ள முயல்வோம்.

மேம் போக்காகக் கருத்தோவியங்களை அளிக்கும் இலக்கிய கர்த்தாக்கள் இருக்கிருர்கள். சற்று ஆழ்ந்து, ஆராய்ந்து லட்சிய முரண்பாடுகளைச் சித்தரிப்பவர்களும் இருக்கிருர்கள். அனுபவத்தில் ஆழ்ந்த முதிர்ச்சியுற்று அந்த அனுபவங்களை வைத்துக் கொண்டு சிருஷ்டிக்கப்பட்டவைகளே மகா காவியங்களாகும். நமது மகாகவிகள் தபசுகளையும், சுவாத்தியாயங்களையும் வலியுறுத்தினுர்கள். ஒரு சிறந்த கவிதன் வாழ்க்கையையே அனுபவமாக்கிக் கொள்ள வேண்டும். சந்தோஷத்தை மற்றவர்களுக்கு வழங்க வேண்டும். ஜீவகாருண்ய குண விசேஷம் கவிகளுக்கு மிக முக்கியமாகும்.

சாதாரண மக்கள் மற்றவர்களின் துயரங்களைக் கண்டு பரமசந்தோஷம் அடைவார்கள். பண்புள்ளவர்கள் மற்றவர்களின் துயரங்களைக் கண்டு மகிழ்ச்சி அடையார். துயரமே அடைவர். சொல்லொணுத் துயரங்கள் இல்லாமல் மகாகாவியங்கள் சிருஷ்டிக்கப்பட்டதில்லை. அனுபவங்கள் என்ற தயிரை உள்ளமென்ற மத்தினுல் கடைந்து அதிலிருந்து எழும் உணர்ச்சிகளை மற்றவர்களுக்குத் தனது கவிகளாக வழங்குபவனே உண்மைக் கவிஞனுவான்.

உள்ளத்தின் அடித்தளத்தைத் தொடும் வகையில் ஆராய்ந்து சமுதாயத்தில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்காக மக்களின் உள்ளங்களை உருவகப்படுத்துவது மகாகவிஞனுக்கு வேண்டிய முதல் பண்பு. ஒரு சாகித்யத்துக்கு ஒன்றுபடும் தோழமை உணர்ச்சியே அத்தியாவசியமாகும் அதற்கு ஒரே லட்சியம் தான் உண்டு அதுதான் ஜீவகாருண்யம். ஜீவகாருண்யமில்லாதவன் உண்மையில் மனிதனுகமாட்டான். ஜீவகாருண்ய உணர்ச்சி வளர வேண்டுமானுல் ஒவ்வொருவரும் சிறிது நேரமாவது ஆத்ம சோதனையில் ஈடுபடுவது அவசியமாகும். ஒரு குறிக்கோளுடன் இந்த ஆத்ம சோதனையை நடத்த வேண்டும். வாழ்க்கையில் குறிக்கோள் எதுவுமில்லாமல் அநேகர் அவதிப்படுகிருர்கள். குறிக்கோள் இருக்குமானுல் பதவிக்காகச் சண்டையிட மாட்டார்கள். மற்றவர்களைக் குறைகூற மாட்டார்கள். சுயநலத்துக்காக, வகுப்புவாத உணர்ச்சிகளையும், இதர வெறி உணர்ச்சிகளையும் உபயோகிக்க மாட்டார்கள்.

உள்ளத்தைத் தொட்டு உலகைக் காணுவதற்கான புதுக் கருத்துக்களை அளிக்கும்போதுதான் கலையானது வளர்ச்சியைத் தருகிறது.

மனிதரிடத்தில் மனிதப்பண்புகளை வளர்ப்பதில் உன்னத இலக்கியப் படைப்புகள் பெரும் பணி புரிகின்றன. உண்மை இலக்கியம் மனிதனின் இதயச் சுனையிலிருந்து பொங்கியெழும் உணர்ச்சி ஊற்ருகும். ஆழ்ந்த உணர்ச்சியனுபவங்களிலிருந்துதான் புதிய இலக்கியப் படைப்புகள் பிறப்பு எடுக்க முடியும். எழுத்தாளர்கள், கவிஞர்கள் பிரத்தியட்ச வாதிகளாக இருந்தால் மட்டும் போதாது. மனதை உயர்த்தவல்ல லட்சியவாதிகளாகவும் இருக்கவேண்டும். பிறர் மனதைத் தட்டி யெழுப்புகின்ற இலக்கியங்களை சிருஷ்டிக்க வேண்டுமானுல் எழுத்தாளரும் உள்ளுணர்வு விழிப்புற்றவராக இருந்தே யாகவேண்டும்.

பெரிய போராட்ட காலத்தில் நாம் இருக்கிருேம். என்று கூறப்படுகிறது. அனுபவத்தின் தீர்க்கத்தை உள்ளத்தின் வேகத்தை, துடிப்பை உணரும், ஒரு மேதாவிக் கவிஞன் மட்டும் நம்மிடையே இருந்தால் இக்காலத்திய அனுபவங்களை வைத்துக்கொண்டு, ஒரு முதல் தரமான காவியத்தைச் சிருஷ்டித்து விடுவான். சம்பவங்கள் கைமேல் இருக்கின்றன. நாமோ ஒரு வரலாற்றுப் பிரசித்திபெற்ற காலத்தைக் கழித்துக் கொண்டு வருகிருேம். ஒரு வரலாற்றுக் கவிஞன் இல்லாததுதான் குறை. ஒரு வரலாற்றுக் கவிஞன் மட்டும் இருந்து இக்காலத்தை எழுதினுல் அவனுடைய காவியம் பிரசித்தி பெற்ற ஞாபகச் சின்னமாக அமைந்துவிடும். நெப்போலியன் யுத்தத்தை டால்ஸ்டாய் அருமையாக எழுதியுள்ளார். இப்போதைய இயக்கங்களை இலக்கியத்தின் மூலம் சித்தரித்துக் காட்டவேண்டுமானுல் அப்பேர்ப்பட்ட மேதை ஒருவர் இன்று நமக்குத் தேவை.

ஜனுதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் அண்மையில் தென்னக சுற்றுப் பிரயாணத்தில் ஆங்காங்கு நிகழ்த்திய உரைகளிலிருந்து இக்கட்டுரை உருவாக்கப்பட்டது —(ஆசிரியர்)

# ஆக்கபூர்வமான சர்ச்சை தேவை

திரு. N. மகாலிங்கம், B. Sc., M. I. E., M. L. A.

★

நம் தேசம் சுதந்தரம் அடைந்த நாள் முதல், திட்டமிட்ட பொருளாதார வழியில் முன்னேற்றமடைந்து வருகிறது. தற்போது மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் நம் நாட்டில் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. அதே சமயத்தில் நான்காவது, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டங்கள் பற்றியும் நாம் சிந்தனை செய்ய இப்போது ஆரம்பித்துள்ளோம்.

திட்டமிட்ட வழியில் காரியங்கள் செய்யும்போது தொழில் அபிவிருத்தி, விவசாயப் பொருள் உற்பத்தி, கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்ற பிரச்னைகள் நன்கு யோசிக்கப்படுகின்றன—பரிசீலிக்கப்படுகின்றன. இதில் பொதுவாக மக்கள் தொகை பற்றிய பிரச்னையும் சிந்தனைக்குக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. அவ்வாறு எடுத்துக்கொள்ளப்படும் மக்கள் தொகை பற்றிய பிரச்னை சரியானபடி கணிப்பு நிர்ணயிக்கப்படுகின்றதா என்பது ஐயத்திற்கு உரியதாக இருக்கின்றது. சுருங்கச் சொன்னுல் இத்துறையில் தெளிவான பார்வையுடன் கூடிய திட்டம் இல்லை என்றுதான் கருதவேண்டியுள்ளது.

இந்தியாவின் மக்கள் தொகை 44 கோடி என்றும், சராசரி சதுரமைலுக்கு 330 நபர்கள் வீதம் வாழ்கின்றனர் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த சராசரி மக்கள் தொகைக் கணக்கை வைத்துக் கொண்டுதான், தேசம் முழுவதுக்கும் சகட்டுமேனிக்குக் குடும்பக் கட்டுப்பாடு வேண்டுமென்று திட்டக் கமிஷன் நிர்ணயித்துக் கூறி அதற்காக வேலை செய்து வருகிறது.

இந்தச் சராசரிக் கணக்கை வகுத்து மாநிலங்கள் வாரியாகக் கணக்கிட்டுப் பார்த்தால் கேரள மாநிலத்தில் சதுர மைலுக்கு 1330 பேர்களும், வங்காளத்தில் 840 பேர்களும், தமிழ் நாட்டில் 680 பேர்களும், மைசூர் ஆந்திர மாநிலங்களில் 250 பேர்களும், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் 200 க்கும் குறைவானவர்களும் வசித்துவருவதைக் காணமுடியும்.

இதே போல்தான் தனி நபர் வருமானத்துறை பற்றிய சராசரி நிர்ணயிப்பும் இருக்கிறது. இந்தியப் பிரஜை ஒருவருடைய சராசரி வருமானம் ரூ 332 என்று கணக்குச் சொல்லப்படுகிறது. இதையே மாநில ரீதியில் பிரித்துப் பார்க்கிறபோது வேறு முடிவுகள் கிடைப்பதைப் பார்க்கமுடியும். மக்கள் தொகை அதிகமுள்ள மாநிலங்களில் தேசம் முழுவதுக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ள சராசரி வருமானத்தைக் காட்டிலும் குறைவாக இருப்பதைப் பார்க்க முடிகிறது. பஞ்சாப் மாநிலத்தில் தனி நபரின் சராசரி வருமானம் ரூ 400க்கு மேலும், தமிழ் நாட்டில் ரூ 240 ஆகவும் உள்ளது.

திட்டங்கள் மூலமாகத் தொழில் வளர்ச்சி தமிழ் நாட்டில் ஏற்பட்டிருந்தும் மக்கள் தொகை அதிகமாக இருப்பதாலும் விவசாயத்துறையில் வருடம் முழுவதும் அதை நம்பி நிற்பவர்களுக்கு வேலை வாய்ப்புப் போதுமானபடி இல்லாமல் குறைவாக இருப்பதாலும் சராசரி வருமானம் இங்குக் குறைவாக உள்ளது. இந்தப் பிரச்னையைச் சமாளிப்பது குறித்துத் திட்டக் கமிஷன் மிகத் துல்லியமாகச் சிந்திப்பது இன்று மிக அவசியமென்பதை வற்புறுத்த வேண்டியிருக்கிறது.

1. அதிக மக்கள் தொகை உள்ள மாநிலங்களில் எவ்வாறு தனி நபரின் வருமானத்தை உயர்த்துவது?

2. குறைவான மக்கள் தொகை உள்ள பிரதேசங்களில் மக்கள் தொகையை உயர்த்த வழி முறைகள் என்ன ?

இவ்விரு விஷயங்களைக் குறித்தும் தர்க்க ரீதியானதும், விஞ்ஞானப் பூர்வமானதுமான யதார்த்த நிலைக்கேற்ற முடிவுகள் இன்று ஏற்பட்டாகவேண்டும். அப்பொழுதுதான் வருமானத் துறையில் பல்வேறு மாநில மக்களிடையே காணுகிற இந்த அசமத்துவம் தகர்ந்து சோஷலிஸ வடிவ அமைப்புத் தோன்ற நல்ல வழி அமையும். தேசத்தில் விவசாயப் பொருள்களின் உற்பத்தி அதிகப்பட வேண்டுமென்ருல் நதி நீர்களைப் பூர்ணமாகப் பயன்படுத்தி விளை நிலங்களை நஞ்சைகளாக மாற்றி அமைக்க வேண்டும். நஞ்சைப் பூமிகளின் விஸ்தீரணம் அதிகமாகும்போது அப்பகுதிகளில் விவசாயத் தொழில் தெரிந்தவர்களின் தேவையும் கூடவே அதிகமாகும். அப்போது மக்கட் பெருக்கம் உள்ள பகுதிகளிலிருந்து மக்களை அங்கு குடியேறும்படிச் செய்ய வாய்ப்பு ஏற்பட்டுவிடும். இவ்வகையில் நம் எண்ணங்கள் செயலாகும் பொழுது அண்டை மாநிலங்களுக்கு மக்கள் செல்ல வேண்டும் என்கிற அவசியம் உண்டாகிறது. இக்கருத்து சிலருக்கு 'சிக்கலானது' எனப் படலாம். வேறு சிலருக்கு இது 'சாத்தியமாகுமா' என்ற ஐயப்பாட்டையும் உண்டாக்கலாம். இவர்களின் இந்நியாயமான ஐயப்பாட்டை நாம் உணராமலில்லை. திடீரென இந்தியாவின் ஒரு மூலையிலிருந்து மற்ருெரு மூலைக்கு மக்களைக் குடியேற்றிவிட வேண்டும் என நாம் சொல்லவில்லை; அப்படிச் செய்வதும் முடியாது; சிரமமானதும் கூட.

என்ருலும் எங்கெல்லாம் அண்டை மாநிலங்களில் மக்கள் தொகை குறைவாக இருக்கிறதோ அங்கு திட்டமிட்டுக் குடியேற்றம் செய்வது சரியாக இருக்கலாமல்லவா என்பதையே சிந்திக்க வேண்டுகிருேம். நம் நாட்டிலேயே அதிக ஜன நெருக்கமுள்ள மாநிலம் கேரளம் ஆகும். அங்கு $1\frac{1}{2}$ கோடி மக்கள் 14,980 சதுர மைல்களில் அமைந்து கிடக்கின்றனர். மலைப்

பகுதிகளை நீக்கி மக்கள் வசிக்கும் சமவெளி சுமார் 8,500 சதுர மைல்கள்தான் இருக்கும். அங்கு பல இடங்களில் மக்கள் சதுர மைலுக்கு 2500 முதல் 3000 வரையிலும்கூட நெரிசலாக அமைந்து கிடக்கின்றனர் என்று கணக்கிடப்படுகின்றது. படித்த வாலிபர்கள் தொழில் நாடி இதர மாநிலங்களுக்குக் கேரளத்திலிருந்து சென்றுவிடுகிறார்கள். எஞ்சி விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ள மக்கள் மட்டுமே குடி பெயர்ந்து வெளியே போகாமல் இருக்கிறார்கள். அயல் மாநிலங்களில் விவசாயத்துறையில் சிறப்பாக ஈடுபடும் சந்தர்ப்பத்தை உண்டாக்கிக் கொடுத்தால், இவர்களும் நிச்சயம் அங்கு போவார்கள் என்று சொல்லலாம். கேரளத்திற்குப் பக்கத்தில் உள்ள மைசூர் மாநிலம் 72,730 சதுர மைல் பரப்பைக்கொண்டது. இக் கணக்கின்படி பார்த்தால் மைசூர் மாநிலம் தமிழ் நாட்டை விடப் பரப்பளவில் 1½ மடங்கும், கேரள மாநிலத்தை விட 5 மடங்கும் பெரியது என்பது தெரியவரும். அத்துடன் ஆண்டுக்கு சுமார் 60 அங்குல மழை பெய்யும் மாநிலமுமாகும் மைசூர்.

சராசரி ஆண்டுக்கு 100 அங்குல மழை பெய்யும் கேரளத்தில் வாழ்ந்து பழகிய மக்களுக்கு மைசூர் மாநிலத்தில் குடியேறுவது சிறிதும் சிரமாக இருக்காது என்பதும் உணரத்தக்கதாகும். மைசூர் மாநிலம் விவசாயத் துறையில் மிகவும் பின்தங்கியுள்ளது. அங்கு அதிக அளவில் கிணறுகள் வெட்டி, தோட்ட விவசாயம் செய்வதற்கான சந்தர்ப்பங்கள் நிறைய இருந்தும் அத்துறையில் முயற்சிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. இதற்கு முக்கிய காரணம் அங்கு விவசாயத் தொழிலாளர்கள் போதிய அளவில் இல்லாமல் பற்ருக்குறை ஏற்பட்டிருப்பதுதான். தவிர, மலை மாடு என்று சொல்லக்கூடிய மலைப் பிரதேசங்கள் மைசூர் மாநிலத்தில் வளப்படுத்தப்படாமல் உள்ளன. கேரள மக்கள் மலைகளை அழித்து வளப்படுத்துவதில் நல்ல அனுபவம் உள்ளவர்கள் ஆதலால் இவர்கள் மைசூர் மாநிலத்தில் குடியேற்றப்பட்டால் அம் மாநிலம் உண்மையிலேயே செழிப்படைய முடியும்.

மைசூர் மாநில கிராமங்களில் பூமி ஏக்கர் விலை ரூ. 500 க்கு மேல் இல்லை. பல இடங்களில் ரூ. 200 கூட ஏக்கருக்கு விலையாக உள்ளது குடும்பத்திற்கு 5 ஏக்கர் நிலம் மைசூரில் கொடுப்பது என்ருல் ரூ. 1500 வரைதான் ஆகலாம். சுமார் 75 லட்சம் மக்கள் கேரளத்திலிருந்து மைசூர் மாநிலத்திற்குப் போவது என்ருல் சுமார் ரூ. 187 கோடிவரை பூமியின் விலையாக ஆகலாம். இதில் அரசாங்கத்தின் வசம் உள்ள தரிசு நிலத்தைக் கணக்கெடுத்து மேற்கூறிய அளவில் குடி பெயர்ந்து வந்தவர்களுக்குக் கொடுப்பது என்ருல் உத்தேச இச்செலவு மேலும் குறைந்துவிடும்.

மக்கள் குடிபெயர்ந்து செல்வதற்கான பிரயாணச் செலவு, ஆரம்பக் குடியிருப்பிற்கான ஏற்பாடுகளுக்கு ஆகும் செலவு எல்லாமாகச் சேர்ந்து ரூ. 100 கோடி வரை ஏற்படலாம். இந்த மதிப்பீட்டின்படி மொத்த ரூ. 300 கோடியைச் செலவிட்டால் கேரள மாநிலத்தின் மக்கள் தொகை சதுர மைலுக்கு 1380 விருந்து 690க்குக் குறைந்துவிடும். மைசூர் மாநிலத்தின் மக்கள் தொகை சதுர மைலுக்கு 250 விருந்து 330 ஆக உயரும். இதனுல் நல்ல விவசாய உழைப்பாளிகள் மைசூர் மாநிலத்திற்கு வந்து சேருவார்கள்.

ஆந்திர மாநிலத்தின் பரப்பளவு 110, 250 சதுர மைல்களாகும். கோதாவரி, கிருஷ்ணு ஆகிய ஜீவ நதிகள் அந்த மாநிலத்தில் பாய்ந்தோடிக் கொண்டிருக்கின்றன. இந்நதிகளைத் தகுந்த அணை கட்டித் தண்ணீர் கொடுத்தால் பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலம் நல்ல பாசன வசதிபெற்று உணவு தானிய உற்பத்தியைப் பெருக்க உதவும். இவ்வாறு பெருகும் உணவு உற்பத்தியை மக்கள் நெரிசலாகவுள்ள மாநிலங்களுக்கு எடுத்துப்போக ஏற்படும் போக்குவரத்துச் செலவைக் கொண்டு ஒரே தடவையில் மக்களைக் குடி பெயரச் செய்துவிட முடியும். இது தேசத்திற்கு மிக இலாபகரமானதாகக் கூட இருககும் இதனுல் ஆந்திர மாநிலத்தில் வேலை வாய்ப்புக்கள் பரவலாக ஏற்படவும், தொடர்ந்து பல துறைகளில் அபிவிருத்திகள் ஏற்படவும் சாத்தியங்கள் உண்டு

தமிழ் நாட்டின் மக்கள், தொகையில் தற்போது 35 லட்சம் மக்கள் தெலுங்கு மொழி பேசுவோர் உள்ளனர். இதன் மூலம் தமிழ் நாட்டிற்கும் ஆந்திர மாநிலத்திற்கும் உள்ள நெடுநாளைய சகோதரத் தொடர்பு இருந்துவருவது தெற்றெனப் புலப்படும். ஆகவே, தமிழ் நாட்டிலிருந்து ஒரு 75 லட்சம் மக்களை ஆந்திர மாநிலத்திற்குக் குடியேற்றம் செய்வதெனத் திட்டமிட்டால் இதற்காகச் சுமார் ரூ. 300 கோடி முதல் ரூ 350 கோடிவரைதான் செலவாகும். இதனுல் தமிழ் நாட்டின் மக்கள் தொகை சதுர மைலுக்கு 680 விருந்து 500 ஆகக் குறையும். ஆந்திர மாநிலத்தில் சதுர மைலுக்கு 250 விருந்து 3.0 ஆக உயரும்

இதே மாதிரி வங்காளத்து மக்களை அஸ்ஸாம், பீகார், ஒரிசா மாநிலங்களுக்குக் குடியேற்றுவதற்கு ரூ. 300 கோடி வரை செலவாகலாம் என வைத்துக் கொண்டால் தேசம் முழுவதற்கும் மொத்தமாக இத்திட்ட நிறைவேற்றத்துக்குத் தேவையான தொகையே ரூ. 1000 கோடிவரை செலவாகும்

நான்காவது, ஐந்தாண்டுத் திட்டம் ரூ. 17,000 கோடி ஆகுமென்றும், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் ரூ. 25,000 கோடி ஆகுமென்றும் இப்போதே உத்தேசமாக எதிர்பார்க்கப் படுகின்றது—மதிப்பிடப்படுகிறது.

மேலே குறிப்பிட்ட இந்தக் குடியேற்றத்திட்டம் நிறைவேற்றி முடிப்பதற்குப் பத்து ஆண்டுகளாகும் எனக் கணக்கிட்டால் ஆண்டுக்கு ரூ. 100 கோடிதான் செலவிடவேண்டி ஏற்படும். ஆக ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும் இதற்கென ரூ. 500 கோடிதான் ஒதுக்க வேண்டிவரும். இவ்வாறு தொகை ஒதுக்கி இத்திட்டத்தை நிறைவேற்றுவது அவ்வளவு சிரமமான காரியமாக இருக்காது மாநில சர்க்கார்களும் இந்தப் பிரதேசங்களின் மக்கள் நெரிசல் பிரச்னையை நன்கு ஆராய வேண்டும். ஆராய்ந்து இயற்கையை வென்று மாநிலங்களைச் செழிக்க வைக்கத் தக்க மக்களின் உழைக்கும் சக்தியைச் சிறப்பாகப் பயன்படுத்தத் துணியவேண்டும்.

இப் பிரச்னைகளைப்பற்றிச் சிந்திக்கும்போது ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் போன்ற 2 லட்சம் சதுர மைல்கள் பரப்பளவையும், மக்கள் தொகை குறைவாக உள்ள மாநிலங்களையும் எண்ணிக்கையில் நாம் எடுத்

துக் கொள்ளவில்லை என்பதை நினைவு படுத்துகிறோம். ராஜஸ்தான் வாய்க்கால் ஒன்று மட்டும் 35 லட்சம் ஏக்கர் நஞ்சை நிலங்களுக்கு — அதாவது 58,000 சதுர மைல், பிரதேசத்தில் நீர்ப்பாசனம் கொடுப்பதற்குத் திட்டமிட்டு வேலை செய்து கொண்டுள்ளது. அத்துடன் 25 லட்சம் ஏக்கர் நீர் பாயக்கூடிய பூமி இந்தியாவின் பல பகுதிகளில் விவசாய உற்பத்திக்கு உபயோகப்படுத்தப் படாமல் உள்ளது என்றும் சமீபத்தில் மத்திய அரசாங்கத்தின் நீர்ப்பாசன இலாகா கணக்கெடுத்துள்ளது.

மலை போன்ற இவ்வுண்மை எதைக் காட்டுகிற தென்றால் உழைப்பதற்குத் தேவையான மக்கள் தொகை அப்பகுதிகளில் இல்லை என்பதையே வெளிப்படையாக்குகிறது. நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களைச் செலவிட்டுத் திட்டங்கள் வகுக்கும்போது அப்பகுதிகளில் சீக்கிரம் பூமிகள் வளப்பட்டு உற்பத்தி அதிகரிக்கவேண்டும் என்பதற்கு வேண்டிய அனுபவம் மிக்க மக்களையும் அங்கு அனுப்பத் திட்டம் இடப்படவேண்டுமென்பதை உணர்த்துகிறதல்லவா?

இம்மாதிரி முயற்சிகள் உலகத்தின் பல நாடுகளிலும் இப்போது நடக்கின்றன என்பதையும் நாம் பார்ப்பது நல்லது. அமெரிக்காவின் ஒரு பகுதியான அலாஸ்கா நீண்ட நாளாக கடுங் குளிர் உள்ள பகுதி என்று கவனிக்கப்படாமல் விடப்பட்டிருந்தது. இப்போது அந்த அலாஸ்கா மாகாணம் மேற்கூறியபடித் திட்டமிட்டுக் காரியங்கள் செய்ததால் வளப்பட்டுள்ளதோடு அப்பகுதி மக்களும் பெருமளவில் அங்கு வசிக்கவும் செய்கிறார்கள். அதேபோல் சோவியத் ரஷ்யாவில் நீண்ட நெடுங்காலம் தீவாந்திர சிட்சை விதிக்கும் பிரதேசமாக இருந்துவந்த சைபீரியா இப்போது வளம் கொழிக்கும் மாகாணமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

ஆக திட்டங்கள் போடும்போது ஏற்கனவே மக்கள் தொகை மிகுதியாக உள்ள பகுதிகளில் வசதிகள் பெருக ஏற்பாடுகள் செய்வதோடல்லாமல், வசதிக் குறைவான பிரதேசங்களுக்கும் மேற்குறித்தபடி திட்டமிட்டு வசதிகள் ஏற்படுத்தி மக்கள் குடியேற அங்கு வாய்ப்புக்களையும் செய்து தரவேண்டும். எனவே, ஜன நெரிசல் பிரச்னை என்பது நாட்டின் பொதுவான பிரச்னை என்பது மட்டுமல்ல; ஒவ்வொரு மாநிலத்தின் ஜீவாதாரப் பிரச்னையும் அது ஆகும் என்பதை உணர்ந்து நல்ல முடிவுக்கு அனைவரும் வரவேண்டும். இப்பிரச்னையில் தமிழ் எழுத்தாளர்களும் ஆக்க பூர்வமான சர்ச்சையில் ஈடுபட்டு நாட்டு மக்களின் எண்ணத்தையும். சூழ்நிலையையும் இத்திசை வழியில் திருப்பி விடும்படியாகத் தங்களின் படைப்புகளில் முயல வேண்டுமென்று இத்தருணத்தில் வேண்டிக் கொள்கிறேன்.



## நீதியின் தீர்ப்பு

லெனின் அவர்களை ஒரு பாதகன் சுட்டுவிட்டான். லெனின் படுகாயம் அடைந்தார். பிரபல டாக்டர்கள் கூடி சில மருந்துகளை லெனின் உபயோகிக்க வேண்டும் என்று சொன்னார்கள். உயிருக்கு மன்றாடிக்கொண்டிருந்த லெனின் மிக்க அமைதியாக ஒரு டாக்டரை அருகில் அழைத்துக் கேட்டார். "தாங்கள் சொன்ன மருந்து சாதாரணப் பாட்டாளி மகனுக்கும் கிடைக்குமா?" என்றார். "கிடைக்காது தங்களைப் போன்ற பெரியவர்களுக்கு மட்டுமே கிடைக்கும்" என்றார் டாக்டர். புரட்சி இன்னும் நாட்டில் வேரூன்றவில்லை. எனக்கு அந்த மருந்து வேண்டாம் என்று சொல்லிவிட்டார். டாக்டர்கள் திகைத்தார்கள். லெனின் அந்த மருந்தை உட்கொள்ளாவிட்டால் பிழைப்பது அரிது என்று கண்டார்கள். லெனின் மனைவி குருப்ஸ்கேயாவிடம் பொதுவுடமைத் தலைவர்களும் டாக்டர்களும் சென்று வேண்டினார்கள். அந்த அம்மையாருக்கு ஒரு யுக்தி தோன்றியது. தினசரி லெனின் உட்கொள்ளும் ரொட்டியுடன் வைத்து மருந்தைக் கொடுத்து வந்தார். லெனின் பிழைத்தார். வெகுநாட்கள் கழித்துத் தன் மனைவி செய்த காரியம் அறிந்தார். ஆத்திரப்பட்டார். தலைவர் உத்தரவை மீறிய குருப்ஸ்கோயாவை விசாரித்துத் தண்டிக்கும்படி நீதிபதிக்கு உத்தரவிட்டார். நீதிபதி முறையாக விசாரித்தார். லெனின் மனம் மாறவில்லை. எவருடைய சிபாரிசும் கேட்கவில்லை. நீதிபதி தீர்ப்பு அளித்தார். "குருப்ஸ்கேயா குற்றவாளிதான். இந்தக் குற்றவாளி சோவியத் சர்க்காருக்குத் தாம் செய்த குற்றத்தின் மூலம் பெருஞ் சேவை செய்திருக்கிறார். அதனால் விடுதலை செய்கிறோம்" என்றார் நீதிபதி.

# கடிதங்களில் பாரதி

★

ரா. அ. பத்மநாபன்

ஒருவனது குண சுபாவங்களைத் தெளிவுறக் காட்டு பவை அவனுடைய கடிதங்களே. கடிதங்களில் அவன் தன் சுயரூபத்தில் காட்சி தருகிறான். தன் சுய ரூபத்தை மறைத்துப் பொய்யை எழுதிக் குவித்தால் கூட, அந்தப் பொய்க் கடிதத்தைப் படிக்கும்போது அவனது வேஷம் எவ்வளவு மோசமானது என்பதை உணர்ந்து விடுகிறோம்.

இலக்கியச் சுவையுள்ள ஒருவனது மற்ற எழுத்து களில் இல்லாத ஒரு சுவையை அவனது கடிதங்களில் காணலாம். மற்ற எழுத்துக்களெல்லாம் இலக்கியச் சுவைக்காக சுவைபட, கோவையாய் அமைத்து எழுதப்பட்டிருக்கக்கூடும். ஆனால் அவனது கடிதங்க ளிலோ அவனது உண்மை இதயம் தெள்ளென விளங் கும்.

ஆனால், பாரதி இதற்கு விதிவிலக்கு !

ஆம். ஒளிவு மறைவற்ற திறந்த உள்ளம் படைத்த கவிஞரின் கடிதங்களிலும் நாம் பழைய பாரதியையே காண்கிறோம்! இலக்கியம் வேறு தமது உண்மையான கருத்துக்கள் வேறு என்று அவர் கொள்ளாததால், அவரது இலக்கிய கடிதங்கள் இரண்டும் ஒரே மாதிரி இருக்கின்றன. இரண்டிலும் பாரதியின் திறந்த மன தைக் காண்கிறோம்.

''வீரத் தாய்மார்கள்'' என்ற தலைப்பில் ''செந் தமிழ்'' பத்திரிகையில் அதன் ஆசிரியர் மு. ராகவய் யங்கார் ஒரு கட்டுரை 1907-ஆம் ஆண்டில் எழுதி னார். தமிழ் நாட்டில் 1800 ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்த வீரத் தமிழ்த் தாய்களைப் பற்றிய இக்கட்டுரை பாரதியாருக்கு மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கியது. தமது மகிழ்ச்சியை உடனே ஒரு கடிதத்தின் மூலம் தெரிவித்தார் பாரதி. கட்டுரையின் ஆசிரியர் புகழ் பெற்றவர்; வயதிலும் சற்று முதிர்ந்தவர்; பாரதி 25 வயது இளைஞர். பாரதி எழுதிய கடிதம் வருமாறு:-

இந்தியா ஆபீஸ்
பிராட்வே, மதராஸ்,
18 ந. அக்டோபர் 1907

அநேக நமஸ்காரம்.

ஒவ்வொரு காலத்துச் சோம்பர் மிகுதியாலும், ஒவ் வொரு காலத்தே முயற்சி மிகுதியாலும், தங்களைப்போன்ற பெரியோர்களுக்கு அடிக்கடி கடிதங்களெழுதிப் புனிதத் தன்மை பெறுவதற்கு அவகாசமில்லாதவனாக இருக்கிறேன்.

சென்ற முறை வெளிவந்த ''செந்தமிழ்' 'ப் பத்திரிகை யிலே தாங்கள் எழுதியிருக்கும் ''வீரத்தாய்மார்கள்''என்ற அற்புத உரையைக் கண்டு மகிழ்ச்சி பூத்து அம் மகிழ்ச்சி யைத் தமக்கு அறிவிக்கும் பொருட்டாக இக்கடிதம் எழுத லானேன்.

தங்கள் பாண்டித்தியத்தை நான் புகழ வரவில்லை. அதனை உலகமறியும். தங்களுடைய பரிசுத்த நெஞ்சிலே எழுந்திருக்கும் ''ஸ்வதேச பக்தி'' என்ற புது நெருப்பிற்குத் தான் நான் வணக்கம் செய்கிறேன்.

''காலச் சக்கரம் சுழல்கிறது!'' என்று அவ்வுபந்நியா சத்தின் இறுதியிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆம்! காலச் சக்கரம் சுழலவே செய்கின்றது; அச்சுழற்சியிலே, சிறுமைச் சேற்றில் ஆழ்ந்து கிடந்த 'நீச பாரதம்' போய் 'மஹா பாரதம்' பிறக்கும் தறுவாய் வந்துவிட்டது.

'தாழ்நிலை' என்ற இருளிலே முழ்கிக்கிடக்கும் பாரத வாஸிகளுக்கு மஹாபாரதம் காட்டத் தோன்றியிருக்கும் சோதிகளிலே தமது நெஞ்சிற் பிறந்திருக்கும் நெருப் பொன்றாகும். அதற்கு வணக்கம் செய்கிறேன். அது வளர்க. ஓம்!

ஸி. சுப்பிரமணிய பாரதி

குறிப்பு: ஸ்ரீ அழகிய சிங்கப் பெருமாளையங்கார் (பச்சையப்பன் காலேஜ்) அவர்களும் அவர் தம்பி ஸ்ரீ கிருஷ்ணமாசாரியாரும் தங்களுக்கு ஸாஷ்டாங்க வணக்கம் கூறும்படி என்னிடம் கற்பித்தார்கள்.

பெரியவர்களுக்கு உரிய மரியாதையை சற்றும் குறைக்காமல், அவர்கள் மனதில் தோன்றியுள்ள புதிய கருத்தை பாரதியார் எப்படி வரவேற்கிறார், பாருங்கள்!

புதுச்சேரியிலிருந்து 1915 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19-ஆம் தேதி பாரதியார் பரலி சு. நெல்லையப் பருக்கு எழுதிய நீண்டதோர் கடிதம், கடித இலக்கிய பொக்கிஷம் எனலாம். நான்கு பக்கங்கள் கொண்ட இக் கடிதத்தை எத்தனை தடவை படித்தாலும் நமக்கு அலுப்பதில்லை.

''எனதருமைத் தம்பியாகிய ஸ்ரீநெல்லையப்ப பிள்ளை யைப் பராசக்தி நன்கு காத்திடுக'' என்று ஆரம்பிக் கிறது கடிதம். ''தமிழ், தமிழ், தமிழ்-என்று எப்போதும் தமிழை வளர்ப்பதையே கடமையாகக் கொள்க.ஆனால் புதிய புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய உண்மை, புதிய புதிய இன்பம்.- தமிழில் ஏறிக்கொண் டேபோகவேண்டும்'' என்று அச்சுறுத்துகிறார் கவிஞர்.

எப்போதும் மேலே செல்ல வேண்டும் என்று வற் புறுத்திவிட்டு, மீண்டும் தமிழ் வளர்ப்பைப்பற்றி குறிப் பிடுகிறார். முடிவில் சொந்த விவகாரங்கள் ஒரு பாரா வில் முடிந்துவிடுகின்றன. கடிதத்தைக் கவனிப்போம்:

தம்பி-தமிழ் நாடு வாழ்க என்றெழுது. தமிழ் நாட்டில் நோய்கள் தீர்க என்றெழுது. தமிழ் நாட்டில் வீதி தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் மலிக என்றெழுது,

அந்தத் தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலே நவீன கலைகளெல்லாம் பயிற்சி பெற்று வளர்க என்றெழுது. தமிழ்நாட்டில் ஒரே ஜாதிதான் உண்டு. அதன் பெயர் தமிழ் ஜாதி. அது ஆர்ய ஜாதி என்ற குடும்பத்திலே தலைக்குழந்தை என்றெழுது.

ஆணும் பெண்ணும்-ஒ ருயிரின் இரண்டு கலைகள் என்றெழுது

அவை ஒன்றிலொன்று தாழ்வில்லை என்றெழுது. பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான் என்றெழுது. பெண்ணை அடைத்தவன் கண்ணை அடைத்தான் என்றெழுது.

தொழில்கள், தொழில்கள், தொழில்கள் என்று கூவு. தப்பாக வேதம் சொல்லுபவனைக் காட்டிலும் நன்ருகச் சிரைப்பவன் மேற்குலத்தான் என்று கூவு.

வியாபாரம் வளர்க, யந்திரங்கள் பெருகுக. முயற்சிகள் ஓங்குக. ஸங்கீதம், சிற்பம், யந்திர நூல். பூமி நூல், வான நூல். இயற்கை நூலின் ஆயிரம் கிளைகள் இவை தமிழ் நாட்டிலே மலிந்திடுக என்று முழங்கு.

சக்தீ, சக்தீ, சக்தீ என்று பாடு

தம்பி நீ வாழ்க.

உனது கடிதம் கிடைத்தது. குழந்தைக்கு உடம்பு செம்மையில்லாமல் இருந்தபடியால் உடனே 'ஜவாப்' எழுத முடியவில்லை. குழந்தை புதிய உயிர் கொண்டது. இன்று உன் விலாஸத்துக்கு ''நாட்டுப் பாட்டுகள்'' அனுப்புகிறேன். அவற்றை பகுதி பகுதியாக உனது பத்திரிகையிலும் ஞான பானுவிலும் ப்ரசுரம் செய்வித்திடுக. ''புதுமைப் பெண்'' என்ருெரு பாட்டு அனுப்புகிறேன்' அதைத் தவருமல் உடனே அச்சிட்டு அதன் கருத்தை விளக்கி எழுதுக. எங்கேனும், எப்படியேனும் பணம் கண்டுபிடித்து ஒரு நண்பர் பெயரால் நமக்கனுப்புக, தம்பி, உனக்கேனடா இது கடமையென்று தோன்றவில்லை? நீ வாழ்க.

உனதன்புள்ள,

பாரதி.

புதுவையிலிருந்து பாரதியார் தமது தம்பி சி. விசுவநாதனுக்கு எழுதிய கடிதத்திலும் பாரதி தமது நூல்களை விரைவில் அச்சிட்டுத் தமக்குப் பொருள் கூடும்படி செய்யும் முயற்சிகளை வலியுறுத்தி யிருக்கிருர். ஆனல் இந்தக் கடிதத்தில் விசேஷமான அம்சம், தமது தம்பி தமக்கு ஆங்கிலத்தில் கடிதம் எழுதியதைப்பற்றி பாரதியாரின் கருத்துதான். 1918-ம் ஆண்டு ஆகஸ்ட் 3-ஆம் தேதி எழுதப்பெற்ற இக் கடிதத்தில் பாரதி சொல்கிருர்.

எனக்கு இனிமேல் இங்கிலீஷில் காயிதம் எழுதாதே. நீ எழுதும் தமிழ் எத்தனை கொச்சையாக இருந்தபோதிலும் அதைப் படிக்க நான் ஆவலுறுவேன். கொச்சைத் தமிழ் கூட எழுதமுடியாவிட்டால் ஸம்ஸ்கிர்தத்திலே காயிதம் எழுது.

பாரதியார் 1918-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் புதுச்சேரியிலிருந்து பிரிட்டிஷ் இந்தியாவுக்குத் திரும்பினுர். முதலில் தமது மனைவியின் ஊரான கீழக் கடையத்தில் வசித்தார். கடையம் போய்ச் சேர்ந்த சில தினங்களில் அவர் திரு. நெல்லையப்ப பிள்ளைக்கு எழுதுகிருர்:

இன்னும் ப்ரசுரம் செய்யவேண்டிய நூல்கள் என்னிடம் பல இருக்கின்றன. நான் இப்போது பிரிட்டிஷ் இந்தியாவுக்கு வந்துவிட்டபடியால் நமது ப்ரசுரங்களுக்குப் பணம் கொடுக்கக்கூடிய நண்பர்களும் பலர் இருக்கிருர்கள். உன்னை ஸஹாய புருஷனுகக் கொண்டால் ப்ரசுர கார்யம் தீவ்ரமாகவும் செம்மையாகவும் நடைபெறுமென்று தோன்றுகிறது. எதற்கும், நீ உடனே புறப்பட்டு இங்கு வந்து சேரும்படி ப்ரார்த்திக்கிறேன்.

உனக்கு மஹாசக்தி அமரத் தன்மை தருக.

உனதன்புள்ள,

ஸி. சுப்ரமணிய பாரதி.

தமது நூல்களை ஒழுங்கு செய்து, ஒரே சீராக நாற்பது பகுதிகளாகப் போட்டு மலிவான விலையில் விற்க வேண்டும் என்பது பாரதியாரின் ஆசை. புத்தகத்தைப் போடவேண்டும். அவை நிறைய விற்றுப் போகும், வரும்தொகை ஏராளமாக இருக்கும், புத்தகம் போட வாங்கிய கடன்களை அடைத்துவிட்டு சந்தோஷமாக இருக்குமளவுக்கு லாபம் கிடைக்கும்—இவை கவிஞரின் கற்பனைகள்.

1920-ஆம் வருஷம் ஜூன் மாதம் 28-ம் தேதி பாரதியார் சோழவந்தான் ஆர். ஸ்ரீனிவாச வரதனுக்கு அனுப்பிய ஆங்கில அச்சுக்கடிதத்தின் முதல் பாராவின் மொழி பெயர்ப்பு வருமாறு:

அன்புள்ள நண்பரே,

எனது எழுத்துப் பிரதிகள் யாவும்—என்னுடைய பன்னிரண்டு வருஷ அஞ்ஞாத வாசத்தின் பலன்கள்—புதுவையிலிருந்து இங்கு வந்து சேர்ந்துவிட்டன. அவைகளை 40 தனிப் புத்தகங்களாகப் பிரிக்கவேண்டும்; முதல் பதிப்பாக ஒவ்வொரு புத்தகத்திலும் 10,000 பிரதிகள் நான் அச்சிடப் போகிறேன். இந்த வேலைக்கு ஆரம்பத்தில் 20,000 ரூபாய் மூலதனம் தேவைப்படும். புத்தகங்கள் வெளிவந்த ஒரு வருஷத்தில், அதிகமானுல் இரண்டு வருஷத்துக்குள், செலவெல்லாம் போக நிகர லாபமாக ஒன்றரை லக்ஷம் ரூபாய் அடைவது நிச்சயம்.

இவ்வளவு உறுதியாகக் கவிஞர் நம்புவதற்கான காரணங்கள் யாவை? தமது எழுத்துக்களின் மேன்மையே காரணம் என்று கருதினுர் கவிஞர். இதே கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதன் மொழிபெயர்ப்பாவது:

வெளியிடுவதற்காக நான் இப்போது தேர்ந்தெடுத்தெடுத்திருக்கும் நூல்களில் பெரும்பாலானவை வசனக் கதைகள். அவை நெஞ்சை அள்ளக்கூடியவை; அதே சமயம் ஆழ்ந்த இலக்கிய அழகு கொண்டவை; எளிய நடையில் உள்ளவை; தெளிவானவை; ஒளி மிகுந்தவை. ஜனங்களுக்குப் பிடித்தமான நடையும், சொல்லழகும் கொண்டவை. அதேசமயம், பரிசுத்தமானவை, வழுவில்

லாதவை. இவை காவிய ரஸம் பொருந்தியவை, காலத்தை மீறி நிற்க வல்லவை.

இதனாலும், இது தவிர (2) தமிழ் நாட்டிலும் தமிழ் படிக்கும் வெளிநாடுகளிலும் தினந்தோறும் தமிழ் வாசகர்கள் ஆண், பெண், குழந்தைகள் பெருகிவருவதனாலும்: (3) தமிழ் நாட்டின் முன்னேற்றத்துக்கு எனது நூல்கள் சரித்திரபூர்வமாய் அத்தியாவசியமானவை யென்பதனாலும், உடனே நிகழப்போகின்றதும், தெய்வ சித்தமானதும் தவிர்க்கமுடியாததுமான கீழ்த்திசை நாடுகளின் மறுமலர்ச்சிக்குத் தமிழகத்தின் மேம்பாடு அத்தியாவசிய மென்பதனாலும்; (4) என்னுடைய பதிப்புகளில் நான் கையாளப் போகும் புதுமையான, அமெரிக்க வழியிலுள்ள முன்னேற்றங்களாலும், கதைகளில் வரும் சம்பவங்களுக் கேற்ப அழகான பொருத்தமான சித்திரங்களைக் கொண்டிருப்பதாலும் மக்கள் பிரமித்துப்போய் மனதைப் பறிகொடுத்துவிடுவார்கள் என்பதனாலும்; (6) என்னுடைய பழைய பிரசுரங்களினால் எனக்கிருக்கும் உயர்ந்த மதிப்பினாலும் ஈடு இணையற்ற செல்வாக்கினாலும்—இவை எல்லாவற்றினாலும் என்னுடைய நூல்கள் அமோகமாக விற்பனையாவது திண்ணம்.

தம்முடைய எழுத்துக்களை எவ்வளவு சரிவர எடைபோட்டிருக்கிறார் பாரதியார்!

இந்தப் பிரசுரத் திட்டத்துக்குத் தலைக்கு நூறு ரூபாய் வீதமாவது கடன் கொடுத்து உதவவேண்டும் என்று தமது நண்பர்களுக் கெல்லாம் பாரதியார் வேண்டுகோள் விடுத்தார். பாரதியாரின் நண்பர்களில் பெரும்பாலோர் செல்வந்தரல்ல; செல்வந்தர்களோ பாரதியாருக்கு உதவி செய்வதே ஆபத்தான காரியம் என்று பயந்தார்கள். திட்டம் நடைபெறவில்லை.

இதன் பின்னர் "அமிர்தம்" என்று ஒரு பத்திரிகை ஆரம்பிக்கலாமென்று பாரதி முயற்சி செய்தார். அது சமயம் அவர் எழுதிய ஒரு கடிதம்:

கடையம்,
26, ஆகஸ்ட் 1920.

ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸ வரதாசார்யனுக்கு நமஸ்காரம். மஹாசக்தி அமரத் தன்மை தருக.

"அமிர்தம்" பத்திரிகை 1921-ஆம் வருஷம், ஜனவரி மாஸம் முதல் தொடங்கும்.

மூலதனத்துக்கு வஸூல் தீவிரமாக நடத்திவருகிறேன். தயவுசெய்து தங்களால் இயன்ற தொகையை — தாங்கள் சொல்லியபடி, சொத்தை விற்றேனும் கொண்டுவரக்கூடிய தொகையைக்கொண்டு இவ்விடத்திற்கு உடனே வந்து சேரும்படி ப்ரார்த்திக்கிறேன்.

"சொத்தை விற்றேனும்" கொண்டுவரக்கூடிய தொகையைக் கொண்டுவரும்படி அநேகமாக உத்தரவு பிறப்பித்தாற்போல தொனிக்கும் அளவுக்கு தன்னம்பிக்கையைக் காண்கிறோம் இக் கடிதத்தில். ஏசு கிறிஸ்து போகும் வழியில் ஒருவனை விழி யெடுத்துப் பார்த்தாராம்; அவன் உடனே தன் வீடு வாசல் உற்றார் உறவினர் யாவற்றையும் விடுத்து அவர் பின்னே சென்றானாம். ஏசுவின் கண்ணில் ஒளி வீசிய, அத்தகைய தன்னம்பிக்கை பாரதியாருடையது. தமது மனதை மாசு மறுவற்றதாக வைத்துக்கொண்டு, செம்மையானதோர் இலட்சியத்துக்காக அல்லும் பகலும் உயிர் வாழ்ந்த ஒரு மகானது தன்னம்பிக்கை அது. அவரது இலக்கியத்தில் காண்பதைப்போலவே, அவரது கடிதங்களிலும் இதைத் தெளிவுறக் காண்கிறோம்.

## இதோ, பாரதி கடிதங்களில் ஒன்று!





# இலக்கியம் எதற்கு?

★

**பேராசிரியர் அ. சீனிவாசராகவன்**
தலைவர், அகில இந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றம்.

இலக்கியம் எதற்கு? எல்லாப் பொருளையும்-கடவுளைக் கூட—தராசில் இட்டு நிறுக்கும் இந்த விஞ்ஞான ஆராய்ச்சிக் காலத்தில் இப்படி ஒரு கேள்வி எதிர் பார்க்கக்கூடியதுதான். "நல்ல கேள்வி இது!" என்று சிரித்து மழுப்பிவிட்டுப்போக முடியாது. நொண்டிச் சமாதானப் புழுதியை வாரி இறைத்து, நம்மையும், கேள்வி கேட்பவரையும் குழப்பிவிடுவதும் கூடாது. எதற்காக அப்படிச் செய்யவேண்டும்? நம்முடைய இலக்கிய ஈடுபாடு, அப்படி என்ன வெறும் குருட்டுத் தனமா? அந்த ஈடுபாட்டின் தன்மையை, அதன் பயனை, சிந்தித்துப் பார்ப்பதிலே தெளிவு பிறக்கும். "இலக்கியம் எதற்கு?" என்ற கேள்விக்கு விடையும் தோன்றும். செய்து பார்ப்போமே.

நாற்பது ஐம்பது வருஷம் வாழ்ந்து மறைந்த மனிதன் ஒருவன், நானூறு வருஷமாக மறைய வழி தெரியாமல் திண்டாடும் கருங்கல் மதில் ஒன்று. இந்த மனிதனையும், அந்த மதிற் சுவரையும் ஒன்றாக வைத்து, "இவன் நீர்மேற் குமிழியாய் அழிந்து போனான், சுவரோ நிலைத்து நிற்கிறது. இன்னும் குறைந்தது நானூறு வருஷத்திற்கு நிற்கும். ஆகவே மனிதன் வாழவே இல்லை. சுவர்தான் வாழ்கிறது." என்று யாராவது சொல்வார்களா? எவ்வளவு காலம் இருந்தோம் என்பதைக் கொண்டா. இல்லை, எப்படி இருந்தோம் என்பதைக் கொண்டல்லவா, வாழ்ந்தோமா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டி இருக்கிறது? எவ்வளவு காலந்தான் நின்றபோதிலும், சுவரை வாழ்ந்ததாக நாம் கருதுவதில்லை. அது வாழவில்லை, இருக்கிறது. மனிதனே வாழ்கிறான். அவன் உள்ளே, உணர்ச்சிகளும், கருத்துக்களும், எண்ணங்களும் ஊற்றெடுத்துப் பெருகி வெள்ளக்காடாய் மண்டி விடுகின்றன. இந்த உள் உலகத்தை வைத்துத்தான் ஒருவன் வாழ்கிறானா என்பதை அளவிடுகிறோம். எவனுக்கு இந்த உள் உலகம் வளம் பொருந்தியதாக இருக்கிறதோ அவன் வாழ்பவன். உள் உலகம் சூனியமாக இருந்ததானால், அந்த மனிதனிடம் மற்ற எது இருந்தாலும் அவன் வாழவில்லை. இது ஆங்கில ஆசிரியர் வால்டர் பேடர் என்பவருடைய கருத்து. உண்மையாகத்தான் தோன்றுகிறது. ஏற்றுக்கொள்வோம்.

உள் உலக வளம் என்றால் என்ன? உணர்ச்சி நிறைவே உள்ளத்தின் வளம், உணர்ச்சி என்று சொல்லும்போது, சிந்தனை, கருத்து, கற்பனை, பார்வை, இலட்சியம் இவற்றையெல்லாம் சேர்த்தே பேசுகிறோம்; இவையெல்லாம் நிறைந்த உள்ளமே வளம்பொருந்திய உள்ளம். மிக மிக மெல்லிய தந்திகள் கொண்ட வீணை ஒன்று உண்டு. "காற்று வீணை" என்று சொல்வார்கள். இளந்தென்றலின் மிருதுவான அசைவிற்கூட. அந்த வீணையின் தந்திகள் துடித்து இசை எழுப்பும், இந்த வீணையைப் போலவே நமது உள்ளமும் அமைந்துவிட்டதானால், வெளி உலகத்திலே எது நடந்தபோதிலும், நமது உள்ளத்தின் நரம்புகள் துடிக்கத் தலைப்படும், உணர்ச்சி நாதம் உதயமாகும்.

இந்த உணர்ச்சி நாதத்தின் சொல்வடிவமே இலக்கியம் என்பது. இந்நாதத்தின் பல்வேறு வகைகளை, பல்வேறு படிகளைச் சொல்லில் அமைத்து, சொல்லின் மூலமாக நம்முடைய உள்ளத்தில் பதிய வைப்பவர்களே இலக்கியத்தைப் படைப்பவர்கள். இவர்களுடைய சொல்லில் ஈடுபடுவதே இலக்கியப் பயிற்சி. இவர்களோடு பழகிப் பழகி நமது உள்ளத்தையும் உயிர்த் துடிப்புள்ள உணர்ச்சி வீணையாக மாற்றுவதுதான் இலக்கியக் கல்வி.

காலை வெயில் துள்ளி வருகிறது. எத்தனையோ தடவை பார்த்திருக்கிறோம். ஏது காரணமாகவோ, பார்க்காமலும் இருந்துவிடுகிறோம். உள்ளத்திலே ஏதாவது எழுச்சி ஏற்படுகிறதா என்றால், இல்லை. அப்படி ஏதாவது ஏற்பட்டாலும், அதற்கு அழுத்தமும் வடிவும் இல்லாத காரணத்தால் உடனேயே அழிந்து போகிறது. இதோ பாரதி வருகிறார். கேட்போம்.

> "காலை வெயிலா? அடடா! அது ஓர்
> அற்புதம் தம்பி!
>
> "தங்கம் உருக்கித் தழல்
> குறைத்துத் தேனாக்கி
>
> "எங்கும் பரப்பியதோர்
> இங்கிதம்'

—அல்லவா அது! என்று பரவசமடைகிறார். அவருடைய சொற்களைக் கேட்டதும், நம்முடைய கண்ணை மறைத்த திரை விலகுகிறது. காலை வெயிலின் அழகு நமது நெஞ்சிலே வடிவாகிறது, நிலைத்தும் நிற்கிறது. இந்த வெயிலின் அழகை, இலக்கிய கர்த்தா ஒவ்வொருவனும் ஒவ்வொரு விதமாகப் பார்க்கிறான், தருகிறான். இதனால் ஒரே பொருளின் அழகை எத்தனையோ விதமாகப் பார்க்கிறோம், பருகுகிறோம். இப்படி ஒரு பொருளா? ஆயிரம் ஆயிரம் பொருள்களைப்பற்றி இலக்கியம் பேசுகிறது. அது இலக்கியமானால், இந்தப் பேச்சு நமது உள்ளத்தில் அனுபவமாக மாறி, அதனோடு கலந்து விடுகிறது. இப்படிப் பெறுகின்ற அனுபவம் ஒவ்வொன்றும் ஓர் உணர்ச்சிப் பொக்கிஷம். ஒவ்வொரு உணர்ச்சியும் எல்லையற்ற அழகின் ஒளியை என்றும் நின்று தரும் அமர தீபம்.

இயற்கையழகு இருக்கட்டும், மனித வாழ்க்கைக்கு வருவோம். எத்தனையோ பேரைச் சந்திக்கிறோம். அவர்களோடு பழகுகிறோம். ஆனால் சந்திக்கும் ஒவ்வொரு

வரையும் முழுவதும் புரிந்துகொள்வதற்கு நமக்கு வாய்ப்பில்லை, நேரம் இல்லை, ஆற்றலும் இல்லை. போதாதற்கு, நம்முடைய சொந்த ஆசைகள் வேறு குறுக்கிடுகின்றன. மற்றவர்கள், இந்த ஆசைகளை நிறைவேற்றும் கருவிகளாகவோ, அல்லது எதிர்க்கும் தடைகளாகவோ நமக்குத் தென்படுகிறார்கள். நாம் யாரோடு பழகுகிறோமோ, அவரை, அவருக்காகவே அணுகுவதும், அவருடைய உள்ளத்திலிருந்தே கண்டு புரிந்துகொள்வதும் நமக்குச் சாத்தியமில்லை. நம்மை மறந்து, பிறரோடு ஒட்டி நிற்கும் ஆற்றல் நமக்கேது? அதைப்பெற்றுவிட்டால், அதனினும் சிறந்த பயன் ஏது? இன்பந்தான் ஏது?

இதோ, தெருவிலே யாரோ நடந்து போகிறான். அவன் முகத்தில் சோகத்தின் இருட்டை நான் பார்க்கிறேன். ஏன் அவனுக்கு இந்தச் சோகம்? அவனைக் கேட்பதற்கு நான் துணிய வேண்டும். துணிந்தாலும் அவன் சொல்வானா? தன்னுடைய தனி வாழ்வுச் சுதந்திரத்தில் நான் தலையிடுவதாக நினைக்கலாம், கூச்சப்படலாம். கோபித்து என்னை உதறித்தள்ளலாம். அப்படியே என்னிடம் அவன் சொல்வதாக வைத்துக்கொள்வோம், அது முழு உண்மையாகுமா? வேண்டுமென்று எவ்வளவு மறைக்கிறானோ? இல்லையென்றாலும், அவனுக்கே அவனுடைய உணர்ச்சியின் காரண காரியத் தொடர்பு விளங்காமல் இருக்கலாம். எப்படி நமக்குச் சொல்லப் போகிறான்? அழுத்தமற்ற உணர்ச்சியை—நம்மைப் போலத்தானே அவனும்?-எப்படிச்சொல்லிலே தருவது? அழுத்தமான உணர்ச்சிதான் என்றாலும், சொல்லிலே அழுத்தம் இருந்தால் அல்லவா, அது நம்முடைய நெஞ்சைக் கவ்வும்? அவன் என்ன, புலவனா? சொல்லின் செல்வனா? சாதாரண மனிதன், பாமரன். இத்தனைக்கும் மேலாக எனக்கு அவன் சோகத்தை ஆராய்வதற்கு நேரம் ஏது? என் வயிற்றுப் பிழைப்பு, என்னுடைய ஆசை, ஆசாபங்கம், வெற்றி, தோல்வி, நான், நான், நான்! அங்கே எல்லோரையும் தானாக எண்ணி நம்மைக் கரைத்துக் கொண்டு மனித தத்துவத்தை உணர்வதற்கு இடமேது?

உலகமெலாம் தானாகக் கரைந்து, உயிரின் குரலாகத் தன் உள்ளத்தை ஆக்கி வைத்துப் பேசுகின்ற சொல்லே இலக்கியம். இலக்கிய உலகத்திலே, நம்மை மறந்து—நம்முடைய அன்றாட வாழ்க்கைஎன்ற குறுகிய வரம்புக்குள்ளே நிலவும் நமது பொறுப்பு, கௌரவம், கவலை, பெருமை, சிறுமை, இவற்றையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு - மற்றவர்களோடு—அவர்கள் கற்பனைப் பாத்திரங்களாய் இருந்த போதிலும்—அவர்களோடு பழகி அவர்கள் மனநிலைகளில் நம்மை இழந்துவிடவும் முடிகிறது. வாசலில் ''ஐயா பிச்சை'' என்று துடிக்கும் கிழவியை ''போ போ, வேறு வேலை இல்லை'' என்று சீறி விரட்டும் நாம், கண்ணகியின் துயரத்தில் பங்கு பெறுகிறோம், சந்திரமதியோடு மயானத்தில் புலம்பி அழுகிறோம். நாட்டின் நெருக்கடியான நிலையில், நாலு காசு தியாகம் செய்யத் தயங்கும் நாம், கர்ணனுடைய கொடையிலே நம்மை இழந்து, அவனோடு சேர்ந்து

''ஆவியோ நிலையிற்
கலங்கியது; யாக்கை
அகத்ததோ புறத்ததோ அறியேன்.
பாவியேன் வேண்டும்
பொருளெலாம் நல்கும்
பக்குவம்தனில் வந்திலையால்''

என்று பேசுகிறோம். இது மாத்திரமில்லை. இலக்கிய உலகில் எத்தனையோ விதமான மனிதர்களைச் சந்திக்கிறோம். ஒவ்வொருவரோடும் உறவாடுகிறோம், நல்லவர்களோடு மட்டுமில்லை, தீயவர்களோடுங் கூடத்தான். கூனியோடு சென்று கைகேயின் மனத்தைக் குலைக்கிறோம். கைகேசியாக நின்று, வரங்கேட்டு, கணவனைப் புழுவாகத் துடித்து மடிய விடுகிறோம். தசரதனாக மாறித் துடிக்கிறோம். இராமனைக் காட்டுக்குப் போகிறோம்.

''என் பின்னவன் பெற்ற செல்வம்
அடியனேன் பெற்றதன்றோ''

என்று அவனோடு நிறைவு பெறுகிறோம். அவனுடைய தரும நெறியில் நாமும் நடந்து சென்று,

''நிறப்பெரும் படைக்கலம்
நிறத்தின் நேருற
மறப்பயன் விளைத்திடல்
வலிமை யன்றரோ
இறப்பினும் திருவெலாம்
இழப்ப நேரினும்
துறப்பிலா அறமெனல்
சூர ராவதே''

என்று அறத்தின் ஆற்றலுக்குச் சான்றாக, சான்றாண்மையில் ஊன்றுகிறோம். சீதையோடு அசோக வனத்தில் தவம் புரிகிறோம்.

''நவையறு குணங்களென்னும்
பூணெலாம் பொருந்த
அப்புண்ணிய மூர்த்திதன்னைக்
காணலாம் இன்னும்
என்னும் காதலால் இருந்தேன்''

என்று கற்புப் பெருந் தெய்வத்தின் காதலில் கரைகிறோம். கும்பகருணனோடு, அண்ணனுக்காகப் போர்க்களத்தில்,

''எம்முன் பகைஞரை வணங்கி வாழ்த்திக்
கும்பிட்டு வாழ கில்லேன்''

என்று சூளுரைத்து உயிரையே வீசி எறிகிறோம். வீடணனாக நின்று, அறத்திற்காக, உற்றார், உறவினர், வீடு,வாசல், இனம், நாடு, அனைத்தையும் துறக்கிறோம். இராவணனாக ஓங்கி நிமிர்ந்து, பிறகு காமத்திற்கு பலியாகிறோம். எத்தனை எத்தனை உள்ளங்களோடு, பண்புகளோடு, நிலைகளோடு ஒட்டி நின்று நம்மை மறக்கிறோம். எத்தனை எத்தனை காரியங்களை மேற்கொள்ளுகிறோம். எத்தனை எத்தனை அனுபவங்களைப் பெறுகிறோம்! அதோடு, ஒவ்வொரு உணர்ச்சியும், அனுபவமும், எவ்வளவு தெளிவாக, எவ்வளவு பிரம்மாண்டமான ஆகிருதியோடும் நம்முடைய நெஞ்சில் வளர்கிறது. எவ்வளவு துல்லியமாக அதன் நன்மையும் தீமையும் காரண காரிய அமைதியோடு நமது நெஞ்சில் உருவாகி விடுகின்றன.

இப்படி இலக்கிய உலகில் இருந்து விட்டுத் தெளிவற்ற, மங்கிய நமது தினசரி வாழ்க்கைக்குத் திரும்பும் போது உணர்ச்சி விசாலமும் அனுபவ அழுத்தமும் நன்மை தீமைத் தெளிவும் பெற்று, வாழும் மனிதர்

களாக, வாழத் தெரிந்த பக்குவம் உடையவர்களாக வருகிறோம்.

மண்ணுலகத்து நல்லோசைகள்
காற்றெனும் வானவன்
கொண்டுவந்தான்
பண்ணிலிசைத்து அவ்வோசை
அனைத்தையும் பாடி
மகிழ்ந்திடுவோம்.

என்று பாரதியார் பாடினார். இந்தப் பண்தான்—அது குறுங் கதையாக, நெடுங் கதையாக, நாடகமாக, சிறு பாடலாக, காவியமாக எந்த வடிவத்தில் இருந்தாலும் இந்தப் பண்தான் இலக்கியம். அழகு, பரிவு என்ற எல்லையற்ற இருவரம்புக்குள்ளே எல்லையற்ற ஆற்றலோடு தனி உயிர் ஒன்று மனிதவாழ்வையும் பிரபஞ்சத்தையும் கண்டு கண்டு, கண்டனவற்றையெல்லாம் தனது தனி உள்ளத்தின் வடிவாக்கி, அவ்வுள்ளத்தைப் பிய்த்துச் சொல்லில் வைத்து நமது நெஞ்சுக்குப் படைக்கும் அற்புதமே இலக்கியம். அது வாழ்க்கையைக் காட்டும் கண்ணாடி, வாழ்க்கையை நமது அனுபவமாக மாற்றித் தரும் கலாசாதனை, நமது நெஞ்சைத் துடிப்புள்ளதாக, உயிருள்ளதாக மாற்றி, நம்மை மனிதர்களாக உயர்த்தும் பள்ளி. நம்மை மறந்து பிறரோடு ஒன்றி நிற்கும் இன்பத்திற்கு நம்மை அழைத்துச் செல்லும் அருட் கரம். இலக்கியம் எதற்கா? எதற்கென்று கேட்கிறீர்கள்? நாம் வாழ வேண்டாமா? வாழ்வாங்கு வாழ வேண்டாமா? அதற்குத்தான்.

(வானொலிப் பேச்சு)



# பேனா முனை

★

கவியோகி மகரிஷி
சுவாமி சுத்தானந்த பாரதியார்

பேனாமுனையிலே வாழ்வாம் — செல்வப்
பேனாவருந்திடினோ தாழ்வாம்
பேனாமகிழ்ந்து நடம்புரிந்தால் — வாழ்வு
பேரின்ப நிலைதரும் விருந்தாம்

உலகை நடத்துவது பேனா — மக்கள்
உள்ளத்தை உயர்த்துவது பேனா
கலகமொழிந்தமைதி சேர — வழி
காட்டி நடத்துவது பேனா

வரட்சியைப் போக்குவது — பேனா
வளமையாக்குவது பேனா — காலப்
புரட்சியைத் தூண்டுவது — பேனா — அறப்
போரை வெல்லுவது பேனா

முதுநலங் காப்பதுவும் பேனா — நாடு
முன்னேறப் பார்ப்பதுவும் பேனா
புதுயுகச் சிற்பிகளின் பேனா — அதைப்
போற்றின் உலகுயருந்தானே

இன்பக்கதைகள் சொல்லும் பேனா — மக்கள்
இதயத் துடிப்பளக்கும் பேனா
அன்புப்பயிர் வளர்க்கும் பேனா — எம்மை
ஆளும் அருட்சக்தி பேனா — அது

துன்பக் கண்ணீர்விடுதலாமோ — மனஞ்
சோர்ந்து தளருவது மாமோ
தெம்போடது நிலவச்செய்வோம் — இந்தத்
தேசநலம் பெருக உய்வோம்

இரவும் பகலும் இனிதெண்ணி — மூளை
யிரத்தங் கொதிக்கச் சிந்தைபண்ணி – சக்தி
வரந்தரு வாக்கமுதினாலே — மக்கள்
வாழக் கவிதைதந்த புலவர்

அரிய இலக்கியங்கள் வகுத்த – எழுத்
தாளர் உரிமையினைக் காப்போம்
பெரிய விடுதலைத் தந் துதவும் — அவர்
பேனாவைக் கொஞ்சி முத்தமிடுவோம்

வள்ளற் புலவர் வரகவிகள் — மறு
மலர்ச்சிச் சோலையினை வளர்க்க
அள்ளித்தருஞ் செல்வர் வாழ்க — நல்
லறிவின் ஆக்க ஒளிசூழ்க!

# புதியன புகுதல்

*

கு. அருணாசலக் கவுண்டர்

தொல்காப்பியரோ வள்ளுவரோ இன்று நம்மிடையே தோன்றுவாரானால், நாம் பேசும் தமிழ், அவர்கள் தந்ததுதான் என்றாலும் அவர்களுக்கு ஒன்றும் புரியாது. எங்கள் மொழி அல்லவே என்பார்கள். உதாரணமாக...இந்தப் புத்தகம் நேற்று நான் வாங்கியது என்று எல்லோரும் சொல்லுகிறோம்... இல்லையா? அவர்களுக்கோ இந்த வாக்கியம் வேறு பாஷைதான். அந்த இந்த என்ற சொற்களை அவர்கள் காதாலும் கேட்டதில்லை. அ, இ என்ற எழுத்தால்தான் அவர்கள் சுட்டுப்பொருளை உணர்த்தினார்கள். புத்தகம்....இது நமது நாட்டிலே மிகவும் சமீபகாலத்திலேதான் தோன்றியது. இதை அவர்கள் அறியாததிலே வியப்பில்லை 'நேற்று' என்றால் திகைப்பார்கள்: 'நெருநல்'தான் அவர்கள் சொல். 'நான்' என்பதுகூட அவர்களுக்கு அன்னியந்தான். 'யான்'தான் அவர்கள் சொல்.

பேச்சு வழக்கிலே உள்ள மொழிகள் எப்போதும் மாறிக்கொண்டேதான் இருக்கும். பழைய சொற்கள் மறையும்; உருக்குலையும் அல்லது பொருள் மாறும். புதிய சொற்கள், தொடர்கள் தோன்றும். இப்படி காலகதியிலே ஒவ்வொரு மொழியும் மாறிவருதல் இயல்பே. மாறுதல் இன்றி, ஒரு நிலை எய்தும் மொழிகளுக்கு அழிவு வெகுதூரத்தில் இல்லை. இம்மாறுதல்தான் மொழி வளர்ச்சி. இது உயிர் நூல் உண்மை.

இந்த மாறுதல் தமிழிலே என்று தொடங்கியது என்று சொல்வதற்கில்லை. தமிழ் நூல் என்று தோன்றியதோ அன்றே இதுவும் காணப்படுகிறது. தொல்காப்பியந்தான் நாம் அறிந்திருக்கும் ஆதி நூல்: இதில் காப்பியம் என்பதே வட மொழிச்சிதைவுதான். தமிழுக்கே உரிய இயற்சொல் திரி சொற்களையும் தமிழிலே கலந்துபோன திசைச் சொல், வட சொற்களையும் ஆராய்ந்து, தொல்காப்பியர் பிறமொழிச் சொற்களை வழங்கும்போது அனுசரிக்கவேண்டும் விதிகளை நுட்பமாய் வரையறுத்திருக்கிறார். அவ்விதிகளுக்குத்தாமே உதாரணங்காட்டுவார் போன்று, வடசொற்கள் பலவற்றைத் தற்சமமாயும், தற்பவமாயும் வழங்கியிருக்கிறார். வடமொழி வியாகரண சங்கேத பதங்களை அதாவது கலைச் சொற்களையும், மொழிபெயர்த்து, மொழிபெயர்ப்பிலே, தமிழ்மரபு கெடுதல் கூடாது என்றும் எச்சரிச்கை செய்திருக்கிறார். இதனால், சமஸ்கிருதத்தைத் தழுவியே தமிழ் வளர்வதற்கு அவர் அடி கோலினார். நாளடைவிலே தமிழ் இலக்கியமும் ஒரு புதிய சக்தியையும் பரந்த தன்மையையும் அழிவிலாச் செல்வங்களையும் பெற்றது. தமிழரின் தனி நாகரிகத்திலே அடங்காத கொள்கைகள், கோட்பாடுகளைப் புதியன வாய்க் கொண்டு, உலகப் பொதுநூலாகத் திருக்குறள் தோன்றியது. மகாகாவியமாகக் கம்பராமாயணம் எழுந்தது. இசைமலிந்த பக்திப் பனுவல்கள் மலர்ந்தன. சங்கீதம், நாட்டியம் கட்டிடக் கலைகளும் புதிய பொலிவுடன் தோன்றின.

சமயம் கல்வி சமுதாயத்துறைகளிலே வடமொழிக் கலப்பால், தமிழ் செழித்து வளர்ந்தது போலவே, வர்த்தகமுறையிலே பிற நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்பாலும், அடைந்திருக்கும் நலங்கள் பலவாகும். வெளிநாட்டார் பலரும் தமிழ்நாட்டிலே நிலைத்த குடிகளாய்ப் பண்டே வாழ்ந்திருந்தமையைச் சங்க நூல்கள் தெரிவிக்கின்றன. எழினி, ஓரை, சுருங்கை முதலிய சொற்கள் யவனர் தந்தவை. இவையே அன்றிக் கொடுந்தமிழ் நாடுகளின் உறவாலும் தமிழிலே புகுந்துள கருத்துக்களும், சொற்களும் பற்பல. போரிலே சிறை பிடிக்கப்பெற்றுத் தஞ்சாவூரிலே வசித்து வந்த கருநட தேசத்துப் பெண்கள், தமிழ்மொழியை வடுகோடு கலந்து பேசிவந்தனர்.

''மழலை த்திருமொழியிற்
சிலவடுகும் சிலதமிழும்
குழறித்தரு கருநாடியர்''...

என்று ஜயங்கொண்டார் பாடியிருக்கிறார். சளுக்கியர், இராட்டிரகூடர், சிங்களர், கதம்பர், கங்கர், ஒய்சளர்களுடன் தமிழ் வேந்தர் அடிக்கடி போராடியும், கொண்டும், கொடுத்தும், உறவாடியும் வந்தது சரித உண்மை. இவற்றாலும் தமிழ்மொழி மாறுதலடைந்திருக்கிறது.

பிற்காலத்திலே தானும் வழக்கிலே வந்துள்ள டாங்கி, விமானம், பெட்ரோல், மோட்டார், பீரங்கி, குண்டு, துப்பாக்கி, தோட்டா... ...இவற்றை நாம் தள்ளிவிட முடியுமா? இவற்றுள் டாங்கி...பெட்ரோல் முதலியன ஆங்கிலச் சொற்கள்... பீரங்கி—பாரசீகம். குண்டு ... மராத்தி. துப்பாக்கியும், தோட்டாவும் ... இந்துஸ்தானி. நமது பெண்கள் அணிந்துவரும் ஆபரணங்களைத் தானும் பாருங்கள். அட்டிகை ... கன்னடம். கொலுசு....தெலுங்கு. சிமிக்கி....இந்தி. தாயத்து ...அரபி. புல்லாக்...துருக்கி. ஆடைவகைகளிலும் உருமால், குல்லா, சால்வை, தாவணி ... இவை பாரசீகம். துப்பட்டா...தொப்பி .... நாடா .... இந்தி. நேரியல்...மலையாளம். பனியன், ஜிப்பா...அரபி. பித்தான்...ஆங்கிலம். இவ்வாறு ஒவ்வொரு துறையிலும் பேச்சு வழக்காகக் கலந்திருக்கும் பிறசொற்களைப் பவானந்தம்பிள்ளை தம் சொல்லகராதியிலே ஆயிரம் வரை கணக்கிட்டுள்ளார். அரசியல் மாற்றம் காரணமாகத் தமிழிலே புகுந்துவிட்ட இவற்றைப் பொன்னே போலப் புலவர்களும் போற்றியிருக்கிறார்கள். சபாஷ் என்று மெச்சுகிறோமே. சுப்பிரமணிய சுவாமி சூரபதுமன் மீது வேல் விட்டபோது....

"சித்தர் விஞ்சையர் மாகர் சபாசௌ
கட்டவெங்கொடு சூர்கிளை பேர்
அற விடும் வேலா" .... என்று

பாடுகிறார் அருணகிரியார்.

"குறவர் மகட்குச் சலாமிடற்கு ஏக்கறு
குமரனை முத்துக் குமரனை" ....

குமரகுருபரும் சலாம் இடத்தான் செய்கிறார்.

ஐரோப்பியர் தொடர்பால் மேனாட்டு இலக்கிய முறைகளைத் தழுவி, வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் நாவல்கள் தற்போது எழுந்துள்ளன. இந்த நாவலாசிரியர்களின் எடுப்பு, பிடிப்பு, சஞ்சாரம் எல்லாம் புதிய மோஸ்தர்தான். நீளமான கதைகளைப் படிப்பதற்கு அவகாசம் இல்லை என்பதால் வாழ்க்கையின் சில அம்சங்களை மட்டும் ஒளிரச்செய்யும் மின்னல் வெட்டுப் போன்ற சிறு கதைகள் தோன்றியுள்ளன. பத்திரிகைகளும், சக்திவாய்ந்த வசன நடையை உருவாக்கி வருகின்றன. தமிழிலே நாடக நூல் இல்லைதான். மனோன்மணீயம் இந்தக் குறையைப் போக்கியது. பழைய இலக்கிய மரபுகளுடன் புதிய முறைகளையும் பொருத்தி, ஆங்கில இலக்கியப் போக்கைத் தழுவி எழுதப்பெற்றது இந்நாடகம். தமிழ் இலக்கிய உலகிலே ஒரு புதிய சகாப்தத்தைப் பாரதியார் தொடங்கினார். அவருடைய சொல் புதிது. பொருள் புதிது. சுவை புதிது. பெய்கிற மழையை சிந்தாமணியும் வருணிக்கத்தான் செய்கிறது. "வெள்ளி, வேண், கோல் நிரைத்தன போல் கொழுந்தாரைகள் வான் நிரைத்து மணந்து சொரிந்தவே.". மழைத் தாரைகள் வெள்ளிக்கோல் போல் வீழ்ந்தனவாம். பாரதியார்க்கு மழை எப்படிக் கொட்டுகிறது தெரியுமா ?

வெட்டி அடிக்குது மின்னல் — கடல்
வீரத்திரை கொண்டு விண்ணை இடிக்குது
கொட்டி இடிக்குது மேகம் — கூ
கூ என்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய — மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா !

இவை கடன் சொற்கள் என்பதால் இவற்றை விலக்கும் தற்போதைய முயற்சி, மொழி வளர்ச்சிக்கு உகந்தது அல்ல. இவற்றால் மொழி கெட்டுவிடும் அல்லது உருக்குலைந்துவிடும் என்று அஞ்சுவதற்கு இடம் இல்லை. முற்காலங்களிலே சிற்சில மொழிகளே தமிழிற் கலந்துவந்தன. இப்போதோ ஜப்பான் முதல் சூரியன் அஸ்தமிக்கும் கலிபோர்னியா வரையுள்ள நாடுகள் எல்லாம் தமிழிலே மாறுதல்களை உண்டுபண்ணிக் கொண்டிருக்கின்றன "எல்லாரும் சேர்ந்து எத்தனை குட்டிக்கரணங்கள் போட்டாலும் இம் மாற்றத்தைத் தவிர்க்கமுடியாது. கடலிலே நின்றுகொண்டு, அலைகளைத் தடுக்க முயன்றால் என்ன கதி ஆகும்: அதே கதிதான்"... என்கிறார் டி. கே. சி.

மக்களுடைய மானோபாவம் விரியுந் தோறும், கலைஞான உண்மைகள் வெளிப்படுந்தோறும், வேற்று நாடுகளிலிருந்து புதிய பொருள்கள் உட்புகுந்தோறும் மொழியும், அதன் நடையும் மாறி வருதல் இயல்பே. மாறுதல்கள் அதாவது புதியன புகுதலும்; பழையன கழிதலும் ஒரு மொழியில் நிகழ்ந்துகொண்டிருக்கும்வரையிலும் அதற்கு உயிர் உண்டு. இயக்கம் உண்டு. இம் மாறுதல்கள் மிதமிஞ்சிப் போகாமல் தடுப்பதற்குத்தான் இலக்கணம். பாஷை என்பது நதியின் பிரவாகத்தைப் போன்றது. சில காலம் விரைந்து செல்லும் சில காலம் மந்தமாக மெல்லென நின்று நின்று செல்லும். இந்த ஆறு நமக்குப் பயன்படும் பொருட்டு அதன் போக்கை அனுசரித்து இட்டுக்கொண்ட கரைகள்தான் இலக்கணம், ஆற்றின் போக்கைத் தடுத்து இடப்படும் கரைகள் நிலைத்து நிற்கா. மற்றோர் சிற்றாறோ பேராறோ இதனுடன் கலக்கும்போது, கரைகளைத் தகுந்தபடி மாற்றி அமைக்கிறோம். ஆற்றின் பொருட்டுத்தான் கரைகள், கரைகளின் பொருட்டு ஆறு இல்லை. இலக்கியங் கண்டதற்குத்தான் இலக்கணம். தற்போது தோன்றியிருக்கும் புதுமை இலக்கியம் பலவகை.

பண்டைய புலவர்கள் அந்தி வானம் சந்திரோதயம் ஆழ் கடல்களைப் பாடிக்கொண்டிருந்தனர். தற்போதோ கருத்தடை, 'ரேஷன்' பங்கீடுகளைப் பாடுகின்றனர்.

"ஈசன் படி அளக்கும் இதிகாச காலம் அல்ல
ரேஷன் படி அளக்கும்
ரெண்டுங் கெட்டான் காலமிது".

கவிக்குரியவாறு பொருள்கூட காலத்திற் கேற்றவாறு மாறுகிறது. செய்யுள் கிடக்கட்டும். இந்த உரை நடையைத் தானும் பாருங்கள். எவ்வளவு மாறுதல்? நண்பர் எஸ். மகராஜன் எழுதுகிறார் :—

பாஷை என்பது குடையும் அல்ல. குல்லாவும் அல்ல., அது தசையோடு ஒட்டியிருக்கும் தோலைப் போன்றது. மனித வாழ்க்கைக்கும் பாஷைக்கும் அவ்வளவு அன்யோன்யம். ஆகவே வாழ்க்கையின் பண்பு மாறும்போது, இலக்கியத்தின் இயல்பும் மாறித்தான் ஆகவேண்டும். சாரைப் பாம்பு தன் உடம்போடு உடம்பாக இருக்கும் சட்டையைக் கழற்றி எறிந்து, மாறுதல் அடைவது போல, ஒவ்வொரு மொழியும் காலப் போக்குக்குத் தகுந்தவாறு மாறுதல்களை அடைகிறது. மாற மறுத்தால் மடிகிறது. மாறுதல் என்பது தான் வளர்ச்சி. இயற்கை. வானம் அளந்தது அனைத்தும் அளந்து வளர்மொழி வாழியவே.

(வானொலிப் பேச்சு)



# சிந்தனைத் தொடர்பு

★

டாக்டர் மெ. சுந்தரம்

மனிதன் தன் மனக்கருத்தை வெளியிட முகக்குறிகளைப்பயன்படுத்தினான். சைகைகளைப்பயன்படுத்தினான்; குரல் ஒலியைப் பயன்படுத்தினான். காலப்போக்கில் முகக் குறிக்கும், சைகைக்கும் பிற்பட குரல் ஒலி பயனுடையதாகக் கருதப்பட்டு மிகுதியும் பயன்படுத்தப்பட்டது. அதன்படி, முறை வளர்ச்சியால் மொழி தோன்றியது. இவ்வாறு மனிதனது சிந்தனைத் தொடர்பால் உருவானதே மொழியாகும்.

மனத்தில் தோன்றும் எண்ணங்கள் கண்ணுக்குப் புலனாகாத நுண்பொருள்கள், அவற்றை, முதலில் ஒலி வடிவாய் நின்று செவிப்புலனாக்கி, பிறகு வரிவடிவாய் வளர்ந்து கட்புலனாக்கி உதவுவது மொழி. சுருங்கக் கூறினால் மக்களின் மனக் கருத்துக்களுக்கு ஓரளவு கொடுக்கப்பட்ட ஒலி வடிவும், வரி வடிவுமே மொழி எனலாம்.

"உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாகில், வாக்கினிலே ஒளியுண்டாகும்" என்றார் பாரதியார். கருத்துக்களின் வளர்ச்சியே மொழி வளர்ச்சி. அதுபோலச் சிந்தனையின் தேக்கமே மொழியின் தேக்கம்; அதன் தளர்ச்சியும் வீழ்ச்சியுமே மொழியின் தளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் காரணங்கள்.

அடிமையுற்ற நாட்டில் கருத்துக்கள் வளர்வதில்லை. புதிய உலகக் கருத்துக்கள் புகுவதில்லை. அதனால் மொழியின் நிலை இருண்ட குகைபோல ஆகிவிடுகிறது. விடுதலை பெற்ற நாட்டிலோ மொழியின் கருத்துக்கள் அலைமோதுகின்றன. புதிய அமிழ்த மயமான கருத்துக்கள் தோன்றுகின்றன. அவ் எழு ஞாயிற்றின் சுடரும் ஒளியாற்றலும் உலகை உய்விக்கினறன. மக்களை வாழ்விக்கின்றன. சிந்தனைத் தொடர்பால் மொழி வாழ வைக்கப்படுகிறது. அத் தொடர்பாலேயே மொழியைப் பேசுபவர்களும் நல்வாழ்வு வாழ முடிகிறது.

புதிய புதிய சிந்தனைத் தொடர்புகளால் மொழி இறவாப் புகழை எய்துகிறது. என்றும் பசுமையுடைய தாய் இளமை குன்றாததாய் வாழ்கிறது. "முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாயும், பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியதாகவும்" மொழி தழைப்பதற்கு அம்மொழி பேசும் மக்களின் இடையறாச் சிந்தனைத் தொடர்பே காரணமாகும்.

தமிழுக்கு "கன்னித் தமிழ்" என்று ஒரு பெயருண்டு. அது தொன்று தொட்டு வழங்கும் பழம் பெயர். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட இலக்கியங்களையும் இலக்கணங்களையும் உடைய பழந் தமிழுக்கு, இன்னும் "கன்னித் தமிழ்" என்று பெயர் வழங்குவது வியப்பை அளிக்கலாம். புதிய சிந்தனைகளைக் காலந்தோறும் தமிழர் ஏற்றுக்கொள்ளத் தயங்கியதில்லை. உலகில் எந்நாட்டவரின் கருத்துக்களாயினும் எம் மதத்தினரின் கருத்துக்களாயினும் தமிழர் ஏற்றுக் கொண்டுள்ளனர். இவ்வியல்பே கன்னடமும் களி தெலுங்கும் கவின் மலையாளமும் தன்னுதரத்துதித்து, எழுந்து, பலவான பின்னரும் தமிழ் சீரிளமைத் திறமுடையதாய்த் திகழ்வதற்குக் காரணமாகும்.

பிறர்க்குதவும் பேரறங் கண்டவர் தமிழர்? வந்தவர் யாவரையும் வரவேற்கும் மனம் படைத்தவர். "அடையா நெடுங் கதவும் அஞ்சலென்ற சொல்லும் உடையார்". அவர்களுடைய இலக்கியங்களும் பரந்த நோக்கமும் விரிந்த அமைப்பும் உடையவை. இவற்றைப் போன்ற உலகப் பெரு நோக்கம் வாய்த்த இலக்கியங்களைக் காணுதல், வேறெங்கும் அரிதாகும்,

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு" என்று தொடங்குகிறது திருமுருகாற்றுப்படை. "ஆதி பகவன் முதற்றே உலகு" என்பது முதல் திருக்குறள். "உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்" என்றும் "உலகம் யாவையும்" என்றும் முறையே பெரிய புராணமும் கம்ப ராமாயணமும் கடவுள் வாழ்த்துரைக்கின்றன.

"யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்பது புறநானூறு. "யாதானும் நாடாமல் ஊராமால்" என்பது திருக்குறள். இவை தமிழரின் அடிப்படைக் கொள்கைகளைப் புலப்படுத்துகின்றன.

புதிய புதிய சிந்தனைத் தொடர்புகளில் தமிழர் என்றுமே ஆர்வமுடையவர்கள் என்பதற்குக் கீழ்வரும் இரண்டு குறள்களையும் மேற்கோளாகக் காட்டலாம்.

"எப்பொருள் யார் யார்
வாய்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு".

உலகில் எம்முனையிலிருந்து வருகிற கருத்தாயினும், யார் கூறுகிற கருத்தாயினும் அதனை ஏற்றுச் சிந்தனை செய்க என்பதன்றோ இதன் கருத்தாகும்...... மேலும்......

தமிழ் சான்றோர்கள் என்றுமே உலகச் சிந்தனைகளோடு இடையறாத தொடர்புடையவர்களாக வாழ்ந்து வந்துள்ளனர். இதனால் தமிழ் மொழிக்கு இறவாத்தன்மையை இடையறாப் பெருவாழ்வை அவர்கள் நல்கி உள்ளனர்,

மத அடிபப்டையில் நோக்கினால், இப் பரந்த சிந்தனைத் தொடர்பை. கி. பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் இருபதாம் நூற்றாண்டு வரை நாம் தமிழ் இலக்கியத்திற் காணலாம். பௌத்த மதக் கொள்கைகள் இந்திய நாடெங்கும் பரவிய காலத்தே தமிழகமும் அப்புதிய சிந்தனையை ஏற்று ஆதரவு நல்கியது, மணிமேகலைக் காப்பியம் அப்படியே பாலி மொழியிலிருந்தும் வடமொழியிலிருந்தும் புத்த மதத் தத்துவங்களை மொழிபெயர்த்துத் தருகிறது.

சமண மதம் செல்வாக்குப் பெற்றபோது, தமிழில் எழுந்த ஒழுக்க நூல்களும் நீதி நூல்களும் கணக்கிலடங்கா. சிலப்பதிகாரத்தில் வரும் கவுந்தி அடிகள் என்ற மூதாட்டியார் சமணக் கருத்துக்களின் சாரத்தைப் பிழிந்தெடுத்து வழங்குகிறார். பின்னர் வைதீக சமயங்கள் உயர்வுற்ற காலத்திலே, ஆழ்வார்களும் நாயன்மார்களும் தமிழகத்தின் பட்டிதொட்டி யெல்லாம் சென்று, கோயில்கள் தோறும் வைதிக சமயக் கருத்துக்களை இன்னிசையோடு வழங்கியருளினர். அப் பாசுரங்களும் பதிகங்களும் பல்லாயிரக் கணக்கில் இன்றும் நின்றிலங்கி, இறைவனையே "எழிசை

யாய்" இசைப்பயனைக் காட்டிக்கொண்டு திகழ்கின்றன.

இசுலாமியத்தின் பெருமையை விளக்கும் பல நூல்களுடன் 'சீருப்புராணம் என்ற காப்பியமும் செந்தமிழில் உளது. ஐரோப்பியர் வருகைக்குப் பின் நம் நாட்டில் பரவிய கிறிஸ்தவ சமயத்திற்கும் தமிழில் எத்தனையோ நூல்கள் தோன்றிவிட்டன. தேம்பாவணியும் இரட்சணிய யாத்திரிகமும் தமிழ்த்தாயை அழகு செய்யும் புதிய அணிகளாக விளங்குகின்றன.

தமிழறிஞர் தனிநாயக அடிகளார் கூறுவது போல், அன்றுதொட்டு இன்றுவரை தோன்றிய எல்லா மதங்கட்கும் தமிழிலே மட்டும்தான் தனித் தனிக் காப்பியங்கள் உள. பிற எந்த மொழியிலும் எல்லா மதங்கட்கும் தனிக் காப்பியங்கள் தோன்றியிருப்பதாகத் தெரியவில்லை. இங்ஙனம் காலந் தோறும் ஏற்பட்ட மாறுதல்களும், கருத்துப் புரட்சிகளும் சிந்தனை ஆக்கங்களும் தமிழிலும் இடம்பெற்றுள்ளன. தமிழில் இளமை குன்றா வளமைக்கு இச் சிந்தனைத் தொடர்பே காரணமாகும்.

சென்ற நூற்றாண்டின் இறுதியிலிருந்து புதிய துறைகளிலெல்லாம் தமிழ் வளர்ந்து வருகிறது. புதிய உலகச் சிந்தனைகள் அனைத்தும் தமிழில் இடம்பெற்று வருகின்றன, "புத்தம் புதிய கலைகள் மெத்த வளர்ந்து மேற்கே" என்று கூறி, அவற்றைத் தமிழிலே கொண்டு வருதலின் இன்றியமையாமையைத் தமிழரின் மனத்திலே ஆழப்பதியவைத்தார் பாரதியார்,

'சென்றிடுவீர் எட்டுத்திக்கும்
கலைச் செல்வங்கள் யாவும்.
கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"

என்று கட்டளையும் இட்டார். இன்று பொருள் நூல், உள நூல், பூத நூல். அறிவியல் நூல் என அனைத்தும் தமிழிலே ஆக்கப்படுகின்றன. தனியுடைமைத் தத்துவத்திற்கும் பொதுவுடைமைப் புதுமைக்கும் முடியாட்சி வரலாற்றுக்கும் குடியாட்சி விளக்கத்திற்கும் இன்று தமிழின் கண் நூல்கள் உள.

விஞ்ஞான நூல்களும் தொழில் நுணுக்க நூல்களும் தமிழில் மிக வேண்டும் என்பதை நாம் உணராமலில்லை, உயர்ந்த சிந்தனைகள் பல இன்று இவ்வறிவியல் துறையிலே தான் பல கிளைகளாகப் பிரிந்து வளர்ந்துள்ளன. ஆட்சித் துறையிலும் அறிவியல் துறையிலும் கல்வித் துறையிலும் கலைத் துறையிலும் பல நூறு புது நூல்கள் தமிழில் படைக்கப்படவேண்டும் அப்போது தான் புதிய சிந்தனைத் தொடர்புகளைக் கைவிடாமல், தமிழின் புதுப் பொலிவை என்றும் போல் இனியும் திகழவைக்க நாம் பாடுபட்டவர்களாவோம். இத்துறைகளனைத்திலும் தமிழ் முயன்று முன்னேறினால் தான் இன்றைய இருபதாம் நூற்றாண்டிலும் தமிழ் ஆங்கிலமனைய முற்போக்கு மொழிகளுடன் போட்டியிட்டு முன்னேறும்.

கால வெள்ளம பொல்லாதது. அதைக் கடந்து நிலைக்குமளவு ஒரு மொழிக்கு வலிமை தரக்கூடியது. புதிய சிந்தனைகளை ஏற்றுச் செரித்து வளரும் தன்மையே யாகும்.

ஆங்கில மொழியின் முன்னேற்றத்திற்கு, இவ்விடையறாச் சிந்தனைத் தொடர்பே காரணமாகும். உலகில் எதனைப்பற்றி, யார் ஆராய விரும்பினாலும் அவர் ஆங்கிலத்தைத் துணையாகக் கொள்வாரானால் அவருக்குத் துணை நூல்கள் பல கிடைக்கும், ஆராயும் வழி பிறக்கும்.

இச்சான்றுகளை யெல்லாம் கொண்டு நோக்கும் பொழுது நமக்குப் புலனாகும் உண்மைகள் பலவாகும்.

சிந்தனை விரிவடைய அடைய, மொழி விரிவு பெறுகிறது ஒவ்வொரு தனிச் சொல்லின் தாழ்வுக்கும் வாழ்வுக்கும் பொருட் சுருக்கத்திற்கும் பெருக்கத்திற்கும் கூட சிந்தனையே காரணமாகும். ஒருமொழியின் உயிர் நிலையாக அம்மொழியின் ஒலி முறையைக் குறிப்பிடுவர். அவ்வுயிரை என்றும் இயங்கவைத்து வாழவைக்கும். உயிர்ச்சத்துள்ள உணவுகளெனக் கருத்துக்களைப் புதிய சிந்தனைகளைக் கூறலாம். உயிர்ச் சத்துக்கள் குறையின் உடல் நலிவுறும், உயிர் தேயும், "உடம்பார் அழியின் உயிரார் அழிவர்" என்பது திருமந்திரம். மொழியின் வாழ்வும் வளர்ச்சியும் அதுபோன்றதேயாகும். புதிய சிந்தனைத் தொடர்புகளால் ஒரு மொழியில் புதிய சொற்கள் தோன்றும், நூல்கள் பெருகும், அதன் மூலம் அம்மொழி புது வாழ்வு பெறும்.

"உள்ளம் வளர்வதனால் மொழி வளரும்" என்று கூறுவது, உரமிடுவதனால் பயிர் வளரும் என்பதற்கு ஒப்பாகும். முயற்சி அரிதாயினும் பலன் பெரிதாகும்.

கருத்துக்களையோ, புதிய சிந்தனைகளையோ ஏற்றுக்கொள்ளும் ஆற்றல் மொழியினபால் இல்லை. அது இம் மொழி பேசுவோரையே சார்ந்ததாகும். புதிய கருத்துக்களை ஏற்கும் மனப்பான்மையும் அவற்றை ஆராயும் அறிவும் அலசி உண்மை உணரும் திறமும் எம் மொழியாளரிடம் உள்ளனவோ அவர்களின் மொழியே பிற மொழிகளிலும் உயர்ந்து நிற்கும்.

ஆங்கில மொழியின் பரப்புக்கும் உயர்வுக்கும் அம்மொழியாளரின் முயற்சியும் ஊக்கமுமே காரணங்களாகும் சிந்தனைத் தொடர்பு அறாமல் அம் மொழி வளர்க்கப்பெற்ற முறையே முக்கிய காரணம் எனலாம்,

இங்கு நாம் தமிழ் மொழியையும், ஆங்கிலத்தையும் நமக்குத் தெரிந்த மொழிகள் என்ற அளவில் சான்றுகளாகக் கொண்டோம். உலக மொழிகளனைத்தும் இதுபோலச் சிந்தனைத் தொடர்பையே தங்களின் நிலைபேற்றுக்கும் வளர்ச்சிக்கும் காரணங்களாகக் கொண்டன எனலாம். ஒவ்வொரு மொழியிலும் அமைந்துள்ள சொற்களும், சொற்றொடரமைப்புக்களுமே இதற்குச் சான்று பகர்கின்றன எனலாம்.

மன மொழி மெய்களைக் கடந்தவன் என்ற பொருளில் "கடவுள" என்றும், எங்கும் நிறைந்து தங்கியிருப்பவன் என்ற பொருளில் "இறைவன்" என்றும் பகைவரைத் தேய்த்துக் காப்பவன என்ற பொருளில் "தெய்வம்" என்றும் அமைந்துள்ள சொற்களைக் காணுங்கால் கடவுளைப்பற்றிய தமிழனின் சிந்தனைகள் நமக்குப் புலனாகின்றன.

சீதையைக் கண்டேன் என்பது வாக்கியம். கண்டேன் சீதையை என்ற தொடர் அக்கூற்றின் உணர்ச்சி வயப்பட்ட நிலையைக் காட்டுகிறது. எனவே மனிதனின் சிந்தனைப் போக்குகளுக்கு ஏற்ப, மொழி அமைகிறது என்பது பெறப்படுகிறது.

(வானொலிப் பேச்சு)

# பர்மிய மொழியில் திருக்குறள்

★

நாக. வேலாயுதம், இரங்கூன்.

"வள்ளுவர் தன்னை உலகினுக்கே தந்து
வான் புகழ் கொண்ட தமிழ் நாடு" என்றார் அமரகவி பாரதியார். அத்தகைய உலகப் புகழ் பெற்ற திருக்குறள், முழுவதும் சிறந்த முறையில் இதுகாறும் அண்டை நாடான இப் பொன் விளையும் பூமியாம் பர்மியத் திரு நாட்டில் வழங்கும் பர்மிய மொழியில் மொழி பெயர்க்கப்படாமலிருந்தது ஓர் பெருங் குறையே யாகும். அந்தக் குறையும் வெகு விரைவில் நீங்கும் வண்ணம் திருக்குறள் மொழி பெயர்ப்பு நூலைத் தயாரித்திருக்கிறார்கள், இங்குள்ள தன வைசியர் கல்விக் கழகத்தினர் இப்போது.

இற்றைக்குச் சுமார் 35 ஆண்டுகளுக்கு முன் தோற்றுவிக்கப்பட்ட "தன வைசியர் கல்விக் கழகம்" என்ற இந்த ஸ்தாபனத்தினர் பர்மாவின் தலை நகரான இரங்கூனுக்கு அருகே ஆறு மைல் தொலைவில் உள்ள "கம்பை" என்னும் சிற்றூரில் 16 ஏக்கர் நிலப் பரப்புள்ள ஓரிடத்தில் CHETTIARS' RESIDENTIAL HIGH SCHOOL என்ற பெயரில் உயர் நிலைப்பள்ளி ஒன்றை நிறுவி, உலகம் போற்றும் உத்தமராம் காந்தியடிகளைக் கொண்டு 16—9—1928-ல் திறக்கச் செய்து சிறப்பாகக் கல்விப் பணி செய்து வந்துள்ளனர். அங்கு கல்வி பயின்ற மாணவர்களிற் பலர் பட்டங்கள் பல பெற்று, இன்று பாரதத்திலும், அயல் நாடுகளிலும் பெருமையுடன் திகழ்ந்து வருகிறார்கள். அத்தகைய இளைஞர்களைத் தோற்றுவித்த அதே கழகத்தினர் தொடர்ந்து கல்வி அபிவிருத்திக்கென இன்றும் பல அரிய பணிகளைச் செய்து கொண்டு வருகின்றனர். அவ்வாறு மேற்கொண்டுள்ள நற்பணிகள் பலவற்றுள் ஒன்றுதான் இன்று பர்மிய மொழியில் திருக்குறளை மொழி பெயர்த்திருப்பதும்,

தமிழ் நாட்டில் தோன்றி உலகப் புகழ் பெற்றுள்ள தமிழ் மறையாம் திருக்குறளை மொழி பெயர்த்திடத் துணிந்த இந்த ஸ்தாபனத்தினரை எத்தனை பாராட்டினாலும் தகும். அது மட்டுமல்ல, இதற்கெனத் தனிக் குழு ஒன்றை நியமித்து அதன் மூலம் காலங்கடந்து போகலாமெனக் கருதியோ, என்னவோ

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண் விடல்" என்ற குறளுக்கிணங்க, உறுதியும் தளரா ஊக்கமும், ஏற்ற பணியைச் செவ்வனே செய்து முடிக்கும் ஆற்றலும் நிரம்பப்பெற்ற திரு. காந்தி அண்ணாமலை அவர்களிடம், இந்த மொழி பெயர்ப்பு வேலைப் பொறுப்பு முழுவதையும் தனி ஒருவரிடம் கொடுத்திருப்பதற்காகவும் பாராட்டத்தான் வேண்டும்.

திருக்குறளை மொழி பெயர்த்தல் என்பது எளிய காரியமா? ஆராய ஆராயப் புதுக் கருத்துக்களைத் தருகிறது திருக்குறள் என்பதை, இப்போது தமிழில் வெளி வந்து கொண்டிருக்கும் பல்வேறு உரை நூல்களால் அறியலாம். இத்தகைய பொருள் மிகப் பொதிந்துள்ள ஓர் நூலை மொழி பெயர்க்கத் தக்க ஆற்றல் நிறைந்த ஆசிரியர் எப்படி இருக்க வேண்டும்? குறைந்த பட்சம் மூல மொழிப் பயிற்சி நன்கு பெற்றவராகவாவது இருத்தல் வேண்டுமல்லவா? ஆனால் இங்கு தமிழும் பர்மிய மொழியும் ஒருங்கே கற்று மொழி பெயர்க்கும் ஆற்றலுடையவர் கிடைப்பது அரிதாகிவிட்டபடியால் இந்த முயற்சியும் வீணாகி விடுமோ என்ற அச்சம் தோன்றியபோது, இந்தியா இலங்கை போன்ற நாடுகளில் உள்ள அறிஞர்கள் "ஆங்கில நூல்களின் துணை கொண்டாவது பூர்த்தி செய்யலாமெனக்" கருத்துக்கள் தெரிவித்ததன் மூலம் தைரியம் பிறந்து அத்தகைய ஆசிரியர் ஒருவரையே நியமித்து இந்த மொழி பெயர்ப்பு வேலை பூர்த்தியடைந்திருக்கிறது

ஊமியோத்தாண்ட் (U MYO THANT) இதுதான் இங்கு திருக்குறளை மொழி பெயர்த்துள்ள ஆசிரியரின் பெயர். ஐ. நா. சபைக் காரியதரிசி ஊத்தாண்ட் என்ற பெயருக்கு "பரிசுத்தமானவர்" என்ற பொருள் உள்ளவாறு, "பரிசுத்த வகுப்பினர்" என்ற பொருள் கொண்ட பெயருடையவர் ஒருவராலேயே இப்போது குறள் மொழி பெயர்க்கப்பட்டிருப்பதும் எத்தனை பொருத்தம் பாருங்கள். இந்த மொழி பெயர்ப்பைப் பெறுவதன் மூலம் இந்நாட்டு மக்களனைவரும் பரிசுத்தமடைவரென்றும் எதிர்பார்க்கலாமல்லவா?

திரு. ஊமியோத்தாண்ட் அவர்கள் 32 வயதுள்ள பர்மிய இளைஞர். பன்மொழிப் புலவரல்லவென்றாலும் பர்மிய மொழியும் ஆங்கில மொழியும் நன்கு கற்றவர். இங்கு சர்வகலாசாலையில் படித்துக் கொண்டிருந்த போதே அமெரிக்காவுக்கு, அங்குள்ள போர்டு நிறுவனத்தாரின் (FORD FOUNDATIONS) அழைப்பை ஏற்றுச் சென்று போஸ்டன் சர்வகலாசாலையில் ஓராண்டு பயின்று பட்டம்பெற்றுத் திரும்பியவர். இங்கு பர்மிய அரசினரால் நிறுவப் பெற்றுள்ள (BURMA TRANSLATION SOCIETY) பர்மிய மொழிபெயர்ப்புச் சங்கத்தின் ஆசிரியர் குழுவிலும் ஒருவராகப் பணியாற்றி வருகிறார். இவர் அகில பர்மா ஹிந்தி சென்ட்ரல் போர்டாரின் முயற்சியில் வெளியிட்ட பகவத் கீதை மொழி பெயர்ப்பு ஆசிரியருமாவார். 1958-ல் இராமகிருஷ்ண மிஷன் சார்பில் "இராமகிருஷ்ண பரமஹம்சர்" "விவேகாநந்தர்" வரலாறுகளையும், விவேகாநந்தர் எழுதிய "கர்மயோகம்", "ராஜயோகம்", "பக்தி யோகம்" ஆகிய நூல்களையும் இவரே மொழி பெயர்த்துக்கொடுத்திருக்கிறார்.

இத்தகைய அனுபவமும் ஆற்றலும் நிறைந்த திரு. ஊமியோத்தாண்ட் அவர்கள் தமிழைக் கற்றிராதபோதிலும், ஆங்கில நூல்களின் உதவியைக் கொண்டு

திருக்குறள் மொழி பெயர்ப்புப் பணியையும் திருப்திகர மாகச் செய்திருப்பாரென்று நிச்சயம் நம்பலாம்.

இந்த மொழி பெயர்ப்புத் திருக்குறள் நூல் 9″×6″ அளவில் சுமார் 250 பக்கங்களைக் கொண்டதாயிருக்கும். தமிழ் நாட்டவர்களின் பண்பாடு, நாகரீகம் முதலியவைகளை நன்கு அறிந்து கொள்ளும் வண்ணம் 40 பக்கங்களில் விரிவான முன்னுரையும், 75 பக்கங்கள் குறிப்பும் விளக்கங்களும் எழுதி, பக்கத்துக்குப் பத்துக் குறளுக்கு விளக்கவுரையுடன் தயாரிக்கப்பெற்றுள்ளது.

முன்னுரையில் திருக்குறளின் மூல ஆசிரியரின் வாழ்க்கைச் சரிதம் பற்றி வழங்கிவரும் கற்பனைக் கதைகள் எதுவுமே இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மொழி பெயர்ப்புக்கு உதவியாக திரு. ஜி. யு. போப், ட்ருலாசரஸ், இராமச்சந்திர தீக்ஷிதர், வ.வே. சு. ஐயர், பூர்ணலிங்கம் பிள்ளை, ராஜகோபால அய்யங்கார், மைக்கேல், ராஜாஜி, ட்ருஎல்லிஸ், பாலசுப்பிரமணியம் ஆகியோர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ள திருக்குறள் நூல்களையும், திருப்பனந்தாள் மடத்து வெளியீடான "உரைக் கொத்து" என்ற நூலையும் உபயோகப்படுத்தியிருக்கிறார்.

மொழி பெயர்ப்பு வேலைகளும் பரிபூரணமாகப் பூர்த்தியாகி புத்தகமும் பாதிக்கு மேல் அச்சாகியுள்ளது. வெகு விரைவில் புத்தகம் உருப்பெற்று சிறப்பாக வெளியீட்டு விழாவும் நடைபெறும் நன்னாளை எதிர்பார்க்கலாம்,

தனவைசியர் கல்விக் கழகத்தார் எல்லாச் செலவுகளையும் ஏற்று, தயாரிக்கும் இந்த இரண்டாயிரம் பிரதிகளையும் அன்பளிப்பாக வழங்க முன் வந்திருப்பது பாராட்டுக்குரிய செயலாகும். இதனால் பர்மிய மக்களின் உள்ளங்களில் என்றென்றும் நிலையான இடமும் நன்மதிப்பும் பெறுவார்கள் என்பது உறுதி.

இப்போது மொழிபெயர்த்துள்ள திருக்குறளின் பர்மிய மொழி பெயர்ப்பில் "அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றேயுலகு" என்ற முதற் குறளுக்குரிய விளக்கம் அமைந்திருக்கும் அமைப்பை இதன் அடியில் காண்க.

သိရုကုရယ်လိ

ပဏာမ (အခန်း-၁ မှ ၄)

အခန်း-(၁)

ဘုရားရှင်အားဂုဏ်ပြုခြင်း။

၁။ အက္ခရာအားလုံးတို့တွင် ကကြီးသည် အစအဦး ဖြစ်သကဲ့သို့ ကမ္ဘာကြီးတွင်
ထာဝရဘုရားရှင်သည် အစအဦးဖြစ်၏



**பிறமொழி எழுத்தாளர் கட்டுரை :**

# கல்வியிற் கரையிலாக் காசி

பேராசிரியர் கிருஷ்ணமோகன் குப்தா,
எம். ஏ., எம். எஸ்ஸி., எல். எல். பி., பி. ஈ. டி.,

★

(கட்டுரையாளர் கல்வி, விஞ்ஞானம், போதனை முறைகள் முதலியவை பற்றிப் பலநூல்களை ஹிந்தியிலும் ஆங்கிலத்திலும் வெளியிட்டுப் புகழும் பொருளும் தேடிக்கொண்டவர். இப்பொழுது தமிழ் மொழியைப் பயின்று வருகிறார். இவர் ஹிந்தியில் எழுதிய கட்டுரையை நண்பர் 'சோமலெ' அவர்கள் வாயிலாகப் பெற்று, சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஹிந்தி விரிவுரையாளர் திரு. கணேசன் அவர்களின் துணையால் தமிழில் தந்திருக்கிறோம்.)

கங்கையிற் சிறந்த நதியுமில்லை, காசியிற் சிறந்த பதியுமில்லை என்பது ஆன்றோர் வாக்கு. காசிமாநகர் யாத்திரீகர் நிறைந்த பெரு நகரம். தொன்மையான இந்த நகரமெங்கும் மூலைகளிலும் முடுக்குகளிலும் ஆயிரக்கணக்கான கோவில்கள் உள்ளன. இங்குள்ள சிவாலயங்கள் எத்தனை என்று எண்ணி முடியாது. இங்கிருந்து வெளியூர்களுக்குச் சென்றிருக்கிற சிவலிங்கங்கள் எத்தனை என்பதற்கும் யாரிடமும் கணக்குக் கிடையாது.

**கோவில் மலிந்த நகர்:**

'ஹிந்துக்களின் கோவில்களில்' வகை வகையான எத்தனையோ இறை யுருவங்கள் உண்டு' என்று மேனாட்டார் எழுதியிருக்கிறார்கள். இந்தத் தெய்வங்கள் அனைத்துக்கும் காசியிலே கோவில்கள் உள்ளன. சிவபெருமான், கேதார ஈசுவரர், அன்னபூரணி, விசாலாட்சி, துர்க்கை, காளி, அநுமன், சாட்சி விநாயகர், [illegible]ண்டி விநாயகர், பஞ்சமுக லிங்கர், பஞ்சபாண்டவர், சௌரி சங்கர், வயிரவர், நகரத்தார் சத்திரத்தில் பா[illegible]ள ஈசுவரர், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வானை, மா[illegible]க்கவாசகர், இப்படி எவ்வளவோ கோவில்கள் மலிந்தது காசி. காசிக்குப் பெருமை தரும் விஸ்வநாதருக்கு மூன்று கோவில்கள் உண்டு. ஒன்று புகழ் பெற்ற விஸ்வநாதர் பொற்கோவில். மற்றொன்று ஹரிஜன ஆலயப் பிரவேசத்திற்குப் பிறகு ஏற்பட்ட 'நயா மந்திர்' என்ற புதிய விஸ்வநாதர் கோயில். பிர்லா மந்திர் என்ற பெயரில் வழங்கும் விஸ்வநாதர் கோயில் பல்கலைக் கழகப் பகுதியில் வான் முட்டும் கோபுரமும் சலவைக் கற்களும் உடையதாய் வனப்புடன் விளங்குகிறது.

**கலை வளர்க்கும் காசி :**

புனிதத் தன்மையால் மூவுலகிலும் புகழ்பெற்றுள்ள காசி, மூவாயிரம் ஆண்டுகளாகவே கலைக் கோயிலாகவும் திகழ்கிறது. இலங்கை, பர்மா, நேபாளம் ஆகிய நாடுகளிலிருந்தும் இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் பல நூறாயிரக் கணக்கானவர்கள் காசிமா நகர்க்கு வந்து சாத்திரங்களையும் சமஸ்கிருதத்தையும் பயின்றிருக்கின்றனர். வேதம், புராணம், இலக்கியம் கற்றவர்களும் உண்டு.

**சமயப் பண்ணை :**

ஹிந்துக்கள் மட்டும் அல்ல, பிற மதத்தவர்களும் காசியைப் போற்றுகின்றனர். புத்தர் பிரான், காசிமா நகரின் எல்லையிலுள்ள சாரநாத்தில் தங்கி அங்கே தான் தம்முடைய கொள்கைகளை முதன் முதலாக உலகுக்கு உணர்த்தினார். பேரறிஞர்களும் சீர்திருத்தவாதிகளும் காசியில் கல்வி கற்றும், தங்கியும் காசிநகர்ப் புலவர் உரைக்கும் அறிவு விருந்துகளைத் துய்த்துப் பயன் பெறுவதை ஒரு பேறாகவே கருதி வருகின்றனர். சங்கராச்சாரியார், சைத்தனிய மகா பிரபு. சுவாமி தயானந்த சரசுவதி, கபீர்தாஸ், கம்பர், துளசிதாஸ், குமரகுருபரர், கவியரசர் சுப்பிரமணிய பாரதியார், தத்துவமேதை இராதாகிருஷ்ணன் இவர்கள் அனைவர் வரலாற்றிலும் காசி சிறப்பிடம் பெறுகிறது.

இந்தியாவின் வரலாற்றைக் குறிப்பிட்ட சில நூற்றாண்டுகள் எவை பற்றி எழுதினாலும் காசியை விடுந்து எழுத இயலாது. வட இந்தியாவைக் காண, உணர, அறிய விரும்புபவர்கள் காசிக்கு வந்தால் போதியதாகும். இந்தியாவின் பிரதிபிம்பமாகவும் காசிமா நகரம் காட்சி தருகிறது. அநுமன் கட்டம் என்பது, தமிழர்கள் பல்லாயிரம் பேர் வாழும் பகுதியாகும். இவ்வாறே, பெங்காலி டொல்லா என்ற இடத்தில் வங்காளிகள் பெருந்தொகையாக இருக்கிறார்கள். இவை போன்றே, நேப்பாளி கப்டா, தூத் விநாயக், பிரகலாத கட்டம் கேதாரக் கட்டம் என்ற பகுதிகளில் பல மொழியாளர் உள்ளனர். செப்பு மொழி பதினெட்டையும் இந் நகரில் கேட்கலாம். இத்தனை மொழியினங்களைச் சேர்ந்த யாத்திரீகர்கள் வருவதால் காசிநகர் வணிகர் ஒவ்வொரு மொழியிலும் சில நூறு சொற்களைப் பயின்றும் பேசியும் பயனடைகின்றனர்.

**ஒருமைப்பாடு :**

எல்லா மொழிகளும் ஒலிக்கும் காசியில் வகை வகையான வண்ண உடைகள் உடுத்திய மக்களைக் காண இயலும். மகளிர் மனத்தை ஈர்க்கும் பட்டுச் சேலைகளும், வளையல்களும், குங்குமப் பொட்டும் காசி

யில் புகழ்பெற்றவை. இவற்றை விரும்பாத, வாங்காத மங்கையர் எவருமில்லை. காசி வெற்றிலையைச் சுவையாத ஆடவரும் இல்லை எனலாம்.

**கல்விப் பண்ணை :**

இந்தியா வெங்குமுள்ள ஏழை எளியவர், காசிமா நகரில் வந்து தங்கி இலவச உணவு பெற்றுக் கல்வி பயில வாய்ப்பு நல்கும் பல சத்திரங்கள் காசிமா நகருக்குப் பொலிவும் சிறப்பும் தருகின்றன. முறையாகக் கல்வி புகட்டும் பள்ளிக்கூடங்கள் ஒருபுறம். அதைவிட முக்கியமானது தலைமுறை தலைமுறையாக சமஸ்கிருத மொழியில் மகா வித்துவான்களாகவும் புலவர்களாகவும் புகழ்பெற்ற 'குருக்கள்' — அல்லது ஆசிரியர் பரம்பரை. அவர்களிடம் பயில வருபவர் தொகை ஆயிரக்கணக்காகும்.

கலையறிவும் கல்வியறிவும் பெற, இந் நகரில் பல கலைக்கூடங்கள் உண்டு. இக் காலத்திற்கேற்ற கல்வி புகட்டும் நிலையங்களும் உள்ளன.

1916இல் அன்னை பெசண்டு அம்மையார் ஏற்படுத்திய ஹிந்துக் கல்லூரி பண்டித மதன்மோகன் மாளவியாவின் பெரு முயற்சியாலும் மஹாராஜாக்கள் பலருடைய வள்ளன்மையாலும் 1918ல் காசி ஹிந்து பல்கலைக் கழகமாக உருவம் பெற்றது. இதை முறைப்படி தொடங்கி வைத்தவர் மகாத்மா காந்தியடிகள் ஆவார். இப் பல்கலைக் கழகம், மாணவர் அனைவரும் தங்கிப் படிக்கும் இந்தியப் பல்கலைக் கழகங்களுள் மிகப் பெரிய கல்வி நிலையமாகவும், ஆசியாவிலேயே குறிப்பிடத்தக்க அறிவுப் பண்ணையாகவும், உலக மக்கள் பலருடைய உள்ளத்தை ஊடுருவியுள்ள கலைக் கோயிலாகவும் புகழ் பெற்றிருக்கிறது. இந்தியாவின் எல்லாப் பகுதிகளையும் சேர்ந்த ஆசிரியர்களும் மாணவர்களும், இப் பல்கலைக் கழகத்தில் பெருமையுடனும் உரிமையுடனும் பங்கு கொள்கின்றனர். அயல்நாட்டு மாணவர்களும் உள்ளனர். அவர்களுக்குரிய வசதிகள் நிறைந்த விடுதிகள் கட்டப்பட்டிருக்கின்றன. தமிழ் உட்படப் பல இந்திய மொழிகள் இப்பல்கலைக் கழகத்தில் கற்பிக்கப்படுகின்றன.

இயல், இசை, நடனம், இந்தியப் பண்பாடு, வேளாண்மை, மருத்துவம் வாணிகம், மொழியியல் ஆகிய சாத்திரங்கள் இங்கு புகட்டப்படுகின்றன. சென்ட்ரல் ஹிந்துக் கல்லூரி, பாரதீய மகா வித்தியாலயம், சமஸ்கிருத மகா வித்தியாலயம், விஞ்ஞானக் கல்லூரி, சட்டக் கல்லூரி, மகளிர் கல்லூரி, ஆயுர்வேதக் கல்லூரி, ஆங்கில மருத்துவக் கல்லூரி, இசைக் கல்லூரி, நுண்கலைக் கல்லூரி, ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, ரசாயனத் தொழிற் கல்லூரி, சுரங்கம் — உலோக இயல் கல்லூரி, நூலகக் கல்வி நிறுவனம். — இவையனைத்தும் பல்கலைக் கழகத்தின் பகுதிகளாக இயங்குகின்றன. அரிய கலைப் பொருள்கள் உள்ள சிறந்ததொரு காட்சிக் கூடமும், பெரியதொரு நூலகமும், மருந்துச் செடிகள் நிறைந்த பூந்தோட்டங்களும் பெரிய மருத்துவ மனையும் உள்ளன.

இவை தவிர, பல்கலைக் கழக எல்லைக்கு வெளியே காசிமா நகருக்குள் தயானந்தர் கல்லூரியும், பெசன்ட் கல்லூரியும் இயங்குகின்றன.

ராஜஸ்தான் கவர்னராக இப்போது இருப்பவரும் உத்திரப் பிரதேசத்தின் முன்னாள் முதலமைச்சருமான டாக்டர் சம்பூரணனந்து தம் சொந்த ஊராகிய காசியில் வாரணசி சமஸ்கிருத பல்கலைக் கழகத்தை நிறுவியிருக்கிறார்.

தேசியக் கல்வி முறையைப் பரப்ப, சிவப்பிரசா குப்தா ஏற்படுத்திய காசி வித்யா பீடம் என்ற பல்கலைக் கழகமும் குறிப்பிடத்தக்கது. இங்கு, ஹிந்தி மொழி வாயிலாகவே பி. ஏ., வகுப்புவரை பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

நாகரி பிரசாரனி சபை என்ற நிலையமும் காசியில் பெருமைக்குரிய கல்வி நிலையமாகும். இங்கே ஹிந்தியில் பல்லாயிரம் ஏட்டுச் சுவடிகளைக் காணலாம். ஹிந்தி மொழி வரலாறு பற்றிப் பதினெட்டுத் தொகுதிகளை வெளியிடத் திட்டமிட்டு இச் சபையார் மூன்று தொகுதிகளை இதுவரை வெளியிட்டுள்ளனர். பத்துத் தொகுதிகள் கொண்ட ஹிந்தி கலைக் களஞ்சியத்தில் முதல் மூன்று தொகுதிகள் அச்சேறிவிட்டன. இவை தவிர, பல ஆராய்ச்சி நூல்களும் 'நாகரி பிரசாரினி பத்திரிகா' என்ற முத்திங்கள் சஞ்சிகையும் இவர்களால் வெளியிடப் பெறுகின்றன. ஆராய்ச்சித் துறைகளில் வரும் பல நூல்களுக்கு இவர்கள் சில பரிசுகளை வழங்குகிறார்கள்.

மேலும் சில பல்கலைக் கழகங்களையும் காசியில் உருவாக்கத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. எனவே இந்நகரை, 'கல்வியிற் கரையிலாக் காசி' என்று சிறப்பித்துச் சொல்லலாம். அல்லவா!

# மட்டக்களப்புத் தமிழகம்

★

அ. வல்லநாட்டான்

தமிழ்ச் சகோதரர்கள் இலங்கையிலும் வாழுகிறார்கள் என்றால் உடனே "யாழ்ப்பாணத் தமிழர்களைத் தானே சொல்லுகிறீர்கள்?" என்று தமிழ்நாட்டில் சாதாரணமாகக் கேட்பவர்கள் பலர் இருக்கிறார்கள். "இல்லை; இலங்கையில் தமிழர்கள் வடமாநிலத்திலும் (யாழ்ப்பாணம் இதன் தலைநகர்) கிழக்குமாநிலத்திலும் (மட்டக்களப்பு இதன் தலைநகர்) வாழுகிறார்கள்" என்று அவர்களுக்கு விளக்கம் தந்த பிறகுதான் "ஓகோ அப்படியா, அங்கு இரண்டு பகுதிகளில் தமிழர்கள் இருக்கிறார்களா?" என்று கேட்டு ஒருவாறு புரிந்துகொள்கிறார்கள்.

கிழக்கு இலங்கையை "மட்டக்களப்புத் தமிழகம்', என்று அண்மைக் காலமாகக் குறிப்பிட்டு வருகிறார்கள். இலங்கையின் தலைநகரான கொழும்பிலிருந்து சுமார் 240 மைல் தொலைவில் மட்டக்களப்பு உள்ளது. "யாழ் நூல்" தந்த விபுலானந்த அடிகள் அவதரித்த பகுதி கிழக்கு மாநிலத்தில்தான் உள்ளது.

நூற்றுக்கு நூறு தமிழர்கள் வாழும் ஊர் மட்டக்களப்பு—ஆங்கிலத்தில் இதை BATTICALOA என்றும் சிங்கள மொழியில் "மட்டக்களப்புவ" என்றும் குறிப்பிடுகிறார்கள். மட்டக்களப்பு தமிழ்ப் பெயர். மட்டக் களப்பை அந்த வட்டார மக்கள் புளியந் தீவு என்றும் கோட்டைமுனை என்னும் இரு பிரிவுகளின் பெயரால் கூறுவதும் குறிப்பிடத் தக்கது.

கிழக்கு மாநிலத்தின் தலைநகர் என்ற முறையில் மட்டக்களப்பில் கவர்ன்மெண்ட் "ஏசன் டின்"(Government Agent அதாவது தமிழ்நாட்டில் கலெக்டர் என்பது போன்றது) அலுவலகம், நீதிமன்றங்கள் மற்றும் போலீசு, வேறு அரசுத்துறைகளின் அலுவலகங்களும் உள்ளன. கிழக்கு இலங்கையிலேயே முதன் முதலாக 1814–இல் நிறுவப்பெற்ற கல்லூரியான சென்ட்ரல் காலேஜ் மட்டக்களப்பில்தான் உள்ளது. மட்டக்களப்பில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட டச்சுக்காரர் கோட்டையில்தான் அரசாங்க ஏசண்டின் அலுவலகம் அமைந்துள்ளது.

மட்டக்களப்பைச் சுற்றி ஓடிவரும் கடல்வாவி (Sea Lagoon) இயற்கை எழில் மிக்கது. கிழக்கு இலங்கையில் ஏறத்தாழ 16 மைல் தொலைவு ஓடிவரும் இந்த வாவி மட்டக்களப்பின் ஒரு பகுதியான முகத்துவாரத்தில் கடலில் போய்க் கலக்கிறது. இந்த வாவியில் உலவிவரும் தோணிகளையும் அவை இரவு நேரங்களில் விளக்குகளை ஏற்றி வைத்துக்கொண்டு மீன் பிடிப்பதற்காக அவை மின்மினிப் பூச்சிகளைப் போன்று வாவியில் திரிவதையும் பார்க்கக் கோடிக்கண்கள் வேண்டும்; இந்த வாவியில் பாடும் மீன்கள் இருப்பதாகவும் (Singing Fish) கூறப்படுகிறது. ஆராய்ச்சியாளர்கள் பலரது கவனத்தை ஈர்ந்துள்ளது, இச்செய்தி. இவைபற்றிய நாட்டுப் பாடல்கள் மிகப்பல.

மட்டக்களப்பில் முசுலீம்கள், கிறிஸ்தவர்கள், சைவர்கள், ஆகிய எல்லோரும் வாழுகிறார்கள். இவர்கள் எல்லோரது தாய்மொழியும் தமிழ்தான். இவர்கள் தனித்தமிழ்தான் பேசுகிறார்கள் என்று கூறவேண்டும். தமிழர்கள் சித்திரை ஆண்டுப் பிறப்பை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். கொண்டாட்டம் ஒரு வாரகாலம் நீடிக்கிறது.

இவர்கள் பேசும் தமிழையும் இவர்களுடைய பெயர்களையும் சற்று கவனிப்போம். 'ராசா', 'சிங்கம்' "ரத்தினம்" என்ற சொற்களுடன் முடியும் பெயர்கள் இங்கு சாதாரணம். எடுத்துக்காட்டாக "பாண்டியராசா", "துரைராசா", "நவராசா", "செயராசா", "சுகிர்தராசா", "குணரத்தினராசா", "குணரத்தினம்", "நவரத்தினம்", "செல்வரத்தினம்", சிங்கங்களைப் பார்ப்போம். "வீரசிங்கம்", "கனகசிங்கம்", "இராசசிங்கம்", "துரைசிங்கம்" இந்தப் பெயர்களில் பெரும்பாலும் வடமொழிக் கலப்பு இருக்காது. பெயர்களில் ஒரு தனி அழகு. பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகள் சிங்கங்களாகவும், இரத்தினங்களாகவும், இராசாக்களாகவும் இருக்கவேண்டும் என்பதில் எத்துணை ஆர்வமும் அக்கறையும் காட்டுகிறார்கள் என்பதை இந்தப் பெயர்களிலிருந்தே ஓரளவு தெரிந்துகொள்ள முடிகிறதல்லவா?

'ஆபீசு' என்பதை, "கந்தோர்" என்று தமிழில் அழைக்கிறார்கள். அங்கு விஷயம் என்பதை "விசனம்" என்கிறார்கள். "என்ன செய்தி"? என்பதற்கு "என்ன விசனம்" என்பார்கள். நாற்காலி என்பதைக் குறிக்கும் (சேர்) ஆங்கிலச் சொல்லைத் தமிழில் "கதிரை" என்கிறார்கள். "நீதிபதி" என்பது "நீதிவான்" என்றும் "படிப்பகம்" என்பது "வாசிகசாலை" என்றும் அழைக்கப்படுகிறது.

"உடல் நலமில்லையா?" என்பதை "என்ன உடம்புக்கு வருத்தமா?" என்றும், "ஐயா வெளியே போய்விட்டார்" என்பதை "ஐயா வெட்டைக்கு (வெளியே) இறங்கிவிட்டார்" என்றும், "எப்படி நலம்" என்பதை "எப்படிப் பாடுகள்" என்றும் மட்டக்களப்புப் பகுதிகளில் நாம் சாதாரணமாகக் கேட்கலாம்.

"திட்டாதே" என்று சொல்வதை "பழிக்காதே" என்றும், "உண்மைதான்" என்பதை "மெய்தான்" என்றும், "ஆம்" என்பதை "ஓம்" என்றும், "மைதானம்" என்பதை "முற்றவெளி" என்றும் மட்டக்களப்பு வட்டாரத்தைத் தவிர வேறு எங்கும் கேட்க முடியாது. "துப்பாக்கி" என்பது "துவக்குஆகவும்" "வக்கீல்" என்பது "பெருக்குதோர்" ஆகவும், "கள்ளுக்கடை", "தவறணை" யாகவும், "தச்சன்" "ஓடாவி"யாகவும் சிறைச்சாலை "மறியல் வீடு" ஆகவும், விசாரணை "விளக்கம்" ஆகவும், சாமீன் "பிணை" யாகவும், சிறுவன், "பொடியன்" ஆகவும், சிறுமி "பொடிச்சி" ஆகவும், டீ, "தேத்தண்ணீர்" ஆகவும் வழங்கப்படுகிறது. கேலி "பகிடி" யாகவும், சந்தேகம் "ஐமிச்சம்" என்றும், கஷ்டம் "பொறுப்பு" எனவும், பேசுவது என்பதைக் "கதைப்பது" என்றும், அழகு "வடிவு" ஆகவும், மாட்டு வண்டி "கரத்தை" யாகவும் அங்கு பெயர் பெறுகின்றன.

"சின்ன இங்கிலாந்து" என்று அண்மைக்காலம் வரை பெயர்பெற்றுத் திகழும் இலங்கையில் எவ்வளவோ நாகரிகமும் ஆங்கில அறிவும் பரவியும் கூட, இலங்கைத் தமிழர்கள் தங்களுடைய தாய்மொழியான தமிழ்மொழியின் தூய்மையைக் காத்துவருவது பாராட்டத்தக்கது.



இம்பர் வாழ்வினிறுதிகண் டுண்மையின்
இயல் புணர்த்திய சங்கரன்.

# நதியின் கரையில்....

★

டி. எஸ். கே.

நிறை மாதச் சூலியைப் போல ஸரயு நகர்ந்து கொண்டிருந்தாள். இருகரைகளின் விளிம்பையும் தொட்டுக் கொண்டு வெள்ளம் பிரவகித்துக் கொண்டிருந்தது.

மேலே பார்க்கும்போதுதான், தள்ளாடித் தள்ளாடி, அசைந்து அசைந்து, மெல்ல மெல்ல செல்வது போன்ற பாவனை. உள்ளே நுழைந்து விட்டாலோ, கற்பனைக் கெட்டாத சாகசம்! ஆயிரம் களிறுகளின் பலம் ஒருங்கே திரண்டு விட்டதைப்போன்ற பலம், ஸரயுவின் வயிற்றில் மறைந்து ஒளிந்திருந்தது.

அவள் தான், உண்மையில், எவ்வளவு வேகமாக ஓடுகிறாள்! ஆனால், அந்த ஓட்டத்தின் வேகம் தெரியாதபடி எப்படி கண்கட்டு வித்தை செய்கிறாள்! ஆற்றலை அமுக்கி வைத்துக்கொண்டு, எவ்வளவு அடக்கமாக ஓடுகிறாள்! பொய்த் துறவு பூண்ட மனிதனைப் போல, ஏன் இந்த மாயத் தோற்றம்?

ஆனால், அவள் எவ்வளவு நல்லவள்! வானத்தைத் தொடமுயற்சிக்கும் சிகரங்களின் வெள்ளி முலாப் பூச்சை, சினங்கொண்ட செங்கதிரோன் உருக்கி மண்ணுலகை நோக்கி ஓடச் செய்யும் போது, தாயினும் சாலப் பரிந்து ஏற்று நீருக்கு அடைக்கலம் தரும் ஸரயுவின் பெருமையை என்னென்று புகல்வது?

ஃ ஃ ஃ

ஸரயுவின் கரையில் ஒரு ஆசிரமம். தூய்மைக்கு உறைவிடம்; அமைதிக்குப் பிறப்பிடம்; அறிவுக்குப் புகலிடம்; அறத்துக்குத் தன்னிடம்.

மஹரிஷி ஹரிபாதரின் ஆசிரமம் அது. நூற்றுக் கணக்கான சிஷ்யர்களுக்கு உண்டியும், உடையும், உறையுளும் கொடுத்து அவர்களை அறிவுக் களஞ்சியங்களாக்கிக்கொண்டிருக்கும் சீலர், அவர்.

நாடு தேடி அவர் சென்றதில்லை. நாடு, அவரை நாடி வந்தது.

தங்கள் நாட்டிற்கு வந்து அறிவொளி பரப்பவேண்டும் என்று எத்தனையோ மன்னர்கள் கெஞ்சிக் கேட்டுக் கொண்டு விட்டார்கள். அவர் மசிந்து கொடுக்கவில்லை. 'அறிவுடன் ஆனந்த இயல்புடைய பரப்பிரும்மத்தைக் காணவேண்டி கடுந்தவம் புரியும் எனக்கு நாடென்ன?' காடென்ன?... காட்டின் மிக அமைதியான இடம்தான் எனக்குகந்தது. இதோ, இந்த ஸரயுவின் கரைகளைப் பார். என்ன செழிப்பு! என்ன வனப்பு!... இந்தப் பசுமையின் பின்னே காட்சியளிக்கும் அமைதிதான் என்னே! அதோ, அந்த முல்லைக் கொடியைப் பார். தன் கைகளை அசைத்து, 'நீ போகாதே, போகாதே' என்று என்னைத் தடுக்கிறது... அந்த மாங்கன்று எப்படிக் கண்ணீர் வடிக்கிறது, பார்த்தாயா? ஒவ்வொரு இலையின் நுனி வழியேயும் நீர் முத்துக்களை வாரிக் கொட்டுகிறது. நீ அதனைப் பனி என்று கூறுவாய். மனிதர்களைக் கட்டி மேய்க்கிற உனக்கு, மரங்களின் உணர்ச்சியைப் புரிந்து கொள்ளத் தெரியாது. உன் அழைப்பை நான் ஏற்றுக் கொண்டு விடுவேனோ என்று பயந்து மாங்கன்று கண்ணீர் விடுகிறது... என்ன, செவிகளை நிமிர்த்தி உற்றுக் கேட்கிறாய்? அசுரக் கூச்சல் எங்கிருந்து வந்தது என்று யோசிக்கிறாயா? உன் பேச்சைக் கேட்டுப் பொங்கி யெழும் தேவதாரு மரங்களின் ஆவேசக்-கூச்சல், அது!......மன்னவா, எதிரே ஸரயுவில் தண்ணீர் பெருகி ஓடுகிறது; சுற்றிலும் அன்பு பெருகி ஓடுகிறது. நான் இவ்விடத்தை விட்டு எப்படி வரமுடியும்?" என்று இதமாகக் கூறி அவர்களை அனுப்பிவிடுவார்.

ஹரிபாதரின் புகழ் நாற்றிசையிலும் பரவியிருந்தது. பாரதத்தின் நெடுந்தூரங்களிலிருந்தெல்லாம் மகா பண்டிதர்களும் தவச் சிரேஷ்டர்களும் அவரைக் காண வந்த வண்ணமிருந்தார்கள். செங்கோல் தாங்கும் பங்கயக்கைகளும், வாளேந்தும் வீரக் கரங்களும், பொன்னில் புரளும் திரு பொருந்திய கைகளும், அரவிந்தம் போன்று செம்மை சான்ற மென்கரங்களும் அவர்முன் வளைந்து, குறுகி, வணங்கின.

மலைச் சிகரத்தைப் போன்று அஞ்சாத, தலை பணியாத வாழ்க்கை நடத்துபவர், அவர். பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்பவர். சாதாரண மக்களின் புகழ்ச்சியும் இகழ்ச்சியும் அவருக்குப் பொருளற்ற பொருள்கள்.

ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி, உலப்பிலா ஆனந்தமாய பரம்பொருளிடத்திலே லயபட்டு, அகங்காரம் அழிந்து, தன்னைச் சிறு துரும்பென உணர்ந்து, நாட்களைத் தவத்தில் கழித்துக் கொண்டிருந்தார்.

ஃ ஃ ஃ

ஒரு நாள். மரங்கள் ஓங்கரித்துக்கொண்டிருந்த மாலைவேளை. தங்கமுருக்கித் தழல் குறைத்துத் தேனாக்கி எங்கும் இங்கிதமாகப் பரப்பியது போல் மஞ்சள் வெயில் ஆட்சி செலுத்திக்கொண்டிருந்த சமயம். ஆல விருட்சத்தின் அருகே, பசும் புற்றரையில் மான் தோல் விரித்தமர்ந்து அந்தி ஜபத்தில் ஈடுபட்டிருந்தார், ஹரிபாதர்.

ஜபம் நிறைவுற்றுக் கண் விழித்தபோது—

"ஸ்வாமீ..."

"யாரது?...ஜெயபாலன்!..."

"ஆம், ஸ்வாமி. அபாக்யவானான நானே தான்!.."

"பாடலிபுரத்து மன்னவனா, இப்படிப் பேசுவது?... முகத்தில் கரை காணாத சோகம் கொந்தளிக்கிறதே?..."

"சோகம், என் இதயத்தில் மாளிகை கட்டிக் கொண்டுவிட்டது, ஸ்வாமி..."

"குரலில் ஏன் இவ்வளவு நடுக்கம், ஜெயபாலா?..."

"உடல் சுண்டி, உணர்ச்சி சுண்டாத காரணத்தால், மகரிஷி..."

"கண்களில் நீர் வெள்ளம்?"

"என் கண்ணின் மணியை இழந்து விட்டேன், ஸ்...வா...மி..."

"எனக்கொன்றும் புரியவில்லையே?"

"முக்காலும் உணர்ந்த தங்களுக்குத் தெரியாததொன்றுண்டா?"

'ஜெயபாலா, நீ ஆழ்ந்த சோகத்தின் வசப்பட்டிருக்கிறாய் என்பதை நான் புரிந்து கொள்கிறேன். உன் மனத்துக்கு மிகவும் விருப்பமான ஒரு பொருளை இழந்துவிட்டாய் என்பதும் புரிகிறது. ஆனால்,......'

"...என்னுடைய ஒரே குமாரன், எனக்குப்பின் பாடலிபுரச் சிம்மாசனத்தை அலங்கரிக்க வேண்டியவன், என் மார்பில் புரண்டு, தோளில் தவழ்ந்து வளர்ந்த செல்வக் குழந்தை, சூரிய குலத் தோன்றல்,..."

"...பானுகோபனைத் தானே, சொல்கிறாய்?"

"ஆம், ஸ்வாமி. அந்தப்...பானு...அஸ்தமித்து விட்டது, ஸ்...வா...மி"

"ஹா !...சூரிய குலத் தோன்றல் தளிரிலேயே வாடிவிட்டதா ?... என்ன சோகம், என்ன சோகம்?..."

"சோகத்தைப் போக்கும் மருந்து தங்களிடம் இருக்கிறது, ஸ்வாமி."

"ஆசிரமத்தில் அடைக்கலம் புகுந்து கொள்ள விரும்புகிறாயா ?"

"இல்லை, ஸ்வாமி. அஸ்தமித்துவிட்ட பானு மீண்டும் ஒளிவீச வேண்டும்"

சிறிது கலங்கியிருந்த ஹரிபாதரின் முகத்தில் திகில் படர்ந்தது.

"மனித சக்திக்கு அப்பாற்பட்ட செயல் அது, ஜெயபாலா?..."

"க்ஷமிக்கவேண்டும். தாங்கள் தெய்வம். தங்களால் இயலும்..."

"உன் அன்பு என்னைப் பரவசப்படுத்துகிறது. உன் நம்பிக்கை, மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. ஆனால்,..."

"புத்திர சோகத்தால் நானும் மாய்ந்துகொண்டிருக்கிறேன். ஸ்வாமி, தடை சொல்லாதீர்கள். ...தாங்கள் தான் எனக்குக் கதி..."

"எழுந்திரு மன்னவா, எழுந்திரு... இறைவனின் செயல்களுக்கு நாம் அர்த்தம் கண்டுபிடிக்க முடியாது. சாவு, இயற்கை நியதி. அந்த நியதியைத் தகர்த்தெறியும் ஆற்றல் மனிதனுக்கு இல்லை. அப்படி இருந்தாலும், அந்த உரிமை அவனுக்கு இல்லவே இல்லை..."

"நான் தங்களை நம்பி வந்திருக்கிறேன்......பாடலிபுரத்து மக்கள் அனைவரும் தங்களது பெருங்கருணையை ஆவலோடு எதிர்பார்த்து,ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கிறார்கள்..."

"ஹ... நல்லது. நீ ஸரயு நதிக்கரைக்குச்சென்று காத்துக்கொண்டிரு. நான் சிறிது நேரத்தில் அங்கு வருகிறேன்..."

வணங்கி எழுந்த ஜெயபாலன் புதுத்தெம்புடன் நதிக்கரையை நோக்கி நடந்தான். ஹரிபாதரின் பாதங்கள் சற்றுத் தள்ளியிருந்த பர்ணசாலையை நோக்கி நகர்ந்தன.

ஃ ஃ ஃ

பர்ணசாலைக்கருகே, மான் குட்டிகளுடன் விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்கள் தங்கள் குருநாதர் வருவதைக் கண்டதும் பக்தியோடு எழுந்து அடங்கி நின்றார்கள். அன்பு மீதுறப்பெற்ற ஹரிபாதர் அவர்களைக்கண்டு இளநகை புரிந்தார். பாதங்களில் விழுந்து நமஸ்கரித்த இரு பாலகர்களை அணைத்தவாறே உள்ளே நுழையும் போது—

"ஸ்வாமீ..."

ஹரிபாதர் திரும்பினார்.

"வாழ்க, வீரகேசரி..."

"இல்லை, ஸ்வாமி. நான் இப்போது வீரனும் இல்லை, கேசரியும் இல்லை!"

"காந்தாரப் பேரரசின் படைத் தலைமையை உதறி எறிந்துவிட்டாயா? "

"தாங்கள் என்னை மிகவும் சோதிக்கிறீர்கள்."

"உன் உள்ளம் மிகவும் நொந்துபோயிருக்கிறது. அதனால் தான், உனக்கு இத்தனை சலிப்பு. வா, அந்த மரத்தருகே அமர்ந்து பேசலாம். தென்றலில் உன் இதய வேதனை தணியட்டும்..."

"வேண்டாம், குருதேவா. தென்றல் என் தாபத்தைத் தணிக்காது; கொழுந்துவிட்டு எரியச் செய்யும்..."

"தென்றலை நீ நுகர்ந்ததில்லை. தண்டு இறங்குமிடத்தில்காற்று ஏது? உளவாளிகள் வாயுத் தேவனைக் கூட உள்ளே அனுமதிக்க மாட்டார்களே!..."

"நான் வேதனையால் வெந்து சாகிறேன், மகரிஷே!..."

"தென்றல் உன் உடலைத் தீண்டினால்..."

"...என் பிரியம்வதையின் ஞாபகம் வந்துவிடும்."

"இந்த இடத்தில் கூடவா, உன் காமம் அழியவில்லை. அழியும் உடலுக்குள் அழியாத ஆசை! என்ன பேதைமை!..."

"பேதமை தான், ஸ்வாமி. இனி, என் உடலைப் பிரியம்வதை தீண்டமாட்டாள்!"

"ஏன், தவக் கோலம் பூண்டு விட்டாளா?"

''இல்லே...மாண்டுவிட்டாள்...''

''ஹா!......உண்மையாகவே, உன் பிரியம்வதை மாண்டுவிட்டாளா?......என்ன கோரம்! என்ன கொடுமை!...''

''......''

''விசிக்காதே, வீரகேசரி. நூற்றுக்கணக்கான வீரர்களேப் புறம்கண்ட நீ அழுவதைக்கண்டால் மற்ற வர்கள் சிரிப்பார்கள்.... சாவு, இயற்கையின் நியதி. பிரியம்வதை என்றேனும் ஒரு நாள் அழிய வேண்டிய வள் தானே?''

''மன்னிக்கவேண்டும், முனிபுங்கவா. பிரியம் வதையின் பிரிவு என்னே அணு அணுவாகச் சிதைத்துக் கொண்டிருக்கிறது. அந்தத் துன்பத்திலிருந்து மீள் வதற்காகத்தான் தங்களே நாடி வந்திருக்கிறேன்...''

''ஹ ஹ ஹ... உன் மனம் இன்னும் பக்குவப்பட வில்லே, வீரகேசரி.''

'எதற்கு, ஸ்வாமி?'

'எதற்கா!... காவி ஏற்க!...'

'நான் ஏன் காவி ஏற்கவேண்டும்?'

'பின், நீ என்னே நாடி வந்ததன் காரணம்?'

'பிரியம்வதையை உயிர்ப்பிக்கவேண்டும், குரு தேவா...'

அவன் கெஞ்சலில் இருந்த சொற்கள், கூரிய அம்புகளாக மாறி ஹரிபாதரைத் துளேத்தெடுத்தன. சட்டென்று ஓரடி பின்னே நகர்ந்தார்.

'உயிர் பிரிந்த கூட்டில் மீண்டும் உயிரைக் கூட்டி வைக்க வேண்டுமா?... இறைவனுலும் ஆகாத செயல் இது, தளபதி!...'

'தங்களால், க்ஷண மாத்திரத்தில் நிறைவேற்றக் கூடிய அற்பமான நிகழ்ச்சி, ஸ்வாமி...'

'ஆனுல்,...'

'தயவுசெய்து தடை சொல்லாதீர்கள். பிரியம் வதையின் தீங்குரலேக் கேளாமல் உலகமே ஒலிப் பாலேயாக மாறிவிட்டது, ஸ்வாமி. அவளேத் தழுவா மல் என் வீரம் என்னேவிட்டு நழுவி விட்டது...காந்தார மக்கள் அனேவரும் படைத் தலேவனின்றி, திசைமாறித் திக்குமுக்காடுகிருர்கள்...'

'...உம்?...சரி ...நீ, ஸரயு நதிக்கரைக்குச் சென்று காத்திரு. இன்னும் சிறிது நேரத்தில் நான் வரு கிறேன்...'

ஸரயுவை நோக்கி நடந்த வீரகேசரியின் நடை யில், போர்ப்பறைக்கேற்ற ஜதி அமைந்திருந்தது.

ஹரிபாதர், சிந்தனேயோடு, பர்ணசாலேக்குள் நுழைந்தார்.

ஃ ஃ ஃ

நுழைந்த அவர், இங்குதி எண்ணெய் விளக்கைச் சிறிது தூண்டிவிட்டார். பனிப்படலம் போல் இலேசாகப் படியத் தொடங்கியிருந்த இருள், பர்ணசாலேக்கு உள்ளிருந்து வெளியே தப்பியோடியது. தண்மை பொருந்திய விளக்கொளியில் சிறிது நேரம் சிந்தனே யோடு நின்ருர், ஹரிபாதர். பின்னுலிருந்து நிழல் தட்டியது.

'யார்?'

கேள்விக்கு விடைகொடுக்காமல் அவ்வுருவம், அவர் பாதங்களில் சாய்ந்தது.

'எழுந்திரு, மகனே!... சகல நன்மைகளும் உண் டாவதாக!...'

'தங்கள் வாக்கு என்றுமே பொய்த்ததில்லே, குரு தேவா...'

குனிந்த தலே நிமிர்ந்து பேசியது.

'தனபாலன்?'

'ஆம், ஸ்வாமி. ... நான் தான், அந்த துரதிருஷ்ட சாலி...'

'துரதிருஷ்டசாலியா?... வேடிக்கை தான்!...... பாரதம் முழுவதும், கடல் கடந்தும் உன் பெயர் அடி படுகிறது...'

'தாங்கமுடியாத அடிபட்டுத் தங்களிடம் வந்திருக் கிறேன்...'

'ஐம்பத்தாறு தேசத்து வேந்தர்களின் முடிகளில் மின்னும் நவரத்தினங்களெல்லாம் நீ கொடுத்தவை அல்லவா?'

'ஆம். இப்போது பரமதரித்திரனுகத் தங்களேச் சரணடைந்திருக்கிறேன்...'

'குவித்த செல்வத்தை வாரி வழங்கி விட்டாயா?'

'முயன்று, தேடி, அடைந்த செல்வம் பொக் கென்று போய்விட்டது, ஸ்வாமி...'

'வருந்தாதே. ஏற்றமும் தாழ்வும் ஞானியைக் கலக்குவதில்லே. வறுமையும் வளமும் மனித வாழ்க்கை யில் காணுததொன்றல்லவே?... செல்லத்தை இழந்து விட்டதற்காக வருந்துவது மன்னிக்க முடியாத மடமை...'

'...வருந்தாமல் எப்படிஸ்வாமி, இருக்க முடியும்? பெற்ற மகள்,— சென்ற வருஷம் விமரிசையாக இல் லறம் புகுந்தது தங்களுக்குத் தெரியுமே, குருதேவா?— தலேயை விரித்துப்போட்டு, நெற்றித் திலகத்தை அழித்துவிட்டு, 'ஹோ' என்று கதறும்போது நான் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டிருக்க முடியுமா, ஸ்வாமி?...'

'என்ன பேசுகிருய், நீ?...'

'என் மருகன் மரணமடைந்து விட்டான்...'

'ஹா!... என்ன அக்ரமம், இது?...'

'என் ஒரே பெண்ணின் கனவன், என்னிடமிருந்த விலேமதிக்க வொண்ணுத மாணிக்கம் — அதை இழந்து

தவிக்கிறேன், ஸ்வாமி. என் மகள் அழுதழுது துரும் பாகி விட்டாள்...'

'உன் துயரம் என் நெஞ்சையும் கலக்குகிறது. ஆனால், இயற்கையின் நியதிகளை ஏற்றுக் கொள் வதைத் தவிர, மானுடர்களாகிய நம்மால் வேறு என்ன செய்ய இயலும்?'

'தாங்கள் மானுடர் அல்லவே, ஸ்வாமி! நான் தெய்வ சன்னதியில் அல்லவா, இப்போது நின்று கொண்டிருக்கிறேன்...'

சொற்றிரைக்குப் பின்னால் கரந்திருந்த ஒளியை உணர்ந்து கொண்டார், ஹரிபாதர்.

'தெய்வமும் ஒரு நியதிக்குக் கட்டுப் பட்டுத்தான் ஆகவேண்டும்...'

'பொதுவிதிக்கு விலக்கும் உண்டு, முனிவ!'

அவர் தன்னுள் நகைத்துக்கொண்டார். வாதத் தால் அவன் மனம் அமைதியடையாது எனக் கண் டார்.

'நதிக்கரைக்குப்போ. வருகிறேன்...'

பெரு நிதியத்தை அடையப் போகிறவனைப்போல் மிடுக்கு நடைபோட்டுச் சென்றான், தனபாலன்.

ஃ ஃ ஃ

ஹரிபாதர் இரு சிறுவர்களுடன் நதியின் கரையைச் சேர்ந்தார்.

நிறைமாதச் சூலியைப் போல ஸரயு நகர்ந்து கொண்டிருந்தாள். இருகரைகளின் விளிம்பையும் தொட்டுக் கொண்டு வெள்ளம் பிரவகித்துக் கொண் டிருந்தது.

'என்ன இன்பம்! என்ன இன்பம்!'–தன் நிறைவை வெளிப்படையாகவே கூறி மகிழ்ந்தார், முனிவர். எல்லை யில் இன்பத்தை மாந்திய அவர், இன்பத்தைத் தவிர வேறொரு சுவை அறிவாரோ?

அவர் அனுப்பிய மூவரும் அருகே வந்தார்கள், மாயம் ஒன்று நிகழப் போவதை பேராசையோடு எதிர் பார்த்துக் கொண்டு. 'செத்தாரைப் பிழைக்கவைக்கும் மந்திரக்குளிகை பெற்றுத் தருவாரோ!... அவர், எல்லாம் வல்லவர். தென் திசையோனையே பாசத்தால் கட்டி இழுத்துக்கொண்டு வந்துவிட மாட்டாரா!—?

'குழந்தாய்!' என்று விளித்தார், சீடனை.

'ஸ்வாமி...'

'ஸரயுவைப் பார்த்தாயா?'

'பார்க்கிறேன், தேவா!... வெள்ளம், கட்டுப் படுத்த முடியாத அசுர பலத்தோடு பெருகிச் செல் கிறது...' என்றான், சுகேசி.

சுசீலன், 'அதோ பாருங்கள்! பெரிய விருட்சம்!– சின்னஞ்சிறு துரும்பைப் போலவே அதுவும் வசமிழந்து போகிறது, வெள்ளத்தோடு!' என்றான்.

'நதியின் அடிப் பரப்பில் பெரிய பெரிய கற்கள் எத்தனை உருண்டு போகின்றனவோ?'

ஹரிபாதர், சிந்தனையூடே போல், 'இவை அனைத் தும் எங்கே போய்ச் சேருகின்றன?' என்று வினவினார்.

'சந்தேகத்துக்கிட மின்றி சமுத்திரத்தில் தான்!...'
'சரி. ஓரிடத்தில் இவை தேங்கிப் போனால்...?'
—'தேங்கிப் போனால்!'—

'...மேலும் மேலும் செடியும் கொடியும், புல்லும் பூண்டும், மரமும் பாறையும் சேர்ந்து வெள்ளம் தடை பட்டுப் போகும்.'

'தடைபட்டு?'

'கரையை மீறிக்கொண்டு பாயும். விளைநிலத் துக்குச் சேதம் விளைவிக்கும்; மனிதர் இல்லங்களைத் தரை மட்டமாக்கும்; கன்றுகாலிகளை அழிக்கும்...'

'பின்?'

'வாழ்வே பாழ்பட்டுப் போகும்!'

'அப்படியானால், வெள்ளத்தில் அகப்பட்ட எதுவா யினும் அத்துடனே போகவேண்டும் என்கிறாய்.'

'தாங்கள் சில நாட்களுக்கு முன் கற்பித்த ஒரு செய்யுள் நினைவுக்கு வருகிறது, குருதேவா...'

'அப்படியா?'

'...விதியாகிற நதியில், காலப் பெரு வெள்ளத்தில் துரும்பாம் மனிதன் எந்நேரமும் இழுத்துச் செல்லப் படுகிறான்...'

'ஹ...ஹ...ஹ...ஹ...' நகைத்தார், ஹரிபாதர். 'அப்படிச் செல்லாமல், தேங்கி நின்றால்?...'

## —'தேங்கி நின்றால்?'

மா மன்னன், மாவீரன், மாவணிகன் ஆகிய மூவர் உள்ளங்களிலும் இந்தக்கேள்வி முட்டி, எதிரொலித்துப் பேரிரைச்சலாகியது; அலை அலையாய்ச் சுருண்டு சாடி யது; சுழல் சுழலாய் வீசி அடித்தது. பின், கொண்டலாய் மாறி, 'சோ' வெனப்பெய்து, 'தண்'ணென்று ஆக் கியது, அல்லல்பட்ட உள்ளங்களை.

தடாலென விழுந்தனர், மூவரும் — ஹரிபாதரின் பாதபங்கயங்களில். 'வருகிறேன், ஸ்வாமி'–மூவரும் ஒரு குரலாய் மொழிந்து விட்டு, திசைக் கொருவராகச் சென்றனர்.

சிறிது நேரம் நதியின் கரையிலேயே நின்றுவிட்டு, சீடர்களை அணைத்துக்கொண்டு தவக்குடிலை நோக்கி நடக்கத் தொடங்கினார், ஹரிபாதர்.

வானத்தில் விண்மீன்கள் சூழ, சந்திரன் பாலைப் பொழிந்து கொண்டிருந்தான். வெள்ளத்தில் நீராடிய தென்றல் அவரைத் தழுவி புனிதம் பெற்றுச் சென்றது.

எப்பொழுதும் போல் அப்பொழுதும் அவர் உள்ளம் எல்லையில் இன்பப் பெருவெள்ளத்தில் திளைத்துக் கொண்டிருந்தது.

———

# பாசத்தின் பிழை

★

வல்லிக்கண்ணன்

திருவாளர் செல்வகுமார் அவர்களுக்கு அவரது தந்தை மீது பெரும் வெறுப்பு ஆரம்பம் முதலே வளர்ந்து வந்தது. அதற்குப் பல காரணங்கள் உண்டு.

முதலில் 'பெரிய பிள்ளை' — தந்தையை செல்வகுமார் இவ்வாறு தான் குறிப்பிடுவார் — நாகரிக மனிதராக இல்லை. தோற்றத்திலும் நடை உடை பாவனை பண்பாடு முதலிய எல்லாவற்றிலுமே தான். 'அப்பளாக் குடுமி' என்றும், 'சம்மர் கிராப்பு' என்றும் குறிப்பிடப் படுகிற, மொட்டையும் இல்லாத கட்டை மயிர் கிராப்பும் இல்லாத ஒரு சிகை அலங்காரம். 'சிக்கனத்துக்கு சிக்கனமும் ஆச்சு, சௌகர்யத்துக்கு சௌகரியமும் ஆயிற்று. எந்தத் தண்ணீரிலும் எப்போ வேண்டுமானாலும் தலை முழுகலாம். துண்டைக் கொண்டு ஒரு முறை துவட்டிவிட்டால் போதும். முடியில் நீர் தங்கி நிற்குமே, ஜனதோஷம் பிடிக்குமே என்று கவலைப் படவே தேவையில்லை' என்று அவர் சொல்லுவார்.

தந்தையின் சிகை அலங்காரத்தை விட, அவரது இந்த அதிகப்பிரசங்கம் மகனுக்கு அதிகமான வெறுப்பும் ஆத்திரமும் உண்டாக்கும்.

தினசரி முகசவரம் செய்துகொள்ளும் நாகரிகத்தை வளர்த்துக் கொண்டவர் செல்வகுமார். அவருடைய முகம் சதா 'மழமழவென்று', தடவினால் வழுக்கும் கண்ணாடித் தன்மை பெற்றது போல், திகழும். அழகுக்கு அழகு ஏற்றும் ஆசையோடு அவர் பவுடர், ஸ்நோ முதலிய மேல்பூச்சு சாதனங்களையும் உபயோகிப்பது வழக்கம்.

அவரது தந்தையின் முகமோ? புத்திர பாக்கியமே ஸர்டிபிகேட் கொடுத்தது போல, உராங் உட்டாங் மூஞ்சி மாதிரியும்,கரடி மேல் மாதிரி ரோமம் அடர்ந்தும், முள்ளம் பன்றி உடம்பிலே இருக்கிறது போல் குச்சி குச்சியாய், முள்ளு முள்ளாய் மயிர் நிறைந்தும் காட்சி தரும். 'நான் என்ன உத்தியோகம் பார்க்க ஆபீசுக்கா போறேன்? எனக்கு இருக்கிற லெட்சணம் போதும். நாலஞ்சு நாளைக்கு ஒரு தடவை முகம் வழிக்கணும் என்று அம்பட்டனுக்கு வீணாக ஏன் காசு கொடுக்கணும்? தலைமுடியை வெட்டிக்கொள்கிற அன்றே முகத்தையும் சுத்தம் செய்து கொண்டால் போதும். ஒரே செலவோடு தீர்ந்துவிடும்' என்பார் பெரியபிள்ளை.

அவரது முகவிகாரத்தை விட, இந்த மனோபாவம் மகனுக்கு அடக்க முடியாத கோபத்தையும் எரிச்சலையும் மிகுதியாகத் தரும்.

அடுத்தபடியாக, தந்தையின் பெயரே மகனுக்குப் பிடிக்கவில்லை. 'சுடலைமுத்துப் பிள்ளையாம் சுடலை முத்துப் பிள்ளை! ஊர்க்காரர்கள் அதையும் ஒழுங்காக உச்சரிப்பது கிடையாது. சொள்ளமுத்துப் பிள்ளை என்கிறார்கள். சுத்த பட்டிக்காட்டுத்தனமான, பத்தாம் பசலித் தனமான பேர். பழம் பெயர்களில் கூட அழகானவை எவ்வளவோ இல்லாமலா போச்சு? இவருக்கும் இவரது முன்னோர்களுக்கும் கொஞ்சம்கூட அழகு உணர்ச்சி கிடையாது' என்று செல்வகுமார் முணமுணப்பார்.

சுடலைமுத்துப் பிள்ளை தமது மகனுக்கு கறுப்பசாமி என்றுதான் பெயர் சூட்டினார். ஊரார்கள் கறுப்பா, கறுப்பையா என்றே அழைத்து வந்தார்கள். பையன் ஐந்தாம் வகுப்பு வரையில் அதே பெயருடன்தான் நடமாடித் திரிந்தான். ஆறுவது வகுப்புக்கு மேல், பக்கத்து நகரத்தில் உள்ள பெரிய பள்ளிக்கூடத்தில் சேர்ந்து கல்வி கற்கத் தொடங்கிய போது, அவன் தனது பெயரை செல்வகுமார் என்று மாற்றிக் கொண்டான். அவன் உள்ளத்தில் புகுந்து கொண்ட நாகரிக உணர்வு முதன் முதலாக அவனது பெயரில் மாற்றம் செய்யத் தூண்டியது போல, தலைமுடியிலும் கை வைத்தது. கரு கருவென்று நீண்டு வளர்ந்து தொங்கிய கூந்தல்—கொண்டையாகவும் சடை என்றும் நாளுக்கு ஒரு அலங்காரம் பெறும் அந்தஸ்து உடையது — களையப்பட்டது. நாகரிகக் கிராப்பு வந்தது.

பையன் படித்து முன்னேறியே தீருவது என்று உறுதி பூண்டிருந்தான். செவந்திபட்டி என்கிற பட்டிக்காட்டுச் சூழ்நிலையும், அங்கு வசித்த மக்களின் வாழ்க்கை முறையும் அவனுக்குப் பிடித்திருக்கவில்லை. நாகரிக நகரத்துக்கு வந்த பிறகு, பிறந்த ஊர் வாழ்வின் சாரமற்ற, பிற்போக்கான தன்மை எத்தகையது என்பதை அவன் கணந்தோறும் உணரலானான். சமுதாயத்தில் வசதிகளோடு வாழ்க்கையை அனுபவித்து நன்றாக வாழவேண்டும் என்றால், அதற்குப் பணம் அத்தியாவசியம். பணம் பெறுவதற்குப் பலரகமான வாய்ப்புகள் இருந்தபோதிலும், உத்தியோக பதவி வசதி மிகுந்த படியாக அமையக்கூடும். நல்ல உத்தியோகம் பெறுவதற்கு படிப்பு முக்கியம் – இந்தவிதமாக செல்வகுமாரின் சிந்தனை வேலை செய்தது.

சுடலைமுத்துப் பிள்ளை தோட்ட வேலை செய்து பிழைப்பு நடத்தினார். கீரை, காய்கறி, மருக்கொழுந்து, செவந்திப் பூ போன்றவைகளை, காலத்துக்கும் கிராக்கிக்கும் தக்கபடி பயிரிட்டு, ஊரில் விற்பனை செய்ததோடு, தலைச்சுமையாக எடுத்துச் சென்று நகரத்தில் காசாக்குவது உண்டு. அவர் பஸ்ஸையும் ரயிலையும் நம்புவது கிடையாது. 'நடராஜா சர்வீஸ்'தான் என்பார். 'கால் ஆழ்வானைத் தட்டிவிட்டால், எத்தனை மைல் தூரமானால் என்ன? டகார்னு குறித்த இடத்திலே கொண்டுபோய் சேர்த்து விடுவானே!' என்று அவர் சொல்வார்.

நகரத்தில் உள்ள சிற்றுண்டி விடுதிகளின் வெளிச்சமும், சங்கீதக் கூச்சலும், பலகார வாசனையும் ஆசையைத் தூண்டக் கூடியவையே. ஆயினும் சுடலைமுத்துப் பிள்ளை அவரது ஆயுள் காலத்தில் ஒரு ஓட்டலுக்குள்ளே கூட எட்டிப்பார்த்தவரல்லர். 'ஒரு நாள் தின்று ருசி காட்டி விட்டால், அப்புறம் நாக்கு தினந்தோறும் கொண்டு வா, கொண்டு வா என்று நச்சரிக்கும். அது சரியான பிசாசு. நாக்குக்கு நாம் அடிமைப்படக் கூடாது' என்று அவர் உபதேசிப்பார். வெறும் பொரிகடலை அல்லது வேர்க்கடலையை வாங்கித் தின்று, ஒரு தம்ளர் தண்ணீரையும் குடித்தால் வயிறு 'கம்மென்று' கிடக்கும் என்பது அவர் அனுபவம்.

இல்லாமை தான் அவரை இவ்விதம் வளர்த்திருந்தது. ஆனால், அவருடைய கஞ்சத்தனமும் சின்னப் புத்தியும்தான் இதற்கெல்லாம் காரணம் என்று மற்றவர்கள் சொன்னார்கள். அவருடைய மகனும் அப்படித்தான் நினைத்தான்.

அவர் வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி மிச்சம் பிடித்தும், அறப்பாடு பட்டு அலையாய் அலைந்து காசு சேர்த்தும், கௌரவமாக நாளோட்டி வந்ததுடன், பையனைப் படிக்க வைத்து நல்ல வேலையில் சேர்த்து, பெரியவனாக்கிவிட வேண்டும் என்றும் தவித்தார்.

'என்னை கோணல் எழுத்து படிக்கும்படி எங்க அப்பா செய்யவில்லை. நானும் இங்கிலீசு படிச்சிருந்தால், கலெக்டர் ஆபீசிலே ஒரு குமாஸ்தாவாக வேலை பார்த்து, வெள்ளையும் சொள்ளையுமாகத் திரிவேன்' என்று சுடலைமுத்துப் பிள்ளை குறிப்பிடுவது வழக்கம். அவர் அந்தக் காலத்து மனிதர். தாசில் உத்தியோகமும், கலெக்டர் ஆபீசும்தான் அவருக்கு மகாப்பெரிய உச்ச நிலைகளாகத் தோன்றின.

இப்படி ஒரு மனக்குறை தனது மகனுக்கு இருக்கக் கூடாது என்பதனாலேயே, அவர் அவனைப் பெரிய பள்ளிக்கூடத்தில் பெரிய படிப்பு படிக்க வைத்தார். பணச் செலவைப் பெரிதாக மதித்தாரில்லை. அவர் ஏழை என்பதோடு, பையன் ஊக்கத்தோடும் திறமையாகவும் படித்து நல்ல 'மதிப்பு எண்கள்' பெற்று வந்ததனாலும், வகுப்புதோறும் சம்பளம் இல்லாமலே படிக்க வாய்ப்புக் கிட்டியது. கல்லூரியில் படிப்பதற்கு உபகாரச் சம்பளமும், புத்தகங்கள் வாங்குவதற்குப் பண உதவியும்கூடக் கிடைத்தன.

இதனால் பெரிய பிள்ளை பெருமையும் மகிழ்ச்சியும் கொண்டார். அவர் மகன் பெற்றோரின் தயவு இல்லாமல், தனது திறமையையும், உழைப்பையும் கொண்டே முன்னேறுவதாகத் தற்பெருமையும் அகந்தையும் வளர்த்து வந்தான். அதனால், தனது பெற்றோரின் தன்மைகள் பெரிய குறைபாடுகளாக அவனை உறுத்தலாயின. அவரைத் தனது தந்தை என்று மற்றவர்களுக்கு அறிமுகம் செய்துவைப்பதற்கே அவன் வெட்கப்பட்டான்.

செல்வகுமாருக்கு நல்ல உத்தியோகம் கிடைத்தது. அதிலும் முன்னேற வேண்டும் என்ற ஆசையோடு, துடிப்போடு, வேகத்தோடு அவன் உழைத்ததால் — உத்தியோக உயர்வுக்கான பரீட்சைகள் எழுதித் தேர்ந்தும், தேவைப்பட்டபோது அவசியமான நபர்களின் கால், கை பிடித்தும், தகுந்த சமயத்தில் தக்கவர்களுக்குத் துதி பாடியும், இன்னோரன்ன யுக தர்மங்களை எல்லாம் கையாண்டும் வந்ததால் — படிப்படியாக உயர்ந்து நன்னிலை அடைந்தான். அவனுக்கு நல்ல இடத்தில் கல்யாணமும் நடைபெற்றது.

பெண்ணின் பெயர் மூக்கம்மா என்றிருந்தபோதிலும் அவள் தோற்றம் கண்களுக்கு விருந்தாக இருந்தது. அவள் தந்தையிடம் சொத்து நிறைய இருந்தது; நகைகளாகவும், ரொக்கமாகவும் அவர் தாராளமாக வழங்கத் தயாராக இருந்தார்; பிறகு இருவர் பேரிலும் சிறிது நிலம் எழுதிவைக்க முன் வந்தார் என்கிற காரணங்கள் செல்வகுமாரைப் பெரிதும் வசீகரித்தன. மணப் பெண்ணின் பெயரை சரோஜா என்று திருமண அழைப்பிதழில் அச்சிடும்படி அவன் ஏற்பாடு செய்தான். எனினும் பெரியவர்கள் 'மூக்கம்மாள் என்கிற சரோஜா' என்று அச்சடித்து வைத்தார்கள். அது செல்வகுமாருக்குச் சிறிது வருத்தம் அளித்தது. ஆனாலும், வரப்போகிற லாபங்களைக் கருதி அவன் அதைப் பெரிதுபடுத்தவில்லை.

இப்படியாக ஊரார் பார்வையில் உயர்ந்து, சமூகத்தில் தனக்கென ஒரு அந்தஸ்தைப் பெற்றுவிட்டதும், செல்வகுமாரின் போக்கையும் நோக்கையும் உணர்ந்திருந்த தந்தை தாமாகவே விலகிக்கொண்டார். அவர் கிராமத்திலிருந்து பழைய தொழிலை விடாது கவனித்து வந்தார். அதுவும் மகனுக்குப் பிடிக்கவில்லை.

'நீங்கள் பாடுபடணும் என்கிற அவசியம் எதுவுமில்லை. ஊரோடு சும்மா இருங்கள். உங்கள் செலவுக்கு நான் பணம் அனுப்புகிறேன்' என்று மகன் பல தடவைகள் சொல்லிப்பார்த்தான். தந்தை கேட்கிற வழியாயில்லை.

'என் உயிர் இருக்கிறவரை, என் உடலில் உழைப்பதற்குத் தெம்பு இருக்கிறவரை, சோற்றுக்குக் கேடும் பூமிக்குப் பாரமுமாகச் சும்மா உட்கார்ந்து சாப்பிட என்னால் முடியாது' என்று அவர் உறுதியாய் அறிவித்துவிட்டார்.

அதிலிருந்து, செல்வகுமாரும் திருவாளர் பெரிய மனிதர் ஆகிவிட்டார். தன் தந்தையைக் கவனிக்க மறந்து விட்டார்!

— 2 —

தனது பெயரைச் சொல்வதற்குப் பிள்ளைகள் பிறக்க வேண்டும் என்று மனிதர்கள் ஆசைப்படுகிறார்கள். குலம் தழைக்கவும், குடும்பச் சொத்தை வைத்துக் காப்பாற்றவும் பிள்ளைகள் வேண்டும் என்று விரும்புகிறார்கள். பிறக்கிற பிள்ளைகள் எல்லாம் பெற்றவர்களின் ஆசைகளைப் பூர்த்தி செய்து விடுவதில்லை. அவர்களுக்கு மன திருப்தி அளிப்பதுமில்லை.

செல்வகுமாரும் எல்லாப் பிள்ளைகளையும் போல்தான் நடந்துகொண்டார். இருந்தபோதிலும் அவருக்கு ஒரு பிள்ளை பிறந்ததும், 'பெரியபிள்ளை' ஆகிய சுடலைமுத்துப்பிள்ளை கொண்ட மகிழ்ச்சிக்கு ஒரு அளவு கிடையாது, 'பேரன் பிறந்து விட்டான்! பெயர் சொல்லப் பிள்ளை பிறந்துவிட்டது. சின்னச் சுடலை

முத்து. சிங்காரச் சுடலைமுத்து என்று கொஞ்சலாம்' என்றெல்லாம் அவர் ஆசைப்பட்டார்.

ஆனால் தந்தையின் மனிதஉள்ளச் சிறு ஆசையைக்கூட மதிக்கத் தயாராக இல்லை செல்வகுமார். 'இந்தக் காலத்துக் குழந்தைக்குப் பழம் பாடாவதிப் பேரைச் சூட்ட முடியுமா? என் மகன் பெயர் மோகன் என்றுதான் இருக்கும்' என்று சொல்லிவிட்டார்.

தந்தை தனது ஏமாற்றத்தை விழுங்கிக்கொண்டார். 'பெயர் எதுவாக இருந்தால் என்ன? குழந்தை மண்டையிலே பற்றுப் பூசாமல் நல்லபடியாக இருக்க வேண்டும். உன்னைப்போல் உயர்வடையவேண்டும்!' என்று அவர் ஆசீர்வதித்தார்.

'நம்ம பயல் மணிப்பயல்! அவன் காலத்திலே ஜெயம் ஜெயமென்று கொடிகட்டி வாழ்வான்' என்று புதிய தந்தை மிகுந்த பூரிப்புடன் பேசினர்.

தாத்தா ஆகிவிட்ட பழைய தந்தைக்கும் அதில் மிக்க மகிழ்ச்சியே.

கருமமே கண் ஆனவர் போல் காலம் தன் போக்கில், தனது வேகத்தில், ஓடிக்கொண்டே இருந்தது. குழந்தையின் முதல் ஆண்டு நிறைவு தடபுடலாகக் கொண்டாடப்பட்டது.

மகனின் தன்மையை, மருமகளின் பெரியதனப் போக்கை, அவர்களது சூழ் நிலையை, அங்கு வருகை புரியும் ஆடம்பரக்காரர்களின் பண்புகளை எல்லாம் பெரியபிள்ளை ஒருவாறு உணர்ந்துதான் இருந்தார். இருப்பினும், பேரன் பிறந்தநாளுக்குப் போகாமல் இருக்கலாமா என்றுதான் அவர் மனசு தவித்தது. தன்னால் இயன்ற அளவுக்கு ஒரு சட்டை தைத்துக் கொண்டு அவர் போனர்.

'இந்தக் கிழடு வரவில்லை என்றுதான் இங்கே ஏங்கி எதிர்பார்த்துக் கிடந்தார்களாக்கும்?' என்று தலையை ஒரு வெட்டு வெட்டி, மோவாயைத் தோள் பட்டையில் இடித்துக்கொண்டு முணு முணுத்தாள் சரோஜா.

அவள் கணவன் செல்வகுமார் தந்தைக்கு எச்சரிப்பு விடுத்தான். 'கௌரவமானவங்க பலபேரு வருவாங்க; போவாங்க. நீங்க ஒரு மூலையிலேயே இருங்க. உங்களுக்கு வேண்டியதெல்லாம் அங்கேயே வந்து சேரும்' என்ருர்.

'குழந்தையைக் கொஞ்சம் கொடேன். கொஞ்ச நேரம் தூக்கி வச்சிருக்கணும் போலேயிருக்குது' என்று கெஞ்சும் குரலில் கேட்டார் பெரியவர்.

'உடம்பிலே எத்தனை சீக்கு இருக்குதோ! சுத்தமா மண்ணு? ஒட்டுவாரொட்டி எதுவாவது தொத்திக் கொண்டால்?' என்று முனகியபடி சரோஜா குழந்தையோடு போய்விட்டாள். அவர் பேச்சு காதில் விழாதது போலவும், அப்பொழுது தான் வந்துகொண்டிருந்த பட்டாடைக் காரிகள் சிலபேரை வரவேற்று உபசரிக்க விரைவது போலவும் நடந்துகொண்டாள் அவள்.

பெரிய பிள்ளை பெருமூச்செறிந்தார். அவரால் வேறு என்ன செய்ய இயலும்?

நேரம் ஓடிக்கொண்டிருந்தது. வெள்ளியும், பட்டும், பணமுமாகப் பரிசுகள் வந்து குவிந்தன. பேரனுக்குக் கிடைக்கும் பெருமைகளையும், தனது மகனுக்கு இருக்கும் செல்வாக்கையும் கண்டு, உளம் நிரம்பிய நிலையில் பரவசமும் மகிழ்வும் கொண்டு தம்மை—தமது ஏழைமையை – மறந்துவிட்டார் சுடலைமுத்து.

வந்தவர்களுக்கு உண்டி உபசரிப்பு; விடை பெற்றுப்போவோருக்கு வெற்றிலை பாக்கு சந்தன மரியாதை; எல்லோருக்கும் இன் சொல்லும் புன்சிரிப்பும் பரிமாறல் என்று சுழன்று கொண்டிருந்த மகனும் மருமகளும் பெரிய பிள்ளையின் பக்கம் கடைக்கண் நோக்கு கூட உகுக்கவில்லை. அவரை உபசரிக்கப் போய், பகட்டு விருந்தினர்கள் அவரது உறவு முறை பற்றி ஆராயத் தொடங்கிவிட்டால் – கிழடு ஏதாவது உளறந் துவங்கினல் – அவர்களுடைய கௌரவத்துக்குக் கேடு ஏற்பட்டுவிடாதா என்ன?

பெரிய பிள்ளைக்குத் தமது பேரப் பிள்ளையின் முகத்தைப்பார்க்க வேண்டும், பொக்கைவாய்ச் சிரிப்பைக்காணவேண்டும், சுடரொளிக் கண்களின் மினு மினுப்பை ரசிக்க வேண்டும் என்ற ஆசை அடக்க முடியாததாகி அவரை உந்தித் தள்ளியது. அவர் முன் அறைக்கு வந்தார். குழந்தை தொட்டிலில் தனியாகக் கிடந்தது. பெற்ருேர்கள் விருந்தினர்களோடு நாகரிக நாடகத்தைத் திறமையாக நடித்துக் கொண்டிருந்தார்கள் போலும்!

பெரியவர், தாத்தாவின் மகிழ்வுப் பெருக்கோடு, குழந்தையை வாரி எடுத்தார். குழந்தை சிரித்தது. அவ்வளவுதான். அவர் இந்த உலகத்தையே மறந்து விட்டார்! அட ராசாப்பயலே! என் சுடலைக் கண்ணு! அட சின்ன முத்தையா!' என்று கொஞ்சுவதில் ஈடுபட்டுவிட்டார். தான் கொண்டு வந்த பட்டுச்சட்டையை குழந்தைக்கு அணிவித்தார். 'என்ன ஐயா சுடலை முத்துப் பிள்ளை! என்னை உமக்குத் தெரியுதா? தாத்தாடா நான். சிரிக்கிருனே, கள்ள ராஸ்கோல்!' இப்படி உற்சாக உளறல்களை உதிர்த்துக் கொண்டிருந்தார் அவர்.

அவர் எதிர்பாராத நேரத்தில், சூறைக்காற்று மோத வந்ததுபோல் தாக்கினள் குழந்தையின் தாய். 'என்ன இது! என்ன இது! குழந்தை முகம் எல்லாம் ஒரே எச்சில்! ஐய, நீங்க வந்து குழந்தைக்கு முத்தம் கொடுத்துக் கொஞ்சவில்லையே என்றுதான் ஏங்கிக் கிடந்தோம்! பெரிய மனிதருக்கு அறிவு இருக்க வேண்டாமோ?' என்று பொழிந்துகொட்டினள். குழந்தை மீது கிடந்த கசங்கிய பட்டுச் சட்டையைக் கழற்றி வீசினள்.

செல்வகுமாரும் வந்து சேர்ந்தார். 'தனக்காகத் தான் தெரியவில்லை. போகுது. படிச்சுப் படிச்சுச் சொன்னேனே, அதுகூடவா மூளையிலே ஏறலே?' என்று கடுகடுத்தார்.

'என் மகன் பெயர் மோகன்தான். அவனை யாரும் இஷ்டம்போலே பெயர் சொல்லிக் கூப்பிட வேண்டியது

அநாவசியம். ஆமா!' என்று அலறினள் சரோஜா. 'ஆமாமா;' என்ருர் அவள் கணவர்.

அதற்குப் பிறகு சுடலைமுத்துப் பிள்ளை அங்கே தங்கியிருக்கவில்லை. அவரைப் பொறுத்தவரை அவரது நோக்கம் நிறைவேறிவிட்டது. சின்ன முத்தையாப் பயலை தூக்கிவச்சுக் கொஞ்சியாயிற்று. அதுபோதும்! 'துளியூண்டு விரல்கள்! இத்தினியூண்டு கையும் காலும்! இம்புட்டுப் போல உதடுகள்! அது சிரிச்சால், அடா அடா...' இந்த நினைப்பிலேயே சொக்கிக் கிடக் கலாமே எவ்வளவு நேரம் வேண்டுமானுலும்!

'அடேய், நீ வளர்ந்து பெரியவனுகி நல்லாப் படிச்சு, கவர்னரு ஆகனும்டா பயலே. என்ன சரியா?' என்று மானசீகமாக வாழ்த்தி, பேரனின் வாக்குறுதி யையும் கற்பனையிலேயே பெற்றுக் கொண்டார் பெரிய பிள்ளை.

—3—

மனித உள்ளத்தில் அலைமோதும் உணர்ச்சிகள் வலியன. ஆசை, ஏக்கம் முதலியவை எவரையும் பித் தராய், வெறியராய் மாற்றும் தன்மையன. பாசம் அறிவை மழுங்கடிக்கவும் கூடும்.

சுடலைமுத்து பிள்ளைக்கு தனது மகன் மீது அன்பு இருந்தது. அவன் பிள்ளை மீது பாசமும் ஆசையும் அடக்கமுடியாத அளவுக்கு ஏற்பட்டிருந்தன. 'முத் தையாப் பயல் என் கண்ணுக்குள்ளேயே நிக்கிறுன். அவனைப் பார்க்கணுமின்னு எனக்கு ஆசையாயிருக்கு' என்று அவர் அடிக்கடி புலம்புவார். அது ஏக்கமாக முற்றி விடுகிறபோது அவனைத் தேடி மகன் வீட்டுக் குப் போவார். பேரனைப் பார்க்க வேண்டும் என்பதற் காக அவர் எவ்வித அவமதிப்பையும் ஏற்றுக்கொள் ளத் தயாராக இருந்தார்.

போகிறவர் வெறும் கையோடு போகலாமா ? சீனி மிட்டாய், பொரி கடலை, பொருவிளங்காய், பூந்தி போன்ற — தனக்கு மிகவும் பிடித்த, தனது பைய னுக்கு அவனது சிறு வயசில் மிகுதியும் பிடித்திருந்த — தின்பண்டங்களை ஆசையோடு எடுத்துச் செல்வார். 'முத்தையாப் பயல் தான் மூனு நாலு வயசு என்று வளர்ந்து விட்டானே! தங்கச்சி பிறந்து, அதுக்கும் ஒன்றரை வயசு ஆயிட்டுது. பேபியாம் அதுபேரு. சுப்பம்மான்னு அழகா ஆச்சிபேரை வைக்கப்படாதோ? பேப்பி! எழவெடுத்த நாகரிகம் எனக்கு எங்கே புரியுது?' என்று அவர் அலுத்துக்கொள்வது உண்டு.

நாகரிகமும் பணமும் உத்தியோகமும் படிப்பும் பல பேர்களிடமுள்ள மனிதத் தன்மையை வறளடித்து விடுகின்றன என்பதையும் அந்த அப்பாவி மனிதர் புரிந்து கொள்ளவில்லை, அதை உணரும் ஆற்றல் இருந்திருக்குமானல், அவர் வரவேற்பு இல்லாத வீட்டுக்கு — அவரை வெறுத்த மகனும் மருமகளும் வாழ்ந்த இடத்துக்கு — ஓடி ஓடிப்போவாரா ?

காலப்போக்கில், மோகன் என்கிற சிறுவனுக்கு அவரிடம் ஒரு விசேஷமான பற்றுதல் ஏற்பட்டுவிட் டது. அவனுடைய தந்தையிடம் அவனுக்கு ஒருவித பயம் இருந்தது. அவர் குழந்தையிடம் அன்பு காட்டினுலும், அவன் நன்கு வளரவேண்டும்-உயர்ந்த பண்புகளுடைய உத்தமக் குழந்தையாய், உதாரண புத்திரனுய், லட்சியம் மகனுக வளரவேண்டும் — என்ற ஆசையோடு கண்டிப்பாகவும் நடந்து கொண் டார். அவர் பழகிய இடங்களிலும் அவன் ஒழுக்கத் தோடும் கட்டுப்பாடுகளோடும் அடங்கி ஒடுங்கியும் தான் பழகவேண்டிருந்தது. ஆனல், தாத்தா எனும் அதிசய மனிதரோ அவனுக்கு சகலவிஷயங் களிலும் தாராள உரிமை கொடுத்து விடுவார். அவரும் அவனேடு சமமாக- விளையாட்டுப் பிள்ளை மாதிரி — பழகுவார். சிரித்து விளையாடுவார். கதைகள் சொல்லு வார்.

அவர் அவ்வாறு பழகுவதை செல்வகுமார் கண்டு விட்டால், தன் தந்தையைக் கண்டிக்கத் தயங்கமாட் டார். 'சின்னப் பிள்ளைகளோடு இப்படியா பழகுவது? அவனை நீங்கள் கெடுத்துக் குட்டிச்சுவராக அடித்து விடுவீர்கள் போலிருக்குதே !' என்று சிடுசிடுப்பார்.

பெரிய பிள்ளை பேரன் மீது கொண்டிருந்த பாசம் தான் அவரை மனம் ஒடிந்து வேதனை அடையாத வாறு பாதுகாத்தது. பேரனை அடிக்கடி காணமுடியா விட்டாலும், அபூர்வமாக எப்பவாவது பார்த்து மகிழ் வதை அவரால் நிறுத்திக் கொள்ள முடியவில்லை.

மருமகள் அவரைக் கண்டு முகம் சுளித்தாலும், அவர் செயல்களை நினைத்து முனகினுலும், முன்போல் வெடுவெடுத்து எரிந்து விழுவதில்லை. காரணம், அவள் கவனம் எல்லாம் அவளுடைய அருமை மகள் பேபி மீது படிந்துவிட்டது தான். பேபி எனும் கைக்குழந் தையைத் தூக்கி வைத்துக் கொண்டு கொஞ்சுவதிலும் சிராட்டிச் சிங்காரிப்பதிலும் அவள் அதிக அக்கறை காட்டி வந்தாள். மகன் தனக்கு அநாவசியமான தொந்தரவு கொடுக்காமல் இருந்தால் போதும் என்ற நினைப்பு அவளுள் ஊசலிடுவது வழக்கம்.

ஒரு சமயம் தாத்தா சுடலைமுத்துப் பிள்ளை அன் பினுல் செய்த காரியம் அவரையும் பேரனையும் பிரித்து விட்டது. அப்படி முடியும் என்று அவர் எண்ணவே இல்லை. அவரது மனசாட்சிக்குப் பொதுவாக அவர் தவறு எதுவும் செய்யவில்லை.

பெரியபிள்ளை பேரனைப் பார்க்க வந்திருந்தார். அன்று செல்வகுமார் எங்கோ வெளியூர் போயிருந்தார். தொல்லையாய் விளங்கிய மோகன் சிறிது நேரம் தன்னை பாடாய்படுத்தாமல் சும்மா விட்டிருந்தால் போதும் என்று அவனுடைய தாய் எண்ணிக்கொண்டிருந்தாள். அதனுல், பையன் தாத்தா கூடவே சுற்றுவதை அவள் கட்டுப்படுத்தவில்லை.

அப்போது மோகனுக்கு ஐந்து வயது. அவனைத் தூக்கிக்கொண்டு. 'திருவிழா பார்த்துவிட்டு வரலாம்' என்று ஊர்சுற்றக் கிளம்பினுர் தாத்தா. அம்மன் கோயிலில் தசரா விழா நடைபெறும் காலம். ஆகவே, வேடிக்கைகளுக்கும வேஷங்கள் விளையாட்டு களுக்கும் குறைவில்லை.

எல்லாமே சிறுவனுக்குப் புதுமையாக இருந்தன, அவன் ரசித்து மகிழ்ந்தான். அதைப்பார்த்து தாத்தா மிகுந்த ஆனந்தம் கொண்டார். அவர்கள் குடை ராட் டிலும், ஊஞ்சல் ராட்டிலும் ஏறி, ஆடி, மகிழ்ந்தார்கள். புலிவேஷம், காளி வேஷம் எல்லாம் பார்த்தார்கள்.

சாக்லெட்டும் பிஸ்கட்டும் தின்று அலுத்திருந்தது அவனுக்கு. திருவிழாக்கடையில் தாத்தா வாங்கித் தந்த 'சீனிக்குச்சி'யும் 'சம்மாளிக்கெட்டை'யும் 'சவ்வு மிட்டா'யும் அற்புதப் பொருள்களாக ருசித்தன. நேரம் போனதே தெரியவில்லை இரண்டுபேருக்கும்.

அவர்கள் வீடு திரும்பும்போது சாயங்காலம் ஆகி விட்டது. இதற்குள்ளாக செல்வகுமார் வந்துவிட்டார். சரோஜாவும் 'பிள்ளையைக் காணோமே? எங்கே போனான்? இவ்வளவு நேரமாகவா வீட்டுக்கு வராமல் இருப்பது?' என்று முணுமுணுத்தபடி வாசலுக்கும் உள்ளுக்குமாக அநேக தடவைகள் நடந்துவிட்டாள்.

இந்த எரிச்சலோடு, வீடுதிரும்பிய பையன் காட்சி தந்த கோலம்வேறு கோபத்தைக் கூட்டியது. 'சவ்வு மிட்டாய் தின்ற வாயும் பல்லும் செக்கச் செவேலென்று இளித்தன. கையில் சீனி மிட்டாய் வேர்வையில் ஊறிப் பிசுபிசுத்துக்கொண்டிருந்தது, 'சாயவேட்டி' என்று அழைக்கப்படுகிற சிவப்பு நிறத்துணி 'வல்லாட்டாக' அவன் கழுத்தைச் சுற்றிக்கிடந்தது. அவன் சந்தோஷத்தின் உயிர்ச்சித்திரமாகத் திகழ்ந்தான்,

நாகரிகத்தில் நாகரிகத்தோடு கூடவே பிறந்து வளர்ந்தவர்கள் போல் நம்பி வாழ்ந்த — தங்கள் குழந்தைகளையும் நாகரிக அவதாரங்களாக வளர்க்க விரும்பிய — செல்வ குமாருக்கும் சரோஜாவுக்கும் ஆத்திரமும் வெறுப்பும் பொங்கி எழுந்தன. பெரிய பிள்ளையை என்ன செய்யமுடியும் அவர்களால்? ஆகவே, அவர்கள் குமுறலும் கொதிப்பும் சிறு பிள்ளை மீது பாய்ந்தன.

'எங்கேடா போனாய் இவ்வளவு நேரமும்?' என்று உறுமினார் தந்தை. இது என்ன வேஷம்? 'இது என்ன துணி?' எனச் சீறினாள் அன்னை.

தாத்தா பையனை கீழே இறக்கிவிட்டதும், அவள் அவனை வேகமாக இழுத்து, கழுத்தில் கிடந்த சாய வேட்டியைப் பறித்து வாசலில் வீசி எறிந்தாள். 'கண்டது கழியதுகளை எல்லாம் தின்னாதேயின்னு சொல்லியிருக்கிறேனா இல்லையா? வீட்டிலே பிஸ்கோத்தும் சாக்லட்டும் இருக்கையிலே இந்தத் தரித்திரமெல்லாம் என்னத்துக்கு?' என்று கத்தியபடி, அவன் கன்னத்தில் பளீர் பளீரென்று இரண்டு அறை கொடுத்தாள்.

இத்தகைய வரவேற்பை எதிர்பார்த்திராத சிறுவன் திடுக்கிட்டுப் பதறிப்போனான். திறந்த வாயிலிருந்து அழுகை ஒலி வெளியே வருவதற்கே சிறிது நேரம் பிடித்தது. 'கத்தாதே! வாயை மூடு!' என்று முதுகில் இரண்டு அடிகள் வைத்தாள் தாய். தாய் சில சமயங்களில் பேய் ஆக மாறுவதும் இயல்புதான்!

சுடலைமுத்துப் பிள்ளையின் உள்ளம் வேதனைக் கடலாகி அலைமோதியது. 'பச்சைக் குழந்தையை ஏன் இப்படி அடிக்கணும்? அது என்ன செய்தது? நான் தானே கூட்டிப்போய், இதை எல்லாம் வாங்கிக் கொடுத்தேன்....' என்று தீனமாக மொழிந்தார்.

'எங்க குழந்தையை எப்படி வளர்க்கணுமின்னு எங்களுக்குத் தெரியும். பட்டிக்காட்டுக் கழுதை மாதிரி அது தலையெடுக்கப்படாது என்பது தான் எங்கள் ஆசை....' என்றாள் அவள்.

'நீங்கள் வந்து அவனை கெடுத்துப்போடுறீங்க. ஒருநாள் வந்து பார்த்துவிட்டு நீங்க போய்விடுறீங்க. அப்புறம் பத்து நாளைக்கு அவன் உருப்படாத கழுதையாகத் தான் நடந்து கொள்கிறான்....' செல்வகுமார் முகத்தைக்கடுமையாக வைத்துக்கொண்டு, உணர்ச்சி வறண்ட குரலில் பேசினார்.

பெரியவருக்கு உள்ளத்தினுள் எதுவோ முறிந்து சிதைவுற்றது போலவும், தமது வாழ்க்கையே அர்த்த மற்றுப் பாழாகிப் போனது போலவும் தோன்றியது. 'குழந்தையிடம் அன்பு காட்டுவதும் குற்றமா? நானா அவனை நாசமாக்கினேன்? நானா அவனை கெடுத்து விடுவேன்?' வேதனை நிறைந்த துக்கம் அவர் நெஞ்சில் கனத்தது, நீர் கண்களில் தேங்கியது. தான் அன்பாக வளர்த்த ஆசை மகன் இப்படி தன்னை தண்டிப்பான் என்று அவர் எண்ணியிருக்கமுடியாது. குழந்தையை மருமகள் அடித்தஅடி தன்னை நோக்கி வீசப்பட்ட அறையாகவே அவருக்குத் தோன்றியது. தனது பாசமும் பரிவும் தன்னுடைய பேரனுக்குக் கடுமையான தண்டனைகள் பெற்றுத்தரக்கூடும் என உணர்ந்துகொண்ட பெரியபிள்ளை மேலும் அங்கே நிற்க வில்லை. இனி அந்தத் திசையில் எட்டிப் பார்க்கவேண்டும் என்று விரும்பவுமில்லை.

'அவன் நன்றாக இருக்கவேண்டும். சுகமாக வாழ வேண்டும்!' என்றுதான் அவர் உள்ளம் பேசியது. கவிழ்ந்த தலையோடு, நீர் திரையிட்ட கண்களோடு, கனத்த உள்ளத்தோடு, சோர்ந்த நடையோடு அவர் நடந்தார். 'தாத்தா!' என்றொரு மென்குரல் எழுந்து தன் செவியில் இன்பத்தேன் பாய்ச்சாதா என்ற ஏக்கம் இருக்கத்தான் செய்தது. ஆனால், அந்த பாக்கியம் கிட்டுவதற்கு அவர் 'கொடுத்துவைத்திருக்க வில்லை'!

'நாளைக்கே இவனை கான்வென்ட் பள்ளிக்கூடத்திலே சேர்த்துவிடவேண்டியதுதான். இல்லையென்றால் இவன் உருப்படமாட்டான்!' என்று மோகனின் தாய் உறுமிய குரல் தான் அவரை துரத்தியது.

சோகப் பெருமூச்செறிந்தவாறே தனி வழி நடந்தார் பாசத்தின் சுமையால் அழுத்தப்பெற்ற பெரியபிள்ளை. ★



# திருகுவலி

★

"ஸ்ரீரா"

அடுத்த வீட்டுக் கோனாரோடு ஒரு வருஷமாகத் தகராறு. தகராறு என்றால் நேரே ஒருவருக்கொருவர் அடா புடா என்று சண்டை போட்டுக்கொள்ளும் ரகத்தைச் சேர்ந்ததல்ல. மனசுக்குள்ளே நெருப்பு போல் காயும் ஒரு வினை.

காரணம் ஒன்றுமில்லை. ஒன்றுமில்லை என்றால் பூஜ்யமென்று எண்ணக்கூடாது. பூஜ்யத்திலிருந்து ஒன்றும் வராது என்று கணக்கர்கள் சொல்லுவர். அப்படி ஒன்றும் பெரிய விஷயமில்லை என்று பொருள். அடுத்த மனை கோனாருடையது பெரிய மனையில் முக்கால்வாசி திறந்தவெளி-மண். மனையின் பின்கோடியில் ஓட்டு வீடு. அதிலிருந்து ரேடியோ நாள் முழுவதும் அலறிக் கொண்டிருக்கும். ஹைரோடுக்கும் மனைக்கும் இடையில் மழைவந்தால் தவிர ஓடாத சாக்கடை.

கோனாருக்கு எட்டு எருமைகள், நாலு பசுக்கள் உண்டு. எட்டு எருமைகளும் சீமை எருமைகள். தீனி சரியாகப் போடாவிட்டாலும் எருமைகள் இளைப்பதில்லை போலிருக்கிறது. கன்றில்லாமல் பால் கறக்கலாம். பசுவைப்போல் வைக்கோலடைத்த ஏமாற்றுக் கன்றை அது எதிர்பார்ப்பதில்லை. முலைக்காம்பில் கையை வைத்துப் பீச்சினால் பால் கொட்டும். கோனார் பாலுக்கு ஜலம் விடுவதில்லை என்று சொல்லுவார். அமாவாசை நாள் கிழமைகளில் பகல் பன்னிரண்டு மணிக்குக் குளித்து பட்டுக்கட்டிக்கொண்டு நெற்றியில் பட்டையாக சந்தனக்கீற்று வைத்துகொண்டு விரதமிருப்பார். அப்படி சேர்த்தாலும் 'ரெட் ஹில்ஸ்' பம்பு ஜலம் தான் சேர்ப்பாரே தவிர கண்ட கிணற்று ஜலத்தை சேர்க்கமாட்டார். விடியற்காலம் 3 மணிக்கு அடுத்தாற்போலிருக்கும் ஹரிஹர பவனுக்குப் பால் கறப்பதுடன் கோனாரின் வேலை துவங்கும்.

கோனாருக்கு ஒரே ஒரு பிள்ளை. கூடப்பிறந்தவர்கள் மூன்று பேர். ஒருவர் பிள்ளையார் சந்துக்கு, ஒருவர் ஹோட்டல்களுக்கு, ஒருவர் வீடுகளுக்கு என்று பிரிந்து வேலை செய்ய வசதி. பிள்ளை 'ஹைஸ்கூல் படிப்பு' முடிந்து இப்பொழுது பிரபலமாயிருக்கும் 'டெக்னிகல்' படிப்பில் சேர்ந்துவிட்டான். ஐந்து வருஷம் முடிந்ததும் ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கப்போகிறான் என்று கோனாருக்கு ரொம்பப் பெருமை.

காலையில் வேலையெல்லாம் முடிந்தபிறகு சுமார் 8 மணிக்கு எல்லோரும் பித்தளை செம்பை வைத்துக் கொண்டு பல்தேய்க்க உட்காருவார்கள். பல்தேய்க்கும் சப்தம் பல ச்ருதிகளில் பயங்கரமாகச் சுவர் தாண்டி வரும். ஒரு மணி தேசாலம் இந்த சப்தங்கள் காதைத் துளைக்கும். என் குழந்தை அந்த சப்தங்கள் இன்னினாருடையது என்று கணக்காகச் சொல்லிவிடுவான். பல்தேய்த்து முடிந்ததும் அஸோகபவனுக்கு இருபத்தைந்து இட்லி பன்னிரண்டு கப் காப்பிக்கு கோனார் மனைவியோ அல்லது அவர் தம்பி மனைவியோ போவார்கள்.

ரோடுக்கும் மனைக்கும் இடையே இருக்கும் ஓடாத பொதுச் சாக்கடையை ஒட்டி என் வீட்டுப் பக்கத்தில் ஒரு "ஸெஸ்பூல்" - ஆங்கிலத்தில் சொன்னால் அழுக்கு குறைகிறாற்போல் ஒரு எண்ணம் - வீட்டுக் கழிவு ஜலம் சேரும் தொட்டி ஒன்று உண்டு. அந்த ஜலத்தை தினமும் பஞ்சாயத்து வண்டி வந்து மொண்டுபோகும். ஸெஸ்பூலுக்கும் தெருச்சாக்கடைக்கும் இடையில் இருக்கும் இடம் கோனார் வீட்டுக்காரர்களுக்கு நடைபாதை. அதைத் தாண்டினவுடன் என் வீட்டு வாசற்படி. வாசற்படியை தினமும் காலையும் மாலையும் அலம்புவது உண்டு. காலையில் கோலம் போடுவதும் உண்டு. இந்த வாசற்படியை கோனார் வீட்டு மாடுகளும், சாணி அள்ளும் வேலைக்காரனும், ஹோட்டலுக்கும் கடைக்கும் போகும் நபர்களும் உபயோகிப்பதோடு கோனார் மாடு பிடிப்பது சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை வாசற்படி தாண்டி வலப்பக்கத்திலுள்ள சிமெண்டு தாழ்வாரத்தில் இரவு பன்னிரண்டு மணிவரை சப்தம்போட்டுப் பேசி அதை ஒட்டி இருக்கும் என் வீட்டு அறையில் தூங்கும் எனக்கு சுகத்தை உண்டாக்குவார்கள்.

என் வீட்டுக்கு இந்தப்பக்கத்தில் 'ஜோஸ்யர்' வீடு. அவர் ஜோஸ்யர் மாத்திரமில்லை. லக்ஷ்மி பூஜை, நவராத்திரி பூஜை என்று 'மிஸலேனியஸ்' ஸான பல காரியங்கள் செய்பவர். வயது அறுபதுக்கு மேல் இருக்கும். இரண்டு கால்களும் வசமில்லை. எழுந்திருந்தால் உட்காருவதும் உட்கார்ந்தால் எழுந்திருப்பதும் சிரமம். காஷாய வேஷ்டி, காஷாய அரைக்கை காலரில்லாத சொக்காய். வாயில் பேச்சு வராது. தடிப்பான குரல் மூன்று கீற்றாகப் பேசும். கண் விழிகள் சிவந்து பருத்து உருண்டு வெளியில்வந்திருக்கும். பிள்ளைகள் சம்பாதிக்கிறார்கள். கிரஹஸ்ததர்மத்திலிருந்து ஸன்யாஸ தர்மத்துக்கு வந்துவிட்டவர். தனக்கென்று தானே தனியாகச் சமையல் செய்துகொள்பவர். இரவு தெருச்சாக்கடையின் கரைமேல் 'கிருஷ்ணா' என்று வாய்விட்டுச்சொல்லி ஒரு தலையணை மாத்திரம் வைத்துப் படுத்துவிடுவார். ஒரு மணிவரை தூங்கமாட்டார். வெற்றிலை சீவல் புகையிலை நிறையப் போடுவார். மாசத்துக்கு இரண்டுதரம் வரட்டுப்புகையிலை பத்து பொட்டலம் வாங்கி, அதோடு சேர்ப்பதற்கு பன்னீர், வாசனைத்திரவியங்கள் இவைகளைத் தயார் செய்து இரவு சாவகாசமாக உட்கார்ந்து கொண்டு கலந்து டப்பாவில் அடைப்பார். இந்த சமயங்களில் பழனி, திருக்கழுக்குன்றம் ஸேவைகளைப் பற்றி அரட்டையடிப்பார்.

இந்த இருவருக்கும் மத்தியில் என் வீடு. நான் இரவு எட்டு மணிக்கு வெளிக் கம்பிக்கதவைப் பூட்டி,

உட்பக்கத்துப் பெரிய மரக்கதவை அடைத்துக் கொண்டி போட்டுவிடுவேன் காரியாலயத்திலிருந்து திரும்பியதும் பெரிய பெண்ணுக்குப் பாடம் நடத்து வேன். கோயிலுக்குச்சென்று திரும்பி, பூஜை அறையின் ஒரு மூலையில் சாப்பிட உட்காரும்போது அடுத்த இரு பெண்களும் புஸ்தக சகிதமாக வாசிக்க வந்து விடும். ஒரு மணி தேசாலம் என்ன சாப்பிடுகிறேமென்று தெரியாமல் பாடம் நடக்கும். பிறகு வாசற்பக்கம் வந்து கதவுகளை அடைத்தபின் ஈஸி சேரில் சாய்ந்து புஸ்தகம் பத்திரிகை இப்படி ஒரு மணி இரண்டு மணி தேசாலம் படிப்பு

ஃ ஃ ஃ

முதலில் கோனாரின் மாடுகளை விரட்டிப்பார்த்தேன். எருமைகள் தலையைத்தூக்கி மூக்கினால் 'பப்' என்று உறுமித் தங்கள் வேலையை ஏது கவலையுமின்றி கவனித்துக்கொண்டு போகும். பசுக்கள் உடம்பில் சீவனில்லாததால் எதையும் சட்டை செய்யாது. கோனார் வீட்டுப் பெண்பிள்ளைகளுக்குக் கோனாரைவிட கௌரவம் அதிகம். கோனாரைப்பார்த்தால் பழைய தமிழ் சினிமா புராண வில்லனைப்போலிருப்பார். பார்த்தவுடன் மார்பு படபடவென்று அடித்துக்கொள்ளும்

கோனாரின் சொந்தக்காரர் என் வீட்டுக்குப் பால் போடுகிறார். அவர் ரொம்ப சாத்வீகம். அவர் வாயிலாகச் சொல்லிப்பார்த்தேன். இட்லிக் கடைப்போக்கு வரத்தும், மாட்டுச் சாணமும் என் வீட்டு வாசற்படியை வழக்கம்போல் நாசம் செய்வது நிற்கவில்லை.

ஃ ஃ ஃ

ஒருநாள் திடீரென்று ஒரு ஆச்சரியமான சமாசாரம் நடந்தது. கோனார் காரியாலயத்துக்கு வந்துவிட்டார். தலைக்குமேல் கையைத் தூக்கி நமஸ்காரம் செய்தார். எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. நான் அவரோடு நேரடியாகப் பேசியதில்லை. நாற்காலி கொடுத்து உட்காரச்செய்தேன். கோனாரின் மூச்சு எதிரே நாலடி தூரத்தில் உட்கார்ந்திருந்த என்னை கிடுகிடுவென்று ஆடச்செய்தது.

"என்ன கோனாரே, விஷயம் என்ன? ஏது இவ்வளவு தூரம் ?"

"ஒண்ணுமில்லையுங்க .... ஒரு காரியம் ஆவுணம்"

"என்னால் என்ன காரியம் ?"

"சங்கிலியாபுரத்துலே ராசாங்கத் தோட்டத்துக்கு மாட்டுச் சாணம் போட 'டெண்டர்' கொடுத்திருக்கேன். 'டெண்டர்' எனக்கு வரணும்"

"எனக்கு அது சமாசாரம் தெரியாதே. அது வேறு ஆபீஸல்லவா ?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாதுங்க. எப்படியாவது நீங்க தயவுபண்ணணும்"

நான் சிறிது யோசனை செய்தேன். 'டெண்டர்' சமாசாரம் எங்கள் காரியாலயத்து மாடியில் கோடியில் இருக்கும் அதிகாரி பார்ப்பது. டெலிபோன் எடுத்துப் பேசினேன். கோனாரைத் தவிர வேறு யாரும் டெண்டர் கொடுக்கவில்லை.

"உங்க காரியம் நடந்துபோகும்."

"எப்படிங்க ?"

"போட்டி கிடையாது"

கோனார் மஞ்சள் வர்ணம் தடிப்பாக ஏறியிருந்த பற்களைத் திறந்து சிரித்தார். காதில் கடுக்கன் ஆடிற்று. கோனார் பல்தேய்க்கும் படலம் ஞாபகத்துக்கு வந்ததால் எனக்கும் சிரிப்பு வந்தது.

சந்தர்ப்பத்தை விடக்கூடாது என்று நான் என் காரியத்தை சாதித்துக்கொள்ள முனைந்தேன்.

"கோனாரே ... ..."

"சொல்லுங்க"

"உங்கள் மாடுகள், இட்லிக்கடைக்குப் போகும் நபர்கள், எல்லாரும் என் வீட்டு வாசற்படியை நாசம் செய்கின்றன. அதை உடனடியாக நிறுத்தவேணும். இரவில் என் வீட்டுத் தாழ்வாரத்தில் நீர் உட்கார்ந்து மாடுபிடிப் பேச்சு நடத்துவதை நிறுத்தவேணும். இன்றிலிருந்து இப்படி நடக்கவேணும்."

கோனார் கலகலவென்று சிரித்தார் என்று சொல்வதைவிட படபட வென்று நகைத்தார் என்று சொல்வதே பொருந்தும். நான் புருவத்தைச் சற்று சுருக்கி சற்றுக் கோபமாக இருப்பதுபோல் பாவனை செய்தேன்.

"கோவிக்காதிங்க. ஒரு விஷயம் சொல்லிடறேன். நச்சிபாக்கம் நாடார் நாளைக்கு பத்தரம் ரிஜிஸ்டர் பண்ண வருவாரு அப்புறம் நீங்க வாடகையை எங்கிட்டேதான் கொடுக்கணும்."

எனக்கு அடிவயிற்றைக் கலக்கியது. நச்சிபாக்கம் நாடார் என் வீட்டு சொந்தக்காரர். கோனார் என் வீட்டையும் வாங்கிவிட்டார். முகத்தை எப்படி வைத்துக்கொள்வதென்று தெரியவில்லை. தலையைக் குனிந்து கொண்டேன்.

"மாடு என்ன நாள் பூரவா போகுமுங்க? இட்லிக் கடைக்கும் காலையிலே ஒருவாட்டிதானே போவாங்க. நான் இனிமே மாட்டுத் தரகும் நடத்தறதில்லே. சரிதானுங்களே!"

கோனார் எழுந்து நமஸ்காரம் செய்து வெளியே சென்றார். நான் மாலை வீடு திரும்பியதும் சேதியை வீட்டில் சொல்லி வீட்டை காலி செய்ய ஏற்பாடுகள் தொடங்கினேன்.

# இதயம் இருப்பது ஏன்?

★

கோவி. மணிசேகரன்

இந்த உலகத்தில் தாய்மை மட்டும் வாழாவிட்டால் மனிதர்களெல்லாம் நாகரிகத்திற்குப் புதிய கற்பனை கற்பித்திருப்பார்கள். தாய்மையின் அன்பணைப்பில் வளராத எத்தனையோ பெயர்கள் இந்தத் தோரணையில் காட்சியளிப்பதை நாம் காணத்தான் செய்கிறோம். இவர்களில் சிலர் 'தந்தைமை'யின் சக்தியில் வளர்ந்து பெண்மைக்குப் புதுப்பொருள் கூறினாலும், பலர் பல விதமாகத்தான் காணப்படுகிறார்கள். இதனால் தான் நம்நாடு தாய்மை மகா சக்திக்குத் தலை வணங்குகிறது போலும்!

கோபாலன் ஒருவார மனக்கலக்கத்துக்குப் பிறகு அன்றுதான் திரைப்படத்துக்குச் சென்றான் ஆறுதலாக. அவனுக்குத் தன்னுடைய மகள் மீனாவின் உடல் குணமடைந்ததில் ஒரு நிறைவு தென்பட்டது. நாளைக்கு எப்போதும்போல் அலுவலகத்துக்குச் செல்ல விருந்தான். எனவே, மன அமைதியை நிலைக்கச்செய்ய அவனுடைய கால்கள் திரைப்படக் கொட்டகையை நோக்கி அழைத்துச் சென்றன.

வீட்டில் அவனுடைய மனைவி மங்களமும் அன்றுதான் நிம்மதியுடன் உணவு உண்டாள். குழந்தை மீனா அவள் வயிற்றில் பால் வார்த்தாள்.

பதினைந்து தினங்களாகக் குழந்தை மீனாவுக்குக் காய்ச்சல் கண்டு இருந்தது. காய்ச்சலில் அது ஒரு விதமான நச்சுக் காய்ச்சல். இரவென்றும் பகலென்றும் பாராமல் அது உருட்டிப்புரட்டி எடுக்கும். ஒரு மணி நேரத் தூக்கம் அயர்ந்து தூங்கவும் அது அனுமதிக்காது.

காலையும் மாலையும் கைதேர்ந்த டாக்டர் ஒருவர் வருவதும், போவதுமாக இருந்தார். அவரைப்பற்றி ஊரார் பலவிதமாய் பேசிக்கொள்வர். எப்படி இருந்தாலும் நல்ல கைராசிக்காரர் என்ற எண்ணம் மட்டும் எல்லார் மனத்திலும் நிரம்பி இருந்தது.

ஒரு வாரகாலமாகியும் குழந்தை மீனாவுக்கு உடல் குணமானதாகக் காணோம். கொதிப்பின் வேகம் அதிகரித்ததே யொழிய சிறிது கூடக் குறைந்ததாகக் காணோம். மங்களமும், கோபாலனும் மனமிடிந்து போனார்கள். அவர்களுக்கிருந்தது கறிவேப்பிலைக் கொத்து போல் ஒரே மகள். திருமணமாகிப் பத்தாண்டுகட்குப் பிறகு தோன்றிய ஒப்பற்ற செல்வம் அதுதான்! ஆகவே, அவர்களுக்கு மீனாவின் பேரில் இருந்த பாசத்திற்கு அளவு இருக்காது தானே!

கோபாலன் ஒரு வாரம் அலுவலகத்திற்கு விடுமுறை போட்டு விட்டான். அருகே இருந்து கவனிப்பதில் என்ன புதிய அமைதி கிடைத்துவிடுமோ? என்றாலும் மனம் கேட்காது அல்லவா? தான் பெற்ற பிள்ளை என்ற உணர்வு மட்டும் எல்லாத் தந்தைமார்களுக்கும் இயற்கையாகத் தோன்றுவதுதான். சிலருக்கு அதுவும் தோன்றுவதில்லை. ஐயத்தின் பேயாட்டம் எத்தனை பேர்களைத் தலை விரிக்கச் செய்திருக்கிறது!

மங்களம் எல்லாத் தெய்வங்கட்கும் பிரார்த்தனை செய்து கொண்டாள். தன்னுடைய வீதியில் எழுந்தருளியிருந்த வினைதீர்க்கும் விநாயகருக்கு நூறு தேங்காய் விடலை விடுவதாகவும் பிரார்த்தித்துக் கொண்டாள். போதாக் குறைக்கு நம்மைச் சாராத பல கடவுள்களுக்கும் பிரார்த்தனை செய்துகொண்டாள். தாய்மை மனம் அப்படி. அது தன்னுடைய குழந்தைகளுக்கும் இரங்கும்; பிறருடைய குழந்தைகளுக்காகவும் இரங்கும். இதனால், ஏழை எளியவர்களுடைய குழந்தைகளுக்குச் சோறு போட்டாள்; துணி கொடுத்தாள்; ஏன் காசு வேண்டுமென்று கேட்டவர்களுக்கும் கைகூசாமல் கொடுத்தாள். 'மாதா செய்யும் தருமம் மக்களுக்குத்தான்' என்ற மூதுரையைக் கேள்விப்படுகிறோம். தாய்மை சக்தி அவ்வாறானது. மூச்சுவிடும் சுமைதாங்கியல்லவா அது? ஆகவே சுமையின் பெருமையை அதனால் உணர முடியும்; உணரும்படியும் ஆண்டவன் உணர்த்தியிருக்கிறான் — உருவாக்கி இருக்கிறான்!

மேலும் ஒருவாரம் கழிந்த பிறகு குழந்தை மீனா சற்றே குணமானாள். அது கண்ட பெற்றோர்கள் கொஞ்சம் மனவலிமை பெற்றார்கள். தங்களுடைய ஒரே மகள் தேறிக்கொண்டாள். அவளுடைய முகத்தில் புன்னகை அரும்பிவிட்டது என்றதும் மனத்தில் ஒளி பரவியது. கண்களிலும் உறவின் உணர்வும் கவர்ச்சியும் படிந்து விட்டன.

மங்களம் கடவுள்களை எல்லாம் வாயார வாழ்த்திக்கொண்டாள், சொல்லிக்கொண்ட பிரார்த்தனைகளைச் செய்துமுடிக்க வேண்டும் என்று கணவனைக் கேட்டுக்கொண்டாள். ஏழை எளியவர்களின் குழந்தைகளுக்குச் செய்த தருமம் தலையைக்காத்தது என்று பூரிப்புடன் கூறிக்கொண்டாள். ஆனால் கோபாலன்...?

மதிப்பற்ற தன்மையில் உதட்டை நெளித்தான்.

“மங்களம்! நீ சொல்வது போல் இத்தனைக்கும் சக்தி இருக்குமேயானால் டாக்டர் படிப்பு வீணானதுதான். உடற்கூறுகளைப் பற்றிப் படித்த டாக்டருக்கு இல்லாத மகிமை, நீ கூறியவைகளுக்கு இருக்குமானால், உனக்காக நான் வருந்துகிறேன் மங்களம்! மீனாவைக் கவனித்த டாக்டருக்கு மட்டும் 'பீஸ்' இதுவரை ஐம்பது ரூபாய் ஆகியிருக்கிறது. கவனம்!”

சிரித்துக்கொண்டே கோபாலன் திரைப்படத்துக்குப் புறப்பட்டான். அவனுடைய சிரிப்புக்குரிய மூலம் அவனுக்குத் தெரியாவிட்டாலும் மங்களத்துக்குமா தெரியாது? ஆண்கள் ஒரே முறைதான் குழவிச் சிரிப்பில் மழலை பேசுகிறார்கள். ஆனால், பெண்கள் எத்தனை முறை இதனை அனுபவிக்கிறார்கள்! தம் வாழ்வில் ஒரு முறை; தமமால் பலமுறை!

திரைப்படக் கொட்டகையை அடைந்த கோபாலன் வழக்கம் போல் 'கியூ'வில் நின்றான். கையிலிருந்த ஆங்கில நாவலைப் பிரித்துக்கொண்டான், அந்த நாவலின் பெயர் ''பிச்சைக்கார விதி''.

வரிசை அநுமார் வாலைப்போல் நீண்டிருந்தது. 'டிக்கட்' கொடுப்பதற்கு இன்னும் அரைமணி நேரம் இருந்தது. அது ஓர் ஆங்கிலப் படம் — 'ஹௌ கிரீன் வாஸ் மை வேலி!'

கால்மணி நேரம் கழிந்தது.

அப்போது ''ஐயா!'' என்ற குரல் கேட்டு ஆங்கில நாவலிலிருந்து விடுபட்டான் கோபாலன். எதிரே எலும்பும் தோலுமாக ஒரு பெண், தன்னுடைய தோளில் குழந்தை என்ற பெயரில் ஓர் உருவத்தைச் சுமந்துகொண்டு நின்றாள். அவளுடைய தோற்றம், வறிய நிலைமையின் கேவலத்தை எடுத்துக்காட்டியது. கோபாலன் இத்தனையும் உன்னிப்பாகக் கவனித்தான். அந்தப் பிச்சைக்காரப் பெண், தன்னுடைய தோளிலே ஒட்டிக்கொண்டிருக்கும் 'விதி'யைச் சுட்டிக்காட்டிச் சொன்னாள்; இல்லை, கேட்டாள்.

''ஐயா! சாப்பிட்டு மூணு நாளாச்சு! குழந்தைக்கு மூச்சுப்பேச்சில்லாம ஜுரம காயுதுங்க. வயித்துக்குப் பால் வாங்கி ஊத்த ஒரு நயாபைசாகூட இல்லிங்க! உங்க புள்ளை குட்டிக்குத் தருமங்க! ஏதாச்சும் தருமம் செய்யுங்க, ஐயாவே!''

அவளுடைய கண்களில் நீர் மாலையிட்டது.

கோபாலனுக்கு எரிச்சல் வந்தது, ஆங்கில நாவலில் வரும் ஒரு பிச்சைக்காரியை அருமையான ஓர் இடத்தில் நிறுத்திவிட்டு, இந்தப் பிச்சைக்காரி சொன்னதைக்கேட்டதில் கோபம் போலும!

கடுகடுத்த பார்வையுடன் புறங்கையைக் காட்டிப் ''போ, போ!'' வென்று சமிக்ஞை செய்தான். அவளும் கண்களை துடைத்துக்கொண்டு அடுத்தவரை அடுத்தாள்?

மேலும் கால் மணி நேரம் சென்றது.

''டிக்கட்' கொடுக்கப்படும்' என்ற அறிவிப்பைக் கொட்டகை மணி அலறி அறிவித்தது. வரிசையும் மிதமிஞ்சித்தீனியெடுத்த மலைப்பாம்பைப் போல் மெல்ல வளைந்து நகர்ந்தது.

கோபாலன் 'டிக்கட்' தரும் அறையை நெருங்கிக் கொண்டிருந்தான். அப்போது, ''சார்!'' என்ற குரல் பின்புறமாக இருந்து கேட்டது. நாவலிலிருந்து விடுபட்டு நாசுக்காகத் திரும்பிப் பார்த்தான் கோபாலன்.

பக்கத்தில் நின்றிருந்த ஒருவர், பரிதாபமாக அவனை நோக்கினார்!

''சார்! எக்ஸ்க்யூஸ் மீ! சினிமாவுக்கு வரும் அவசரத்தில் ஓட்டலில் சாப்பிட்டுவிட்டுக் கொடுத்த நோட்டுக்கு அவன் தந்த சில்லறையைக்கூட எண்ணிப் பார்க்காமல் பாக்கட்டில் போட்டுக்கொண்டு வந்துவிட்டேன். நம்பிக்கைத்தான் காரணம். இப்பொழுது எண்ணிப்பார்த்தால் பதினேரு காசு குறைகிறது. ஐ, ஆம் சாரி! உங்க அட்ரஸ் சொன்னா, நீங்க தருகிற பதினெரு காசை நாளைக்கு நானே வந்து திரும்பக் கொடுத்துவிடுகிறேன்!''

அந்த மனிதர் மென்று விழுங்கி இப்படிக்கூறிக் கொண்டே 'டை'யின் சுருக்கை இறுக்கிக்கொண்டார். இதைவிடத் தூக்கு மாட்டிக்கொண்டு தொங்கலாம் என்ற அர்த்தமோ, என்னமோ?

கோபாலனும் சிரித்துக்கொண்டே, ''நாட் நெஸஸ்ஸரி!'' என்று கூறிச் சில்லறையைக் கொடுத்தான். அந்த மனிதரும் ஒரு ''தேங்க்ஸ்'' சொன்னார்,

படம் முடிந்தது.

கோபாலன் வீடு திரும்பிக்கொண்டிருந்தான். அவனுடைய மனம் அந்த மனிதரை எண்ணிப்பார்த்தது. சிரித்தது.

அத்துடன் குழந்தையின் பசிக்காகத் தவித்த பிச்சைக்காரியையும் எண்ணிப் பார்க்கத் தவறவில்லை; நிகழ்ச்சியை மனிதன் மறந்து விடலாம் என்று முயன்றாலும், எண்ணம் மனச் சாட்சியின் கதவங்களைத் தட்ட நீண்ட கரங்களைப் பெற்றிருக்கிறதே!

தன்னுடைய மனைவியிடம் மட்டும் நடந்த நிகழ்ச்சியைச் சொன்னால் நிச்சயம் கடிந்துக் கொள்வாள். 'இறைவனும் மன்னிக்க முடியாத குற்றம்' என்று வேதாந்தம் சொன்னாலும் வியப்பதற்கில்லை என்று மனத்துள் முனகிக்கொண்டான்.

திடீரென்று மழை பிடிக்கத் தொடங்கி விட்டது. கோபாலன் ஓடியும ஒதுங்கியும் எப்படியோ ஒருவாறு வீட்டையடைந்தான். அவன் வீட்டை அடைந்ததும் கைக் குட்டையால் தலையைத் துவட்டிக் கொண்டு தெரு வாசற் கதவைத் திறந்தான். அடுத்து அவன் கண்ட காட்சி?

மங்களம் தெரு நடையில் ஒரு பிச்சைக்காரியின் குழந்தைக்குப் 'பார்லி' கஞ்சியைக் கொடுத்துக் கொண்டிருந்தாள். கோபாலனுக்குப் புரிந்து விட்டது. திரைப்படக் கொட்டகையில் கண்ட அதே பிச்சைக்காரிதான்!

ஒருவாறு ஒதுங்கியவண்ணம் வீட்டினுள் நுழைந்தான். மங்களமும் அவனைப் பின் தொடர்ந்தாள். மீனா கட்டிலில் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

''என்ன மங்களம், அது?''

"பாவம்! யாரோ பிச்சைக்காரப் பெண்! குழந்தைக்குக் கடுமையான காய்ச்சல் கண்டிருக்கிறது. மழையோ இரக்கமில்லாதவர்கள் நெஞ்சம் போல் கடுமையாகக் கொட்டுகிறது. அதனால் தங்க இடம் கொடுத்துக் கொஞ்சம் கஞ்சியும், சோறும் கொடுத்தேன். நம்ம செய்யற தருமம், நம்ம பிள்ளைகளுக்கு!"

மங்களம் இவ்வாறு கூறியதும், கோபாலன் ஏதும் பதில் சொல்லாமல் உணவை முடித்தான். அதற்கப்புறம் எதைப்பற்றியும் அவன் கேட்கவில்லை. மூளையில் ஏதோ அறுவை நோய்த் துன்பம் கண்டாற் போல் அரிக்கத் தொடங்கியது. நேரே படுக்கைக்குச் சென்றான். அவனுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. தான் செய்த தவறும், தன்னுடைய மனையாள் செய்த தருமமும் அவனை முழுக்க முழுக்க முற்றுகையிட்டு மூளையில் கொட்டமடிக்கத் தொடங்கின.

நேரம் சென்றுகொண்டே இருந்தது.

கடிகாரமும் பன்னிரண்டு முறை அலறியடங்கியது.

வெளியே மழை கொட்டு கொட்டென்று கொட்டியது. குளிரும் சற்றே அதிகரித்தது. பக்கத்தில் ஆசை மனையாள் நல்லபோர்வையிட்டு உறங்கிக் கொண்டிருந்தாள். செல்ல எழுந்தான் கோபாலன் அவனுடைய மனம் பிச்சைக்காரியை நாடியது.

அந்தப் பாழும் பிச்சைக்காரி, வீட்டின் நடைபாதையில் பரிதாபமாகப் படுத்துறங்கிக் கொண்டிருந்தாள். அவளுடைய வலக்கரம் முந்தானைப் போர்வையுடன் குழந்தையை அணைத்துக் கொண்டிருந்தது. குழந்தையோ குளிரால் அவதிப்பட்ட வண்ணம் தாய்ப் பாலைத் தாவிக் கொண்டிருந்தது.

கோபாலன் கண்ணில் எப்படித்தான் நீர் திரையிட்டதோ?

அவன் —

தன்பேரில் போர்த்திருந்த தேங்காய்ப்பூத் துண்டை எடுத்துப் பிச்சைக்காரியின் குழந்தைக்குப் போர்வையிட்டான். கண்களில் பதினொரு காசுகள் காட்சி தந்தன. ஆனால் இருதுளிக் கண்ணீரைத் தான் அவனால் சிந்தமுடிந்தது.

## மற்றொரு மேதை

ஹாஸ்யக் கதைகள் எழுதுவதில் இணையற்ற அமெரிக்க ஆசிரியராகிய மார்க் ட்வெயினை ஒரு பொதுக்கூட்டத்தில் பேசும்படியாய் அவரது நண்பர்கள் கட்டாயப்படுத்தினர். ஆகட்டுமென்று தெரிவித்துவிட்டு பேசுவதற்காக மார்க் ட்வெயின் எழுந்தார். அதற்கு முன் பொதுக்கூட்டத்தில் பேசி அவருக்குப் பழக்கமில்லை. பேசுவதற்காக மேடை யேறியதும் அவரது கையும், காலும் நடுக்கமெடுத்தது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு பேசத் தொடங்கினார். ஜூலியஸ் சீஸர் இறந்துவிட்டார்; ஷேக்ஸ்பியரும் மறைந்துவிட்டார்; நெப்போலியன் செத்துப்போனான்; ஆப்ரஹாம் லிங்கன் காலமானார்; எல்லோரும் இறந்துபோனார்கள். நானும் தேக அசௌக்கியமாய் இருக்கிறேன் என்று பேச்சைத் தொடங்கினார்.

இதனைக் கேட்டு சிரித்தார்கள், சிரித்தார்கள், சிரி சிரியென்று சிரித்தார்கள். ஒருவர் எழுந்துபோக வேண்டுமே. சிரித்த சிரிப்பால் கூட்டம் முடிந்தவுடன்கூட அவர்களால் எழுந்து நடக்கமுடியவில்லை.

## கேள்வி - பதில்

விக்டர் ஹ்யூகோ என்ற பிரஞ்சு நாவலாசிரியர் ஒரு புதிய நாவலை எழுதினார். அது வெளியானதும் அந்த நூல் விற்பனை எப்படியிருக்கிறதென்பதை அறிந்துகொள்ள ஆசைப்பட்டார். பதிப்பாளருக்குக் கடிதம் எழுதிப் பார்த்தார். எப்படி எழுதினாலும் தன்னுடைய ஆவலை அதிகமாகக் காட்டிக்கொள்ளாதவாறு எழுதமுடியவில்லை. யோசித்துப் பார்த்தார். முடிவாக பதிப்பாளருக்கு ஒரு கேள்விக் குறி (?) ஒன்றை மட்டும் ஒரு கடிதத்தில் போட்டு கையெழுத்து செய்து அனுப்பிவைத்தார். பதிப்பாளர் கடிதத்தை உடைத்துப் பார்த்தார். ஹ்யூகோவின் உள்ளம் அவருக்குப் புரிந்துவிட்டது. உடனே ஒரு கடிதம் எடுத்து ஆச்சரியக்குறி (!) ஒன்றைப் போட்டு, ஆச்சரியம் அத்தனை புத்தகங்களும் விற்றுவிட்டது என்பதை தெரிவித்தார், நூலாசிரியருக்கு ஏற்ற பதிப்பாளர் அல்லவா?

# எதற்காக ரேடியோ நாடகம்?

★

"சுகி சுப்பிரமணியன்"

நாடகம் எது? நான் சொல்லவேண்டுவது இல்லை. நாடகம் எதற்காக? அதையும் நான் சொல்லவேண்டுவது இல்லை. நாடகத்தினுல் வளர்ந்த திரை நாடகமான சினிமா எதற்காக? அய்யோ நான் சொல்லும் படியாக, அது இல்லையே. மேடை நாடகமும் திரை நாடகமும் குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட மக்களுக்குள் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்துள், டிக்கெட் வரையரைக்குள் ஏதோ சிலருக்காக நிகழ்ந்துகொண்டிருப்பது. மேடை நாடகமும் திரை நாடகமும் ஜனநாயகத்துள் பிறந்த கலையில்லை. ஜனநாயகத்துக்காக வாழும் கலையும் இல்லை. முடியரசர்களும், சர்வாதிகாரிகளும் ஆதிக்கம் செலுத்தும் காலத்திற்குத் தக்கபடியான கலைச்சான்றுகள் மேடை நாடகமும் திரை நாடகமும். ஜனநாயகத்தின் ஒரே கைக்குழந்தை ரேடியோ நாடகம்.

ஜனநாயகம் எல்லோருடைய வீட்டையும் தொடுவது; ஜாதி-இன-மத-நிற வேறுபாடு இல்லாமல் எல்லோரையும் ஓர் குலமாய் மதிப்பது. வான்வெளியும் வயல் வெளியும், கடற்கரையும், கம்மாக் கரையும், இமயப் பனிவரையும், தென்குமரி கலைக் கோவிலும் அங்கு இங்கு எங்கும் சமமாய் சமத்துவமாய் நினைக்கச் சொல்வது எது?

ரேடியோ நாடகம்!

நல்லதைச் சொல்வது கலை; நல்லவர்களைக் கூட்டி வைத்து நல்லதனமாகச் சொல்வது கலை; ஆனுல் இதென்ன முடியாட்சிக் காலமா? சர்வாதிகார ஆட்சிக் காலமா? நாலூருக்கும் நாலு இடத்திற்கும் கலையைச் சொல்வதற்கு. நாலு இலட்சம், நாலு கோடிப் பேர்கள் கலையை ரசிக்க வேண்டாமா? காரில் போகிறவன், காலார நடந்துபோகிறவன், ஆகாய கப்பலில் போகிறவன் மேலே, கீழே, உயரே என்ற எந்த எல்லையில் போகிற மக்களுக்கும் பயன்படுவது எது?

ரேடியோ நாடகம்!

இது நாடகங்களுக்குள் பெரிய செல்வம். நான் சொல்வது இருக்கட்டும். செல்வத்துள் செல்வம் எது? கண்ணுரக் காண்பது செல்வம் என்று வள்ளுவர் சொல்லியிருக்கிருரோ? வான் புகழ் வள்ளுவர் என்று புகழப்படுகின்ற வள்ளுவரே செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம், ரேடியோ நாடகம் சிறந்தது என்று பேசியிருக்கிருர். கண்ணுரக் காண்பன காட்சிகள். அவை இன்பங்கள்; காதாரக் கேட்பது தான் உயர்ந்த கல்வி; உயர்ந்த கலை.

மேடை நாடகம் உயர்ந்த கலைதான். ஆயினும் ரேடியோ நாடகத்துடன் ஒப்பிடும்போது அய்யோ ஒப்பிட வேண்டியிருக்கிறதே என்று வருந்துகிறேன். உப்பில்லாமல் கலக்கஞ்சி குடிப்பதும், உருவம் இல்லாமல் உள்ளங்களைத் தொட்டு நாடகம் ஆடுவதும் விந்தையாக இல்லையா?

மேடையிலும் - திரையிலும் வாட்ட சாட்டமான — உருட்சி திரட்சியான—செயலும் ஒய்யாரமுமான ஆண் - பெண்களை நடக்கவிட்டு ஓடவிட்டு அரிதாரமும் அழகுச் சாதனங்களும் பூசி மெழுகி, கதை செய்கிருர்கள்; மக்கள் மனத்தை காட்சிகளும் கவர்ச்சிகளும் இழுத்துக் கொள்கின்றன.

ரேடியோ நாடகத்துள் வாட்ட சாட்டம் இல்லை. உருட்சி திரட்சி இல்லை. ஒயிலும் ஒய்யாரமயிலும் இல்லை. இருப்பதென்னவோ குரல் ஒன்றுதான். அழகு ஆபரணம், நடை, பாசம் அனைத்தையும் காட்டுவதற்கு ஒரே சாதனம் குரல். எல்லா மோதல்களும் குரல் வழியாக, எல்லாக் காட்சிகளும் குரல் வழியாக, எல்லா வியப்புக்களும் குரல் வழியாக, குரலைத் தவிர ரேடியோ நாடகத்திற்கு அழகும் இல்லை அடித்தளமும் இல்லை. உருவத்தைக்கொண்டு உள்ளத்தைத் தொட்டு வந்த நாடக உலகத்துள், அருவத்தைக்கொண்டு உருவத்தை உண்டாக்க முயற்சி செய்தது எது?

ரேடியோ நாடகம்!

உருவத்திலும், இயற்கை செயற்கை அங்க அசைவு, கோப தாப, கண்-புருவம் யாவும் சேர்ந்து உண்டாக்க வேண்டிய உணர்ச்சிகள் - உணர்ச்சியின் மோதல்கள்- குரல் வழியாக வந்தே ஆகவேண்டுமானுல், அந்தக் குரல் வழியாக நாடகத்தத்துவங்கள் நடைபெறவேண்டுமானுல் எத்துணை கஷ்டம்! எத்துணை துயரம்! ஆயிரம் எத்துணை ஆயிரமாயிரம் மக்கள் அதனை அனுபவிக்க இயலுகிறது! மிகப்பெரிய மக்கள் கூட்டம் ஜன நாயக முறையில் அனுபவிக்கும் ஒரே நாடகம் எது?

ரேடியோ நாடகம்!

இருப்பினும் ரேடியோ நாடகம் தோன்றியகாலமோ அரை நூற்றுண்டு காலம் கூட இல்லை. கால் நூற்றுண்டு தான், தமிழ்நாடகத்தைப் பொறுத்தவரை இதன் வயது. வயதை வைத்து பலனையும் தகுதியையும் மதிப்பிடு செய்வது மிகத்தவறு என்பதை அறிவோம். ஆயினும் தவறுகளைச் செய்யும் போது மேடை நாடகங்களுக்கும், திரை நாடகங்களுக்கும் பரிசுகள் - பாராட்டுக்கள் கொடுப்பதைப் பார்க்கிருேம். ஜனநாயகத்தின் சக்திவாய்ந்த ரேடியோ நாடகத்தை ஏனே இன்று வரை பாராட்டிப் பதக்கங்கள் பாராட்டுக்கள் வழங்க முன்வருவார் இல்லை.

காரணம் என்ன தெரியுமா?

ரேடியோ நாடகம் என்று ஒலிக்கத் தொடங்கிற்ரே அன்று முதல் இன்றுவரை குறித்த காலத்தே தொடங்கி குறித்த காலத்தே நடைபெற்று வருகிறது. நம் வீட்டு முற்றத்து முல்லைக்கு மணம் இல்லை யென்பதைப்போல அது வீட்டுக்குள் வந்து விடுகிற சரக்கு. அதனுல் அதன் பெருமை தெரிந்தாலும் அதனைப் போற்றவேண்டுமெனத் தெரிவதில்லை—பாராட்டுச் செய்கிற கூட்டத்தினருக்கு இது தெரியவில்லை.

அடிக்கடி தோன்றி, எங்கோ சில மக்களுக்காக சில நாட்கள் நடந்துவிட்டு மறைகின்ற இனமான மேடை - திரை இரு நாடகங்களையும் அதன் அற்ப ஆயுள் காரணமாகப் போற்றுகிருர்கள். இடையருது ஒலிக்கும் இனமான ஒலி நாடகங்களைப் பற்றி எண்ணுவதற்கு நேரமில்லை. திடீர் வளர்ச்சி, திடீர் மறைவு இரண்டுவித நோயுமில்லாத, நித்திய உருவம் ரேடியோ நாடகம் !

ரேடியோ நாடகத்தின் சக்தியைவிட அதன் பயனையும் அதன் பண்பாட்டையும் சிறிது நினைவு படுத்துகிறேன்.

காலத்தோடு தொடங்கி காலத்தோடு வளர்ச்சி பெற்று கால் மணி நேரம் நடந்தாலும் கால் லட்சம் மக்களை மகிழ்விக்கிறது ! மிகச்சிறந்த மேடை நாடகக் கம்பெனி, மிகச்சிறந்த திரைக்கதை இரண்டும் சேர்ந்தாலும், தனித்தனியே மகிழ்வித்த மக்கள் தொகையைச் சணக்கெடுத்தால்... அது பரிதாபத்திற்குரிய கதை.

ஆனுல் ஒரு சந்தேகம்,

மக்கள் ஏன் ரேடியோ நாடகத்தைப் பற்றி அதிகமாகப் பேசவில்லை. மன மயக்கம் அடையவில்லை. காட்சி மயக்கம் இல்லாத காரணம் ஒன்று. செவிச் செல்வத்தின் அருமை தெரியாத காரணம் மற்ருென்று.

என் அனுபவத்தில் ஒன்று உணர்ந்திருக்கிறேன். வியாழக்கிழமை நாட்களில் அநேக ஆயிரமாயிரம் மக்கள் தத்தம் வேலைகளை முடித்துவிட்டு வீட்டிற்குள்வந்து நாடகம் கேட்கிருர்கள்! குழந்தைகள் - துணிக்கடை மிட்டாய் கடைக்குப் போவது இல்லை. சிறந்த நாடகங்கள் நடக்கும்போது வீட்டுக்குள்தான் ரசிகர்கள் இருக்கிருர்கள். இருக்க விரும்புகிருர்கள் என்னும் அனுபவத்தைக் கண்டிருக்கிறேன்.

ரேடியோ நாடகம், மேடை - திரை இரண்டிலிருந்தும் ரசிகர்களைத் திருப்திப் படுத்துவதில் மாறுபட்டது. திரைக்கும் மேடைக்கும் நாடகம் பார்ப்பதைவிட ஜாலியாக தமாஷாக சேர்ந்து உட்கார்ந்து கூடிப்பேசி அரட்டை அடித்துக்கொண்டு பொழுது போக்கத்தான் போகிருேம். ரேடியோ நாடகத்தை யோகி தவ நிலையில் உட்கார்ந்து அனுபவிப்பது போல அக்கம் பக்கம் திரும்பாமல் அடுத்தவருடன் அரட்டையடிக்காமல் கேட்டாக வேண்டும். செல்வத்துள் செல்வம் ஆயிற்றே. சிறிது கவனத்தை வேறு பக்கம் திரும்பினுல் கதை ஓடி விடும். ரேடியோவில் நடக்கும் கதையின் வேகம், கிண்டி மைதானத்தில் ஓடும் குதிரையைப் போல ஓடிக் கொண்டிருக்கும். இதன் காரணமாக அதிகபட்சம் ஒரு மணிக்கு மேலாக நமது மனத்தை ஒரு முகப்படுத்த முடியாமல் போய் விடுகிறது ! குறைந்த நேரத்திற்குள் நீண்ட மேடை நாடகங்கள் திரைக்கதைகளின் ரஸத்தைப் பிழிந்து ஊற்றித் தருவது தான் ரேடியோ நாடகம். நாற்பதாண்டு வாழ்க்கை அனுபவத்தை நான்கு மணி மேடையிலும், இரண்டு மணியில் திரையிலும் பார்க்கிற நாம், நாற்பது நிமிடத்தில் ரேடியோவில் கேட்டு நிறைவு பெறலாம்.

காரணம் தமிழ் மக்களுக்கு சுருங்கச் சொல்லி விளங்கவைப்பதில் எப்போதும் நம்பிக்கை உண்டு. சுருங்கச் சொல்லி, விளங்க வைப்பதும் ரேடியோ நாடகம். சுருங்கச்சொல்லி விளங்க வைப்பதில் நம்பிக்கையில்லாத ரசிகர்கள் மேடை திரை இரண்டையும் கால - அளவு காரணமாக வரவேற்பார்கள். மேலும் இசையைப் போல வற்றலை வருத்துக்கொண்டு, வடகத்தை தாளித்துக்கொண்டு ரேடியோ நாடகத்தைக் கேட்க முடியாது. ரேடியோ பெட்டிக்கு எதிரே அமர்ந்து நாடகம் முடியும் வரை கேட்டாக வேண்டும்.

ரேடியோ நாடகம் பல்லாயிரம் மக்கள் மனசைக் கவர்வதற்கு மற்ருெரு காரணம் இருக்கிறது. அது அவர்கள் வீட்டு வாசலில் வந்து நிற்கிறதா? இல்லை இதய வாசலின் அருகாக நிற்கிறது. நினைத்த மாத்திரத்தில் தொடர்பு கொண்டுவிடுகிருர்கள். மேடை - திரை இரண்டு நாடகங்களுக்குப் போகவேண்டுமானுல்... நாம் நமது பொருளாதார அந்தஸ்தை நினைவூட்ட வேண்டும். புடவை நாகரீகம், பூ பந்தல் நாகரீகம், பவுடர் பஞ்சாயத்து போன்ற அலங்கார வசதிகள் செய்து, கொட்டகைக்குள் போய் உட்காருகிருேம். நாம் உட்கார்ந்திப்பவை கல்லினுல் செய்த கரும்பாறைகள். ஆனுல் நம் வீட்டிற்குள் நாம் நமது இஷ்டப்படி நமக்கிஷ்டமான ஆசனங்களில் அமர்ந்து காரிலோ, விமானத்திலோ, கானகத்திலோ, கடலிலோ அமர்ந்து நமது இஷ்டப்படி நாடகத்தை கேட்கிருேம் !

இம்மட்டுமா ! ஜனநாயக நாடகம் என்ற பெருமையுடன் பெண்களும் - ஆண்களும்- குழந்தைகளும் கேட்கத்தக்கதாக அமைந்திருக்கிறது. பர்தா பெண்களும் நாடகம் என்ருல் என்ன என்பதை ரேடியோ நாடகம் வழியாகத்தான் அறிந்திருக்கிருர்கள். 90 வயதுப் பாட்டியுடன் 9 வயது பேரன் கேட்கலாம். தாய்தந்தையுடன் புது மணமான தம்பதிகளும் சேர்ந்து கேட்கத் தக்கது ரேடியோ நாடகம் ஒன்றுதான்.

மேடை திரை நாடகங்களைத் தனிமையாக ரசிக்க விரும்பி ஓடும் உள்ளங்களை நாம் அறிவோம். தனிமை விரும்பாமல் குடும்பத்தினர் அனைவரும் கூடிக்கேட்க நினைக்கவைத்த உணர்ச்சி தருவது ரேடியோ நாடகம்.

ரேடியோ நாடகம் ! இதனைக்காண சிரமம் இல்லை. செலவும் இல்லை. பச்சைக் கீரையைப் போல மலிவு; கீரையைப் போல சத்தும் உள்ளது. மலிவு காரணமாக இதனை அலட்சியம் செய்கிறவர்கள், நஷ்டமடைகிருர்கள். மிகவும் எளிமையான உருவம் ரேடியோ நாடகம் இனிமையின் வடிவமும் இதுதான். எளிய இடங்களில் தான் கடவுள் குடியிருப்பார்; கடவுள் எங்கு குடியிருப்பாரோ அதற்குத்தான் கலைக் கோயில் என்றும் சொல்லுவார்கள்; பகட்டு படுதா ஆடம்பரம் டம்பம் யாவற்றையும் கருணைமிக்க சான்ருேர்கள் கண்ணுரக் காண மாட்டார்கள். பூக்களிலே தாமரைக்கு மணம் குறைவு; பூக்களிலே அழகும் தாமரைக்கு குறைவு. அழகும் மணமும் குறைவானுலும் அங்கேதான் லட்சுமி

இருக்கிறாள். ரேடியோ நாடகத்துள் வரும் கலையான பூக்களுக்குள் தாமரை போன்றது.

கதை யொன்று புராணக் கதைதான். நமக்குத் தெரியும். மதுரையம்பதியில் பிரம்படிபட்ட சொக்கநாதர் வலி ஒவ்வொரு ஜீவன் முதுகிலும் விழ்ந்தது புராண காலக்கற்பனை.

ரேடியோ நிலையத்துள் எழும் 'அம்மா' என்ற ஒலி அண்ட பகிரண்டங்கள் அனைத்தும் பரவி ஏழை பணக்காரர் வீட்டுக்குள் எழுந்து, சாதிமத அரசியல் அகங்காரங்களை வென்று எங்கும் பரவி நிற்பதைப் பார்க்கிறோம். உலகத்தோடு உங்களையும், உங்களோடு உலகத்தையும் ஒருகணத்துள் இணைப்பது ரேடியோ நாடகம்.

நோயாளிகள், குழந்தைகள், வயோதிகர்கள், பருவ கன்னியர்கள் எவரும் விரும்புவது எவருக்கும் எட்டக்கூடிய கனியாக இருப்பது, ரேடியோ நாடகம் ஒன்றே. இது ஜனநாயகம் தந்த உருவம். தனியுடைமை, பணவுடமை போன்ற தத்துவங்களில் நம்பிக்கையுள்ளவர்களால் வளர்க்கப்படும் கலையன்று! எனவே பண்புக்கும் பொதுமைக்கும் என்றும் தொண்டுசெய்து கொண்டிருப்பது ரேடியோ நாடகம்.

யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்ற தத்துவத்தைத் தமிழ் மண்ணில் சொன்ன போது "யாதும் என் வீடு, யாவரும் என் நண்பர்" என்ற தத்துவத்தை வளர்ப்பது மேடை நாடகமா திரை நாடகமா!

ரேடியோ நாடகம் ஒன்று தான்.

இவ்வளவு அரிய சக்தியும், இவ்வளவு பரந்த ரசிக மக்களையும் தன்னகத்தே கொண்ட ரேடியோ நாடகம் இருக்கிறதே இதைநடத்துவது...

மெல்லிய நூலின் மேல் முரட்டு யானையை நடத்தி வந்து கயிற்றின்மேலே குட்டிக்கர்ணம் போடவைப்பதற்குச் சமம்.

ஆயினும் திருச்சி - சென்னை-பங்களூர்-திருவனந்தபுரம் - தில்லியில் நடக்கும் வெளிநாட்டு ஒலிபரப்பு கிழக்கு ஆசிய பரீட்சார்த்த ஒலிபரப்பு முதலான நிலையங்கள், தினம் தினம் கால் மணி முதல், ஒருமணிவரை நாடகங்கள் நடத்துகின்றன. நேரத்தில் பாகுபாடு இருப்பன போன்று, குழந்தைகளுக்காக, தொழிலாளருக்காக, பெண்களுக்காக, குடும்பம் முழுமைக்குமான நாடக வகைகள் நடத்தப்படுகின்றன. இவற்றின் தரத்தைப்பற்றி நமக்குள் விமர்சன ஏற்றத்தாழ்வு இருக்கலாம். ஆனால் இவை செய்த தொண்டுபற்றிய விபரங்களில் ஏகோபித்த அபிப்பிராயமே இருக்கும்.

கால் நூற்றாண்டில் பிறந்த புதிய இனமான நாடகத்தைத் தெரியாத மக்கள் மிகக்குறைவு. ரேடியோ நாடகம் கேளாதவர்கள் யாரேனும் இருந்தால் அவர்கள் மேடை நாடகத்திலும் - திரை நாடகத்திலும் ஈடுபட்டவர்களாக இருப்பார்கள்! அதாவது தொழில் செய்பவர்களாக இருப்பார்கள். மற்றையப் பொது மக்களுக்கு ரேடியோ நாடகம் என்றால் என்னவெனத் தெரியும்.

வீடு தோறும் கலையின் விளக்கம் என்பதை நிரூபிப்பது ரேடியோ பெட்டி. பெட்டி வேறு நாடகக் கொட்டகை வேறு அல்ல. வீட்டுக்கு வீடு கலையின் விளக்கமாக நாடகக் கொட்டகை இருக்கிற சான்றே போதும்!

ஜன நாயகம் போன்றும், இந்திய சுதந்திரம் போன்றும் சுலபமாக யாவருக்கும் கிடைக்கிற பொருள் ஆகையால் இதன் பெருமையை பலர் கூடி மாநாடும் கூட்டமும் போட்டுத் தெரிவிக்கவில்லை. இந்தியர்கள் குரலாய் காந்திஜி ஒருவரின் குரல் இருந்ததை போன்று நாடகங்களின் குரலாய் அமைவது ரேடியோ நாடகம் ஒன்றுதான்.

அதை விரிவு படுத்தினால் நாடகம் வரும்; கதை காட்சிப்படுத்தினால் மேடை நாடகம் தெரியும்; அதை திரைக்குள் அமைத்தால் திரைக் கதை ஓடும்.

ரேடியோ நாடகத்துள் இல்லாத பொருள் - வேறு நாடகங்களுக்குள் இல்லை. செவிச் செல்வத்தைவிட வேறு செல்வங்கள் வந்து உரைத்தால் நமது வழிதோன்றலான சிந்தனைச் செல்வர்கள் விரும்பமாட்டார்கள்.

வள்ளுவருக்கு எதிராக நாம் நிற்கமுடியுமா? என்றுமுள நாடக இனம் ரேடியோ நாடகம். வானம் தந்த வண்மை இதுதான். யாமறிந்த நாடகங்களுள் ரேடியோ நாடகம் போல இனிதாவதை எங்கும் காணோம்.

பாமரராய் ஊமையராய் பேசிப்பயன் என்ன? தே மதுர தமிழ் ஓசை தரும் ரேடியோ நாடகத்தை வளர்ப்போம் வாழ்த்துவோம்.

வானமளந் தனைத்து மளந்திடு
வண்மொழி ரேடியோ நாடகமே.

வாழ்க ரேடியோ நாடகம்!



# ஜல சமாதி

★

"மஹி"

"பரிசல்காரருக்கு ஆற்றிலேதான் சமாதி," "யானைக்காரனுக்கு யானையாலேதான் சாவு" என்ற பழமொழிகள் நல்லம்மாளின் விஷயத்திலும் பலித்து விட்டது. பொங்கிப்பாயும் "பொன்னியின் வற்றுமுகத்துப் பலியானதைக் கொண்டுவரப் போனவள் வரவேயில்லையாம்!' என்று சொன்னார்கள். நல்லம்மாளுக்காக இரண்டு சொட்டுக் கண்ணீர் சிந்தத்தான் வேண்டியிருந்தது.

நல்லம்மாள், நல்லவள், பரோபகாரி, சரளமான சுபாவமுள்ளவள், எவரையும் சட்டைசெய்யாத துணிச்சல்காரி.

நல்லம்மாள், கபடுசூது அறியாதவள். தன்னிடம் குறை இல்லாத காரணத்தால் எவரையும் லட்சியம் செய்யமாட்டாள்.

நல்லம்மாள், ஆறடி உயரமும் ஆணின் தோற்றமும் கொண்ட ஆஜானுபாகு, நாதியற்ற தனிமரம். நினைவு தெரியாத நாளில் எங்கேயோ வந்து ஒட்டிக்கொண்ட கணவன் என்ற கொழுகொம்பும் எப்படியோ நழுவி விடவும், சமூகத்தில் தனித்து விடப்பட்ட ஒரு கொடி.

நல்லம்மாள், சமூகத்தையே தனித்து நின்று எதிர்த்து, எத்தனையோ அநுபவங்களை ஏற்றுக் காய்த்துக் கரடுமுரடாகி விட்டிருந்தாள். நாற்பத்தைந்து வயதைத்தாண்டியவள்.

நல்லம்மாளின் உதவியால் உயிர்பிழைத்தவர்கள்- ஆம் வார்த்தைக்காக அல்லாது - உண்மையிலேயே உயிர்பிழைத்தவர்கள் எத்தனையோபேர். சில உயிர்கள்; பல உடல்கள்.

நல்லம்மாள், ஒரு நீர்மூழ்கி, நீச்சல் நிபுணி. இளவயதில் பொழுதுபோக்காக தண்ணீர் மொள்ளப் போகையில் தவலையைக் கவிழ்த்துப் போட்டுத் தண்ணீரில் தவண்டையடித்துப் பழகியவள். பொன்னியின் பொங்கும் பிரவாகத்திலும் அஞ்சாமல் அக்கரை சென்று திரும்பக்கூடியவள். அவள் போய்விட்டால் இனி ஆற்றில் அடித்துச் செல்லப்படுபவர்களின் கதி?

ஆம். நல்லம்மாள் திருச்சியில் கீழச்சிந்தாமணியில் காவிரியின் குறுக்கே கட்டப்பட்டிருக்கும் வண்டிப் பாலத்துக்கும், ரெயில் பாலத்துக்கும் இடையில் ஆற்றின் கரையில் குடிசை கட்டி வாழ்ந்து வந்தவள். என்ன காரணத்தாலோ இப்போதெல்லாம் சிந்தாமணி மைதானத்திற்குக் குடி மாறிவிட்டாள். அதுவும் அவளுடைய கணவன் மாரிமுத்து ஆற்றோடு போன பின்னர்தான் இந்த இடப்பெயர்ச்சி.

மறந்துவிட்டேனே; நல்லம்மாள் அந்த நாளில் ஒரு சுயம்வரம் நடத்தியல்லவா கல்யாணம் செய்துகொண்டாளாம், அவளே சொல்லுவாள். நான் பணியாற்றி வந்த மில்லுக்கு, நெல் அரைக்க வருவாள் நல்லம்மாள். அவளுடைய உருவத்தையும் வெற்றிலை குதப்பும் மணிபர்ஸ் வாயையும் பார்த்தால் அவசியம் சிரிக்கத்தான் தோன்றும். கொக்கு போலக் கொந்து நடை போட்டுக்கொண்டு நெல் சுமந்து வருவதே ஒரு நல்ல காட்சி. அவளைக்கண்டவுடன் "பிணக்காரி வந்துவிட்டாள்" என்று மனது சொல்லும். "பணக்காரி வந்துவிட்டாள்" என்று வாய் சொலலும். ஆம்! அவள் இப்போதெல்லாம் பணத்தில் அதிகக் கண்டிப்பாக நடந்துகொண்டுவந்தாள். அதையும் அறிந்துகொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

சென்ற வருஷம் ஆடியமாவாசையன்று என்னுடன் மில்லில் பணியாற்றிக்கொண்டிருந்த ஸ்ரீநிவாசன் என்ற நண்பர் மேலச்சிந்தாமணிக்குக் குளிக்கப் போயிருக்கிறார். தன்னுடன் கூட குழந்தைகளையும் குளிக்க அழைத்துப்போயிருக்கிறார். தில்லைநாயகன் பிள்ளை படித்துறைக்கு மேற்கே திருச்சியின் யமுனை வந்து கலப்பதால் அநேகமாகப் பலர் மேலச்சிந்தாமணிக்குத்தான் போவது வழக்கம். நண்பரும் அப்படியே போயிருக்கிறார்.

நண்பர் ஸ்ரீநிவாஸன் குழந்தைகளைக் குளிப்பாட்டி கரையில் நிறுத்தியிருக்கிறார், தான் முழுக எண்ணி அழுந்தி முழுகியிருக்கிறார். குழந்தைகளுக்கு விளையாட்டுக் காட்ட எண்ணி இன்னம் இரண்டு முறைகள் முழுக்குப் போட்டிருக்கிறார். ஒருமுறை, இருமுறை, மூன்றும் முறை நீருள் முழுகியவர் தலை தூக்கவேயில்லை. 'அப்பா வித்தை செய்கிறார்' என்று எண்ணிக் குழந்தைகள் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்திருக்கின்றன. முழுகிய நண்பர் தலை தூக்கவேயில்லை. படித்துறை நிறைந்து ஜனங்கள் குளித்துக்கொண்டிருந்தாலும் எவரும் ஸ்ரீநிவாசன் முழுகியதைக் கவனிக்கவில்லை.

அடுத்த துறையிலிருந்து யாரோ அலறியிருக்கிறார் "ஆள் போறது; தண்ணிரில் ஆள்" என்று. எட்டிப் பிடிக்கும் எல்லை தாண்டி ஒரு உருவம் நீரில் புரண்டுகொண்டிருந்தது. தெரிந்த உருவத்தை மீட்க யாரும் எந்த முயற்சியும் எடுக்க முடியவில்லை. பொன்னி புதுப்புனலுடன் பொங்கிப் பெருகி வரும்போது யார் தாம் துணிந்து இறங்குவார்கள்? பாலத்துக்கு இடையில் நிரந்தரமாக அமைந்துவிட்டிருந்த மடுவைப் பார்த்திருந்தவர்கள் தண்ணீரில் இறங்குவார்களா? கரையில் நின்றிருந்த குழந்தைகள் "அப்பா அப்பா" என்று கத்தியதைக் கேட்டு யார் என்பதை அறிந்துகொண்டு சிலர் ஸ்ரீநிவாசனின் வீட்டிற்கு செய்தி அறிவித்தார்கள். எனக்குச் செய்திவந்தது. இனிமேல் நான் என்ன செய்வேன்? ஸ்ரீநிவாசன் இறந்துவிட்டது சர்வ நிச்சய

மாகிவிட்டபோது, இனி ஆற்றில் அமுங்கிவிட்ட உடலைத்தான் மீட்கவேண்டும். எப்படி மீட்பது? ஆடி மாதம் பொன்னி நிறைபிரவாகமாக இருகரையும் தொட்டு ஓடிக்கொண்டிருக்கிறாள். எத்தனை அணைக் கட்டுகள் கட்டினாலும் பருவங்களில் அவள் நுரைத்துக் கொண்டும் சுழித்துக்கொண்டும் பிரவகிப்பதைப் பார்த்தால் எவர்தாம் தண்ணீருள் இறங்குவார்கள்? யாரைக்கொண்டு இந்த மீட்பு வேலையைச் செய்வது என்பதற்கு விடை சுலபத்தில் கையிலேயே இருந்தது. ஆம் நல்லம்மாள் தான்.

நேரே காவேரிப்பாலத்துக்கு அருகில் சென்று நல்லம்மாளைத் தேடினேன். அங்கேதான் காவேரியின் கரையில் அவள் குடிசை இருந்தது. குடிசைக்குள் அமர்ந்தபடியே காவேரியின் பூரண உருவத்தையும் பார்க்கமுடியும். பலகாலமாக நல்லம்மாள அங்கே தான் வசித்துவந்தாள். அங்கே வசித்துவந்ததற்கு, அவள் சொல்லும் காரணம் நம்மை மயிர்க்கூச்செரிய செய்யும்.

"பாவம்! யாரு பெத்த பிள்ளையோ இங்கேவந்து காவேரியாத்தாளுக்குக் கோபப்படுத்தி முழுகுறாங்க. அவுங்களெப் பார்த்தஒடனே காப்பாத்தலாம்னுதான், சாமி! ஆத்தாளின் கண்பார்வையிலே கெடெக்கேன்" என்று சொல்லுவாள், எத்தனை பரோபகார சிந்தனை. பொன்னியின் கோபத்துக்குப் பாத்திரமானவர்களை மீட்கும் தலைசிறந்த தொண்டு அவளுடையது. "அப்படி எத்தனை பேரைக் காப்பாத்தியிருக்கிறாய்?" என்று கேட்டுவிட்டால்போதும். அவள் ஒருபட்டியலையே தயார் செய்துவிடுவாள். அவள் சொல்லும் நபர்கள் இன்று திருச்சியில் மிகச்சிறந்தவர்களாகவோ, மிகவும் முதியவர்களாகவோ இருந்து கொண்டிருக்கிறார்கள். அதுவும் உண்மைதான் என்று எனக்குத்தெரியும். அப்படிப் பட்டவள் அத்தனை பரோபகாரம் செய்ய எண்ணிக் குடியிருந்தவள், காவேரிக்கரையைவிட்டு மைதானத்துக்கு ஏன் குடிபோகவேண்டும்? என்று எனக்குப் புரியவில்லை.

மேலும் நல்லம்மாள் காவேரிக் கரையில் குடியிருந்ததற்கு வேறு காரணமும் இருந்தது. அவள் வாழ்வு எப்படியோ ஒருவிதத்தில் காவேரி நதியுடன் சம்பந்தப் பட்டிருந்தது. அவள் பிறந்தது இதே காவேரியின் தென்கரையில் கீழச்சிந்தாமணியில்தான். தாய் தகப்பன்யார் என்று ஊகிக்கவும் முடியாதபடி ஒரு அநாதையாக் காவேரியின் கரையில் அவள் கிடந்தாள். அந்த நாட்களில் ஸ்ரீரங்கத்துக்கும் கம்பரசம்பேட்டைக்கும் பரிசல் இருந்தபோது, பரிசல் தள்ளிய செவந்தான் கண்டெடுத்து வளர்த்துவந்த பெண் தான் நல்லம்மாள். செவந்தானின் மனைவி செவந்தம்மாளுக்கும் குழந்தை குட்டி இல்லாத காரணத்தினால் ஆற்றோரம் கண்டெடுத்த பெண்குழந்தையான நல்லம்மாளைத் தன் குழந்தையாக எண்ணி வளர்த்துவந்தாள். கிழவன் செவந்தான் பரிசல் தள்ளுவதுடன், ஆற்றில் நீச்சல் நிபுணனும் கூட. ஆகவே காவேரியில் மூழ்கிவிடுபவர்களைக் கரையேற்றும் பணியைச் செய்துகொண்டிருந்தான், அதையொட்டியே நல்லம்மாளும் துணிந்து ஆற்றில் நீச்சல் பழகுவதை செவந்தான் தடுக்கவேயில்லை. எப்போதும் காவேரியில்தான் வேலையாக நல்லம்மாள் வளர்ந்துவந்தாள்.

நல்லம்மாள் பருவ வயதை அடைந்தபோது, கிழவி செவந்தம்மாள் ஆற்றில் தண்ணீர் மொள்ளப் போனசமயம் தடுமாறி ஆற்றில் விழுந்துவிட்டாள். அவளைக் கரைசேர்க்கும் முயற்சியில் செவந்தான் தோற்றுவிட்டான். தோற்றதன் பலன் அவனையே ஆட்கள் தேடவேண்டியநிலை வந்துவிட்டது. இப்படி ஒரேநாளில் நல்லம்மாளை ஆதரித்து வந்தவர்கள் இருவரும் போய்விட்டதும் நல்லம்மாள் தனித்துவிடப் பட்டாள்.

நல்ல வனப்பும், பருவமும், உழைத்து உரம்பெற்றிருந்த உடலும், கொண்ட நல்லம்மாள் சிகப்பாகவும் இருப்பாள். இந்த வயதிலேயே அவளிடம் ஒரு கவர்ச்சி இருந்ததென்றால் பருவத்தில் அவள் பலர் கண்களைக் கவர்ந்திருக்கக் கூடுமல்லவா? பலர் பலவிதமாக முயன்று நல்லம்மாளால் நல்ல பாடம் கிடைக்கப் பெற்றவர்களாய் திரும்பியிருக்கிறார்களாம். ஆனால் ஜட்கா வண்டிக்கார மாரிமுத்துவை அவளால் அப்படி அடித்துத் துரத்தமுடியவில்லை. ஆனாலும் அப்படியே அவனிடம் உடனே தன்னை ஒப்புக்கொடுத்துவிடவும் இல்லை. எத்தனையோ தடவைகள் புத்திகள் சொல்லியும் கேட்காமல் வந்து தொந்தரவு கொடுத்துக்கொண்டிருந்த மாரிமுத்துவை ஒழிக்கவே நல்லம்மாள் திட்டமிட்டிருக்கிறாள். மாரிமுத்து உடற்கட்டு உள்ளவன். அழகன். அவனுக்கு நீச்சல் தெரியும். ஆடிப்பதினெட்டு வந்துவிட்டால் ரெயில் பாலத்திலிருந்து "அந்தர்" அடிப்பான். என்றாலும், நல்லம்மாளுடன் போட்டியிடும் அளவுக்கு மாரிமுத்து நீச்சல் தெரிந்தவனல்லன். தனித்து நின்ற இளம்பெண் நல்லம்மாளின் பருவ எழிலைச்சூறையாட அவன் முயன்ற தவற்றுக்கு அந்த நல்லம்மாள் நல்ல பாம்பாகவே மாறி உயிரை சூறையாடத்திட்டமிட்டுவிட்டாள்.

ஒருநாள் முன் இருட்டில், தனித்திருந்த நல்லம்மாளை அணுகினான் மாரிமுத்து. காவலும், கதவும் இல்லாத இடத்திலிருக்கும் பெண்ணும் அப்படித்தானிருப்பாள் என்பது அவனதுஎண்ணம்போலும். தவறான நேரத்தில் தப்பாக ஒருவன் வந்து சிணுங்குவதை அவள் சமாளித்திருக்கிறாள்பாருங்கள். வேறே என்ன? உடனே காவேரியில் குதித்துவிட்டிருக்கிறாள், வந்த மாரிமுத்து அரண்டுவிட்டான். 'காவேரியில் விழுந்து இறந்துவிட்டாள்' என்று பயந்து கம்பிநீட்டியிருக்கிறான். மறுநாள் காலையில் அரை உடையுடன் காவேரியில் குளித்துக்கெண்டிருந்த நல்லம்மாளைக் கண்டபோது, "அது நல்லம்மாள்தானா அல்லது அவளுடைய பிசாசா" என்று சந்தேகப்பட்டிருக்கிறான்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர்தான் நல்லம்மாள் இனிமேல் தான் தனியாக இருப்பது தவறு என்று எண்ணித் தனக்குத் துணைதேட முற்பட்டிருக்கிறாள். பெரியவர்கள் இல்லாமல் ஒரு பெண்பிள்ளை எப்படி ஆள்தேர்ந்துத் திருமணம் செய்துகொள்வாள்? மாரிமுத்துவிடமிருந்து ஒன்று நிரந்தர விடுதலை கிடைக்க வேண்டும். அல்லது அவன் ஒழிக்கப்படவேண்டும். ஏமாற்றப்பட்ட மாரிமுத்து மீண்டும் மீண்டும் வந்து தொந்தரவு செய்யாமல் இருப்பான் என்பது என்ன நிச்சயம்? ஆகவே நல்லம்மாளின் மூளை வேலை செய்திருக்கிறது.

அதன்படியே ஒரு வீரப்போட்டியில் ஜயித்தால் மாரிமுத்துவைத் தான் மணப்பது என்று ஏற்பாடு செய்துவிட்டிருக்கிறாள். இதற்கு இரண்டொருகிழவிகள் முன்நின்று மத்யஸ்தம் பேசியிருக்கிறார்கள். அதன்படி ஆடி

மாதம் நிறை காவேரியில் நல்லம்மாளும் மாரிமுத்துவும ஆற்றை நீந்திக்கடந்து அக்கரை சென்று உடனேயே திரும்பி நீந்தி வரவேண்டும் என்பது போட்டி. இந்தப் போட்டியில் மற்றும் இரு இளைஞர்கள் கூடக் கலந்துகொண்டார்கள். அவர்களுக்கும் நல்லம்மாளின் வனப்பு 'பராக்' சொல்லி அழைத்திருக்கவேண்டும்.

ஆனால் போட்டியில் அவர்கள் பாதிதான் தேறினார்கள. அதாவது அக்கரை சேர்ந்தவுடன் சோர்ந்து நின்றுவிட்டார்கள். அவர்களுக்கு தன் உயிரின் மேல் நல்லம்மாளைவிட அதிகப்பற்றுதல் இருந்திருக்கிறது. மாரிமுத்துதான் திரும்பியும் நீந்திவந்திருக்கிறான். அவன் பாதி ஆற்றைத் தாண்டியிருக்கலாம். அதற்குள் நல்லம்மாள் கரையை அடைந்துவிட்டாள். ஆனால் மாரிமுத்துவின் தலையே வெளியில் தென்படவில்லை. அவ்வளவுதான்; 'மாரிமுத்து தன்னிடம் தவறாக நடந்துகொண்டுவிட்டதற்கு தண்டனை பெற்றுவிட்டான்' என்று நல்லம்மாளின் மனம் சொல்லியது. ஆனால் அவள் உள் மனத்துள் மனித தயை தலைதூக்கவும் யோசனை செய்யாமல் நீருள் பாய்ந்துவிட்டாள். பத்து நிமிஷங்கள்தாம். மாரிமுத்து நல்லம்மாளின் அரவணைப்பில் கரை சேர்ந்தான். ஆற்றங்கரையிலிருந்து மாத்திரம் இல்லை. அன்றிலிருந்து தனிமைக்கரையிலிருந்தும்தான். ஆமாம், கைபிடித்துவிட்ட காரணத்தினால் நல்லம்மாளும் மாரிமுத்துவும் வாழ்வுக்குத் துணையானார்கள். பருவத்துக்குத் துணையானார்கள். ஆனாலும் குடிசை மாத்திரம் இன்னம் காவேரிக்கரையில் தான் இருந்தது.

ஆற்றில் மூழ்கிவிடுபவர்களை உடனேயே எடுத்துக் காப்பாற்றும் பொறுப்பை அன்றிருந்து கைக்கொண்டாள் நல்லம்மாள். நல்ல பணி யென்று அனைவராலும் பாராட்டப்பட்டிருக்கிறாள்.

நாலைந்து வருஷங்களுக்கு முன்னர் மாரிமுத்துவுக்கு நல்லம்மாளின் மீது உள்ள ஆசை குறையவே. வேறொரு பெண்ணை நல்லம்மாளின் எதிரிலேயே கொண்டுவந்து வைத்துக்கொண்டு அக்கிரமமாக நடந்துகொள்ளவும், நல்லம்மாள் காளியாகிவிட்டிருக்கிறாள். அதன் பயன் மாரிமுத்து காவேரியோடு போய்விட்டான். அவன் எப்படிக் காவேரியில் மூழ்கினான் என்பது எவருக்கும் தெரியாது. முன்பு மூழ்கியவனைக் கைகொடுத்துக்காத்த தெய்வம், அப்படிக்கை பற்றிவிட்ட தோஷத்திற்காகவே அவனோடு வாழ்ந்து வந்த மனைவி, மாரிமுத்துவின் மனமாற்றத்தைக் கண்டு பலி வாங்கும் காளியாகிவிட்டாளா? இன்று வரையில் யாருக்கும் புரியாத புதிர்தான்.

மலர் போன்ற மெல்லிய மனத்தை உடைய பெண்ணைக் காலம், நிகழ்ச்சி ஆகியவை கடினமான பாறையாக மாற்றிவிட்டிருக்கிறது போலும். தன்னால் காப்பாற்றப்பட்டிருந்தவனையே பலி வாங்கிவிடுமளவுக்கு மாரிமுத்து எப்படி நடந்துகொண்டானோ? என்னவோ? இப்படியாகக் காவேரியுடனேயே தன் வாழ்வை ஒட்டிக்கொண்டுவிட்ட நல்லம்மாள் காவேரிக் கரையை விட்டு இன்று வேறு இடத்திற்கு மாறிவிட்டாள் என்பது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

∴ ∴ ∴

நல்லம்மாள் மில்லுக்கு நெல் அறைக்க வரும்போதெல்லாம் மில்லில் வேலை செய்பவர்கள் அவளைக் கேலி செய்வார்கள். "என்ன நல்லம்மா இந்த மாசம் ஆத்துலே யாரும் போகல்லியா?" "பரிசல் குத்தகை எடுப்பதுபோல நல்லம்மா ஆத்துலே பொணக்குத்தகை எடுத்துட்டுது" என்றெல்லாம் பேசுவார்கள். "ஆமய்யா கேலியாத்தான் இருக்கும். நாளெக்கி நீ ஆததுலே போயிட்டாக்கூட நான்தான் வந்து கௌப்பணும். நான் இல்லாட்டி ஆ றே நாறிப்போயிரும். ஹாம்மாம்." என்று பெருமையாகக் கூறுவாள் நல்லம்மாள்.

"சே! நீ இல்லாட்டி இன்னொரு பயமவன் கௌப்பரான். ஓஹ்ஹோ! இது வேறேயா" என்பான் மற்றொரு வேலையாள்.

"இந்தா நூறு ரூவாப் பந்தயங் கட்டறேன் எந்தப் பயமகனெயாச்சும் இன்னிக்கி ஆத்துலே எறங்கச் சொல்லு. எத்தனியோ மனிசம் மவன் மனிசனெல்லாம் வந்து இந்த நல்லம்மாகிட்டே தோத்துப் பூட்டாங்க. காவேரியாத்தா எனக்கு ஒரு வரங்குடுததிருக்கா. அவ எங்க தாயி. என்னெத்தவிர யாரு எறங்கினாலும் அம்புட்டுதான். பாத்துக்க. ஒரு சின்னப் பய என்ன? மாரிமுத்து என்ன? அவுங்களெக் காட்டியுமா? அவுங்களெயும் நான்தான் இளுத்தாந்து வெளியிலே போட்டேன்." என்பாள்.

"அது என்ன கதை?" என்று அவன் கேட்கக், கொஞ்சம் கொஞ்சமாக நல்லம்மாள் சொன்ன வரலாற்றைத்தான் முன்னர் எடுத்துச் சொல்லிவிட்டேனே? அந்த நல்லம்மாள் கடைசியில் சொல்வதுதான் என்னை அப்படிக் கவர்ந்திருந்தது. "எப்படியும் ஏம்பொளப்பு காவேரியில்தான் நடக்கணும்."

பொளெப்புக் குடுக்கர தாயிகிட்டேயே நிண்ணு பாத்துக்கிட்டிருக்கணும்ங்கர ஆசையும் தவிர யாராச்சும் விளுந்துடரதெப்பாத்துட்டா ஒடனே போயித் தூக்கிக் காப்பாத்தலாம் ஒதவியா இருக்குமேன்னு அம்மா கண்பார்வையிலே விளுந்துகெடெக்கேன். செத்தப்பரந்தான் காப்பாத்தணுங்கர கட்டாயமில்லியல்ல. கண்படாமெப் போனவங்கதாம்பாவம் போயிட்டாங்க. இந்த நல்லம்மா கண் பார்க்க யாரும் ஆத்துலே போவப்படாது. இப்படியாக ஒரு லட்சியவாழ்வு வாழ்ந்து வந்த நல்லம்மாள் ஆற்றின் கரையைவிட்டு கிரவுண்டுக்குக் குடித்தனம் போய்விட்டது எனக்குப் புரியவில்லை.

எத்தனைவிதமாக கஷ்டங்களோ. இந்த நாட்களில் மனிதனைத் தன்னுடைய லட்சியப்படியே வாழவிடாமல் எத்தனையெத்தனையோ உபத்திரவங்கள். ஒருவேளை முனிசிப்பாலிட்டி இடத்தை ஆர்ஜிதம் செய்துகொண்டது காரணமோ என்னவோ என்று எண்ணிப்பறந்தேன். நல்லம்மாளின் குடிசையை நான் நீண்ட நேரம் தேடவேண்டியதிருக்கவில்லை. சிந்தாமணியிலிருந்து கிரவுண்டுக்குப் போகும் வழியிலேயே நல்லம்மாள் இடுப்பில் தவலையுடன் வந்துகொண்டிருந்தாள்.

என்ன நல்லம்மா ஒன்னெத்தான் தேடியாந்தேன் எங்கே நீ காவேரியாத்தாளெ விட்டுட்டே.

பின்னே என்ன சாமி மனிசன் நன்னியில்லாதவன் மனிசங்களோடெப் பழகிப்பழகித்தாம் மனசு

மாறிடிச்சி. கண்பார்க்க இருந்தாத்தானே கப்ட்ட முன்னு கிரவுண்டுககு வந்துட்டேன். என்னெ எதுக்கு சாமி தேடினீங்க?

நம்ம மிசினுலே செவதலெயா ஒரு புள்ளெ இருந்திச்சு பாரு அந்தப் பிளளே இன்னிக்கிக் காலமே ஆத்தோடெ போயிரிச்சி. பாவம அது பொண்டாட்டி அளரதெப பாககச் சகிக்கல்லே. கொஞ்சம் சீக்கிரமா முளுச ஒடம்பெக் கொண்டாநதுடு. நல்லம்மாளுடன் பழகியதன் காரணமான சரளத்துடன் அதிகாரம் போலவே சொன்னேன்.

பணம் கொண்டாந்திருக்கியா சாமி. எறங்கி ஆளெடுக்க இருவது ரூவாக் குடுக்கணும். அதையும் முன்னடியே குடுத்துடணும். என்ன சரித்தானு பணத்தெக் கொண்டா ஒடனே எடுத்துக்குடுத்துடறேன்.

நான் எவளை மிகவும் நல்லவள் பரோபகாரி என்று எண்ணிக்கொண்டிருந்தேனே அவள் பேசிய வார்த்தைகள் என்னைத் திக்கு முக்காடச் செய்தன. எந்த சமயத்தில் எப்படிப் பேசவேண்டும் என்பதை அறியாதவளல்லள் நல்லம்மாள். ஏன் இன்று இப்படிக் கண்டிப்பாக பேரம் பேசுகிறாள் என்பது எனக்குப் புரியவில்லை,

என்னு நல்லம்மா இத்தினி கண்டிப்பு என்னெத் தெரியாதா நீ கேட்ட ரூவா இருபது என்ன மேலேயே தந்துடறேன். அவசரம்பாராமேக்கேக்கிறியே. சீக்கிரம் வாயேன்.

ஆமாம் சாமி காரியம் ஆறவரெக்கும் இப்படித்தான் சொல்வீங்க. பொணத்தெக் கண்டப்பறம் ஒங்களுக்கு ஒங்க துக்கம். எனக்குத்தரணும்னு யாருக்கு நெனெப்புவரும். தவிரவும் தண்ணியிலே முளுகறேன், மீண்டு வந்தாத்தானெ பணம். பாவிமவ கடனுடெ செத்துட்டாங்கற பேரு எனக்கு வேணும். பணம் கொண்டா கடனு வாங்கினதையெல்லாங் குடுத்துட்டு பாக்கியில்லாமெ தண்ணியிலே எறங்கறேன், என்று கண்டிப்பாகப்பேசினுள் நல்லம்மாள்

ரொம்பக் கண்டிப்பாத்தான் பேசறே.

கண்டிப்பு இலலாதெ போனு எம்பொழெப்பு என்னவாறது சாமி. காவேரிக் கரெயிலே காத்துக் கெடந்து தண்ணி குடிக்கறவன் எத்தினியோ பேரைச் சாகாமே கரையேத்திக் காப்பாத்தியிருக்கேன். உயிரோடே எடுத்துக்குடுத்ததுக்கு எந்தப்பயமவனும் நன்னி சொன்னதில்லே. ஏன் ஒருத்தனும் ஒரு நாலணுக் காசெக்கூடத் தந்ததில்லே. நான் ஒரு அஞ்சு நிமிசம் பாக்காமெ இருந்திருந்தா அதே ஆளுங்க பொணங் கெளப்பரத்துக்கு நூறுநூருத் தந்திருப்பாங்க. இந்தக் கருணை வேண்டாம். கண காணுமெப் போயிட்டா காசாவது கெடெக்கும். நமக்கும் நமக்கு நன்னி சொன்னுனுங்கர ஏக்கம் கொறெயும். அதுதான் கிரவுண்டுக்குக் குடிபோயிட்டேன்.

மனிசங்கள்ளாம் ஒரேமாதிரிதான் இருப்பாங்களா ?

எல்லாம் பாத்தாச்சு சாமி. மனிசன் எவனும் எல்லாமும் ஒரேமாதிரிதான். அவன் துக்கந்தான் அவனுக்குத் தெரியுது. சரி நான் குளிக்கப் போவணும் சீக்கிரம் பணம் கொண்டாந்தாக்க எனக்கு வெலே கொறெயும்.

எனக்கு நல்லம்மாளுடன் பேசவே பிடிக்கவில்லை. அவள் வியாபார ரீதியில் இப்படித் தர்க்கம் செய்ததை இப்போதுதான் கேட்டிருக்கிறேன். எத்தனையோ கருணை உள்ளம் கொண்டவள் என்று நான் எண்ணியிருந்த நல்லம்மாள் இப்படி இருதயமற்ற மரக்கட்டையாக எப்படி ஆனுள்? ஒருவேளை பிணத்துடன் சாவுடன் பழகிப் பழகி இப்படிக் கல்லாக்கிக்கொண்டுவிட்டாளோ என்று எண்ணினேன்.

அப்புறம் என்ன செய்வது? நல்லம்மாள் கேட்ட தொகையைக் கொடுத்துவிட்டு வேலையைத் துவங்கச் சொன்னேம. அவள் பாவம் நீருள் சென்று சென்று தலை தூக்கினுள். தில்லைநாயகன் பிள்ளைத் துறை வரையிலும் ஒன்றும் இல்லை. மயானத்தையடுத்து ஒரு உடல் கிடைத்தது. அது சமீபத்தில் மூழ்கிய ஸ்ரீநிவாசனுடையது அல்ல. வேறொரு இளைஞனுடையது. கடைசியில் சர்க்கார்பாளையத்துக்கு அருகில் ஸ்ரீநிவாசனுடைய உடல் கிடைத்தது.

தில்லை நாயகன் பிள்ளை படித்துறையில் கிடைத்த மற்றொரு உடல் காரணமாக நல்லம்மாளுக்கு இரண்டு பங்கு வரும்படி என்று எண்ணிக் கேட்டபோது திடுக்கிட்டுவிட்டேன்.

நாஞ்சொல்லல்லியாசாமி, மனுசனெக் கத்தி முனையிலே வெச்சுக் கேட்டாத்தான் மசியரான். காரியம் ஆனப்பரம் வந்து பாரு வழிக்கிங்கரான். அந்தப்புள்ளே சென்னப்பட்டணமாம். போலிஸ்காரங்க ஒடலே எடுத்துகிட்டாங்க. எடுத்துப் போட்டவளெப்பத்தி யாரு கவலெப்பட்டாங்க. எனக்கு அதனுலே ஒண்ணும் கெடெக்கல்லே என்றுள். அதன் பின்னர்தான் நல்லம்மாளின் மனம் கல்லானதுபற்றிய காரணம் எனக்குப் புரிந்தது. துன்பத்தில் நிறுத்திக் கேட்டால் எதையும் கொடுத்துவிடும் மனிதன் அது தீர்ந்துவிட்ட பின்னர் மறந்துவிடுவதும் தவிர நன்றி கூட இல்லாமல் நடந்துக்கொண்டால் மலர் இதயம் கல்லாகாமல் என்னசெய்யும்.

நல்லம்மாள் எப்படிப் போனுளாம் என்று கேட்டேன். சமீபத்தில் அவள் கொண்ட கொள்கையை மீறி ஒரு உயிரைக் காப்பாற்றப்போன இடத்தில் தன்னை ஆற்றுக்கு அர்ப்பணித்துக்கொண்டாள் என்றுர்கள். ஆற்றில் விழுந்தவன் பிழைத்துக்கொண்டான். ஆனுல் காப்பாற்றப் போன நல்லம்மாள் தான் போய்விட்டாளாம். உடல் கிடைத்ததாமாம் என்று கேட்டேன்.

எட்டு நாட்களாகின்றன. நல்லம்மாளின் உடல் கிடைக்கவில்லையாம் என்றுர்கள்.

நல்லம்மாள் ஆற்றங்கரையில் வாழ்வைத் தொடங்கி அங்கேயே வாழ்ந்து ஆற்றிலேயே ஜல சமாதி ஆகிவிட்டாளா என்றது வாய்.

———————

# ஏது கதை?

★

"மாயாவி"

கதைகளில் மனிதருக்கு உள்ள விருப்பம், மனிதகுலம் தோன்றிய நாள்முதலே இருந்து வருகிறது என்று சொல்லலாம். இலக்கியங்கள் பிறக்கும் முன்பே, ஏன்? மனித குலம் எழுதவும், படிக்கவும் தெரிந்து கொள்ளுவதற்கு முன்பே, கதை கேட்பதுதான் சிறந்த பொழுதுபோக்காக இருந்து வந்திருக்கிறது. அத்தகைய கதைகளில் பல இன்று வாய் வழியாகவே சொல்லப்பட்டுத் தலைமுறை தலைமுறையாக நீடித்து, அச்சும், நூலும் வந்த பிறகு புத்தகத்தில் ஏறி அமர்ந்து கொள்ளும் பேற்றையும் பெற்றுள்ளன.

ஆதியில் தோன்றிய உலக இலக்கியங்கள் கூடக் கதை வடிவத்தில்தான் தோன்றின. பாரசீக மொழி, அராபிய மொழி, கிரேக்க மொழி, ரோமானிய மொழி, நம் நாட்டின் ஆதி மொழிகளாகிய வடமொழி, தமிழ் மொழி போன்றவற்றின் ஆரம்பகால இலக்கியங்கள் எவை என்பதை நினைத்துப் பார்த்தோமானால் இந்த உண்மை புலனாகும்.

ஆனால் கதைக்கு, குறிப்பாகச் சிறுகதைகளுக்கு இலக்கியத்திலே ஒரு உயர்வான இடம் கிடைத்தது சமீப காலத்தில்தான். அதாவது சென்ற நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து என்று சொல்லலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முன்னும் சிறுகதைகள் இருந்தன. ஆனால் அவை புதினங்களின் சுருக்கம் போல், எண்ணில் அடங்காத பாத்திரங்களுடனும், நிகழ்ச்சிக் கோவைகளுடனும் எழுதப்பட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சிறுகதை தனக்கென ஒரு தனி அமைப்பைப் பெற்றது.

சிறுகதை அத்தகைய தனி அமைப்பைப் பெறுவதற்கு உலகில் ஏற்பட்ட பல மாற்றங்கள் காரணமாயின. குறிப்பாக, செய்தித் தாள்கள் பெருகியமை, பத்திரிகைகளின் வளர்ச்சி, மக்களிடையே படிக்கும் ஆர்வம் அதிகரித்தது, நவீன வாழ்வில் ஏற்பட்ட விருவிருப்பு, ஆகியவற்றைக் கூறலாம்.

சிறுகதை மன்னரான எட்கர் ஆலன் போ ஒரு சமயம் சொன்னார்: "கடந்த சில வருஷங்களில் பத்திரிகை இலக்கியம் அமோக வளர்ச்சி அடைந்திருப்பது, இலக்கியத்தில் ஏற்பட்டுள்ள புதிய மாறுதலின் அறிகுறி ஆகும்; காலத்தின் வேகத்துக்கேற்ப தன்னை வளர்த்துக்கொள்ள இலக்கியம் கண்ட புதிய வாய்க்காலாகும். முன் காலத்தில் படிப்பவர்களுக்கு நிறையப் பொழுது இருந்தது. நெடிய கதைகளைப் பொறுமையுடன் படித்தார்கள், ஆனால் இன்று மனிதனின் வாழ்க்கை மிக வேகமாக ஓடுகிறது. அதிலே அவனுக்குப் படிப்பதற்குக் கிட்டும் பொழுது மிகவும் குறைவானது. அந்தக் குறைந்த பொழுதுக்குள் அவனுடைய படிக்கும் வேட்கையைப் பூர்த்தி செய்யத் தோன்றியிருப்பவைகளே, இன்றையச் சிறுகதைகளும் அவற்றைத் தாங்கி வரும் பத்திரிகைகளும்."

போ அன்று கூறியது இன்றும் பொருந்துகிறது. சொல்லப்போனால் அவர் கூற்று மேலும் வலுப் பெற்றிருக்கிறது இக் காலத்தில். ஏனென்றால் போவின் காலத்தைவிட இக்காலத்தில் மனிதனின் வாழ்க்கை இன்னும் அதிகமான வேகம் பெற்றிருக்கிறது. அந்த வேகத்திடையே அவன் படிக்க விரும்புவது, தனக்குக் கிட்டும் குறைந்த பொழுதுக்குள் படித்து முடிக்கக் கூடிய ஒன்றைத்தான்.

உலக இலக்கிய அரங்கிலே சிறுகதையின் மகத்துவம் நாளுக்கு நாள் பெருகி வருவதன் இரகசியம் இதுதான். இப்போது கலைத் தன்மை பெற்ற கதைகள் எப்படி அமையவேண்டும் என்பதைப் பார்ப்போம். இதோ ஸாமர்ஸெட் மாம் அதுபற்றிக் கூறுகிறார்:

"சிறந்த சிறுகதை பெரிய கட்டுக்கதை ஒன்றன் பகுதி. அதாவது அதன் ஓர் அம்சம். ஒரே மூச்சில் படித்து விடும்படி ஒரேஒரு சம்பவத்தை அது சித்திரிக்கும். அது அசலாக இருக்கும். பிறிதொன்றைப் போலவோ, அல்லது அதன் சுருக்கமாகவோ இருக்காது. அது நம் மனத்திலே ஒளிரும்; கிளர்ச்சியூட்டும்; தான் கூறுவதை நன்கு பதியச் செய்யும். காரிய ஒற்றுமையும், கருத்து ஒற்றுமையும் அதில் நிரம்பியிருக்கும். ஆரம்ப முதல் கடைசி வரையில் ஒரே விருவிருப்புடன் இருக்கும்."

மாம் கூறியுள்ள இந்தத் தன்மைகளையன்றி வேறு சில தன்மைகளும் கலைத் தன்மையுடைய கதைக்குத் தேவை. பெயருக்கேற்ப சிறு கதையாக அது இருக்க வேண்டியிருப்பதால், அநாவசியமான விஷயங்களுக்கு அதில் இடமளிக்கக் கூடாது. பொருத்தமற்ற விஷயங்களை நீக்கிவிடவேண்டும். பாத்திரங்களின் எண்ணிக்கையைக் கூடிய வரையில் குறைக்கவேண்டும். சிக்கல்களை அதிகமாக்கினாலும் கதையின் விருவிருப்புக் குறைந்துவிடக்கூடும். மொத்தத்தில் பாமரருக்கும் விளங்கக்கூடிய வகையில் அது அமையவேண்டும்.

இவை மட்டுமா? காலம் இன்று வேகமாக மாறிக் கொண்டிருக்கிறது. நேற்றைய நாகரிகம் இன்று இருப்பதில்லை. இன்றைய நாகரிகம் நாளைக்கு இருக்கும் என்று நம்புவதற்கில்லை. எப்போதும், எல்லாவற்றிலும் புதுமை மலர்ந்துகொண்டிருக்கும் இந்தக் காலத்தில் சிறுகதை ஆசிரியர்களும், புதுப் புது விஷயங்களையும் புதுப் புது பாணியையும் கையாண்டு கதை எழுத வேண்டும். பழைய விஷயம் ஒன்றையே கதையின் கருவாகக்கொள்ள வேண்டியிருக்கும்போது கூட, அதற்கு ஒரு புதிய சூழ்நிலையை உண்டாக்கியோ, புதிய பிரச்னை என்ற போர்வையால் அதை மூடியோ எழுதினால்தான் கதை மதிப்புப் பெறும்.

கதைக்குரிய விஷயத்தைப் போலவேதான் அதன் அமைப்பும் இருக்க வேண்டும். வாக்கியங்கள் வலுவுள்ளவைகளாகவும், பயனுள்ளவைகளாகவும் வந்து

விழ வேண்டும். அவை படிக்கச் சுவையோடு இருக்க வேண்டும். கதையின் முதல் வாக்கியமே வாசகர்களைக் கவர்ந்துவிடவேண்டும். அந்தக் கவர்ச்சி கடைசி வாக்கியம் வரையில் குன்றிவிடாமல் இருக்க வேண்டும்.

இத்தனை 'வேண்டும்' களைப் பார்த்துவிட்டு, எந்த விஷயத்தை வேண்டுமானாலும் எடுத்துக்கொண்டு நல்ல சிறு கதை ஒன்றை உருவாக்கிவிட முடியாது என்ற முடிவுக்கு யாரும் வந்துவிட வேண்டாம். சிறு கதைகளை மதிப்பிடுவதில் வல்லுநரான எம். ஈ. ஸ்பியர் என்பவர் கூறுகிறார்: ''எதை வேண்டுமானாலும் சிறு கதை எழுதுவதற்கு விஷயமாக எடுத்துக்கொள்ளலாம். காவிய விளக்கம் முதல் மனோ தத்துவ ஆராய்ச்சி வரையில் எதுவும் கதைக்குப் பொருந்தும். ஆனால் அதைச் சுருக்கமாக, சுவைபடக் கதை வடிவில் அமைப்பதில்தான் சாமர்த்தியம் இருக்கிறது. பல மைல் நிலப் பரப்புக் காட்சி ஒன்றை ஒரு சிறிய படத்தில் அடக்கி விடுவதுபோல், சிறுகதையில் பெரிய பெரிய விஷயங்களையும் அடக்க முடியும், ஆனால் அந்த விஷயத்தின் நுட்பமான அம்சம் எல்லாம் அதில் இருக்கவேண்டும். அதே சமயம் சொற்செட்டோடும், விளங்கும்படியாகவும் இருக்கவேண்டும்.''

''சொற்செட்டு என்றால் என்ன?'' இதைப்பற்றி மற்றொரு மேலைநாட்டுத் தலைசிறந்த சிறுகதை ஆசிரியர் ஜே ஜீ.:பீ என்பவர் சொல்லுகிறார்:'' சொற்செட்டு என்பதன் பொருள், எழுவாய், பயனிலைகூட இல்லாமல் வாக்கியங்களை அமைக்க வேண்டும் என்பதல்ல, ஒரு சிறிய உதாரணத்தின் மூலம் இதை விளக்குகிறேன். திரைப்பட பிலிமின் துண்டு ஒன்றை வெளிச்சத்தில் பிடித்துப் பார்த்தால் அதில் அடங்கியிருக்கும் காட்சி தெரிகிறது. அந்த பிலிம் துண்டை பூதக்கண்ணாடி ஒன்றன் மூலம் பார்க்கும்போதும் அதே காட்சியைத்தான் காண்கிறோம். ஆனால் இப்போது அது மிகத் தெளிவாகத் தெரிகிறது; ஒவ்வொரு நுணுக்கமும் தெரிகிறது. அதே போலத்தான் சொற்செட்டு என்பது. அதை மனமெனும் ஆரய்ச்சிக் கண்ணாடிமூலம் பார்க்கும்போது, இன்னும் தெளிவாகப் புலப்பட வேண்டும்; உள்ளர்த்தங்கள் எல்லாம் விளங்க வேண்டும்.''

எனவே கலைத் தன்மையோடு கூடிய கதையில் ஒவ்வொரு வார்த்தையும், ஒவ்வொரு வாக்கியமும் முக்கியமானது. அவை பல விவரங்களை உள்ளடக்கி இருப்பவை. ஆனால் அந்த விவரங்கள் எல்லாம் ஒரே குறிக்கோள், அதாவது கதையின் கருத்தை விளக்கும் குறிக்கோளை உடையனவாக இருக்கும்.

கடைசியாக, நல்ல கதையில் நல்ல வேகம் இருக்கும். அதன் எந்தப் பகுதியிலும் தொய்வு இருக்காது. பந்தயக் குதிரையைப்போல், தோற்றாலும், ஜெயித்தாலும் ஆரம்பம் முதல் முடிவு வரையில் அது ஓடிக்கொண்டே இருக்கும். எவ்வளவு நல்ல கருத்துடைய கதையாக இருந்தாலும், அதை எவ்வளவு தெளிவாக எழுதியிருந்தாலும், ஆமை வேகத்தில் செல்லும் கதைகள் ஒருபோதும் வாசகர்களின் கருத்தைக் கவர மாட்டா. எப்படி இன்றைய மனித வாழ்க்கையை வேகம் சூழ்ந்திருக்கிறதோ, அப்படியே இன்றையக் கதைகளையும் வேகம் சூழ வேண்டும். அந்த வேகந்தான் கதையின் உயிர். மற்ற அம்சங்கள் எல்லாம் அதன் அங்கங்கள் தாம்; உயிர் இருந்தால் மட்டுமே இயங்கும் அங்கங்கள். ★


திருச்சி நகரத்தின்
சிறந்த பாத்திரக்கடை

பித்தளை
தாமிரம்
வெண்கலம்
எவர்சில்வர்

★

முதலிய எல்லா வகைப்
பாத்திரங்களுக்கும்
நம்பிக்கையும் நாணயமும்
உள்ள இடம்

★

திருநெல்வேலி
பாத்திரக்கடை

★

சி. வ. கந்தசுவாமி பிள்ளை சன்
பாத்திர வியாபாரம்,
142, பெரியகடை வீதி,
திருச்சிராப்பள்ளி-8.

# சில பச்சை உண்மைகள்

★

நா. பார்த்தசாரதி

'பச்சைப் பொய்கள்' — என்று சிலவற்றை அடித்துப் பேசி வற்புறுத்திச் சொல்லுகிறார்கள் இல்லையா? அதைப்போல் 'பச்சை உண்மைகள்' என்று அடித்துப் பேசி வற்புறுத்தத் தகுந்த சில உண்மைகளை இந்தக் கட்டுரையில் சொல்லலாமென்று தோன்றுகிறது. 'இந்தக் கதையில் வரும் பெயர்கள்', சம்பவங்கள்-யாவும் கற்பனையே' - என்று சில கதைகளைப் பற்றிச் சொல்லுவதைப்போல 'இந்தக் கட்டுரையில் வரும் சம்பவங்களோ, உண்மைகளோ, நிச்சயமாகக் கற்பனையில்லை'— என்று முதலில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். என்னுடைய கட்டுரைக்குக் காப்பும் இந்த வாக்கியம் தான், அபாயமும் இந்த வாக்கியம்தான்.

எப்போதாவது சில சாயங்கால வேளைகளில் வீட்டிலிருந்து வெளியேறிக் காற்றும் இலைகளும் அசைகிற ஓசையைத் தவிர வேறு குரல்களே காதில் விழாத சாலைகளில் உலாவச் செல்லும் சுவாரஸ்யமான தனிமையில் நான் சில சிந்தனைகளை மனம் விட்டுச் சிந்திப்பது உண்டு. உண்மைகளை விலகி நின்று சிந்திக்கும்போது எவ்வளவு சுகமாயிருக்கிறது தெரியுமோ? கட்டிடம் கட்டுவதற்குக் குவித்துவைக்கும் தனித்தனிச் செங்கல்களைப் போல நான் கண்டு கேட்டு அநுபவித்த சில உண்மைகளைத் தனித்தனியே இங்கே குவிக்கிறேன். அவற்றைப் பொருளாகப் பயன்படுத்தி உங்கள் மனத்தில் நீங்கள் எந்த விதமான சிந்தனைக் கட்டிடத்தையும் எழுப்பிக்கொள்ளலாம். தற்செயலான ஞாபகம் (Random Memory) என்கிறார்களே, அப்படிப்பட்ட சில உண்மை ஞாபகங்களையும், அநுபவங்களையும், தொகுத்துத் தனித்தனியே உங்கள் முன் வைக்கிறேன். இவற்றைப்பற்றி மேலே சிந்தனை செய்வதற்கும் தீர்மானம் செய்வதற்கும் இதன் வாசகர்கள் அத்தனை பேரையும் தர்மகர்த்தாக்களாக நியமித்துவிட்டுத் தொடங்குகிறேன்.

## 2000 ரூபாய்க் கதை

எழுத்தாளர்கள் கற்பனை செய்யும் போதும், இலட்சியவாதம் பேசும்போதும் அழுக்கும், ஆசாபாசமும், இல்லாத பரிசுத்தமான உயரத்தில் இருக்கலாம். ஆனால் நடைமுறை உலகம் இருக்கிறதே; அது ரூபாய் அணா பைசாவைக் கொண்டுதான் மனிதர்களைத் தீர்மானம் செய்கிறது. சில ஆண்டுகளுக்கு முன் ஒரு பத்திரிகை நிறுவனம் நாவலுக்காக எனக்கு அனுப்பிய சன்மானத் தொகைக்கான 'செக்'கை - மாற்றுவதற்காக 'பாங்கிற்கு'ச் சென்றிருந்தேன். 'செக்'கின் பின்புறம் கையெழுத்துப் போட்டுச் செய்யவேண்டிய சடங்குகளை எல்லாம் குறைவின்றிச் செய்து பாங்கின் ஏஜண்டிடம் கொடுத்தேன். 'ஏஜண்ட்' - அதை உட்புறம் காஷியருக்குக் கொடுத்தனுப்பிவிட்டு அவருக்குப் பொழுது போகாத காரணத்தினாலோ, அல்லது என் பொழுதைப் போக்க வேண்டுமென்ற நோக்கத்திலோ, என்னிடம் பேச்சுக்கொடுக்கலானார். நான் கதைகள் எழுதுகிறேன் என்பதும், எனக்கு எந்த 'செக்' வந்தாலும் பத்திரிகைகளிலிருந்துதான் வரும் என்பதும் அவர் தனக்குத்தானே செய்து கொண்டிருந்த அநுமானங்கள். அவருக்கும் எனக்கும் நிகழ்ந்த உரையாடல் வருமாறு:-

"கதை கிதை எழுதினா - நல்ல 'ரெம்யூனிரேஷன்' பே பண்றாங்களோ சார்?"—

"ஏதோ... கொடுக்கிறாங்க... சார்...!"

"ஒரு தொடர்கதை எழுதினா நீங்க என்ன வாங்குறீங்க..."

"அதைப்பற்றி... என்ன வந்தது இப்போ.... ?"

"சும்மா .... சொல்லுங்களேன் ... தெரிஞ்சுக்கத் தான் கேட்கிறேன்..."

"ஏதோ இரண்டாயிரத்திலேருந்து ஐயாயிரம் வரை - பத்திரிகைகளோட சௌகரியத்துக்குத் தகுந்த மாதிரிக் கொடுக்கிறாங்க..."

"என்னது....? ரெண்டாயிரம் கொடுக்கிறாங்களா...? தேவலையே ?"

—இந்த நிகழ்ச்சிக்குப்பின் நான் எப்போது அந்த பாங்கிற்குப் போனாலும் அங்கு வழக்கமாக வருகிற வியாபாரிகள், பிரமுகர்களிடமெல்லாம், "சார்! இவர் ரொம்பப் பெரிய எழுத்தாளர் சார்... ரெண்டாயிரம் ரூபாய் வாங்கறார் ஒரு நாவலுக்கு..." -என்று- இந்த பாணியில் என்னை அறிமுகப்படுத்தத் தொடங்கினார் அவர். நான் என்ன எழுதுகிறேன் - எந்தப் பத்திரிகையில் எழுதுகிறேன் – எப்படி எழுதுகிறேன் - என்பதைப் பற்றி யெல்லாம் கவலையே படாமல் எனக்குப் பணம் கிடைக்கிறதைப் பற்றி மட்டும் சிரத்தை காட்டும் அறிமுகங்களால் நான் கொலை செய்யப்படுவதை அவரால் உணரமுடியவில்லை. இப்படிச் சில ரூபாய் அணாப் பைசா இரசிகர்களும் இருக்கிறார்கள் என்பது பச்சை உண்மை.

## இன்னும் பார்க்கவில்லை...

ஒரு பெரிய விருந்து. நாலைந்து எழுத்தாள நண்பர்கள் மட்டும் ஒரே வரிசையில் சேர்ந்து சாப்பிட உட்கார்ந்திருந்தோம். அந்தப் பாதையாகக் கடந்து மேலே போகிறவர்கள் - வருகிறவர்களில் – எழுத்தாளர்

கள் அல்லாத பொது மனிதர்கள் விருந்துக்கு அமர்ந்திருந்த சில எழுத்தாளர்களிடம் - 'சார்! உங்களுடைய...... கதையை.... இந்த வார......ல் படித்தேன்... அமோக மாக இருந்தது.'– என்றெல்லாம் பாராட்டிக் கொண்டி ருந்தார்கள். ஆனால் அங்கு கூடியிருந்த எழுத்தாளர் களில் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருந்த விதமோ, "உங்க.... இது... ஒண்ணு... இந்த வார...லே வந்திருக்கிறதா வீட்டிலே... என் ஒய்ஃப் சொன்னு... நான் இன்னும் பார்க்கல்லே"– என்பது போல் இருந் தது. அதே கூட்டத்தில் புதிதாகக் காதல் கதைகள் எழுதி இளைஞர்களிடையே பேர்வாங்கிக் கொண்டிருக் கும் ஒருவரிடம் வயது மூத்த அநுபவசாலியான ஒரு வர், "நீங்கள் புதுமைப்பித்தன், கு. ப. ரா—கதைகள் படித்திருப்பீர்களே?"—என்று தொடங்கி அந்த முன் னணி எழுத்தாளர்களின் சில கதைகளைப் பெயர் குறிப் பிட்டுக் கேட்டார். இளம் எழுத்தாளர் சிறிது நேரம் தயங்கிவிட்டு,.... "நான் புதுமைப்பித்தன். கு. ப. ரா. கதைகளிலே ஒண்ணுகூடப் பார்த்ததில்லே....'புக்ஸ்' கிடைக்க மாட்டேங்குது.!.... கிடைச்சாத்தானே படிக் கலாம்...?" - என்று அலுத்துக்கொண்டார். புதுமைப் பித்தன், கு. ப. ரா. கதைகளைக் கூடப் படிக்காமலே அவர் தமிழில் கதைகள் எழுதத்துணிந்தது எப்படி மன்னிக்க முடியாத குற்றமாக எனக்குத் தோன்றி யதோ அப்படியே "நான் இன்னும் பார்க்கலே....என் 'ஒய்ஃப்' சொன்னு"– என்று மூத்து முதிர்ந்த எழுத் தாளர்கள் நிகழ்கால வெளியீடுகளைப்பற்றி அலட்சிய மாகப் பிரஸ்தாபித்ததையும் மன்னிக்கமுடியாது—மன் னிக்கக் கூடாதென்று-தோன்றியது எனக்கு. இரண்டு பகுதி உண்மைகளுமே கசப்பாக இருந்தன. 'எழுத்தை ஆள்கிற நாம் ஓர் இனம்'– என்றுகூட எண்ணத் தெம் பில்லாத நாலுபேர் சேர்கிற அந்த இடத்துக்கு ஏன் போனோம்—ஏன் விருந்துண்டோம்? – என்று நான் வருத்தப்படுவது நியாயம்தானே?

## பெரிய எழுத்தாளர்கள்

பத்திரிகைகளின் தீபாவளி — பொங்கல் மலர்கள் வெளிவருகின்றனவே - 'இந்த மலர்கள் பெரும்பாலும் திட்டமிட்டுக்கொண்டு செய்துகொள்கிற தற்கொலை' போல ஆகிவிடுவதுண்டு. பெரிய எழுத்தாளர்கள் எல்லாம் 'நாம் எதை எழுதினாலும் போடுவார்கள்' - என்ற நம்பிக்கையில் அவசர அவசரமாகக் கிறுக்கித் தள்ளி அனுப்பிவைப்பார்கள். நன்ருகவும் உற்சாகமாக வும் எழுதக்கூடிய சில இளம்முன்னணி எழுத்தாளர் களோ, "மலருக்காக எழுதுகிறேமே! நன்ருக வர வேண்டும்"– என்று தேவையில்லாமல் மிரண்டு கடைசியில் எதையோ எழுதி விடுகிருர்கள். 'பெரிய எழுத்தாளர்கள் அவசரத்தில் கிறுக்கியவை எல்லாம் வந்து மலர் மணமில்லாமல் மலர்ந்துவிடும். 'மணக்க வேண்டுமே என்று பயந்துகொண்டே எந்தப் பூவா வது பூக்கிறதா?' பூத்தால், தானே மணக்காமலா போகும்? தைரியமும் உற்சாகமுமுள்ள இளம் எழுத் தாளர்களுக்கும் இந்த நம்பிக்கை வேண்டும். குழந்தை களுக்குப் புரியாத குழந்தைகள் கதையும் பெரியவர் கள் தப்புக் கண்டு பிடிக்கக்கூடிய பெரியவர்கள் கதை யும் எழுதுகிற பிரபல பிரமுகர்களையே மன்னித்து இலக்கிய ரத்னமாகப் போற்றுகிற சமூகம் எழுத்துத் திறமை உள்ளவர்களை அங்கீகரிக்காமலா போய்விடும்? நன்ருக எழுதுகிற எல்லாருமே பெரிய எழுத்தாளர்கள் தான் என்பதை ஞாபகம் வைத்துக்கொண்டு செயல் பட்டால் பயன் உண்டு. உண்மையும் அதுதான்.

## எவ்வளவோ மோசமான கதைகள் ...

ஒரு பத்திரிகையாசிரியருடைய அறைக் கதவை வேகமாகத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்த இளை ஞருக்கும் பத்திரிகையாசிரியருக்கும் நடந்த காரசார மான உரையாடல் வருமாறு:-

"உங்கள் பத்திரிகைக்குக் கடந்த ஆறுமாதக் காலத்திற்குள் சுமார் முந்நூறு கதைகள் வரை அனுப்பிப் பார்த்துவிட்டேன்..."

"மகிழ்ச்சி! இத்தனை சுறுசுறுப்பாக என்னுல்கூட எழுத முடியாது..."

"அத்தனைக் கதைகளையும் சுவரிலடித்த பந்தைப் போல் திருப்பி அனுப்பிவிட்டுக் கிண்டலா செய்கிறீர் கள்...?"

"முந்நூறு கதைகளை எழுதியதற்காக நீங்கள் எவ்வளவு பெருமைப்படலாமோ; அவ்வளவு பெரு மையை — அவற்றில் ஒன்றுகூட விட்டுப்போகாமல் திருப்பியனுப்பியதற்காக நான் படலாமோ கூடா தோ....?"

" உங்கள் பத்திரிகையில் இப்போது வந்துகொண் டிருக்கிற கதைகளை எல்லாம் நான் ஒன்று விடாமல் படிக்கிறேன்.... எல்லாமே மோசமாத்தானே இருக் கிறது... நான் எழுதறதை மட்டும் ஏன் போடமாட் டேங்கறீங்க..."

"எங்க பத்திரிகைதான் ஏதோ மோசம் மோசமான கதைகளையெல்லாம் போட்டுக் குட்டிச் சுவராகப் போய்க் கொண்டிருக்கிற தென்றுல் நீங்களும் மோச மாக எழுதுவானேன்?"

— வந்த இளைஞர் பதில் கூறுவதற்கு இயலாமல் திணறினர். 'உங்க பத்திரிகையிலேதான் எவ்வளவோ மோசமான கதைகளெல்லாம் வருதே... ஏன் என் கதையை மட்டும் திருப்பியனுப்பறீங்க...?' என்று அவர் விவாதம் செய்தமுறை தவறு. தன்னம்பிக்கை யுள்ள எழுத்தாளன் 'தன்தொழில்திறனை'— முன் வைத்தே பேச வேண்டும்.

## தமிழாக்கம்

பிரபல வாரப்பத்திரிகைகள் சில மிக அதிகமாக மொழிபெயர்ப்புச் சிறுகதைகளை வெளியிடுகின்றன. சொந்தமொழியிலேயே நல்ல சிறுகதைகளை எழுதுகிற எழுத்தாளர்கள் நிறைய இருக்கும்போது - பிறமொழிச் சிறு கதைகளைத் தேவைக்கதிகமாகத் தமிழாக்கிப் போடுவது தாய்மொழிக்கும் தாய்மொழியில் வளர் கின்ற எழுத்தாளர்களுக்கும் செய்கிற துரோகம். பல பிரமுகர்களை ஆங்கிலத்தில் எழுதச்சொல்லி அப்படித் தனியாக ஆங்கிலத்தில் எழுதியவற்றை வாங்கி ஆசிரி யர் குழுவில் உள்ளவர்களைக்கொண்டு தமிழாக்கி வெளி யிட்டே பத்திரிகையை நடத்துவது கண்ணுடிக் கெதிரே உட்கார்ந்துகொண்டு அதில் தெரிகிற பிரதி பிம்பத்தைப் புகைப்படம் எடுக்கச் சொல்வது போலா கும். பல பெரிய பத்திரிகைகள் ஆங்கிலத்தில் தலை யங்கம் எழுதச் சொல்லி அதைத் தமிழாக்கிப்போடு

கிற— "எண்ணெயிலிருந்து எள் எடுக்க முயலும்"— காரியத்தைச் செய்து கொண்டிருக்கின்றன. ஒரு மொழியின் இலக்கிய முயற்சிகள் சுயமாக வளர வேண்டுமானால் அவை அந்த மொழியிலேயே செய்யப் பட வேண்டாமா?

## விமர்சனம்

"இதிலே வந்து பாருங்கோ!... 'மணிக்கொடி யேஜ்' ஒண்ணுதான் டமில் லிடரேசருடைய கோல்டன் யேஜ்! அதுக்கப்புறம் இப்போ எழுதறவன்களை எல்லாம் பற்றி ஒட்டுமொத்தமாகச் சொல்றதா யிருந்தா..... ஏதோ பேத்தருன்கள்! (நான் உள்பட) ஓர் ஐந்து பேர்தான் தமிழ் இலக்கியத்தில் ஏதோ உருப்படியாப் பண்ணியிருக்கோம்."

"அது சரி சார்! ஆனால் உங்களைப்பற்றி எந்தத் தமிழ் வாசகனுக்குமே தெரியலையே?"

"வாசகனுக்கு யார் ஒருத்தனைப்பற்றி நல்லாத் தெரியறதோ அப்படித் தெரியறதுனாலேயே அவன் 'சீப் லிடரேசரைப் புரொட்யூஸ்' - பண்றான்னு புரிஞ்சுக்கலாம். அந்த நாளிலே......நானும்.... ...னும்........என்னென்ன இலக்கிய சோதனைகளெல்லாம் பண்ணியிருக்கோம் தெரியுமோ ?"

"மன்னிக்கணும் சார்.... நான் இந்தக் காலத்திலே தான் இருக்கேன். எனவே எனக்கு இந்தக் காலம் தான் வேணும். உங்களைப் போல இருக்கறவங்க பத்து வருஷத்துக்கு முன்னாலேயே அமரராயிருக்கணும்..."

## புத்தகப் பதிப்பு?

பதிப்பாளர்:- "காப்பி வாங்கி வரட்டுமா? வெற்றிலை சீவல் பக்கத்துக் கடைலே நல்லதா வச்சிருக்கான்!...."

எழுத்தாளர்:- "அதெல்லாம் இருக்கட்டும்! இந்த 'ராயல்டி'– பணம் வந்தாத் தேவலை. செலவுக்கு முடை."

பதிப்பாளர்:- "புத்தகமே விற்கமாட்டேங்கறதே சார்! பிடிச்சுத் தள்ளினாலும் போகாது போலிருக்கே... விற்கிற நாலைந்தும் நாங்க ஓடியாடி அலைகிறதுனாலே விற்கிறது.... நீங்க ஏதோ பெரிசா நினைச்சிட்டு அடிக்கடிபணத்துக்கு வந்துடறீங்க..."

எழுத்தாளர்:- "உங்க தலைக்குமேலே சுத்தறஃபேன், அதோ வாசல்லே நிற்கிறதே அம்பாஸடர் கார்– இதோ வாங்கிப் போட்டிருக்கீங்களே இந்த நவ நாகரிக சோபாக்கள் - எல்லாம் புத்தகம் விற்கா மேலே தர்மத்துக்காகத்தானே வாங்கிப் போட்டிருக்கீங்க.... இல்லையா....?"

பதிப்பாளர்:- "பேச்சு ரொம்ப அநாவசியமாகப் போகுது— நல்லாயில்லே...."

எழுத்தாளர்:- "நீங்க ரொம்ப நாகரிகம் தெரிஞ்சவரு— உங்ககிட்டே அநாகரிகமா... நடக்கப்படாது....!

பதிப்பாளர்:- "சார் இன்னிக்கு ஏதோ சண்டை பிடிக்கிறதுன்னே கங்கணம் கட்டிக்கிட்டு வந்திருக்காப் பலே தோணுது ..."

எழுத்தாளர்:- "துப்புக்கெட்டுப் போய் நானும் அலையறேன்... இப்படிப் பட்ட பதிப்பாளருக்குப் புத்தகம் எழுதறதை விடச் சண்டைபிடிக்கிறத்துக்காக மிலிடரிலே சேர்ந்தால் கூடப் பிழைக்கலாம்."

## போலிப் புகழ்ச்சிகள்

"சார்... இவாளைத் தெரியுமோ?... தமிழ்லே பெரிய ரைட்டர்...."

"ஹிஹி... கேள்விப்பட்டிருக்கேன் "என் டாட்டர் கூடச் சொல்லிருக்கா..."

இந்த இடத்தில் இந்த அறிமுகத்துக்கு ஆளான அப்பாவி எழுத்தாளனின் இதயம், 'உங்க டாட்டர் என்ன சொல்லியிருக்கா' என்று கேள்வி கேட்டு விடுவதற்குத் துடிக்கலாம். ஆனால் நாகரிகத்தினால் அப்படிக் கேட்க முடியாமல் போய்விடும். அறிமுகப்படுத்தப்பட்ட பிரமுகரோ பிடிவாதமாக இப்படித்தான் பதில் சொல்வேன் என்று திட்டமிட்டு நினைத்துக் கொண்டு வந்ததுபோல், 'டாட்டர் ரொம்பச் சொல்லியிருக்கா'– 'ஒய்ப்ஃ உங்க கதையைப் படிக்கிருபோலிருக்கு'– என்று இதுமாதிரித் தான் சம்பந்தப்படாமலே பேசுவார். சுயமரியாதை உள்ள எந்த எழுத்தாளனையும் இந்தப் பேடித்தனமான பெட்டைப் புகழ்ச்சி மகிழ்விக்காது என்பது நிச்சயம்.

இப்படி அன்றாட அநுபவங்களில் எத்தனையோ பச்சை உண்மைகள். எல்லாவற்றையும் சொல்லி முடிக்க வேண்டுமென்ற அவசியமே இல்லை. எழுத்தாளன் மிகப்பெரிய தீரனாயிருந்தால் ஒழியப் பொது வாழ்வில் பல இடங்களில் பல நிகழ்ச்சிகள் அவனை அசடுவழிந்து போய் நிற்கச் செய்துவிடும். புகழுக்கு ஏங்கும் மனோபாவம் வீரர்களுக்கு இருக்கக்கூடாது. ஆனால் நிஜமான பழிக்கு நாணும் மனோபாவம் நிச்சயமாக இருக்கவேண்டும். காரணமற்ற இகழ்ச்சிக்குப் பயப்படவேண்டிய அவசியமில்லை. ஆனால் காரணத்தோடு கூடிய குறை சொல்லுதலுக்குச் செவிசாய்க்க வேண்டும். எழுத்தாளன் வளமான மலையுச்சியைப் போன்றவன். அங்கிருந்து உற்பத்தியாகிற வற்றால் அவை பாயுமிடமெல்லாம் பசுமை கொழிக்க முடியும். மகத்தான தன்னம்பிக்கையும் தைரியமும் இந்த நாட்டு இலக்கியத் தொழிலாளிக்கு முக்கியமானது. அவன் அசடு வழிய ஆரம்பித்துவிட்டால் அப்புறம் ஒன்றுமே இல்லை. அவன் பலவீனங்களைச் சுமக்க ஆரம்பித்து விட்டால் அப்புறம் பலமே இல்லை. அவன் பொய்ப் புகழுக்கு வணக்கம் செலுத்தத் தொடங்கி விட்டால் அப்புறம் மெய்யான புகழ்ச்சியே இல்லை.



# எழுத்தாளரின் இன்றைய கடமை

★

**அ. மு. பரமசிவானந்தம்**

'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமைஇல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதைவணக்கம் செய்தல்வேண்டும்,

என்று பாடி மறைந்த பாரதியின் வாக்கு, அவர் பாடிய அன்றைய நிலையிலும் இன்று மிக இன்றியமையாது மேற்கொள்ள வேண்டியதாக உள்ளது. உலகம் அளவில் சுருங்கவில்லையாயினும் உணர்விலும் உற்ற இணைப்பிலும் மிகச் சுருங்கியதாகிவிட்டது. உலகில் உள்ள எல்லா நாட்டு மக்களும் விழிப்புணர்ச்சிபெற்று உள்ளத்தும் உலக வாழ்விலும் உரிமையுற்றுத் தம்மையும் தம் நாட்டையும் எண்ணி உயர்த்துகின்ற அதே வேளையில், உலக அரங்கிலுள்ள பிற நாடுகளின் நிலையினையும் ஆராயத் தொடங்கியுள்ளனர். உலக நாடுகளில் பண்பால், கலைவளத்தால், நாகரிகத்தால், நல்ல மரபுகளால் சிறந்தவை யாவும் போற்றப் பெறுகின்றன. இந்த நிலையில் எல்லா நாட்டவரும் தத்தம் கலையை - இலக்கியத்தை - நாகரிகத்தை - பண்பாட்டை - இன்னபிற வற்றை உலகத்தார் கண்களுக்கு உயர்த்திக் காட்ட வேண்டிய வழித்துறைகளை வகுத்துக்கொண்டு செயலாற்றுகின்றனர். எதிலும் ஏற்றமுருதவரும் கூட ஏற்ற முற்ற நிலையில் உள்ளதாக உலகம் நினைக்கத்தக்க வகையில் செயலாற்றுவதைக் காண்கின்றோம். இந்த வேளையில் இயல்பாகவே எல்லா வகையிலும் ஏற்றம் பெற்று- பல ஆயிரமாண்டுகளாக - பண்பாட்டுடன் வாழ்ந்த தமிழ்ச் சமுதாயத்தை உலகுக்கு உணர்த்த வேண்டுவது தமிழரின் கடமை - தலையாய கடமையாகிவிட்டது. அத்தமிழருள்ளும் அப்பொறுப்பு - உரிமை இன்று தமிழ் எழுத்தாளரிடமே சிறப்பாக அமைந்து தொழிற்பட வேண்டிய நிலையில் உள்ளது.

பரந்த பாரதம் உரிமை பெற்றபிறகு உலகின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் இந்நாட்டின் சிறப்புக்களையெல்லாம் காண வந்துகொண்டேயிருக்கின்றனர். உலகின் பல நாடுகளிலும் இந் நாட்டின் மொழி, கலை, இலக்கியம் ஆகியவற்றை அறிந்துகொள்ளவேண்டும் என்ற உணர்வு அரும்பிப் பூத்து நிற்கின்றது. இந் நாட்டின் தென் எல்லையில் மிகப் பழங்காலந் தொட்டு வாழும் நம் மொழி, கலை, இலக்கியம், நாகரிகம் ஆகியவற்றை அறிய வருகின்ற அயலவர் பலர். அங்கங்கிருந்தே ஆராய்ச்சி செய்கின்றவரும் பலர். அவர்களுக்கெல்லாம் நம் தமிழ் நாட்டை-மொழியை - நாகரிகத்தை நன்கு விளக்கிக் காட்டவேண்டுவது இன்றைய எழுத்தாளரின் தலையாய கடமையாகும்.

தமிழில் பல்வேறு வகைப்பட்ட இலக்கியங்கள்-சிறுகதை - நாவல் - நாடகம் - ஆய்வு நூல்கள் - கவிதை - தோன்றிக் கொண்டே இருக்கின்றன என்பது உண்மைதான். தமிழ்நாடு மொழித்துறையில் ஓரளவு முன்னேற்றம் கொண்டுள்ளது என்பதும் சரிதான். என்றாலும் நம்மைப் பற்றிப் பரந்த பாரத நாடும் விரிந்த உலகமும் அறிந்து கொள்ளும் வகையில் நம் செயல் அமைய வேண்டும். பிற நாட்டவரும் நம் நாட்டில் பிறபகுதிகளில் உள்ளவரும் ''உங்கள் தமிழ்ச் செல்வங்களை எங்களுக்குக் காட்டலாகாதா? வழங்கலாகாதா? விளக்கலாகாதா?'' என்று கேட்டுக்கொண்டே இருக்கின்றனர். எனவே, வாய்ப்பும் வசதியும் உடைய எழுத்தாளர் அனைவரும் தமிழ் மொழியின் இலக்கிய வளனையும் பண்பாடு முதலியவற்றையும் பிறர் உணரத்தக்க வகையில் ஆங்கிலம் போன்ற பிற நாட்டு மொழிகளிலும், இந்தி, வங்காளி போன்ற வட நாட்டு மொழிகளிலும் எழுத வேண்டும். தமிழோடு பிற மொழி அறிவுடைய அறிஞர் அனைவரும் ஒன்று கூடி இதற்கென ஒரு திட்டம் அமைத்துச் செயலாற்றவேண்டும். தமிழ் எழுத்தாளர் சங்கம் இதற்கென வழி வகுக்கவேண்டும். ஆண்டுக்கு ஒரு நல்ல தமிழ் இலக்கியம் குறைந்தது நான்கு வேற்று மொழிகளிலாவது மொழிபெயர்த்து வெளியிடப் பெறல் வேண்டும். ஆம்! மொழி ஆக்கம் கெடாது - பண்பாடு வழுவாது - கலை நிலைபிறழாது - வேறு குறைகள் நேராது - நேரிய நல்ல வழியிலே மொழி பெயர்ப்பு நூல்கள் வரவேண்டும். நம் பல்வேறு சிறப்புக்கள் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளின் தொகுப்பு ஒன்று ஒவ்வொரு ஆண்டிலும் வெளிவரவும் வேண்டும். நம்மைப்பற்றி என்னென்ன நேரிய வகையில் - முறையில்- வழியில் காட்ட முடியுமோ அத்தனையும் காட்டி நம் பழம் பெருமையை உலகில் வாழவும் வளரவும் விட வேண்டும். இந்தப் பொது ஆக்கப்பணியில் தனி ஆக்கத்துக்கு அதிக வாய்ப்பு இல்லாதிருக்கலாம். ஆனால் நம் வழிவழி வந்த தமிழ்ச் சமுதாயத்தைத் தரணியில் தலைநிமிர்ந்து என்றும் வாழச் செய்த பெருமை அந்த எழுத்தாளர்களைச் சாரும். இதுவே இன்றை எழுத்தாளரின் கடமை என்று காட்டி, இப்பணி செய்து சிறக்க ''சேரவாரும்'' என்று அனைவரையும் அழைத்து அமைகின்றேன்.



# எழுத்தாளன் ஆவதென்றால்?

★

டி. என். சிவதாணு

சினிமாப்படம் தயாரிக்கக் கதையைத் தேடிக்கொண்டிருக்கிறோம் என்று தெரிந்ததோ என்னமோ தினசரி குறைந்தது பதினைந்து பேருக்காவது பேட்டியளிக்கவேண்டிய சிரமம் ஏற்பட்டுவிட்டது. ஒவ்வொருவரும் பத்துக் கதைகளுக்குமேல் கொண்டு வந்து படிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். நானும் சலிப்பில்லாமல் அவைகளைப்படித்து, வந்தவர்களுக்குச் சமாதானம் செய்துகொண்டிப்பதைப் பார்த்துக்கொண்டிருந்த என் அன்பர்கள் என் பொறுமைக்கு நோபல் பரிசு கொடுக்கவேண்டும் என்று பாராட்டினார்கள்.

கதைகளைப் பற்றியோ எழுத்து முறைகளைப் பற்றியோ நான் இங்கு எடுத்துச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் எழுத்தாளனாவது சுலபம் என்று நினைத்துக் கதையும் எழுதத் துணிந்து விட்டார்களே என்றுதான் வியப்படைந்தேன். அதிலும் பாட்டுக்களை எழுதிக் கொண்டுவந்து, தங்கள் பாட்டின் அருமை பெருமைகளை என்னிடம் தாங்களாகவே புகழ்ந்து கூறும் தன்மையையும், அவைகளைப் பாடிக் காட்டி அவர்கள் செய்யும் தமிழ்க் கொலையையும் நினைத்தால் ஐயகோ ..... நான் தற்கொலை செய்து கொள்ளாமல் இருப்பதன் காரணம் எனக்கே விளங்கவில்லை.

எழுத்தாளர்களும் கலைஞர்களும் வளர்ச்சியடைவதோடு மட்டுமல்லாமல் புதிது புதிதாகத் தோன்றி புதுப் புதக்கருத்துக்களைத் தோற்றுவிப்பது நாட்டு வளர்ச்சிக்கு அறகுறி என்பதை யாரும் மறுப்பதற்கில்லை நல்ல சமுதாயத்தை உருவாக்குவதற்குச் சிற்பிகளாக விளங்குபவர்கள் சிறந்த எழுத்தாளர்களே என்பதில் சிறிதும் ஐயமில்லை. அவர்களின் வழித் தோன்றலாகப் பல எழுத்தாளர்கள் உற்பத்தியாக வேண்டும் என்பதில் யாருக்கும் அபிப்பிராய பேதம் இருக்கமுடியாது.

ஆனால், எழுத்துத் துறையை எளிதாக நினைத்து, எளிதில் எழுத்தாளனாகி விடலாம் என்ற எண்ணம் கூடாது. தமிழில் 'ல'கரம், 'ள'கரம், 'ழ'கரம் இவைகளுக்கு வித்தியாசம் தெரியாதவர்களெல்லாம் கதை, கவிதை என்று எழுதி, தான், ''எழுத்தாளன்'' என்ற எண்ணத்தில் இருந்துவிட்டால், உண்மை எழுத்தாளனுக்கு என்னதான் உயர்வு இருக்கிறது?

ஏதோ இரண்டு மூன்று சினிமாப் படத்தைப் பார்த்துவிட்டுக் கதை எழுத முன்வரும் வாலிபக் கூட்டம் தற்பொழுது மலிந்துவிட்டது. கதை எழுதியதோடு நில்லாமல் அதன் கருத்தையும் எடுத்துச் சொல்லும் போது தான் வாலிப உலகம் எவ்வளவு இலகுவாக எழுத்தாள உலகத்தை நினைத்துக்கொண்டு இருக்கிறது என்று எண்ணி நகைக்க வேண்டி இருக்கிறது.

''தமிழ் நாட்டின் கதைப் பஞ்சத்தைப்போக்க நான் முன்வந்திருக்கிறேன் இனிக் கதைப் பஞ்சம் என்ற சொல் நம் நாட்டில் நடமாடக்கூடாது'' என்று அந்த வாலிபர்கள் உணர்ச்சியோடு பேசுவதைப் பார்த்தால், அவர்களின் நிலைமையை எண்ணிப் பரிதாபப்படவேண்டியிருக்கிறது, இன்னும் சிலர் கதைகளை எழுதிப் பைகளில் அடைத்துக்கொண்டு ஒவ்வொரு பேசும்படக் காரியாலயங்களாக ஏறி இறங்கும் அவல நிலையைப் பார்க்கும் பொழுது உண்மை எழுத்தாளரின் உள்ளம் புண்படாமல் இருக்கமுடியாது.

''சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப் பழக்கம்'' என்ற முது மொழிக்கேற்ப பழகப் பழகச் சிறந்த எழுத்தாளனாக மாறிவிடலாம் என்று சிலர் நினைக்கலாம். ஆனால், எதையும் ஒழுங்கான, கட்டுக்கோப்பான அஸ்திவாரம் இல்லாமல் எழுத்தாளன் ஆகி விடலாம் என்ற குருட்டு எண்ணம் நல்லதல்ல.

கையிலே பேனாவும், பக்கத்திலே பால் நிறக் காகிதமும் இருந்து விட்டால் எழுத்தாளனாகி விட முடியுமா? நல்ல கற்பனையும் கருத்துக்களுமே சிறந்த எழுத்தாளனை உற்பத்தி செய்யும் கருவிகள். நூல்களைப்படித்து, நுண்ணறிவுகளைப் பெருக்கி, ஆராய்ச்சியில் அவதிப்பட்டு, உலக அனுபவத்தில் உழன்று ''எழுத்தாளன்'' என்ற நிலையை அடைவது மிகச் சுலபமான காரியம் அல்ல.

உழைப்பு இல்லாமல் உயர்ந்து விடலாமென்ற ஒரு எண்ணம் பரவி வருகின்ற காரணத்தினால் தான் கடிதம் எழுதுவதுபோல் கதையையும் கட்டுரையையும் எழுதி வெகு எளிதாக ''எழுத்தாளன்'' ஆகி விடலாமென்று நினைக்கிறார்கள் சிலர். அப்படி நினைப்பவர்கள் எந்தக் காலத்திலும் எழுத்தாளனாக வர முடியாது. பயிற்சியும் அனுபவமும் இல்லாமல் இலகுவில் எழுத்தாளனாகி விடலாமென்ற தவறான எண்ணத்தைப் போக்கி, எழுத்தாளனாக வருவதற்குரிய விதிமுறைகளை நன்கு தெரிந்து பின்னர் கையில் பேனாவைப் பிடிக்க முன்வருவது நல்லது!



பரம்பொருட் பற்றேற சிற்றுயிர்ப் புரங்கெனும்
மகத்துவம் கண்ட முத்துவ குருபரன்

# கண்ணகியின் தவறு

★

கருமுத்து தி. மாணிக்கவாசகம்

சிலம்புச் செல்வி கண்ணகி, தாயகத்து மக்கள் தலை வணங்கும் கற்பரசி என்றும், குணக்குன்று என்றும், தவறே செய்ய முடியாதவள் என்றும், ஏடுகளில் படித்த உங்களுக்கு, இத்தலைப்பு வியப்பை அளிக்கும். ஆனால் இது முற்றிலும் உண்மை என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

கோவலன் சிலப்பதிகாரத்தின் தலைவன். தனது பதினாறும் ஆண்டில் பன்னிரண்டு வயதுடைய கண்ணகியை மணந்தான். எத்தனை ஆண்டுகள் அவர்கள் இருவரும் கூடி வாழ்ந்தார்கள் என்பதை அடிகள் கூறவில்லை. மணமாவதற்கு உரிய பருவம் பெண்களுக்கு 14 என்றும், ஆண்களுக்குப் *18* என்றும் இன்று அரசியலார் நிர்ணயித்திருக்கிறார்கள். களவிற்குப்பின் காதல் ஏற்படவேண்டுமானால், ஆணும் பெண்ணும் வயது வந்தவர்களாகவே இருக்க வேண்டுமென்ற காரணத்தால், சங்க கால இலக்கியத்தில் பொருள் தேடிய பின்னேயே மணம் செய்யும் வழக்கம் இருந்தது. ஆனால் வணிகக் குடியிலே பிறந்த காரணத்தால் கோவலன் கண்ணகியை இளவயதிலேயே மணம் செய்து கொண்டான்.

களவிற்குப் பின் மணம் என்ற தமிழ் முறையைப் பின்பற்றாவிட்டாலும், கோவலன் கண்ணகியிடம் அன்பு பாராட்டினான். அவள் அழகை வாயாரப் புகழ்ந்தான். அவளுடன் சில வாண்டுகள் இன்பமும் அனுபவித்தான். "மண்மேல் நிலையாமை கண்டவர் போல் துன்னினார்" என்று கூறுகின்றார் அடிகள். இதனால் அவன் கண்ணகியிடம் உயிரையே வைத்திருந்தான் என்பதில் ஐயமில்லை.

கோவலன் மாதவியிடம் சென்று கண்ணகியை மறந்தான். இது அவனுடைய மாபெரும் தவறு என்று கூறப்படுகிறது. "பிறர் மனை நோக்காப் பேராண்மை உடையவன் தான் சான்றோன்" கோவலன் மாதவி பால் காமுற்றதனால் அவனைச் சான்றோர் வரிசையில் வைக்க முடியாது என்று கூறப்படுகிறது, ஆனால் இங்கு ஓர் உண்மையைக் குறிப்பாகநோக்க வேண்டும். மாதவி பிறருடைய மனைவிஅல்லள். அவள் கோவலனை மணம் புரிந்து கொண்டு மனைவியானாள். அக்காலத்தில் ஒருவர் இரு பெண்களை மணந்து கொள்வது சட்ட விரோதமன்று. ஆகையால் பிறர் மனை நோக்கிய இராவணனை அவனுடன் ஒப்பு நோக்குதல் அறிவுடைமை ஆகாது. கோவலன் ஏன் கண்ணகியை விட்டுப் பிரிந்து மாதவியிடம் சென்றான் என்பதை இதுவரை யாரும் அறுதியிட்டு கூறவில்லை. இதற்குக் காரணம் கண்ணகி தான் அறியாது செய்த ஒரு தவறாகும்.

கண்ணகியை மருளாத மான், தெவிட்டாத தேன், என்று கோவலன் பாடினானேயாயினும் அவன் அவளிடம் ஒரு பெரும் குறையைக் கண்டான். வள்ளுவப் பெருந்தகை கூறுகின்றார். மண வாழ்க்கை இன்பமயமாகச் செல்லவேண்டுமானால் ஊடலுக்குப் பின் தான் கூடலிருக்க வேண்டுமென்று. கணவன் வருகின்ற காலத்து வழி மேல் விழி வைத்துக் காத்திருந்து, அவன் வந்தவுடன் அவனுடன் சிரித்துப்பேசி, அவன் பாராட்டுதல்களை எல்லாம் பெருமையுடன் ஏற்றுக்கொள்ளும் பெண்ணைக்கண்டு மக்கள் போற்றலாம். ஆனால் மணாளன் போற்ற முடியாது. இன்னல் காட்டி இன்பம் தரும் பேரின்பம் போல், சிற்றின்ப வாழ்க்கையிலும் துன்பத்தின் சாயல் தென்பட வேண்டும். அந்தோ கண்ணகி கோவலன் வாழ்க்கையில் ஊடல் இன்பமில்லை, கூடலும் நிலையாக நிலைத்து நிற்கவில்லை.

கண்ணகியை அடிகள் "மாதரார் தொழுது ஏத்தும்" பெண் என்று கூறுகின்றார். ஒரு பெண் மற்றொரு பெண்ணை, மனமார வாழ்த்தியதை வரலாற்று ஏடுகள் கூறியதாக நாம் கேட்டதில்லை. சீதை பெண்களுக்குள் மிகவும் அழகானவள் என்று கூறவந்த கம்பன் "மங்கையர் காமுறும் சீதை என்று கூறி, அவளது அழகைப் புகழ்கின்றான். இங்குக் காமவேட்கை தோன்றுகின்றதேயன்றி, புகழ்ச்சி தோன்றவில்லை. கண்ணகியைப் பார்க்கின்ற பெண்களுக்கு; அவள் அழகு தென்படாமல் அவளது குணம் தென்படுகிறது. தெய்வமோ என ஐயுற்று அவளை வணங்க அவர்கள் சிரம், தாழ்ந்துவிடுகின்றது. இதனை அடிகள்" -மகாலட்சுமியை நாம் பார்த்ததில்லை. இவளைப் பார்த்தால் அவளைப் பார்த்தது போல்"- என்று கூறி அவளது தெய்வத்தன்மையைக் கூறுகிறார்.

தெய்வ ஒளி வீசும் கண்ணகியைக் கண்ட கோவலன், அவளிடம் ஏதோ ஒரு குறை இருப்பதைக் கண்டான். அது என்னவென்று அவனுக்கே தெரியவில்லை. வணக்கத்திற்கு உரிய தெய்வமாகிவரும் கண்ணகி வாழ்விற்கு ஏற்றவளாயில்லை. இளமைக்கு உரிய பண்புகள் யாவுமின்றி, கண்ணகி, கோவலனுடன் தனி வாழ்க்கை நடத்தினாள். அவன் அவளை மான் என்றான், மயில் என்றான். அவள் பதில் பேசவில்லை, பேசா மடந்தையாக, அடங்கிய பெண்ணாக தெய்வ ஒளியுடன் அவள் வாழ்ந்துவரும் நாளில், கோவலன் மனத்தில் எழுந்த சூறாவளிக் காற்றை அவள் அறிய முடியவில்லை. மனோதத்துவத்தில் பேராசிரியராக இருந்த திரு. சுந்தரம் பிள்ளை, ஆடவரின் மனம் இயற்கையாகவே அறநெறியினின்று வழுவும் தன்மையுடையது என்றும், அந்த மனம் சூறாவளி போல் அலையும்போது மனைவி தான் நங்கூரமாய் நின்று அவனுடைய அறநெறியைக் காக்க வேண்டுமென்றும் கூறுகிறார். கோவலனின் மனமும் மாறத் தொடங்கியது. ஆனால் அவள் அதை உணரவில்லை. இந்நிலையில் மாதவியின் தோழி கூனி "பத்து இலட்சம் பொன் கொடுத்து இம்மாலையை வாங்கத் தகுதியுடையவர்கள் இவ்வூரில் இருக்கிறார்களா? அப்படியானால் அவர்கள் இம்மாலையை வாங்கி மாதவியிடம் கொடுத்து அவளை மணம்புரிந்து கொள்ளட்டும்" என்றாள்.

கோவலன் மாதவியின் ஆட்டத்தைக் கண்டவன். "ஆடவர் கண்டால் அகறலும் உண்டோ, பேடியரன்றே? பெற்றியினின்றிடில்" என்று கூறும் அழகையுடைய மாதவியைச் சிறிது எண்ணினன், அவன் மனம் சிறிது ஆட்டம் கண்டது. பின்னர், "இப்பெரும் பொருளைக் கொடுத்து வாங்கும் வணிகப் பெருமகன் இருக்கின்றானா?" என்ற சொல் அவனை ஒரு குலுக்குக் குலுக்கியது. ஏன் நான் இல்லையா? என்றான். இனம் தெரியாத ஏக்கமுடைய அவன் மாதவிபால சென்றான். அவன் திரும்ப நினைத்தான் முடியவில்லை. இதனைத் தான் "விடுதல் அறியா விருப்பு" என்று கூறுகின்றார்.

ஏறத்தாழ 14 ஆண்டுகள் மாதவியிடம் வாழ்ந்தான். அங்குச் சிறு வயதில் எழாத ஐயம். அவனுக்கு வயது முதிர்ந்த காலத்தில் ஏற்பட்டது. மாதவி ஆடினாள்; பாடினாள். அவன் மனம் மகிழ்ந்தான். ஆனால் அவன் உள் மனதில் ஏதோ ஓர் ஏக்கம் குடிகொண்டிருந்தது. மாதவிக்கு ஒரு மகள் பிறந்தாள். அவளைச் சீராட்டி வளர்த்தாள். அவன் அவள் பிறந்த நாள் விழாவில் செய்த தான தருமங்கள் அளவிட முடியாதன. அவள் பருவ மங்கையானாள். பருவ மங்கைக்குத் தாயான மாதவி மேல் ஐயமுற்றான் கோவலன். இதற்குக் காரணம் என்ன?

கோவலன் சிறந்த பண்பாளன். இதற்குச் சான்றுகள் சிலப்பதிகாரம் தருகின்றது. யானையை அடக்கிப் பிறரைக் காப்பாற்றும், தியாகபுத்தியும் வீரமும் உடையவன். பொருளைப் பிறருக்கு வாரிவாரிக் கொடுக்கும் வள்ளல் தன்மையுடையவன். சுருக்கச் சொன்னால் அவன் ஒரு செம்மல். அவன் மாதவியிடம் வந்தபின் கண்ணகியைக் கைவிட்ட குற்றம், அவன் மனத்தை அரித்துக் கொண்டிருந்தது. தாமரை இலைத் தண்ணீர் போல் மாதவியிடம் விடுதல் அறியா விருப்பினனாக இருந்தான் கோவலன். வாழ்விற்கேற்ற மனைவியைக் கண்ட அவன் தெய்வப் பண்புள்ள கண்ணகியைக் காணவிரும்பவில்லை. இக வாழ்வில் அவன் பெற விரும்பிய இன்பம், மாதவியின்பாலிருந்தது. கண்ணகி கோவில் கட்டி வழிபடும் தெய்வம். மறுப்பதற்கில்லை. ஆனால் அவள் வாழ்விற்குப் பயன்படவில்லை.

காலச் சக்கரம் சுழன்றது. கண்ணகி அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும் துறவோர்க்கு எதிர்தலும், தொல்லோர் சிறப்பின் விருந்து எதிர் கோடலும் செய்து. பொருளை எல்லாம் இழந்தாள். எழு நிலை மாடத்திலிருந்தவள். ஒட்டுக் கூடாரத்திற்கு வந்தாள். மக்கள் அவளைக்கண்டு இரக்கப்பட்டனர். மாமனார் உதவி செய்ய முன் வந்தார். ஈயென இரத்தல் இழிந்தது என்று எண்ணிய அவள் கொள்ளேன் என்று மறுத்தாள். அவளுடைய இந்த நிலையை அண்ணல் காந்தியடிகளின் சாத்விகப் போராட்டத்திற்கு ஒப்பிடலாம். அவள் அழுத கண்ணீரும் சிந்திய மூக்கும், பசலை படர்ந்த உருவமும், மக்களை மட்டுமின்றி, கோவலன் மனத்திலும் ஒரு மாற்றத்தைக் காட்டியது. இந்த எண்ணம் பீறிட்டு எழுந்த சமயத்தில் தான் அவன், இந்திர விழாவிற்குச் சென்றான். அங்குப் போட்டிப் பாடல்கள் நடைபெற்றன. குலமாதிற்கும், வேசியர் குடியில் பிறந்தவர்களுக்கும் உள்ள வேறு பாடுகளைச் சிந்திக்கலானான். நீதி நூல்கள் கூறியவைகளை அவன் நினைவுபடுத்திக் கொண்டான். அவன் உள்ள நிறைவினில் ஒரு கள்ளம் புகுந்தது. ஊடலுக்காகக் கண்ணகியிடம் ஏங்கினனே, அந்த ஊடலே அவனுக்கு இன்று கசப்பாகி விட்டது. அவன் பிரிந்தான்.

கண்ணகியிடம் கோவலன் நடு இரவினிலே வந்து "எழுக" என்றான். எழுந்தாள். "போவோம் மதுரைக்கு" என்றான். "ஆம்" என்றாள். மதுரை சென்றாள். வழியில் கோவலன் கோசிகன் மூலம் மாதவி தூய்மையானவள் என்பதை அறிந்து கொண்டான்.

தான் "எழு" என்று சொன்னவுடன் கண்ணகி எழுந்தது தவறு என்று கோவலன் மதுரை சென்றபின் அறிந்தான். கண்ணகியும் தான் தவறு செய்து விட்டாலும், அது அவனைப் பிரியாமலிருக்கச் செய்வதற்கே என்று கூறினாள். அவளுக்குத் தெரியும். அவன் காலை வரைதான் ஊரில் இருந்திருப்பானேயானால், அவனுடைய ஐயம் பொய் என்பது வெளிப்பட்டுவிடும். பின்னர் மாதவியிடமே சென்று விடுவான் என்று. அவள் மதுரை சென்ற பின் தான், தன் தெய்வீகத் தன்மையை உணர்ந்தாள். அவள் அதை மறைத்து, கோவலனுடன் இனிக்கப் பேசி, அவனை மகிழ்வித்தாள். ஆனால் அது கோவலனுக்கு எமனாகவே வந்தது. அவன் சிலம்பில் ஒன்றை வாங்கிச் சென்று விற்கமுற்பட்டவன், வஞ்சிக்கப்பட்டதனால் திருடன் என்று கூறப் பட்டவுடன் பேச்சற்று நின்றான். தெய்வம் பேசிவிட்டதைக் கண்ட கோவலன், பேச்சின் திறனை இழந்தான். கோவலன் கொலையுண்டான். இப்போது தெய்வக் கண்ணகிக்கு ஒரு பெரும் பொறுப்பு ஏற்பட்டு விட்டது. கோவலன் திருடன் என்ற பழி ஏற்பட்டதல்லவா? இதை எவ்வாறு பொய் என்று நிலை நாட்டுவது? எனவே கண்ணகியின் உள்ளத்தில்ஆழ்ந்து பொதிந்து கிடந்த தெய்வத்தன்மை தனது பேரொளி பெற்றுக் கிளம்பி வழக்குரைத்தல் மூலம் கோவலனது குற்றமின்மையை நிருபித்தது. 'அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதும்' என்ற நியதிப்படி கண்ணகியே அறதேவதையாகிப் பாண்டியன் முன் நின்றவுடன் அவனது ஆவி பிரிந்தது. மங்கல வாழ்த்துப் பாடலில் கண்ணகியின் பெருமையை உணர்த்தக் கருதிய அடிகள், அவளை மானிடப் பெண்ணாகக் காட்டினாலும், அவளது மாண்பு தெய்வத் தன்மையுடையது என்றே புலப்படுத்தினார். அத்தெய்வத் தன்மை மதுரைப் பாண்டியன் காலத்தில் வெளிப்பட்டுச் செயல்பட்டது. பின்னர் செங்குன்றம் சென்ற கண்ணகி அங்கு தெய்வமாக ஊர்தி ஏறிச்சென்றாள் எனக் கூறுகிறார் அடிகள்.

பின்னர், மாதவியும் கோவலன் இறந்துபட்ட செய்தி கேட்டுத் துறவுபூண்டு தவ வழியில் தலைப்பட்டனள். அவளது கருத்துக்கேற்ப மணிமேகலையும் இளமைத் துறவு மேற்கொண்டு இடையில் ஏற்பட்ட காம இடையூறுகளை வெற்றியுடன் கடந்து, சமய உண்மைகளைக் கேட்டு, பவத்திறம் நீங்க நோற்றுப் பரகதி அடைந்தனள். இங்ஙனமாக காப்பியம் முழுவதும் பேரின்பமாம் பிறவா இன்பப் பெற்றியே திகழக் காண்கின்றோம். திருவள்ளுவர் காமத்துப் பாவில் தலைவன் தலைவி உறவு கூறுமுகத்தான் சீவான்மா பரமான்மாவில் என்றும் பரநிலையை விளக்கியதற்கு ஏற்ப இளங்கோவடிகளும் கண்ணகிக் கதையை மையமாகக் கொண்டு, வையத்துள் வாழ் வாங்கு வாழும் முகத்தான் தெய்வமாக முடியும் என்ற பெரும் பேரின்ப நிலை விளக்கியருளினார் என்று கொள்ளுவதே சாலவும் பொருந்துவதாகும்.

# நடிப்புச் சீர்திருத்தம்

★

தி. க. சண்முகம்

அண்மையில் சில நாடகங்களை நான் பார்க்க நேர்ந்தது. அவை ஒரே காட்சியமைப்பில் நடைபெற்ற நாடகங்கள். அந்த ஒரு காட்சி மிகச் சிறந்த முறையில் ஆடாமல், அசையாமல் உறுதியாக அமைக்கப் பெற்றிருந்தது. திரைப் படங்களிலே நாம் பார்க்கிறோமல்லவா? அதைப்போல விசாலமாக - அழகாக மேடையைச் சுற்றிலும் தட்டிகள் போட்டு மிக இயற்கையாக அந்தக் காட்சியைப் படைத்திருந்தார்கள்.

நான் பார்த்த நாடகங்கள் சமுதாய நாடகங்கள். சோபாக்கள், மேஜைகள், புத்தக அலமாரிகள், ஊஞ்சற் பலகை மற்றும் நாடகத்தின் தேவைக்கு வேண்டிய ஒவ்வொரு பொருளையும் கச்சிதமாக ஒழுங்கு செய்து வைத்திருந்தார்கள்.

சாதாரணமாக நாடகங்களில் பாத்திரங்கள் பெரும்பாலும் நின்று கொண்டே நடிப்பது வழக்கமல்லவா? இந்த ஒரே காட்சியில் நடைபெற்ற நாடகங்களில் அப்படியில்லை. நடிகர்கள் ஆசனங்களில் உட்கார்ந்து கொண்டும், அவ்வப்போது நடமாடிக்கொண்டும் சிறப்பாக நடித்தார்கள். அவர்களுடைய நடிப்பு மிகவும் பாராட்டக்கூடியதாக இருந்தது, இயற்கையாக இருந்தது.

இந்த நாடகங்கள் சுமார் ஆயிரம் பேர்களே அமரக்கூடிய அரங்குகளில் நடந்தன. அதனால் கை, கால்களை அதிகமாக அசைத்து நடிக்கவேண்டிய அவசியமும் நடிகர்களுக்கு ஏற்படவில்லை. முகபாவங்களிலேயே உணர்ச்சிகளை நன்றாக வெளிப்படுத்த முடிந்தது.

இந்த ஒரே காட்சி நாடகங்களில் மின்சார விளக்குகளையும் நன்றாக - பின்னால் தட்டிகளில் நிழல் விழாதபடி நிரந்தரமாக அமைத்துக்கொள்ள வசதி இருக்கிறதல்லவா ? எனவே, அந்தக் குறையும் ஏற்படவில்லை. நாடகங்கள் நன்றாக இருந்தன.

இவ்வாறு நான் பார்த்த ஒரே காட்சியமைப்பில் நடைபெற்ற நாடகங்கள் நான்கு. அவை [''தேன்கூடு, சதுரங்கம், மேஜர் சந்திரகாந்த், வழி நடுவில்''] ஆகியவை. இவை நான்கும் சமுதாய நாடகங்கள்.

நடிப்புச் சீர்திருத்தம் எனும் தலைப்பிலே பேசும்போது முதலாவதாக இவ்வாறு நடைபெற்ற நாடக அமைப்புச் சீர்திருத்தத்தைப் பற்றிக் குறிப்பிடவேண்டியது என்னுடைய கடமையாகும்.

இன்று நடிப்புச் சீர்திருத்தம் என்பது நாடக அமைப்புகளிலே ஏற்படும் சீர்திருத்தத்தையும் பொறுத்துத்தான் இருக்கிறது.

நான் நாடகத் துறையில் ஈடுபட்ட 1918-ஆம் ஆண்டில் இருந்த நடிப்பு முறையே வேறு. நாட்டியங்களிலே சொல்லுக்குச் சொல் கையெடுத்துக் காட்டும் அபிநயத்துக்கும், நாடகங்களிலே காணும் நடிப்புக்கும் அந்த நாளில் அதிக வேற்றுமை இல்லாதிருந்தது.

அப்போதெல்லாம் மேடையில் வெளிச்சமும் மிகவும் குறைவாக இருக்கும். ஆக மொத்தம் மூன்றே கியாஸ் விளக்குகளை மேடையிலே கட்டித்தொங்க விட்டிருப்பார்கள் அந்த வெளிச்சத்தில் தான் நாடகங்கள் நடைபெற்றன, அந்த நாளில் பொதுமக்கள் எப்படி நாடகங்களைப் பார்த்து நடிப்பை ரசித்தார்கள் என்பதை இன்று எண்ணிப் பார்த்தால் வியப்பாகத்தான் இருக்கிறது.

இதில் மற்றொரு வேடிக்கை. காட்டுத் திரையை விடும்போது இந்த மூன்று கியாஸ் விளக்குகளில் முன்னால் தொங்கிக்கொண்டிருக்கும் இரண்டு விளக்குகளை அதே போன்று ஒரு சட்டத்தில் கட்டித் தொங்கவிட்டிருக்கும் அட்டைகளால் மேடையில் வெளிச்சம் தெரியாதபடி மறைத்துவிடுவோம். காட்டில் காட்சிகள் நடைபெறும் போது அதிக வெளிச்சம் இருக்கக் கூடாதல்லவா? அது தான் எங்கள் எண்ணம். இதையெல்லாம் அன்று ஆயிரக் கணக்கான மக்கள் பார்த்தார்கள். ரசிக்கவும் செய்தார்கள், ஒரு வேளை அந்தநாளில் நம் கண்களுக்கு இப்போது இருப்பதைவிட அதிகமான வலிமையும், கூர்மையும் இருந்திருக்குமோ என்னவோ தெரிய வில்லை,

இவ்வாறு குறைவான வெளிச்சத்தில் நாடகங்கள் நடைபெற்ற அந்த நாளில் அங்க அசைவுகளை அதிகமாகக் காட்டி நடிக்கவேண்டிய அவசியம் இருந்தது: நடிகன் கண்களிலோ, முகத்திலோ காட்டும் உணர்ச்சி வேறுபாடுகள் சபையோருக்குத் தெரியாது.

அதன் காரணமாகக் குரலிலும், அங்க அசைவுகளிலும் உணர்ச்சிகளைக் காட்டவேண்டிய நிர்ப்பந்தம் நடிகர்களுக்கு இருந்தது. அந்த அளவுக்கு இல்லையென்றாலும், இன்றும் அந்த நிலை முழுதும் மாறிவிட்டதாகச் சொல்லமுடியாது.

இன்று நம் தமிழகத்தில் பல்வேறு விதமாக நாடக அரங்குகள் அமைந்துள்ளன, அமைக்கப்பெற்றும் வருகின்றன. எவ்வளவு தான் மின்சார விளக்குகளைப் போட்டாலும் சுமார் ஐம்பது, அறுபது அடி தூரத்திற்கு மேல் போய்விட்டால் நடிகர்களுடைய கண்கள் சபையோருக்குத் தெரிவதில்லை. எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம். அந்த சிரசில் சிறந்த உறுப்பு கண். உணர்ச்சிகளைத் தெளிவாக வெளிப்படுத்திக் காட்டுவது கண்ணல்லவா? முகம் மட்டும் தெரிந்து என்ன

பயன்? எனவே முகபாவங்களின் மூலம் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதோடு ஓரளவுக்கு அங்க அசைவுகளையும் காட்ட வேண்டியதாகத்தான் இருக்கிறது.

ஆயிரம் மக்களைக் கொண்ட அரங்கிலும், அதற்கு மேல் ஐயாயிரம், பத்தாயிரம் மக்களைக்கொண்ட திறந்த வெளி அரங்கிலும் நாடகம் நடிக்கவேண்டிய நடிகர்கள் அந்தந்த அரங்குக்கு ஏற்றவாறு நடிக்கப் பழகிக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

நான் முதலில் குறிப்பிட்ட ஒரே காட்சியமைப்பைக் கொண்ட நாடகங்களை அதிகமான மக்கள் இருக்கும் சபையில் நடிப்பது சிரமம். ஆசனத்தில் உட்கார்ந்த வண்ணம் உரையாடிக் கொண்டிருப்பதை எவ்வளவு நேரம் பார்த்துக்கொண்டிருக்க முடியும்? சபையோருக்கு அயர்வு ஏற்பட்டுவிடாதா? எனவே, நடிப்புச் சீர்திருத்தம் என்பது நாடக அமைப்புகளிலே ஏற்படும் சீர்திருத்தத்தோடு, நாடக அரங்குகளிலே ஏற்படும் சீர்திருத்தத்தையும் பொறுத்திருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இப்போது மேடையில் போடும் வெளிச்சம், நடிகனின் கண் அசைவைக் கூட சுமார் ஐம்பது, அறுபது அடி தூரம் வரையில் சில சமயங்களில் அதற்கு மேலும் தெளிவாகக் காட்டும். ''பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும்'' என்று வள்ளுவப் பெருந்தகையார் கூறியிருப்பதற்கொப்ப, பகை உணர்வையும், நட்புணர்வையும் கண்களிலேயே காட்டலாம். அங்கங்களை அதிகமாக அசைத்து நடிக்க வேண்டியதில்லை. ஆனால் இதை எல்லா அரங்குகளிலும் நகரங்களிலும் பின்பற்ற முடிவதில்லை. ஆயிரம்பேர் அமரக் கூடிய அரங்கிலே நடிக்கவேண்டிய முறைவேறு, ஐயாயிரம பேர் அமர்ந்திருக்கக்கூடிய திறந்த வெளி அரங்குகளிலே நடிக்க வேண்டிய முறை வேறு. இதை நடிகர்கள் புரிந்து கொண்டால்தான் அவர்களுக்கு வெற்றி கிடைக்கும்.

முன்னாலிருந்து பார்க்கும் ரசிகர்களுக்கு நடிகர்களின் முகபாவம் தெரியும். பின்னால் தூரத்திலிருப்பவர்கள் நடிகன் அசையாமல் நிற்பதாக எண்ணுவார்கள். எனவே, கை கால்களை அசைத்து நடிகர்கள் தங்கள் உணர்ச்சிகளைக் காட்டவேண்டும்.

திரைப்படங்களில் சந்தர்ப்பங்களுக் கேற்றவாறு 'குளோஸ்அப்' எடுத்து பெரிய உருவமாக்கித்திரையில் காட்டி விடுகிறார்கள். நாடக மேடையில் அப்படிச் செய்வது இயலாது. நடிகன் கை கால்களை அதிகமாக அசைப்பது முன்னால் இருக்கும் ரசிகர்களுக்கு மிகை நடிப்பாகக் கூடத் தோன்றும். என்ன செய்வது? ஐந்தடி தூரத்திலிருக்கும் ரசிகர்களையும் நூறு இருநூறடி தூரத்திலிருக்கும் ரசிகர்களையும் ஒருங்கே திருப்திப்படுத்த நடிகன் பழகிக்கொள்ள வேண்டும்.

இது ஒலிபெருக்கி உலகம் நூறு, இருநூறு பேர் உட்காரக்கூடிய சபையாக இருந்தால் கூட இன்று ஒலிபெருக்கி தேவைப் படுகிறது. மனித சக்தி அந்த அளவுக்குக் குறைந்துவிட்டது. இந்த நாளில் ஐயாயிரம் பேர் கொண்ட சபையில் ஒலிபெருக்கியைக் கவனியாமல் ஒரு நடிகன் பேசி நடித்துக்கொண்டிருந்தால் சபையோர் சும்மாவிருப்பார்களா?

ஒரு நாடகப் பாத்திரம் கீழே உட்கார்ந்தோ, அல்லது படுத்துக்கொண்டோ பேசவேண்டிய கட்டமாக இருக்கலாம். அல்லது ஒரு அரசன் மேடையின் கோடியில் சிம்மாசனத்தில் அமர்ந்து கொண்டே பேச வேண்டியதாகவும் இருக்கலாம். என்ன செய்வது? நடிகரின் குரல் கேட்கவில்லையென்றால் மரியாதையாக கீழே இறங்கி வந்து ஒலிபெருக்கியின் முன் நின்று கதறித்தான் தீரவேண்டும். இல்லையென்றால் அரசருக்காக ஆசனத்தருகே ஒலி பெருக்கி வைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

சில நாடக அரங்குகளில் ரசிகர்களுக்கு ஓரங்களில் இடம் கிடைத்துவிடும். நாடகப் பாத்திரங்கள் மேடையில் சற்று தூரத்தில் நின்றால் அவர்களைக் கண்ணால் பார்க்கக்கூட ரசிகர்களுக்கு வாய்ப்பு நேராது. அவர்களும் பணம் கொடுத்து வந்தவர்களல்லவா? அவர்களையும் திருப்திப்படுத்த வேண்டுமே? அந்தச் சமயங்களில் நாங்கள் உள்ளே இருந்து நடிகர்களை ''முன்னால் போ, முன்னால் போ'' என்று முன்னுக்குத் தள்ள முயல்வோம்.

ஒரு வேடிக்கையான சம்பவத்தை உங்களுக்குச் சொல்கிறேன். ஒலி பெருக்கியை நாங்கள் மேடையில் உபயோகப்படுத்தாத காலம். சிவலீலா நாடகம் நடித்துக்கொண்டிருந்த நாளில் நடந்த நிகழ்ச்சி சிவலீலாவில் பாணபத்திரர் ஒரு பக்தர், சிறந்த பாடகர். அவருக்குப் போட்டியாக ஹேமநாதர் என்னும் மற்றொரு மகாவித்துவான் வருகிறார். பாண்டியன் சபையில் அந்த மகா வித்துவான் ஹேமாநாதரோடு போட்டியிடவேண்டிய நெருக்கடி பாணபத்ரருக்கு ஏற்பட்டு விடுகிறது. போட்டியில் ஹேமநாதரைத் தாம் வெல்ல முடியாது என்பதும் பாணருக்குப் புரிகிறது. பாணர் பகவானைச் சரணடைகிறார். சோமசுந்தரப் பெருமான் சந்நிதிக்குச் சென்று தன் அவலநிலையைக்கூறி முறையிடுகிறார். நல்ல அருமையான ஒரு விருத்தப்பாடல்; சந்நிதியில் சிவலிங்கத்திற்கு முன் நின்று பாடுவது வழக்கம். நாடகம் நடந்தது. நாடகம் முடிந்த மறு நாள் ஒரு விமர்சகர் நாடகத்தைப்பற்றி எழுதியிருந்தார். அந்தக் குறிப்பு நகைச்சுவையோடு எழுதப் பெற்றிருந்தது. குறிப்பைக் கேளுங்கள்;

> ''பாணர் சபையைப் பார்த்தே பாடியிருக்கலாம். இறைவனைப் பார்த்துத்தான் பாட வேண்டும் என்று அவசியமில்லை, இறைவனுக்கு எங்கிருந்தாலும் அவர் குரல் கேட்கும். ஆனால் சபையோருக்குப் பாணரின் பாடல் கேட்க வேண்டுமே? அதைப் பாணராக நடித்த நடிகர் மறந்துவிட்டார் போலிருக்கிறது''

என்று குறிப்பிட்டிருந்தார். பாவம், பாணராக நடித்தவர் சபையையே பார்த்துக்கொண்டு பாடாமல் கொஞ்சம் இயற்கையாக நடிக்க முயன்றதால் வந்த வினை இது.

பாடல்களுக்கும் காட்சிகளுக்கும் அந்த நாளில் இருந்த முதன்மையான இடம் இன்று இல்லை. கதை, உரையாடல், நடிப்பு இவற்றிலேதான் ரசிகர்கள் இன்று அதிகமாகக் கவனம் செலுத்துகிறார்கள். காட்சிகளும், பாடல்களும் இரண்டாவதாகத்தான் இடம் பெறுகின்றன. சமுதாய நாடகங்கள் தோன்றிய காலம் முதல் நடிப்புக்கே முதன்மையான இடம் இருந்துவருகிறது.

நடிப்பிலே படிப்படியாக முன்னேற்றமும் சீர்திருத்தமும் ஏற்பட்டுக்கொண்டுதான் வருகின்றன.

நடிப்புச் சீர்திருத்தம் என்னும் போது மற்றொன்றையும் இங்கே குறிப்பிட வேண்டும். நடிகர்கள் தம் குரலிலேயும் உணர்ச்சிகளை நன்றாக வெளிப்படுத்தப் பழகிக் கொள்ள வேண்டும். இதற்குத் தனியான பயிற்சி தேவை. வீரம், சோகம், காதல் முதலிய மெய்ப்பாட்டுணர்ச்சிகளை யெல்லாம் குரலிலேயும் வெளிப்படுத்தலாம். ஐயாயிரம், பத்தாயிரம் பேரைக்கொண்ட திறந்த வெளி அரங்குகளில் சபையில் பெரும்பாலோர் இந்த நடிப்புணர்ச்சி மிகுந்த குரலைக் கேட்டுத்தான் திருப்தியடைகிறார்கள். வானொலி நாடகங்களில் குரலின் மூலம் தான் நடிகர்களுடைய திறமை வெளிப்படவேண்டியதாக இருக்கிறது. வளமான குரல் இல்லாதவர்கள் வானொலி நாடகங்களில் வெற்றிபெற இயலாது.

இன்னொன்று, நான் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். நடிப்புச் சீர்திருத்தத்தை ரசிகர்களும் வரவேற்கப் பழகிக்கொள்ள வேண்டியது அவசியம்.

நான் சமீபத்தில் வங்காளத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே கல்கத்தாவில் ஒரு நாடகம் பார்த்தேன். ஒரு சுரங்கக் காட்சி. சுமார் அரைமணி நேரம் நடந்தது. மிகவும் குறைவான வெளிச்சம், பேட்ரி விளக்குகளை வைத்துக்கெண்டு நடிகர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்த வெளிச்சமும் நடிகர்களின் முகங்களிலே விழவில்லை. பாத்திரங்கள் நடமாடுவது மட்டும் கண்களுக்குத் தெரிந்ததே தவிர முகங்கள் தெளிவாகத் தெரியவில்லை. உண்மையாக ஒரு சுரங்கத்தில் எவ்வளவு வெளிச்சம் இருக்குமோ அதைச் சபையோர் உணரும் முறையில் விளக்குகள் அமைக்கப் பெற்றிருந்தன.

இவ்வளவுக்கும் நான் முன் வரிசையிலேதான் அமர்ந்திருந்தேன். குரலைக்கொண்டுதான் இன்னார் பேசுகிறார் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. சுமார் அரை மணி நேரம் நடைபெற்ற இந்த இருட்டுக் காட்சியைச் சபையோர் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

நம் தமிழகத்தில் இம்மாதிரிக் காட்சியை ரசிகர்கள் வரவேற்பார்களா என்பது சந்தேகம். அதற்கு இன்னும் சில காலம்போக வேண்டும். திரைப்படங்களிலே கூட இரவு நேரக் காட்சிகளில் கொஞ்சம் இருட்டாக இருந்தால் இன்னும் சென்னைக்கு வெளியேயுள்ள சிறிய நகரங்களில் சபையோர் கூச்சல் போடுவதைக் கேட்டிருக்கிறேன்.

எனவே நடிப்பிலே சீர்திருத்தம் என்னும்போது, நாடக அமைப்பு முறைகளிலே சீர்திருத்தம், நாடக அரங்குகளிலே சீர்திருத்தம் இவற்றோடு நாடக ரசிகர்களின் எண்ணங்களிலே சுவைகளிலேயும்கூட சீர்திருத்தம் ஏற்படவேண்டியிருக்கிறது.

இந்தச் சீர்திருத்தங்கள் படிப்படியாக ஏற்பட்டுக் கொண்டுதான் வருகின்றன. நான் முதலில் குறிப்பிட்டபடி இந்த ஒரே காட்சியில் நடக்கும் நாடகங்களை சென்னைக்கு வெளியே சிறிய நகரங்களில் உள்ள மக்கள் எப்படி வரவேற்கிறார்கள் என்பதையும் பார்க்க வேண்டும். இவற்றை ரசிக்கத் தொடங்கிவிட்டால் இதையடுத்து இன்னும் நடிப்பில் பல விதமான முன்னேற்றங்களையும் காட்டி வெற்றிபெறத் தமிழக நடிகர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

காட்சி அமைப்புகளே இல்லாமல் நாடகங்களை நடிக்க வேண்டுமென்று ஒருசில ரசிகர்கள், விரும்புகிறார்கள். வெள்ளை, பச்சை, மஞ்சள், சிவப்பு, கறுப்பு நிறத் திரைகளைப் போட்டு நடிப்பது சீர்திருத்தம் தான். ஆனால் எனக்குத் தெரிந்தவரையில் பாரதத்தின் எந்தப் பகுதியிலும் பெரும்பாலான நாடக ரசிகர்கள் அந்த முயற்சிக்கு ஆதரவளிக்கவில்லை. அம்மாதிரி நடைபெற்ற சில நாடகங்களைக் காணும் வாய்ப்பு எனக்கும் ஏற்பட்டது. பெரும்பாலும் அழைப்பின் பேரில் வந்தவர்கள் தாம் அந்த நாடகத்தைப் பார்த்தார்களே தவிர பணம் கொடுத்து அனுமதிச் சீட்டுப் பெற்றுவந்தவர்கள் மிக மிகக் குறைவு.

ஆடிப்பாடிக் குதித்து அங்கங்களைக் கோணல் செய்து சொல்லுக்குச் சொல் கையைத் தூக்கி நாட்டிய அபிநயம் போல் நடித்த காலம் போய், இப்போது ஓரளவுக்கு இயற்கையாக நடிப்பதைப் பார்க்க ஏராளமான ரசிகர்கள் வருகிறார்களே யென்று நாம் மகிழ்ச்சியடைய வேண்டும்.

ஒரே காட்சியில் நாடகம் முடிந்துவிட வேண்டும் என்று நான் வற்புறுத்தவில்லை. இயன்ற வரையில் காட்சிகள் நாடகத்தில் குறைவாக இருந்தால் தான் அவற்றை உருண்டுயரும் திரைகளாக விடாமல் நல்ல முறையில் அமைத்துக் காட்டலாம். இன்னும் இயற்கையாக நடிக்கலாம். இத்தகைய குறைந்த காட்சிகள் உள்ள நாடகங்களை நான் பெரிதும் வரவேற்கிறேன். ஆனால் குறைந்த காட்சிகளில் நாடகங்கள் எழுதும் ஆசிரியர்கள் தாம் எழுதும் நாடகங்களைத் தமிழகத்தின் சூழலில் - நம்முடைய பழக்க வழக்கங்களை மனதில் கொண்டு ஆங்கில நாடகத்தைப் பார்ப்பது போன்ற உணர்வு தோன்றாத வண்ணம் எழுத வேண்டும் என்பது என் வேண்டுகோள்.

அத்தகைய நாடகங்கள் தோன்றிவிடுமானால் நடிப்பிலே இன்னும் பல சீர்திருத்தங்களைச் செய்து மகத்தான வெற்றிபெறக் கூடிய நடிகர்கள் தமிழகத்தில் இருக்கிறார்கள் என்பதை நம்பிக்கையோடும் உறுதியோடும் சொல்லிக் கொள்ளுகிறேன்.

வணக்கம்.



# புதுமை வேண்டும்

★

புலவர் சி. அரசப்பனார்

தமிழ்மொழி வாழவேண்டும். தமிழர் தமிழ்மொழியைப் புதுமையூட்டி வளர்க்கவேண்டும். தமிழர் வாழ்வில் ஏற்படுகின்ற மாற்றமும் உயர்வும் தமிழில் ஏற்படவேண்டும். பழுத்த மட்டை விழுவதும், குருத்து தோன்றுவதும் தென்னையின் வளர்ச்சியைக் காட்டும் அறிகுறிகள். அதேபோல் ஒரு மொழி மக்களால் பேசப்பட்டு எழுதப்பட்டு வந்தால் நிச்சயம் அதில் வளர்ச்சி இருக்கும். அந்த வளர்ச்சி வலுக்க வலுக்க வேண்டாத சொற்கள் வழக்கிழந்த மரபுகள் மறைந்தே தீரும்.

தமிழ் மொழியின் பழைமையான இலக்கணம் தொல்காப்பியம். அதில் மரபு கூறப்பட்டிருக்கிறது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்திலக்கணம் பற்றியும் விரிவாகக் கூறுகின்றது. அவற்றிற்கு மேலாகத் தமிழர்கள் வாழ்வியல் கூறுகளான அறம், புறம் பற்றிய செய்திகள் பிற மொழியினருக்குப் புதுமையானவை. இத்தனையும் கூறிய தொல்காப்பியர் புதுமையையும் வரவேற்றுக் கூறுகின்றார்.

உலக அறமுரைத்த தெய்வப் புலவர் திருவள்ளுவர் "எண்ணித் துணிக" என்றார். எண்ணித் துணிக என்ற கருத்தைக் கொண்டு திருவள்ளுவர் புதுமையை விரும்புவதைக் காணலாம். பழமையானவற்றில் நல்லன் வேண்டும். அழியாத உண்மைகள் வேண்டும். அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப் பொருள்கள் என்றும் நிலைத்தவை. அன்பும், அறமும், பண்பும் எல்லா மக்களாலும் போற்றப்படுவது. உயிர், வினை. தெய்வம், மறுபிறப்பு போன்ற எண்ணங்கள் நம் முன்னோர்களின் தெளிந்த நம்பிக்கை. இளங்கோவடிகள் "தெய்வம் தெளிக, தெளிந்தோர் பேணுக" என்றார். இந்தக் கருத்தில் பழமைக்கு அரணும் புதுமைக்கு வரவேற்பும் காணலாம். இன்றும் தெய்வத்தைத் தெளிகின்றோம். தெய்வம் தெளிந்த சான்றோர்களைப் போற்றுகின்றோம்.

நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவர் "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்றார். பழையன கழிகின்றன, பழைய பாண்டங்களை எறிகிறோம். காய்ந்த சருகு எருவாகிறது, கிழிந்த துணி குப்பையாகிறது. அதேபோல் பழைய எண்ணங்கள், அழியத்தான் வேண்டும்.

மன்னன் வாழ்ந்தான். அன்று இறைவனாக மதிக்கப்பட்டான். பெரிய காவியங்கள் எழுந்தன. இன்று மன்னர்களே இல்லை, காவியப் போக்கு மாறுகின்றது. ஞாயந்தானே !

சங்க கால இலக்கியங்கள் குடும்ப இயல்பை நன்கு சித்தரிக்கின்றன. மெய்மையும் இயற்கை நுகர்வும் இன்றும் போற்றப்படுகின்றன. ஆனால், மன்னர் போற்றலும், புலால் உணவு போற்றலும், பரத்தையின் வழிச் செல்லலும் போற்றக்கூடிய செயலா ? எனவேதான் திருவள்ளுவர் கள், சூது, புலால் உண்ணல், பரத்தை நேசம் முதலிய கருத்துக்களைக் கண்டித்தார்.

குடும்பத்தில் போற்றப்பட்டுவந்த இசை. நாடகம் முதலிய நுண்கலைகள் அரண்மனைக்கும, செல்வர் குடும்பங்களுக்கு உரியனவாயிருந்தவற்றைத் தேவார, திருவாசக ஆசிரியர்கள் கோவிலுக்குக் கொண்டுவந்தனர். இறைவனின் பெருமையை மக்கள் உணர்ந்தனர். அத்துடன் கலைகள் பொதுமக்களின் புலன்களுக்கு விருந்தாயிற்று. இது ஒரு புதுமை வேண்டலே. பின்பு. விஞ்ஞானிகள் தோன்றினார்கள். இசையையும். படக்காட்சியையும் எல்லா மக்களும் இருந்த இடத்திலிருந்தே கேட்க. பார்க்க இயலுகின்றது.

இடைக்காலத்தில் மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற எழுத்தாளர் பலர் எழுதிக் குவித்தனர். உலா என்றும், பிள்ளைத் தமிழ் என்றும் 96 வகைச் சிறு நூல்கள் தோன்றின. இவற்றில் மக்களின் புலன் நுகர்ச்சியுடன் அன்றைய தமிழகத்தின் உணர்ச்சிப் பெருக்கையும், வறுமையையும், புகழ்ப் போக்கையும் காணலாம். இதுவும் புதுமையே.

சங்க காலம் குடும்பத்தைப் போற்றியது. காவிய காலம் கற்பனையில் பெருமை கண்டது. தேவார, திருவாசக காலத்தில் தெய்வத்தின் பெருமை தெருவெல்லாம் முழங்கப்பட்டது. இசையும் நாடகமும் வளர்ந்தன.

ஆட்சி ! சிந்தனை திரும்பியது. இராமலிங்க அடிகள் "அருளாட்சி" வேண்டினார். கவிஞர் பாரதியார் "சுய ஆட்சி" வேண்டிப் பாடினார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நாம் மூவேந்தரால் ஆளப்பட்டோம். அன்று ஆட்சி பற்றிக் கவலை இல்லை. மொழி வளர்ச்சிபற்றி அதிகம் கவனிக்க வேண்டிய அவசியம் இல்லை. எல்லாம் மன்னர் கவனித்தார்.

இருநூறு ஆண்டுகளுக்கு முன் குழப்பம். மேற்கு நாட்டார் வருகை. நம்நாட்டு மன்னர்களின் அழுக்காறு, உட்பகை, தோல்வி.

அன்று நமக்கு வறுமைபோக்க எண்ணம். சுதந்திரமடைய முயற்சி. நாட்டு மக்களை ஒன்று திரட்ட வேண்டிய அவசியம்.

பின் சுதந்திரம் கிடைத்தது. பெண்ணின் பெருமை பேசினோம். நம் நாட்டைப் பெருமையோடு வாழ்த்தினோம்; அடிமைத்தனத்தை இழித்தோம்; பழித்தோம். அடிமை நாடுகளுக்குச் சுதந்திரம் வேண்டினோம். உலகமெல்லாம் சமாதான ஆர்வம் வேண்டுமென்று மாநாடு கூட்டத் தொடங்கினோம். இவையெல்லாம் நம் நாட்டின் சரித்திரக் குறிப்பு.

இப்போது நாம் அவற்றைத் திரும்பத் திரும்பக் கூறுவதில் எழுதுவதில் பயன் இல்லை.

பெற்ற சுதந்திரத்தைக் காப்பாற்ற வேண்டும். அதற்கு நாம் ஒன்றுபடவேண்டும். அந்த ஒற்றுமையில் ஆண்டான் அடிமை நிலை இல்லாமல் அன்பால், பண்பால் ஒற்றுமை வேண்டும்.

பெண்ணின் உரிமை பேச இதுவா காலம்? நம் நாட்டுப் பெண்-ஐ. நா. சபையின் தலைவராக இருந்தாய்விட்டது. பெண்களில் பலர் கவர்னராகவும், அமைச்சராகவும், மருத்துவராவும், விஞ்ஞானிகளாகவும், பேராசிரியர்களாகவும், கல்லூரித் தலைவர்களாகவும், பேச்சாளர்களாகவும் விளங்குகின்றனர். இப்போது கூறவேண்டியது, பெண்கள் அடக்கமாக இருக்கவேண்டும். உளநூல் அறிவுடன் உடல் நூல் அறிவையும் பெறவேண்டும். உடையிலும் வாழ்க்கை முறையிலும் எவ்வளவு மாறி இருக்கிறோம். உணர்வில் மாறவேண்டாமா? நகையை குறைக்க வேண்டாமா? நாட்டுணர்ச்சி கொள்ளவேண்டாமா? சிக்கனம் தேவையல்லவா இவை உணர்த்தும் கதையும் கட்டுரையும் எத்தனை வெளிவந்துள்ளன?

இளைஞர்கள் உடையிலும், பேச்சிலும், அலங்காரத்திலும் மாற்றமிருக்கிறது. அறிவில், பண்பில், கூட்டுறவில், நாட்டுணர்ச்சியில், மொழிப்பற்றில்–புதுமை உண்டா? புகழ்ச் செயல் உண்டா?

ஆயிரம் ஆயிரம் பட்டதாரிகள் நம் நாட்டில் வாழுகின்றனர். பட்டம் எதற்கு? பத்து இருபது தொகை பெறத்தான்?

ஆங்கிலப் படிப்பே படிப்பென்றிருந்தோம். அது பழுத்த எண்ணம். இன்று ஆங்கிலமின்றியும் கருத்துண்டு. தாய்மொழி மூலம் அறிவைப் பெறலாம் என்பது புது எண்ணம்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் மாஸ்கோ சென்று தமிழில் பேசினர். ஆங்கிலத்திலும். இரஷ்ய மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டது இரஷ்யர் தமிழ் ஒலியை முதன் முதலாகக் கேட்டார்கள்.

தலைவர் திரு. கு. காமராஜ் தில்லியில் அகில இந்தியக் குழுவில் தமிழில் பேசினர். அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இந்தியாவில் வழங்குகின்ற எல்லா மொழி மக்களும்


# கரூர் வைஸ்யா பாங்கு லிமிடெட்.

தலைமை ஆபீஸ்:- கரூர். ஷெட்யூல்ட் பாங்கு.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:—

169, ஜவஹர் பஜார் தெரு, கரூர்.

பிராஞ்சுகள்:-

கோயமுத்தூர் (ஒப்பண்ணகாரத் தெரு, & ஜெயில் ரோடு) மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், தஞ்சாவூர், வேலூர் (வ. ஆ), கும்பகோணம், திண்டுக்கல், ஈரோடு, திருப்பூர், பொள்ளாச்சி, தாராபுரம், கோபிசெட்டிபாளையம், குளித்தலை, நாமக்கல், கரூர் பிராஞ்சு, சத்தியமங்கலம், இடப்பாடி, உடுமலைபேட்டை, விழுப்புரம், திருவண்ணாமலை, சிதம்பரம், விருத்தாசலம்.

சென்னை கிளை:-

456–457, தங்கச்சாலை தெரு, பார்க் டவுன், மதராஸ்-3.

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | ரூ. | 25,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. | 12,50,000 |
| ரிசர்வுகள் | ரூ. | 12,15,000 |
| டிபாசிட்டுகள் | ரூ. | 4,40,61,000 |
| மொத்த வரவு செலவுகள் | ரூ. | 5,00,00,000க்குமேல் (ஐந்து கோடிக்கு மேல்) |

பிக்ஸட் டிபாசிட்டுகள் :— 3 மாத கெடுவிலிருந்து பத்து வருஷங்கள் கெடு வரையில் கவர்ச்சிகரமான வட்டிகள் வீதம் ஏற்றுக்கொள்ளப்படும்.

கரண்டு கணக்குகளுக்கு @ 1% P.A, வட்டி.

சேவிங்ஸ் டிபாசிட்டுகள் :- @ 3% P.A. வட்டி வாரம் ரூ. 1,000 வரையில் வாங்கலாம்.

மூன்று வருட காஷ் சர்ட்டிபிகேட்டுகள்:- ரூ. 100, 500, 1000, 5000க்கு முக மதிப்புள்ளவைகள் 5:3% P. A. கவர்ச்சிகரமான வட்டி பெறக் கூடியவைகள்.

மாதாந்திர டிபாசிட்டுகள் :- 2 & 3 வருஷங்கள் தவணைக்கு @ 5% P. A. வட்டி. சிறு சேமிப்பு திட்டத்தின் அடிப்படை அம்சமானது. இதில் டிபாசிட் செய்து பயன் அடைய அரிய சந்தர்ப்பம் இதுவே.

மற்றும் கவர்மெண்ட் பாண்டுகள், தங்க நகைகள் வியாபாரச் சரக்குகள் முதலியவைகளின் பேரில் குறைந்த வட்டிற்கு கடன்கள் கொடுக்கப்படும். பில்கள், செக்குகள், ரயில்வே ரசீதுகள், லாரி ரசீதுகளுடன் கூடிய பில்கள் டிஸ்கவுண்டு செய்வதற்கும் வசூலுக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

சகல பாங்கு வரவு செலவுகளும் நடத்தப்படும். விபரங்களுக்கு எங்கள் எந்த ஆபீசிலும் கேட்டுத் தெரிந்துகொள்ளவும்.

கரூர்
4—10—63

C. ராமநாத செட்டி,
செக்ரடரி & மானேஜர்.

ஒரு மணி நேரம் தமிழ்ப் பேச்சைக் கேட்டனர். ஒலி—தமிழ்ஒலி—இனிமையாக இருந்தது.

நாம் இதுவரை செய்த தொண்டெல்லாம் அடுத்தவர்களுடைய மொழியைக் கஷ்டப்பட்டுக் கற்று அதில் பேசுவது, எழுதுவது. இது போற்றத்தக்கதுதான். இச் செயல் அவரவர்களுக்குப் பெருமையும் இலாபமும் தரும் செயல்தான். ஆனல், அத்தகைய செயல்களால் மொழிவளர ஏதுவில்லை. மொழி ஒலியை அவர்கள் கேட்டதே இல்லையே.

எனவேதான், மொழிவளரப் புதுமை வேண்டும். புதிய முறையில் தொண்டு வேண்டும்.

கரையான் தின்று கிடந்த பனையோலைகளை அச்சாக்கி நூலாக்கியது ஒருவகைத் தொண்டு.

தமிழில் கதை, கட்டுரை, கவிதை, நாவல் எழுதுவது இது ஒருவகைத் தொண்டு.

சங்க இலக்கியங்களையும், சமய இலக்கியங்களையும் எளிய இனிய உரைநடையில் எழுதிக் குவிப்பது மற்றும் ஒருவகைத் தொண்டு.

தமிழ் மொழியின் உயர்வை ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் எழுதுவது ஒருவகைத் தொண்டு.

நாம் இதுவரையில் எணிக்கொண்டிருந்ததும், செய்துகொண்டு வருவதும் இத்தகைய தொண்டுதான். இவை போதா. "இறவாத புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்ற வேண்டும்" என்ற பாரதி வாக்கு நிறைவேற்ற வேண்டும். சில நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இவைமட்டும் போதுமா? நிச்சயம் போதாது.

ஆங்கிலத்தைப் படித்தவர்கள் பிறமொழி என்று ஆரியத்தையும், இந்தியையும் தமிழுடன் ஒட்டாது விரட்டுகின்றனர்.

ஆரியத்தையும், இந்தியையும் படித்தவர்கள் பிற மொழி என்று ஆங்கிலத்தை, பிரஞ்சை தமிழுடன் ஒட்டாது விரட்டுகின்றனர். இதில் எது சரி? இரண்டும் தவறே.

தமிழ் அண்மையிலுள்ள மலையாளத்துடனும், கன்னடத்துடனும், தெலுங்குடனும் அல்லவா முதலில் உறவாட வேண்டும். முன்கூறிய இரண்டுவிதக் கருத்திலும் அண்மை நோக்கம் இல்லை. அதில் புதுமை வேண்டும்.

எத்தனையோ மொழிபெயர்ப்பு நூல்கள் வெளிவந்திருக்கின்றன. ஆனல் திரு. ஜனதிபதி. சர். இராதாகிருஷ்ணன் நூற்றுக்கணக்கான உரைநூல்கள் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். தமிழ் மொழிபெயர்ப்பு உண்டா. திரு. சர். ஆ. இலட்சுமணசாமி முதலியார் பல அருமையான மருத்துவ நூல்கள் எழுதியுள்ளார். அவற்றைத் தமிழ்ப்படுத்தினல் தமிழருக்கு எவ்வளவு நலமாக இருக்கும்.

திரு. சர். சி. பி. இராமசாமி ஐயர் எழுதிய சட்ட நுணுக்க நூல்களையும், அரசியல் நூல்களையும் தமிழ்ப்படுத்தினல் நம் மக்கள் எத்துணை நலம் எய்துவர்?

திரு, சர். ஆ. இராமசாமி முதலியார் தொழில் நுணுக்க நூல்களைத் தமிழ்ப்படுத்தலாகாதா?

உலகப் பரிசாகிய நோபெல் பரிசைப் பெற்ற ஒரே தமிழர் சர். சி. வீ. இராமன் எழுதிய விஞ்ஞான நூல்கள் எத்தனை தமிழ்ப்படுத்தப்பட்டுள்ளன!

இவற்றையெல்லாம் எண்ணி ஆங்கிலம் படித்த தமிழறிஞர்கள் பணிபுரிய வெண்டும்.

"புதுமைவேண்டும்" என்ருல், பழமைப் பகைவன் என்றெண்ணல் தகாது. பழமையில் மிஞ்சிய நல்லனவும், புதுமையில் பூத்துக் குலுங்கும் நலலனவும் நாம் வரவேற்க வேண்டும்.

ஒருவன் ஒருத்தி என்ற மரபைப் பகைத்து "ஒருவன் ஒருவள்" என்று எழுதிவிட்டால் தமிழ் வளர்ந்து விடாது. ஒரே கருத்துடைய ஆண் பெண் உறவு பற்றிய ஆயிரக்கணக்கான கதைகளை எழுதி நிரப்புவதாலும் தமிழ் வளர்ந்துவிடாது. பழைய இலக்கிய விமர்சனமே எழுதிக் கொண்டிருந்தாலும் போதாது.

தமிழ் வாழவேண்டுமானல் புதுமையைத் தமிழ் மக்கள் அனைவரும் வரவேற்க வேண்டும். உடையும், உறைவிடமும், போக்குவரத்தும் எவ்வளவு மாறி இருக்கின்றன. அந்த அளவில் மொழியும் கருத்தில் புதுமை கொண்டு வளரவேண்டும். நன்கு தமிழ் வளர வேண்டுமானல் கருத்தில் பொதுமை இருக்க வேண்டும். மொழித்தூய்மை, பணபுடைமை மிகமிக வேண்டும்.

ஆங்கிலம் நன்ருக உச்சரித்துப் பேசுகின்றவர்களைப் பாராட்டுகிறோம. ஆரியத்தில் நல்ல உச்சரிப்பைப் பெரிதும் மெச்சுகிறோம. தமிழ்ப் பேச்சில் எழுத்தில் ஏன் அவற்றைக் கவனிப்பதில்லை?

எளிமை வேறு, பிறமொழிக் கலப்பு வேறு. மொழியில் எளிமை வேண்டும். கருத்தில் உயர்வும புதுமையும் வேண்டும்.

கலைகளில் ஆழ்ந்து பயிலவேண்டும். ஆயிரம் ஆயிரம் மருத்துவம், இசை, ஓவியம், விஞ்ஞானம் பற்றிய நூல்கள் எழுதவேண்டும் உலகிற்குப் புதுமையான மனப்பண்பு, சகிப்புத்தன்மை, உலகுடன் ஒட்டி வாழல் முதலிய கருத்துக்களில் புதுமையுடன் அணுக வேண்டும்.

# உரிமை

★

ஏ. எஸ். ராகவன்

அழகு வழிந்து ஓடுகிறது நிலைக் கண்ணாடியில். முழங்காலைத் தொடும் கூந்தலை வலது தோளில் சரிய விட்டால் ஒரு அழகு; இடது தோளில் சரிய விட்டால் ஒரு அழகு. கண்ணாடியே அவளைக் கண்டு பிரமித்து விட்டதா என்ன? காதளவு நீண்ட அக்கண்கள் ஏன் அவளையே அப்படி உற்றுப் பார்க்கின்றன!

அந்தப் பார்வையைத் தாளாமல் மீனா தனக்குத் தானே ஏனோ சிரித்துக் கொள்கிறாள். அந்தச் சிரிப்பு கூட கண்ணாடிக்குள் பளபளக்கிறது, முத்துப் பல் வரிசை விளிம்பு கட்டி. ஆனால் சிரிப்பில் பெருமை இல்லை; பொறுமல்தான் இருக்கிறது.

அடுத்த அறையில் ஒரே அமர்க்களம். காலை முதலே அமர்க்களம் தான். லல்லுவுக்கு அல்லவா அலங்காரம் நடக்கிறது அங்கே!

அப்பா இன்னும் மாடியிலிருந்து இறங்கவில்லை.

பக்கத்து வீட்டுப் பாட்டியின் கைத்தடி மீனாவின் அறைச் சுவரைத் தட்டிக்கொண்டு அடுத்த அறைக்குப் போகிறது. பாட்டிக்குக் கண் பார்வை மங்கி விட்டது என்பதற்கு அந்தக் கைத்தடியே சாட்சி. பார்வை போனால் என்ன? உலகை அளந்து பார்த்த பழுத்த அறிவு இருக்கிறதே! பாட்டியின் வாய் அடுத்த அறையிலிருந்து கூவுவது கேட்கிறது. "அடியம்மா! லல்லுக்குட்டியா இது! எத்தனை அழகடி என் ராஜாத்தி! ...காமாட்சி, உடனே திருஷ்டி கழித்துப் போடு... என் கண்ணே பட்டுவிடும் போலிருக்கு!"

மீனாவுக்குச் சிரிப்பு திமிறிக்கொண்டு வந்தது. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள். திமிறிக்கொண்டு வருகிற எல்லா உணர்ச்சிகளையும் அடக்கி அடக்கிப் பழகிப்போயிருக்கிறாள் அவள்.

லல்லுவுக்குத் திருஷ்டி கழித்து முடிந்ததும் முடியாததுமாக பாட்டிக்குச் சுவையான காபி கிடைத்து விட்டது.

அப்பா மாடியிலிருந்து இறங்கி வந்தார். "என்ன, எல்லாம் தயாரா? நான் போய் அவர்களை அழைத்து வரலாமில்லையா?" என்று கேட்டார்.

"இன்னமும் நீங்கள் புறப்படவில்லையா? நன்றாகத் தான் இருக்கிறது போங்கள்...மசமசன்னு இங்கேயே நின்று கொண்டிருந்தால் காரியம் ஆகிவிடுமா?" என்றாள் சித்தி.

அப்பா சிரித்தார். பிறகு அறைக்குள் தலையை நீட்டி, "லல்லுக்குட்டி, உனக்கு ஒன்று வாங்கி வந்திருக்கிறேன்...என்னவென்று சொல்லு, பார்க்கலாம்," என்றார்.

லல்லு பாய்ந்து வந்துவிட்டாள்.

"மீனா நீயும் வா," என்றார் அடுத்தபடி.

மீனா வெளியே வந்தாள்.

கோட்டுப் பைக்குள்ளிருந்து இரண்டு ஜோடி வளையல்களை வெளியே எடுத்தார் அவர். சிவப்பில் ஒரு ஜோடியும், நீலத்தில் ஒரு ஜோடியுமாக வளையல்கள் மின்னின.

"உனக்கு எது வேண்டும்?" என்றார் அப்பா.

லல்லு பேசாமல் நிற்கவே மீனா சிவப்பைப் பொறுக்கினாள்.

"பேஷ் ... எடுத்துக்கொள்," என்றார் அப்பா.

இச்சமயம் லல்லு வாய் திறந்தாள். "எனக்கு சிவப்பு வளையல்கள்தான் பிடிக்கும். நீலம் வேண்டாம்." கோபம் கலந்து தடித்து வந்தது.

"சிவப்பிலே ஒரு ஜோடிதான் இருந்தது. இல்லாவிட்டால் இரண்டு ஜோடியும் அதே நிறமாக வாங்கியிருப்பேன்," என்றார் அப்பா, அவளை சமாதானப்படுத்துவது போல.

சித்தி முகத்தை உர்ரென்று வைத்துக்கொண்டு விட்டாள். லல்லு முகத்தை உர்ரென்று வைத்துக் கொள்ளவில்லை. எப்போதுமே அவளுடைய முகம் உர்ரென்றுதான் இருக்கும்.

அதனால் என்னப்பா? லல்லுக்குச் சிவப்பு வளையல்களைக் கொடுங்கள். எனக்கு நீலமே போதும்," என்றாள் மீனா, திமிறி வந்த பொறுமலை அடக்கிக்கொண்டு.

அப்பா சிரித்தார். அந்தச் சிரிப்புக்கு என்ன பொருள் என்பது மீனாவுக்குத் தெரியும். தம் உணர்ச்சிகளை எல்லாம் மறைத்துக்கொண்டு சிரித்துச் சிரித்து எதையும் சமாளிக்க அவர் பழகிவிட்டார். "நான் புறப்படலாமில்லையா?" என்றார் சித்தியைப் பார்த்து.

"ஜோசியம் கேளுங்கள் ... நீங்கள் புறப்படுவதற்குள் ராகு காலம்கூட வந்துவிடும்," என்றாள் சித்தி.

அப்பா புறப்பட்டேவிட்டார்.

அடுத்த அறையில் மீண்டும் அமர்க்களம். "லல்லு, நீல ஜாக்கெட்டைப் போட்டுக்கொள். அது இன்னும் பொருத்தமாக இருக்கும்." என்றாள் சித்தி.

“எனக்கு நீல ஜாக்கெட்டே கிடையாது.” லல்லு பொருமினாள்.

மீனா பொருமினாலாவது அதற்கு அர்த்தம் உண்டு. லல்லு பொருமலாமா? நீலப் பட்டுத்துணி தனக்கு வேண்டாம் என்று அவளே தான் ஒதுக்கினாள். அது மீனாவுக்கும் கிடைத்தது. அப்படியிருக்க ......

“நல்ல பெண்ணடியம்மா நீ!” உரக்க மகளைக் கடிந்தாள் சித்தி. அடுத்து கீழ்ஸ்தாயியில் என்னவோ சொன்னாள். அவள் என்ன சொல்லியிருப்பாள் என்பது மீனாவுக்குத் தெரியும். அவள் சொல்ல விட்டுப் போனதெல்லாம்கூட அவளுக்குத் தெரியுமே!

மீனா எழுந்து பெட்டியைத் திறந்து நீல ரவிக்கையை எடுத்தாள். “சித்தி, இந்தாருங்கள் நீல ஜாக்கெட்,” என்று கொண்டுபோய்க் கொடுத்தாள்.

“இது என்னடி கூத்தாக இருக்கிறது...உன் ரவிக்கை வேண்டுமென்று கேட்டோமா என்ன?...நல்ல நாளும் அதுவுமாக இரவல் வாங்கித்தான் போட்டு நிரப்புவார்களோ!” என்றாள் அவள், மீனாவை ஏற இறங்கப் பார்த்து விட்டு.

லல்லு பௌடரை அப்பிக் கொண்டிருந்தவள், திரும்பவே இல்லை.

மீனா திரும்பி வந்தாள். அவளுக்கு இதொன்றும் புதிதில்லை. பழகிப் போனதுதான். அப்பா எந்தச் சாமான் வாங்கி வந்தாலும் போராட்டம் இல்லாமல் பங்கு விழாது. போன தீபாவளிக்கு இரண்டு புடவைகள் வாங்கி வந்தார் அப்பா. இரண்டும் ஒரே நிறம், ஒரே ரகம். இரண்டுக்குமே ஒரே தலைப்பு. போராட்டத்தை வென்றுவிட்டதாக அப்பாவுக்கு நினைப்பு, ஆனால் போராடவென்றே வருபவர்களுக்கு ‘ஒரு காரணம் காணுதல் கஷ்டமோ!’ அந்த இரண்டுக்குள் மீனாவின் புடவை அழுத்தமான நெசவாம். லல்லு எப்படியோ கண்டுபிடித்து தன் துரதிருஷ்டத்தைச் சொல்லிச் சொல்லி அழுது தீர்த்தாள். மீனா தன் அதிர்ஷ்டத்தைச் சொல்லிச் சொல்லி அழுது தீர்த்தாள்.

அம்மா இருந்தால் வீடு இப்படியா இருக்கும்!

மீனா கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அம்மாவை அவளுக்கு நினைவே இல்லை. பிறந்த ஒரு ஆண்டுக்குள்ளேயே தாயைச் சாப்பிட்டு விட்டவள் அவள். அப்போதே அதிர்ஷ்டம் ஆரம்பமாகி விட்டது. அப்பாவைச் சொல்லிக் குற்றமில்லை. அவர் என்ன செய்வார்! சித்தி வந்ததும் வீட்டில் எல்லாமே மாறி விட்டன. அப்பா தஞ்சாவூர் பொம்மையாக யார் ஆட்டினாலும் ஆடி ஆடி நிமிர்ந்து கொண்டிருந்தார். ஒரு பக்கமாகச் சரிந்து விடாமல் இருக்கிறாரே, அது அவளுடைய அதிர்ஷ்டம்.

வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. மீனாவுக்கு மனது படபடவென்று அடித்துக்கொண்டது. வரப் போகிறவர் எப்படி இருப்பாரோ!

நிலைக்கண்ணாடியையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

“வாருங்கள்...வாருங்கள்...”

“இப்படி ஜமக்காளத்தில் உட்காரலாமே...டேய், ‘பேன் ஸ்விட்சை’ப்போடு.”

உபசாரம் தடபுடலாக நடந்தது. மீனா தலையைத் திருப்பவே இல்லை. பார்வை அங்கே இருந்தாலும் சற்று நேரத்தில் நடக்கப் போகும் தேர்வை எண்ணி நெஞ்சு கலங்கியது. தனக்கு மாலையிடப் போகிறவர் எப்படி இருப்பாரோ! இத்தனை நாள் அவளைச் சீராட்டிய துரதிர்ஷ்டம் இன்று அவளை என்ன செய்யக் காத்திருக்கிறதோ! அவளுக்காகப் பரிந்து பேச, அவளுக்காகப் போராட யார் இருக்கிறார்கள்? எதிலும் விட்டுக் கொடுத்து விட்டுக்கொடுத்து தன்னை நிலைப்படுத்திக் கொள்ளும் அவலநிலை கண்ணாடிக்குப் பின்னே, ரசமாக உறைந்து கிடக்க, அழகென்னும் வெளித் தோற்றம் அவளையும் ஒரு பெண்ணாய், பேதையாய் அரங்கில் நிறுத்தி வேடிக்கை பார்க்கிறது.

மீனா கண்ணைத் துடைத்துக்கொண்டாள். சே! சே! அழலாமா... ஏன் அழவேண்டும்?... அவளுக்கென்று ஒரு வாழ்க்கையை இனிமேலா இறைவன் அமைக்கப் போகிறான்? ஏற்கனவே போட்டு முடித்த அந்தக் கணக்குப் பிசகவா போகிறது?

திடீரென்று நிலைக்கண்ணாடி பூரித்து உயர்ந்தது. மீனா திகைத்துவிட்டாள்.

அவளுடைய தோளுக்கு அருகே கண்ணாடியின் மேற்பாகத்தில் ஒரு உருவம் நின்றது. குறு குறுக்கும் கண்களும் நிமிர்ந்த நெற்றியும் நெளியும் கேசமுமாக ஒரு யுவராஜன் அங்கு நின்றான். கூடத்துக்கு வரும் நிலைப்படியில் அந்த உருவம் சற்று நின்று அவளைப் பார்த்தது. அடுத்தகணம் அந்த உருவம் கூடத்தோடு, கூட்டத்தோடு கலந்துவிட்டது.

மீனாவை வெட்கமும் மகிழ்ச்சியும் ஒருங்கே பற்றிக் கொண்டன. இவர்தானா அவளைப் பெண் பார்க்க வந்திருப்பவர்? எத்தனை அழகாக இருக்கிறார்! மா நிறம் தான். ஆனாலும் அந்த நெற்றியில் எத்தனை தேஜஸ்! அவருடைய பார்வையில் என்ன இருந்தது! எவ்வளவோ இருந்தது. அவளை அவளுடையமனத்தை, அவளுடைய மனத்துக்குள்ளிருந்த ‘அவளை’ அது ஊடுருவிப் பார்ப்பது போலல்லவா இருந்தது!

கூடத்தில் திடீரென்று சிரிப்பு வெடித்தது. அந்தச் சிரிப்பொலியின் குப்பலில் கூட அந்த யுவராஜனின் குரல் தனியே அவள் காதில் ஒலித்தது. காதில்மட்டுமா? நெஞ்சிலும் ஒலித்தது. மீனாவுக்கு இப்படி எல்லாம் தனக்கு, தன்னுள், தன்னையும் அறியாமல் ஜாலங்கள் நிகழும் என்பது தெரியாது.

“மீனா, வந்து நமஸ்காரம் செய்யம்மா,” என்றார் அப்பா.

மீனா எழுந்தாள், கால் தள்ளாடிற்று. கண் துடித்தது. இடது கண் தான். அதிர்ஷ்டம் வருகிற அறிகுறி. கூடத்துக்கு வருவதற்குள் போதும், போதுமென்று ஆகிவிட்டது. ஆயிரம்தடவை ஓடியாடிய கூடம் இன்று என்னவோ உயரே, எங்கோ இருக்கிற சுவர்க்கலோகம்

போல காலுக்கு அகப்படாத பிரதேசமாக இருக்கிறதே! எப்படியோ சமாளித்துவிட்டு நிமிர்ந்தாள். நிமிர்ந்த பார்வைக்குள் அவர் ... அவரே தான் ... நின்ருர்! குறு குறுக்கும் அதே கண்கள், நிமிர்ந்த நெற்றி, நெளியும் கேசம்! இப்போது ஒரு சிறு முறுவலும் அவற்ருேடு கூடி நின்றது. அடேயப்பா, என்ன துணிச்சல் அவருக்கு!

மீனு ஓடிவிட்டாள் அறைக்குள்.

''இவள் மூத்த பெண் மீனு ... பிரமாதமாகப் பாடு வாள் ... திருவாய்மொழி பூராப் பாடம் ... வீட்டுக் காரி யங்களிலே சூட்டிகை,'' என்ருர் அப்பா.

''அதைச் சொல்லுங்கோ முதலிலே...வீட்டுக் காரி யங்களும், குடும்பப் பாங்கும் தானே பெண்ணுக்கு முக் கியமாகத் தெரிந்திருக்கணும்,'' என்ருள் ஒரு அம்மாள். சொல்லிவிட்டு தன் வைர அட்டிகையை புடவைக்கு மேலே நன்ருகத் தெரியும்படி எடுத்து விட்டாள் அந்த அம்மாள்.

''லல்லு, வாம்மா...''

லல்லு வந்தாள். நமஸ்கரித்தாள். அவளுக்கும் இதே போல் வர்ணனை தொடர்ந்தது. ஆனல் சற்று மாற்றத்துடன். லல்லுக்குப் பாட வராது. சமையலும் தெரியாது. ஆனல் வராததெல்லாம் வருவது தானே திருமண ஏற்பாடு! அவளுக்கு இந்தி தெரியும். இந்த இந்தியில் சற்று அதிகமாகவே நிரவல் நீண்டது.

அடுத்த அறையில் ஆலோசனை நடந்தது. அப்பா சித்தியோடு என்னவோ பேசினர். சித்தி லல்லியோடு என்னவோ பேசினள். மீனு தனக்குள் இருந்த 'அவ ரோடு' என்னவோ பேசிக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரம் கழித்து அப்பா மீனுவிடம் வந்தார். ''என்னம்மா, உனக்கு சம்மதம் தானே?'' என்று கேட்டார்.

மீனு என்ன சொல்வாள்? தலையை ஆட்டினுள்.

''மாப்பிள்ளை தங்கக் கம்பிம்மா...மாசம் முந்நூறு ரூபாய் சம்பாதிக்கிருர். என்னவோ இங்கே தான் உனக்கு ஒரு சுகமும் இல்லே...புருஷன் வீட்டிலாவது சந்தோஷமாக வாழவேண்டும் நீ...''

''அப்படிச் சொல்லாதீர்கள், அப்பா...இங்கே எனக்கு ஒரு குறையும் இல்லே.''

அவர் பெருமூச்சு விட்டார். ''உன் நல்ல குணத் துக்குத் தானம்மா கடவுள் உன் பங்கில் இருக்கிருர்... இல்லாவிட்டால் செக்கச் செவேலென்று ராஜா மாதிரி மாப்பிள்ளை உனக்கு வாய்ப்பாரா?...அவ்வளவு பொரு மைப் பட்ட லல்லிக்கு கறுப்பு மாப்பிள்ளை தான் வந்தி ருக்கிருர்...பார்த்தாயா?'' என்று கூறிவிட்டுக் கூடத் துக்குச் சென்ருர்.

மீனுவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. செக்கச் செவேலென்ற மாப்பிள்ளையா? அப்பா என்ன சொல்கி ருர்? கண்ணும் காலும் துடிக்க சன்னலருகில் சென்று பார்த்தாள். அதே சமயம் அந்த யுவராஜரும் அவளைப் பார்த்தார். அவருக்கு அருகில் இருந்தவரை இதுவரை மீனு கவனிக்கவில்லை. படிய வாரிய கேசமும், குனிந்த தலையுமாக, அங்கே செக்கச் செவேலென்று ஒருவர்...

செக்கச்செவேலென்ற அந்த குனிந்த தலைக்கா அவள் தலை குனிய வேண்டும்? இது என்ன ஏற்பாடு? அப்பா ஏன் முன்னமேயே இதை அவளிடம் சொல்ல வில்லை? அவளுக்கு நெஞ்சு விண்டுவிடும்போலிருந்தது.

கால்கள் தொய்ந்தன, ''அப்பா'' என்று அலற வேண்டும் போலிருந்தது. சரேலென்று திரும்பிப் படுக் கையில் விழுந்தாள். 'ஐயோ, கண்ணுடியில் ஏன் வந்து காட்சியளித்தீர்கள்? என் உள்ளத்தை ஒரு நொடியில் ஏன் கொள்ளை கொண்டீர்கள்? நீங்கள் என் னுடையவராக ஆக மாட்டீர்களா? நீங்கள் ஒருவேளை என்னுடையவராக ஆகாமற் போகலாம். ஆனல் இனி நான் எவருடையவளாக ஆவேன்?' அப்பா கேட்ட போது மனதிலிருப்பதைச் சொல்லியிருக்கலாம். ஆனல் அவருடைய ஏற்பாடு இப்படி இருக்கும் என்பதை அவள் கண்டாளா? அடுத்த அறையில் தான் எல்லா அமர்க்களமும் நடக்கிறதே தவிர இந்த அறை பற்றி எவருக்கு அக்கறை?

மீனு கலங்கித் துடித்தாள், துடித்துக் கலங்கினுள்.

கூடத்தில் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டி ருந்தன.

சிறிது நேரம் கழிந்து அங்கும் ஏதோ கலக்கமும் துடிப்பும் ஏற்பட்டிருக்கும் போலிருக்கிறது. அடுத்த அறையில் அப்பாவும் சித்தியும் என்னவோ பேசிக் கொண்டிருந்தனர். அப்பா துடித்தார். சித்தி கலங்கினுள்.

''நான் என்ன செய்கிறது?...அவர் ஒரே பிடிவாத மாயிருக்கிருரே!''

''எனக்கு எதுவுமே புரியவில்லை போங்கள். இந்த வீட்டில் தான் இப்படி எல்லாம் அதிசயம் நடக்கிறது. என் அண்ணுவும் தான் இரண்டு பெண்ணுக்கு ஒரே நாளில் நிச்சயதார்த்தம் நடத்தினர். ஒரு வார்த்தை மாறுதல் உண்டா சம்பந்திகளிடத்திலே?'' என்ருள் சித்தி.

மீனுவுக்கு ஒன்றுமே புரியவில்லை. வார்த்தை மாறு தலா! வரதட்சிணைத் தகராறு போலிருக்கிறது!

மீனு வேண்டாத தெய்வங்களை எல்லாம்வேண்டிக் கொண்டாள். எப்படியாவது, ஏதாவது ஒரு தகராறு ஏற்பட்டு இந்த சுயம்வரம் நின்று போகட்டும். ஆமாம். நின்று போகட்டும். நிலைக் கண்ணுடியில் வந்து நின்று அவளது நெஞ்சத்திலும் வந்து நின்று விட்ட அந்த யுவ ராஜரைத் தவிர வேறு எவருக்கும் அவள் தலை குனிய மாட்டாள். இத்தனை நாள் அவள் விட்டுக் கொடுத்தே பழகி விட்டாள். இனியும் அது நடவாது. அப்பா விடம் தன் மனத்தில் இருப்பதைச் சொல்லிவிட வேண் டும். அதற்கான துணிவைத் திரட்டிக் கொண்டு நின் ருள் அவள்.

அப்பா வந்தார். முகம் தொங்கியிருந்தது.

''என்னப்பா ?''

கைராசி! ஸ்ரீ ராமஜெயம் கைராசி!!

கைராசியுடன் உங்கள் விருப்பத்திற்கேற்றவாறு

எல்லாவிதமான பித்தளை, தாம்பரம், வெண்கலம், எவர்சில்வர் பாத்திரங்கள்

ஒரே விலைக் கொள்கையில் வாங்க சிறந்த இடம்

ஸ்ரீ ராமவிலாஸ் பாத்திரக்கடை,

(ஜி. ஆர். சீனிவாசன் பட்டு ஜவுளிக்கடைக்கு எதிரில்)

545, தேரடிக்கடை வீதி, (மலைவாசல் சமீபம்) திருச்சி-2.

(தொலை பேசி எண். 2309)

"கடவுள் மறுபடியும் சோதனை செய்கிறார், மீனா..''

அவளுக்குப் புரியவில்லை. அவரையே பார்த்தாள்.

"உனக்கென்று நான் நினைப்பது எதுவும் உனக்கு இல்லாமல் போகிறது... நான் பேரட்ட கணக்கு பிசகி விட்டதம்மா.''

"என்னப்பா சொல்கிறீர்கள்?''

"சந்திரன் உன்னைத்தான் கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறார், மீனா ... ... பிடிவாதமாக இருக்கிறார் ... ... செக்கச்சிவக்க ராஜா மாதிரி மாப்பிள்ளை உனக்கு மாலையிட வேண்டும் என்று நான் போட்ட கணக்கு பிசகிவிட்டது...''

"அப்பா!'' மீனா அலறினாள், வேண்டிய தெய்வங்களை எல்லாம் வாழ்த்திக்கொண்டு.

அவள் ஏன் அலறினாள் என்பது விளங்காமல் அப்பா அவளுடைய கூந்தலை வருடினார். சமாதானமாக என்னவோ சொன்னார்.

அவை எல்லாம் அவள் காதில் விழுமா? நெஞ்சின் விம்மலில் பெருமை பிடிபடாது புரண்டெழுந்து அவளை விழுங்கும்போது, நிலமை புரியாத அப்பாவின் சமாதானங்கள் எதற்கு? அவளை விரும்பி மணக்க ஒருவர் இருக்கிறார்! அப்பாவின் ஏற்பாட்டையே மாற்றி, அவளைத் தான் மணப்பேன் என்று பிடிவாதமாக இருக்கிறார்! இந்தப் பெருமை போதாதா? வாழ்க்கை முழுதுமே விட்டுக்கொடுத்தே பழகியவளுக்கு இதைவிட வேறு என்ன வெற்றி வேண்டும்!

"மீனா!''

கனவில் திளைத்தவளுக்கு அப்பாவின் அழைப்பு காதில் விழவில்லை.

"என்னம்மா சொல்றே?''

மீனா திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். "என்னப்பா சொல்கிறீர்கள்?'' என்று கேட்டபோது அவள் கன்னங்களில் மகிழ்ச்சி குழியிட்டது.

அப்பா சிரித்துக்கொண்டே தலை நிமிர்ந்து வெளியே சென்றார். அவருக்குப் புரிந்துவிட்டது.

நிலைக் கண்ணாடிக்குள் இப்போது அழகோடு பெருமையும் வழிந்து ஓடுகிறது! காதளவு நீண்ட அக் கண்கள் இப்போது நெஞ்சளவு நீண்டு ஓடுகின்றன!

சிறப்பு மலர்

# குழந்தை இலக்கிய உலகம்

குழந்தைகளுக்குத் தாய்ப்பால் இன்றியமையாத தொன்று. குழந்தை சற்று வளர்ந்து, பேச, எழுத, படிக்கத் தொடங்கும்போது அதன் வளர்ச்சிக்கு இலக்கிய உணர்வும் இன்றியமையாததாகும்.

சிவாஜி, மகாத்மா போன்ற பெருமக்கள் வாழ்வின் வரலாற்றிலும் இந்த உண்மை நமக்குக் கலங்கரை விளக்காக நின்று வழிகாட்டுகிறது.

குழந்தை உள்ளம், அறிவின் சுடர் கண்டு, அலை மோதும் தவிப்புடன், மலருகின்ற காலத்தே சத்துள்ள இலக்கிய உணர்வுகளை நாம் ஊட்டத் தவறினல் குழந்தையின் உள்ளம் வெம்பிப்போன பிஞ்சைப்போல ஆகிவிடக் கூடும். நிலை தவறும். நெறி மாறும். தறிகெட்டுப் போய் விடவும் கூடும்.

அவல நிலையில் வாழும் பெரிய குழந்தைகளைக் காணும் போது குற்ற உணர்ச்சியும் பரிதாபமும் உள்ளத்தில் தோன்றுவதுண்டு.

வளர்ந்து வரும் குழந்தை உலகத்தின் தேவைக்கு அயராது, தளராது, தாய்மை உணர்வோடு பணிபுரியும் திருத்தொண்டர் படையைத் திரட்டி, அவர்களது எழுத்தோவியங்கள் மூலம் குழந்தை இலக்கிய உலகத்திற்கு வளமார்ந்த இலக்கியத்தை எழுத்தாளனில் தொகுத்துக் கொடுத்திருக்கிருர் குழந்தை இலக்கிய உலகில் ஒளிர்விடும் தாரகையாக விளங்கும் திருச்சி பாரதன் அவர்கள். அவரது இலக்கிய ஆர்வம் வளர்க என்று வாழ்த்தி, முடிந்த மட்டும் குற்ற உணர்ச்சியிலிருந்து விடுதலை பெறுகிறேன்.

"ரெட்டியார்"

மற்றவர்களுக்கு அறிவுரை கூறவேண்டுமா? அதற்கு அனுபவம் நிறையவேண்டும். இலக்கியம் படைப்போருக்கு அறிவுரை கூறுகிறார், மயிலை சிவமுத்து தாத்தா அவர்கள். அவருக்கு உள்ள அனுபவம்... யாருக்குத் தெரியாது?

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★



# இலக்கியம் படைப்போருக்கு...

*தமிழ்ப் பெரியார் மயிலை. சிவமுத்து*

சின்னஞ்சிறு குழந்தைகட்குக் கதை எழுதுவதற்கோ, கவிதை புனைவதற்கோ, நல்ல புலமையும், கற்பனு சக்தியும், உலகானுபவமும் பெரிதும் வாய்த்திருத்தல் வேண்டும் என்பது காவேரிப்பாக்கம் நமச்சிவாய முதலியார் அவர்களுடைய எண்ணம். ''கடுகளவு கற்பிப்ப தாயினும் கடலளவு கற்றிருத்தல் வேண்டும்'' என்னும் பழமொழியை அந்தப் பெரியார் எடுத்துக் கூறுவார்.

முதல் வகுப்புப் படிக்கும் குழந்தைக்கு ஐந்தாம் வகுப்பு வரையில் படித்த ஓர் இளைஞன் ஆசிரியனுக இருக்கலாம் என்று எண்ணும் சிலருடைய தவருன கருத்தை அவர் பல கூட்டங்களில் கண்டித்துப் பேசியிருக்கிருர். இந்தக் கருத்துக்கள் குழந்தை இலக்கியம் படைப்போருக்கு மிகவும் பொருத்தமானவை.

குழந்தைகட்குக் கதையோ கட்டுரையோ எழுத விரும்பும் ஓர் எழுத்தாளர், தாம் கற்றவைகளையெல்லாம் முற்றிலும் ஒதுக்கிவைத்துவிட்டுக் குழந்தைத் தன்மையோடு இருந்து குழந்தை உள்ளத்தோடு எழுதத் துவங்குதல் வேண்டும்.

அவ்விதம் எழுதும்போது கடினமான பதங்களோ நீண்ட வாக்கியங்களோ இல்லாமல் இருக்கவும் அவர்கள் கவனித்துக்கொள்ளவேண்டும். கவிதை புனேதற்கும் இவை பொருந்தும். எதை எழுதினுலும் நல்ல கருத்துக்கள் அதில் அமைந்திருக்க வேண்டும். 'இந்தக் கதையினுல் நாம் அறிந்துகொண்ட நீதி இது' என்று நாம் சொல்லுவதைவிட அந்தக் குழந்தைகளே அதைப் படித்ததும் தெரிந்துகொள்ள வேண்டும்.

சில குழந்தைக் கவிஞர்கள் வெறும் எதுகை மோனைகளை மாத்திரம் வைத்துக் குழந்தைப் பாடல் என்று சொல்லி அச்சிட்டுவிடுகிருர்கள். நமது முன்னேர்கள் சின்னஞ் சிறு குழந்தைகளுக்காக பல கதைகளும் பாட்டுக்களும் கர்ண பரம்பரையாகக் கையாண்டு வந்திருக்கிருர்கள்.

''காக்கையும் நரியும்'' என்னும் கதையும், ''வால் போய் கத்தி வந்தது டும்-டும்'' என்னும் கதையும் குழந்தைகளைச் சிந்திக்கவைக்கின்றன. ''கை வீசம்மா கை வீசு'' என்னும் பாடலும் ''காக்கா கண்ணுக்கு மை கொண்டுவா'' என்னும் பாடலும் குழந்தைகட்கு எவ்வளவு பொருத்தமாக அமைந்துள்ளன!

''ஓடி விளையாடு பாப்பா'' என்று பாடிய பாரதியாரின் குழந்தைத் தன்மை வாய்ந்த உள்ளம் இக்காலத்தில் உள்ள குழந்தைக் கவிஞர்கள் பலருக்கு அமையவே இல்லை.

கதை எழுதுவதாக இருந்தாலும் அந்தக் கதைகள் அந்தந்த வயதுள்ள குழந்தைகட்கு ஏற்றவைகளாக இருத்தல் வேண்டும். மேல் நாட்டு எழுத்தாளர்கள் இதை நன்கு உணர்ந்து எழுதுகின்றுர்கள்.

ஐம்பது கதைகளை ஆய்ந்தோய்ந்து பாராமல் எழுதுவதைக் காட்டிலும், நன்கு சிந்தித்து ஐந்து கதைகள் எழுதினுலே அவைகள் அந்த எழுத்தாளனுக்கு அழியாப் புகழைத் தருவதாகும்.

குழந்தை இலக்கியம் நம் நாட்டில் இன்னும் நல்ல முறையில் அமையவில்லை. சில ஆண்டுகளாகத்தான் குழந்தை இலக்கியம் வளரத் துவங்கிவந்தது. அவ்விதம் வளருவதற்குப் பாடப் புத்தகங்கள் ஒரு சிறந்த வழியாக இருந்தது. இதற்குள் அரசாங்கத்தார் அந்தப் பாடப் புத்தகங்களுக்கும் தடை விதித்துவிட்டார்கள். இரண்

பலூனைப் பார்க்க வாருங்கள் !
பாட்டுப் பாடி ஆடுங்கள் !

# பத்துப் பைசா பலூன்

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

பத்துப் பைசா விலையிலே
பலூன் ஒன்று வாங்கினேன்.
பலூன் ஒன்று வாங்கினேன்;
பையப் பைய ஊதினேன்.

பையப் பைய ஊதவே
பந்து போலே ஆனது.
பந்து போலே ஆனபின்
பலமாய் நானும் ஊதினேன்.

பலமாய் ஊத ஊதவே
பானை போலே ஆனது.
பானை போலே ஆனதைக்
காண ஓடி வாருங்கள்.

விரைவில் வந்தால் பார்க்கலாம்
இல்லை—
வெடிக்கும் சப்தம் கேட்கலாம் !

டொரு எழுத்தாளர்களை வைத்துக்கொண்டு அரசாங்கத்தாரே பாடப் புத்தகம் தயாரிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

நூற்றுக் கணக்கான எழுத்தாளர்கள் எழுதத் துவங்கினால் தான் நல்ல கதைகளும் பாடல்களும் நம் நாட்டில் வெளிவருவதற்கு ஏற்றதாக இருக்கும். என்வரையில் 'நித்தில வாசகம்' என்னும் பாடப் புத்தகங்களைக் குழந்தைகளுக்காகவே எழுதினேன். இவ்விதம் சிந்தனை செய்து எழுதப்பெற்ற பல பாடப் புத்தகங்கள் வெளிவருவதற்கில்லாமல் அரசாங்கத்தாரால் தடை செய்யப்பட்டுவிட்டன.

குழந்தை இலக்கியம் படைப்போருக்கு அரசாங்கத்தாரின் ஏற்பாடு ஒரு பெரிய முட்டுக்கட்டையாகவே அமைந்துவிட்டது. அவ்விதம் இருந்தும் எழுத்தாளர்களுள் பலர் சிறிதும் ஊக்கம் குன்றாது பத்திரிகைகளின் வாயிலாகக் குழந்தை இலக்கியத்தை வளர்த்து வருவது பெரிதும் பாராட்டத் தக்கது.

திருச்சி எழுத்தாளர் சங்கத்தார் தங்கள் சிறப்பு மலரில் குழந்தைகளுக்காகவும் ஒரு பகுதியை ஒதுக்கி வைத்துச் சிறந்த எழுத்தாளர்களைக் கொண்டு குழந்தைக் கவிதைகளையும், கதைகளையும் கட்டுரைகளையும் வளர்த்துவருவதை அறிந்து நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

புகழைப் பெற்று வாழவே
பொறுமை மிகவும் தேவையே !
அழகாய் இதனை விளக்கிடும்
அருமைக் கவிதைப் படித்திடு !

# உலக இயல்பு

நாகமுத்தையா

ஏழ்மைக் கிரங்கல் உயர்ந்ததென
ஈந்து வாழ முற்பட்டால்
வாழ்வில் தளர்வர் முன்னாலே
வான்புகழ் உறுவர் பின்னாலே

ஒழுக்க வாழ்வே உயர்ந்ததென
ஒழுங்காய் வாழ முற்பட்டால்
முழுக்க நலிவர் முன்னாலே
முதன்மை பெறுவர் பின்னாலே.

அறிவுச் செல்வம் உயர்ந்ததென
ஆய்ந்து படிக்க முற்பட்டால்
பெருந்துன் புறுவர் முன்னாலே
பெருமை கொள்வர் பின்னாலே.

உண்மை பேசல் உயர்ந்ததென
உயர்ந்த நோக்கம் கொள்வாரேல்
மண்ணில் துன்பம் முன்னாலே
மாட்சி திண்ணம் பின்னாலே.

நாட்டுப் பற்றே உயர்ந்ததென
நாளும் எண்ணி வாழ்வாரேல்
கேட்டை அடைவர் முன்னாலே
கீர்த்தி உறுவர் பின்னாலே.

முன்னால் பட்ட துயரெல்லாம்
முடிந்து போகப் பின்னாளில்
இன்பமாக வாழ்வார்கள்
இதுவே உலக இயல்பாகும் !

'அடிமையாக வாழக்கூடாது' என்று எவ்வளவு பேர் சொல்கிறார்கள்? ஆனால், அதன்படி நடப்ப வர்கள் தான் மிகவும் கொஞ்சம்!

இதோ, சுப்பு! கிளியை அடிமையாக்கிவிட்டான்! அவன் திருந்தும் முறையை இனிப்பாகக் கூறு கிறார், தணிகை உலகநாதன் அவர்கள்.

# கூண்டுக் கிளி

*தணிகை உலகநாதன்*

தங்கத்தின் வீடு.

மறு நாள் தங்கத்தின் பள்ளிக்கூடத்து ஆண்டு விழா. தங்கமும் அவள் உடன் படிக்கும் பட்டு, சுந்தரி ஆகியவர்களும் ஆண்டு விழாவில் பாடப்போகும் பாட்டைப் பாடி ஒத்திகை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அண்ணன் மாணிக்கம் அந்தச் சிறுமிகளின் பாட்டை ஆசையாகக் கேட்டுக்கொண்டிருக்கிறான்.

**பிள்ளை:**

"தேன்மலர்ச் சோலையிலே—திரியும்
சின்னஞ் சிறு கிளியே!
யான் தரும் கூட்டினிலே—வந்தே
இன்பமாய் இருப்பாயே!"

**கிள்ளை:**

"போ போ உன் கூடு—எனக்கே
பொல்லாச் சிறை வீடு
மேவும் அதில் தங்கி—என்றன்
மேனி வாடிடுமே."

இப்படிப் பாடிக்கொண்டிருக்கும் போது மாணிக்கத்தின் தம்பி சுப்பு ஒரு கிளியைக் கூண்டில் அடைத்து எடுத்துக்கொண்டு வீட்டில் நுழைந்தான்.

"என்னடா சுப்பு! எங்கே இவ்வளவு நேரமா போயிருந்தே" என்றான் மாணிக்கம்.

"காக்கா தோப்புக்குப் போயிருந்தேன், அண்ணா"

"காக்கா தோப்புக்குப் போய் இந்தக் கிளியைப் பிடித்து வந்துவிட்டாயா?"

"ஆமாம் அண்ணா! இந்நேரம் இவர்கள் கிளியைப் பார்த்து "வா வா" என்று பாடின பாட்டைக் கேட்டுக் கொண்டுதான் வந்தேன்"

அதுகேட்ட தங்கத்தின் மனம் துடி துடித்தது. "ஐயோ! சுப்பு நாங்கள் பாட்டுத்தானே பாடிக்கொண்டிருந்தோம். நீ இப்படிக் கிளியைப் பிடித்துக் கூண்டிலே அடைக்கலாமா?" என்று கேட்டாள்.

"தம்பி சுப்பு! நான் சொல்கிறேன் கேளு. வானத்திலே தானாகச் சந்தோஷமாகப் பறந்து போகும் கிளியை இப்படிக் கூண்டிலே அடைக்கிறது பாவம்! ரொம்ப பாவம்!"

"எது அண்ணா பாவம்? கொன்றால் பாவம்! தின்றால் பாவம்! இந்தக் கிளி வெளியிலே அலையாமல் நிழலிலே பாலும் பழமும் கொடுத்துக் காப்பாற்றப் போகிறேனே! இது பாவமா?"

"தம்பி! என்னதான் நீ கொடுத்தாலும் அது சுதந்திரமாகப் பறந்து சோலைகளிலே திரிந்து வருவதற்கு சமம் ஆகுமா?" என்றாள் தங்கம்.

"பழகப் பழக எல்லாம் சரியாகப்போய்விடும். உன்னையும் இது 'அக்கா! அக்கா!' என்று கூப்பிடும் போது உனக்கு எவ்வளவு ஆசையாக இருக்கும்?" என்றான் சுப்பு.

"தம்பி! வேண்டாம் இந்தப் பிடிவாதம். பேசாமல் இந்தக் கூண்டைத் திறந்து விட்டுவிடு. நீ வீட்டில் வளர்த்தாலும் அது காட்டில் வளர்வது போல இன்பமாக இருக்க முடியாது" என்று மாணிக்கம் புத்தி மதி கூறினான்.

"அதெல்லாம் முடியாது அண்ணா! இது என் ஆசைக்கிளி, இதை யாராவது கூட்டை எடுத்து விட்டு விட்டால், நானும் வீட்டை விட்டே வெளியே போய் விடுவேன்" என்று எச்சரித்தான் சுப்பு.

"சரி. உன் விருப்பப்படியே செய்" என்று மாணிக்கம் சுப்புவை அவன் போக்கிலேயே விட்டுவிட்டான்.

அன்று முதல் சுப்பு கிளிக் கூண்டும் கையுமாகவே இருந்தான். பள்ளிக்கூடமும் சரியாகப் போவதில்லை. பள்ளிக்கூடம் போகிற சாக்கில் கிளிக்கூண்டை எடுத்துக்கொண்டு எங்காவது தோப்பு குளக்கரை சென்று

மாலையில் வீடு திரும்புவான். வர வர அவன் செய்கை மாணிக்கத்துக்கும் தங்கத்துக்கும் வெறுப்பாகிவிட்டது. எப்படியோ அவனை நல்வழிக்குத் திருப்பவேண்டும் என்று இருவரும் ஒரு திட்டம் போட்டார்கள். சுப்புவின் நண்பன் முத்து என்பவனும் அந்தத் திட்டத்துக்கு துணையாக இருந்தான்.

ஒரு நாள் சுப்பு மாணிக்கத்தின் அறையில் குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்தான். கதவு சாத்திப் பூட்டப்பட்டிருந்தது.

திடீரென்று சுப்பு எழுந்திருந்தான் "அடடே! இவ்வளவு நேரமாத்தூங்கிவிட்டேனே! என் கிளிக்குப் பாலும் பழமும் கொடுக்க மறந்துவிட்டேனே!" என்ருன்.

கதவு தாள் போட்டிருப்பதைப் பார்த்து, "ஐயோ! யார் இப்படிக் கதவைத் தாழ்ப்பாள் போட்டுப் பூட்டிவிட்டாங்க? ஐயோ! அக்கா! அக்கா!"

—கதவைப் பலமாகத் தட்டினுன் சுப்பு.

"தம்பி! மாணிக்கம் அண்ணுதான் கதவைப் பூட்டிக்கொண்டு போய்விட்டார். நீ தூங்குவது தெரியாமல் பூட்டிவிட்டு போய்விட்டார். நான் என்ன செய்வேன்"

"பானையும் சட்டியும் செய்!" என்று ஆத்திரத்துடன் கர்ஜித்தான் சுப்பு.

அதற்குள் மாணிக்கம் உள்ளே நுழைந்தான். "என்ன அண்ணு இது வேடிக்கை! உடனே கதவைத் திறங்கள்!" என்ருன் சுப்பு.

"அடடா! சாவி எங்கேயோ தொலைத்துவிட்டேனே!" என்று கையை விரித்தான் மாணிக்கம்.

"ஐயோ! என் தலை வலிக்குதே! சாவியைத் தொலைத்துவிட்டீர்களா?"

"அதற்கென்ன! இதோ தலைவலி மருந்து ஜன்னல் வழியாகத் தருகிறேன்" என்ருள் தங்கம்.

"ஐயோ தண்ணீர்! தாகமாக இருக்கிறதே" கவலைப்படாதே சுப்பு! இதோ ஜன்னல் வழியாக டம்பளரில் தண்ணீர் தருகிறேன்"

"ஐயோ பசி! பசி! பசிஎடுக்குதே!"

"இந்தா! சாப்பாடு ஜன்னல் வழியாகச் சாப்பிடலாமே"

"ஜன்னல்! ஜன்னல்! எல்லாம் ஜன்னல் வழியாகத்தாஞ?"

"தம்பி! எங்களை என்ன செய்யச்சொல்றே? உனக்கு என்ன வேண்டுமானுலும் கேள்! குறைவில்லாமல் கொடுக்கிருேம்."

"ஐயோ! என் சிநேகிதர்களோடு விளையாடப் போகனுமே அண்ணு! தயவுசெய்து கதவைத்திறங்கள், அண்ணு!"

"நான் என்ன செய்வேன்! சாவி தொலைந்துவிட்டதே!" என்ருன் மாணிக்கம். அண்ணனிடத்தில் சாவி இல்லை என்று கேட்டதும் சுப்பு தவியாய்த் தவித்தான். "அண்ணு எனக்காக ராமு, சோமு, வேலு, பாலு, முத்து எல்லாம் விளையாடக் காத்திருப்பார்கள். அண்ணு! தயவுசெய்து பூட்டை உடைத்தாவது கதவைத் திறங்கள் அண்ணு!" என்று வேண்டினுன்.

சுப்புவின் முகத்தைப் பார்க்கப் பாவமாக இருந்தது! "தம்பி! உன்னைப்போலவே அந்தக் கிளிக்கும் வேறு கிளிகளுடன் விளையாட ஆசை இருக்காதா? அதை மட்டும் இப்படிக் கூண்டில் அடைக்கலாமா? யோசித்துப் பார்" என்ருன் மாணிக்கம்.

"பாவம்! அந்தக் கிளிக்கும் நன்ருகப் பேசத் தெரிந்திருந்தால் உன்னையும் இப்படித்தானே கேட்டிருக்கும்? பேசத்தெரியாததாலே, நீ அதை இப்படிக் கூண்டிலே போட்டுக் கொடுமைப்படுத்துகிருய்? இல்லையா சுப்பு?" என்று தேம்பிக்கொண்டே கேட்டாள் தங்கம்.

சுப்புவுக்குப் புத்தி வந்தது, "ஆமாம் என்னைப் போல இந்தக் கிளிக்கும் பசி, தாகம், தலைவலி எல்லாம் உண்டு. இதுவும் தன் இனத்தோடு போய் விளையாடத் தானே விரும்பும்" என்று தனக்குள் எண்ணினுன்.

"அக்கா! அண்ணு! என்னை வெளியே விடுங்கள். முதல் வேலையாக அந்தக் கிளியை நானே வெளியே விட்டுவிடுகிறேன்"

அதற்குள் தெருவில் "பெட்டி, பூட்டு, சாவி! பெட்டி, பூட்டு, சாவி!" என்ற கூக்குரல் கேட்டது. தங்கம் வேகமாகத் தெருவுக்கு ஓடினுள்.

சாவிக்காரன் வீட்டுக்குள் வந்தான். "ஐயா இந்தத் தம்பி யாரு?" என்ருன். 'எங்க தம்பி சுப்புதான் ஐயா! அண்ணு சாவியை எங்கோ தொலைச்சுவிட்டார்" என்ருள் தங்கம்.

"ஐயோ! இது சிங்கப்பூர் பூட்டாச்சே! இந்தப் பெரிய பூட்டுக்கு என்னிடம் சாவி இல்லையே" என்ருன் சாவிக்காரன்.

இந்தப் பேச்சைக் கேட்டதும் சுப்புவின் உடல் நடுங்கியது. "ஐயா சாவிக்காரரே எப்படியாவது திறந்துவிடுங்கள், உங்களுக்குக் கோடி புண்ணியம்!" என்ருன் சுப்பு.

"பயப்படாதே தம்பி! இந்தப் பெரிய சாவியைத் தேய்த்துப் போட்டால் சரியாக இருக்கும்," என்று சொல்லி அரத்தால் ஒரு சாவியை 'கர் கர்' என்று தேய்ப்பது போல் பாசாங்கு செய்தான். பூட்டு திறக்கப்பட்டது. சுப்பு வெளியே வந்தான். சாவிக்காரன் வேறு யாரும் இல்லை. அவனுடைய நண்பன் முத்துவேதான்.

"ஆ! யாரு? முத்துவா" என்ருன். "ஆமாம்! சரியான சமயத்தில் உனக்கு உதவி செய்யவந்த நன் முத்து" என்ருள் தங்கம்.

"எல்லோருமாகச் சேர்ந்து ஒரு நாடகமே நடத்திவிட்டீர்களே" என்று கேட்டான் சுப்பு. உடனே மாணிக்கம் சுப்புவைப் பார்த்து, "நடந்தால் என்ன! நல்லதுக்குத்தானே நாடகம் நடந்தது" என்று கூறினுன்.

"சரி வாருங்கள், எல்லோருமாகப்போய்க் கிளியை வெளியே விட்டுவிடலாம்" என்று கூறிச் சுப்பு அந்த மூன்றுபேரையும் அழைத்துப் போனுன்.

"என் ஆசைக் கிளியே! உனக்கு இன்று விடுதலை! உன் விருப்பம் போல் எங்கே வேண்டுமானுலும் பறந்து போகலாம்" என்று கூண்டைத் திறந்து விட்டான் சுப்பு.

விடுதலை கிடைத்த சந்தோஷத்தில் கிளி 'பட பட' வென்று தன்பச்சை இறக்கைகளை அடித்துக்கொண்டு வான வீதியில் பறந்து சென்றது. அது கண்ணிலிருந்து மறையும் வரையில் அவர்கள் வானத்தையே பாத்துக் கொண்டிருந்தார்கள்.

பள்ளிக்கூடத்தில் பாடம் சொல்லிக்கொடுக்கும் ஆசிரியர், நமக்குத் தாயைப்போல! வயது ஆகி விட்டதால் ஓய்வு பெறுகிறார், ஓர் ஆசிரியர். மாண வர்களைப் பிரிய வேண்டுமே என்ற ஏக்கத்தால் மனம் உடைந்து விடுகிறார்.

அந்த ஆசிரியர் எப்போது மகிழ்ச்சி அடை கிறார்? உருக்கமான இந்தக் கதையில் பதில் சொல்கிறார், வே. அய்யாச்சாமி அவர்கள்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

# ஆசிரியர் பெருமை

வே. அய்யாச்சாமி

பள்ளிக்கூட வாசலைக் கடந்து வெளியே வந்த தலைமை ஆசிரியர் அமிர்தலிங்கம், திரும்பிப் பள்ளிக்கூடத்தை மீண்டும் பார்த்தார். உயர்ந்து நின்ற பள்ளிக் கட்டிடமும், நீண்ட மரங்களும் அவரைப் பிரிய மனமில்லாமல் காட்சி அளித்தன. இன்றுமுதல் அவர் 'ரிடையர்' ஆகிவிட்டார். தலைமை ஆசிரியர் பதவி இன்றுடன் முடிவடை கிறது. சற்று முன்பு நடந்த பிரிவுபசார விருந்தை நினைத்துப்பார்த்தார். மாணவர்களின் அன்பு, பய பக்தி அனைத்தையும் பார்க்கும்போது அவர் மனம் பிரிவுத் துயரால் கலங்கியது. இருபது ஆண்டு களுக்கு மேலாக ஒரே பள்ளியில் ஆசிரியராக இருந்துவிட்டு, ஓய்வுபெற்று வெளியே வருவது என்றால் யார்தான் கலங்காமல் இருக்கமுடியும்?

உலக வாழ்க்கையே வெறுத்துவிட்டதுபோல ஒரு கசப்பு உணர்ச்சியுடன் தள்ளாடி நடந்தார். எங்கே போகிறோம் என்ற நினைவே இல்லை.

எதிரே போலீஸ் லாரி ஒன்று அவரை மோதுவதுபோல் வந்து 'சடக்' என்று நின்றது. தலைமை ஆசிரியர் அமிர்தலிங்கம் திடுக்கிட்டுப் போனார். நெஞ்சம் 'பட பட' என்று அடித்துக் கொண்டது. வாட்டசாட்டமான போலீஸ் இன்ஸ் பெக்டர் ஒருவர் லாரியில் இருந்து இறங்கி மிடுக் குடன் நடந்து வந்தார். "என்ன ஸார்?" என்ற இன்ஸ்பெக்டரின் குரல் கேட்டு ஆசிரியர் கலங்கி னார். 'எந்தக் குற்றமும் செய்யவில்லையே! நடுத் தெருவில் போலீஸிடம் அகப்பட்டுக்கொண்டு அவ மானப்படவேண்டியிருக்கிறதே!' என்று தவித்துப் போனார். குரல் கிளம்பவில்லை. தொண்டை அடைத்துக்கொண்டது.

'ஸார் இங்கே பாருங்கள்!' இன்ஸ்பெக்டரின் கரகரப்பான குரலைக்கேட்டு ஆசிரியர் மீண்டும் தயங்கினார். இன்ஸ்பெக்டர் மீண்டும் அவரை நெருங்கினார்.

"என்னை அடையாளம் தெரியவில்லையா ஸார்!' இன்ஸ்பெக்டர்தான் கேட்டார்.

'தெரியவில்லையே!'

"ஸார் நான்தான் பாலுசாமி. உங்கள் மாண வன்......"

ஆசிரியருக்கு நிம்மதிப் பெருமூச்சுடன் உயிர் வந்தது.

"அடே...... பாலுவா நீ? அடையாளமே தெரியவில்லை. சௌக்கியமா?"

"ஸார் இன்னொரு முறை கூப்பிடுங்கள். 'டேய் பாலு' என்ற அன்பான மிரட்டலைக் கேட்க எத் தனை நாள் ஏங்கிக் கிடந்தேன். நான் பழைய பாலுதான். உங்கள் ஆசியால்தான் முன்னுக்கு வந்தேன்."

பாலுவைக் கட்டிப் பிடித்துக்கொண்டு ஆசி ரியர் ஆனந்தக் கண்ணீர் விட்டார். ஆசிரியருக்கு முன்னால் போலீஸ் இன்ஸ்பெக்டர் பணிந்து நின்றார்.

தன்னிடம் படித்து ஒழுங்கைக் கற்ற மாணவன், இந்தப் பெரிய நகரின் அமைதியை யும், ஒழுங்கையும் நிலைநிறுத்தும் போலீஸ் அதி காரி. ஆசிரியர் மனம் நீண்டு உயர்ந்து வானளாவ நின்றது. அவர் தலை நிமிர்ந்து நின்றார்.

"டேய் பாலு உன்னால் நான் பெருமை அடைகிறேனடா! இதைவிட எனக்கு வேறு என்ன வேண்டும். ஆசிரியர் வேலையில் இருந்து ஓய்வு பெற்றதும், என்னை ஆதரிக்க யாரு மில்லையே என்று என் மனம் கசந்தது. உலகமே கூட வெறுத்துவிட்டது. ஆனால் இன்று இனிக் கிறது. உன்னைப்போன்ற மாணிக்கங்கள் உலகில் எங்கோ ஒரு மூலையில் இருந்து என்னை நன்றி உணர்வுடன் நினைக்கும்போது இந்த உலகில் எத் தனை ஆண்டுகள் வாழ்ந்தாலும் கசக்காது. கசக் கவேகசக்காது." தலைமை ஆசிரியர் அமிர்தலிங்கம் உணர்ச்சிப் பெருக்கால் பூரித்து நின்றார்.



வண்ண மலர்போல் பாடல்களில்
வாசம் வீசக் கண்டிடுவோம்!
எண்ணம் விரியும் நெஞ்சினிலே
இன்பச் சுவையைக் கொண்டிடுவோம்!

# கவிதை மலர்கள்

## முல்லை

'தென்றல்'

வெள்ளை வெள்ளை முல்லை
வீசும் வாசம் கொள்ளை
கள்ள மில்லாத தன்மை
கவர்ச்சி யுள்ள மென்மை

முத்துப் போன்ற சிரிப்பு
முல்லை இதழ் விரிப்பு
கொத்துக் கொத்தாய் எங்கும்
கொடியில் பூத்த முல்லை

பொங்கும் தேனை ஏந்தி
பூத்தி ருக்கும் முல்லை
எங்கள் நாட்டுப் பாரி
இரக்கம் கொண்ட முல்லை!

சாயம் வெளுக்கும் என்ற
சங்க டங்கள் இல்லை
தூய வெள்ளை முல்லை
தோட்டம் வந்து பாரீர்!

## காளைக்கன்று

எ. ந. கணபதி

கன்று காளைக் கன்று – இது
காரும் பசுவின் கன்று
நன்றி யோடு தாயின் முகத்தை
நாவால் நக்கும் கன்று

தூய வெள்ளைக் கன்று – இது
துறுது றுத்த கன்று
பாய்ந்து முட்டத் தெரிந்தி டாத
பச்சை இளங் கன்று

பட்டு மேனிக் கன்று – இது
பாச முள்ள கன்று
முட்டி முட்டிப் பால்கு டிக்கும்
கெட்டிக் காரக் கன்று

நேச முள்ள கன்று – எங்கள்
நெஞ்சில் நிறைந்த கன்று
ஆசை யோடு நாம்வ ளர்ப்போம்
ஆமாம், மிகவும் நன்று!

## நிமிர்ந்து நில்லடா!

டி. எஸ். மணி

கண்ணின் மணிகள் சிறிதாகும்
காணுங் காட்சிகள் பெரிதாகும்
விண்ணில் பறந்து சென்றிடடா – பல
விந்தை கண்டு மகிழ்ந்திடடா!

மண்ணில் பிறந்த மனிதரெலாம் – என்றும்
மாண்புடன் ஒன்ருய் விளங்கிடலாம்
எண்ணில் உதித்த கலைகளிலே – நாம்
யாவரும் கூடிக் களித்திடலாம்.

துன்பம் துறவு என்றிடுவார் – பல
துயரம் கண்டு குன்றிடுவார்
அன்பால் எதையும் வென்றிடலாம் – நீ
ஆர்வத் துடனே நின்றிடடா!

உள்ளந் தெளிவில் மலர்ந்திருக்க – அதில்
உன்றன் தமிழ்த்தாய் வீற்றிருப்பாள்
அள்ளிக் குவித்தக் கரங்களுடன் – நீ
அவள்முன் தாழ்ந்தே தொழுதிடடா!

## சிலந்தி சொல்லும் சேதி

எஸ். பி. அமலன்

வாழ்வு என்னும் மலையில்ஏற
வாய்ப்பு இருக்குது – நிறைய
வாய்ப்பு இருக்குது!

தாழ்வு மனப் பான்மையாலே
துயரம் நிலைக்குது – என்றும்
துயரம் நிலைக்குது!

கூடு கட்டும் சிலந்தி என்ன
சேதி சொல்லுது – உனக்கு
சேதி சொல்லுது!

நூல றுந்து போயும் கூட
முடியப் பின்னுதே – வலையை
முடியப் பின்னுதே!

தோல்வி இன்று நீயும் கண்டால்
துணிந்து செல்வாயே! – மேலும்
துணிந்து செல்வாயே!

வெற்றி உண்டு அடுத்தவேளை
வீறு கொள்வாயே – உழைக்க
வீறு கொள்வாயே!





## காக்கை

ஆதி. சீனிவாசன்

காக்கை நல்ல காக்கை
கன்னங் கரிய காக்கை
தூக்கம் கலேய நாளும்
துயில் எழுப்பும் காக்கை!

தம்பி கையில் முறுக்கை
தட்டிச் செல்லும் காக்கை
நம்மைப் போல இல்லே
நன்ருய்ப் பகுத்து உண்ணும்!

மண்ணில் மடிந்த பூச்சி
மக்கிக் கிடக்கும் அழுகல்
எண்ணில் லாத அசுத்தம்
இவைகள் தின்று தெருவைச்

சுத்தம் செய்யும் தோட்டி
சோம்பல் இல்லாக் காக்கை!
சத்தம் போட்டே நமக்குத்
தமிழைச் சொல்லித் தருமே!

## தாத்தா பெருமை

இரா. சண்முகம்

கேள் தம்பி கேள் – நீ
கேள் தம்பி கேள்!
காந்தி தாத்தா பெருமை தன்னே
கவன முடனே அருகில் வந்து (கேள்)

புத்தர் போல புனிதர்
புதுமை உலகச் சிற்பி
சித்தம் மகிழ மக்கள்
சிறப்பாய்ப் போற்றும் தலேவர் (கேள்)

அன்பு எளிமை தூய்மை
அவரின் பண்பு ஆகும்
என்றும் கடவுள் பக்தி
இதயக் கொள்கை ஆகும் (கேள்)

நமது அன்னே மொழியை
நன்கு கற்று வந்தார்
அமைதி காத்த சீலர்
அவரின் வழியில் செல்வோம் (கேள்)

## நல்லவை கேள்

அரசெயினன்

அம்மா என்ன செய்கின்ருள்? – தாத்தா,
அடுப்பில் என்ன சுடுகின்ருள்?
அம்மா அப்பம் சுடுகின்ருள்; – பாப்பா,
அடுக்கி உனக்குத் தந்திடவே.

அண்ணன் என்ன செய்கின்ருன்? – தாத்தா,
அறையில் என்ன படிக்கின்ருன்?
பள்ளிப் பாடம் படிக்கின்ருன்; – பாப்பா,
பட்டம் பெற்றுச் சிறந்திடவே.

அக்கா என்ன செய்கின்ருள்? – தாத்தா,
அங்கும் இங்கும் குதிக்கின்ருள்!
அக்கா நடனம் பயில்கின்ருள்; – பாப்பா,
ஆய கலேயில் தேர்ந்திடவே.

அப்பா என்ன செய்கின்ருர்? – தாத்தா,
அயர்ந்து என்ன பார்க்கின்ருர்?
ஆங்கிலப் புத்தகம்பார்க்கின்ருர்; - பாப்பா,
அறிவை வளர்ச்சி செய்திடவே.

நானும் ஒன்று செய்திடணும்! – தாத்தா
நல்லது ஒன்று சொல்லிடணும்.
நல்லோர் வாக்கு கேட்டிடணும் – பாப்பா,
நாளும் அதன்படி நடந்திடணும்.

## மலர்கள்

தெ. தமிழ்க்குமரன்

வெள்ளே வெள்ளே மல்லிகை
வேண்டு மட்டும் நறுமணம்
கொள்ளே கொள்ளே யாகவே
கொண்டு வந்து கொட்டுமே.

மஞ்சள் மஞ்சள் சண்பகம்
மனம் விரும்பும் புதுமணம்
கொஞ்சிக் கொஞ்சி ஊட்டியே
நெஞ்சை நெஞ்சை அள்ளுமே.

சிவந்த சிவந்த தாமரை
சிரித்துச் சிரித்து நறுமணம்
உவந்து உவந்து ஊட்டியே
உள்ளம் மகிழச் செய்யுமே.

பச்சை பச்சை ரஞ்சிதம்
பசுமை மஞ்சள் பூசியே
இச்சை யான பலமணம்
எட்டு மட்டும் பரப்புமே.

நீல நீலக் குவளேப்பூ
நீண்ட கண்ணேப் பழிக்குமே
கோல வண்ணம் காட்டியே
கொட்டிக் கொட்டிச் சிரிக்குமே.



அழகனாரின் கைக்குட்டை
அழகு கொண்ட கைக்குட்டை!

# கைக்குட்டை

அழகனார்

பட்டுப் பட்டுக் கைக்குட்டை
    பச்சை வண்ணக் கைக்குட்டை
வெட்டி வெட்டி அதன்ஓரம்
    வியக்கும் படியாய்க் கைவேலை!

சின்னச் சின்னக் கைக்குட்டை
    சிங்கா ரித்த கைக்குட்டை
பொன்னே போன்று காக்கின்ற
    புதுமை யான கைக்குட்டை!

கட்டம் போட்ட கைக்குட்டை
    கமலம் தைத்த கைக்குட்டை
பட்டுப் பூச்சி பறப்பதுபோல்
    பாங்காய் போட்ட கைக்குட்டை!

வண்ண வண்ணக் கைக்குட்டை
    மயில்மான் போட்ட கைக்குட்டை
கண்ணன் கேட்டு அழுகின்ற
    கவர்ச்சி யான கைக்குட்டை!



# தம்பியின் ஆசை

திருச்சி பாரதன்

சின்னவேல் நீ தந்திடுவாய்
    முருகக் கடவுளே — மிகச்
சிறந்தவேல் நீ தந்திடுவாய்
    முருகக் கடவுளே!
தங்கவேல் நீ தந்திடுவாய்
    முருகக் கடவுளே — அழகு
தங்கும்வேல் தந்திடுவாய்
    முருகக் கடவுளே!

மரத்தினாலே செய்தமயில்
    முருகக் கடவுளே — நான்
மகிழ்வுடனே ஏறும்மயில்
    முருகக் கடவுளே!
இரக்கமுடன் வேல்கொடுத்தால்
    முருகக் கடவுளே — அடடா!
இனிமையுடன் வீற்றிருப்பேன்
    முருகக் கடவுளே!

அன்னைநாட்டைக் காத்திடவே
    முருகக் கடவுளே — கொடும்
அன்னியரைத் துரத்திடவே
    முருகக் கடவுளே
கன்னக்கோலர் மிரண்டிடவே
    முருகக் கடவுளே — நான்
கடுமையுடன் வேல் எறிவேன்
    முருகக் கடவுளே!

உயிரழிக்க வேல் எறியேன்
    முருகக் கடவுளே — தீய
உணர்வழிக்க வேல் எறிவேன்
    முருகக் கடவுளே!
அருமையான உனதுதம்பி
    முருகக் கடவுளே — என்
ஆசைக்கொரு வேல்தருவாய்
    முருகக் கடவுளே!



# விளி நயம்

★

**இரா. இராதாகிருஷ்ணன்**

நாம் ஒருவரைப் பெயர் சொல்லியோ, வேறுவகையாகவோ அழைக்கின்றோம். அழைக்கும்போதே நம்முடைய மனக் கருத்து ஓரளவு வெளிப்படுகின்றது. ஏங்கியோ, சினந்தோ, வெறுத்தோ, வருந்தியோ, அஞ்சியோ, மருண்டோ, அன்புடனோ பலவாறு பிறரை அழைக்கின்றோம். நம் உள்ளத்து உணர்ச்சிக்கு ஏற்ப நம் குரல் வேறுபட்டு, அழைப்பே, கருத்தை வெளிப்படுத்தி விடுகின்றது. அழைக்கும் சொல்லும் கருத்திற்குப் பொருந்த வேறுபட்டு எழுகின்றது.

அலுவலகத்திலிருந்து வீடு திரும்பும் ஒருவன் தான் வாங்கிவந்த தின்பண்டத்தை மகனுக்கு அளிக்க, அவனை அன்போடு கூப்பிடும் குரலும், சொல்லும் ஒரு வகை; அவனே தன் மகன் செய்த குற்றத்திற்காக அவனைக்கண்டிக்கச் சினத்தோடு கூப்பிடும் குரலும், சொல்லும் வேறுவகை. மனைவிக்கு மலர் வாங்கி வந்தவன் அதனை அவள் கையில் கொடுக்கவோ, கூந்தலில் சூட்டவோ அவளைக் கூப்பிடும் முறைக்கும், உணவில் உப்பு அதிகமாகி முகம் சுளித்து அவளைக் கண்டிக்கக் கூவும் முறைக்கும் வேறுபாடுண்டு. உலகியல் பேச்சுவழக்கிலேயே இவ்வாறு கூப்பிடும் முறை உள்ளக்கருத்தை வெளிப்படுத்துகிறது. செய்யுள் வழக்கில் இது மிக நுணுக்கமாக எடுத்தாளப்பட்டுள்ளது ஒருவர் மற்றவரை அழைப்பது "விளி" எனப்படும். அழைத்து ஒரு செய்தியைச் சொன்னால் கேட்போர் கவனத்தை ஈர்க்க முடிகின்றது. விளித்துப் பேசுதலால் கருத்து நன்கு பதிய வழியுண்டாகிறது. தமிழில் வழங்கும் காப்பியங்களிலும், பெருநூல்களிலும நுண்ணிய கருத்துக்களை விளக்க விளிகள் இடனாகப் பயன்பட்டுள்ளன. விளிகளைப் பொருள் பொதிந்த கருத்துக் கருவூலங்களாக அமைத்தலில் கம்பன் மிக உயர்ந்து காணப்படுகின்றான்.

∴ ∴

சீதையை இராவணன் கவர்ந்து சென்றபின், கவந்தன் சொற்படியும், சபரியின் உரையின்படியும் சுக்கிரீவனைக் கண்டு நட்புப் பெற இராமனும், இலக்குவனும் ரிசியமுக மலைமேல் ஏறிவருகின்றனர். சுக்கிரீவன் ஏவலின்படி, அவர்களைப் பற்றி அறிய அனுமன் மாணுக்கப் படிவத்தோடு வருகின்றான். முதலில் மறைந்திருந்து அவர் இயல்பை ஓரளவு உய்த்துணர்ந்து, பின்னர் அவர்கள் எதிரில் அனுமன் வந்து "கவ்வை இன்றாக நுங்கள் வரவு" என்று முகமன் கூறுகின்றான். சுக்கிரீவன் துன்பம் நீங்கவும், மனிதனாக அவதரித்துத் துன்பப்படும் பரமன் துயரம் விலகவும் கட்டியம் கூறுகின்றான் அனுமன். கருணை மிக்க இராமனும், அனுமனை நோக்கி "நீ எங்கிருந்து வருகிறாய்? நீ யார்?" என்று கேட்க, அனுமன் பதிலுரைக்கின்றான்.

மஞ்செனத் திரண்ட கோல மேனிய! மகளிர்க்கு எல்லாம்
நஞ்செனத் தகைய ஆகி நளிர்இரும் பனிக்குத் தேம்பாக்
கஞ்சம் ஒத்து அலர்ந்த செய்ய கண்ண! யான் காற்றின்
வேந்தற்கு,
அஞ்சனை வயிற்றின் வந்தேன், நாமமும் அனுமன் என்றான்.

இம்மலை இருந்து வாழும் எரிகதிர்ப் பரிதிச் செல்வன்
செம்மலுக்கு ஏவல் செய்வேன் தேவ! நும் வரவு நோக்கி
விம்மலுற்று அனையன் ஏவ வினவிய வந்தேன் என்றான்
எம்மலைக் குலமும் தாழ இசை சுமந்து எழுந்த தோளான்.

நீருண்ட கார்மேகம் போலச் செறிந்த அழகிய மேனியுடையரனே! பெண்களுக்கெல்லாம் நஞ்சு என்று சொல்லத்தக்க தன்மை வாய்ந்த கணைகளை உடையானே! குளிர்ச்சி மிக்க பனிக்கும் வாடாத தாமரை போலும் மலர்ச்சியுடைய கண்களைப் பெற்றோனே! நான் காற்றின் வேந்தனாகிய வாயுவின் மகன்; அஞ்சனையின் வயிற்றில் பிறந்தவன்; என் பெயர் அனுமான் என்பது. இந்த மலையில். கதிரவனின் மகன் சுக்கிரீவன் வாழ்கின்றான். அவனுக்கு ஏவல் செய்பவன் யான்; அவன் உங்கள் வரவினைக் கண்டு விம்மலுற்றான்; நீங்கள் யார் என்று அறிந்துவர என்னை ஏவினான்: அவ்வாறு அறியவே யான் வந்தேன் என்று அனுமன் கூறிநிற்கின்றான்.

∴ ∴ ∴

அனுமன் இராமனை இப்போதுதான் முதன் முறை பார்க்கின்றான். பார்த்த அளவிலேயே இராமன் முழுமுதற் கடவுள் என்பதை அனுமன் உணர்ந்துகொண்டு விட்டான். மானிடனாகக் கால் தரை தோயக் கண்ணிற காணுமாறு வந்துள்ள இராமனின் பண்பு நலன்களை எல்லாம் அளவிட்டு உரைக்கிறான். "எங்கிருந்து வருகின்றாய்? நீயார்?" என்று கேட்ட இராமனை விளித்துக், கேள்விக்கு உரிய விடை கூறுகின்றான். இராமனை அனுமன் விளித்த முறையாலே, இராமனையே அளந்து மதிப்பீடு செய்தமை புலனாகும்.

மஞ்செனத் திரண்ட கோலமேனிய! என்ற விளியினாலே கைம்மாறு கருதா மாரி போலும் இராமனுடைய வள்ளல் தன்மையை உணர்த்துகின்றான். விருப்பு. வெறுப்பின்றி யாவர்க்கும் ஒப்பப் பயன் கருதாது வழங்கும் மேகம் போலக் கொடைத்தன்மை மிக்கான் இராமன். பகைவனாகிய இராவணனையும், அவனுடைய செயலற்ற நிலைகண்டு, போர்க்களத்திலே, "இன்று போய் நாளைவா" என்று அருளிய கோசல நாடுடைய வள்ளல் இராமன். அடைக்கலம் புகுந்த அரக்கர் குலப் பிறப்புடைய, பகைவனின் தம்பி வீடணனையும் ஏற்றுக் காத்த வள்ளல் காகுத்தன். உலகையே காக்க வள்ளலாக வந்துள்ள திருமாலே சக்ரவர்த்திச் திருமகன். ஆகவே, கருமேகம் போலும் செறிந்த அழகிய

மேனியுடையானே! என்று ஆழ்ந்த கருத்துப் புலப்பட அனுமன் விளிக்கின்றான்.

தன் மனைவி சீதையைத் தவிரப் பிறபெண்களை இராமன் ஏறெடுத்தும் பாரான். சீதையின் கரம் பற்றி "இந்த இப் பிறவிக்கு இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன்" என்று செவ்வரம் அளித்த இராமனின் கண்கள் பிறபெண்களுக்கெல்லாம் விடம் போன்றன என்பதை அனுமன் உணர்ந்து கூறுகின்றான். "மகளிர்க்கெல்லாம் நஞ்செனத் தகையவாய கண்களையுடையவனே!" என்று இராமனை அனுமன் விளித்தல், இராமன் சான்றாண்மையும், பிறன் மனை நோக்காத பேராண்மையும், வரைவின் மகளிரைக் கூடா இல்லாண்மையும் உடையான் என்பதைப் புலப்படுத்துகின்றது.

பனிக்கு வாடாத தாமரை போலும் மலர்ந்த கண்களையுடையோனே! என்னும் விளி இராமன், செல்வம் பெறினும், அதனை இழத்தலால் தீமை எய்தினும், மனம் உலையாத உறுதிப்பாடுடையான் என்பதை உணர்த்தி நிற்கின்றது. தயரதன் அரசுரிமையை ஏற்றுக்கொள் என்ற காலத்துப் பெரிதும் செல்வத்தால் மகிழாது, மன்னவன் ஏவியவாறு நடத்தல் கடமை என்று ஒப்பினான்' கைகேயி "பரதன் அரசாள்வான்; நீ காடேக வேண்டும். இது மன்னன் ஆணை." என்றபோது இராமன் துன்புறாது மகிழ்ந்தான். அவன் முகம் "அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றது." "மும்மடங்கு பொலிந்த முகத்து வெம்மடங்கலாக" இராமன் விளங்கினான். இராமனின் இப் பண்பைக், கண்டவுடனே உணர்ந்து "நளிரிரும் பனிக்குத் தேம்பாக்கஞ்சம் ஒத்து அலர்ந்த செய்ய கண்ண!' என்று அனுமன் அழைக்கின்றான்.

தன் கேள்விகளுக்கு அனுமன் விடை அளிக்கவும் இராமன் அனுமனின் சொற்களைத் துருவி ஆராய்கின்றான். அனுமனை இராமன் மதிப்பிடுகின்றான். இராமனுக்கு எல்லையற்ற மகிழ்ச்சியும், வியப்பும் உண்டாக, அனுமனைப் பாராட்டுகின்றான். தன்னை விளித்து அனுமன் கூறிய முறையாலே, தன் பண்புகளையும், செயல்களையும் மதிப்பிட்டு விட்டான் என்பதை இராமன் நன்கு உணர்கின்றான். எனவே, அனுமனை எவ்வளவு பாராட்டினும் தகும் என்று இராமன் எண்ணித் தம்பியைக் கூப்பிட்டுச் சொல்கிறான்

இல்லாத உலகத் தெங்கும் ஈங்குஇவன் இசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக் கடலுமே என்னும் காட்சி
சொல்லாலே தோன்றிற் றன்றே? யார்கொல் இச்சொல்லின்
செல்வன்!
வில்லார் தோள் இளைய வீர விரிஞ்சனோ? விடைவ லானோ?

வில் பொருந்திய தோளினை உடைய இளவலாகிய வீரனே! மிக்க புகழ் தனக்கு மிக இவ்வனுமன் அனைத்தையும் கற்றவன். இவன் கல்லாத கலைகளும், வேதமாகிய கடலும் இவ்வுலகத்து எங்கும் இல்லை என்னும் காட்சி, இவன் பேச்சிலிருந்து புலனாயிற்று இச்சொல்லின் செல்வன் யாரோ? பிரமனோ அல்லது சிவபெருமானோ? என்று அனுமனை இராமன் பாராட்டுகின்றான்.

: :

அனுமனைச் "சொல்லின் செல்வன்" என்று புகழும் இராமனே "செல்லும் சொல் வல்லான்." அனுமனின் பேச்சாற்றலைப் புகழும் இராமன், தன் சொல்லாற்றலை இங்கு வெளிப்படுத்துகின்றான். "வில்லார் தோள் இளைய வீர!" என்று தன் தம்பியை விளித்து இராமன் செய்தியைக் கூறுகின்றான் இவ்விளியைச் சந்தர்ப்பத்தோடு பொருத்திக் காணும்போது மிக்க பொருளுடையதாகிறது.

"இளைய வீர!" என்று இலக்குவனை அழைத்து அவனைத் தன் தம்பி என்று அனுமனுக்கு இராமன் உணர்த்திவிடுகிறான், "வில்பொருந்திய தோளுடைய வீரனே" என்றழைத்து இலக்குவனின் ஆற்றலையும், வலிமையையும் அனுமன் அறியுமாறு இராமன் புலப்படுத்துகின்றான். இவ்விளியின் சிறப்பு ஆராய்தற்கு உரியது.

இலக்குவன் இராமனின் இளவலே; ஆயினும் கானகத்தில் இராமனின் அடியானாகவே அமைந்து பணிபுரிந்தான். "மகனே இவன் பின் செல்; தம்பி என்னும்படி அன்று; அடியாரின் ஏவல் செய்தி," என்று தாய் சுமித்திரை பணித்த வண்ணம் இராமனின் தொண்டனாகக் கானகத்திருந்தான் இலக்குவன். இராமனும் சீதையும் சேர்ந்திருந்தவரை "வில்லை ஊன்றிய கையோடும், வெய்துயிர்ப்போடும், கண்கள் நீர் சொரிய ஒவ்வொரு நாளும், கங்குல் எல்லை காண்பளவும் நயனம் இமைப்பறியாது" காத்து நின்றவன். தங்குமிடம் சமைத்துக், காய்கனி கிழங்கு வகைகள் சேகரித்து இராமன் உண்ண அளித்தவன். இராமனைப் பேணிய தொண்டன் இலக்குவன்.

தலைவனைப் பாராட்டுவோரும், தலைவனோடு நட்பாவோரும், தலைவனுக்கு ஒத்த சிறப்புப் பெறுவார்கள். ஆனால் அவர்கள், தலைவனின் தொண்டனை மதிக்காமல் போதல் உலக இயல்பு. என் நண்பனின் வேலையாளை, எனக்கு ஒத்த சிறப்புடையவனாக நான் பாராட்டமாட்டேன். நானும் அவனை வேலைக்காரனாகவே மதிப்பேன். இவ்வுலகியல் உண்மையினை உணர்ந்து இராமன், தன் தம்பி ஆற்றல் மிக்கவன்; வலிமையுடைய வீரன்; தனக்கு அடிமையாக அவன் நடந்து கொள்ளினும் தன்னால் பெரிதும் மதிக்கப்பெற்றவன்; என்னும் இவ்வுண்மையை "வில்லார் தோள் இளைய வீர!" என்னும் விளியினால் அனுமனுக்கு உணர்த்துகின்றான்.

இவ்வாறு இலக்குவனின் பெருமையை இராமன் தன்னைச் சார்வோர்க்கு உணர்த்துதல் உண்டு இங்கு அனுமனுக்குச் சொல்லால் இலக்குவனின் ஆற்றலை உணர்த்திய இராமன். பின்னர் சுக்கிரீவனுக்குச் செயலால் அறிவுறுத்துகின்றான், அனுமன் பார்த்த அளவிலும், சொல்லிய அளவிலுமே உணரும் திறமுடையவன்; சுக்கிரீவனோ செய்து காட்டினாலன்றி உணரான்.

வாலி, முன்பு வென்று கொன்று வீசி எறிந்த துந்துபியின் எலும்புக்கூடு ஒருபுறம் கிடக்க, அதனை எற்றுமாறு இராமன் இலக்குவனைப் பணிக்கிறான். சுக்கிரீவனும், சுற்றி நின்ற வானரரும் வியக்க, இலக்குவன் கால்விரலால் எற்ற அவ்வெலும்புக்கூடு பிரமனுடைய உலகம் வரைச் சென்று மீள்கிறது. வான்மீகத்தில் இராமனே துந்துபியின் எலும்புக் கூட்டினை எற்றினான் என்றிருக்கக் கம்பன் அதனை இலக்குவன் செயலாக மாற்றி அமைத்தான். இதற்குக் காரணமே இலக்குவனின், ஆற்றலையும், வலிமையையும்

செலவழிந்த சக்தியை மீண்டும் பெற

காமதேனு வனஸ்பதி




வைடமின் A, வைடமின் D, கலந்தது.
கைபடாமல் சாஸ்திரீய முறையில் தயாரிக்கப்பட்டது.

தயாரிப்பு:

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை R. S. : : சேலம் ஜில்லா.

*மானேஜிங் ஏஜண்ட்ஸ்:*

சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்


பிறர்க்கு வாய்ப்பு நேரும்போதெல்லாம் உணர்த்த இராமன் விழைதலேயாம்.

"வில்லார் தோள் இளைய வீர!" என்னும் விளி அனுமனுக்கு இங்ஙனம் அரிய கருத்துக்களைத் தெரிவிக்க உதவியது. மற்றும் இலக்குவனுக்கும் ஒரு குறிப்பினை உணர்த்துகின்றது. அனுமனைக் கண்டவுடனேயே அவன் எத்தகைய அன்பன் என்பதனை இராமன் தெரிந்துகொள்கின்றான். என்புருக இராமன் திருமுன்னர் அன்புருவாய் நிற்கின்றான், அனுமன். எனவே இராமன் இலக்குவனிடம், "இவ்வனுமன் இனி என் அடியார் குழுவில் சேர்வான்; அடிமையாகவும், தொண்டனாகவும் இனி இவன் அமைய, உன்னைத் தம்பியாக மதித்துக் கொண்டாடிப் பாராட்டும் காலம் வந்தது" என்பதைச் சுட்டுவான்போல, "இளைய வீர!" என்று அழைக்கின்றான்.

மேலும் அனுமனைக் கண்டவுடனேயே பகை வெல்லும் காலம் வந்தது என்று இராமன் உள் மகிழ்கின்றான். "என் நலம் பேண இனி நீ என் அடிமையாக இருத்தல் தேவை இல்லை. தம்பியாகச் செருக்களத்தில் தோளொடு தோள் உடன் நின்று உன் வில்லாற்றலை வெளிப்படுத்துக" என்று இராமன் இளவலுக்கு உரைப்பானாகி "வில்லார் தோள் இளைய வீர!" என்று விளிக்கின்றான்.

: :

இவ்வாறு கம்பராமாயணத்தில் விளிகள் பலவும் கருத்துப் பொதிந்து கற்பார் இதயம் களிக்கச் செய்வன.



# கலை என்றால் என்ன?

★

கலை அன்பன்

இன்று சாப்பிடுவதைக்கூடக் கலை என்கிறார்கள். மிகவும் மலிவாகிவிட்ட கலை என்னும் சொல் தேவையற்ற இடங்களில், பொருள் இல்லாமல் பயன்படுத்தப் படுகிறது. உண்மையில் கலை என்றால் என்ன? என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்போதுதான் கலை, கொலையாகாமல் அதற்கே உரிய உயர்ந்த நிலையை மீண்டும் அடைய முடியும். இப்போது திரைப் படத்தைத்தான் கலை என்று மக்கள் கருதுகிறார்கள். ஆனால் கலை என்பது கடல் போன்று விரிவானது.

இயற்கையினின்று கலையை வேறுபடுத்திக் காண வேண்டும். மனிதன் இயற்கையில் தலையிட்டு அதனுடைய உட்கிடக்கைகளை ஆராய்கிறான். அந்த ஆராய்ச்சியின் விளைவாக உணர்ச்சி மேலிட்ட நிலையில் சித்திரங்கள் தீட்டுகிறான்; சிற்பங்கள் செதுக்குகிறான்; ஓவியங்கள் வரைகிறான்; காவியங்கள் புனைகிறான்; இசை அமைக்கிறான். கலைஞனுடைய உணர்ச்சிகள் கோடாகவோ, வண்ணமாகவோ, எழுத்தாகவோ, கற்களிலோ, இசையாகவோ உருவாகும்போது கலை பிறக்கிறது. மண்ணிற் கடியில் பொன் இருக்கிறது. அதை எடுத்து சுத்தம் செய்து அதில் வைரத்தைப் பதித்து பொற்கொல்லன் ஓர் அழகிய உருவத்தைக் கொடுக்கிறான். பொற்கொல்லன் ஒரு கலைஞன். கல்லோடும், மண்ணோடும் கலந்து கிடந்த பொன்னும், வைரமும் ஓர் அழகிய உருவம் பெறும்போது, அவை கலைப் பொருள்களாகக் காட்சி தருகின்றன. இயற்கை அல்லது அனுபவத்தை அடிப்படையாக வைத்துக் கலைஞன் தன்னுடைய உழைப்பு, அறிவாற்றல், தனித்தன்மை, உணர்ச்சிக் குமுறல் ஆகியவற்றை இணைத்து ஓர் உருவம் கொடுக்கும்போது கலை உற்பத்தியாகிறது. ஓர் ஓவியன் இயற்கை அழகைக்கண்டு மகிழுகிறான். அந்த எழில்மிக்க சூழ்நிலை அவனுடைய உள்ளத்தில் பதிகிறது. பிறகு அமைதியாக இருக்கும்போது அந்த எண்ண அலைகள் அவனுடைய உள்ளத்தில் பாய்கின்றன. அந்த நிலையில் அவனுடைய கற்பனை உணர்வும் சேரும்போது, அவன் உணர்ச்சிப் பிழம்பாக மாறுகிறான். அந்த எண்ணம் ஒரு மின்னல் போன்றது. சிறிது நேரத்தில் தோன்றி மறையும் அந்நினைவு மிகவும் ஆற்றல் வாய்ந்தது. எனவேதான் அவன் வரையும் ஓவியங்கள் மக்களை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்துகின்றன,

கலையை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று: பயன்படும் கலை. மற்றொன்று: நுண்கலை. மருத்துவம், வேளாண்மை, துணி உற்பத்தி போன்ற தொழில்கள் அனைத்தும் கலைகளே யாகும். மனிதன் தன்னுடைய அறிவைப் பயன்படுத்தி இத்தகைய கலைகளை உற்பத்தி செய்கிறான். ஆனால் நுண்கலை எண்பது வாழ்க்கைக்குப் பயன்படும் கலையைவிட மிகவும் உயர்ந்தது. ஓவியம், காவியம், சிற்பம், இசை, நாடகம் போன்றவை நுண்கலைகளாகும். ஒரு காவியத்தைப் படிக்கும்போது அல்லது இனிய இசையைக் கேட்கும்போது அல்லது பேசும் பொற் சித்திரத்தைக் காணும்போது நாம் உள்ளத்தைப் பறி கொடுக்கிறோம்; இந்த உலகத்தையே மறந்துவிடுகிறோம். ஆனால் இயந்திர உலகில் வாழும் நாம் தொழில் உற்பத்திப் பொருள்களைக் காணும்போது உணர்ச்சி வசப்படுவதில்லை. எனவேதான் நுண் கலை உயர்ந்த இடத்தையும், வாழ்க்கைக்கு அன்றாடம் பயன்படும் கலைகள் இரண்டாவது இடத்தையும் அடைந்துள்ளன.

கலை உணர்வு மனிதனை மிருகத்தினின்றும் பிரித்து ஓர் உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்கின்றது. புல்லாங்குழல் இசையைக் கேட்கும் போதே, கோவில்களிலுள்ள அழகிய சிர்பங்களையும், சித்திரங்களையும் காணும் போதோ நம்முடைய உள்ளம் வானவெளிக்கு உயர்ந்து செல்கிறது. உள்ளம் உயரும் போது மாசுகள் அகன்று மனிதன் பண்பட்டவனாகின்றான். எனவே தான் மனிதனுக்குக் கலை உணர்வு தேவை யென்பதை அறிஞர்கள் வலியுறுத்துகிறார்கள்.

இலக்கிய வாயிலாகவோ அல்லது ஒரு சித்திரத்தின் மூலமாகவோ கலைஞன் மக்களுடைய உணர்ச்சியைப் பிடித்து இழுக்கிறான். ஆனால் மக்களிடையே கீழ்த்தரமான உணர்ச்சியும் இருக்கின்றது. அத்தகைய மட்டரகமான உணர்வைக் கலைஞன் தூண்டிவிடக்கூடாது. ஆபாச இலக்கியமும் பெண்களைப் பிறந்த மேனியில் காட்டும் சித்திரங்களும் மக்களுடைய உணர்ச்சியை எளிதில் கவரக்கூடியவை. எனினும் இக் காரணத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு இவற்றைக் கலைகள் என்று கூறிவிட முடியாது. கலைஞனுடைய நோக்கம் மக்களை நல்வழிப் பாதைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். கலைஞர்கள் உணர்ச்சி வசப்பட்டவர்கள் என்ற காரணத்தினால் தான் தணிக்கைமுறை நடைமுறையில் இருந்து வருகின்றது. ஆதலின் கலைஞன் தன்னுடைய உணர்ச்சிக்கு சில வரையறைகளையும், கட்டுப் பாடுகளையும் வகுத்துக் கொள்ளவேண்டும்.

சமுதாயச் சூழ்நிலை, நாட்டு நடப்புக்கள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை அடிப்படையாக வைத்தே கலைகள் உருவாக்கப்படுகின்றன. தமிழ் நாட்டிலுள்ள ஓவியர் ஓர் அழகிய பெண்ணைப் படமாக வரைந்தால் அச் சித்திரத்தில் ஆடைகள் அதிகமாக இருப்பதையும், மேல் நாட்டிலுள்ள ஒரு கலைஞர் ஒரு படத்தை வரைந்தால் அதில் ஆடைகள் குறைவாக இருப்பதையும் காணலாம். எனவே கலைகள் ஒரு நாட்டின் வாழ்க்கை முறை, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றைச் சித்தரிக்கின்றன.

கலை, காலத்தின் கண்ணாடியாக அமைவது ஒருபுறமிருக்க, காலத்தையும் வெல்லக் கூடிய ஆற்றல் அதனிடமிருப்பதை நாம் மறந்துவிடக் கூடாது. தக்க முறையில் பாதுகாக்கப் பெறும் கலைக் கருவூலங்கள் தான் ஒரு நாட்டின் உண்மையான செல்வங்களாகும். மதுரை மாநகருக்கு வரும் வெளி நாட்டினர் மீனாட்சி அம்மன் கோவிலையும், திருமலைநாயக்கர் மகாலையும் தான் முதலாவதாகப் பார்வையிடுகிறார்கள்.

தமிழகத்தில் மன்னர்கள் கலைஞர்களைப் பெரிதும் ஆதரித்தனர். எனவே மகாபலிபுரம், சித்தன்ன வாசல், தஞ்சாவூர் போன்ற இடங்களில் இன்றும் நாம் கலை எழிலைக் காண முடிகிறது தமிழகக் கலைஞர்கள் கடவுள் மீது நம்பிக்கை உடையவர்களாகவும், சமயச் சார்பு மிக்கவர்களாகவும், மன்னவர்களிடம் மதிப்புடையவர்களாகவும் திகழ்ந்தனர். பொதுவாக, கலை முயற்சிகள், அனைத்திற்கும் சமயம் என்னும் முலாம் பூசப்பட்டதனால், அவற்றில் தெய்வீக அம்சம் மிகுந்திருந்தது. யாழ். புல்லாங்குழல், நாதசுரம் போன்ற இசைக் கருவிகள் முற்காலத்தில் தமிழகத்தின் பெருமையை உயர்த்தின தமிழகத்தின் கலை வரலாற்றைப் பாரத நாட்டின் வளர்ச்சியோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்.

இந்தியாவிலுள்ள கலைகள் அனைத்தும் முற்காலத்தில் சமயச்சார்புடையவையாக இருந்தன. அன்றைய நிலையில் கடவுளர் தான், கலைகளில் கதாநாயகர்களாக விளங்கினர். அதற்குப் பிறகு அந்நியர்கள் நம் நாட்டை ஆண்டபோது வெளி நாட்டுக் கலைகள் நம் நாட்டுக் கலைகளோடு கலந்துவிட்டன. ஹன், முகமதிய, மொகலாய, ஐரோப்பியக் கலைகள் பாரத நாட்டு கலைகளுடன் கலந்ததோடு ஆதிக்கமும் செலுத்தின. அந்நிய ஆட்சி நடைபெறும் போது அதிகார பீடத்திலுள்ளவர்கள் கலைகள் வளர அனுமதிப்பதில்லை. ஏனெனில் கவிதை, பேச்சு, நாடகம், கருத்துப்படம் ஆகிய இவற்றின் மூலம் வெளியிடப் பெறும் கருத்துக்கள் மக்களை எளிதில் கவரக்கூடியவை. விடுதலை இயக்கக் கருத்துக்களைத் தடைசெய்யும் எண்ணத்தில் அந்நிய ஆட்சியினர் அவர்களுடைய கலைகளையே நம்நாட்டில் புகுத்தினர். வடநாட்டில் மொகலாயக் கலை, பல கட்டிடங்களில் உருப்பெற்றது. வெள்ளையர்கள் இந்தியாவை ஆட்சி செய்தபோது இசைக் கலையை நம் நாட்டில் பெருமளவில் புகுத்தினர். எனவே இன்றும் நம் நாட்டில் மேல்நாட்டு இசைக் கருவிகள் புழக்கத்தில் இருந்து வருகின்றன.

விடுதலை பெற்ற பிறகு பாரதத்தில் கருத்துச் சுதந்திரம் ஏற்பட்டது கலைகள் வளர்வதற்கு ஏற்ற இனிய சூழ்நிலை இருந்தபோதிலும் கூட, நம் நாட்டில் தரமான கலைகள் தேவையான அளவு வளரவில்லை. வாழ்க்கையிலுள்ள துன்பங்கள், இடையூறுகள் ஆகியவற்றை மறந்துவிட்டுக் கலையுலகில் நடமாடுவதற்கு நம்நாட்டில் மிகவும் குறைந்த அளவிலேயே வாய்ப்புக்கள் உள்ளன. இத்தகைய கலைகளில் ஒன்றுதான் திரைப்படக் கலை. ஆனால் தமிழ்த் திரையுலகிலுள்ளவர்களுக்கும், கலை உணர்விற்கும் யாதொரு தொடர்புமில்லாததனால் நமது படங்களில், நாம் கலையைக் காண முடிவதில்லை, சுதந்திர இந்தியாவில் வங்காளத்தில்தான் இக்காலத்திய புதிய கலைகள் உருவெடுத்துள்ளன. கல்கத்தாவிலுள்ள கலைப் பள்ளி, ஓவியக் கலையில் மறு மலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

இன்று நம் நாட்டின் தேவைகள், சூழ்நிலை ஆகியவை மாறியிருக்கின்றன. வளர்ச்சி அடைந்துவரும் நம் மக்களிடையே புதிய விருப்பங்களும் முகிழ்த்து வருகின்றன. இம்மாறிய சூழ்நிலைக்கேற்பக் கலை உலகிலும் மறு மலர்ச்சி ஏற்படவேண்டும்.

உலகில் இன்று இக்காலத்திய புதிய ஓவியக் கலை ஒன்று உருவாகியிருக்கிறது. இப்புதிய ஓவியக் கலை சாதாரண மக்களை வியப்பிலும், படித்தவர்களைக் குழப்பத்திலும் ஆழ்த்துகிறது. இத்தகைய ஓவியங்களில் உருவத்திற்குப் பதிலாகக் கோடுகளையே சாதாரண மக்கள் காண முடிகிறது. உலகப் புகழ்பெற்ற பிகாசோவின் ஓவியங்கள், சில எண்ணங்களை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டவை ஒன்றைப் பார்த்து எழுதுவதற்குப் பதிலாக அறிவாற்றலிலேயே ஒரு கருத்தை உருவாக்கி, பிகாசோ போன்றவர்கள் சித்திரம் வரைகிறார்கள். ஒரு பொருளையோ அல்லது உருவத்தையோ பிகாசோவின் புதிய ஓவியங்களில் காண முடிவதில்லை. ஆனால் கலைத்துறையில் பயிற்சி பெற்ற இளம் ஓவியர்கள் இத்தகைய ஓவியங்களைப் புரிந்துகொள்வதாகக் கூறப்படுகிறது. பிகாசோ சொல்கிறார்: "எல்லோரும் கலையைப் புரிந்துகொள்ள விரும்புகிறார்கள். ஆனால் ஒரு பறவை பாடுவதை ஏன் புரிந்துகொள்ள முயலக் கூடாது? இரவு நேரம், மலர் ஆகியவற்றை மக்கள் விரும்புகிறார்கள், ஆனால் அவர்கள் அவற்றைப் புரிந்துகொள்ள விரும்புவதில்லை. உண்மை இவ்வாறு இருக்கும்போது, ஓவியத்தை மட்டும் அவர்கள் புரிந்துகொள்ள விரும்புகிறார்கள்." இக்காலத்திய புதிய ஓவியங்களைப் புரிந்துகொள்ளமுடியாமல் திணறுபவர்களுக்கு மறுமொழி அளிக்கும் வகையிலேயே பிகாசோ இக்கருத்துக்களைத் தெரிவித்துள்ளார், பிகாசோவினுடைய ஓவியங்களைப் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும் அவற்றை ரசிப்பதாகக் காட்டிக்கொள்ள இயலாத மக்களை இன்று உலகம் தாழ்வாக மதிக்கிறது எனவே மேல் நாடுகளில் பிகாசோவைப் பற்றி நன்கு தெரிந்துகொள்ளாதவர்கள் கூட, அவரைப் பாராட்டுகின்றனர். கலையுலகில் அவர் ஒரு வரலாற்றை ஏற்படுத்திவிட்டார். நம் நாட்டிலும் புதிய மறுமலர்ச்சிக் கலைஞர்கள் தோன்றும்போது, கலையுலகில் இழந்த இடத்தை நாம் மீண்டும் பெறுவோம் என்பதில் ஐயமில்லை.



# பாமரக் கவிஞர்கள்

★ **கனகசவுந்தரி இளந்திரையன்**

*“**நெல்லை மாவட்டப் பேச்சுத் தமிழ்**” என்னும் தலைப்பில் நான் செய்துவரும் ஆராய்ச்சிக்காக நான் சேகரித்த சொற்கள் - சொற்றொடர்களில் கிடைத்த சுவையான செய்திகளின் ஒரு பகுதியே இச் சிறிய கட்டுரை. இச் செய்திகள் ஆராய்ச்சியாளர்களுக்கு மட்டுமின்றி எல்லாருக்கும் சுவை பயக்கும் என்றே நம்புகிறேன்.*

கவிதையைப் பற்றிய ஆராய்ச்சிகள் வெகுவாகப் பெருகிவரும் காலம் இது. ஏட்டில் உள்ள பழைய கவிதைகளை அக்குவேறு ஆணி வேறாகப் பிரித்து ஆராய்வதில் பலர் ஈடுபட்டுள்ளார்கள். அவற்றைப் படித்தும், அவைகளுக்கு மேல் சிந்தித்தும் பலர் மகிழ்ச்சியடைகிறார்கள். இவர்களுக்கெல்லாம் தெரியாத சில ‘கவிஞர்கள்’ நாட்டில் நம்மோடு வாழ்ந்து வருகிறார்கள்; நாள்தோறும், வேளைதோறும் கவிதைகளும் படைத்து வருகிறார்கள். அவர்களே நம் நாட்டுப் பாமரமக்கள். அவர்களின் அன்றாடப் பேச்சே கவிதையாகத்தான் உருவாகி ஒலிக்கிறது...

பாமரமக்களின் பேச்சில் எதுகைமோனை உண்டு. பலர் ‘எகனைமொகனை’ யாகத்தான் பேசுவார்கள். அதிலே கற்பனை வளமும் கருத்துச்செறிவும் உண்டு; முன்னோர் கருத்துக்கள் மேற்கோளாக அமைவதும் உண்டு; அணி இலக்கணங்களில் உள்ள எல்லா அணிகளும் உண்டு. இவைதவிர, மற்றக் கவிதைகளுக்கு இல்லாத தனிச்சிறப்பு இயல்புகள் பலவும் ‘பாமரப்-பேச்சுக்-கவிதை’களில் உண்டு...

சிறுவன் எதற்கோ பிடிவாதம் செய்கிறான். தாய் சொல்லச் சொல்லக் கேளாமல் வீம்பு பண்ணுகிறான். சட்டி பானைகளை உருட்டி உடைக்கிறான். தாய்க்குக் கோபம் வருகிறது; அதட்டுகிறாள். அவன் கேட்பதாக இல்லை. அவனுடைய குறும்புப் பிடிவாதம் தொடர்கிறது. தாய்க்குப் பொறுக்கவில்லை. கோபம் அதிகரிக்கிறது. எழுந்து சென்று முதுகில் ‘நாலு’ வைக்கிறாள்! அப்போதும் பயல் அடங்கவில்லை; திமிறிக் கொண்டு, அவன் மேலும் கோபத்தைக் காட்டுகிறான். தாயின் பொறுமை பறக்கிறது; கையில் கோபம் ஏறுகிறது. அக்கோபம் உள்ளத்தையும் எழுப்புகிறது. முதுகில் ஒலிக்கும் தாளத்துக்கு ஏற்ப வாயிலே பாட்டுப் பிறக்கிறது :

‘‘முளைச்சு மூணு இலை குத்த’லை;—
அதுக்குள்ளே அடத்தைப் பாரேன்!.’’

இதைத் தொடர்ந்து இன்னும் எத்தனையோ பாட்டுகள்.

குழந்தையை இளஞ்செடியோடு பொருத்தி நினைத்துச் செய்யப்பட்ட அருமையான உருவகம் இது. இன்னும் குறும்பு செய்வதற்குப் போதிய வயது ஆகாத பிராயம் என்பதையே இப்படி உருவகத்தில் குறித்தாள் அந்தப் பெண்மணி. சில கொடிகள் முதலில் செடியாக வளர்ந்த பிறகே கொடி வீசும். அதற்கேற்ற வளர்ச்சி வருமுன்னேயே கொடி வீசத் தொடங்கினால் எப்படி இருக்குமோ அப்படி இருக்கிறது இக்குழந்தையின் நடத்தை. கொடி நிமிர்ந்து ஒரு கொழுகொம்பைப் பற்றிக் கொள்ளுவதற்காக எழுகிறது. அதைத் தாங்கும் அளவாவது அதன் அடித்தண்டு வளர்ச்சியும் உறுதியும் பெற்றிருக்க வேண்டும். அதற்கு முன்னேயே கொடி வீசினால் அடித்தண்டு வளைந்து கொடியைத் தரையில் தள்ளிவிடும். இவன் குறும்புப்பிடிவாதமும் செய்யுமுன் அதனால் ஏற்படும் விளைவுகளைத் தாங்கிக்கொள்ளக்கூடிய ‘முதுகுப்பலமாவது’ ஏற்பட்டிருக்க வேண்டும். அதற்கு முன்பே இப்படித் தொடங்கிவிட்டானே என்பதைத்தான், இவ்வளவு அழகாகக் கவிதைச் சுவைபட வெளியிட்டிருக்கிறாள் இந்தத் தாய்.

சிறந்த பட்டப்பெயரும் ஒருவகைக் கவிதை உணர்ச்சியிலேயே பிறக்கிறது. படித்தவர்கள் வழங்குகிற சிறப்புப் பட்டங்களைவிட பாமரர் வழங்கும் ஏளனப் பட்டங்களில் மிகுந்த உணர்ச்சி ததும்பி நிற்கிறது. பல பட்டப் பெயர்கள் (ஒரு குறிப்பிட்ட கூட்டத்தினருக்கு மட்டுமே விளங்கக்கூடிய) குழூஉக்குறிபோல இருக்கும். ஆயினும் அவற்றின் உயர்கவிதைத்திறம் நினைந்து மகிழத்தக்கது.

தங்களுக்குத்தான் எல்லாம் தெரியும் என்பது போலச்சிலர் பேசித்திரிவார்கள். ஆனால் அவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்பது மற்றவர்களுக்குத் தெரியும். ஆதலால் இந்த வாயாடிகளுக்கு’ வெத்துடப்பா (வெற்றுடப்பா) என்று பட்டப்பெயர் சூட்டிவிடுவார்கள். ‘குறைகுடம் கூத்தாடும், காயோலை சலசலக்கும்’ என்றெல்லாம் இதை இலக்கியக் கலைஞர்கள் விளக்கினாலும், ‘‘உள்ளே ஒன்றும் இல்லாதது,-அதனால் ஒலி எழுப்புகிறது’’ என்னும் கருத்தில் அமைந்த இப்பெயரில் அரிய கவிதைச் செறிவு உள்ளது.

பெரிய வீட்டுச் செல்லப் பிள்ளைகள் கவலையில்லாமல் மனம் போனபடி அலைவார்கள், அவர்களால் பலருக்குத் தொல்லை ஏற்படும். அதை அவர்களின் பெற்றோரிடம் முறையிட்டுக் கொண்டாலும் நீதி கிடைக்கப் போவதில்லை. அந்தநிலையில், அந்த முரடர்களை வைது மகிழ்வதைத்தவிர எளியவர்களுக்கு வேறு வழியில்லை.

ஆதலால் அவர்களுக்குக் கோயில்மாடு என்று பட்டப் பெயர் சூட்டி ஒருவாறு திருப்தியடைவார்கள். கோயில் மாட்டுக்குக் கயிறும் கட்டுத்தறியும் கிடையாது; எங்கும் மேயும்; எங்கும் உலவும்; இந்த இளைஞர்களும் அப்படியே தட்டிக்கேட்பாரின்றித் திரிகிறார்கள் என்ற கருத்தை இந்தப் பட்டப்பெயர் வெளியிடுகிறது.

இல்லாததையே எடுத்துக்கட்டிப் பேசுவதில் சிலருக்கு ஒரு ஆனந்தம். அவர்களுடைய தொண தொணப்பைப் பொறுக்க முடியாத மற்றவர்கள் அவர்களுக்கு, வெள்ளைக் காக்கா என்று பெயர்வைத்து விடுவார்கள். அவர்கள் சொல்லுகிற செய்திகள் அனைத்தும் "வெள்ளைக் காக்கா உண்டு" என்பது போன்ற பொய் என்பதையே குறிப்பாக இப்பெயர் மூலம் உணர்த்துகிறார்கள்.

இலக்கியத்தில் சிலரை அவரவர் செய்த வீரச்செயலோடும், அச்செயல் நடந்த இடத்தோடும் சார்த்திக் குறிப்பிடுவார்கள். ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்பன அத்தகைய சிறப்புப் பெயர்களில் சில. பாமர மக்கள் ஏளனமாக இப்படிச் சிலவற்றை வழங்குகின்றார்கள். வயலில் ஏர் உழத் தெரியாமல் வரப்பில் மோதிக்கொண்டு நின்ற ஒருவனை, அதன் பிறகு கலப்பை முறிச்சான் (முறித்தான்) என்றே குறிப்பார்கள். கோயில் கொடைகளில் தனக்கு ஆவேசம் வந்ததாகச் சொல்லிக்கொண்டு சும்மா ஆடுகிறவனை, சாமியாடி என்றே ஏளனமாகச் சொல்லுவார்கள். வேலைக்கள்ளனை மலைதாங்கி என்றும், தந்திரக் காரனை நரியன் அல்லது குள்ளநரி என்றும், கைதேர்ந்த திருடனை அங்கங்கு இருந்த கொள்ளைக் காரர்களின் பெயர்களை இட்டும் (சம்புலிங்கம் என்பது போல) அழைப்பார்கள்.

மதுவிலக்கு வருவதற்கு முன் நாட்டுப்புறங்களில் கள்ளுக்குடி அதிகமாக இருந்தது. குடித்து மயங்கியவன் ஆடி அசைந்து தள்ளாடித் தள்ளாடி நடப்பான். ஆதலால் அவனைப் பார்க்கிறவர்கள், "ஐயா குதிரையில் போகிறார்" என்பார்கள். கள்ளுக்கும் வெள்ளைக் குதிரை என்று பெயர் உண்டு. பெருங்குடியர்களைத் தண்ணிவண்டி என்பார்கள். தண்ணீர்வண்டியிலுள்ள பெரிய பீப்பா நிறையத் தண்ணீர் இருப்பது போல இவருடைய வயிறு கள்ளுத்தண்ணியாலேயே நிரம்பியிருப்பது என்பது கருத்து.

சிலர் மிகவும் குள்ளமாக இருப்பார்கள். இவர்களை மற்றவர்கள் குட்டையன், கட்டையன், குள்ளன் என்றெல்லாம் சொல்லுவார்கள். இதெல்லாம் உரைநடை. இதில் திருப்தியடையாத சிலர், "ஆள் அழகாக இருக்கிறானே, கத்திரிக்காயிலே காலும் கையும் முளைச்ச மாதிரி!" என்பார்கள். இதையே சுருக்கிக் குட்டைக் கத்தரிக்காய் என்று பட்டப்பெயர் வைப்பதும் உண்டு.

குள்ளர்களைப் பிடித்தவர்கள் நெட்டையர்களையும் விட்டுவிடவில்லை. அவர்களை "நெட்டைக் கொக்கு" என்றே அழைப்பார்கள். கொக்கு சிறிதாக இருந்தாலும், சிலவகைக் கொக்குகளுக்குக் கழுத்துமட்டும் மிக நீளமாக இருக்கும்; சிலவற்றுக்குக் கால்கள் மிக நீண்டிருக்கும். இவைகளை மனத்தில் கொண்டே சுருக்கமாக, அவர்களை நெட்டைக் கொக்கு என்று சொல்லுவார்கள்;

பெரிய கண் உள்ள பெண்ணை விசாலாட்சி என்றும், அழகிய கண் உள்ளவளை அங்கயற்கண்ணி என்றும் புலவர்கள் புகழ்வார்கள். பாமர மக்களோ பெரிய கண் உள்ளவளை வட்டில்கண்ணி என்றும் முண்டக் கண்ணி என்றும் இகழ்வார்கள். முண்டகம் என்பது தாமரை; ஆனால் முண்டக்கண்ணி என்பது ஏனோ அருவருப்பை உணர்த்துவதாக மாறிவிட்டது.

பெண்மை மென்மைக்குப் பேர்போனது. ஒரு பெண் முரட்டுத்தனமாக நடந்தால் அவளை மாட்டுக் காலி என்றும் மிளா என்றும் பெண்களே பழிப்பார்கள். மலைவாழ் விலங்குகளில் ஒன்றான மிளா, மானின் ஒரு முரட்டுவகையைச் சேர்ந்தது. கல், மண், மேடு, பள்ளம் என்றெல்லாம் பாராமல் சாடும் இயல்புள்ளது. மாட்டுக்காலி என்பது மிக ஆழமான ஏளனக் கவிதை. அவள் மாடு அல்ல; பெண் தான். ஆனால் அவள் கால் தான் மாட்டுக்கால். தனக்கு ஒவ்வாத ஓர் உறுப்பைப் பெற்றிருக்கிறாள் என்று மறைமுகமாகக் குறிப்பிடுவதில் எவ்வளவு ஏளனம் தொனிக்கிறது! அவளையே மாடு என்று சொன்னால் கூட இவ்வளவு வேகம் இராதே...

பொய்யே சொல்லுகிற ஒருவனைப் பொய்யன் என்று, உரைநடையில் சொல்லுவதைப் பாமரமக்கள் பெரும்பாலும் விரும்புவதில்லை. "அவனா, அவன் அரிச்சந்திரன் வீட்டுக்கு அடுத்த வீட்டுக்காரனாயிற்றே!" என்று ஏளனமாகச் சொல்லுவார்கள். அடுத்த என்ற சொல் பக்கத்து வீடு என்ற பொருளில் வரவில்லை; மற்றொன்று என்ற பொருளிலும் குறிப்பாக, மாறுபட்ட என்ற பொருளிலும் இங்கு நயமாக ஆளப்பட்டுள்ளது. ஒருத்தியை மிகக் கொடியவள் என்று கூற விரும்பினால், அவள் வைக்கோல்போரில் கைவைத்தால் உடனே தீப்பிடித்துக் கொள்ளுமே!' என்று சொல்லுவார்கள்.

ஒரு பெண்ணைப் புகழும் போதும், 'பூமாதேவியாயிற்றே' என்பார்கள். நிலம் எல்லாவற்றையும், தன்னை அகழ்வாரையும் பொறுத்துக்கொண்டு எல்லார்க்கும் நலம் செய்வது போல, அவளும் தியாக நலத்திற் சிறந்தவள் என்பது குறிப்பு. அவளையே, 'புல்லைக்கூட நோக மிதிக்கமாட்டாளே' என்றும் புகழ்வார்கள்; சீதேவி, இளையவள் என்னும் பட்டங்களையும் அவளுக்கு வழங்குவார்கள்.

சில உழவர்கள், தங்கள் தொழிலுக்கு ஆதாரத் துணையான உழவு மாடுகளை அன்போடு தடவிக் கொடுத்து, 'என்இலையவள்' என்று போற்றுவதைக் கேட்கும் யாருடைய விழிகளிலும் நீர்தேங்கிவிடும். வாயில்லாத அந்த உயிரைச் செல்வமே என்று நன்றிப் பெருக்கோடு போற்றும் உள்ளத்தில் உயர்கவிதை உணர்ச்சி பொங்கி நிற்கிறது என்பதில் ஐயமுண்டோ?

இவைகளை எல்லாம் பார்க்கும்போது மனிதப் பேச்சு முறையில் கவிதை அம்சமும் இயற்கையாகவே உண்டு என்றே எண்ணத்தோன்றுகிறது. கவிதையின் பல்வேறு இயல்புகள் ஊடாடாவிட்டால் வாழ்வே சப்பென்று போய்விடும் என்று பாமரமக்களும் தெரிந்து வைத்திருக்கிறார்கள். ஆனால், இன்றைய எந்திர நாகரிகம் இதைப் புறக்கணித்து வருகிறது; கல்வித் துறையிலும் இந்த இயல்புகளுக்குப் பொதுவாக இடமில்லை. இவைகளின் விளைவாக ஏற்படப் போகும் புதிய சமுதாயம் எப்படி இருக்கப் போகிறதோ ?

# “கர்வம்”

★

**கவிஞர் துரைசாமி**

**பாத்திரங்கள் :**

1. முல்லைக்கொடி — (பெண்)
2. மயில் — (பெண்)
3. பொன்னுடை — (ஆண்)
4. தேர் — (ஆண்)
5. தென்றல் — (ஆண்)

(முல்லைக்கொடி, தன்னை நோக்கி வரும் மயிலை வரவேற்கிறது)

**முல்லை :** வரவேண்டும் வரவேண்டும், வண்ணமயில் நங்காய்!
கரவாது எனைக்காணக் கடுகியே இங்குவந்த
மாட்சியால் உள்ளம் மகிழ்ந்தேன் மயிலரசி!
சற்றே அமர்க. சலித்தாய் வழிநடையால்!

**மயில் :** முல்லைக் கொடிப்பெண்ணே! முத்த நகையழகி!
கல்லைக் கனியவைக்கும் கற்கண்டுத் தீஞ்சொல்லால்
அன்பைச் சொரிந்தாய்நீ ஆயிரங்கால் ஊன்றிடுக.

**முல்லை :** முகஸ்துதியேன் பண்ணுகிறாய்! மூன்றாண்டின் மேலாக
இங்கென்னைக் காண எழுந்தருள வில்லை! இன்று
எங்கேயோ போகும் வழியில்நான் கண்டதனால்...

**மயில் :** அப்படி நீ எண்ணாதே! அனவரத மும்உன்னைச்
சொப்பனத்தி லும்மறவேன்! சூதில்லை சொல்வதுபோல்

(மயில் கீழே உட்காரப் போகிறது. முல்லைக்கொடி பரபரப்புடன்)

**முல்லை :** புழுதியிலே உட்காரப் போகிறாய்! மேனி
பழுதுபட்டுப் போகாதோ? பாவாய்! இதோ இந்தத்
தங்கத்தேர் தன்னில் அமர்ந்திடுவாய், தாள்நோகும்!

**மயில் :** உன்னுடைய தோழியெனக் குபசாரம் வேறேயா?
கன்னி வயதுமுதற் காலமெலாம் மண்தரையில்
நின்னருகில் தானே நிமிர்ந்துவிளை யாடினேன்?
தங்கத்தேர் மீதுநான் தங்குதலும் கூடுமோ?

**முல்லை :** என்னுடைய தேரில் இனிதிருக்க என்னதடை?
உன்னைக் குறைகூறும் உன்மத்தரும் உண்டோ?

**மயில் :** குறைகூரு விட்டாலும் கொஞ்சம் அடக்ககுணம்
வேண்டுமடி! இன்றேல் வெளியுலகம் தூற்றாதோ?

**முல்லை :** உன்னிஷ்டம், மாமயிலே! உட்கார் வெறுந்தரையில்!

**மயில் :** வெற்றுத் தரைதான் விளைசுகத்தின் ஆதியடி!
முற்றத் துறந்தவரும், மூவுலகை யாள்பவரும்
தோன்றி மறைவதிந்தத் தூயமண்ணில் அல்லவோ?

**முல்லை :** வேதாந்தப் பாயலெனக் கின்னும் விரியவில்லை!
வாதாட வேண்டாம், வருத்தம் விளைவிக்க
ஒப்பவில்லை....போகட்டும்....உலகவிவ காரங்கள்
எப்படித்தாய் உள்ளன? நீ யெங்கெங்கு சென்று [வந்தாய்?
அங்கங்கு கண்ட அதிசயங்கள் என்னென்ன?
எல்லாம் எனக்கே எடுத்துரைக்க வேண்டுமடி!

**மயில் :** விந்தையடி உன் கேள்வி! விளையாடு கின்றாயா?
அந்திப் பொழுதில் அழகுமணம் வீசிநிற்கும்
சுந்தரத்துப் பூங்கொடியே! சொகுசாகக் கேட்டு [விட்டாய்!
காட்டின் இடையே, கனத்தமலைச் சாரலிலே,
பச்சை புதரருகோ, பாழுங் குகைக்குள்ளோ
இச்சை யுடன்வசிக்கும் என்னைப்போய் இவ்வுலகச்
செய்திகளைக் கேட்டால் சிரிப்பிற் கிடமலவோ?
காட்டுப் பறவைக்கு நாட்டு நடப்புகள்தான்
எங்கே தெரியும்? இதயத்தி லெண்ணிப்பார்!

**முல்லை :** நீல மயிலே! நினதுமொழி நன்று, நன்று!
வாலைக் குமரியுன்றன் வாக்குத் திறமையிலே
சொக்கி வசமிழக்கும் சோம்பேறி நானல்ல!
கால்கள் இரண்டு, கனத்த சிறகிரண்டு,
பெற்றிருந்தும் ஏதோ பிதற்றுகிறாய் பெண்மணியே!
உற்ற நடைக்குவமை உலகத்தி லெங்குமில்லை!
கால்கள் சலித்தால் சிறகின் உதவியுண்டு!

(பெருமூச்சுவிட்டு)

ஏழைக் கொடியெனக்கே எவ்வுதவி யுங்கிடையா!
தோன்றினநாள் தொட்டுத் தொலைந்திடுநாள் [காறுமிந்தக்
கானகத்தை விட்டுக் கடுகளவும் நானசைய
ஏலா தவளாய் இருக்கின்றேன், இந்நிலையில்
காலாரச் சென்றுலவுங் காரணத்தால் உன்னிடந்தான்
கேட்டேன், பொறுத்திடுக கேள்வியெனுங் குற்றத்தை!

**மயில் :** குற்றமொன்றும்கூறவில்லை கோதையே! பூங்கொடியே!
முற்றும் மொழிவதற்குள் கோபம் முகிழ்த்துவிடல்
நன்றோ? பொறுமையன்றோநங்கையர்க்குப் பூஷணமாம்!
காலும் சிறகும் இருக்கின்ற காரணத்தால்
பூலோகம் சுற்ற முடியுமோ? பொற்கொடியே!
காகம் கிளிபோல் ககனவழி மீதினிலே
தேகம் பெருத்த என்னால் தீங்கின்றிச் செல்லல்
இயலுமோ நீயே இயம்புவாய்; மேலும்
அயலான் ஒருமனிதன் அன்றொருநாள் செய்துவிட்ட
தொந்தரவால் இன்னும் துயர்மிகுந்து விட்டதடி!
அந்திபகல் எங்கும் அசைய முடியவில்லை!

**முல்லை :** மானிடனால் நேர்ந்த மயக்கமென்ன மாமயிலே!
கானகத்தில் இஷ்டம்போல் காலங் கழித்துவரும்
உன்னைத் துயரிழைத்த உன்மத்தன் யாரம்மா?
என்னதான் செய்தான்? இயம்புவாய் என்தோழி.

மயில் : வள்ளல் ஒருவன், வரையாமல் ஈபவனும்!
அள்ளிக் கொடுத்துக் கரமிரண்டும் அப்படியே
செக்கச் செவேலென்று செந்நிறமாய்ப்போயிற்றாம்!
பேகன் எனும்பெயரைப் பின்னால் தெரிந்துகொண்டேன்
சென்றமழைக் காலத்தே ஓர்நாள் சிலுசிலுத்த
தென்றலும் வாடையும் வீசும் தினத்திலே,
கார்மேகக் கூட்டம் கடுகியே வானத்தில்
போர்க்கோலங் கொண்டு பொழியும் மழையினிலே,
உள்ளங் குளிர உவகை மிகுந்துவிடத்
தோகைவிரித் தாடினேன் தோன்றினான் அப்போது.
ஈகைவள்ளல் அல்லவா? என்றன் நடனமதைக்
கண்டான் கருத்தழிந்தான்! மேனி நடுங்குதென்று
கொண்டான், பொன் னாடைதனைக் குளிருக்கா என்மீது
போர்த்திவிட்டுச் சந்தோஷம் பொங்கவே
[சென்றுவிட்டான்!
வார்த்தையென்ன சொல்லுவேன் வாய்பேசா
[ஊமையாய்
அன்றுமுதல் இன்றுவரை அழகியபொன் னாடைதனை
நின்று சுமந்து நெளிந்துடலம் குன்றிடவே
கஷ்டப் படும்எனையே கண்ணால்நீ பார்த்தபின்பும்
இஷ்டம்போல் பேசுகிறாய் என்னென்பேன் என்தோழி!

முல்லை : பொன்மயிலே! பூஷணமே! துன்பம் பொறுத்திடுக.
என்னைப்போல் நீயும் இதயம் நலிந்துவிட
மானிடனால் இந்தவிதம் மாதுயரில் மூழ்கினையே!

மயில் : உன்னைப்போல் துன்பமா? யாரால் துயருனக்கு?
மன்னும் கொடியுனக்கும் மானிடனால் நேர்ந்த
இடருண்டோ? எங்கே இயம்புவாய் இப்போது.

முல்லை : போனகதை யைச்சொல்லிப் புண்ணியந்தான்
[என்ன? இனி
மோனநிலை ஒன்றே முகிழ்க்கு மின்பக் காரணமாம்

மயில் : உள்ளத் துயரம் உரைத்தால்தான் போகுமடி!
வெள்ளையுள்ளங் கொண்டாய் ! விரித்துரைக்க
[வேண்டுகிறேன்

முல்லை : சொல்லத்தான் வேண்டுமெனில் சொல்லுகிறேன்
[கேட்டிடுவாய்!
ஆதிநாள் எல்லாம் அசைந்தாடிக் கானகத்து
வீதியாம் இங்கே விளையாடி னோம்முன்பு
பாலப் பருவத்தில் பாவை யெனைத்திரும்பிப்
பார்த்தவர்கள் யாருமில்லை ! பருவம் முகிழ்த்தபின்பு
போவோர் வருவோர் எவரும் புதுமணத்தின்
இன்பத்தில் ஈடுபட்டே என்னைக் கடைக்கண்ணால்
பார்த்துப்பின் புன்முறுவல் பூத்துநிற்போர் பற்பலரே.
என்மேனி தொட்டிடுவார் இன்னுஞ்சிலர், அன்றி
வெண்ணிறத்துப் பூவை வெடுக்கென்று கிள்ளிடுவார்!
பண்ணாத கோலமெலாம் பண்ணியே பாவையெனைப்
புண்ணாகச் செய்த புனிதர் பலரம்மா!
நாணத்தைப் போக்கி நகைமுகத்து மொட்டுகளை
வீணருக்குப் போக்கி விதிநினைத்து நின்றிருந்தேன்!
மாலைப்பொழுது மயங்குமோர் நாளதனில்
காட்டுக் குருவியொன்று பாட்டிசைக்கப் பின்னணியில்
மோட்டுக் கிளையமர்ந்து மந்தி முழவிசைக்க
இன்பநடம் ஆடி இனிதிருந்தேன் அப்போது
தங்கத்தேர் மீதேறித் தையலர்கள் புடைசூழப்
பங்கமிலா மந்திரிமார் பக்கத்திற் கைகட்டி
வாய்புதைத்துத் தங்கள் வணக்கத்தைக் காட்டிவர
வெண்சா மரம்வீசி வேறிரண்டு மங்கைமார்
அண்மையிலே நிற்க அலங்கார பூஷணனாய்ப்
பாரியெனும் வள்ளலிந்தப் பாதையிலே வந்தான்காண்!

மயில் : ஈகைவள்ளல் தானோ இவனும்? மிகநன்று
தோகையெனக் கும்உனக்கும் தொந்தரவு
[செய்தவர்கள்
வள்ளல்எனும் பேரால் வரட்டுஜம்பம்வாய்ந்தவர்தான்!

முல்லை : முற்றிலும் கேள்மயிலே ! முந்துற்று வந்தவன் என்
ஆட்டத்தைக் கண்டுவிட்டான்! அப்படியே தேர்நிறுத்தி
என்னருகில் வந்தான் இதயம் நெகிழ்ந்துவிட்டான்!
பற்றி வளர்வதற்குக் கொம்பின்றிப் பாவைநான்
தத்தளித்துத் தள்ளாடி நிற்பதாய்த் தான்நினைத்துத்
தங்கத்தேர் தன்னை அருகில் நிறுத்தி என்றன்
அங்கத்தைக் கைப்பிடித்துத் தேரை அணைக்க
[வைத்தான்!
சொல்லவெட்க மாகுதடி! சுத்த பயித்தியந்தான்
செய்தசெயல் என்னுடைய சித்தத்தை வாட்டுதடி!
இந்தரதம் தான்மயிலே சொந்தரதம் என்றனக்கு!
காலமெல்லாம் இந்தக் கனகத்தேர் மேல்படர்ந்து
சீலம் இழந்து சிரிப்பாய்ச் சிரிக்கின்றேன்

(இந்த சமயத்தில் பொன்னாடை கேலிச்சிரிப்புச் சிரிக்கிறது)

பொன் : பேசுங்கள் பேசுங்கள்! நன்றாகப் பேசுங்கள்!!
நாக்கில் நரம்பின்றி ஊக்கமாய்ப் பேசுங்கள்!
வாய்க்குவந்த வார்த்தையெலாம் வாரி வழங்குங்கள்!

மயில் : பெண்கள் தனித்திருக்கப் பின்னால் ஒளிந்துநின்று
பேசிப் பிதற்றுகின்ற பித்தனவன் யாவன்காண்!

பொன்: பித்தம் உனக்கன்றி வேறில்லை பெண்மயிலே!
சித்தத்தில் உள்ள செருக்கை யகற்றிவிடு!
யாவனென்றா கேட்கிறாய்? என்னைத் தெரியவில்லை?
பொன்னாடை நான்தான்உன் மேனி பொதிந்துநிற்பேன்
மன்னனும் பேகனது மாட்சியறி யாமல்இன்று
என்னென்ன சொற்களைநீ இழிவா யியம்பிவிட்டாய்!
நாவலரும் பாவலரும் நாவார வாழ்த்துகின்ற
காவலனை யெவ்வுயிரும் கையால் தொழுகையிலே
அற்பப் பதர்நீ அகங்காரத் துச்சியிலே
நிற்பாய்! கொடிய நெடுவசைகள் சிந்துகின்றாய்!
பேகனது மாண்புணரும் பெற்றி உனக்கேது?
ஆயிரம்பொன் னாலே அழகுமிகச் செய்தமைத்த
ஆடையாம் என்னையுன்மேல் போர்த்தி யகன்றவரின்
உள்ளக்கருணை உரைக்கடங்கும் தன்மையதோ?
வீணே யுளறாதே! வெற்றுரையை விட்டுவிடு;

மயில் : போதுமே வீண்பெருமை! புத்திசொல வந்துவிட்டாய்!
ஆதிமுதல் என்னை அடக்கி யமர்ந்திருக்கும்
ஆடையே! போதும் அதிகப்ர சங்கமெல்லாம்!
கூடைமொழி இங்குரைக்கக் கூசவில்லையோ? உனது
வேந்தனது மாட்சி விரித்துரைக்க வந்துவிட்டாய்!
ஆசைக் குரியவள்தான் அழுது புலம்பிநிற்க
வேசையில்லில் வாழுகின்ற வித்தகரின் மேன்மைகளை
வேறிடத்திற் சென்று விரித்துப் புகழ்ந்திடுக.

பொன் : (தேரைப் பார்த்து)
நாய்குரைக்கக் கண்டு நடுங்குமோ சூரியன்தான்!
வேய்ந்தபசும் பொன்தேரே! பாரும் விஷமமதை!
மானுடத்து நம்தலைவர் மாட்சி பழித்துரைக்கும்
விந்தையினைக் காணுங்கள்! வீணுக அற்பர்களாம்
இந்தமயில், முல்லை இருவருடன் நாம்வாழப்
பாவம்என்ன செய்தோம்? பதைக்கின்ற தென்மனமே.

தேர் : உண்மைதான் உண்மைதான்! ஒடிந்து விழும்கொடியை
அண்மையிலே கண்ட அதிபர்எங்கள் பாரிமன்னர்
பொங்கும் கருணையினுல் பொன்தேராம் என்றனையே
பக்கத் திருத்திப் பதைபதைக்கக், கால்நடையாய்ப்
போனுரே, அந்த புகழ்மன்ன ருக்கிதுவும்
வேண்டும்! என் நண்பரே! இன்னும்
[வேண்டும்என்பேன்,
கால்கள் சலிக்கக் கடுகிவிரை வாகவே
சாலைதொறும் வீதிதொறும் சண்டப்ர சண்டமாய்ப்
பாய்ந்து திரிந்தஎன்னைப் பாழும் கொடிக்கருகில்
நிற்கவைத்துச் சென்ற நெடுங்கொடையின்
[வள்ளலைத்தான்
சொல்லிடவும் வேண்டும்! சுருங்காத அன்பர்தமை
எல்லோரும் தூற்றும் இயற்கையினை யாரறியார்?
அன்பின் திறமறிவார் ஆயிரத்திற் கோர்மனிதர்!
'நல்லதற்குக் காலமில்லை' என்பதுவும் பொய்யாமோ?

முல்லை : ஆகா! அழகுரதத் தன்பரே! நீர்மொழிந்த
சாகாத வார்த்தைகளைச் சாக்கடையிற் கொட்டுங்கள்!
தங்கத்தே ராம்உம்மைத் தையல் எனக்கருகில்
நிற்கவைத்த காரணத்தால் நீண்டு வளர்ந்தேனே?
தேராம்நீர் இன்றேல் தெருவில் கிடந்தமிழ்ந்து
பாழ்பட் டிருப்பேனே? பாரிவள்ளல் ஈகையினுல்
நீண்டு வளர்ந்து நெடுங்கொடியாய் நின்றேனே?
என்ன உளறல்மொழி எம்மிடத்தில் வீசுகிறீர்!
என்னைப் படைத்த கடவுள்தான் யான்வளரக்
கொம்போ, மரமோ கொடுக்காமற் போவானே?

தேர் : தானே வளர்த்தகடா தன்மீது பாய்ந்ததுபோல்
எம்மையே ஏசி இகழ்வதற்குக் கூசவில்லை!

முல்லை : பெற்ற புதல்வியரைப் பேணமுடி யாமலன்று
வெற்றுத் தரையில் விழுந்து கதறிடவும்
ஆவிதனைக் காவாமல் அப்படியே மாண்டுவிட்ட
பாரிவள்ளல் வீரம் பலவும்நாம் பார்த்திருப்போம்!

(அப்போது தென்றல் அங்கு வருகிறது)

தென்றல்: நீல மயிலே! நெடுங்கொடியாம் முல்லையே!
சாலவே நீவிர் இருவோரும் சாற்றியதை
எட்ட இருந்து இருகாதால் கேட்டேன்நான்!
துட்டத் தனமாக தூஷணைகள் செய்ததனைக்
கேட்கச் சகிக்கவில்லை! கேவலத்துக் கெல்லையில்லை!
எல்லையற்ற இவ்வுலக மெங்கும் நிறைந்திருப்பேன்!
அல்லும் பகலும் அரைநொடியும் தங்காமல்
சுற்றித் திரிகின்றேன் சோர்வில்லேன் தென்றல்யான்!
கற்றுத் துறைபோய்க் கணக்கின்றி வாரிநிதம்
ஏழைகட்கும் எல்லோர்க்கும் ஈயும் கொடைத்திறனுல்
எட்டுத் திசையும் எதிரும் புகழ்மணத்தால்
கட்டுக் கடங்காத காவலராம் வள்ளல்தமை
ஏசுவார் உங்களைப்போல் எங்குமே பார்த்ததில்லை!
தேசமெங் கெங்கும் திரிந்துழன்று கண்டிரேல்
உண்மை விளங்கும் உறுதி புலப்படுமால்
வீண்கர்வம் கொண்டீர்! விளைந்தபயன் யாதோ?
அகங்காரப் பாதை அழிவையே நோக்கிடுங்காண்!
தானே வலியவந்து தண்ணருளால் இவ்வுலகில்
எவ்வுதவி செய்தாலும் இவ்வா றவமதிப்புப்
பெற்றிடுதல் தானே பெரியஉண்மை? பேதையீர்!
இன்றுமுத லேனும் இழிவுதரும் கர்வமதைக்
கொன்று புதைத்திடுங்கள்! கோபம்அகங் காரமெலாம்
தன்னழிவைத் தேடும் தனிக்குணங்கள் என்பரால்!
வீணுகக் கால விரையமேன் செய்கின்றீர்!
கோணுமல் தத்தம் இடம்நோக்கிச் செல்லுங்கள்.




நீங்கள் நல்ல புகைப்படங்களையும், என்லார்ஜ்மெண்டுகளையும்
எடுக்க விரும்பும்பொழுது
எங்கள் பெயரை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

செல்வம் போட்டோ ஸ்டுடியோ

பெரிய கடைவீதி] தொலைபேசி எண்: 2311 [திருச்சிராப்பள்ளி-8.

மாநாடு, பொதுக்கூட்டங்கள், திருமண நிகழ்ச்சி, மற்றும் பலவகையான புகைப்பட பிடிப்பில்
தலைசிறந்து விளங்கும் ஒரே ஸ்தாபனம்

செல்வம் போட்டோ ஸ்டுடியோ

# இரு கடிதங்கள்

★

எஸ். சுப்பையன், எம். ஏ.

இந்திர விழாவின்போது கடற்கரையில் மாதவி பாடிய கானல் வரிப் பாடல் கோவலனை அவளிடமிருந்து பிரித்தது. "தான் ஒன்றின் மேல் மனம் வைத்து" மாதவி பாடினாள் என்று கோவலன் அவளைப் பிரிந்து சென்றான். மாதவியும் மிக்க வருத்தத்துடன் தனியே தன் இல்லம் சேர்ந்தாள்.

கோவலனைப் பிரிந்து சென்ற மாதவி அவன் பிரிவைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவனைத் திரும்பவும் தன் இல்லத்திற்கு அழைக்கும் பொருட்டு கோவலனுக்கு ஒரு கடிதம் எழுதினாள். அதைத் தன் தோழி வயந்தமாலை என்பவளிடம் கொடுத்துக் கடை வீதியில் கோவலனைக் கண்டு அக்கடிதத்தைக் கொடுத்து அவனை அழைத்து வருமாறு கூறினாள்.

சண்பகம், மாதவி, மல்லிகை, செங்கழுநீர் முதலிய சிறந்த மலர்களால் தொடுக்கப்பெற்ற ஒரு மாலையின் நடுவே அழகிய தாழை மடல் ஒன்றில், பித்திகை அரும்பின் கூர்மையான நுனியைச் செம்பஞ்சுக் குழம்பில் தோய்த்துத் தன் காதற் குறிப்பெல்லாம் தோன்றும்படி மாதவி கோவலனுக்கு எழுதிய அக்கடிதம் ஓர் அற்புதப் படைப்பு. ஆடலும், பாடலும், அழகும் சிறந்து விளங்கிய மாதவியை இக்கடிதத்தின் மூலமாகச் சிறந்த புலமையும் படைத்தவளாகக் காட்டுகிறார் இளங்கோவடிகள்.

காதலர்களை ஒன்று சேர்க்கின்ற வசந்தகாலம் என்னும் இளவரசன் தோன்றியுள்ளான், அவனுக்குத் துணையான திங்கட்செல்வனும் கொடியவனாக இருக்கின்றான்! இக்காலத்தில் மன்மதன். பிரிந்த காதலர்கள் மீது மலரம்புகளை ஏவி உயிரைப் போக்குவான் என்பது ஆச்சரியமன்று. அதனைத் தாங்கள் அறிந்தருள்க' என்பது மாதவி கோவனுக்கு எழுதிய காதற் கடிதம். அக்கடிதத்தைக் காண்போம்.

"மன்உயிர் எல்லாம் மகிழ்துணை புணர்க்கும்
இன்இள வேனில் இளவரசாளன்;
அந்திப் போதகத்து அரும்பிடர்த் தோன்றிய
திங்கள் செல்வனும் செவ்வியன் அல்லன்;
புணர்ந்த மாக்கள் பொழுது இடைப்படுப்பினும்
தணந்த மாக்கள் தம்துணை மறப்பினும்
நறும்பூ வாளியின் நல்உயிர் கோடல்"
இறும்பூது அன்று: அஃது அறிந்தீமின்"
[சிலப். 1.8.56–63]

மாதவி தன் காதலனாகிய கோவலனைப் பிரிந்து தனித்து வாழ இயலாமல் வருந்துகின்ற வருத்தமும், அவனுடைய வரவை எதிர்பார்த்து இருக்கின்ற ஏக்கமும் இக்கடிதத்தால் புலனாகும். மாதவி, பித்திகை அரும்பைச் செம்பஞ்சுக்குழம்பில் தோய்த்து, வெண்மையான தாழை மடலில் தன் உள்ளக் குறிப்பெல்லாம் புலப்படும்படி எழுதிய கடிதமும், அக்கடிதத்தைச் சிறந்த பலவகை மலர்களாலாகிய மாலையில் வைத்துக் கோவலனுக்கு அனுப்பிய திறமும் பலமுறை படித்துச் சுவைப்பதற்குரியன.

வயந்த மாலை கொண்டுவந்த அக்கடிதத்தைக் கோவலன் ஏற்க மறுத்துவிட்டான். வயந்த மாலை மிக்க வருத்தத்துடன் மாதவியிடம் சென்று நிகழ்ந்ததைக் கூறினாள். மாதவி உற்ற துன்பம் அளவிடற்கரியது. காதலர் மாலையில் வாரார் ஆயினும் காலையில் காண்போம் என்று ஒருவாறு தேறியிருந்தாள்.

பின்னர், கோவலனும் கண்ணகியும் காவிரிப் பூம்பட்டினத்தை விட்டுச் சென்றுவிட்டார்கள் என்பதை அறிந்த மாதவி மிகவும் துன்பம் உற்றாள். உயர் குலச் செல்வனாகிய கோவலன் தன் மனைவியாகிய கண்ணகியுடன் இரவோடு இரவாக ஊரைவிட்டு நீங்கியதற்குத் தான் காரணமோ என்று நினைத்து வருந்தினாள். அப்போது அங்கு வந்த கௌசிகன் என்னும் அந்தணனிடம் மாதவி தன் துயரத்தை எல்லாம் வெளிப்படுத்தி "என் கண்மணி போன்றவர்க்குக் காட்டுக" என்று ஒரு கடிதத்தை எழுதிக் கொடுத்தாள். மாதவி கோவலனுக்கு எழுதிய இரண்டாம் கடிதம் இது. அக்கடிதத்தைப் பெற்ற கௌசிகன் பலவிடங்களிலும் கோவலனைத் தேடி கடைசியாக மதுரை செல்லும் வழியில் ஒரு நீர்நிலையின் கரையில் கோவலனைக் கண்டு அக்கடிதத்தைக் கொடுத்தான்.

பெரியோராகிய தங்கள் திருவடியில் வீழ்ந்து வணங்குகிறேன். நான் கூறும் சொற்கள் பிழையுள்ளனவாயினும் கேட்டருளல் வேண்டும். தாய் தந்தையர்க்குப் பணி செய்தலையும் விட்டுக் குலமகளாகிய கண்ணகியுடன் தாங்கள் இரவில் நகரை நீங்கிச் சென்றதற்கு நான் செய்த பிழை என்ன என்பதை அறியாமல் என் மனம் வருந்துகிறது. தாங்கள் அவ்வருத்தத்தைப் போக்குதல் வேண்டும்". என்ற பொருள் உள்ள அக்கடிதம்

'அடிகள் முன்னர் யான்அடி வீழ்ந்தேன்;
வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்;
குரவர் பணி அன்றியும் குலப்பிறப்பாட்டியோடு
இரவிடைக் கழிதற்கு என் பிழைப்பு அறியாது.
கையறு நெஞ்சம்; கடியல் வேண்டும்"
(சிலப். 2.3. 87—91)

என்பதாம்.

கடிதத்தைக் கண்ட கோவலன் "மாதவி குற்றம் இல்லாதவள்; தவறு என்னுடையதே" என்று உணர்ந்தான். முன்பு வயந்தமாலையிடமாக மாதவி கொடுத்த

உ

ஸ்ரீராமஜெயம்

ஸ்தாபிதம் 1941

**ஆட்டையாம்பட்டி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட். S. 691.**

அர்த்தனாரி நிலையம், ஆட்டையாம்பட்டி, P. O.

சேலம் தாலூக்கா.

சென்னை மாநிலத்தில் பிரசித்திபெற்ற எங்கள் சங்கத்தில் கைதேர்ந்த நெசவாளர்களைக்கொண்டு 20' முதல் 80' வரை பாவஞ்சு, பெரிய பாவஞ்சு, பேட்டு, காடா பீஸ், சேலை, கர்சிப் ரகங்கள் சீட்டி ரகங்கள், லார்ன்கள் சிறந்த முறையில் திடமாக தயார் செய்கிறோம்.

வெள்ளை வண்ண வேஷ்டிகளுக்கு ஏற்ற இடம்

ஆட்டையாம்பட்டி ஜவுளிகளே.

K. V. A. அர்த்தனாரி முதலியார்,

தலைவர்.


னுப்பிய கடிதத்தைப் பெற்றுக்கொள்ள மறுத்த கோவலன் பின்னர் அவள் கௌசிகனிடமாகக் கொடுத்தனுப்பிய கடிதத்தைப் பெற்றுக் கொண்டான், அவளிடம் தான் கொண்டிருந்த மன வேறுபாட்டை நீக்கினான், மாதவி எழுதிய அக்கடிதம் தன்னுடைய பெற்றோர்க்குத் தான் எழுதத்தக்க கடிதமாகவும் இருப்பதை உணர்ந்து அக்கடிதத்தைக் கௌசிகனிடமே கொடுத்துத் தன் பெற்றோரிடம் சேர்க்கும்படி வேண்டிக் கொண்டான். இதன் மூலம் கோவலன் மாதவி குற்றமற்றவள் என்பதை உணர்ந்ததுடன் தன் உணர்ச்சியை மற்றவரும் அறியும்படி செய்து மாதவியைப் பலரும் பாராட்டுதற்கு உரியவளாக்குகிறான்.

கோவலன் மாதவியைப் பிரிந்து கண்ணகியுடன் மதுரை செல்லும் வழியில் மாதவியின் கடிதத்தைத் தன்னிடமே வைத்துக்கொள்ளுதல் முறையன்று; அதனால் பயனும் இல்லை. மதுரை செல்லும் வழியில் தன் பெற்றோர்க்குக் கடிதம் எழுதுவதற்குரிய வசதிகள் இல்லாத நிலையில் மாதவியின் கடிதமே கோவலன் தன் பெற்றோர்க்கு அனுப்பும் கடிதமாக அமையும் திறம் வியத்தற்குரியது. மாதவி கோவலனுக்கு எழுதிய இரண்டாம் கடிதம் அவளுடைய உயர் குணத்தைப் புலப்படுத்துவதோடு கோவலனுடைய கடமையுணர்ச்சியையும் தூண்டுகிறது.

"பெரியோராகிய தங்கள் திருவடிகளுக்கு வணக்கம். நான் கூறும் பிழை மலிந்த இச் சொற்களைக் கேட்டருளல் வேண்டும். இருமுதுகுரவராகிய தங்களுக்குப் பணிவிடை செய்யாமல் குலமகளாகிய கண்ணகியுடன் நான் இரவில் நகரை நீங்கிச் சென்ற பிழையைப் பொறுத்துத் தாங்கள் வருந்தும் வருத்தத்தை நீக்குவீர்களாக". என்பது கோவலன் தன் பெற்றோர்க்கு எழுதும் கடிதப் பொருளாக மாதவி அவனுக்கு எழுதியே கடிதமே அமைகின்றது.

இவ்விரு கடிதங்கள் மூலமாக இளங்கோவடிகள், மாதவியை ஒரு குலமகளாக, நாம் மதிக்கத்தக்க உத்தமியாக்கி விட்டார் என்பதை உணரலாம். இளங்கோவடிகள் மாதவி எழுதியனவாகப் படைத்த இவ்விரு கடிதங்கள் கோவலன், மாதவி ஆகியோருடைய குணச்சிறப்புக்களை வெளிப்படுத்தும் கடிதங்களாக அமைவதுடன் இளங்கோவடிகளின் வியத்தகு புலமையைக் காட்டுவனவாகவும் உள்ளன.



# அமைச்சூர் நாடகம்....!

★

ரா. நீலமேகம்

எளிய முறையில், இனிமை கூட்டி, நேரிடையாக மக்கள் உள்ளத்தில் ஓர் நல்ல கருத்தை ஆழப் பதிப்பதற்கு இலக்கிய வகையில் சிறந்ததாக விளங்குவது நாடகம்.

மேலை நாடுகளில் நாடகம் அறிவு வளர்ச்சிக்கு சிறந்த சாதனமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஒரு நாட்டின் வேரிலுள்ள பகைமை நீக்கி
உட்புறத்தில் புத்தொளியைச் சேர்ப்பதற்கும்
பெருநாட்கள் முயன்றாலும் முடியா ஒன்றைப்
பிடித்த பிடியில் பிடித்துத் தீர்ப்பதற்கும்
பிற நோக்கம் கொள்வதற்கும் பிற நாட்டார்கள்
நாடகங்கள் செய்வார்

என்று கூறும் அளவிற்கு நாடகங்களின் முக்கியத்துவம் உணரப்பட்டு வருகிறது.

நம் நாட்டில் நாடகங்கள் வளர்ச்சி அடையவில்லை என்று கூறுவதைவிட, பயன்படுத்தப்படவில்லை என்று கூறின் பொருத்தமாக இருக்கும்.

நாடகத்தைத் தொழிலாகக் கொண்ட பல நல்ல நாடகக் குழுக்கள் நாடகங்களை சிறந்த முறையில் அரங்கேற்றிச் சிறப்புச் செய்து வருகின்றனர்.

“இராஜ ராஜ சோழன்” வரலாற்றை, ஆராய்ச்சி நூல்களையும், சரித்திர நவீனத்தையும் படித்து அறிந்து கொண்டதைவிட அதிகமாக புரிந்துகொள்ளவும், இதயத்தில் இடம் கொள்ளவும் வைத்தது ‘இராஜராஜ சோழன்’’ என்ற சரித்திர நாடகம் நம் நாட்டில் என்பதை நாம் அறிவோம்.

எனவே நாடகங்கள் இன்னும் நல்ல முறையில் நாட்டில் வளர்ச்சி அடையவேண்டும் இதையுணர்ந்த அரசினர் அதற்கென மான்யத் தொகைகளை அளித்து உற்சாகம் அளிக்கவும் முன் வந்துள்ளது ஓர் நல்ல சூழ்நிலையை உண்டுபண்ணியுள்ளது.

இந்நிலையில் நாடகத்தை தொழிலாகக் கொண்ட குழுக்களைவிட ‘‘அமைச்சூர் நாடகக்’’ குழுக்கள் அதிகம் தொண்டு செய்ய இயலும்.

தொழில் துறையில் உள்ளவர்கள் ஒரு நாடகத்தை தயார் செய்யப் பல்லாயிரம் ரூபாய்களையும், பயிற்சி பெற்ற நடிகர்களையும் நாடவேண்டியுள்ளது. எனவே தாங்கள் செய்த முதலீட்டை திரும்பப் பெற்று லாபமும் அடைய ஒரே நாடகத்தை பலமுறை பல ஆண்டுகள் நடத்திக்கொண்டிருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டு அடுத்தடுத்து புதிய புதிய நாடகங்களை அவர்கள் மக்கள் மத்தியில் அரங்கேற்ற முடியாமல் போய் விடுகிறது.

அமைச்சூர் நாடகக் குழுவினருக்கு அத்தகைய கஷ்டங்கள் இல்லை. மாதம் ஒரு முறையோ அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒன்றோ என்று புதுப் புது நாடகங்களை அரங்கேற்றிக்கொண்டே யிருக்கலாம். அதனால் பல நாடகங்கள் உருப் பெற்று பல கருத்துக்கள் மக்கள் மனதில் உரம் பெற உதவி செய்யும்.

இன்றைய நிலையில் சிற்றூர், பெரிய நகரம் எங்கும் ஒவ்வொரு ஊரிலும் பல பல நாடக மன்றங்கள் தோன்றிய வண்ணம் இருக்கின்றன. அவைகளைப் பார்க்கும் போது நாடகத்தின்பால் மக்கள் காட்டும் ஆர்வம் நன்றாகப் புலப்படுகிறது.

மக்களின் நல் ஆர்வத்தைப் பயன்படுத்தி தக்கப் பலன் காணுவதில் பின் தங்கி இருப்பதைக் காணும் போது சற்று வேதனையும் உண்டாகிறது.

பல அமைச்சூர் நாடகக் குழுக்கள் அரங்கேற்றும் நாடகங்களைப் பார்க்கும்போது “ஐயோ! இவர்கள் நாடகத்திற்கு நல்ல தொண்டு செய்ய வந்திருக்கிறார்களா அல்லது நல்ல குழி தோண்டக் கிளம்பியுள்ளார்களா?” என்ற வினா எழுப்பிக் குமுற வேண்டியிருக்கிறது.

அத்தகைய நாடகங்களில் நல்ல கதையிருப்பதில்லை. நாடக அமைப்பு, மய்யக் கருத்து, நோக்கம், நடிப்பு ஒன்றும் இல்லமல் ஏதோ அதில் சம்பந்தப்பட்டிருக்கும் சில முக்கியஸ்தர்கள் தங்கள் சொந்த ஆசையைப் பூர்த்திசெய்துகொள்ள பயன்படுத்துவதாகத் தான் தோன்றுகின்றன.

இந்த நிலை தானாகவே மறையவேண்டும். அல்லது பலர் கூடி இந்நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க முனைய வேண்டும்.

அத்தகைய சிறந்த தொண்டு ஒன்று இன்றைய எழுத்தாளர்கள் முன் காத்துக்கொண்டிருக்கிறது. அதற்கு முன்வரவேண்டும்.

பெரும்பாலான நல்ல எழுத்தாளர்கள் இன்று நாடகத்தைப் பற்றியும் பேசுவதில்லை. பல்லாண்டுகளுக்கு முன் நாடகத் துறையில் ஈடுபட்ட கலைஞர்களை “கூத்தாடிகள் என்று ஏளனம் செய்த நிலையில் அத்துறையில் ஈடுபட பல நல்ல குடும்பத்தினர் கூச்சப்பட்டது போன்று, இன்று எழுத்தாளர்கள் நாடக ஆசிரியராக மாற அஞ்சுகின்றனர்.

# நாதன் ஸ்டோர்ஸ்

மில் & கைத்தறி ஜவுளி வியாபாரம்,
43, தேரடிக்கடைத் தெரு,
திருச்சி-2.

★

உங்கள் விருப்பத்திற்கேற்றவாறு, நவீன நாகரீகத்திற்கேற்றதும் நீடித்த உழைப்புக்கும் உறுதிக்கும் உகந்த மில் ஜவுளிகளும், கட்டாவ் மில் ஜவுளிகளும் அர்விந்த் வேஷ்டிகளும் இதர கைத்தறி ஜவுளிகளும் எங்களிடம் நல்ல டிசைன்களில் கிடைக்கும்.

★

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்.


காரணம். அதில் ஊதியம் கிடைக்காது, உழைக்க வேண்டும், உபத்திரவம் அதிகம் என்று கருதுகிருர்கள். பொதுவாக அது ஓர் வரட்டுப் பசு என்று உணர்கிருர்கள்.

அவர்களுக்குப் பணிவுடன் கூறிக்கொள்ளவேண்டியது யாது என்ருல் "ஐயா! உழைப்பு என்றுமே மதிக்கப்படாமல் இருந்ததில்லை. என்ருவது ஒருநாள் வட்டியும் முதலுமாகச் சேர்த்துப் பெறுவீர்கள்." அமர கவி பாரதி பாடிய பாடல்களை அன்று போற்றவும் மறுத்தனர். நல்ல கவி என்று சொல்லவும் அஞ்சினர். ஆனல் இன்றைய நிலை என்ன? அதேபோல நாளை ஓர் நாடக ஆசிரியரின் நாடகம் சிறந்த இலக்கியமாக காளிதாசன் 'சாகுந்தலம்' போல எதிர்கால சந்ததிகளுக்கு ஓர் அமர இலக்கியமாக ஆகலாம்.

எனவே எழுத்தாளர்கள், சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை என்று எழுதிக்கொண்டே யிருப்பதுடன் நல்ல நாடகங்கள் — மேடை நாடகங்கள் — எழுத முன் வரவேண்டும்,

சீரிய முறையில் நாடகங்கள் எழுதப்பட்டு விட்டால் அமைச்சூர் நாடகக் குழுக்கள் அவற்றைப்பயன் படுத்தி சிறந்த நாடகங்களை அரங்கேற்ற வாய்ப்பு ஏற்படும்.

இன்று நாடகப் பிரதிகளுக்கு ஓரளவு கிராக்கி இருந்து வருகின்றது, கல்லூரிகள், பள்ளிகள், நாடக மன்றங்கள், சங்கங்கள் முதலியன நல்ல நாடகங்களைத் தேடி அலைகின்றனர். கிடைக்காத நிலையில் நாடக அமைப்பைப் பற்றி நன்கு அறியாத யாரையாவது எழுதிக் கொடுக்கும்படி வேண்டுகிருர்கள் இவற்றை நாம் காண்கிருேம்.

நல்ல ஆசிரியாகள், தங்கள் முத்தான கருத்துக்களை மக்கள் முன் பரப்ப நாடகத் துறைக்கு வரும்படியும் அவர்கள் நாடகங்கள் அமைத்துக் கொடுக்கும்படியும் வேண்டிக்கொள்ள வேண்டியிருக்கிறது.

நாடகங்களை "அமைச்சூர் நாடகக்" குழுக்களுக்காக எழுதிக் கொடுக்கும் எழுத்தாளச் சகோதரர்கள் "அமைச்சூர் நாடகக்" குழுக்களுக்காக நாடகம் அமைக்கிருேம் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

தொழில் துறையினர் நடத்தும் நாடகங்களுக்கும் "அமைச்சூர் குழுக்கள்" அரங்கேற்றும் நாடகங்களுக்கும் பெரும் வித்தியாசம் உண்டு.

தொழில் துறையினர் தங்கள் பொருளாதார வலிமையினல் பிரமாண்டமான காட்சி அமைப்புக்களையும், ஒலி, ஒளி அலங்காரங்களையும், கண் கவர் உடைகளையும் கொண்டு மக்கள் மனதைக் கவர்ந்து அவ்விதம் கவர்ச்சியுற்றிருக்கும் நிலையில் ஓர் நல்ல கருத்தை அவர்கள் மனதில் பதித்துவிடலாம்.

ஆனல் அமைச்சூரினருக்கு அத்தகைய வாய்ப்பு அமைவது பெரும்பாலும் கிடையாது. அச்சூழ்நிலையில் ஒரு கருத்தை வலியுறுத்த நடிப்பினலும், நடிக்கும் போது கூறும் உரையாடல் மூலமும், உரையாடலிடையே தான் வலியுறுத்தவந்த கருத்தை பல கட்டங்களிலும் சிறிது சிறிதாக புகுத்த வேண்டியுள்ளது. அதற்கிசைய நாடகக் காட்சிகளை அமைத்துக் கொடுக்க வேண்டியுள்ளது.

அமைச்சூர் நாடகக் குழுக்களில் கதாநாயகர்கள், வில்லன்கள், நகைச்சுவை நடிகர்கள் அநேகம் பேர் இருப்பார்கள். ஆனல் நாயகிகள் கிடைப்பது மிகக் கடினம். நடிகைகள் வந்தாலும் அவர்கள் ஏற்கும் பாத்திரத்தை உணர்ந்து நடிப்பது மிக அருமை. அதற்காக குழுவினர் ஏற்கவேண்டிய செலவும் அதிகம். அதனல் அமைக்கும நாடகங்களில் இரண்டு பெண் பாத்திரங்களுக்கு மேல் இல்லாமல் நாடகம் அமைத்தால் வரவேற்கப்படும்.

காட்சி அமைப்புகள் கிடைக்கும் சாதனங்களைக் கொண்டு கதையோட்டத்துக்கு தடையில்லாமல் காட்சிகளுக்கு இடையில் கால தாமதம் ஏற்படாமல் காட்சி அமைத்துக் கொண்டால் நாடகம் சிறக்கும்.

சரித்திரக் கதைகளைவிட சமூகப் பிரச்சினைகளை வைத்து எழுதப்படும் நாடகங்கள் அமைச்சூர் குழுவினருக்கு மிக்கப் பயன் உடையதாக இருக்கின்றது.

நாடக ஆசிரியர்கள் ஓர் அளவு, தான் எழுதும் நாடகம் நடிக்கப் பெறும் அரங்கைப் பற்றியும் அறிந்து கொண்டால் நாடகம் அமைப்பதற்கு உதவியாக இருக்கும்.

அரங்கைப் பற்றி அறிய முயற்சிக்கும் போது அங்குள்ள கஷ்டங்களை ஓரளவு தெரிந்து கொள்ள முடிகிறது. அவ்விதம் புரிந்து கொண்ட கடினங்களை அவர்கள் திரும்பவும் ஏற்காமல் தவிர்க்கும்படி நாடகத்தை அமைத்துக் கொடுத்தால் பேருபகாரமாக இருக்கும்-

இன்று நாட்டில் எழுந்துள்ள பல பிரச்சனைகளை மையமாகக் கொண்டு அவற்றிற்கு நிவர்த்திகான வழிவகை கூறும் முறையில் நாடகம் அமைந்தால் அவை நாட்டின் பல பாகங்களில் பல்வேறு நாடகக் குழுவினரால் அரங்கேற்றப்பட்டு அக்கருத்துக்கள் கல்லாதவரும் புரிந்துகொண்டு செயல்பட உதவிகரமாக இருக்கும்.

இன்று சிறந்த பிரசார சாதனமாகப் பயன்படுத்தப்பட்டு வருவது நாடகம்தான். ஏன்? அன்றும் நாம் அடிமைப்பட்டுக் கிடந்தபோதும் தேசப் பற்றை தீவிரப்படுத்தி விடுதலை உணர்வை மக்களிடையே தோன்றப் பயன் படுத்திய கருவி நாடகம் தான்.

எனவே எழுத்தாளச் சகோதரர்கள் நல்ல நாடகங்களை ''அமைச்சூர் நாடக''க் குழுக்களுக்காக எழுத முன் வரவேண்டும்.

இத்தகைய புனித காரியத்தில் ஈடுபடும் அமைச்சூர் நாடகக் குழுவினரும் தங்கள் தொண்டு வெறும் பொழுது போக்கிற்காக மட்டும் அல்ல என்பதை உணரவேண்டும். ஓர் முக்கியமான பணியை ஏற்றிருக்கிறோம் என்ற உணர்வும் வேண்டும்.

இந்த அடிப்படையில் ஒழுங்கு. கட்டுப்பாடு, கடமை உணர்வு கொண்ட நாடகக் குழுக்கள் ஊருக்கு ஒன்றோ அல்லது இரண்டோ இருந்தால் போதும். அவர்கள் நல்ல நாடகங்களை சிறந்த முறையில் அரங்கேற்றி மக்கள் மனதை கொள்ளை கொள்ளலாம்.

இச் சிறந்த தொண்டை செய்ய முன் வரும் நாடகக் குழுக்களுக்கு உற்சாக மூட்ட நல்ல எழுத்தாளர் தங்கள் நேரத்தையும், உழைப்பையும் சற்று ஒதுக்கி நாடகங்கள் அமைத்துத் தந்து உதவவேண்டும்.

'நாடகப் புத்தகங்கள் வெளியிட்டால் விற்பனையாகாதோ' என்று பிரசுரகர்த்தாகள் பயந்த காலம் ஓரளவு மாறியுள்ளது இன்று. எனவே, நாடக புத்தகங்கள் அதிகம் வெளிவர பிரசுரகர்த்தர்களும் முன் வந்தால் நலம் பயக்கும்.

''அமைச்சூர் நாடகங்கள் தானே அவை யென்ன, யாரோ சிலர் கூடித் தங்களின் பொழுது போக்கிற்காக நாடகம் நடத்துகிறார்கள்.'' என்ற எண்ணத்தை மக்கள் மனதிலிருந்து களைந்து 'அமைச்சூர் குழுக்களும் அருமையான நாடகங்கள் அரங்கேற்றுகிறார்கள்' என்று நாட்டின் சகல பகுதியினரும் பராட்டும்படி அமைச்சூர் நாடகக் குழுக்கள் முன் வரவேண்டும்.

அதற்கு அடிப்படையான நல்ல நாடகங்களை உருவாக்கி அளிப்பதில் சிறந்த எழுத்தாளர்கள் முன்வரவேண்டும். அப் படைப்புகள் நாட்டின் பல்வேறு நாடகக் குழுக்களுக்கும் பயன்படும் வகையில் ''பிரசுரகர்த்தர்கள் புத்தகமாக வெளியிட்டு உதவவேண்டும்.

---




குற்றால அருவிபோல குளுமையும்
அகஸ்த்திய மலைபோன்ற அழகும்
பொருணையின் நீர்போல தெளிவும்
பாரதியின் கவிபோல இனிமையும்
வ. உ. சி. மன உறுதிபோன்ற உறுதியும்

உடைத்தானது

★

டெலிகிராப்ட் & டெலிராட்
ரேடியோக்கள்.

ஏழைகளுக்கும், பிரபுக்களுக்கும்
ஏற்ற விலையிலும் உண்டு.

★

ஜெர்மன் ரேடியோ ஹவுஸ்,
கோட்டை ஸ்டேஷன் ரோடு,
திருச்சிராப்பள்ளி-2.

நிர்வாக உரிமையாளர் — உலகநாதன்.

# "காலம்"

★

ஆ. இரத்தினவேலு

மனிதன் தனது எதிர் காலத்தைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறான். அந்த ஆவல் அவன் உலக வாழ்க்கையின் மீது கொண்டிருக்கும் பற்றுதலின அடிப்படையில் பிறந்தது. இதன் விளைவாகவே வாழவேண்டும் என்ற எண்ணத்துடன் முயற்சிகளை மேற் கொள்கிறான்.

எதிர் காலம் என்ற கனவினை நோக்கியே மனித இனம் இட்டுச் செல்லும் வாழ்க்கைப் பாதையின் நோக்கம் அமைந்திருக்கிறது. "நிகழ் காலத்தின் தோற்றுவாய்க்கு அடிப்படை" என்ற உண்மை நுண்ணிய பொருள் திண்மை படைத்ததாகும்.

அதே சமயம் எதிர்கால வாழ்க்கை யினுள் ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியையோ திருப்பததையோ அல்லது உயர்வையோ தோற்றுவிக்க வேண்டும் என்ற நோக்குடன் சிலர் ஆராய்ச்சிகளையும் "ஆக்கப் பணி ஈடுபாடுகளையும் மேற்கொண்டு" செயலாற்றுவோர் மிகப் பலர் திகழ்கின்றனர்.

தனித்து ஒருவன் தன்னளவில் நல்லவைகளையோ அல்லது தவறுகளையோ செய்துவருவதால் எதிர் காலத்தில் அதன் விளைவாக நேரும் நன்மைகளையோ தீமைகளையோ அல்லது பெரும் பழியையோ அதை செய்தவனோ அல்லது அவன் வழிமுறையோ அனுபவிக்க நேர்கிறது.

இந்தத் தெளிவையே 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்ற சான்றோர் மாண்புரை தெளிவுறுத்தி நிற்கிறது. அன்றியும் சமயப் பற்றுடைய சான்றோர்களும் அம்மாண்புரை தன்னை அறியா பாமரமக்களின் உள்ளத்தின் கண் இருத்துதல் குறித்தே 'இம்மை, மறுமை' என்னும் கருத்தினைக் கூறிவைத்தனர்.

காலமும் வாழ்க்கையும் கொண்டுள்ள பிணைப்பு மிகமிக வன்மை வாய்ந்தது மட்டுமல்லாமல் இறைமை யுணர்வையும் சால்புடைமையையுந் தோற்றுவிக்கும் மேம்பாடுடைய இயல்பினைப் படைக்கும் தன்மையைக் கொண்டுளதாகும்

நிகழ் காலத்தின் அன்னை இறந்த காலம். நிகழ்காலத்தின் சேய் எதிர்காலம். இறந்த காலம் இல்லாது நிகழ் காலத்தினைப்பற்றி அளவிட இயலாது. அத்தோடு நிகழ் காலத்தின் வளர்ச்சியே எதிர்காலத்தை தோற்றுவிக்கிறது.

மனித இனத்தின் உலகப் பயணம் காலத்தோடு தங்களை ஒன்றாக்கி ஒன்றி அமையும் முயற்சிகளையும் செயல் ஈடுபாடுகளையும் அடிப்படை அமைப்பாகக் கொண்டு ஆக்கப் பெறும் நிகழ்ச்சித் திரட்டுகளே வாழ்க்கை என்னும் சொல்லிற்கு உட் கிடக்கையாகத் தொக்கி நிற்கும் பொருளாகும்.

அத்துடன் இல்லாமல் மனித இனத்தின் செயல் போராட்டங்கள் செயல் ஈடுபாடுகள் முயற்சிகள் அனைத்தும் காலம் என்ற கண்ணாடியிற் பட்டு அதற்கு உரியவர்களிடமே உரிய காலத்தில் எதிரொலித்துத் தாக்கும் இயல்புடைமையையும் படைத்து இருக்கின்றன.

ஒரு நாட்டின், இனத்தின் சிறப்பு, பெருமை, வரலாற்று உயர்வு (இலக்கியம்) காவிய மேம்பாடு, இவைகள் அனைத்தும் அவைகள் கடந்த காலத்தினைச் சார்ந்துள்ள வாழ்க்கை நெறி முறைதனில் ஒன்றிய இயல்பு, செயல் முறை, பண்புடைமை, உளத்தன்மை முதலிய வற்றினுள் தகைந்து நிற்கிறது என்பது வெளிப்படையான உண்மை.

காலத்தின் பெருவலிமைதனை உணர்ந்து வாழும் நாடும் இனமும் காலத்தைக்கடந்து நிற்கும் பெரு வாழ்வினைப் பெற்றவர்களாய்த் திகழ்கின்றனர். வாழ்வின் வளத்தையும் வலிமையையும ஆழ்ந்த திறத்தையும் அளவிட்டு மேம்பாட்டினை அறிவுறுத்திக்காட்டும் கருவிதாம் காலம.

அது அறிவுறுத்திக் காட்டும் செயலே ஆக்கப் பெறும் பணியினைக் காட்டிலும் வன்மை மிகைபட்டிருப்பதினால் அதன் உயர்வு தெளிவாக்கப்படுகிறது.

வாழ்கையுள் வாழ்வதன் அளவை காலம் அளவிட்டு அறுதியிட்டு தெளிவு படுத்துவதால் காலத்திற்கு வாழ்வு அடிமைப்பட்டுள்ளது என்பது பொருளன்று. ஒன்றின் வாழ்வு இத்துணை காலத்திற்கே வரையறுத்துக் கூறுமிடத்து மனித இனத்தின் வாழ்வையும் உள் நிறுததுவது அஃறிணை உயிரினங்களின் வாழ்வாய் கூறுவதில் தவறு கிடையாது.

பகுத்தறிவினைப் பெற்றுள்ள மனித இனம் காலத்தைக் கடந்ததோர் வாழ்வினை அமைப்பதே சால்பு. உரியதோர் நனைனிலை ஆனால் ஒவ்வொரு குடிமகனும் தத்தம் வாணாளில் செயற்கரியன செய்து பொய்யுடல் போய் மெய் வினை எய்துதல் வாழ்க்கை இயல்பு முறையில் இயலாத தொன்று.

ஆனால் தங்களையும் அறியாமல் தாங்கள் வாழ்ந்து செல்லும் வாழ்க்கை நிகழ்ச்சிகளால் செயல்களால் வித்தூன்றல் பெற்று எதிர்கால வாழ்வு, உலகம் முதலியவைகளுக்கு அடிப்படை அமைக்கப்பட்டு வருகிறது. அதற்கு நிகழ்கால வாழ்க்கை நிகழ்ச்சிகளால் செயல ஈடுபாடுகளால் உருவாக்கும் பணிகளால் எதிர்கால வழிமுறைகள் உருக்குன்றி தாழ்ந்து தடுமாறி அழிந்து படக்கூடிய நிலைதனையுணர்ந்து தங்கள் வாழ்வினை அமைக்கும் செயலை மேற் கொண்டிடல் வேண்டும்.

இல்லையேல் எதிர்கால உலகம் மனத்தாலும், உருவத்தினாலும், காட்சியினாலும் வெறும் பேரழிவுக் கூடமாய் ஆக்கப்பட்டுவிடும் என்பது உறுதி.


எழுத்தாளர்தம் எழுத்தோட்டத்திற்கு இன்றியமையாதது
N.V.ஷண்முகம் கம்பெனியாரின்
N.V.S
MADRAS SNUFF
N.V. SHUNMUGAM & CO
POST BOX 355
MADRAS
பட்டணம் பொடி
N.V. ஷண்முகம் கம்பெனியார்
சென்னை-21.
COPYRIGHT. N.V.S

# புலி வந்தது!

★

தி. சா. ராஜு

காலை மணி பத்து இருக்கும். பூனாவை அடுத்த டேஹு ஸைடிங்கில் உள்ள இராணுவ வாகனச்சாலையின் பரிசோதனைப் பகுதியில் வேலை செய்து கொண்டிருந்த பலராம் நல்வாடே ஒரு 'காமர்' வண்டியின் பின்புறத்து இருசை 'ஜாக்'கின் உதவியால் மேலே உயர்த்திக் கொண்டிருந்தான். பக்கத்திலிருந்த நாணல் புதர் சல சலத்தது. சத்தம் வந்த பக்கமீ பார்வையைத் திருப்பினான். ஏதோ ஒரு பெரிய விலங்கின் பின் பகுதியும், வாலும் தோன்றினாற் போலிருந்தது. ஒளியும் நிழலும் அசைய ஏதோ ஒன்று புதருக்குள் ஓடிற்று. 'உஸ்' என்று குரல் கொடுத்தான் நல்வாடே. பதிலுக்கு ஓர் உறுமல். பலராமின் நெஞ்சு துணுக்குற்றது. அப்போது அங்கே வந்தது ஒரு புலி. புலியாகத்தான் இருக்க வேண்டும்! வேறெந்த மிருகம் அவ்வளவு பெரியதாக இருக்கும்? அவ்வாறு சத்தமிடும்? அவன் என்ன பம்பாய் மிருகக்காட்சி சாலையில் புலியைப் பார்த்ததில்லையா என்ன?

ஒரே ஓட்டமாய்த் தன் லீடிங் ஹாண்டிடம் ஓடினான். 'புலி, புலி, பெரிய புலி, ஜாக்ஸன் சாப்.' அவன் வானத்து உயரத்திற்குக் கையைத் தூக்கினான்.

'எங்கே? எங்கே?' ஒரே கூக்குரல், ஆரவாரம். டெப்போவின் கிழக்குப் பகுதியில் உள்ளவர்கள் எல்லாம் ஒருங்கு கூடிவிட்டார்கள்.

டேஹு வெஹிகிள் டெப்போ விசாலமான சுற்றளவுடையது. பெருமளவு சிவிலியன்களும் படையினரும் அங்கு பணிபுரிந்தார்கள். அந்தப் பிரதேசம் முழுவதும் புல்லும், புதரும், சிறு மரங்களும் மண்டிக் கிடக்கும். அவ்வளவு புல்காட்டையும் சுத்தம் செய்து மாளாதென்று அதை அப்படியே விட்டு வைத்திருந்தார்கள் நிர்வாகிகள்.

மரநாய், முயல், கீரிப்பிள்ளை, சீமை எலி ஆகியவைகள் அந்தப் புதர்களில் வாழ்வது சகஜம். பலபேர் பலமுறை அவைகளைப் பார்த்ததுண்டு. ஆனால் புலி, சிறுத்தை ஆகியவைகளைப்பற்றிக் கேள்விப்படுவது அன்றுதான் முதல்தடவை. அன்றைக்குக் காண்டீனில் இடைவேளை உணவுக்காகத் தொழிலாளர்கள் கூடிய போது டெப்போவினுள் புலி வந்த செய்தி எல்லோருக்கும் பரவிவிட்டது.

இன்ஸ்பெக்ஷன் பகுதிக்குப் பொறுப்பு வகித்த கஜானந்த மோரே தனது தலைமை அதிகாரியான சுபேதார் ஷாம்லாலிடம் கீழ்க்கண்டவாறு புகார் செய்தான்.

'இன்று ஒரு வண்டிகூட இன்ஸ்பெக்ஷன் முடிந்து வெளியே போகுமென்று தோன்றவில்லை. எந்த மெக்கானிக்கும் அந்தப் பகுதிக்குப் போகத் தயாராக இல்லை. புலி இருக்கிறதென்று எல்லோரும் பயப்படுகிறார்கள்.' சுபேதார் ஷாம்லால் மேற்குப் பஞ்சாபைச் சேர்ந்தவர். அவர் புலி வந்த இடத்திற்குச் சென்று விசாரித்தார். பலராம் நல்வாடே தான் கண்டது புலிதான் என்று சத்தியம் செய்தான். அதற்குள் 'இன்வாஷ்' பகுதியிலிருந்தும் புலியைப் பற்றி செய்தி கிடைத்தது. எல்லா இடத்திலும் புலி கிளப்பிய கிலி பரவியிருந்தது.

நிர்வாக அதிகாரி மங்கத்ராம் ஜோஷிக்குச் செய்தி எட்டிற்று. அவர் கவலை தோய்ந்த முகத்துடன் கமாண்டிங் ஆபீசரிடம் சென்று விஷயத்தைக் கூறினார். கர்னல் வில்ஸன் ஒரு தமாஷ் பேர்வழி. "புலியா வந்தது, நல்லதாகப் போயிற்று. என்னுடைய "பன்னிரண்டு போர்" துப்பாக்கியை எடுத்துக்கொண்டுபோய் அதைச் சுட்டு விடுங்கள்'. அவர் உத்தரவு கொடுத்தார். 'குண்டு எக்கச்சக்கமாக எங்காவது பாய்ந்தால்', அவர் அருகில் இருந்த வெங்கடசுப்பிரமணியம் நியாயமான சந்தேகத்தைக் கிளப்பினார்.

எல்லா இராணுவ ஆர்ட்னன்ஸ் பண்டகசாலைகளிலும் கட்டுக்காவல் மிக அதிகம். உள்ளேயிருந்து சாமான்கள் வெளியேறாமல் இருக்கவும், வெளியிலிருந்து விஷமிகள் எவரும் இராணுவத் தளவாடங்களுக்குச் சேதம் விளைவிக்காமல் இருக்கவும் பலத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும். இரட்டை முள் வேலிக் கம்பி, உயரமான காவல் கோபுரங்கள், சர்ச் லைட்டுகள், ஆயுதம் தாங்கிய காவல் படையினர் ஆகிய முஸ்தீப்புக்கள் உண்டு. பணியாளர்கள் உள்ளே நுழையும்போதும், வெளியே அனுப்பப்படும்போதும், அவர்கள் சோதனை செய்யப்படுவது தினப்படி வழக்கம். இந்த நிர்வாகத்திற்கெனவே கெஜட் பதிவுள்ள அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பார். எந்த ஒரு பொருளும் தகுதியுள்ள எழுத்துமூல உத்தரவான 'கேட்பாஸ்' இல்லாமல் டெப்போவிலிருந்து வெளியேற முடியாது. இதைக் கண்காணிக்கப் பண்டகசாலைகளின் வாசலில் ஒரு பிரதம 'கேட்கீப்பர்' இருப்பார்.

இந்த முக்கியமான உத்தியோகத்திற்கு எல்லோரும் நியமிக்கப்பட மாட்டார்கள். அந்த ஆள் பார்ப்பதற்குக் கம்பீரமாக இருக்க வேண்டும். அவருடைய பார்வை பயமூட்டுவதாகவும், அவர் நிறைய இராணுவ அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் மிக அவசியம். அநேகமாக ஓய்வு பெற்ற ஜூனியர் படை அதிகாரிகளே இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுவது வழக்கம். அவர் இடுப்பில் கையை வைத்துக் கம்பீரமாக நிற்பதைக் கண்டாலே மற்றவர்கள் அச்சமுற்று விலகிப் போவார்கள்.

டேஹு வெஹிகிள் டெப்போவில் ஒரு பழைய நாளைய கேட் கீப்பர் இருந்தார். நீண்ட மீசை, பெரிய

கண்கள், நெடிதுயர்ந்த உருவம், அலட்சியமான பார்வை. மொகலாயர் காலத்துச் சித்திரங்களில் உள்ள ராஜா மான்சிங்கைப் போல் அவர் தோற்றமளித்தார். வேலையில் வெகு கண்டிப்பானவர். எந்தஒரு பொருளும் அதிகாரபூர்வமான உத்தரவின்றி வெளியேற அனுமதிக்கமாட்டார். ஆனால் மனிதர் வெகுளி. அதிக உலக விவகாரங்கள் தெரியாது. யாரிடமும் அதிகப்படியாகப் பேச்சும் வைத்துக்கொள்ளுவதில்லை.

கர்னல் வில்ஸன் அவசரமாக ஒரு சுற்றறிக்கை அனுப்பினர். முக்கிய அலுவலர்கள் 'எல்லாம் அவருடைய காரியாலயத்தில் கூடினர்கள். டெப்போவினுள் வந்திருக்கும் புலியை வெளியேற்றுவது எப்படி? அது வெளியேறும் வரை அங்கு வேலை எதுவும் நடைபெறுவது அசாத்தியம். எல்லோருக்கும் மனத்தினுள் பயம். இந்த அவசரக் கூட்டத்திற்கு கேட் கீப்பர் ரதன்சிங்கும் அழைக்கப்பட்டிருந்தார்.

தீயணைக்கும் படை அதிகாரியான சித்தலிங்கம் ஒரு யோசனை கூறினர். எல்லாத் தொழிலாளர்களையும் ஒன்று திரட்டுவோம். தீ எச்சரிக்கும் சைரனை விடாது ஒலிப்போம். 'கூ' கூ' என்று கூக்குரலிடுவோம். நான் கைந்து பேர் துப்பாக்கியுடன் தயாராக நிற்கட்டும். அப்படிப் புலி வெளிப்பட்டதானல் அதை வெளி வாசலுக்குத் துரத்தி விடுவோம். கேட் நன்ருகத் திறந்திருக்கட்டும். வெளியேறிய புலியை யாராவது கவனித்துக் கொள்ளுகிருர்கள். டெப்போவைப் பொறுத்தவரையில் நம்முடைய தலைவலி தீர்ந்ததல்லவா'?

அனைவருக்கும் இது நியாயமான யோசனையாகப் பட்டது. எல்லோரும் அதை ஏற்றுக்கொண்டார்கள். சித்தலிங்கம் தீ எச்சரிக்கையை ஒலிக்க வெளியேறினர். கேட் கீப்பர் ரதன்சிங் ஒரு சலாம் வைத்துவிட்டு முன்னல் வந்தார். 'அதெல்லாம் சரி, புலி போவதைப்பற்றி எனக்குத் தடையில்லை, ஆனல் கேட் பாஸ்'? அவர் வினவினர் (ஓ ஸப் டீக்ஹை, ஷேர் ஜா ஸக்தாஹை: லேகின், கேட் பாஸ்கா க்யா ஹோகா'?)

டெப்போவிற்குள் வந்த பிறகு எந்தப் பொருளும் அரசாங்க உடைமை ஆகிவிட்டதல்லவா? அது எப்படிக் கேட் பாஸ் இல்லாமல் வெளியே போகலாம்?

புலியையும் கிலியையும் மறந்து எல்லோரும் கை கொட்டிச் சிரித்தார்கள். அவர்கள் எல்லோரும் ஏன் சிரிக்கிருர்கள் என்று கேட்கீப்பர் ரதன்சிங்கிற்கு மட்டும் புரியத்தான் இல்லை.

வெஹிகிள் டெப்போ என்று கூறியதும் சென்னையை அடுத்த ஆவடியின் நினைவு வருகிறது. அங்கேயும் நல்ல முறையில் பண்டங்கள் பாதுகாக்கப்படுகின்றன. ஒரு சமயம் அங்கே 'புலிகள்' வரத் தொடங்கின. புலி வந்தது என்று இரவு வேளையில் புகார் வரும். மறுநாள் மோட்டார் வண்டிகளிலிருந்து எளிதில் கழற்றக் கூடிய டிஸ்டிரிப்யூட்டர் ப்ளக், ஸ்டார்ட்டர் ஆகிய சாதனங்கள் காணுமல் போய்விடும். எவ்வளவோ முயன்றும் இதைத் தவிர்க்க முடியவில்லை. அதனுல் அந்தச் சிறு பாகங்களைத் தனியாகக் கழற்றி ஸ்டோர் அறையினுள் பூட்டி வைக்கும் பழக்கம் ஏற்பட்டது. அதற்குப் பிறகும் புலிகளின் நடமாட்டம் குறையாமற் போகவே காவலர் தலைவரான ஜமேதார் பாண்டியன் அதைத் தடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யத் தொடங்கினர். தன்னுடைய செந்த்ரிகளுக்கு ரகசியமான உத்தரவு கொடுத்தார்.

நள்ளிரவு, பின்னிலாக் காலம். சிப்பாய் சவரிமுத்து துப்பாக்கியுடன் சுற்றுலா வந்து கொண்டிருந்தான். அருகில் ஏதோ உலோகம் உராயும் ஒலி கேட்டது. அவன் திரும்பிப் பார்த்தான். ஒரு மோட்டாரின் முன்பு புலி ஒன்று நிஜமாகவே நின்றுகொண்டிருந்தது. மஞ்சளும், கறுப்புமாக அதன் உடலில் வரிகள் நிலவொளியில் பளபளத்தன. ஒரு கணம் திகைத்து நின்ற சவரிமுத்து தன் துப்பாக்கியின் முனையில் சனியனைப் (பயனட்) பொருத்தினன். புலியின் முன்புறம் வண்டியின் ரேடியேடருக்குக் கீழே இருந்தது. ஆயுதத்தை அக்குளில் இடுக்கிக்கொண்டு அடிமேல் அடி வைத்து மெள்ள அதை நெருங்கினன். 'சார்ஜ்' என்ற பேரொலியுடன் புலியின் பிட்டத்தைச் சனியனுல் குத்தினன்.

'ரே பகவான்,' என்று எதிரொலி கேட்டது. சவரிமுத்து திடுக்கிட்டான். 'புலி பேசுகிறதே'. சவரிமுத்து இட்ட சத்தத்தினல் மற்றக் காவலர்கள் அந்த இடத்திற்கு ஓடி வந்தனர். ரத்த வெள்ளத்தில் கிடந்த புலியை வெளியில் இழுத்தபோது அது மேஸ்திரி நங்கா சிங்காக இருந்தது. நங்காசிங் ஒரு மேற்குப் பஞ்சாபிய அகதி. அவன் இந்தப் புலித் தொழிலை இரண்டாவது உலகப் போரின்போது ஈராக்கில் வெற்றிகரமாகக் கையாண்டிருக்கிருன். அதன் தொடர்ச்சிதான் ஆவடி சம்பவங்கள். அதற்குப் பிறகு அந்த டெப்போவில் புலி நடமாட்டம் அறவே ஒழிந்தது.

புலி, வேட்டை என்பவைகளை நினைக்கும் போது என் கண்முன்பு இனயத்கான் வந்து நிற்கிருன். அவன் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தை (தற்போது பாகிஸ்தான்)ச் சேர்ந்த டேரா இஸ்மாயில்கானைச் சேர்ந்தவன். ஆறரை அடி உயரம். நீண்ட கைகளும் கால்களும், பால் நிறம், வட்டமான முகம், சுருண்ட கேசம், நீளமான மூக்கு. ராஜா மாதிரி என்று பேச்சுக்குச் சொன்னல் போதாது. உண்மையிலேயே ஓர் அரசனின் கம்பீரத் தோற்றம் அவனிடம் இருந்தது.

சென்னை நகரத்தின் வீதிகளில் திரியும் பட்டாணியர்களது நடவடிக்கைகளைப் பார்த்த பிறகு அவர்களைப் பற்றி நமக்குச் சரியான அபிப்பிராயம் ஏற்படாது என்பது உண்மையே. ஆனல் அவர்களுடைய உண்மைச் சுபாவத்தையும், வாழ்க்கை முறையையும் அறிந்து கொள்ள நாம் அவர்களுடைய நாட்டிற்கே போகவேண்டும், அவர்கள் அச்சமுறுத்தும் தோற்றமும், உடல் வலிமையும் கொண்டவர்களே. என்ருலும் எளிதில் உணர்ச்சி வசப்படுபவர்கள், மெழுகைப் போல உருகும் இதயம் கொண்டவர்கள், விருந்தினர்களிடம் உயிராக இருப்பார்கள். சொன்ன சொல்லைக் காப்பாற்றவும், நட்பு விசுவாசத்திற்கும் பட்டாணியர்களைவிடச் சிறந்த இன்னெரு இனத்தை நான் இந்திய நாட்டில் காணவில்லை.

ஆயுதம் உபயோகிக்கும் திறமையில் அவர்கள் நிகரற்றவர்கள். சாதாரணமாக நமது குழந்தைகள், காற்றுடியும், பம்பரமும், கவண்கல்லும் வைத்திருப்பது போல் அவர்களுடைய நாட்டுச் சிறுவர்கள் துப்பாக்கியைக் கையாளுவார்கள். நாட்டுத்துப்பாக்கி, தோட்டா,

வெடி மருந்து ஆகியவை எல்லைப்புற மாநிலத்தில் ஒவ்வொரு மொஹல்லாவிலும் தயாராவதுண்டு.

இத்தகைய இயல்புள்ள மக்களை கான் அப்துல் கபார் கானும், டாக்டர் கான் சாகிப்பும் 'குதாய்கித் மத்கார்' (கடவுளின் தொண்டர்)களாக மாற்றி அஹிம்ஸை வழியைப் பின்பற்றச் செய்தது குறித்து நான் எண்ணி எண்ணி வியந்ததுண்டு. அது ஒரு மகத்தான சாதனை.

துப்பாக்கியினால் குறிவைத்துச் சுடுவதில் பட்டாணியர்கள் நிபுணர்கள். எங்கள் முகாமில் ரஜாகான் என்னொருவ சமையற்காரன் இருந்தான். முன்பெல்லாம் படையினருக்குப் பணிபுரியும் நாவிதன், சமையற்காரன் சலவைத் தொழிலாளர் ஆகியோருக்கு ஆயுதப் பயிற்சி தருவது வழக்கமில்லை. ஆண்டு முழுதும் துப்பாக்கியையே தொடாமல் சமையல் வேலையில் மட்டும் ஈடுபட்டிருந்த அந்த மலை நாட்டுப் பட்டாணியன் ஆண்டுதோறும் துப்பாக்கி சுடும் போட்டியில் முதல் பரிசு பெறுவான். 'குலவித்தை கல்லாமலே பாகம் படும்' போலும்!

முதலில் குறிப்பிட்ட இனயத்கான் எனது நெருங்கிய நண்பன். என்னிடம் உயிராக இருப்பான். அஜீஸ் என்றுதான் என்னை அழைப்பான். எந்த இடத்திற்கும் நாங்கள் சேர்ந்தேதான் போவோம். ஒரு தாம் ராவல் பிண்டியை அடுத்த கோஹ்மர்ரிக்கு அண்மையிலுள்ள அடர்ந்த காடுகளுக்கு அவனுடன் நானும் சென்றிருந்தேன். அங்கே சிறுத்தைகளும், புலிகளும் அதிகம். இனயத்கான் சிறந்த வேட்டைக்காரன்.

சிறிய நீர்நிலைக்கு அருகில் ஆடு ஒன்று கட்டப்பட்டிருந்தது. இனயத்கானும், நானும் பரண்மேல் ஏறிப் பதுங்கியிருந்தோம். எங்களிடம் சுழல் துப்பாக்கியும், நெடுந்தொலைவு ஒளி பாய்ச்சக்கூடிய டார்ச்சும் இருந்தன. தோட்டா நிரப்பிய துப்பாக்கியை அருகில் வைத்துக்கொண்டு சத்தம் செய்யாமல் பரண்மேல் ஏறிக் குப்புறப் படுத்திருந்தோம்.

துப்பாக்கியைக் கையாளுவதில் எனக்குத் திறமை பற்றாது. என்றாலும் இனயத் அதை என்னிடம் கொடுத்துவிட்டு விளக்கைத் தன் கையில் வைத்துக் கொண்டான். நள்ளிரவிற்கு மேல் புலி ஒன்று இரையை நோக்கிக் கம்பீரமாக வந்தது. 'விளக்கைப் போட்டதும் அந்த வெளிச்சத்தில் கண் கூசிப்போய் புலி திகைத்து நிற்கும். அப்போது குறி வைத்து விசையை இழு', என்று முன்னரே கூறியிருந்தான் இனயத். மூச்சை நிறுத்திக்கொண்டு துப்பாக்கியைத் தோளில் அழுத்திப் பிடித்தேன். பளீரென்று விளக்கின் ஒளி வீசியதும் நான் விசையின் முதல் 'புலாவை' அழுத்திவிட்டு இரண்டாவதற்காகத் தயார் ஆனேன். அடுத்த வினாடி புலி சுருண்டு விழ வேண்டியதுதான்.

பட்டென்று என் துப்பாக்கியைத் தட்டிவிட்டான் இனயத். விசை அழுத்தப்பட்டுக் குறி தவறியதுமல்லாமல் துப்பாக்கியும் மரத்திலிருந்து கீழே விழுந்துவிட்டது. சினமூட்டப்பட்ட புலி என்ன செய்யும் என்பது அவனுக்குத் தெரியாததல்ல. புலி எங்கே பாயுமோ என்ற பயத்தினால் என் உடல் பதறியது.

'இது என்ன இனயத்?' நடுங்கியவாறு வினவினேன். விளக்கை அணைத்துவிட்டு அவன் கிசுகிசுத்தான் 'புலியின் பின்னால் பார்.'

இரண்டு அழகிய புலிக்குட்டிகள் பூனையைப்போல தாயைப் பின்தொடர்ந்து வந்ததை மங்கிய நிலவொளியில் கண்டேன். என் உடம்பு புல்லரித்தது. இனயத்கானுக்கு இரட்டைக் குழந்தைகள். ஒருதரம் அவர்களுக்கு உடம்பு சரியில்லை என்று தந்தி வந்தது. விடுமுறை கிடைத்து அவன் வீட்டிற்குச் செல்வதற்குள் இருமதலையரும் இறந்துவிட்டனர்.

இரும்பு உடலும் பஞ்சு நெஞ்சமும் கொண்ட இனயத் என் கையை இறுகப் பற்றிக் கொண்டான். அவனுடைய நெஞ்சு நிரம்பியிருந்ததை அவனது நடுங்கிய கரம் உணர்த்திற்று.

அதுதான் எங்களுடைய கடைசி வேட்டை,

நாட்டுப் பிரிவினைக்குப் பிறகு நான் எங்கே? இனயத் எங்கே? சமஷ்டிப் பிராரப்தம் என்று இதற்குத்தான் பெயரோ?



# "மரபு மறவேல்"

★

சித்தலிங்கம்

'அரனை மறவேல்' என்பது ஔவையார் திருவாக்கு. அதுபோல் இதுவும் ஔவையார் அருளிச் செய்ததோவென்று மயங்கல் வேண்டா. வழி வழி வந்த பண்புகளை, வழக்கங்களை, வழக்காறுகளை மரபு எனக் குறிப்பது வழக்கம். அம்மரபை மறக்கக்கூடாது என்பதைக் குறிக்கவே இத்தலைப்பு.

ஒவ்வொரு மொழிக்கும் தனித் தனிப் பண்பு (Genius) உண்டு என்று மொழி நூல் வல்லோர் குறிப்பிடுவர். அப்பண்பை மறந்துவிடாமல் அதற்கேற்ப நூலியற்றுவதே 'மரபு' எனப்படும். அப்படியொரு மரபு தமிழ் மொழிக்கும் உண்டு. அதனைப் போற்றுவது எழுத்தாளர்களது கடமையாகும். மரபை மறந்தால் மொழியின் பண்பும், அதன் தனித் தன்மையும் மாசுபடும். பிறகு அது வேற்று மொழிபோலத் தோன்றும்.

'ஆதியில் தமிழ் நூல் அகத்தியர்க் குணர்த்திய மாதொரு பாகனை' என்றொரு பழம் பாடல் குறிப்பிடுகிறது. எனவே தமிழின் மரபு சிவபெருமானிடமிருந்து தொடங்கியது என்னலாம். இம்மரபு வழி வழி போற்றப்பட்டு வந்திருக்கிறது. இன்று காணக்கிடக்கும் தமிழ் நூல்களுள் மிகப் பழமையானதாகிய தொல்காப்பியமும் 'என்பா', 'என்மனார் புலவர்', 'மொழிய', "ஒல்வழி யறிதல் வழக்கத்தான" "செவ்வி தென்ப சிறந்திசினோரே" என்று முன்னோர் கூறிய முறையை எடுத்துரைக்கின்றது. இதுமட்டுமின்றி 'மரபியல்' என்றொரு தனிப் பிரிவை யமைத்து மரபின் சிறப்பை எடுத்துரைக்கிறார் தொல்காப்பியர்.

தனியொரு மனிதன் தான் எண்ணியவாறு எதையும் அமைத்துக்கொள்ளல் இயலாது. நுண்ணறிவுடையோர் ஏற்றுக்கொள்ளும் ஒன்றையே அவனும் பின்பற்றவேண்டும். அவ்வழி தவறின் புலவருலகம் அவனைப் போற்றாது. சங்கங்கள் மூன்று தமிழ்நாட்டிலிருந்த செய்தியை நாம் இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். அவை, ஆன்ற தமிழ்ப் புலவர் நூல்களை ஆராய்ந்து தேர்ந்தெடுத்தது மட்டுமின்றி, மரபு வழியிலும் பாதுகாத்தன என்று கொள்ளலாம். 'கூடலினாய்ந்த வொண்டீந் தமிழ்' என்று பழந் தமிழிலக்கியம் குறிப்பிடுகிறது. தமிழ்க் கவிதைகளோடு, கவிதை மரபுகளையும் அந்தச் சங்கங்கள் பாதுகாத்தன என்று சொல்லலாம். தொன்று தொட்டு இவ்வழக்கம் இருந்து வருவதால் தமிழில் 'மரபு' என்பது மறுக்க முடியாத, மறக்க முடியாத ஒரு கட்டுப்பாடாகத் திகழ்கிறது. இதனால் தழுவுக்கு ஏற்றமே யொழிய வேறில்லை.

'கண்ணுதற் பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணி டைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ"

எனப் பரஞ்சோதி முனிவர் இக்கருத்தினை மனத்தில் வைத்தே குறிப்பிட்டார்.

பழம் புலவர் வாழ்ந்த காலம் வேறு. நாம் வாழும் நாள் வேறு. காலம் மாறி வருகிறது. பல்வேறு எண்ணங்களும் புதிய பல கருத்துக்களும் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. இந்நிலையில் பழமையை மரபை— நாம் எப்படிப் பின்பற்ற இயலும் என்ற கேள்வி எழலாம். புதிய கருத்துக்களும், முடிவுகளும் (*conclusions*) தோன்றுவது மனித இனத்தின் வளர்ச்சியைக் குறிக்கிறது. இக்கருத்துக்களையும், சிந்தனைகளையும் எடுத்துக்கூற உதவுவது மொழியே யாகும். மொழி நேற்றோ அல்லது முந்தைய நாளோ, ஒருவரோ அல்லது ஒரு சிலரோ உருவாக்கியது அல்ல. சொற்களையும் அவற்றின் பொருள்களையும் பிணைத்து உருவாக்கி, வரையறை செய்யப்பட்ட நிலையில் தோன்றியது மொழி. அதற்கு இலக்கணம் உண்டு. வரம்பு உண்டு. வரையறை உண்டு. அந்த மொழியை வாகனமாகக் கொள்ளும் புதிய கருத்துக்களும் அதற்கேற்பவே வெளிப்படல் வேண்டும். புதிய சொற்கள் இன்று தேவைப்படுகின்றன. பல்வேறு நுண்ணிய கருத்துக்களை வெளியிடப் புதிய சொற்களை நாம் உருவாக்குகிறோம். இது இன்றியமையாதது. ஆனால் அப்படி உருவாக்கும் சொற்கள் மொழி மரபுக் கேற்றவாறு அமைந்துள்ளனவா என்று காண்பது கடமையாகும்.

பிற சொற்களை கடன் வாங்கலாம். அதற்கு இலக்கணம் இடந்தருகிறது. வடசொல், திசைச் சொல் என்ற இரு தலைப்பில் புதுச் சொற்களுக்கு இடந் தந்தனர் இலக்கணப் புலவர்கள். வட சொற்களைப் பெறும் போதும், அவற்றை இரு பிரிவாக (தற்சமம், தற்பவம்)க்கொள்ள அவர்கள் வழி வகுத்தனர். எனவே புதிய சொற்களைக் கடன் வாங்குதல் தவறல்ல என்பது தெளிவு. ஆனால் அவற்றைத் தமிழின் தன்மைக்கு ஏற்ப சுருக்கியோ, பெருக்கியோ, திருத்தியோ, தழுவியோ கொள்ளவேண்டும். இதுவே மரபைக் காப்பதற்குரிய வழி.

'மழை பெய்கிறது' என்பது வழக்கமான ஓர் ஆட்சி 'மழை பொழிகிறது' என்றும் சொல்லலாம். 'மழை கொட்டுகிறது' என்பதுமுண்டு. 'மழை ஊற்றுகிறது' என்ற ஆட்சி மதுரை மாவட்டப் பகுதிகளில் வழங்கி வருகிறது. ஆனால் 'மழைக்கிறது" என்பது ஏற்றதாகாது. '*It Rains*' என்ற சொற்றொடரை மனத்திலிருத்தி, "தமிழ்ப்படுத்தியது" இந்த ஆட்சி. இது மரபுக்கு மாறானது. வேற்று மொழியில் வழங்கும் ஒரு வழக்கைத் தமிழில் கொண்டு வர முயல்வதால் இது மரபுக்கு முரணாகத் தோன்றுகிறது.

'நகு' என்பது வினையடி. இதிலிருந்து, நகுகிறான், நக்கான். நகுவான் என்பன தோன்றின. நகை என்ற பெயர்ச்சொல்லும் பிறந்தது. பிறகு நகைக்கிறான், நகைத்தான், நகைப்பான் என்ற ஆட்சிகள் கிளைத்தன. இப்பெயர் பண்பொடு சேர்ந்து சிறுநகை, குறுநகை, பெருநகை, புன்னகை என வழங்கலாயிற்று. பண்பொடு சேர்ந்த இப்பெயரை வினையாக்கி, "புன்னகைத்தான்" என்பது மொழி மரபொடு பொருந்தாததாகும்.

கடந்த நூற்றாண்டிலிருந்து மேனாட்டு நாகரீகமும் மொழிகளும் நம் நாட்டுக்கு வரத் தொடங்கின. புதிய இலக்கிய வகைகளும்(சிறு கவிதை,நாவல் முதலியன)

# இலக்கிய நிருபர்கள் தேவை

★

**தம்பி சீனிவாசன்**

**"நமது தினசரிகளில் - தமிழ்த் தினசரிகளில் கூட இலக்கிய நிகழ்ச்சிகளின் விவரம் போதிய அளவு வெளிவருவதில்லை".** இது பலரும் உணரும் குறை, பலரும் வெளியிடும் குறை.

தமிழ்ப் பெரு மக்களிடையே இப்போது ஒரு புதிய விழிப்பு ஏற்பட்டுள்ளது. அவர்கள் பல இலக்கிய நிகழ்ச்சிகள் நடத்துகிருர்கள். பழந் தமிழ் இலக்கியங்களை உணர்ந்து அனுபவித்து ஆராய்வதற்காக மாநாடுகள் கூட்டுகிருர்கள்; இலக்கிய நூல் வெளியீட்டு விழா நடத்துகிருர்கள்; கவிஞர்களின் திருநாட்களைக் கொண்டாடுகிருர்கள். இலக்கியச் செல்வத்தைப் பேணுவதில் சமூகம் காட்டும் அக்கறையைக் குறிக்கின்றன இந்த நிகழ்ச்சிகள்.

யுத்த காலத்தில் போர்முனைச் செய்திகள் எவ்வளவு முக்கியமோ, தேர்தல் காலத்தில் அரசியல் நிகழ்ச்சிகள் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் வாய்ந்தவைதாம், இந்தச் சமூக நிகழ்ச்சிகளும். ஆனல் நமது பத்திரிகைகள் பெரும்பாலும் தேசீயப் போராட்ட காலத்தில் தொடங்கியதாலோ என்னவோ, அரசியல் செய்திகளுக்கே எப்போதும் முக்கியத்துவம் அளிக்கின்றன. புகழ்பெற்ற ஒரு பேச்சாளர் கூறியது போல, "இலக்கிய விழாக்களில் அபிப்பிராயபேதமுள்ள கருத்துக்கள் வெளியிட்டால் அந்தச் செய்தி பெரிதாகப் போகிறதே தவிர, இலக்கிய விழாவுக்காகவே செய்தி வெளியிடப்படுவதில்லை". இது ஓரளவு உண்மைதான் என்பதை நாம் அனுபவத்தில் அறிந்துள்ளோம். உயர்ந்த கருத்துக்களை, வாழ்நாளெல்லாம் இலக்கியத்திற்கு உழைக்கும் ஓர் இலக்கிய நிபுணர் வெளியிட்டால், "இன்னுரும் பேசினர்" என்று செய்தி வெளியாகிறது. ஆனல் ஒரு மந்திரியோ, அரசியல் தலைவரோ இலக்கிய மேடையில் ஏதாவது முணுமுணுத்தால் அது பெரிதாக விளம்பரப்படுத்தப்படுகிறது. ஏன் இந்த நிலை? இதற்கு யார் பொறுப்பு? இந்த நிலை நீடிக்க வேண்டியதுதான?

செய்திகளை வெளியிடுவது பத்திரிகைகள் என்ருலும், இச் செய்திகளைத் திரட்டுவோர் நிருபர்களே. நமது பத்திரிகை நிருபர்கள் கூரிய அரசியல் அறிவும் படைத்திருந்த போதிலும், தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரை, துரதிருஷ்டமாக, பாமர நிலையிலேயே பெரும்பாலும் இருக்கின்றனர். ஒரு பேராசிரியர் பேச்சு இன்னெரு பேராசிரியர் பெயரில் வெளிவந்தது; ஒரு புத்தக வெளியீட்டு விழா நிகழ்ச்சியின் செய்தியில், புத்தகப் பெயரே மாறி இருந்தது; ஓர் இலக்கிய அன்பருக்குப் பாராட்டு விழா நடத்தியபோது, நிகழ்ச்சி நடந்த இடப்பெயரை மாற்றிச் செய்தியும் புகைப்படமும் வெளியிட்டது ஒரு தமிழ்ப் பத்திரிகை.

நமது இலக்கிய விழாக்களில் பல, ஏராளமான பொருட்செலவில் நடை பெறுகின்றன. எத்தனையோ பேரின் அயராத உழைப்பினல் அவை நன்கு சோபிக்கின்றன. அவற்றில் பங்குகொள்வோர் தமது முழுத் திறமையையும் அறிவையும் காட்டி, விழாவின் வெற்றிக்கு உதவுகிருர்கள். இத்தனை இருந்தும், இச்செய்திகள் போதிய அளவு வெளியிடப்பெறுவதில்லை. வெளிவந்தாலும் இலக்கியச் சுவையுள்ள பகுதிகளுக்குக் கருத்துச் செலுத்தப்படுவதில்லை; அல்லது செய்திகள் தவருன விவரங்களுடன் வெளியாகின்றன.

மக்களின் உரிமைக்காகப் பாடுபடும் அரசியல் கூட்டங்களுக்கும், மக்களை மகிழ்விக்க முயலும் விளையாட்டுக்களுக்கும் கலை நிகழ்ச்சிகளுக்கும் பத்திரிகைகளில் இடம் தரவேண்டியது எவ்வளவு அவசியம் என்று கருதப்படுகிறதோ, அவ்வளவு அவசியம்தான் இலக்கிய நிகழ்ச்சிகளுக்கு இடம் தருவதும். ஆழ்ந்து யோசித்தால் அதன் அவசியம் இன்னும் அதிகம் என்று கூடச்சொல்லலாம். மக்களின் சிந்தனையைத் தூண்டுவதும் உயர்ந்த பண்புகளை அவர்களிடையே ஊட்டி வளர்ப்பதும் இலக்கிய நிகழ்ச்சிகளே அல்லவா?

சிறந்த சிந்தனையாளர்களும் எழுத்தாளர்களும் இலக்கிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் போது சுவை மிக்க இலக்கியத் துணுக்குக்களைச் சேகரிக்க முடியும். அவர்களது பேச்சிலும் உரையாடலிலும் நயம் சொட்டும் பகுதிகளை வடித்துவைத்துக்கொள்ளமுடியும்- திறமையான நிருபர்கள் மட்டும் கிடைத்துவிட்டால். இன்று, காற்ருேடு காற்ருகக் கரையும் எத்தனையோ அற்புதமான கருத்துக்களை ஏட்டிலே எடுத்துவைத்துக் கொள்ள முடியும்.

இதற்கு நமது இன்றைய தேவை தமிழ் இலக்கியத்தில் ஓரளவு அரிச்சுவடி தெரிந்த நிருபர்கள்; அவர்களுக்குத் தமது வேலையில் ஆர்வம்; அவர்கள் திரட்டி வரும் செய்திகளைத் தெளிவாகவும் விளக்கமாகவும் வெளியிடும் பத்திரிகைகள்.

---

தமிழில் இடங்கொண்டன. முப்பதாண்டுகளுக்குமுன் வந்த பெரும்பாலான நாவல்களும், கதைகளும் மேனுட்டு முறையை அடியொட்டி எழுந்தவையே. அவற்றில் (பெரும்பாலானவற்றில்) ஆனந்தன், மாயவன் என்ற தமிழ்நாட்டுப் பெயர்கள் இருக்கும். ஆனல் அந்தப் பாத்திரங்களின் நடை, யுடை, பாவனை, பேச்சு முதலியவற்றில் மேனுட்டு வாடை வீசும். இது மரபை மறந்ததால் விளைந்ததாகும்.

ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனித் தன்மை உண்டு. சில குறைபாடுகளும் இருப்பதாகத் தோன்றலாம். குறைபாடுகளும், சிறப்புக்களும் சேர்ந்தே 'தனித்தன்மை' உருவாகிறது. ஒரு மொழியை ஒட்டி மற்ருெரு மொழியை உருவாக்க (திருத்த) முயல்வது அறியாமையாகும். 'சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்று கூறிய பாரதியார் தமிழின் தனித் தன்மையை மறந்தாரில்லை. புதிய கருத்துக்களையும் பிறவற்றையும் தமிழிலே தரமுடியும்; தமிழின் தன்மை-மரபு-கெடாமலே அவற்றை வெளியிட முடியும் என்பதை உறுதியாக நம்பினர். இந்த உறுதி இன்றைய எழுத்தாளர்களுக்குத் தேவை.

மரபு, மொழியின் உயிர். இதை யறியாது மொழியைச் "சீர்திருத்த" முயல்வது பேடிகை வாளாண்மை போலத் தன்னையும் அழிக்கும்; மொழியையும் கெடுக்கும்.

எனவே 'மரபு மறவேல்'!

# மாமழை

★

— P. J. லூயிஸ்

மனித வாழ்க்கையுடன் இணைந்த பலவற்றுள் மிக முக்கியமானது மழை. மழையில்லையேல் மனித வாழ்வு இல்லை. இதன் உண்மை உணர்ந்து நம் மூதாதையர் மாதம் மும் மழை பெய்ய வேண்டுமென விரும்பினர்.

"வேத மோதிய வேதியர்க்கோர் மழை
நீதி மன்னர் நெறியினுக்கோர் மழை
மாதர் கற்புடை மங்கையர்க்கோர் மழை
மாத மூன்று மழையெனப் பெய்யுமே"

இயற்கையுடன் இயைந்து வாழ்ந்த தமிழன் மாதம் மும்மழை கண்டான். நாடு செழிக்க, பிற நாட்டை வாழ்விக்கக் கண்டான்.

சில மாதங்களுக்கு முன் மேட்டூர் அணையில் நீர் மட்டம் குறைந்துவிட்டது. விவசாயிகளுக்குப் பகுதி தண்ணீர் பாய்ச்சப்படும் என அரசாங்க அறிக்கைகள் கூறின. சில பகுதிகளில் விலங்கினங்களுக்கு உணவு இல்லை. குடி நீர் போதவில்லை என்ற பெரும் கொந்தளிப்பான நிலை. மக்கள் மருண்டு வானம் பார்த்தனர். மழை பெய்யாதா! என ஏங்கினர்.

இதைப்போல் இதைவிடப் பன்மடங்கு பஞ்சம் அன்று இருந்தது. அபிரகாமின் காலத்தில் நெடுநாள் மழை பெய்யாததினாலே அப்பொழுது தேசத்திலே பஞ்சம் உண்டானது. (ஆதியாகமம் 26: 1) சென்ற நூற்றாண்டிலும் சில காலம் இதேநிலை. நாடும் நகரமும் நலிந்து கிடந்தன. பஞ்சம் தலைவிரித்தாடின. எப்படிப் பட்ட பஞ்சம் ஏன் பஞ்சம்?

"வஞ்சக மேகம் உலோபர்கள் போல
மண்ணில் மழை பொழியா மையினாலே
சஞ்சலமாகித் தளர்ந்தோ மேன் மேலே
சாமி கதி உன்றன் தாமரைக்காலே
எட்டுநாள் பத்துநாள் பட்டினி யோடே
இடையிலே கந்தை இருகையில் ஓடே
.... .... .... .... .... ... ... ... ... ...
... ... ... ... .... ... .... ... ... ...
ஊரும் இல்லாமல் — குடிக்கத் தண்
ணீரும் இல்லாமல் — அன்ன மெனும்
பேரும் இல்லாமல் — பசி தீர்க்க
ஆரும் இல்லாமல்
பாரில் அநேகர் பரதேசி ஆனரே
ஊரில் அநேகர் உயிர் மாண்டு போனரே.
... ... ... .... ... ... .... .... ....
ஏரிகுளம் நதியாவும் நீர் சுண்ட
ஏகமாய்க் கோடைக்கனல் எங்கு மண்ட
சேரி மாடாடுகள் செத்துப்போய் வெண்ட
ஜெக முழுதும் உமதராக்கினி அண்ட"
—வேதநாயகர்

தாது வருடப் பஞ்சத்தின் பரிதாப நிலையைக் கண்டு

"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடினேன் பசியினலிளைத்தே
வீடு தோறிரந்தும் பசியறுதயர்ந்த வெற்றரைக்
கண்டுளம் பதைத்தேன் ...."

என வள்ளலார் வருந்தினர். இவ்வளவு சிரமமான நிலையும் மாறின. மழை பெய்தது. வானம் பொழிந்தது. பூமி தழைத்தது. ஆக நாம் மழையைப் பாராட்ட வேண்டியதுதானே!

'இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கனுமே பிறந்ததில்லை' எனப் பாரதியால் பாராட்டிப் புகழ் பெற்ற இளங்கோவடிகளார் தித்திக்கும் தீந்தமிழ்க் காப்பியத்தில் தீட்டினர்

"மாமழை போற்றுதும்! மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி உலகிற் கவனளிபோல்
மேனின்று தான் சுரத்தலான்" —சிலப்பதிகாரம்.

உலகத்தின் பொது நூலில் ஒன்று என உலகோர் உவந்து ஓம்பும் உயர் நூலாம் திருக்குறளில் 'வான் சிறப்பு' எனத் தனி அதிகாரமே அளித்து அழகுபட மழையைப் போற்றுகிறர்.

'வான்நின்று லகம் வழங்கி வருதலாற்
றனமிழ்த மென்றுணரற் பாற்று'
'நீரின் றமையா துலகெனின் யார் யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு"

பஞ்சத்தால் பரதவிக்கும் பாமரரைப் பார்த்த கவிஞர் வேதநாயகர் இந்நிலைக்கு மழையின்மையே காரணம் என உணர்ந்து மழையைப் 'பெய்'என வேண்டுகிறர்.

'காரே யுன்னீரை யெல்லாங் கள்ளன்
கவர்ந்தானே
நீரே யுதவாய் நெறியாமோ—நேரே தான்
வாரியுண்டு வாரிமொண்டு வாரியுண்டு
வானிருண்டு
பேரி கொண்டு நீதிரண்டு பெய்'—

Phone; 2433 Estd: 1938 Tel: "SOCIETY"

*The Govt. of Madras has awarded a SHIELD to our society as the*

BEST WEAVERS CO-OPERATIVE SOCIETY IN TAMILNAD

★ Quality ★ Style
★ Durability ★ Fastness in colour
★ Economy ★ Up-to-date Design

*Contact:*

**THE AMMAPET HANDLOOM WEAVERS' CO-OPERATIVE PRODUCTION & SALE SOCIETY LTD. S. 532**

AMMAPET, SALEM-3.
(Tamilnadu)

வேதநாயகர் கடல் நீரைக் குடித்துக் கரும் மேகமாகி இடியிடித்து மழை பெய்ய வேண்டுமென விஞ்ஞான வித்தையை 3–ஆம் வகுப்புப் பாடத்தைப் படம் பிடித்துக் காட்டிவிட்டார். புதுமைக் கவி பாரதியார் மழையைப் பற்றி மழையாகப் பொழிந்துவிட்டார்.

"வெட்டி யிடிக்குது மின்னல்—கடல்
வீரத்திரை கொண்டு விண்ணை யிடிக்குது
கொட்டி யிடிக்குது மேகம்—கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா—என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத் திசையு மிடிய—மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா"

பாரதியின் வழிவந்த புதுச்சேரி பாரதிதாசன் அவர்கள் சின்னஞ்சிறு குழந்தை போல் நிலாவைக் கூப்பிடும் மழலை போல் மழையைக் கூப்பிடுகிறார். கூப்பிட்டவுடன் மழையும் வருகிறது. கொட்டுகிறது. சாதாரண மழையல்ல. தமிழ் மழை. தெவிட்டாத அமுத மழை. இனிய மழை. இன்ப மூட்டும் மழை. தகரப் பந்தலில் மழை பெய்கிறது. தண தண என ஓசை எழுகிறது: ஓலைக் குடிசையில் மழை பெய்கிறது. சள சள என சப்திக்கிறது. ஆண்டைக்கும் அடிமைக்கும், முதலாளிக்கும் தொழிலாளிக்கும், நல்லார்க்கும் பொல்லார்க்கும் இனிதே சமமாய்ப் பெய்கிறது.

"மழையே மழையே வாவா! நல்ல
வானப் புயலே வாவா! இவ்
வையத் தமுதே வாவா
... ... ... ... ... ... ... ... ...
தகரப் பந்தல் தணதண வென்னத்
தாழும் குடிசை சளசள வென்ன
... ... ... ... ... ... ... ... ...
இல்லாருக்கும் செல்வர்கள்
என்பாருக்கும் தீயவர்
நல்லாருக்கும் முகிலே சமமாய்
நல்கும் செல்வம் நீயன்றோ!"

"நல்லார்க்கும் பெய்யும் மழை எல்லார்க்கும்" நல்லவர்கள் நாட்டில் நடமாடுவதால்தான் மழை பெய்கிறது என நம் முன்னோர்கள் நம்பினர். நல்லவர்களாக வாழ்வோம்.

லங். திருச்சி மேற்றிராணியாரை வரவேற்றோம், மழை பெய்தது. காஞ்சி காமகோடி ஸ்ரீசங்கராச்சாரியார் சுவாமிகளை வரவேற்றோம். மழை பெய்தது. நல்லவர்கள் வந்தார்கள், மழை கொட்டியது. நாம் அவர்கள் வழி நிற்போம்,

# ஒன்றே குலம் ஒருவனே தேவன்!

வா. கோ. பா.

அப்போது மைசூரில் சுதந்திர ஜனநாயக ஆட்சி நடைபெறவில்லை! தற்போதைய கவர்னர் தாம் அரசராக இருந்தார். அவர் பரம்பரையில் நடத்தி வரும் கல்லூரி தான் வடமொழிக்கல்லூரி. மகாராசர் வடமொழிக் கல்லூரி என்ற பெயரால் இயங்குவது. அவர் வாழ்ந்து வரும் அற்புத மாளிகையின் தென் மேற்குப் புறத்தில் அமைந்துள்ள பெரிய கட்டிடம். கட்டித் தழுவிவிட முடியாத பெருந் தூண்கள். நிமிர்ந்து நிற்கும் கம்பீரத் தோற்றம்.

அந்தக் கல்லூரியில் வடமொழி வேதங்களின் சாத்திரங்களின் பல்வேறு பிரிவுகளில் இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து மாணவ ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வந்தார்கள்-(இப்போதும் வருகிறார்கள்-வருவார்களென்று நினைக்கிறேன்)

தமிழ் நாட்டின் தஞ்சை மாவட்டப் பகுதியிலிருந்து ஒரு மாணவர் வடமொழி இலக்கணப் பகுதியில் பயிற்சி பெறுகிறார். வடமொழி இலக்கணப் பகுதித் தலைவர் பண்டித ரத்தினம் மகாவித்துவான் நெரூர் கிருஷ்ணச்சார் என்பவர். வயதிலும் அறிவிலும் முதிர்ந்தவர். அதே கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்று அந்தக் கல்லூரியிலேயே பேராசிரியராக அமர்ந்தவர். வகுப்பு நடத்துகிறார். அறைக் கதவு தாளிடப்பட்டுவிட்டது. அவருடைய இலக்கணப் பகுதி மாணவர்கள் அடக்கமாக உள்ளே உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களெதிரில் சிவந்த உயர்ந்த ரக சரிகை வேலைப்பாடுகளுள்ள மைசூர் அரண்மனைச் சால்வையொன்றைப் போர்த்திய தோற்றத்தில் அவர் அமர்ந்திருக்கிறார்.

வடமொழி இலக்கணப் பாடம் நமக்கு இங்கே தேவையில்லை.

°° °°

“ஆமாம்! இத்தனை சாதிப்பிரிவினைகள் எப்படி ஏற்பட்டன?”

—கேள்வி கேட்டவன் தஞ்சாவூர்ப் பகுதி மாணவன்தான்.

“எலே! நீ பலே சூரப்புலிடா!... இத்தனைக் கம்பளி சீமைக்காரர்கள் நடுவே இந்த வகுப்பில் இப்படி ஒரு கேள்வி கேட்க உனக்குத்தாண்டா துணிச்சல் வந்தது-மூடுடா புத்தகத்தை..சொல்லுகிறேன் கேளடா!” என்று அவர் தொடங்கினார்.

முன்னொருகாலத்தில் இந்த உலகத்தில் மனித சாதி என்பதைத் தவிர வேறு எந்த சாதியுமே இல்லை. மனிதர்களும் கூட்டம் கூட்டமாக யானைகள்போல் வாழ்ந்து வந்தார்கள். நெடுங்காலம் வரை வாழ்ந்தார்கள். நாட்டில் “துர்மரணம்” (பட்டினிச் சாவு போன்றவை) இல்லை. நிரம்பவும் வயதானவர்கள் நடமாடக்கூட முடியாத நிலைக்கு வந்துவிடுவார்கள். அன்ன ஆகாரமெல்லாம் ஒடுங்கிப் பார்வையும் குன்றிவிடும். அவர்களையெல்லாம் வீட்டில் ஒரு மூலையில் சார்த்திவைத்திருப்பார்கள். அவர்களருகில் விளக்கு எரிந்துகொண்டிருக்கும்.

ஒரு குடும்பத் தலைவன் தன் பேரன் பேத்திகளோடு மொத்தம் நாற்பது ஐம்பது பேர்கள் பிரிந்து போகாமல் ஒரே குடும்பமாக வாழும் வழக்கம் அந்த நாளிலிருந்தது.

“அதுசரி ஆச்சாரியரே! நான் கேட்டது சாதிப் பிரிவினைபற்றி.”

“அவசரப்படாதேடா! நான் அதைத்தான் சொல்லுகிறேன்!... நாளடைவில் எப்படியோ மனிதனிடம் பிரிந்து செல்லும் மனப்பான்மை தலையெடுத்தது. ஒரே வீட்டில் ஒரே தாய் வயிற்றில் பிறந்த குழந்தைகள் உணவு கொள்ளும்போது ஒரே மாதிரி நடந்து கொள்ளுவதில்லையல்லவா?”

“ஆமாம்! ஒருவன் எனக்கு வெண்டைக்காய் வேண்டாமென்பான் - மற்றொருவன் பூசனிக்காயா!... அது யாருக்கு வேண்டுமென்பான்.”

“அப்படிச் சொல்லு! உணவில் மட்டுமில்லை, பேசும் முறையில் பழக்க வழக்கங்களில் கூட மாறுதலேற்பட்டது... எல்லோருமே விவசாயம் செய்து வாழ விரும்பவில்லை. ஒரு சிலர் புதிதாக வேறு தொழில் செய்ய விரும்பினார்கள். சிலர் நாட்டின் பாதுகாப்புக்கான படையில் சேர்ந்தார்கள். சிலர் கடல்கடந்து வியாபாரம் செய்துவரக் கிளம்பினார்கள். சிலர் அறிவுத்துறையில் புதிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார்கள். சிலர் விவசாயம் செய்தார்கள். சிலர் காவியமியற்றினார்கள். சிலர் பாடினார்கள், ஆடினார்கள்...”

“அதனாலென்ன!...சாதிப்பிரிவினை...”

“சொல்லுகிறேன் கேள்!— இப்போதுகூட எழுதுகிறவர்கள் தங்களை எழுத்தாளர்களென்றும் பாடுகிறவர்கள் தங்களைப் பிரபல பாடகர்கள் என்றும் ஊருக்கு உபதேசம் செய்கிறவர்கள் தங்களைப் பேச்சாளரென்றும் பிரித்துப் பெருமைப்படுவதில்லையா?... அப்படித்தான் முதன் முதலாக வேலைகள், அலுவல்கள் காரணமாகப் பிரிந்தவர்கள் மீண்டும் ஒன்று கூடும் போதெல்லாம் தங்களை வேறுபடுத்திப் பேசுவதிலேயே பெருமை காட்டினார்கள். பல்வேறு துறைகளில் இடம் பெயர்ந்து சென்றவர்கள் நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலுள்ள பழக்க

வழக்கங்களைக் கொண்டுவந்து சேர்த்தார்கள்... (யார் கண்டார்?...கொஞ்ச நாள் கழித்து நீ ஊர் திரும்பினால் நீயும் தமிழை மைசூர் கன்னட மக்கள் பேசுவது போலத்தான் பேசுவாயோ என்னவோ!)...ஒரு சிலர் ஆங்காங்கு இயற்கை வசமாகித் திருமணம் செய்து கொண்டு வெவ்வேறு உணவு முறைப் பழக்கமுள்ள மனைவிகளையும் மக்களையும் கொண்டுவந்தார்கள். அண்ணன் தம்பிகளுக்கிடையே பாசமிருந்தாலும் அதே பாசத்தையும் பரிவையும் ஓரகத்திகளிடையே எதிர் பார்க்க முடியாதல்லவா?...ஆகையால் தனித்தனியாகப் பிரிந்து வாழும் முறை அமுலுக்கு வரவேண்டியதாயிற்று''

''இன்னும் எனக்குப் புரியவில்லை!''

''புரியாமலென்னடா போக்கிரி! புரிந்துகொள்ள விருப்பமில்லை என்று சொல்லு!...இன்று நீ அய்யங்கார் என்கிறாய் என்னை மத்வன் என்கிறாய்... இன்னொருவனை ஸ்மார்த்தன் என்கிறாய்... இன்னொருவனை க்ஷத்திரியனென்றும் வைசியனென்றும் பிரிக்கிறாய்...ஆனால் உனக்குத் தெரியாது, நாம் எல்லோருமே ஒரே மனித இனத்தைச் சேர்ந்தவர்கள். எப்போதோ எந்தக் காரணத்தாலோ பிரிந்தவர்கள்...''

''அப்படியானால் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்கிற எண்ணம் எப்படி ஏற்பட்டது?''

''அவரவர் மனப்பான்மையினால்தான்!''

''சரி! இந்த உண்மையை எடுத்துச்சொல்லி எல்லோரையும் மறுபடியும் ஒரே சாதியில் - மனித சாதியில் -கொண்டுவந்து சேர்த்தாலென்ன?''

''அதை நீ செய்யவேண்டியதில்லை - காலத்தின் இயல்பே அதுதான் – பிரிந்த ஆறுகள் எப்படி ஒரே கடலில் போய் விழுகின்றனவோ அப்படியேதான் இந்த சாதிப் பிரிவினைகளும். நாம் அனைவரும் ஒரே குலத்தவர் – மனித இனத்தவர் எனும் உணர்ச்சிக் கடலில் போய்க் கலப்போம்''

''ஆமாம்! – இந்து முஸ்லிம் பிரிவினை எப்படி ஏற்பட்டது?''

''சரியான கேள்விதான்! சொல்லுகிறேன் கேள். முஸ்லிம் என்கிற சொல்லுக்கு முகம்மது நபி என்கிற மகானின் - அராபிய நாட்டிலிருந்த வேற்றுமைத் தீமைகளைக் களைந்து ஒற்றுமையை நிலைநாட்டியவர் - கொள்கைகளை மதிக்கிறவர்கள் என்று பொருள். இந்து என்கிற சொல்லுக்கு வேதத்தைக் கடவுளின் அற நூலாக நம்பி வழிபடுகிறவன் என்று பொருள்.

முஸ்லிம்கள் குர்ரான் என்னும் நூலையும் இந்துக்கள் வேதநூலையும் வழிகாட்டியாகக் கொண்டவர்கள். இருநூல்களிலும் அன்பின் அடிப்படையில் எல்லோரும் உயிர்வாழ வேண்டுமெனும் தத்துவமே கூறப்பட்டிருக்கிறது.''

''அப்படியானால் இந்து முஸ்லிம் ஒற்றுமை சாத்தியமே என்று சொல்லுங்கள்! - இந்து முஸ்லிம்களின் பழக்கவழக்கங்கள் நேர்மாறாக இருக்கின்றனவே!''

''இங்கேதான் மனிதன் த்வறு செய்கிறான் - ஒற்றுமை என்பதற்கு எல்லோரும் ஒரே உணவைக் கொண்டு, எல்லோரும் ஒரே மாதிரி உடுத்தி, எல்லோரும் ஒரே குரலில் பேசவேண்டும் என்கிற கட்டாயம் ஒன்றில்லை - ஒருவரையொருவர் தமக்கு எதிரியாகக் கருதாமல் நேச மனப்பான்மையுடன் பழகி இன்பதுன்பங்களில் ஒத்துழைத்து வந்தாலே போதும்''

''அப்படியெல்லாம் பழகியிருந்தால் பாகிஸ்தான் பிரிவினையே ஏற்பட்டிராதே!''

''ஆமாம்! அதைப் போலவேதான் மற்றவர்களும் மொழி அடிப்படையிலும் பழக்க வழக்கங்கள் அடிப்படையிலும் உயர்வு தாழ்வு கற்பித்துக்கொண்டு பிரிந்துவிடக்கூடாது; எப்போதுமே பிரிவினை என்பது பலவீனத்திற்கு இருப்பிடம் தான்... உண்மையில் நாம் எல்லோரும் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள். அது மனித குலம். நாம் அனைவரும் வணங்கும் தெய்வம் ஒன்றேதான். அதற்கு வெவ்வேறு பெயரும் பழக்கவழக்கங்களையும் நாம் சூட்டியிருக்கிறோம். அவ்வளவேதான்'' என்றார் பேராசிரியர்.

வகுப்பு முடிந்ததன் அறிகுறியாகக் கணகண வென்று மணி ஒலித்தது. ''இன்றைய இலக்கணப் பாடம் நடக்கவில்லையே!'' என்றான் கன்னடம் பேசும் மாணவன்.

''மொழி இலக்கணத்தைவிட மனித இன இலக்கணம் முக்கியமல்லவா? - அதை நாம் தெரிந்து கொண்டுவிட்டோமே!'' என்றான் தஞ்சாவூர் மாணவன்.



# வயதின் குற்றம்

★

கே. ஜயலக்ஷ்மி

விடுமுறை நாள்.

ஊருக்குப் புதியவன். நேரமோ பகல். ஊரோ குட்டிக் கிராமம். பொழுது போக்கு வசதிகள் எதுவும் கிடையாது. வேறு வழியில்லாமல் ஒரு ஆங்கில நாவலை எடுத்துப் புரட்டினேன். வாசற்படியின் பக்கம் நிழலாடவே திரும்பிப் பார்த்தேன்.

பக்கத்து வீட்டு வாயிலில் அடிக்கடி காணப்படும் அந்த வயோதிக அம்மாள் தான் நின்று கொண்டிருந்தார். முகத்தின் சுருக்கங்களும், உடலின் ஒடுக்கமும் அவருக்கு குறைந்தது அறுபது வயதிருக்கும் என்று அறிவித்தன. வயதுக்குரிய கம்பீரம் மட்டும் குறையவில்லை தோற்றத்தில். அதனால் கவரப்பட்டவனாய் சுறுசுறுப்பாக எழுந்திருந்து,

"வாருங்கள், அம்மா! என்ன வேண்டும்?" என்று வினவினேன் பணிவாக.

"ஒன்றுமில்லையப்பா; ஒரு சின்ன ஒத்தாசை செய்யவேண்டும். முடியுமோ உன்னால்...?" வாசற்படியைக் கடந்து உள்ளே வந்து நின்ற வண்ணம் குழைவாகக் கேட்டாள் அந்த அம்மாள்.

"முடியும் சொல்லுங்கள்" என்றேன் ஆதரவாக.

தன் மடியிலிருந்து ஒரு ஆறு பைசா கார்டை எடுத்து நீட்டியபடி,

"தஞ்சாவூரில் என் பெண் இருக்கிறாள். அவளுக்கு ஒரு கடிதம் எழுதித்தர வேண்டும்...என்றார்.

நான் அந்தக் கார்டை வாங்கிக் கொண்டேன்.

"சரி, இதென்ன பிரமாதம், விஷயத்தைச் சொல்லுங்கள், எழுதுகிறேன்..." என்று கூறி சட்டைப் பையிலிருந்து பேனாவை எடுத்துத் திறந்து வைத்துக் கொண்டேன் தயாராக.

அப்படியே தரையில் உட்கார்ந்து கொண்டவராய் கூறத் தொடங்கினார்.

"...... சௌ. பத்மாவுக்கு அநேக ஆசீர்வாதம். நீ அனுப்பிய பணமும் கடிதமும் கிடைத்தன. உடனே பதில் எழுத முடியவில்லை. முன் பக்கத்தில் குடியிருந்த பெண் பிரசவத்திற்காகப் பிறந்தகம் போய்விட்டாள், இந்தக் கடிதத்தை தபாலாபீசுக்குப் புதிதாக மாற்றலாகி வந்திருக்கும் பிள்ளையைவிட்டு எழுதச் சொல்லுகிறேன். அடுத்த மாதம் உனக்கு விடுமுறை விடுகிறார்களே, கட்டாயம் புறப்பட்டு வந்துவிடு. எனக்கு உடம்பு ரொம்பத் தள்ளாமையாகத்தானிருக்கிறது. உன்னைப் பற்றிய கவலைதான். என்னை அணு அணுவாக அறித்துக்கொண்டேயிருக்கிறது. கட்டாயம் வா! என், பிடுங்கலுக்குப் பயந்துகொண்டு வரவில்லை' என்று எழுதிவிடாதே. ஆசீர்வாதம் அம்மா.

வேகமாக எழுதி முடித்துவிட்டு. "இவ்வளவு தானா?" என்று வினவினேன் ஆச்சர்யமாக.

"ஆமாம், அப்பா! போதும்." என்றார் அந்த மூதாட்டி.

"விலாசம்!"

"ம்...மறந்து விட்டேன் பார்த்தாயா? எழுது. கே. பத்மா எட்டாம் படிவ ஆசிரியை; அரசினர் உயர்நிலைப்பள்ளி, தஞ்சாவூர். அவ்வளவு தான்." என்று சுருக்கமாகக் கூறினார்.

": எங்கம்மா சொல்லி ஒரு கடிதம் எழுத ஆரம்பித்தால் ஒரு நாள் போதாது. நீங்கள் அப்படியில்லை. மள மள வென்று சொல்லி முடித்து விட்டீர்கள். எழுதப் பத்து நிமிஷம் கூட ஆகவில்லை..." என்றேன் நான் வியப்பைச் சிந்தும் குரலில்.

"சொல்லிச் சொல்லிப் பழக்கமாகி விட்டதப்பா. நான் வரட்டுமா? நீயே கடிதத்தைப் பெட்டியிலே போட்டுவிடு..." என்று கூறிவிட்டுப் போனார் அந்த அம்மாள்.

அவர் விடைபெற்றுச் சென்றதும் மறுபடியும் ஆங்கில நாவலைக் கையில் எடுத்துக் கொண்டேன். ஆனால் மனம் அதில் செல்ல மறுத்துச் சண்டித்தனம் செய்தது. கே. பத்மா, எட்டாம் படிவ ஆசிரியை. சாரதா அரசினர் உயர்நிலைப் பள்ளி, தஞ்சை, என்கிற அந்த விலாசத்தையே சுற்றிச் சுற்றி வந்தது வெகு நேரம். பிறகு விலாசத்தின் முக்கால் பகுதியை விழுங்கிவிட்டு கே. பத்மா என்கிற சொல்லை மட்டுமே சுற்றிச் சுற்றி வரலாயிற்று. ஆசிரியையாகப் பணியாற்றும் கே. பத்மா எப்படியிருப்பாள்?

'வாழைத்தண்டு மேனி; வட்டமதி முகம்; குமுத மலர் விழிகள்; செண்பகப்பூ நாசி; இரண்டாகப் பிளந்த தக்காளிப் பழத்தைப் போன்ற வாயிதழ்; முத்துப் பற்வரிசை, இப்படி எந்தப் பத்திரிகையிலேயோ படித்த வர்ணனைகள் என் நினைவுக்கு வந்தன.

பரீட்சையென்னும் பல காட்டாறுகளையெல்லாம் கடந்து, வேலை தேடும் முயற்சி என்னும் கடலினுள் மூழ்கி எல்லையற்ற துன்பங்களுக்கெல்லாம் உள்ளாகி சமீபத்தில் தான் கரையேறியிருந்தேன். அதாவது

ஏழைக்குத் தகுந்த எள்ளுருண்டை. விரலுக்குத் தகுந்த வீக்கம் என்கிற பழமொழிகளை யெல்லாம் மெய்ப்பித்துக்கொண்டு இந்த தபாலாபீஸர் வேலையில் அமர்ந்தேன். அடுத்தபடியாக நான் பிரவேசிக்கவேண்டிய இடம் இல்லறமாம் நல்லறமாளிகையாகும். அதற்கு முதல் படியாக நான் ஒரு இளம் அழகியை காதலிக்க வேண்டும் அல்லவா? இன்றைய புதுமை உலகில் காதலிக்காத கலியாணம் ஏது? ஆனால் என் காதல் மெரினு பீச்சிலோ, காஸினோ தியேட்டரிலோ, மவுண்ரோட் பஸ் ஸ்டாண்டிலோ ஏற்படுவது என்பது இப்பிறவியிலல்ல. நான் இருப்பது குட்டிக் கிராமம் ஆயிற்றே! ஏதேனும் ஒரு குளத்தங்கரையிலோ, பவழமல்லி மரத்தடியிலேயோ, அல்லது இந்தத் தபாலாபீஸிலேயோ தானே என் காதல் உதயமாக வேண்டும்? ஆனால் நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லைதான். அதனுலென்ன? குருதசை கிட்டி வந்திருக்கலாமே! 'பத்மா—சிவராமன்' பெயர்ப் பொருத்தம் மிக பிரமாதம்.

*

ஒருவாரம் சென்றதே தெரியவில்லை.

வழக்கம்போல் அந்த அம்மாளின் பெயருக்கு எதேனும் கடிதம் வந்துள்ளதா என்று இன்றைய தபால்களுள் தேடினேன். நேற்றுவரையில் இல்லை. இன்று இருந்தது. கார்ட்தான். பிறருக்கு வந்திருக்கும் தபாலைப் படிப்பது தவறு என்று தெரிந்திருந்தும் இனந்தெரியாத ஒரு ஆவலினுல் உந்தப் பெற்றவனுய் அந்தக் கடிதத்தைப் படித்தேன். முத்து முத்தான எழுத்து:—

"...அன்புள்ள அம்மாவுக்கு அநேக நமஸ்காரங்கள். உன் கடிதம் கிடைத்தது. உனக்கு ரொம்பத் தள்ளாமையாக இருப்பதாக எழுதியிருக்கிருய். நான் என்ன செய்யட்டும்? அடுத்த மாதம் விடுமுறை வருகிறது என்ருலும் உடனே நான் புறப்பட்டு வந்துவிட முடியாது. கொஞ்சநாள் இங்கேயே தங்கி பரிட்சை பேப்பர்களையெல்லாம் திருத்திக் கொடுத்துவிட்டுதான் வரமுடியும், கட்டாயம் வருவேன். கவலைப் படாதே. உனக்குக் கடிதம் எழுதிக் கொடுத்து உதவி செய்ய முன்வந்த தபால் ஆபீஸருக்கு என் நன்றியைத் தெரிவிக்கவும். அன்புள்ள பத்மா."

கடிதத்தைப் படித்து முடிப்பதற்கும், பக்கத்து வீட்டு அம்மா சன்னல் வழியாக எட்டிப் பார்க்கவும் சரியாக இருந்தது. கார்டை அவரிடம் கொடுத்துவிட்டு வேலையைக் கவனித்தேன்.

மறுநாள் போக, மறுநாள் அந்தம்மாள் மறுபடியும் ஒரு கார்டுடன் வந்தார். அவர் சொன்னதை நானும் எழுதினேன். இப்படி நான்கைந்து தடவைகள் அவளுக்காக எழுதிக் கொடுத்த பிறகுதான் எனக்கும் கொஞ்சம் துணிச்சல் ஏற்பட்டது. அதன் விளைவு...?

"ஏன் நீங்கமட்டும் இந்தத் தள்ளாத காலத்தில் இங்கேயே இருந்து சிரமப்படவேண்டும்! பெண்ணிடமே போய்விடலாமே..." என்று கேட்டேன்.

"அடிக்கடி மாற்றுகிருர்கள். எனக்கும் இந்த ஊரை விட்டுப்போகப் பிடிக்கவில்லை என்று வைத்துக் கொள்ளேன். அங்கே அவள் தனியாக இருக்கிருள். இங்கே நான் தனியாக இருக்கிறேன். என்ன செய்கிறது? எல்லாம் பிராப்தப்படிதானே நடக்கும்?"

டிடாகர் பேப்பர் மில்ஸ்
குவாலிடி
பேப்பர் & போர்டுகள்

கிடைக்குமிடம் :—

கீதா பேப்பர்
ஏஜென்ஸீஸ்

Phone: 2114

பெரிய செளக்,
திருச்சிராப்பள்ளி-2.

என்று ஏனே விழிகளைத் துடைத்தபடி கூறினுர் அந்த அம்மாள்.

"தனியாக இருப்பானேன்? இன்னும் கலியாணம் செய்து கொடுக்கவில்லையா?" தெரிந்திருந்தும் வேண்டுமென்றே கேட்டு வைத்தேன்.

"அதானில்லை."

"ஏன். இன்னும் வயதாக......" உதட்டைக் கடித்துக்கொண்டேன் அச்சத்துடன்.

"வயதுக்கென்ன......வேண்டியது ஆகிவிட்டது. சொன்னுல் கேட்கிறவள் இல்லை. கலியாணமே வேண்டாமாம்.

"அடப் பாவமே! ஏன் அப்படி?" உள்ளூர உதைப்பாகத்தான் இருந்தது எனக்கு. அல்லிராணியின் வர்க்கத்தைச் சேர்ந்தவளோ!

"அந்த வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிருயப்பா. ஏழையாகப் பிறந்தாலும் பரவாயில்லை. அழகாகப் பிறக்கவேண்டும். பத்மா கொஞ்சம் நிறம் மட்டு. நானும் ஆயிரம் பாடுபட்டு இரண்டு வரன்களைப் பார்த்தேன். இரண்டு பிள்ளைகளுமே 'பெண் கறுப்பு' வேண்டாம் என்று சொல்லி விட்டார்கள். நான் என்ன செய்வேன்? 'இரண்டாந்தாரமாக வாழ்க்கைப் படுகிருயடி' என்று கேட்டேன். அவளுக்குக் கோபம் வந்துவிட்டது. 'எனக்குக் கலியாணமே வேண்டாம்' என்று சொல்லி மேலே படிச்சு, வாத்தியாரம்மா வேலைக்குப் போய்விட்டாள். தன்னைக் காப்பாற்றிக்

கொள்ள ஒரு வழி தேடிக்கொண்டு விட்டாள். 'என்னைப் பற்றிக் கவலைப்படாதே!' என்றும் சொல்லுகிறுள். அதெப்படிக் கவலைப் படாமல் இருக்கமுடியும்? ஆயிரம்தான சம்பாதித்தாலும், சாப்பிட்டாலும் கலியாணம் பண்ணிக்கிற மாதிரி ஆகுமா? பெற்கவர்கள் பெண்களைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்க வேண்டுமென்றுல், அவர்கள் கலியாணம் செய்து கொள்ளத்தான் வேண்டும். சம்பாதித்தால் போதாது சம்பாத்யப அவர்களுடைய வயிற்றைத்தான் காக்கும்? அவர்களைக் காக்க அதனுல் முடியாதே! என்னமோ போ! சாகிற வரையில் கவலைப்பட வைத்து விட்டாள் குழந்தை. எல்லாம் என் தலைவிதி. அவளைக் சொல்லக் கூடாது...'' மூச்சு விடாமல் பேசி முடித்தாள் அந்தம்மாள்.

அவரைப் பார்க்க எனக்கும் பரிதாபமாகவே இருந்தது. இந்தத் தள்ளாத வயதில் இவருக்கு ஏன் இந்தக் கவலை! பத்மாவுக்கு ஏன் இது உறைக்கவில்லை? ஒரு பெண்ணுக்கு இவ்வளவு பிடிவாதம் இருக்கலாமா?

அவர் போன பிறகும் என் மனம் இந்தக் கேள்விகளையே கேட்டுக்கேட்டு வலம் வந்து கொண்டிருந்தது. இந்த வயோதிக உள்ளத்திற்கு நாமே ஏன் ஒரு ஆறுதலளிக்கக்கூடாது?' உடனே இந்தக் கேள்வியும் என்னுள் எழுந்தது. இப்படித் தோன்றியிருக்காவிட்டால் நான் இந்த இருபதாம் நூற்றுண்டின் இளைஞுக இருக்க முடியாதே! புரட்சிகரமான எண்ணம் தோன்றிய உடனேயே உள்ளத்தின் அடித்தளத்தில் துளி கசப்பும் உதிக்கத்தான் செய்தது. 'பெண் கறுப்பு வேண்டாம்' என்று இருவர் சொல்லிவிட்டதாக அந்தம்மாள் கூறியதும் நினைவுக்கு வந்ததின் உணர்வே அந்தக் கசப்பு. கறுப்பாக இருந்தால் இருக்கட்டுமே! பரிகாசம் பண்ண பந்துக்கள் அதிகமில்லை. எனக்கு நண்பர் கூட்டமும் அவ்வளவாகக் கிடையாது. இரண்டொருவர் 'சிவராமனின் மனைவி அட்டைக்கரி' என்று சொல்லத்தான் செய்வார்கள். சொலவிட்டுப் போகட்டுமே!

பட்டணத்து வாலிபர்களும், பணக்கார மைனர்களும் செய்யத் துணியாத காரியத்தை, பட்டிக்காட்டு வாலிபனும், ஏழை ஆபீசருமான நான் தான் செய்கிறேனே! ஏன், செய்யக்கூடாதா?

உடலழகைவிட உள்ளத்தழகு தானே நிலையானது' கசாப்புக் கடைகாரன் ஆட்டின் உடல் வளர்ச்சியை முக்கியமாகக் கருதுவதுபோல், நானும் ஏன் உடலழகை முக்கியமாகக் கருதவேண்டும்! அந்தக் கசாப்புக் கடைகாரன்கூட தான் வாங்கும் ஆட்டின் ஆரோக்கியத்தைத்தான பார்க்கிருன். கறுப்பு — வெளுப்பை பார்ப்பதில்லை. மனிதர்கள் மட்டும் ஏன் பார்க்கவேண்டும்? வெளுப்புக்கு ஓர் கவர்ச்சி இருப்பது உண்மைதான். ஆனுல் அந்தக் கவர்ச்சிக்கே நாம் அடிமைப்பட வேண்டாமே! அழகை ரசிக்கவும், அன்பை அனுபவிக்கவும் ஒவ்வொருவரும் பழகிவிட்டால் எவ்வளவு நன்ருக இருக்கும்?

அழகு என்பது வெள்ளைத் தோலில்தான் இருக்கிறது என்றுல் அது உண்மையாகாது. அது உள்ளத்தின் வெண்மையிலும் இருக்கமுடியும். முன்னதைவிட பின்னதுதான் வாழ்வுக்குத் தேவையானது. உடலின் அழகு நிரந்தரமற்றது. நிரந்தரமான அழகு உள்ளத்தில்தான் இருக்கிறது. அந்த உள்ளத்தின் அழகுக்கு அழிவில்லை. வயோதிகமில்லை. ஏற்றமில்லை. இறக்கமுமில்லை. என்றும் மாருத பாரதத் தாயின் இளமையைப் போன்றது உள்ளத்தின் அழகு. அது சிரஞ்சீவி, தெய்வீகமானது.

இந்த ஈடற்ற உள்ளத்தழகைப் பெற்ற பத்மாவை நான் மணந்தே தீருவேன். அவளுடைய உடலின் நிறத்தைப் பற்றி நான் கவலைப்படவில்லை. எனது வாலிப உள்ளத்தில் முதன் முதலாக உருவெடுத்த புனிதமான உணர்வை நான் அலட்சியப்படுத்தப் போவதில்லை. கண்ணுல் காணுமலேயே ஏற்பட்டுவிட்ட என் காதல் கட்டாயம் உயர்ந்ததுதான். கேவலம் அது உடற் கவர்ச்சியினுல் ஏற்பட்டதல்ல, நான் இன்னமும் என் பத்மாவைப் பார்க்கவில்லையே!

ஒவ்வொரு வாலிபர்களைப்போல் நான் பத்மாவின் அழகைக் கண்டு மோகிக்கவில்லை; அவளுடைய பெற்ருேர்கள் தரப்போகும் சீர் வரிசைகளைக் கண்டு விட்டு அதற்குப் பிறகு அவளை மணக்க சம்மதித்து காதலை உண்டாக்கிக்கொள்ளவில்லை; பத்மாவின் சம்பாத்தியத்திற்காகவும் நான் ஆசைப்படவில்லை கலியாணம் செய்துகொண்டதும் அவளை வேலையை விட்டுவிடச் சொல்லிவிடப்போகிறேன். அவள் கறுப்பு, அழகற்றவள் என்பது தெரிந்திருந்தும் நான் அவளை விரும்புகிறேன் என்றுல், என் காதல் எத்துணை உயர்ந்ததாக இருக்கவேண்டும்? அந்த வயோதிகத் தாயின் உள்ளத்துக்கு ஆறுதல் தருவதற்காகவும், நாமும் ஒரு நல்ல காரியததை நம் ஜீவித காலத்தில் செய்து பெருமை தேடிக்கொள்ளவேண்டும் என்பதற்காகவுமே நான் பத்மாவை மணக்க முடிவுசெய்கிறேன். மற்றபடி நான் தியாகி என்று என்னைச் சொல்லிக் கொள்ளவில்லை. சரிதானே?

★

"பத்மா நாளைக்கு வருவதாக எழுதியிருக்கிருள்...'' என்று சொல்லிக்கொண்டே உள்னே வந்தார் பக்கத்து வீட்டு அம்மாள். எனக்குத் தெரியாத ரகஸ்யத்தை என்னிடம் சொல்லுகிற மனுேபாவத்துடன் "அப்படியா, ரொம்ப சந்தோஷம்...'' என்று நானும் புதிதாகத் தோற்றுவித்துக் கொண்ட உற்சாகத்துடன் கூறினேன்.

"நாளைக்கு குழந்தைக்கு ஒரு பாயாசம் வைத்துக் சமைக்கப்போகிறேன். நீயும் நம்மாத்திலேயே சாப்பிடலாம்...''

"வேட்டகத்துச் சாப்பாடா?'' என்று உள்ளம் துள்ளிக் குதித்தது. அதை வெளிக் காட்டிக்கொள்ளாமல் சும்மா தலையை அசைத்து வைத்தேன். அவர் சென்றுவிட்டார்.

இரவு பூராவும் எனக்குத் தூக்கமே வரவில்லை. உலகில் எந்த வாலிபர்களுமே செய்யாத, செய்யத் துணியாத, செய்ய முடியாத ஓர் அரிய செயலை செய்யப் போகிறப் பெருமிதம் என் உடலெங்கும் வியாபித்து நின்றது.

பத்மா வந்ததும் அவளிடத்தில் ரொம்ப நாகரீகமாகப் பழகவேண்டும். பிறகுதான் அவளிடம் என் விருப்பத்தையும் முடிவான தீர்மானத்தையும் சொல்லவேண்டும். சொல்லி அவளை ஆச்சரியக் கடலில் மூழ்க அடிக்கவேண்டும். உடலின் நிறம் கறுப்பு என்பதற்காக வெறுத்த ஆண்களை மட்டுமல்லாது ஆண் இனத்தின்மீதே அல்லவா அவள் வெறுப்புக் கொண்டிருக்கிருள்! அந்த வெறுப்பை மிக சாமர்த்தியமாக நடந்துகொள்வதன் மூலம் அவளுடைய உள்ளத்தினின்றும் அகற்றவேண்டும். பிறகு விஷயத்தை எடுத்து பவ்யமாகச் சொல்லவேண்டும். அதைச் செயலாக்கிக் காண்பித்த பின்புதான் அவளுக்கு ஆண் இனத்தின் மீதுள்ள வெறுப்பு அகலும். அதற்காக நானும் பெருமைப் படலாம்.

தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டுகொண்டிருக்கப் பிடிக்கவில்லை. எழுந்திருந்து காதல் நவீனங்கள் இரண்டை எடுத்துக்கொண்டு 'பெட் ரூம்' விளக்கினருகில் போய் உட்கார்ந்தேன். அவைகளில் காதலன் தன் காதலைத் தன் காதலியிடம் வெளியிடுகிற கட்டங்களாகப் பார்த்து எடுத்துப் படித்தேன், எதற்கும் மறு நாளைக்கு உதவக்கூடும என்று பத்மாவிடம் எப்படிப் பழகவேண்டும், எப்படிப் பேசவேண்டும் என்பதற்கெல்லாம் ஒரு திட்டம் உள்ளூர வகுத்துக்கொண்டேன்.

திருமண மார்க்கெட்டில் பேரம் பேசித் தோற்ற வருடங்கள், பிறகு படிப்பதைத் தொடரவும், பயிற்சி பெறவும், பணிபுரியத் தொடங்கவுமாக வருடங்களைக் கணக்கிட்டுக் கூட்டினேன். பத்மாவுக்கு இருபத்தைந்து வயது ஆகியிருக்கவேண்டும். பரவாயில்லை. எனக்கு இருபத்தொன்பது முடியப்போகிறதே!

★

மறுநாள் காலை. பத்து மணி சுமாருக்கு வாசலில் ஓர் இரட்டை மாட்டு வண்டி வந்து நின்றது, நான் பரக்கப்பரக்க கையகலக் கண்ணுடியில் என் உடல் முக வசீகரத்தை எடைபோட்டுப் பார்த்துக்கொண்டேன். என்னைக் கவரும் உடல் வனப்பை பத்மா பெற்றிருக்காவிட்டாலும், அவளுடைய உள்ளத்தைக் கவருகிற உடல் வசீகரத்தை நான் பெற்றிருப்பது எனக்குப் பெருமையாகத்தானிருந்தது. இதனுல் அவள் மனத்தில் நான் விரும்புகிற மாறுதலை எளிதாக உண்டாக்க முடியாதா?

கண்ணுடியை ஆணியில் மாட்டிவிட்டு நான் சன்னல் வழியாகப் பக்கத்து வீட்டுப் பக்கம் பார்வையை செலுத்தியபோது, அங்கே வண்டியிலிருந்து ஒரு நடுத்தர வயதுடைய பெண்மணி, தான் கீழே இறங்கி, வண்டிக்காரனுக்குச் சில்லறை கொடுத்துக்கொண்டிருந்தார். உடலின் நிறத்தைப் பெற்றிருக்கவேண்டிய கேசம், பெற்று இழந்துவிட்டதைக் காட்டிக்கொண்டிருந்தது. ஆம் இரண்டு விரற்கடை அளவுக்கு முன்தலையில் நரை. வதங்கிய முகம். சரிந்த உடல், மிடுக்கில்லாத நடை. அந்தம்மாள் வீட்டுக்குள்ளே போய்விட்டார்.

கண்ணுடியில் என் அழகை நான் ரசித்தபோது, பத்மா வண்டியிலிருந்து இறங்கி உள்ளே போயிருக்கவேண்டும். இந்த அம்மாள் அவளுக்கு வேண்டியவர்களாகவோ, உடன் பணி புரிபவராகவோ, இருக்கவேண்டும் என்பதை உணர்ந்துகொண்டேன். இன்னும் சிறிது நேரத்தில் அங்கு சாப்பிடப் போகும்போது பத்மாவைப் பார்த்தால் போகிறது என்று மனத்தைத் தேற்றிக்கொண்டேன், இருந்தாலும் சீக்கிரத்தில் பார்த்திருக்கக்கூடிய வாய்ப்பை இழந்துவிட்ட உள்ளம் வேதனைப்படத்தான் செய்தது.

அரை மணி நேரம் கூட சென்றிருக்காது.

பக்கத்து வீட்டிலிருந்து பெரிய அம்மாள் வந்துவிட்டார்.

"வருகிருயா அப்பா? இலை போட்டாகி விட்டது!" என்று சொல்லிக்கொண்டே. "கதவைப் பூட்டிக்கொண்டு வருகிறேன். நீங்க ... போங்கள் ...." என்று கூறி எழுந்தேன்.

கதவைப் பூட்டிக் கொண்டு பக்கத்து வீட்டுக்குள் நுழைந்தேன்.

"வாப்பா!" என்று கூறி இரேழி வரையில் வந்து முகமலர்ச்சியுடன் அழைத்தார்.

கூடத்தில் நின்று கொண்டிருந்த அம்மாள் – அதுதான் நான் சற்றுமுன்பு வண்டிக் கருகில் பார்த்தது, என்னைப் பார்த்து விட்டு,

"வாருங்கள்! அம்மா சொன்னுள். நீங்கள்தான் கடிதமெல்லாம் எழுதிக் கொடுப்பதாக. உங்களுடைய உதவிக்கு ரொம்ப நன்றி! இந்த லீவு முடிந்தவுடன் நான் போகும்போது அம்மாவையும அழைத்துக் கொண்டு போகப்போகிறேன். இனிமேல் அவளைப் தனியாக இங்கே விட்டுவைத்திருந்தால் உங்களுக்கெல்லாம்தான் வீண் தொந்திரவாக இருக்கும்.' என்று கூறினுள் நன்றி மிகுந்த குரலில்.

நான் வாயடைத்து நின்றேன் குழப்ப நிலையில்.

"வாப்பா! வாயேன் பத்மா!" என்று கூறி உள்ளே போனுள் பெரிய அம்மாள் - நான்......? என் மனம்......? என் நிலை......?

வணங்கி வழிபடவேண்டிய வயதினளை, வாழ்க்கைத் துணையாக்கிக்கொள்ளத் தீர்மானம் செய்தது எவ்வளவு மன்னிக்க முடியாத குற்றம். இல்லை, இது உன் குற்றமல்ல. உன் வயதின் குற்றம் என்று யாரோ கூறுவது போலிருந்தது எனக்கு. என்னையும் அறியாமல் என்கரம் அந்த அன்னையின் உருவத்தை நோக்கிக் குவிந்து. உயர்ந்தது! என் இதயத்தில் துளிர்விட்டிருந்த காதல்...? உடனேயே கருகிப்போய் அதுவே தாய்ப்பாசமாகப் பொங்கிப் பெருகியது. பலவகைப் பாசத்திற்குப் பொதுவான ஒருபெயர் 'காதல்' அல்லவா?

# சகோதர பாசம்

★

செல்லம்

கெட்டி மேளம்! கெட்டி மேளம் என்று நான்கு திசைகளிலிருந்தும் குரல் கிளம்பியது. நாதசுர சக்கிரவர்த்தி ராஜரத்னமும், கூட வந்திருந்த இரு ஜதை தவுல்காரர்களும் அண்டம் அதிர முழக்கினர். திருமங்கல்யதாரணமும் ஆகியது. அதைத் தொடர்ந்து 'ஆனந்த மானந்தம்' என்று தன் வித்தையின் முழுமையும் பொழிந்து தள்ளினர் ராஜரத்னம். எல்லோரும் அதை ரசித்துத் தலையசைத்து, மயங்கிக் கிடந்தனர். ஆனால் என் மனம் மட்டும் அதில் லயிக்கவில்லை.

இன்று நேற்றுப் பழக்கமல்ல. மூன்று தலைமுறைகளாக நாங்கள் அவர்கள் குடும்ப சோதிடர்கள். நான் பதினெட்டு வயதில் அவர்கள் வீட்டில் சோதிடம் சொல்லப் புகுந்தேன். 'பால சோதிட' விருத்த வைத்ய' என்றபடி என் வாக்கு அவர்கள் குடும்பத்தில் நூற்றுக்கு நூறு பலித்து வந்தது. அப்படி இருந்த அந்தக் குடும்பத்தில், இன்று என் அனுமதி இல்லாமலேயே இந்தக் கல்யாணம் நடக்கிறது. இதை நினைக்கும் போது என் மனம் கசந்தது. வீட்டிற்குச் செல்ல எழுந்துவிட்டேன்.

இதைக் கண்ட ராஜமய்யர் கற்கண்டு சர்க்கரைத் தட்டை எடுத்துக்கொண்டு என்முன் வந்தார். தங்கள் வாயால் குழந்தையை ஆசீர்வாதம் செய்துவிட்டுத் தான் போக வேண்டும் என்று மன்றடினர்.

என்முன் நின்ற தம்பதிகளை மனப்பூர்வமாக ஆசி கூறினேன். கோமளத்திற்கு வயது ஏழு. ஆராவமுதனுக்கு வயது பன்னிரண்டு. இருவரும் கல்யாண கோலத்தில் நின்ற காக்ஷி சாரங்கபாணியும், கோமளவல்லியுமே காக்ஷி தருவது போல் இருந்தது.

ராஜமய்யர் குடும்பம் செய்ய ஆரம்பித்துப் பல வருடங்கள் ஆகியும், அவருக்ுச் சந்ததி ஏற்படவில்லை. என் தந்தை எத்தனையோ விதமான பரிஹாரங்கள் செய்து வைத்தும் பலனில்லை. நான் சிறுவனாக இருந்தபோதிலும், நான் முன்நின்று ஓர் சாந்தி செய்து வைத்தேன். எல்லோரும் கனபாடியால் சாதிக்க முடியாததை, இவன் சாதித்துவிடப் போகிறான் என்று பரிகசித்தனர். 'மந்திரத்தால் மாங்காயும், தந்திரத்தால் தேங்காயும்' விழுமா? என்றார்கள். நான் உபாஸிக்கும் தெய்வத் திருவருளால் கோமளவல்லியும், சில வருஷத்தில் பாலச்சந்திரனும் பிறந்தார்கள்.

ஆனால் அருமையாகப் பிறந்த கோமளத்தின் ஜாதகத்தில் புத்ரபாவம் நன்றாக அமையவில்லையே, இதை எண்ணும்போது என் மனம் மிக்க சங்கடப்பட்டது. ராஜமய்யர் தாயார் படுத்த படுக்கையராக இருந்தாள். தான் கண் மூடுமுன் அன்புப் பேத்தியை மணக்கோலமுடன் காண விரும்பினாள். ஆனால் கோமளம் ஜாதகத்தின் தோஷத்தைப் போக்கும்படியான பிள்ளை ஜாதகம் தேவைப்பட்டது போல் கிடைக்கவில்லை.

ஒரு நாள் திடீரென ராஜமய்யர் தான் கோவிலில் புஷ்பக் குறி பார்த்து பெண்ணுக்கு கல்யாணம் நிச்சயித்துவிட்டதாகவும் நான் தடை சொல்லாமல் விவாஹ முகூர்த்தம் வைத்துத் தரவேணும் என்றும் வேண்டிக் கொண்டார். எனக்கு அது பெரிய அதிர்ச்சியாக இருந்தது. 'விதியை மதியால் வெல்ல முடியுமா' என்று மனதைத் திடப்படுத்திக்கொண்டு நான் பார்த்துக் கொடுத்தேன்.

காலதேவன் காத்திருப்பானா? அவன் ஓடி. நாளை, வாரமாக்கி, மாதங்கள், வருஷமாகி நம் ஆயுளை ஓடச் செய்து வேடிக்கைப் பார்க்கிறானா? கோமளம் புக்ககம் சென்று பத்தாண்டுகள் பறந்தோடிவிட்டன.

ராஜமய்யரைப் பார்க்கும் போது கோமளம் ஸௌக்யமா? என்று சாதாரணமாகக் கேட்டால்கூட அவர் முகம் சுருங்கிப்போய்விடும்.

ஒரு நாள் அவர் தன் பெண் மாப்பிள்ளை ஜாதகமுடன் என்னிடம் வந்தார். வழக்கம்போல் மறுக்கக் கூடாது என்ற பீடிகையுடன் என் கையில் ஜாதகத்தைக் கொடுத்தார். பெண்ணுக்குக் கிருத்திகை. பிள்ளை உத்திரம், இது கடிரஜ்ஜு அல்லவா? கடிரஜ்ஜுவில் கல்யாணம் செய்தால் புத்ரன் கிடையாது என்றல்லவா சோதிட சாஸ்திரம் சொல்லுகிறது, நான் சூள்கொட்டினேன். "அதிர்ந்து அடித்தவர்களுக்கு ஐயனாருமில்லை. பிடாரியுமில்லை." நாம் சாஸ்திரத்தை நம்புகிறவர்களாச்சே? என்று அங்கலாய்ப்புடன் கூறினேன்,

அவர் தளர்ந்து போய் "ஸ்வாமி ஏதோ ஒரு ஆவேசத்தில் செய்துவிட்டேன். நடந்ததைப்பற்றி இனி நினைத்துப் பயனில்லை. குழந்தை கணவன் வீட்டில் குழந்தை இல்லை என்பதற்காகக் கேட்கும் பேச்சும் ஏச்சும் கணக்கு வழக்கில்லை. உங்கள் ராசிக்கையால் ஏதாவது பரிகாரம் செய்துபாருங்கள் என்று கூறி என் கைகளைப் பிடித்துக்கொண்டு கதறிவிட்டார்,

கோமளத்திற்குத் தற்சமயம் வயது இருபத்தைந்து தான். அதற்குள் இப்படி ஓர் முடிவு செய்யலாமா! இந்தக் காலப் பெண்களுக்கு இந்த வயதில் கல்யாணம்கூட ஆவதில்லை. என நினைத்து மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டேன்.

விளையாட்டுப்போல் மேலும் ஐந்தாண்டுகள் கடந்து சென்றுவிட்டன. கோமளத்தின் வாழ்வு மலரவில்லை. அவள் புருஷன் வீட்டில் பிள்ளைக்கு மறுவிவா

கமே செய்ய உத்தேசித்துவிட்டார்களாம். இளையவன் பாலசந்திரனுக்கு விவாகமாகி ஸ்வர்ண விக்ரஹம் போல் ஆண் பிறந்து அடுத்தநாள் அப்தபூர்த்தியும் வந்துவிட்டது.

தளதளவென்று மின்னிக்கொண்டு அழகிய சிற்பம் போல் இருக்கும் கோமளம் முகம் வாடி உலர்ந்துபோய் விட்டாள். மாப்பிள்ளையையும் அவளையும் மறு நாள் ஊருக்குப் போகுமுன் என் வீட்டுக்கு வந்துபோகும்படி கேட்டுக்கொண்டேன். வீட்டில் வந்தும் எனக்கு இரவெல்லாம் தூக்கமே வரவில்லை.

மறுநாள் பகலில் கோமளமும் பாலச்சந்திரனும் வந்தார்கள். உன் கணவர் வரவில்லையா? என்றேன். அவர் உடனே போய்விட்டார் என்றான் பாலன்.

நான் சோதிடத்தில் உள்ள சாந்திகளை விவரிக்க ஆரம்பித்தேன், கோமளம் முகம் இருண்டுவிட்டது. மாமா! இனி ஏதாவது புதிய சுவடி கிடைத்தால் தான் உண்டு. அத்தனைவிதமான சாந்திகளும் ஜபதபங்களும் செய்தாகிவிட்டது. எனக்கு வாழ்க்கையில் இனி குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கையே போய்விட்டது. என்னால் அவர்கள் கூறும் மலடி மலடி என்ற சொல்லைத் தாங்கிக்கொள்ளும் சக்தியும் போய்விட்டது என்று கதறிவிட்டாள்.

என் மனம் பாகாய் உருகியது. தன் சகோதரியின் கஷ்டம் தாளாது பாலச்சந்திரனும் தவித்துப்போய் விட்டான். எப்படியாவது கோமளம் ஓர் தாயாக ஆகிவிட வேண்டும் என்று சங்கல்பம் செய்துகொண்டேன், குழந்தை! நீ இப்படி மனம் இடிந்து போகலாமா? சோதிடம் பொய்யென்றால் அதைக் கற்று அந்தச் சுவடிகளை எங்கள் உயிர் போல் பாதுகாத்து வருவோமா?'காலற்றதும் நூல் அற்றதும்' சேர்ந்தது என்றோர் பழமொழி உண்டு. அது உன் விஷயத்தில் பலித்துவிட்டது. ஆயினும் நான் இதற்கு ஓர் வழி செய்யாமல் இருக்கப் போவதில்லை. என்று அவளைச் சமாதானப்படுத்தி வைத்தேன்.

தன் சகோதரியின் துக்கம் தாளாமல் பாலசந்திரனும் என்னிடம், என்னால் கோமளத்திற்கு உதவ முடியுமானால் அதைச் சந்தோஷமுடன் செய்து முடிப்பேன். உலகில் எவ்வளவோ பேர்கள் குழந்தை இல்லாமல் இருக்கவில்லையா? அதற்காக அவர்கள் வீட்டில் இப்படிக் கொடுமை பேசினால் இவள் எப்படி உயிருடன் இருக்க முடியும்? நம் பையன் முரளி பிறந்ததும் சகோதர பாவம் சரியில்லை என்றீர்கள். இன்றுதான் அவன் பிறந்த நாள் நடந்தது. அதற்குள் அவன் தாய் ஸ்நானம் செய்யவில்லை. கடவுள் ஏன் இப்படிச் சோதிக்க வேணும். அம்மா ரொம்பவும் கவலைப்படுகிறாள் என்று கூறினான்.

இதைக் கேட்டதும் என் மனதில் மின்னல் போல் ஓர் எண்ணம் பளிச்சிட்டது. நான் பேச ஆரம்பிக்கும் முன் கோமளமே மறுபடி தன் சிரமங்களை விவரித்தாள். தம்பி சொல்வது போல் எவ்வளவோ பேர் மக்களின்றி இருக்கவில்லையா! யார் வீட்டிலாவது குழந்தை பிறந்த சேதி, அல்லது அக்ஷராப்யாசம், கல்யாணம் ஏதாவது அவர்கள் காதில் விழுந்ததோ இல்லையோ? என்னை உலுக்கிவிடுகிறார்கள். பண்டம் பாதியானால் விலைக்கு வாங்கிவிடலாம். இதற்கு நான் என்ன செய்ய முடியும். இன்று அந்தக் குழந்தையைக் கண் குளிரக் காணச் சகிக்காமல்தான் உடனே அவர் புறப்பட்டுப் போய்விட்டார். நான் வருந்துவதெல்லாம் குழந்தைக்காக அல்ல எங்கே வேறு கல்யாணம் செய்து என் வாழ்க்கை அஸ்தமித்துவிடுமோ என்பதற்காகத்தான், என்று தன் முகத்தை மூடிக்கொண்டு கதறிவிட்டாள். எங்கள் இருவராலும் அவளைச் சமாதானப்படுத்தவே முடியவில்லை.

பாலசந்திரன் தடுமாறிப் போனான். ஐயோ! இன்று தான் மனம் திறந்து கோமளம் தன் கஷ்டத்தைச் சொல்கிறாள். இவளின் துன்பம் நீங்கி இன்பம் அடைய வேண்டும. அதற்காக நான் எத்தகைய காரியத்தையும் செய்ய ஸித்தமாக இருக்கிறேன், என்றான்.

இந்தப் பேச்சுகளைக் கேட்டு வரும்போதே என் மனதில் ஓர் திட்டம் உருவாகியது. பாலசந்திரனைத் தனிமையில் அழைத்து என் திட்டத்தை விவாதித்துச் சொன்னேன். அவன் அதை மிக்க ஆர்வமுடன் ஏற்றுக்கொண்டான். ஆனால் தன் மனைவியும் ஆக்ஷேபிக்காமல் இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமே என்றான். நான் அதற்கு முரளியின் சகோதர பாவம் சரியில்லை என்பதை அவன் மனைவியிடம் எடுத்துக் கூறினால் அவள் நிச்சயம் சம்மதிப்பாள் என்றேன். கோமளம் ஒன்றும் புரியாமல் மிரள மிரள விழித்தாள். பாலசந்திரன் உடனே செயலில் இறங்கிவிட்டான். கோமளத்தின் கணவனுக்கு கோமளம் ஸ்நானம் செய்யாமலிருப்பதாக மஞ்சள் தடவிய கடிதம் பறந்தது. மாதங்களும் பறந்து சென்றன. மனதின் தெம்பாலும் நிம்மதியாலும் கோமளத்தின் அழகு வதனம் பளபளவென்று பிரகாசித்தது, வளையல் காப்பு வைபவத்தில் எல்லோரும் எனக்கு ஏகப்பட்ட உபசாரம் செய்தார்கள். கோமளத்தின் மாமியார் எல்லாம் என் கைராசியின் பலனென்று ஓர் ஆயிரம் தடவை கூறிமுடித்தாள்.

பாலசந்திரன் மனைவிக்கு ஹ்ருதயநோய் யென்று படுக்கைலேயே வைத்துவிட்டோம்.

கோமளத்தை பிரஸவத்திற்கும் பாலசந்திரன் மனைவியை வைத்தியத்திற்கும் மதராஸ் அழைத்துச் சென்றோம். ஓர் பெண்கள் ஆஸ்பத்திரியில் இருவரையும் கொண்டுவைத்தோம். அங்குள்ள டாக்டர் அம்மாளிடம் கோமளத்தின் கஷ்டங்களை விவரித்ததும் அவர்கள் நான் சொன்னபடி நடக்க ஆரம்பித்தார்கள்.

ஓர் நல்ல நாளில் பாலசந்திரன் மனைவி பூரண சந்திரன்போல் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். உடனே கோமளம் பக்கத்தில் அதைப் படுக்க வைத்து பாலசந்திரன் மனைவியை காரில் வைத்து வீட்டுக்கு அனுப்பி வைத்தோம். எல்லாம் திட்டப்படி நடந்தன. இன்று கோமளத்தின் குழந்தைக்கு அப்தபூர்த்தி வெகு விமரிசையாக நடக்கிறது. மனையில் அந்த தம்பதிகளையும் குழந்தையையும் பார்க்கும்போது என் மனம் பூரித்து பொங்கியது.

மனையைவிட்டு எழுந்ததும் எல்லாம் தங்கள் ஆசீர்வாதம் என்று கூறித் தலை வணங்கினாள் கோமளம். நான், அது இல்லையம்மா? எல்லாம் உன் சகோதர பாசம்'' என்று கூறினனேன். எந்தப் பாசத்தையும்விட ரத்த பாசம் பெரியதல்லவா?

# ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

பி. ராமச்சந்திரன்

*

அடிமைப்பட்டுக் கிடந்த நம் பாரத நாடு விடுதலை பெற்றுச் சுதந்திர ஒளி பெற, அண்ணல் காந்தி செய்த பெரும் தொண்டு,பல வழிகளிலும் பிளவுபட்டுக் கிடந்த நம் சக்திகளை, அன்பு வழியில் அரவணைத்து, ஒன்று சேர்த்து, அஹிம்சாமுறையில் நம் எண்ணத்தை வெளியிட்டு, சாத்வீக முறையில் போராடி வெற்றி பெறச்செய்தது.

நாடு சுதந்திரம் பெற்றது. நல்வாழ்வை நோக்கி நாம் பீடு நடை போடுகிறோம்.

விடுதலைப்பெற நமக்குச் சக்தியைத் தந்தது, இமய முதல் குமரி வரை ஒரே முகமாக ஒன்றுபட்டு ஒரே வழி யில், சென்ற ஒற்றுமையின் உயர்வே யாகும்,

பெற்ற சுதந்திரம் நின்று நிலைக்க இன்று வேண்டு வதும் அந்த ஒற்றுமை உணர்வே. நம்மில் பிரிவு கண் டால் பிரிதொரு சக்தியில்லை நல் வாழ் வளிக்க.

எனவே ஒருமைப்பாட்டைக் குலைக்கும் எந்த சக்தி யையும் முளையிலேயே கிள்ளிவிட வேண்டும்.

இந்த நேரத்தில் காலஞ்சென்ற தமிழ்ப்பேராசிரியர் திரு. ரா. பி. சேதுப் பிள்ளை அவர்களின் வாக்கியங்களை நினைவுக்குக்கொண்டுவருதல் நலமென எண்ணுகிறேன்

''பழம் பெருமை வாய்ந்தது பாரதநாடு. வடக்கே இமயமலை முதல் தெற்கே குமரிமுனை வரையுள்ள இப் பரந்த நாட்டிலே மொழிகள் பல உண்டு; மதங்கள் பல உண்டு. ஆயினும் பாரதப் பண்பாடு ஒன்றே. இத்த கைய பண்பாட்டின் ஒருமைப்பாட்டை உணர்த்துகின் றது தமிழிலக்கியம். பாரத நாட்டிலுள்ள வடமொழிக் கும், தென் மொழிக்கும் எந்தநாளும் பிணக்கமில்லை. இரு மொழிகளும் இறைவன் அருளால் தோன்றின. ஆன்றோர் சேவையால் சிறந்தன; இம்மை இன்பமும் மறுமை யின்பமும் தருவன. ஆதலால் ''இரு மொழியும் நிகர் என்னும் இதற்கு ஐயமுள தேயோ'' என்று பாடி னர் வடநூற் கடலையும், தென்மொழிக் கடலையும் நிலை கண்டு உணர்ந்த சிவஞான முனிவர்''.

வடநாட்டிற்கும் தென்னாட்டிற்கும் உள்ள ஒற்று மையை விளக்க முன் வந்த பேராசிரியர் ''வட நாட் டிலும் தென்னாட்டிலும் மதுரை என்னும் பெயருடைய திருநகரம் உண்டு. வட மதுரையில் அவதரித்தார் கண்ணபிரான். தென் மதுரையில் புகழ்பெற்றார் திரு வள்ளுவர். கண்ணன் அருளிய கீதையும், வள்ளுவர் இயற்றிய குறளும், உலகம் போற்றும் உயரிய ஞான நூல்கள்'' என்று குறிப்பிடுகிறார். பேராசிரியரின் அறி வுரை இப்பொழுது நமக்கு மிகவும் பெருந்துணைசெய்ய வல்லது.

வட எல்லையினை, இமயத்தைப் பலமிக்க காவல் கோட்டையாக எண்ணியிருந்த காலம் மாறி,அண்டை யிலிருந்து, நண்பனாக நடித்து நம் நாட்டின் மீது படை யெடுத்து ஆக்கிரமித்தது சீனா. ஓராண்டுக்கு முன் ஏற்பட்ட இந்தப் படையெடுப்பு மக்களை விழிப்புறச் செய்தது. நாட்டைப் பகைவனிடமிருந்து மீட்க வேண்டும் என்ற கடமை உணர்ச்சி மேலோங்கி நின் றது. சுதந்திர விடுதலை இயக்கத்தின் வேகத்தை யும், சக்தியையும் ஒருமிக்கக் காணமுடிந்தது.

''எண்ணிய எண்ணியாங்கு எய்துவ-எண்ணியர்
திண்ணியர் ஆகப் பெறின்''

என்ற தமிழ் மறை வாக்கிற்கிணங்க மக்களின் ஒரு மித்த பலம், பகைவனை நிலை குலையச் செய்தது. நம் கடமை இத்துடன் நின்றுவிடவில்லை. எப்பொழுதும் கவலையற்றிருந்த நமக்கு, எல்லைப்போர் என்ற நிரந்தர மான தொல்லையாக ஏற்பட்டுள்ளதோ, இனி ஒற்றுமை உணர்ச்சியை உரமிட்டு வளர்க்க இதைவிட நல்ல தருணம் வேறு கிடையாது.

நாட்டின் வளர்ச்சிக்கும், பகைவனின் இன்னல் களிலிருந்து விடுபடவும் ஒருமைப்பாடு இன்றியமையா தது. அதற்குக்குந்தகம் விளையுமானால் அதனை வேரு டன் களையவேண்டும். ஒருமைப்பாட்டிற்கு ஊறு விளை விக்கும் சக்திகளை அடியோடு ஒழிக்க வேண்டும். குழந் தைக்கென்று பாடிய அமரகவி பாரதி கூறுகின்றார்

''பாதகஞ் செய்பவரைக் கண்டால்—நாம்
பயம் கொள்ள லாகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா—அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா.
... ... ... ... ... ... ... ... ... ..
சேதமில்லாத ஹிந்து ஸ்தானம்—இதைத்
தெய்வ மென்று கும்பிடடி பாப்பா''

''பல்லாற்றானும் ஒருமையுற்று விளங்கும் பாரதப் பண்பாட்டை ஒல்லும் வகையில் பேணி வளர்த்தல் நல் லறிஞர் கடனாகும்.



# அறிமுகம்

★

P. S. R. ராவ்

சில வருடங்களுக்கு முன் நடந்த ஓர் சம்பவம். என் நினைவை விட்டு நீங்கவே இல்லை. அகலாத அச்சம்பவம் என் உள்ளத்தில் அடங்கிக் கிடந்து என்னைப் பெருமிதமடையச் செய்கின்றது. அதை யாரிடமாவது எடுத்துக் கூறுவதில் ஆனந்தம் பெருகுகிறது. எனவே அனைவரும் அறியக் கூறுவதைப் பிரமாதமென்று கருதுகிறேன்.

சக்தி வாய்ந்த மாரியம்மன், அவள் எழுந்தருளியுள்ளது பழங் கோயில்.

அதைக் கண்ணுற்ற ஓர் உள்ளத்தில் சிந்தனை உருவாகியது. அம்மனின் அனுக்கிரகம் பெறும் அநேகர் புதுப்புது வீடுகட்டி மகிழும்போது, அம்மனுக்கு மட்டும் அதே பழங் கோயில்தானா? அதைப் புதுப்பிக்க வேண்டும். அனைவரும் அன்னை பராசக்தியை ஆனந்தமாகத் தரிசித்து மகிழவேண்டும், அதற்கு வசதிசெய்ய வேண்டும் என்று எண்ணிற்று. எழுந்தது திட்டம். முடிந்தது புது அமைப்பு.

அன்று கும்பாபிஷேகம். ஊரே விழாக்கோலம் பூண்டிருக்கிறது. பூசைகள் நடந்தன.

மாலை, மண்டபத்தில் அருள்நெறிச் சொற்பொழிவுகள்.

மாலை மணி நாலு. மண்டபத்தை நோக்கி, பெரும் செல்வந்தர்கள், பிரமுகர்கள், அறிஞர்கள் வரிசை வரிசையாக வந்துகொண்டிருக்கிறார்கள்.

மண்டபத்தின் வாசலில் ஒருவர் பூரிப்புடன் நின்றுகொண்டிருக்கிறார். சிரித்த முகம், நெற்றியில் திருநீறு. எளிமையான உடை. அமைதியாக. அகமகிழ வருபவர்கள் ஒவ்வொருவரையும் வரவேற்று உபசரித்துக் கொண்டிருக்கிறார்.

இக்காட்சியைக் கண்ட நான் பின் தங்கி நின்றேன். நெரிசலில் நானும் எப்படி நுழைவது என்ற பிரமிப்பு.

அருகில் நின்றவரைப் பார்த்து, "அதோ அங்கு அனைவரையும் வரவேற்றுக்கொண்டிருக்கும் அவர் யார்?" என்று வினவினேன்.

"அவர்தான் இந்தக் கோயிலைக் கட்டியவர். விழா நடத்துபவர். இந்தப் பக்கத்திலேயே ஒரு பெரும் பணக்காரர். மில் அதிபர். பலபாலிடெக்னிக் கலைக் கல்லூரிகள் நடத்திவருகிறார். தமிழில் பாண்டித்யம் உடையவர். இலக்கியப்பித்தர். அரசியல் முக்கியஸ்தர்." என்று அடுக்கிக்கொண்டே போனார். அதைக் கேட்டுக்கொண்டே அவரைப் பார்க்க "அவ்வளவு பெரிய மனிதரா இவ்வளவு எளிமையாகத் தோன்றுகிறார்!" என்று வியப்புமேலிட மெல்ல முன் நகர்ந்தேன்.

முன் சென்ற என்னை அவர் ஒரு விநாடி முறைத்துப் பார்த்தார். என் மனதில் ஓர் அச்சம் தோன்ற அடக்கமாக நின்றேன்.

"ராமு" என்று அவர் அழைத்த குரல் கேட்டு, யாரைக் கூப்பிடுகிறார் என்று பின்பக்கம் திரும்பிப் பார்த்தேன்.

"உன்னைத்தான்......இங்கே வா" என்று என்னைக் கைகாட்டி அழைத்தார்.

ஆச்சர்யத்துடன் அருகில் சென்றேன்.

"ராமு! ஏன் அங்கேயே நிற்கிறாய்? என்னைத் தெரியவில்லையா?" என்று கூறிக்கொண்டே எனது இரு கைகளைப் பற்றிக்கொண்டு என்னைப் பார்த்தார். ஒரு விநாடி அவர் முகத்தையே உற்றுப் பார்த்த பிறகு நான் புரிந்துகொண்டேன்,

"யார்! நீங்களா?" என்றேன்.

"அடையாளம் புரியவில்லையா? ஆமாம் ஆண்டு பலவாய் விட்டதல்லவா! அதனால் மறந்திருப்பாய் நீ" என்றார்.

என் கண்கள் கலங்கின. பேசுவது ஒன்றும் அறியாமல் ஊமையானேன். நிலைமையைப் புரிந்துகொண்ட அவர் "சரி உள்ளே வா. கூட்டம் முடிந்ததும் போய் விடாதே. உன்னுடன் அதிகம் பேச வேண்டும்" என்று உள்ளே அனுப்பினார்.

அறிஞர்கள் அழகாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவை ஒன்றிலும் என் சிந்தை செல்லவில்லை.

கடந்த காலத்தை நோக்கிப் பறந்தது. இருபது ஆண்டுகளுக்கு முன் நானும் அவரும் ஒன்றாகப் பள்ளியில் படித்த நாட்கள் கவனத்திற்கு வந்தன. அன்று நடந்த சம்பவங்கள் அடுக்கடுக்காய் நினைவிற்கு வந்தன. இன்று அவர் உள்ள நிலையை எண்ணிப் பார்த்தேன். இந்த நிலையிலும் என்னை மறக்காமல் இருக்கும் அந்த அன்பு உள்ளத்தை, பழைய நட்பை மறக்காத பண்பை பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

ஆனந்தப் பெருக்கால் என் கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

கூட்டம் முடிந்தது. கூறியபடி அவர் என்னை அழைத்துப் போக வந்தார்.

"ராமு" என்றார்.

"நீங்கள் மகாலிங்கம்......" என்று நான் சொல்ல வந்ததைச் சொல்லுமுன்,

"நீ என்றும் போலவே என்னுடன் பேசு. நான் பழைய மகாலிங்கம்தான், உன்னைப் பொறுத்தவரை" என்று கூறிக்கொண்டு முன் செல்ல நான் பின் தொடர்ந்தேன்.

என்னையும் அவரையும் சுமந்த கார் அவர் மாளிகையை நோக்கிப் பறந்தது.

அம்மன் கோயிலுக்குத் திருப்பணி செய்து அழகூட்டிய அன்பர் அகக்கோயிலிலே அடங்கிக் கிடந்த பழைய நட்புக்கும் புது மெருகேற்றிப் புதுப்பித்து விட்டார்.

# பரிபாஷை

★

"மாறன்"

பிரயாணி 1
பிரயாணி 2
வண்டிக்காரர்

(பஸ் வருகிறது)

பி 1: ஹோல்டான் ஹோல்டான்.

பி 2; ஏன் கத்தரீக பஸ்ஸிலே இடமிருந்தாத்தான் நிறுத்துவானே.

பி 1; சேச்சே நடந்து போனாலும் இதுக்குள்ளே போயிருக்கலாமே.

பி 2: நான் தான் அப்பவே சொன்னேனே இந்த டயத்துக்குப் பஸ்ஸிலே இடம் கிடைக்காதுன்னு.

பி 1: அங்கே அவசரமாப் போகனுமேங்கறதாலே பஸ்ஸிலே போகலாம்னு நினைச்சேன்.

பி 2: அவசரத்துக்கெல்லாம் பஸ் பிரயாணம் சரிப் படாதே அண்ணாச்சி. நடராஜா சர்வீஸ் தான் நம்ம அவசரத்துக் கெல்லாம். நடக்கிறதே அலாதி சுகந்தான். பஸ் மாதிரி இடையிடையே நிற்கா மக் குறுக்கு வழியா வேகமா வெத்திலே போட்டுக் கிட்டே போகலாம். பஸ்ஸிலே ஏறுகிறதுக்கு ஒரு குஸ்தி போடணும். மேல வாசல் வழியா உள்ளே ஏறிட்டா வவ்வால் மாதிரித் தொங்கணும். தொங் கற போதே சில்லறை குடுத்து டிக்கட் வாங் கணும். அப்புறம் கீழ வாசல் வழியா இறங்கறத் துக்கு ஒரு லாகவம் தெரியணும். நடராஜா சர்வீ ஸிலே இந்தச் சிரமமெல்லாம் கிடையாது. நாம நினைச்ச நேரம் புறப்படலாம். பஸ்ஸுன்னா அது வர்ற நேரத்துக்குத்தான் நாம புறப்படணும்.

பி 1: உங்க நடை வேதாந்த மிருக்கட்டும் இப்பக் காரியம் கெட்டுப் போயிடுமேய்யா நேரம்போ குதே.

பி 2: நடப்போமா பின்னே?

பி. 1: அதை அப்பவே செய்திருக்கணும். நின்னு நின்னு கால் கடுத்துப் போச்சேய்யா அடுத்த பஸ் எப்படி வருமோ?

பி. 2: அதிர்ஷ்ட லாட்ரி மாதிரி தானுங்க. இந்த நேரம் இடம் கிடைச்சால் அது அபூர்வமான அதிர்ஷ்டம்தான்.

பி. 1: பஸ்ஸிலே இடம் கிடைக்கிறதுக்குக்கூட அதிர்ஷ்ட தேவதையை வரவழைக்கிறீங்க. அதிர்ஷ்ட தேவதைக்கி இவ்வளவு துரதிர்ஷ்ட மான நிலைமை ஏற்படக்கூடாது தம்பி; காரியம் ஆகிறதைப் பார்க்காமே வேடிக்கை பேசறீங்களே

பி. 2: நான் என்ன செய்யறது கால் வலி தோணும இருக்க ஏதாவது பேசறேன்.

பி. 1: அடச் சும்மா இரும் தம்பி எனக்கு நேரமாகு தேன்னு கவலையா இருக்கு.

பி. 2: அடடே இந்த இடத்துக்கு வந்து ஒரு மணி நேரம் ஆயிட்டுதே.

பி. 1: அடடா அந்த ஆள் காத்திருப்பாரே நமக்காக.

வண்டி: ஹை ஹை வாறியளா திருநெல்வேலி ஐயா.

பி. 1: வண்டியிலே போயிடலாமா?

வண்டி: பஸ் இப்போ வராதுய்யா ஏறுங்க போகலாம்.

பி. 2: அப்படியே செய்யலாம்.

பி. 1: குதிரை நடக்குமா வே?

வண்டி: நடக்காதுய்யா சும்மா பறக்கும். மெயில் மாதிரி பத்து மினிட்லே போலேன்னா வாடகை தர வேண்டாம் நீங்க. ஏறுங்கய்யா.

பி. 2: பின்னே ஏறலாமா வண்டியிலே

பி. 1: அப்படித்தான் யோசிக்கிறேன்.

வண்டி: என்ன யோசனை பண்றிய? ஏறுங்க, பெரிய பெரிய பயில்வான்களெல்லாம் ஏறியிருக்காங்க இந்த வண்டியிலே

பி. 1: வாடகை என்ன கேக்கறே

வண்டி: நீங்க ரெண்டு பேர் தானே? எட்டணா குடுங்க.

பி. 2: பஸ் வருதே.

பி 1: ஆமா இடமிருக்குமோ என்னமோ

வண்டி: இடம் ஆப்டாது இப்ப பஸ் சார்ஜ் ரெண்டும் ரெண்டும் நாலணாக் குடுத்தா போதும் ஏறுங்கையா வண்டியிலே.

பி 2: அதுவும் புல்லாத்தான் வருது.

வண்டி: என்னேயா வர்றீங்களா இல்லையா ?

பி. 2: பஸ் சார்ஜ்தான் தருவோம்.

வண்டி: பஸ் சார்ஜுக்கு வண்டி விடுவாங்களா ? எட்டணுங்கறதை ஆரணுக் குடுங்க.

பி 1: இப்பச் சொன்னியே பஸ் சார்ஜ் குடுத்தாப் போதும்னு.

பி 2: பஸ் வருதுன்ன வுடனே வாடகையைக் குறைச் சார் வண்டிக்காரர் பஸ் போனவுடனே வாடகை ஏறுது அப்படித்தானே ? அதோ அது என்ன பஸ்ஸா ?

வண்டி; சரி ஏறுங்கையா

பி 1: ஏறுங்கன்னு ?

வண்டி: உங்க இஷ்டம் போலக் குடுங்க.

பி 1: இஷ்டம் போலேன்னு ?

வண்டி ; ஏதோ பாத்துக் குடுங்க.

பி 1; என்னேயா புரியாத பாஷையிலே பேசுறீரே.

வண்டி: ஏறி உக்காருங்கையா வண்டியிலே போலீஸ் காரரு கண்டா வண்டியை இங்ஙன நிறுத்த விட மாட்டாரு.

பி 2: பின்னே ஏறுங்க

பி 1: இந்தாரும் வண்டிக்காரரே நாலணுத்தான் தருவோம்.

வண்டி: முன்னப்பின்னே வண்டி யேறினவங்களாத் தெரியலேயேய்யா அதான் அப்பவே தீர்ந்து போச்சே நாலணுன்னு. பின்னே ஏம்போட்டுத் தொந்தரவு பண்றீக.

பி 1: வே! இன்னும் ஆளே ஏத்தறத்துக்காக வளேச்சு வளேச்சு நிக்கப்படாது.

வண்டி: அதெல்லா மில்லேய்யா காலேத் தொங்க விடுங்க. அடேயம்மாடியோவ். ஏர்க்கால் ஒடிஞ் சுடும் போலிருக்கே கொஞ்சம் இருங்க,

பி 2: என்னய்யா கீழே குதிக்கிறே எதையாவது போட்டுட்டியா ?

வண்டி: இல்லே வண்டிக்கி அச்சு புதுசாப் போட் டிருக்கு. அதைப் பார்த்தேன் எப்படியிருக் குன்னு.

பி 1: வண்டி தலேகீழா இருக்கே.

பி. 2: ஏறி உட்காரும் வண்டியிலே

வண்டி: உட்காரவா ஏர்க்கால்லே நின்னுக்கிட்றேன். நீங்க கொஞ்சம் முன்னே தள்ளி வாங்க.

பி. 2: இதுக்கு மேலே எங்கே முன்னே வர்றது ! குதிரை மேலேதான் உக்காரணும்.


வாரியர்

சியவனப்ராசம்

கிழவனுகி மூப்பினுலும் ஜாரா நரைகளினுலும் அவதிப்பட்ட சியவனமகரிஷியின் ஆராய்ச்சியின் பலனுகும், இம்மருந்து. இதை உபயோகித்து அவர் மீண்டும் இளமையின் இன்பத்தைப் பெற்றதாகச் சொல்லப்படுகிறது.

க்ஷயம், இருமல், ஆஸ்துமா, தொண்டைக் கம்மல், உள்ப் புண்கள் (Internal Ulcers), இதய ரோகங்கள், ரத்தவாதம், அதிக தாகம், மூத்திர வியாதிகள், இந்திரிய தோஷங்கள், மற்றும் சகல உஷ்ணரோகங்களேயும் குணப்படுத்தும். கிழவர்களுக்கும், குழந்தைகளுக்கும் திரேகபுஷ்டியை கொடுக்கும். சூட்சும புத்தி, ஞாபக சக்தி. திரேக சக்தி, ஆரோக்கியம், நீண்ட ஆயுள், புலன் களுக்கு உணர்வு, அக்கினிபலம், வாயுக்களின் அனுகூலமான கதி இவைகளே அளிக்கும் சிறந்த டானிக்.

விபரங்களுக்கு :—

ஆரிய வைத்தியர் K. S. வாரியர்

அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

N. S. போஸ் ரோடு, திருச்சிராப்பள்ளி-2.


வண்டி: வண்டிக்கி முன்பாரமே இல்லேயே. இடுப்பு வார் அறுந்துடுமோன்னு பயமா இருக்கு.

பி. 1: என்னப்பா வண்டியை விடப் போறியா இல்லேயா ?

வண்டி: ஹை ஹை

பி. 2: என்ன திரும்பியும் கீழே இறங்கறே ?

வண்டி: சக்கரத்திலே கல் ஏதாவது மாட்டிக்கிட் டிருக்கான்னு பாக்கறேன். வண்டி நகர மாட் டேங்குதே

பி. 1: என்னய்யா நீரும் உம்ம குதிரையும்! போகுமா போகாதா ?

வண்டி: நம்ம குதிரையை என்ன நினேச்சுட்டீங்க! புறப்பட்டாச்சுன்னு மெயிலாப் பறக்குமே. இதோ போகுது பாருங்க. ஹை! ஹை! போடா ராஜா போ போ.

பி. 2: ஏனய்யா நகர மாட்டேங்குது ?

வண்டி: அது இழுக்கத்தான் செய்யுது. ஆனு வண்டி தான் நகரமாட்டேங்குது. சிமிண்டு ரோட்டுக்குப் போயிட்டா லேசா இழுத்துடும். ஐயா, நீங்க காலேத் தொங்கத்தானே போட்டிருக்கீங்க ?

பி. 1: ஆமாய்யா

நிறுவனம்
21—6—1963

மின்னல் பஞ்சமுக விநயகர்
மேற்கு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனை சங்கம்
லிமிடெட் No. C. 1969.
மின்னல் P. O. (வயா) அரக்கோணம்,

எங்களிடம் கைதேர்ந்த நெசவாளர்களைக் கொண்டு தயார் செய்த உயர்தரமான 40s × 50″ வேஷ்டிகளும், 40s × 50″ 1 × 12 காடா, கர்சிப்பு, மற்றும் 26s, 20s காடா, கரை மடி, டவல், 40s×50″ ஷர்ட்டிங் பீஸ்களும் தயார் செய்கிறோம்.

உங்கள் தேவைக்கு எங்கள் ஸ்தாபனத்தை என்றும் மறவாதீர்கள்.

தலைவர்
S. A. முருகேச முதலியார்.
காரியதரிசி
ந. மு. பெறமாண்ட முதலியார்.


வண்டி: காலே உயரத் தூக்கி வையுங்க பாரம் சரியா இருக்கான்னு பார்ப்போம் (தாமதம்)அடேயப்பாடி யோவ். குதிரை குப்புற விழுந்துடும் போலிருக்கே! சும்மா அப்படியே தானே காலைத் தொங்கப் போட்டுக்கிடுங்கோ.

பி. 1: என்னய்யா விளையாடுறீரா? வண்டியை விட்றீரா? இறங்கட்டுமா?

வண்டி: கோவிச்சுக்கிடறியளே. இந்தா புறப்படுது பாருங்க ஹை ஹை ஓராள்! ஓராள்! ஓராள்! திருநெல்வேலி.

பி. 1: என்னய்யா உம்ம புத்தியைக் காண்பிக்க ஆரம்பிச்சுட்டீரே.

வண்டி: என்ன சொல்றிய

பி. 2: வேறே ஆள் ஏத்தமாட்டேன்னீரே.

வண்டி: ஆமா. ஓராள் ஓராள் வர்றியளா திருநெல்வேலி.

பி. 1; பின்னே ஏன் ஓராள்னு கூப்பிட்றே

வண்டி: ஏத்தலேன்னு ஏத்தமாட்டேன்யா ஆள் வந்தாலும் இடமெங்கே இருக்கு வண்டியிலே அதெல்லாம் கவலைப்படாதியக ஓராள்! ஓராள்! ஹை! ஹை வர்றியளா திருநெல்வேலி ஹை! போகமாட்டே! ஐயா வர்றியளா திருநேலி

பி. 2: என்னய்யா திரும்பவும் ஆளை கூப்பிட்றியே

வண்டி: கூப்பிட்டா என்ன போங்க

பி. 1; அப்புறம் ஆளை ஏத்தணும்னு தகராறு பண்றதுக்கா? நிறுத்தய்யா வண்டியை நாங்க இறங்கிக்கிட்றோம்.

வண்டி: அட எஞ்சிவனே! ஆளு ஏத்தலேய்யா பேசாம இருங்க எனக்கும் புல்கட்டு வாங்க அவசரமாப் போகணும் குதிரை எப்படிப் போகுது பாத்தீங்களா?

பி. 2: வேகமாகத்தான் போகுது.

வண்டி: இதோ இப்பப் பாருங்க ஹை! ஹை! ஓராள்! ஓராள்! ஓராள் திருநெல்வேலி வர்றியளா

பி. 1: ஒய் இன்னும் ஓராள் பல்லவி?

வண்டி: நீங்க சும்மா இருங்கையா.

பி 1. என்ன சும்மா இருங்கையா வேறே ஆள் ஏத்தலேன்னு சம்மதிச்சே இப்ப இன்னும் ஓர் ஆள் இரண்டு ஆளுங்கிறியே?

வண்டி: அட ஆண்டவனே ஆளு ஏத்தியிருக்கேனா நான்?

பி 2: பின்னே எதுக்கு வே சத்தம் போடுகிறீர் ஓராள் ஓராள்னு.

வண்டி: நான் பாட்டுக்குச் சொல்றேன்.

பி 1: ஆள் வந்தா?

பி 2: அதுதான் பாதி தூரம் வந்துட்டுதே?

பி 1: ஆள் வந்தா ஏத்திக்கிடுவீரா வண்டிக்காரரே?

வண்டி: என்னையா இப்படிப் பேசறிய ஐயா ஓராள் வர்றியளா திருநெல்வேலி வர்றியளா ஓராள் ஓராள் வண்டி இம்புட்டுத் தூரம் வந்துட்டுதே இதுக்கு மேலே யாரு ஏறுவாங்க வண்டியிலே?

பி 2: பின்னே உனக்கென்ன பயித்தியமா?

வண்டி: என்ன சொல்றிய ஓராள் ஓராள் ஓராள் வர்றியளா திருநெல்வேலி.

பி 1: இனிமே யாரையா ஏறுவாங்க வண்டியிலே?

வண்டி: பைத்தியக்காரன் கூட ஏறமாட்டான்.

பி 2: பின்னே ஏன் ஓராள்னு கூப்பிட்டீர்.

வண்டி: ஓ அதுவா? ஓராள் ஓராள் ஐயா ஓராள் வாறியளா திருநெல்வேலி.

பி 1: அட இன்னும் பாரேன் ஏனய்யா திருநெல்வேலிக்குத்தான் வந்தாச்சே இன்னம் திருநெல்வேலின்னு என்ன அர்த்தம்?

வண்டி: இருங்க சொல்றேன் ஓராள் ஓராள் வர்றியளா திருநெல்வேலி.

பி 2: சேச்சே பெரிய லூசுல்ல போலிருக்கு நிக்கப் போற இடத்திலேயுமா ஓராள் பாட்டு ஓயல்லே

வண்டி: இன்னும் நூறடி தூரம் இருக்குதேய்யா ஓராள் ஓராள் வர்றியளா

பி 1: இந்த நூறடி தூரத்துக்காக யாராவது வந்து ஏறுவாங்களாய்யா ?

வண்டி: அதுக்காகவா சொல்றது குதிரை ஓடணுமே அந்த நூறடி தூரமும்.

பி 1: என்னது குதிரை ஓடனுமேவா

வண்டி: ஹோ ஹோவ் மெதுவா இறங்குங்கையா

பி 2: குதிரை ஓடணும்னு ஏதோ சொன்னீரே.

வண்டி: ஆமா நம்ம குதிரை அசல் ஜாதிக் குதிரையா ரோட்டிலே அலையற சடுக்காக் குதிரையில்லே சாட்டைக் குச்சியாலே அடிச்சிடவே படாது இதை.

பி 1: அடிச்சாத் தாங்காது போலிருக்கு

வண்டி: அடிச்சுட்டா போச்சு ரிவர்ஸ் தான் அதனுலே சாட்டைக் குச்சியாலே தொடவே மாட்டேன்.

பி 1: ஆமா மத்த வண்டிக்காரங்க மாதிரி இவரு குதிரையை அடிக்கவே இல்லையே

வண்டி: அதான் சொன்னேனே நம்ம குதிரை அசல் ஜாதிக் குருதைன்னு ரொம்ப ரொம்ப ரோஷக்காரக் குருதை. ஒரு வார்த்தை சொன்னு, பறக்கும் மெயில் மாதிரி இப்ப இழுக்க முடியாம இழுத்துக்கிட்டுப் பறந்து வந்துதே. வேறே குதிரை இவ்வளவு பாரத்தை இழுத்துக்கிட்டு இப்படி வருமா பத்து மினிட்டிலே இது எப்படின்னு நினைச்சீங்க எல்லாம் இந்த ஒரு வார்த்தையிலே தான்.

பி. 1: ஒரு வார்த்தையாலேயே அதென்ன மந்திரம் போடுகிறீரா குதிரைக்கு?

வண்டி: மந்திரமாவது மாயமாவது இப்படி நகர்ந்து வாங்க சொல்றேன் வர்ரப்ப சொல்லிக்கிட்டே வந்தேனே ஓராள் ஓராள்னு அது தானய்யா அதுக்கு சாட்டையடி ஓராள் ஓராள் எத்தனை பாரத்தையும் இழுத்துக்கிட்டு ஓடும். இல்லேன்னு நகராது நின்ன இடத்தைவிட்டு

பி. 2: அடப்பாவி மனுஷா இதுக்கா அப்படி ஓராள் ஓராள்னு கத்திக்கிட்டு வந்தீர் வழியெல்லாம்

பி. 1: இதை அப்பவே சொல்லித் தொலைச்சா உம்ம கூட சண்டை போட்டிருக்க வேண்டாமே ?

வண்டி: அதை அப்பவே சொல்லக்கூடாதேய்யா! குதிரைக்கு இந்த ரகசியம் தெரிஞ்சுடப் படாது பாருங்க. அதான் இந்த விசயத்தை அப்பச் சொல்லல்லே உங்ககிட்ட

பி 2: பெரிய ஆளுய்யா நீரு

வண்டி: ஓராள் ஓராள்னு இன்னும் ஆளு ஏத்திப் போடுவானேன்னு பயந்துகிட்டு ஓடுது. இல்லேன்னு எடக் பண்ணுது இதுதான் நம்ம பரிபாஷை

பி 1: நல்ல பரிபாஷை வச்சிருக்கிரீய்யா குதிரைக்கி

வண்டி: குதிரைக்குத் தெரிஞ்சுடப் படாதுங்க நம்ம பரிபாஷை உரக்கச் சொல்லாதீங்க.

பி 2: நேரம் ஆச்சே வாங்க போகலாம்.

---


TELE { PHONE No. 35.
GRAMS : "AUTOSPARES"

BRANCHES { TANJORE
TIRUNELVELI

H. O.: MADURAI

G. N. CHAKRAPANI CHETTY & SONS (PRIVATE) LTD.,

AUTOMOBILE DEALERS & ENGINEERS,

Post Box No. 29

CONTONMENT, :: TIRUCHIRAPALLI.

# இந்திய நாணயங்கள்

★

க. துளசிராமன்

ஆதிமக்கள் விலங்குகளை ஒப்ப சிறு சிறு குழுவினராகக் காடுகளில் இயற்கையிலேயே விளைந்து கிடந்தகாய், கனி, கிழங்குகளை தின்றும் கற்கருவிகளைக் கொண்டு விலங்குகளை வேட்டையாடி உண்டும், நீர் நிலைகளிலுள்ள மீன்களைப் பிடித்துப் புசித்தும், சுனைநீரைப் பருகியும், மலைக்குகைகளிலும், மரநிழல்களிலும் தங்கி உயிர் வாழ்ந்தனர்.

இந்நிலையில் மக்கள் பெருக்கம் உண்டாயிற்று. எல்லோருக்கும் இயற்கையாய் விளைந்து கிடந்த உணவுப் பொருள்கள் ஓரிடத்தில் கிடைத்தல் அரிதாயிற்று. ஆகவே பயிர்த்தொழில் கைக்கொள்ளப்பட்டது.பகைவர்களுடன் போர் புரிவதற்காகப் போர்க்கருவிகளும் செய்யப்பட்டன. இங்ஙனம் ஒவ்வொரு பகுதியிலும் அதனதன் வளத்திற்கும், இயற்கையமைப்புக்கும் ஏற்றவாறு மக்கள் தத்தம் திறமைக்குத் தக்கபடி வெவ்வேறு தொழில்களை மேற்கொண்டனர். ஒவ்வொருவருடைய வாழ்க்கைக்கும் பிறர் செய்யும் பலவிதப் பொருள்களும் இன்றியமையாதனவாக இருந்தமையால் மிகுதிப்பட்ட பொருள்களைக் கொடுத்து அதற்குப் பிரதியாகப் பிறரிடமிருந்து தேவைப்பட்ட பொருள்களைப் பெற்றுவந்தனர். இவ்வழக்கத்திற்குதான் "பண்டமாற்று" என்று பெயர்.

பண்டமாற்றுக்கு உபயோகிக்கப்படும் பொருளானது எளிதில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எடுத்துச் செல்வதில் சிரமம் இருந்ததாலும் சில பொருள்கள் விரைவில் அழியக்கூடியனவாகவும், சேமித்து வைப்பதற்கு தகுதியற்றதாகவும், நிலையான விலை மதிப்பு உடையதாகவும் இல்லாததால் மக்களுக்கு சிரமமும் நட்டமும் ஏற்பட்டது. அதன் காரணமாக அழியாமலும் உறுதியாகவும், நிலையானதொரு விலைமதிப்பை உடையனவாகவும், சிறிய உருவில் மிகவுயர்ந்த மதிப்பையுடையனவாக உள்ள உலோகங்களை நாளடைவில் உபயோகிக்கத் தேர்ந்தெடுத்தார்கள்.

தாமிரமும், வெங்கலமும் பொன்னும் ஆதியில் கண்டுபிடிக்கப்பட்ட உலோகங்கள். கி. மு. 4000-ம் வருடங்களுக்கு முன்னரே எகிப்தில் வெங்கலமும், இந்தியா, சீனு, பாபிலோன் முதலிய தேசங்களில் பொன்னும் பண்டமாற்றில் வழங்கினவாம்.

இரும்பு கி. மு. 2000-ம் வருடத்திற்குப் பின்புதான் கண்டுபிடிக்கப்பட்டது. கிரேக்க தேசத்தில் இரும்பும், இத்தாலியில் செம்பும், மலேயாவில் தகரமும் பண்டமாற்றுப் பொருள்களாக உபயோகிக்கப்பட்டன. இறுதியில் எல்லாத் தேசங்களிலும் வெள்ளி, பொன், தாமிரம் ஆகிய மூன்று உலோகங்களே பண்டமாற்றுப் பொருள்களாயின. ஏனெனில் இவை கிடைப்பதற்கரியனவாயும், எல்லோராலும் விரும்பப்படுவனவாயும், மிக சிறிய உருவில் மிகவுயர்ந்த மதிப்பையுடையனவாகவும் இருப்பதாலும், அன்றியும் உருக்குவதற்கும், வார்ப்பதற்கும், முத்திரையிடுவதற்கும் ஏற்றவையாக இருக்கின்றன.

மேற்குறிப்பிட்ட உலோகங்கள் சிறிய உருவில் மிகவுயர்ந்த மதிப்பையுடையனவாக இருப்பதால், அவற்றின் நிறையை நிறுத்து மதிப்பைக் கணக்கிட தராசு கண்டுபிடிக்கப்பட்டது. எல்லாவிடங்களிலும் சம நிறையுடைய சில தானிய மணிகளையும், காணம், நெல், உழுந்து, பயிறு, குன்றிமணி முதலியவற்றை படிக்கற்களாக உபயோகித்து வந்தனர். தராசும், படிக்கற்களும் கண்டுபிடிக்கப்பட்ட பின் பொன்னையும், வெள்ளியையும் நிறுத்துக் கொடுத்துப் பண்டமாற்றுச் செய்துவந்தனர். ஒவ்வொரு தடவையும், பொருள்களை வாங்கும் போதும், விற்கும் போதும் இவ்வுலோகங்களின் நிறையையும், மாற்றையும் சோதித்தறிவது அவசியமாயிற்று. அப்படிச்செய்ததனுல் காலமும் உழைப்பும் வீணாயிற்று. இக்குறையைப் போக்க குறிப்பிட்ட மாற்றும், நிறையளவும் உள்ள பொன், வெள்ளிக் கட்டிகளின் மேல் சில வணிகர்களும், நகர சங்கங்களும், பிரபுக்களும் தங்கள் முத்திரையை (Seal) இட்டனர். இங்ஙனம் முத்திரையிடப்பட்ட உலோக கட்டிகளின் நிறையும், மாற்றும் ஐயுறுதற்கிடமில்லாதிருந்தமையால் அவ்வுலோக கட்டிகளை எண்ணிக் கொடுத்துப் பண்டமாற்றுச் செய்தனர்.

நாளடைவில் சங்கங்களும், பிரபுக்களும், உண்டியல் கடைக்காரர்களும், ஒரு நாட்டிற்குள்ளே பற் பல நிறையும், மாற்றும் உடைய போலிக்கட்டிகளை செய்து பொது மக்களை மோசஞ்செய்தனர்.

இத்தகைய முத்திரையிடப்பட்ட கட்டிகளின் நிறையையும், மாற்றையும் மக்கள் சந்தேகித்து அவற்றை வாங்க மறுத்தனர். எனவே அரசன், குடிகள், முத்திரையிடுவது குற்றமென்றும் அரசாங்க முத்திரையிடப்பட்ட உலோகத் துண்டுகளே பண்டமாற்றுக்கு உபயோகிக்கவேண்டும் எனவும் ஓர் சட்டமியற்றினன். அதன் பயனாக ஓரரசனின் ஆட்சிக்குட்பட்ட பிரதேச முழுதிற்கும் ஒரேவித நாணயம் வழங்கலாயிற்று.

குறிப்பிட்ட நிறையும், மாற்றும், அடங்கியவென அரசாங்க முத்திரையிடப்பட்ட உலோகத் துண்டுகளே பொதுவாக நாணயங்கள் என வழங்கப் பெறுகின்றன.

**வேத காலம்**

வேத காலத்திலும், இதிகாச காலத்திலும்கூட "முத்திரை" என்ற நாணயங்கள் வட்டம் அல்லது சமசதுர வடிவமாகவும் நீண்ட சதுர வடிவமாகவும் புழங்கி வந்தது. ரிக்வேத பாடல்களிலிருந்து "நிஷ்கம்," "சதமன்," "ஸ்வர்ணம்," "பதம்," "கிருஷ்ணலம்" என்ற ஐந்து வகை 'முத்திரை' பொன் நாணயங்கள் புழக்கத்தில் இருந்ததாக அறியக்கிடக்கிறது.

சதமன் என்ற முத்திரை நாணயத்தில் முன்பக்கம் சூரியனும், மறுபக்கம் ஒன்றும் இல்லாமல் வழ வழ வென்று இருக்கும்.

### சரித்திர காலம்

நமக்குக் கிடைத்த சரித்திர வரலாற்றிலிருந்து வட இந்தியாவை ஆண்ட அரசர்களில் கி. மு. 600 ஆண்டுகளுக்கு முன் தென் பீஹாரில் தோன்றிய மகத நாட்டு அரசஞன சைசுநாகன் என்பவனது சந்ததியார்களாகிய சைசுநாக வம்சத்து அரசர்களே முதல் முதலாக அரசாண்டனர் என்று தெரிகிறது. அவ்வமிசத்தின் ஐந்தாம் அரசரான பிம்பிசாரர் பிரதானமானவர். அவர் கோசலம், வைசாலி, அங்கம் முதலிய தேசங்களை வென்ருர்.

ராஜகிருகம் என்ற பட்டணத்தை நிர்மாணித்து அதை மகத ராஜ்யத்திற்குத் தலைநகரமாக்கினர். பிம்பிசாரரின் மூத்த புதல்வரான அஜாதசத்துரு என்பவர், தம் தந்தையாரைக் கொன்றுவிட்டுப் பட்டத்திற்கு வந்தார். இவர் பாடலிபுரத்தை தலைநகராகக் கொண்டு அரசாண்டார். அஜாதசத்துருவிற்குப் பின்னர், சைசுநாக வமிசத்தைச் சேர்ந்த இரண்டு அரசர் ஆண்டனர். இவர்களுக்குப் பிறகு மகதராஜ்யத்தில் நந்தர்கள் என்ற ஒரு புதிய வமிசத்தினர் ஆளத்தொடங்கினர்.

நந்தவமிசத்தின் முதல் அரசர் மகாபதுமநந்தர். இவர் கி. மு. 5-ஆம் நூற்ருண்டின் ஆரம்பத்தில் பட்டத்திற்கு வந்தார், இவருக்குப்பின் இவருடைய எட்டுப் பிள்ளைகள் மகதராஜ்யத்தை ஆண்டார்கள். கடைசி நந்த அரசர் கி. மு. 321-ஆம் ஆண்டில் சிம்மாசனத்தினின்று நீக்கப்பட்டு, சாணக்கியன் என்ற தந்திரமும் புத்திகூர்மையுமுள்ள ஒரு பிராமணனுடைய உதவியால் ''சந்திரகுப்தன்'' என்ற பராக்கிரமசாலி பட்டத்திற்கு வந்து ஒரு புதிய அரச வமிசத்தை ஏற்படுத்தினன்.

இப் புதிய வமிசத்திற்கு தன்னுடைய தாயார் மியூரா என்பவளது ஞாபகார்த்தமாக மௌரிய வமிசமென்று நிறுவினன்.

மௌரியர்கள் மகத நாட்டில் சுமார் கி. மு. 184-ம் ஆண்டுவரையில் செங்கோல் செலுத்திவந்தனர். மௌரிய வம்சத்தில் அசோகர் தலைசிறந்த பேரரசர் எனக் கருதப்படுகிருர்.

மகத பேரரசும், மௌரிய பேரரசும் தழைத்தோங்கிய காலத்தில் ''கர்ஷபணம்'', ''நிக்கா'', ''காகனிகம்'', ''மாஷா'', ''அர்த்தமாஷா'', 'ஸ்வர்ணமாஷா' என்ற நாணயங்கள் இருந்தன, என பாணினியின் சூத்திரங்களின் வாயிலாக தெரியவருகிறது. பண்டைய நாணயங்களில் சந்திரன், சூரியன், கும்பம், பானை, பசு, குதிரை, நாய், நரி, புலி, தேர், மரம், சிங்கம், தர்ம சக்கரம் இப்படி ஏதாவது உருவம் துளைப்பு சித்திரமாக பொறிக்கப்பட்டிருக்கும். ஆண்டோ, அரசன் பெயரோ இராது.

கி. மு. 185 ஆம் ஆண்டில் பிருகத்ரதர் என்ற கடைசி மௌரிய அரசரை, அவரிடம் சேனைத் தலைவராய் இருந்த புஷ்யமித்திர சுங்கர் என்பவர் கொன்றுவிட்டு, தாம் அரசரானுர். புஷ்யமித்திர சுங்கரால் ஏற்படுத்தப்பட்ட வமிசத்திற்குச் சுங்க வமிசம் என்பது பெயர். அவரது ஆட்சியில் மறுபடியும் கிரேக்கர்கள் படையெடுத்து வந்தார்கள். ஆனல் புஷ்யமித்திரர் அவர்களைத் தோற்கடித்து விரட்டிவிட்டு அஸ்வமேத யாகம் ஒன்று செய்தார்.

மௌரியர்களின் பேரரசுதான் இந்தியாவில் ஏற்பட்ட முதல் பேரரசாகும். அது அழிவுற்றபின் பல நூற்ருண்டுகளாகவுள்ள இந்திய சரித்திர வரலாறு மிகவும் சொற்பமே தெரியவருகிறது.

சுங்க வம்சத்திற்குப் பின்பு காண்வர்கள் அல்லது கன்வாயனர் என்னும் வம்சத்தினர் அரசுபுரிந்தார்கள். இவர்கள் காலத்தில் அந்தப் பேரரசு சிதைவுற்றது, ஒரிசா மாகாணமும், கலிங்க நாடும், கிருஷ்ணா, கோதாவரி பிரதேசமாகிய ஆந்திர நாடும் அந்த சாம்ராஜ்யத்திலிருந்து பிரிந்து தனி ராஜ்யங்களாவதற்குத் தலைப்பட்டன.

அதே காலத்தில் இந்தியாவின் வடமேற்குப் பாகங்கள் கிரேக்க பாக்ட்ரிய அரசர்களென்றழைக்கப்பட்ட கிரேக்க அரச பரம்பரையின் ஆளுகைக்குட்பட்டன. மினண்டர் காலத்தில் மகத ராஜ்யம் முழுவதும் அவன் ஆட்சிக்கு உட்பட்டது. அவ்வரசர்களின் பெயர்களை நாம் அக்காலத்து நாணயங்களிலிருந்து தெரிந்துகொள்கிரேம். இவர்கள் ஆதியில் இந்துகுஷ் மலைக்கும் ஆக்ஸஸ் நதிக்கும் இடையிலுள்ள பிரதேசமான பாக்ட்ரியாவில் வசித்துவந்தார்கள். ஆகையால் அவர்களுக்கு அப்பெயர் வரக்காரணம் ஏற்பட்டது.


அன்று சுதந்திரம் எனது பிறப்புரிமை
என்று வீரமுழக்கம் செய்தவர்
'லோகமான்ய பாலகங்காதர திலகர்'
இன்று சுத்தமான துண்டு வேஷ்டி மடிகள்,
கலர் டவல்கள் நெய்து புகழ்பெற்று வருவது

**மதுரை திலகர் நெசவாளர் சங்கமே.**

எல்லோரும்
'திலகர் கோ ஆப் டெக்ஸ்', வேஷ்டி
துண்டுகளை கேட்டு வாங்கி
உபயோகியுங்கள்.

குறைந்த விலை ! நீடித்த உழைப்பு !
சிறந்த ரகம் ! கெட்டிச் சாயம் !

Pick Regulated take up Attachment Spl. Dhothies
எங்களிடம் தனிச் சிறப்பு பெற்றவை.

**A 2454, மதுரை திலகர் நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிமிடெட்,**
செல்லூர், :: மதுரை-2.
S. துரைராஜ், தலைவர்.

**மினண்டர்:**

முன்பக்கம் அவன் தலையும் பெயரும், பின்னால் கிரேக்க தேவதையின் உருவமும் பொறித்து இருக்கும்.

இவர்கள் காலத்தில் தான் இந்திய நாட்டின் நாணய அமைப்பில் மாறுதல் ஏற்பட்டது. இவர்கள் ஆட்சி வெகு காலம் நீடிக்கவில்லை.

**குஷானர்கள்**

கி. மு. 2-ஆம் நூற்றாண்டில் குஷானர்கள் என்று வழங்கப்பட்ட புதிய வகுப்பினர் பாரசீகம், ஆப்கானிஸ்தானம் முதலிய பிரதேசங்களில் குடியேறினார்கள். சிறுகச்சிறுக இந்தியாவுக்கு வடமேற்கிலிருந்து கிரேக்கர்களை வென்று இந்தியாவிற்குள் பிரவேசித்து பஞ்சாப், காச்மீரம் என்னும் பிரதேசங்களில் ஒரு நாட்டை ஏற்படுத்தினார்கள். நாளடைவில் வடமேற்கு இந்தியா முழுவதும், கிழக்கில் பாட்னாவும், தெற்கில் மாளவமும், பார்த்தியர்கள் ஆட்சிக்குட்பட்டிருந்த எல்லா பிரதேசங்களும் அவர்களுடைய ஆதிக்கத்திற்குட்பட்டன. முதலாம் காட்பைஸஸ்தான் இந்தியாவில் குஷான சாம்ராஜ்யத்தை முதலில் ஆரம்பித்தவன்.

**முதலாம் காட்பைஸஸ்**

இவனுடைய நாணயம் ஒருபுறம் அரசனுடைய தலையும் மறுபுறம் தேவதையின் உருவமும் வட்ட வடிவில் பொறித்திருப்பதைக் காணலாம். மற்றும் இவன் கிரேக்க அரசனான ஹெர்மையாஸ் என்பவனுடைய நாணயங்களை எடுத்து, அவைகளின்மேல் தன்னுடைய முத்திரையையும் பொறித்து வெளியிட்டான். குஷாணம் என்ற வமிசம் இரண்டு தனிப்பட்ட குடும்பகிளைகள். முதலாம் காட்பைஸஸ்ஸும், இரண்டாம் காட்பைஸஸ்ஸும் முதலாம் கிளையைச் சேர்ந்தவர்கள். இரண்டாவது கிளையில் நான்கைந்து அரசர்களிருந்தார்கள். அவர்களில் முக்கியமானவர்கள், கனிஷ்கர், ஹுவிஷ்கர், வாசுதேவர் என்பவர்கள். வாசுதேவரோடு குஷாண வமிசம் முடிவடைந்தது.

**கனிஷ்கர்**

கனிஷ்கர் குஷான மன்னர்களில் தலை சிறந்தவர். இவருடைய நாணயங்கள் பலவகைப்பட்டவையாக இருக்கின்றன. அவைகள் பொதுவாக இரண்டாம் காட்பைஸஸின் நாணயங்களின் சாயலையே பின்பற்றியவைகளாயிருக்கின்றன. காட்பைஸஸின் நாணயங்கள் பழைய உரோமானிய நாணயங்களை ஒப்பயிருக்கின்றன. அக்காலத்தில் இந்தியாவிற்கும் உரோமானிய சாம்ராஜ்யத்திற்கும் வியாபாரத் தொடர்பு ஏற்பட்டதால் உரோமானிய சாம்ராஜ்யத்தில் செலாவணியாகக் கூடிய நாணயங்கள் அவசியமாயின. ஆதலால் காட்பைஸஸின் நாணயங்கள் உரோமானிய நாணயங்களைப் போல் செய்யப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கலாம். இந் நாணயங்களில் காணப்படும் உருவங்களும் வாசகங்களும் அவைகளுடைய சொந்தக் கதைகளை அறிவிப்பதோடு, அரசர்களுடைய மதநிலை, மக்களுடைய மத நிலையையும் மற்றும் பல செய்திகளையும் தெரிவிக்கின்றன.

கனிஷ்கருடைய ஒரு நாணயத்தில் "ஷாகனேஷ்கி" என்று கிரேக்க லிபியில் அரசன் பெயர் பொறிக்கப்பெற்றிருப்பதைக் காணலாம். இவனுக்குப் பின் வந்த வாசுதேவன் சிவபக்தன்.

**வாசுதேவன்**

இவனுடைய நாணயத்தின் ஒரு பக்கம் அரசன் உருவமும், பின்பக்கம் சிவபெருமான் ரிஷபத்துடன் நிற்பது போலவும் பொறித்திருக்கும். பாரசீக லிபியில் சிவன் பெயர் அமைந்திருக்கும்.

மொத்தத்தில் இவர்களுடைய நாணயங்களில் ஒரு பக்கம் அரசன் முழு உருவம் அல்லது தலையும் பின்னால் தேவதைகளின் உருவமும் இருக்கும் என்று சொல்லலாம். இந்தமாதிரி நாணயங்கள் தான் ஓர் ஆயிரம் ஆண்டுகள் வரையில் புழங்கிவந்தன. இதன் காரணத்தால் தான் பழைய நாணயங்கள் சேகரிப்பவர்களுக்கு இந்த நாணயங்கள் லகுவாக கிடைக்கின்றன.

**ஆந்திரர்கள்:** கி. மு. 232 முதல் கி. பி. 227 வரை.

ஆந்திர அரசர்கள் சாதவாகன வமிசம் அல்லது சாலிவாகன வமிசம் என்றும் பெயரைக் கொண்டவர்கள். முதன் முதல் கிருஷ்ணா கோதாவரி நதிகளுக்கிடையில் உள்ள பிரதேசத்தை ஆண்டுவந்த இவ்வரசர்கள், நாளடைவில் பீரார், மாளவம், கத்தியவார், குஜராத், வடகொங்கணம் முழுமையும் தங்கள் ஆட்சிக்கு உட்படுத்தினார்கள். ஆந்திரர்கள் சுமார் 400 வருஷகாலம் ஆண்டுவந்தார்கள். இவர்களில் கௌதமபுத்திரசதகர்ணியும், அவன் மகனான வசிஷ்டி புத்தபுலுமாயி என்பவனும் மிகவும் கீர்த்தி பெற்றவர்கள். கௌதமிபுத்ரசதகர்ணி காலத்தில் மாளவம், கொங்கணத்தில் பெரும்பாகமும், ஆஜ்மீர் வரையிலுள்ள பிரதேசமும் உஷவதத்தன் அல்லது ரிஷபதத்தன் என்ற பலமிக்க அரசனுடைய ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தன. கௌதமிபுத்ரன் அவ்வரசனுடைய ஆதிக்கத்தை அறவே ஒழித்து, தன்னுடைய ஆட்சியை பரப்பினான். தான் தோற்கடித்த அரசர்களின் நாணயங்களில் மறுபடியும் தன் முத்திரையைப் பொறித்தான்.

இவ்வாறு கௌதமி புத்திரனின் முத்திரை பொறிக்கப்பெற்ற "நாகபண நாணயங்கள்" சில அகப்படுகின்றன. புலுமாயியின் சந்ததியார்களில் யக்ஞஸ்ரீசதகர்ணி என்பவன் ஒருவன். இவன் காலத்தில் வெள்ளி, வெண்கலம், ஈய நாணயங்கள் கிழக்கு மாகாணங்களில் ஏராளமாகச் செலாவணியாயின. மற்றும் செம்பு கலந்த வெள்ளி நாணயங்களும் வெளியிட்டார்கள். இவர்கள் காலத்தில் 'கர்ஷபணம்' 'குஷணம்' என்ற வெள்ளி நாணயங்களும், 'ஸ்வர்ணம்' என்ற பொன் நாணயமும் இருந்தன. ஆகவே இவர்கள் காலத்தில் முறையான நாணயத் தொகுதி வழக்கத்திலிருந்தது. வியாபாரம் ஒழுங்காகவும் செழிப்பாகவும் இருந்தது என்பது தெளிவாக விளங்குகிறது. யக்ஞஸ்ரீயிக்குப் பிறகு இவ்வம்சம் கி.பி. மூன்றும் நூற்றாண்டின் முதற் கால் பாகத்தின் இறுதியில் அழிந்து போயிற்று. இவர்கள் நாணயங்களில் முன் பக்கம், யானை, குதிரை, பௌத்த சைத்தியம், இரண்டு பாய் மரங்களையுடைய கப்பலின் உருவம், இவைகளில் ஏதாவது ஒன்றும், மறுபக்கம் நான்கு வட்டங்களை (பெருக்கல் குறி) இரண்டு கோடுகள் இணைக்கும் உஜ்ஜயினி சின்னமும் அமைந்திருக்கும்.

**குப்தர்கள்:** கி. பி. 320—கி. பி. 606.

ஆந்திரர்களின் வீழ்ச்சிக்குப்பின் பல சிறு ராஜ்யங்கள் தோன்றின. அச்சிற்றரசர்கள் 'ஆந்திர பிரித்தியர்' அல்லது ஆந்திரர்களின் ஊழியர் என்று அழைக்கப்பட்

டனர். இச்சிற்றரசர்களில் குப்த வமிசம் என்ற ஒரு வமிசம் கி. பி. 4-ம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் ஆட்சி செய்யத் தொடங்கியது.

குப்தர்களுடைய வமிசாவளியில் காணப்படும் முதற் பெயர் மஹாராஜ ஸ்ரீ குப்தன், இரண்டாம் பெயர் கடோற்கஜன். இவ்விருவரைப்பற்றி தெரிந்து கூற இயல வில்லை. மஹாராஜ ஸ்ரீ குப்தனுடைய பேரனுன முதல் சந்திரகுப்தர் லிச்சாவி வம்சத்தைச் சேர்ந்த குமாரதேவி என்ற ஓர் இளவரசியை மணந்து கொண்டதினுல், குப்தர்கள் ஆதிக்கம் உயர்வதற்கு காரணமாயிற்று. இச் செய்தி சில நாணயங்களின் மூலமாகவும் நமக்குத் தெரிகிறது. சந்திரகுப்தன் லிச்சாவி ராஜகுமாரியை மணந்ததும் வெளியிட்ட நாணயங்களின் ஒருபக்கம் அரசன் ராணியிடம் மோதிரம் கொடுப்பது போலவும், அதன் கீழ் சமஸ்கிருதத்தில் ''சந்திரகுப்த'' என்றும், பின் பக்கம் ஒரு தேவதையின் உருவமும் அதன்கீழ் 'லிச்சவியா' என்று சமஸ்கிருத லிபியில் பொறித் திருக்கும்.

சந்திர குப்தருக்குப்பின் அவர் மைந்தர் சமுத்திர குப்தர் அரசரானுர். அசோக மன்னருக்குப்பின்பு பெரியதோர் இராஜ்யத்தை ஒரு ஆளுகையின் கீழ் கொண்டுவந்து ஆண்ட அரசர் இவரேயாவார். இவர் ஓர் பராக்கிரமம் பொருந்திய வீரர். கவி பாடுவதிலும், வீணை வாசிப்பதிலும் மிகத் தேர்ந்தவர். சமுத்திர குப்தர் தனது வெற்றியைக் கொண்டாடவும், தம்முடைய ஏகாதிபத்தியத்தைப் பல நாட்டு மன்னர்களும் ஒப்புக் கொள்ளுமாறும், பழைய கால வழக்கப்படி அசுவமேத யாகத்தைச் செய்து, அதற்கென்று பொன் நாணயங் களையடித்து அவற்றை ஏராளமாக வழங்கினுர். அந்த நாணயத்தின் ஒரு பக்கம் யாக மேடைக்கு எதிரே செங்கோலுடன் தான் நிற்பது போலவும், மேடையின் முன்புறம் கருட ஸ்தம்பம் ஒன்று இருப்பது போலவும் பொறித்திருக்கும். பின் பக்கம் லட்சுமி பத்மாசனத்தில் வீற்றிருக்கிருள். இவன் எட்டுவிதத் தங்க நாணயங் களை வெளியிட்டதாகத்தெரிகிறது. சில நாணயங்களின் ஒரு பக்கம் அரசன் வீணை வாசிப்பது, அரசன் பூஜை செய்வது, யானை மேலோ, குதிரை மேலோ சவாரி செய்வது, புலியையோ, சிங்கத்தையோ, காண்டா மிருகத்தையோ வேட்டையாடுவது, அமர்ந்திருப்பது இப்படி ஏதாவது ஒரு சித்திரம் அமைந்திருக்கும். மறு பக்கம் சிம்மாசனத்திலும், பத்மாசனத்திலும் லட்சுமி அல்லது அரசியின் உருவம் இருக்கும்.

**இரண்டாவது சந்திரகுப்தர்:** கி. பி. 375—413.

சமுத்திர குப்தர் இறந்த பிறகு அவர் குமாரரான இரண்டாவது சந்திர குப்தர் அரசர் ஆனுர். நானூறு ஆண்டுகளாக ஆட்சி புரிந்த, ஸித்தியர்களிடமிருந்து மாளவத்தையும், கத்தியவாரையும் அவர் வென்று தம் பேரரசின் ஒரு பகுதியாக்கிக் கொண்டார். சகாரி (சாக்கர்களின் விரோதி) விக்கிரமாதித்தன் (பராக்கிரம புருஷன்) என்றும் பட்டப் பெயர்களைச் சூட்டிக் கொண்டார்.

இரண்டாவது சந்திர குப்த விக்கிரமாதித்தியன் வெளியிட்ட நாணயங்களில் 'தேவ ஸ்ரீ மகா ராஜாதி ராஜ ஸ்ரீ சந்திரகுப்த' என்று ஸமஸ்கிருத லிபியில் பொறித்திருக்கிறது. பின்பக்கம் அரசியின் உருவத்தையும் அதன் கீழ் 'ஸ்ரீ விக்ரமா' என்ற ஸமஸ்கிருத எழுத்துக்களையும் காணலாம். மற்றெரு நாணயத்தில் அரசன் ஒரு கையில் வில்லும், இன்னெரு கையில் அம்பும் ஏந்தி நிற்கிருன். பின்பக்கம் சிம்மாசனத்தில் லட்சுமி உருவம் பொறித்திருக்கும். இவன் காலத்தில் அயோத்தியில் ஒரு பெரிய (அக்கசாலை) நாணயச் சாலையையமைத்து ஏராளமான பொன், வெள்ளி, செம்பு நாணயங்களை வெளியிட்டான்.

இரண்டாவது சந்திரகுப்தருக்குப் பின்பு குமர குப்தர், ஸ்கந்தகுப்தர் என்ற மன்னர்கள் காலத்தில் வெள்ளை ஹூணர்கள் அடிக்கடி படையெடுத்ததால் பொக்கிஷத்தில் போதுமான தங்கம், வெள்ளி இல்லாது போகவே செம்பு கலந்த தங்க, வெள்ளி நாணயங்களை வெளியிட்டார்கள். புத்தகுப்தரோடு குப்த சாம்ராஜ்யம் வீழ்ச்சி அடைந்தது. ஹூணர் ஆட்சி தலையெடுத்தது. மிஹிரகுலன் என்ற மன்னன் ஹூணமன்னர்களுள் முக்கியமானவன். இவன் வெளியிட்ட நாணயங்கள் குப்த, குஷான நாணயங்களை ஒப்பயிருக்கின்றன.

**ஹர்ஷர்** (கி. பி. 606 முதல் கி. பி. 647 வரை)

ஹூணர்களுக்குப்பின் அசோகர், சந்திரகுப்தர் முதலியவர்களைப்போல சிறந்து விளங்கிய அரசன் ஹர்ஷவர்த்தனன். சிறந்த கல்விமான். அவர் ரத்னுவளி என்ற நாடகத்தை சமஸ்கிருத மொழியில் இயற்றியுள்ளார். அவர் தாமே ராஜ்ய விவகாரங்களைக் கவனித்து, சத்திரம், சாவடிகள், தர்ம வைத்தியசாலைகள் ஏற்படுத்தினுர். சிவபெருமான், சூரியபகவான், புத்தர் முதலிய தெய்வங்களை அவர் வழிபட்டு வந்தார். நாளடைவில் பௌத்தமதக் கொள்கைகள் பல ஹர்ஷரால் பின்பற்றப்பட்டன. அவருடைய நாணயங்களின் ஒரு பக்கம் அரசன் தலையும், மறுபக்கம் ஸ்ரீ சிலாதித்ய விசுஜயி, ஸ்வர்க்கஜயி என்ற ஸமஸ்கிருத எழுத்துக்களும் பொறித்திருப்பதைக் காணலாம்.

ஹர்ஷருக்குப்பின் சந்ததியார் ஒருவருமில்லையாதலால் ஹர்ஷ ராஜ்யம் சிதைவுண்டு சிற்றரசர்கள் ஆதிக்கத்திலாயிற்று. இந்திய சரித்திரத்தில் ஹர்ஷருக்குப் பின்னர் ஐந்து நூற்றுண்டுகள் வரை, அசோகர், சந்திரகுப்த விக்ரமாதித்தர் போன்ற வீர தீரம் மிகுந்த சக்கரவர்த்தி ஒருவராகிலும் தோன்றவில்லை.



# இரவும்–பகலும்

★

ராஜம் கிருஷ்ணசாமி

நட்பு மிக உயர்ந்த பண்புகளில் ஒன்று. ஒருவரிடம் ஒருவர் கொள்ளும் ஆழ்ந்த அன்பு நட்புக்கு அடிப்படையாகிறது. இருவரின் உள்ளத்திலும் தோன்றும் ஒருமித்த உணர்ச்சி நட்புக்கு அடிகோலுகிறது.

இந்த நட்பு ஒரே இனத்தவரிடமோ, அன்றி ஒத்த குணங்களுடையவரிடம் மட்டுமோ தோன்றுவது அல்ல. ஆணுக்கும் ஆணுக்குமோ, அன்றி ஆணுக்கும் பெண்ணுக்குமோ, பெண்ணுக்கும் பெண்ணுக்குமோ ஏற்படலாம். இவர்கள், தங்களுடைய ஒத்த செய்கைகளினாலும், ஒருவரிடம் மற்றவருக்கு ஏற்படும் அன்பு காரணமாகவும், இன்னும் பல நெருக்கமான உணர்ச்சிகளாலும் நண்பர்களாகின்றனர்.

ஒருடலும் ஈருயிருமாய்ப் பழகும் சிறந்த நண்பர்களை நாம் நிறையச் சந்தித்திருக்கிறோம். ஒருவர் மற்றவருக்காகச் செய்யும் காரியங்களிலெல்லாம் உள்ளார்ந்த அன்பு மிளிரும். எத்தகைய ஆழ்ந்த அன்பினால் தோன்றிய நட்பு, ஒளவையாரிடத்து அதிகமானுக்கு இருந்திருந்தால் தனக்குக் கிடைத்த, பெறுதற்கரிய நெல்லிக்கனியை ஒளவைக்குக் கொடுத்திருப்பான்! அவனது காரியம் பக்தியினால் தோன்றியதாயினும், தூய நட்பின் முதிர்ச்சியால்தானே பக்தி தோன்றியது.

பிசிராந்தையாரும், கோப்பெரும் சோழனும் ஒருவரையொருவர் சந்திக்காமலே நட்புக்கொண்டு, தமது வாழ்நாள் முழுவதுமே ஒருவருக்கொருவர் பார்க்காமலிருந்ததாயும், ஆனால் சோழன் வடக்கிருந்தது கேட்டுத் தாமும் உயிர் நீத்தவர். எத்தகைய தூய நட்பு இது, அவர்கள் ஒருவர் புகழை ஒருவர் கேட்டு மனமொத்த உணர்ச்சிகளினால் நண்பர்களாய் வாழ்ந்தனர் என்பதைச் சங்க இலக்கியங்களில் அறியலாம்.

ஒரு சிறந்த நண்பன், தன் ஆருயிர் நண்பனுக்காக இணையற்ற தியாகம் செய்தான். இளம் வயது முதல் தோழர்கள், தன்னைக் காதலிக்கும் பெண்ணைத் தன் நண்பனும் காதலிப்பதை அறிகிறான். தான் பள்ளியில் மதிப்பெண்களில் சிறந்து விளங்குவதும் தன் நண்பன் படிப்பில் சாதாரணமாய் இருப்பதுமே தங்களிடமுள்ள வித்தியாசம். இவ்வித்தியாசம் காரணமாய் அப்பெண் தன்னை அதிகம் விரும்புகிறாள் என்பதை அறிகிறான். அந்த நண்பன் அப்பெண்ணை உளமார நேசிப்பதையும் உணர்கிறான். இவனுக்கு அப்பெண்ணின்மேல் அக்கறையில்லை. தன் நண்பனின் மகிழ்ச்சியே தன் மகிழ்ச்சி என்று நினைத்தான். அவ்வருடம் அவர்களுக்குக் கல்லூரி இறுதியாண்டு. ஆகவே சர்க்கார் பரீக்ஷையாகும். தான் திட்டமிட்ட காரியத்தைத் தன் நண்பனிடம் கூறவும், அவன் அக்காரியத்திற்கு உடந்தையாக மறுத்துவிட்டான். அவனும் அவனுக்கேற்ற நண்பன் தானே. ஆயினும் தன் முயற்சியால் அவனை இணங்கவைத்தான்

பரிக்ஷை முடிவு வெளியானபோது யாவருமே திகைத்தனர். இருவருமே தேர்வில் வெற்றி பெற்றிருந்தாலும், இவனோ மிகச்சாதாரணமாக எண்கள் பெற்றிருந்தான். ஆனால் அவன் நண்பனோ அந்த ராஜ்யத்திலேயே முதல்வனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தான். அதன் விளைவாக அவனுக்குச் சிறந்த உத்தியோகம் கிடைத்தது. அவன் காதலியும் கிடைத்தாள். இருவருமே தங்கள் தேர்வுத் தாள்களில், தங்கள் தேர்வு எண்களை மாற்றி எழுதிக்கொண்ட ரகசியம் கடைசி வரை யாருக்குமே தெரியாது. அவன் காதலிக்கும் தெரியாது. அவனும் கடைசிவரை தன் நண்பனின் தியாகத்தை மறக்கவேயில்லை. அவர்களுடைய இணையற்ற நட்பினால் தியாகம் விளைந்தது. ஒருவன் வாழ்வில் உயர்ந்தான். மற்றவன் மனதால் உயர்ந்தான், இருவருமே என்றும் நண்பர்கள் தான்.

இன்னும் சிலவகை நட்பு உண்டு இவ்வகை நட்பு மாறுபட்ட குணத்தாலும் ஏற்படுவது. இத்தகைய நட்பு ஏற்படுவது அபூர்வம். இருவரிடம் மாறுபட்ட குணங்களிருப்பினும் நண்பர்களாயிருக்கின்றனர். ஒருவனிடம் உள்ள ஏதாவதொரு சிறந்த குணத்தின் அடிப்படையாக மற்றவனுக்கு அவனிடம் நட்பு ஏற்படுகிறது. ஆனால் இடையே இருவரிடமும் பல வேறுபாட்டுக் குணங்கள். இவர்களைக் காணவே மற்றவர்களுக்கு வியப்பாயிருக்கும், எங்ஙனம் இவர்கள் சிநேகிதர்களாயினர் என்று நினைக்கத்தோன்றும். வேறுபாடுகளுக்கிடையே ஒற்றுமை தோன்றுவது அதிசயமல்லவா? ஒருவரிடமுள்ள குறையை மற்றவர் பொருட்படுத்துவதில்லை.

சிலர் நண்பர்களாயிருந்து மற்றவரிடம் கண்ட குறைகளின் காரணமாக விலகிக் கொள்வர். இவர்கள் நட்பு ஆழமானதல்ல. ஆகவே அது மறைந்து விடுகிறது, தெய்வ நியதியின் காரணமாக ஒத்த குணங்களுடையவர்கள் அதிகம் இருப்பது அபூர்வம், ஆகவே குறைகளைப் பொருட்படுத்தாது, ஒரு நல்ல குணம் இருந்தாலும் சிறந்த பண்பாளர்களிடையே நட்பு ஏற்படலாம். அவர்கள் குறைகளை ஒரு பொருட்டாக எண்ணாது, குணத்தைமதித்துதங்கள் நட்பைப் பேணுவார்கள். அவர்கள் நட்பே சிறப்புடையதாக எண்ணப்படுகிறது. குற்றங்களைக் கோபுரம் கட்டாது, குணங்களால் மாளிகை கட்டவேண்டும். அத்தகைய நட்பைக் கலையாக வளர்ப்பவர்களும் உண்டு.

ஆச்சார்ய கிருபளானியும் அவர் மனைவி சுசேதாவும் மாறுபட்ட குணத்தினர். ஆயினும் நண்பர்களானார்கள். பின் திருமணம் புரிந்துகொண்டனர். இப்

போதும் இருவரும் வெவ்வேறு கொள்கைகளுடைய வர்களாக வேறுவேறு கட்சிகளிலேயே உள்ளனர்.

கணவன் மனைவியிடமும் நல்ல நட்பு நிலவ வேண்டும், அப்போதுதான் குடும்ப வாழ்க்கை பரிமளிக்கும். இருவரும் ஒத்த குணமுடையோராய் இருக்க வேண்டிய அவசியமில்லை. அப்படியே அமையவும் மாட்டார்கள். ஆனால் இருவரும் குறைகளைப் பொருட்படுத்தாது, ஒருவர் இயல்பை மற்றவர் மதித்து நடப்பது அவசியம். இதற்கு உள்ளார்ந்த அன்பு தேவை, மனைவி, தன் குடும்பத்தில் அமைதி நிலவ வேண்டுமென்பதற்காக, தன் கணவனிடம் விட்டுக் கொடுக்கும் சுபாவமுடையவளாக நடந்து கொள்கிருள். மாருக அவள் நடந்தால் குடும்ப அமைதி குலையும். ஆகவே இருவருமே, ஆணும் பெண்ணுமே ஒருவரையொருவர் மதித்து நடக்க வேண்டும். இருவரிடமும் ஆழ்ந்த நட்பு ஏற்படும். புவியிலேயே சொர்க்கத்தை அனுபவிக்கலாம். பெண் தன் இயல்பான, இனிமையான சுபாவத்தினுல் மேலும் கணவனுக்குப் பணிந்து நடக்கிருள். அதில் பெருமையும் கொள்கிருள். ஆகவே ஆண் இதற்காகப் பயப்படத் தேவையில்லை. தான் அதிகம் இடம் கொடுத்துவிட்டால் மனைவி மீறி நடந்து கொள்வாள் என அஞ்ச வேண்டியதில்லை. ஆனுல் சில பெண்கள் இதற்கு விதிவிலக்காயிருக்கலாம். அவர்கள் வெகு சிலரே. இருவருமே தங்கள் தங்கள் இயல்பிற்கேற்ப நடந்துகொள்ள வேண்டும். பெண் பெண்ணுகத்தான் இருக்கலாம். ஆணும் ஆணுக இருந்தால் தான் அழகு. அதைவிட்டுப் பெண் ஆணின் காரியத்தைச் செய்வதோ, ஆண் அடுப்படியில் சமைப்பதோ, பொருத்தமாகயிருக்காது.

வெளியில் யாரிடமாவது கருத்து வேறுபாடு ஏற்படும்போது (வாய்ச் சண்டையோ, கைச்சண்டையோ ஏற்படும்போது) ஆண் பேசாமல் பொறுமையுடன் இருப்பான், ஆனுல் வீட்டிலோ தன் மனைவியிடம் பலத்தைக் காண்பிப்பான். அதில் என்ன பெருமை இருக்கிறது. வெளியில் தன் பலவீனம் காரணமாகப் பேசாமலிருந்துவிட்டுத் தன்னிடம் அன்போடிருக்கும் பெண்ணிடம் கோபத்தைக் காட்டுவதில் என்ன பிரயோசனம். இவன் உண்மையில் பொறுமைசாலியாயிருந்தால் தன் மனைவியிடத்துப் பொறுமையாயிருக்க வேண்டும், பிள்ளைகளிடம் பொறுமையாயிருக்க வேண்டும். பிள்ளைகள் பெரியவராகிவிட்டால் அவர்களையும் நண்பர்களாய்க் கருதலாம்.

இவையாவும் மாறுபட்ட குணத்திடையே ஒற்றுமை காணவேண்டுமென்பதையே புலப்படுத்துகிறது. ஆனுல் இதற்கு ஓரளவு தியாக உணர்ச்சி தேவைப்படுகிறது. ஒருவருக்கொருவர் தியாகம் செய்வதன் காரணமாகவே அவர்கள் நட்பு இறுக்கமடைகிறது.

சூரிய வெளிச்சம் பூமிக்கு அவசியம். சந்திரனுக்கு அவசியம். ஆனுல் சூரியனுக்குப் பூமியும் அவசியம் சந்திரனும் அவசியம். ஒன்று இல்லாவிட்டால் ஒன்றில்லை.




# திருச்சிராப்பள்ளி மார்க்கெட் கமிட்டி, திருச்சி.

போன் நெ. 767

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்.

ஜெயங்கொண்டம், அரியலூர், கரூர், ஆலங்குடி, ஆண்டிமடம், செந்துறை, மணப்பாரை, துறையூர்.

இங்கு

விற்போருக்கு :

1. கமிஷன், தரகு, மகிமை, எடைகூலி முதலிய செலவு கிடையாது.
2. சுத்தமான எடை.
3. உடனடியாகப் பணம்.
4. அதிகப்பட்ச விலை.

வாங்குவோருக்கு :

1. ஒரே இடத்தில் அதிகப்படியான சேமிப்பு வசதி.
2. தேர்ந்தெடுத்து வாங்கும் வாய்ப்பு.
3. தரகர்களின் உதவி தேவையில்லை.
4. இருப்பு, தேவை இவற்றை நிர்ணயித்தல்.

5. அன்ருட விலை நிலவரங்கள், சாக்கு வசதி, தகராறுகளை தீர்த்துக்கொள்ளும் வசதி.

இன்னும் ஏராளம் நன்மைகள் உண்டு.

நிலக்கடலை, புகையிலை, மிளகாய், எள், கரும்பு, வெல்லம், வெல்லச் சர்க்கரை, பழுப்பு சர்க்கரை, நெல், முந்திரி இவைகளை விற்று லாபமடையலாம்.

B. வெங்கடாஜலம் பிள்ளை, B.A., B.L., தலைவர்.

# சோலையில் புகுவோருக்கு

★

"ராதிகா"

மனதில் தோன்றுவதை மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டும் என்ற தவிப்புத்தான் மனித ஜாதிக்கு அறிவு தோன்றியதற்கு அறிகுறி. "இரும்பு பிடித்தவன் கையும் சிரங்கு பிடித்தவன் கையும் சும்மாயிராது" என்பது பழைய பழமொழி. எழுதவேண்டும் என்று ஆர்வம்கொண்டு பேனுபிடித்தவன் கை சும்மாயிராது என்பது தற்கால அனுபவவாக்கு. எழுத வேண்டும் என்ற ஆர்வம் உடையவர்களின் கைகளை வேண்டு மானுல் கட்டிவிடலாம். ஆனுல் அவர்களது மன உணர்ச்சிகளை எவரும் எப்படியும் கட்டிவிட முடியாது.

இலக்கிய உணர்ச்சி ஒரு பூஞ்சோலையைப் போன்றது. மக்களின் மன அமைதி நல்வாழ்வு, முன்னேற்றம், என்ற நன் நோக்கங்களின் சிறப்பை இலக்கிய உணர்வுகளில் பெறக்கூடும். இலக்கியப் பூஞ்சோலையில் குமிண் சிரிப்புப்போன்ற ரோஜா, களங்கமற்ற எண்ணத்தைப் பரப்பும் மதலை முகம்போல, எட்டச் சென்ருலும் ஒட்டி வரும், மல்லிகை, கண்டவுடன் பக்தியும் பணிவும் பெருகும் வண்ணம் உள்ள தாமரை போல இலக்கிய முயற்சிகள் அமையவேண்டும், காலம் பல கடந்தாலும், வாசகர்கள் நினைவில் தங்கும்படி மல்லிகை மணம் போல அந்த இன்ப உணர்ச்சி ஏற்படவேண்டும். பொழுது போக்குவதற்கு என்று இலக்கிய முயற்சிகள் அமைப்பது சரியல்ல. அது வெறும் காகிதப்பூவைப் போன்றதுதான் என்பதில் சந்தேகமில்லை.

மணம் வீசாவிடினும் மக்களுக்கு உகப்பானதாக அதாவது - கொன்றை மலர் - (ஊமத்தம்பூ) உன்மத்தம் பூ, செம்பருத்தி முதலிய மலர்கள் மணமற்றவை என்ருலும் ஆண்டவனுக்கு உகப்பானவை எனப்படுவது போல, நலம் தருபவையாய் விளங்கவேண்டும். கொன்றை, செம்பருத்தி, ஊமத்தம்பூ முதலான மலர்களின் மகிமையைப் பலர் அறியாததுபோல் கட்டுரை. கவிதை முதலியவற்றின் மகிமையை வாசகர்கள் பலர் அறியமாட்டார்கள், திறமை யறியாததால் விரும்பிப் படிப்பதில்லை, அவ்வளவுதான்.

தாழம்பூ மணம் வீசும் என்ருலும் பரமசிவனுல் நிராகரிக்கப்பட்டு தனக்குச் சாபம் ஏற்படுத்திக்கொண்டதுமல்லாமல் படைப்புத் தொழில் புரியும் பிரம்ம தேவருக்கும் சாபம் ஏற்பட வழி செய்தது போல் ஆபாச இலக்கியம் சில தோன்றி படிப்பவர் மனதில், அதுவும் உணர்ச்சிவசப்பட்டும் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற மனமுடைய சிலர் மனதை மயக்கியும் கலக்கியும் படுகுழியில் தள்ள வழி வகுக்கும். எனவே வீண் பகட்டும் தாழம்பூபோல் கிறங்கவைக்கும் மணம் வீசாமல் மணமில்லாமலேகூட நன்மை தருவதாய் இருத்தல்தான் சிறந்தது. தாழம்பூவில் நாம் அறியாமலே சிலசமயம் சிறு குட்டிப்பாம்பு இருந்து முகர்பவர் உயிருக்கோ கண்களுக்கோ ஆபத்தை ஏற்படுத்திவிடும். அதேபோல ஆபாச இலக்கியமானது வாழ்வை அல்லது தன்மானத்தை மரியாதையை பாழக்கித் துன்புறுத்தும் என்பதை மறக்கக்கூடாது.

சிறந்த செயல், சிறந்த எண்ணம், எப்போதும் தனக்கு வேண்டிய சந்தர்ப்பத்தை உண்டாக்கிக் கொள்ளும். ஒருவர் புத்திசாலியாய் இல்லாதவராயிருப்பினும் பாதகமில்லை. நற்குணங்கள், சீரிய சிந்தனை, அன்பு, முதலியவை இருக்குமாயின் யாருக்கும் பயப்படாத துணிவு இருக்குமாயின் வெற்றி நிச்சயம் கிடைக்கும். படிப்பவர் மனதில் தம்மையறியாமலே கருணையும் அன்பும் உறுதியும் தோன்றும்படியும் இலக்கியம் அமையவேண்டும். இலக்கியத்துக்குச் சிறப்பு, அதில் காணும் உண்மையும், அடக்கமும், அமைதிக்கு அளிக்கும் ஆதரவுமே ஆகும். சொல்வதை இங்கிதமாகக் கூறல் முறையேயன்றி இப்படிச்செய், அப்படிச் செய்யாதே என்றெல்லாம் உபதேசிப்பது, உத்தரவு இடுவது, கூடாது. அன்பில் குழைத்து, நம்பிக்கையும், பண்பும், தெளிவும், கலந்து, பரிவும் கண்யமும், தோய்ந்து எழுதப்பட்ட கருத்துக்களால் தங்களை யறியாமலே நற்செயலும் உறுதியும் கொள்ளும்படி வாசகர்கள் மனதில் பதியவேண்டும். எவர்மனதையும் புண்படுத்தாமல் ஆனுல் உண்மையை மறைக்காமல் மறைமுகமாய் கூறவேண்டும்.

மகாபாரதத்திலே முக்யமானவர் யார் என்றே தோன்ருமல் ஒவ்வொருவரும் முக்யமென்று எண்ணும்படி இருப்பது போல இலக்கியம் அமையவேண்டும். எல்லாருமே நிறைவு பெற்றவர் என்ருே குறைவு பெற்றவர் என்ருே அறுதியிட்டுக் கூருமல் துரியோதனன் சாகும் தறுவாயில் அனுதாபப்பட்டதையும், உண்மை அன்பிற்கும் நட்பிற்கும் இலக்கணமாய் உள்ளவன் என்பதையும் கூறுவதுடன், தர்மரிடமுள்ள நற்குணங்களுக்கிடையேயுள்ள சிறு குறையையும் காட்ட வியாசர் தவறவில்லை. அதைப்போல மறைமுகமாய் உண்மையை விளக்கிடல் முக்கியம். இந்த விஷயத்தில் தாயன்பு தேவை. தாய்க்கு தன் குழந்தை புத்திசாலி என்ருல் பெருமை. பொல்லாதவன் என்ருல் செல்லமாக "முரடன்" என்ருவது மறைமுகமாய் கூறுவாளல்லவா? ஆனுல் வெறுக்கமாட்டாள்.

ஒருவர் பிறர் கண்கள் மூலம்தான் தன்குறைகளை அறியமுடியும். சிந்திக்க சிந்திக்கத்தான் தெளிவு ஏற்படும். இலக்கியம் என்பது தூரத்து மல்லிகையின் மெல்லிய மணத்தைப்போன்று அமைதிகொண்டதாயிருக்கவேண்டும். பழக்க வழக்கங்கள் தேசங்களுள் மாறுபாடு இருந்தாலும் மலரை விரும்புவதில் ஒரே மாதிரி தானிருக்கின்ருர்கள்.

எந்த எண்ணங்கள் மக்களது உள்ளத்தில் பொங்கிக்கொண்டிருக்கின்றனவோ அந்த எண்ணங்களுடன் தம்மை ஐக்கியப் படுத்திக்கொண்டு செயலாற்றும்படி உந்துவதே இலக்கியம். இலக்கியம், அல்லது கலை, உலக வாழ்கிகையில் தான் தன் வாழ்வைக் காண்கிறது. உலகின் சட்டம்தான் கலையின் சட்டம், கலை, பண்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் எடுத்துக் காட்டும் கண்ணாடி. அது சில பொதுத் தன்மைகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

''மனிதருக்காக கலையே தவிர கலைக்காகவும் கலை நிபுணர்களின் திறமையை மெச்சவுமே மனிதர்களிருப்பதாய் எண்ணி பழையதே சரி புதியனவெல்லாம் மட்டம் என நினைப்பது தவறு. தற்காலம் விவாதிக்கப்பட்டு வரும் விஷயங்களை மனதில் கொண்டு, பல ஆண்டுகளாக உள்ள நூல்களை விமர்சனம் செய்து குழம்புவதில் பயனில்லை. ஒவ்வொரு நூலும் அது தோன்றிய காலத்திய வாழ்க்கையை ஒட்டியேதான் பேசும்'' என்று ஓர் மேதை கூறியுள்ளது நினைவுக்கு வருகின்றது.

இலக்கியம் நல்லமுறையில் வளர்ச்சிபெற்றால்தான் சமுதாயத்தை வாழவைக்க முடியும். இலக்கியம் வாழ்க்கையைக் கற்பனை செய்யுமேயன்றி நகல் எடுக்காது. ஆனால் கொண்ட குறிக்கோளுக்கு ஏற்ப வடிவம் பெறுகிறது. மானிட வாழ்க்கைக்காகத் தோன்றிய கலை, நோக்கம், ஒழுக்கம், வரையறை, பலன், குணம், கொள்கை முதலிய எல்லாப் பண்புகளையும் கொண்டது.

இலக்கியத்தை ரசிப்பவருக்கும், படைப்பவருக்கும் நிரம்ப வித்தியாசம் உண்டு. ''ஆஹா!'' என்று இன்பமும் மன நிறைவும் கொள்பவர் ரசிகர். படைப்பவரோ எத்தனை விளக்கமாய் கூறியும் 'அடடா! அதைக் கூறாமல் விட்டோமே! இப்படி எழுதினால் இன்னும் பூரணமாய் இருக்குமே!'' என்று தான், கூறத் தவறியதை எண்ணி வேதனை அடைவதுடன் நில்லாமல் மேலே பல இலக்கியங்களை எழுத தன் கற்பனைத் திறனை சரண் அடைகிறார்.

இலக்கிய முன்னேற்றத்திற்காக அரக்கபலம் பெறுவது நல்லதுதான். ஆனால் அரக்க மனம் படைத்தல் தவறு. மக்களின் மனதினிலே எழுச்சியை ஊட்டி புதுமையைப் புகுத்தி மறுமலர்ச்சிக்கு நீர் ஊற்றி சமயம் நேர்ந்தால் புரட்சி மொழி பேசியும் நாட்டைக் காக்க இலக்கியம் வகுப்பது தவறல்ல எப்படியும் சமூகத்துக்கு இன்பமும் நல்வாழ்வுக்கான முறையும் வகுத்துத் தரும் பொறுப்பு இலக்கியத்தைச் சார்ந்ததேயாகும்.

மற்றும், சூரியனை நாம் தினசரி பார்த்தாலும் புதுப் புதுத்தோற்றமாய் எழும்பி காண சலிப்புறுமல் பார்க்க ஆவல் ஏற்படுவதுபோல இலக்கியம் படிக்கப் படிக்கப் புதுக் குரல் எழுப்பி வசீகரப்படுத்துவதாய் இருக்க வேண்டும். உண்மை இலக்கியத்தின் சக்தியானது படிப்பவர் தன் முறையை பின்பற்றும் சக்தி படைத்ததாயிருக்க வேண்டும். தவிர சொல்லும் சொல்லிலே குறிப்பாக கருத்துகள் இருக்கவேண்டும்.

உதாரணமாக பாண்டவருக்காக கண்ணன் தூது சென்றவிடத்தில் துரியோதனன் கிருஷ்ணனைக் கொல்ல நினைக்கிறான். அதுசமயம் எல்லோருடைய முகத்திலும் ஆத்திரமும் அச்சமும் சூழ்கிறது. ஆனால் கண்ணனே துரியோதனனின் தலையை சீவக்கிளம்பிய சர்த்தகியை தமது வலது கையால் பிடித்து அடக்கி எதுவுமே நடக்காதது போல் புன்னகை புரிந்தார். அவரது பிடி உறுதியானது. முகபாவனையில் மாற்றம் இல்லையேயன்றி பிடித்த பிடியிலேயும் பார்த்த பார்வையிலும் ''சர்த்தகியே! பொறு; இது அரசசபை. நம் பலத்தையும் அறிவையும் இங்கு காட்டுவது முறையல்ல.'' என்பது போலிருக்கிறது. முகம் விருப்பு வெறுப்பற்று இருந்தது. கிருஷ்ணனின் தன்மை அப்படியிருந்ததால் தான் சொல்லில் ஆற்றல் மிகுந்திருந்தது. அதேபோல் சுருக்கமாய் ஆனால் கண்யம் குறையாமல் தெரிவிக்கப்படும் சொல்லில் ஆழ்ந்த கருத்தும் அதைப் பின்பற்றும் சக்தியும் இருக்க வேண்டும். தீரசிந்தனை செய்து சொல்வதை இதமாய் தெரிவிக்கவேண்டும்.

சிந்தனையில் உள்ளம் மூழ்கி எழுந்தால்தான் சொல்லும் எழுத்தும் தெளிவாக பண்பட்டமுறையில் பிறக்கும். சிந்திப்பதால் அறிவும் அடக்கமும் தோன்றி அனுபவத்தை அறியலாம். சிந்தனையை ஞானிகள் 'ஆத்ம விசாரணை த்யானம்' எனவும், விஞ்ஞானிகள் 'ஆராய்ச்சி, அறிவுமேம்பாடு' என்றும் மொழிகின்றனர். எப்படியாயினும் சிந்தித்து, உண்மை உணர்ந்து செயலிலீடுபட்டோமானால் நலன்காண வழி ஏற்படும். தனக்காகவோ, பிறருக்காகவோ எவருக்காயிருந்தாலும் அத்தகையோருக்குப் பயன்படும் எந்த செய்கையையும் சிந்தித்துத்தான் செயல்படவேண்டும். அந்த சிந்தனைச் செயல் சிலருக்கு விருப்பையும், சிலருக்கு வெறுப்பையும், மற்றும் சிலருக்கு விருப்பு, வெறுப்பற்ற நிலையையும் ஏற்படுத்தலாம், ஆனால் அந்தச்செய்கை நம்விருப்பு, வெறுப்பினைக் கடந்ததாய் (நம் அந்தராத்மாவின் அங்கீகாரம் பெற்றதாக) இருப்பின் அச் செய்கையில் அனைவரும் கவனம் கொள்வர். விரும்பியோ, விரும்பாமலோ அவர்களையறியாமலேயே அவர்களின் உள்ளுணர்வு அச்செயலைப் பூரணமாய் நிறைவுடன் ஏற்றுக்கொண்டுவிடும்.

சில சீமான்வீட்டுச் செல்லக் குழந்தைகளைவிட ஏழை வீட்டுக்குழந்தைகள் பல, நோயற்று புஷ்டியாகவும், திறமைசாலிகளாயும் அறிவு நிரம்பப் பெற்றும் இருப்பதைக் காண்கிறோம். அதே போல சில சமயம் அமைதியும் வசதியும் நிறைந்த சந்தர்ப்பங்களில் படைக்கப்படும் கற்பனை உருவகத்தைவிட பற்பல சோதனைகளுக்கிடையில் மிக அவசர நிலையில் உருவாக்கப்படும் இலக்கியம் சிறப்புடன் அமைந்து விடுகிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. காரணம் நெஞ்சு லேசாக இருக்கும்போது சிந்தனை இல்லை. சுமைதாங்காமல் திணறும்போது துயர்நினைவு, இன்பக் கற்பனை முதலியன தோன்றுவது இயல்பு. 'இருந்தால்' என்ற வேகத்தில் இன்ப நினைவும், அனுபவம் என்ற தொடரில் துயரக்கற்பனையின் மெருகும் ஏற்படுத்துவது, துன்பச்சுமையின் சாகசமாகும்.

கடமையின் பாதையிலே குறுக்கிடும் எல்லாவற்றையும் எதிர்த்து உழைத்தும், நன்மைக்காகப் போராடியும், தீமை நேர்ந்தால், அதுவே ஆரம்ப நன்மை எனவும், தடைகளே பின் வரும் வளர்ச்சிக்கான எச்சரிக்கையாகவும், துன்பமும் சுமையும் எதிர்ப்புமே இலக்கிய உலகில் பறக்க உதவி திசைகாட்டும் கருவியாகவும் கருதி மனம் தளராமல் மென்மேலும் உற்சாகத்துடன் முயற்சித்து, என்றோ ஓர் நாள் அமர இலக்கியம் படைக்கும் சக்தி பெறுவோம் என்ற நம்பிக்கையுடன் ஊக்கத்துடன் உழைப்பதே எழுத்தாளர்களின் இயல்பாகும்.

# நிறைவு

★

உமா குருமூர்த்தி

"...அன்புள்ள தாத்தா அவர்களுக்கு,

பாலன் அநேக நமஸ்காரம். தங்கள் கடிதம் கிடைத்தது. என் அம்மாவின் உடல்நிலையில் அபிவிருத்தி ஏற்படவில்லையே என்பதை எண்ணி தாங்கள் கவலைப்படுவதாக எழுதியிருப்பதைக் கண்டு வருந்துகிறேன். வயசு காலத்தில் தங்களுக்கு வீண் கவலை தந்ததற்கு மன்னியுங்கள். புஷ்டியான உணவு வகைகளும் நல்ல 'டானிக்'குகளும் கொடுத்தால் அம்மா சீக்கிரமே உடல் தேறி பழைய நிலையை அடையலாம் என்று டாக்டர் அபிப்பிராயப் படுகிறார். வேலை தேடி நான் அலைகையில் தற்சமயம் டாக்டரின் யோசனையைச் செயலாக்க இயலவில்லை. தாங்கள் எழுதியிருந்தபடி மூர்த்தி மாமா இதுவரை அம்மாவை வந்து கூடப் பார்க்கவில்லை!....ஒரு கடிதம் கூடப் போடவும் இல்லை!!...உடன் பிறந்த பாசமும், உள்ளத்தில் அன்பும் இல்லாத மனிதரை வலியச் சென்று வரவழைத்து உதவிபெற நாங்கள் விரும்பவில்லை. நான் விரைவில் ஒரு வேலையைத் தேடிக் கொண்டு குடும்ப பாரத்தைத் தாங்க முயற்சித்து வருகிறேன். கவலையை விடுங்கள். நிற்க.

சில நாட்களாக, நான் காலையில் வெளியே செல்லும் சமயம், மூர்த்தி மாமாவின் மனைவி கிரிஜாவை, யாம்பலம் பஸ் நிலையத்தில் காண்கிறேன். சிற்றுண்டி சம்புடமும், ஆபீஸ் கட்டுகளுமாய், காலையில் குறிப்பிட்ட நேரத்தில் தினமும் பஸ்ஸுக்காகக் காத்திருப்பதைக் காண்கையில் எங்கோ வேலைக்குச் சென்று வருவதாய்த் தோன்றுகிறது. விசாரித்ததிலும் என் ஊகம் உண்மைதான் எனத் தெரிய வந்தது. கிரிஜா மாமி, பெண்கள் பள்ளி ஒன்றில் ஆசிரியையாகப் பணி புரிகிறாள். இது தவிர, மாமா வீட்டைப் பற்றி எவ்விதத் தகவலும் தெரியாது.

தள்ளாத காலத்தில் தாங்கள் எதற்கும் மனதைத் தளர விடவேண்டாம் என்று அம்மா சொல்கிறாள். அடிக்கடி கடிதம் எழுதவும்.

அன்புள்ள,
பாலன்."

கையில் பிரித்த கடிதத்தின் வாசகங்கள், வேதராமனின் இதயத்தில் கனத்த இருளாய்ப் படருகிறது; துயரம் நெஞ்சை அழுத்துகிறது; வேதனையில் கசிந்த நீர்த் துளிகள் விழிகளில் விளிம்பிடுகின்றன.

பேரன் பாலனுடைய கடிதம் பேரதிர்ச்சியாய் அவர் உள்ளத்தைத் தாக்குகிறது. தந்தையின் சொல்லுக்கு மதிப்பளிக்காத மூர்த்தியின் மேல் அவருக்குச் சினம் பொங்கி தகித்தது.

மகனா அவன்?... அவர் பெற்ற மகனா?

அமுத ஊற்றாய்ச் சுரக்கும் அன்பு இல்லாத பாறையாக இதயம் வறண்டு கிடக்க, ஈகையற்று, பெற்ற தந்தையையும் உற்ற சகோதரியையும் புறக்கணிக்கும் 'பண்பு' அந்தப் பணத்திலிருந்து தான் விளைந்திருக்கிறதோ! மூர்த்தியின் இந்தப் 'பாராமுகம்' இதனால் தானோ?

மகள் நீலா, ஜுரத்தால் பீடிக்கப்பட்டு படுத்த படுக்கையாக இருக்கிறாள் என்று சில மாதங்களுக்கு முன்பு செய்தி கிடைத்தபோது வேதராமன் தவியாய்த் தவித்தார். தள்ளாத வயதில், தனிக்கட்டையாய், கிராமத்தில் பூர்வீகவீட்டில் காலம் கழித்துக் கொண்டிருந்தவருக்கு, கடிதம் மூலமாவது அவ்வப்போது ஆறுதல் அளித்து வந்தது மகள் நீலாதான். பொறுமைசாலியான நீலாவுக்கு வாழ்வில் எப்போதும் இல்லாமைப் போராட்டம்தான். மகளின் நல்வாழ்வை மனதில் எண்ணியே தம் சக்திக்கு மீறிய அளவில் பெரிய வரனைக் தேர்ந்தெடுத்துத் தான் மணம் செய்து கொடுத்தார். ஆனால் கணவருடைய அளவில்லாத முன் கோபத்துக்கும், ஊதாரித்தனமான செலவுகளுக்கும் தான் நீலா ஈடுகொடுக்க வேண்டியதாயிற்று. இளமையின் ஏக்கத் துடிப்புக்களையெல்லாம் நெஞ்சில் தேக்கிக்கொண்டு, பொறுமையின் பொக்கிஷமாய் புன்னகை மாறாத முகத்துடன் தாம்பத்திய வாழ்வில் உழன்று, நாற்பதை எட்டும் நிலையில் அவள்தான் எவ்வளவு நலிந்து விட்டாள்!

கிழவரின் இதயம், நீலாவைப் பற்றி நினைக்கையில் சங்கடப்பட்டது. மகளைப் பார்க்க உடனே செல்லவேண்டும் என்று அவருக்கு ஆவல் அடித்துக் கொண்டது. ஆனால் பொருளாதார நிலைமை இடமளிக்காததால் புறப்படும் எண்ணத்தை அவர் கைவிட வேண்டியதாயிற்று. நீலாவுக்கு உதவ வழியே இல்லையா?... 'சட்'டென்று கிழவர் மனதில் நம்பிக்கையின் ஒளிக்கீற்று உதயமாயிற்று.

'மூர்த்திக்கு எழுதினால் என்ன?.... உடன் பிறந்த சகோதரிக்கு உதவி செய்யாமல் கூட இருந்து விடுவானா?....'

உதயமான சில நிமிடங்களுக்கெல்லாம் மறைந்துவிடும் திருதியைச் சந்திரனைப் போல வேதராமனின் நம்பிக்கை அழிந்தது. அவனா உதவி செய்பவன்?... ஐந்தாறு வருடகாலமாக தனிமையில் தவிக்கும் தந்தையைக்கூட வந்து பார்த்திராதவன் ஒரு மாதமேனும் சிறிதாவது பணம் அனுப்பி அவருடைய தேவைகளைக் கவனியாதவன் சகோதரியின் நிலைக்கிரங்குவான் என்று அவர் எதிர்பார்த்தது தவறுதான்

என்பதை இன்று வந்த பாலனின் கடிதம் உணர்த்துகிறதே!... இதுவரை எத்தனை கடிதங்கள் போட்டிருப்பார்?... பதில் எழுதக்கூட மனமில்லையா அவர் மகனுக்கு?

கிழவரின் உள்ளத்தில் ஒட்டிக் கொண்டிருந்த நம்பிக்கையின் துகள் உதிர்ந்தது. மகனைப்பற்றி அவர் மனத்தில் வளர்த்திருந்த ஆசையெல்லாம் அலை அழித்த மணற்கோபுரமாகச் சரிகையில், வெறுப்பின் தீவிரத்தில், இதயக்கடல் கொந்தளித்தது.

தன் மகன் சர்க்கார் காரியாலயம் ஒன்றில் குமாஸ்தாவாக இருந்தவன் அவ் வேலையை விட்டு விட்டு, பிரபல மருந்துக் கம்பெனியொன்றின் பிரதிநிதியாகப் பணியாற்றுகிறான் என்று போன மாதம் பட்டணம் சென்றுவந்த, பக்கத்துக் கிராமத்தின் பட்டாமணியம்மூலம் வேதாராமன் அறிந்துகொண்டார்.

பெற்றவர்களின் பவித்திரமான அன்பும், ஆசியும் துணைநின்றதனால்தான் படித்துப் பட்டம்பெற்று உயர் பதவிக்கு வர தனக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை அவன் ஏன் உணரவில்லை?

தட்டெழுத்துப் பயிற்சிப் பள்ளியொன்றில் ஆசிரியராகப் பணிபுரிந்து, காலங்கழித்த நாட்களில், மூர்த்தியினுடைய முன்னேற்றத்துக்காக வேதராமன் பட்ட சிரமங்கள்......மகன் நிறையப் படிக்கவேண்டும், பட்டம் பெறவேண்டும், சர்க்கார்வேலையில் அமர வேண்டும் என்கிற இலட்சியத்தில் தியாகத்தின் உருவாய் விளங்கிய அவள்—மூர்த்தியின் தாய்—இன்று இருந்திருந்தால்? .........

அன்னையின் உன்னதமான அன்பு ஒரு வேளை அவன் உள்ளத்தில் கனிவையும் கழிவிரக்கத்தையும் ஏற்படுத்தியிருக்கலாம். தவப் புதல்வனின் ஆனந்த வாழ்வில் மன நிறைவு எய்து விட்ட மகிழ்வுடன், கணவருடைய வாழ்வை மாபெரும் பிரச்னையாக்கிவிட்டு, மஞ்சளும் பூவுமாக அவள் மறைந்துவிட்ட பின்னர் மகனுடைய குடும்பத்துடன் இணைந்திருக்க அவருக்கு சரிப்பட்டு வரவில்லை. படித்த மருமகளின் மனப்போக்கு பழங்கால மனிதராகிய தனக்கு ஒத்துவராது என்பது அவருடைய எண்ணம்.

ஓய்வு பெற்றபின், சொந்தக் கிராமத்தில் சின்னஞ் சிறு வீட்டில், தனிமையின் துணையுடன் நிம்மதியாகக் காலம் கழிக்க விரும்புவதாக அவர் புறப்பட்டபோது மகனும், மருமகளும், தங்களுடனேயே இருக்கும்படி வற்புறுத்துவார்கள் என்று அவர் நெஞ்சம் எதிர்பார்க்கத்தான் செய்தது. ஆனால்,—

"உங்கள் விருப்பப்படியே செய்வதற்கு நான் குறுக்கே நிற்கவில்லை அப்பா.... சௌகரியப்படி செய்யுங்கள் ..." என்று, பட்டுக்கொள்ளாமல் கூறி, தட்டிக் கழித்துவிடுவான் மகன் என்று சிறிதளவும் அவர் எதிர்பார்க்க வில்லை! உல்லாசம் நிறைந்த நகர வாழ்க்கையில், மனைவியுடன் இணைந்த இன்பமயமான தாம்பத்திய வாழ்வுக்கு தன்னை ஒரு இடையூறாகக் கருதுகிறான் அவன், என்று இடையறாது அவர் இதயம் குமைந்தது. 'தாய்க்குப் பின் தகப்பனும் தாயாதி' என்று தெரியாமலா சொல்லியிருக்கிறார்கள்?


கூட்டுறவே! துவக்கம் 9—5—62 நாட்டுறவு!

**மங்கலங்கிழார் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட்., No. J. J. 399.**

**அத்திமாஞ்சேரிப்பேட்டை P. O.**

திருத்தணி (வட்டம்). செங்கை (மாவட்டம்).

எங்களது சங்கத்தில் மிகவும் கைதேர்ந்த நெசவாளர்களைக்கொண்டு சீரிய முறையில் கீழ்க் கண்ட ரகங்களைத் தயார் செய்துகொண்டு வருகிறோம். எங்கள் சங்கத்திற்கு நேரிலோ தபால் மூலமாகவோ ஆர்டர் தந்து எங்களது சங்கத்தையும் ஏழை நெசவாளர்களையும் ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. 20×54×1×12 காடா
2. 20×54×4×8 கரைமடி
3. 20×48×4×8 ,,
4. 20×48×4×9 ,,
5. 20×48×4×10 ,,
6. 20×48×1×12 காடா
7. 20×36×4×7 சிட்டத் துண்டு
8. 20×32×4×6 ,,
9. 20×48×2×7 வேஷ்டிகள்
10. 40×54×4×8 கரைமடி
11. 40×50×4×8 ,,
12. 40×50×1×12 காடா
13. 40×50×4×9 கரைமடி
14. 40×50×4×10 ,,
15. 40×36×4×7 சிட்டத் துண்டு

திரு. மே. மு. சஞ்சீவி முதலியார், தலைவர்.
திரு. ம. ச. அருணாசல முதலியார், செயலாளர்.


அன்று புறப்பட்டு வந்தவர்தான். ஐந்து வருடங்களுக்கும் மேலாகிறது; அவரும் மகனைப்போய்ப் பார்க்கவில்லை; அவனும் அவரைக்காண ஒரு முறையேனும் வரவில்லை. அபூர்வமாகக் கடிதங்கள் வரும். அவையனைத்திலும் பட்டண வாசத்தில் பலவித சங்கடங்களும், குமாஸ்தா உத்தியோகத்து ஊதியத்தின் பற்றாக் குறைகளும், திட்டவட்டமாக வர்ணிக்கப்பட்டிருக்கும்.

எங்கே, தந்தை, தன்னிடம் பாரமாக வந்து உட்கார்ந்து கொள்ளப் போகிறாரோ, அல்லது மாதா மாதம் தன்னிடம் 'ஏதாவது' எதிர்பார்த்து கடிதம் எழுதிவிடுவாரோ என்ற பயம் இழையோடியிருக்கும் கடிதங்களாகத் தான் அவை பெரும்பாலும் இருப்பதாக அவருக்குத் தோன்றியது.

கிராமச் சூழலில், பூர்வீக ஆஸ்தியின் மூலம் வரும் அற்ப வரும்படியில் எப்படியோ அவர் காலங்கழிந்து விடுகையில் அவனிடம் சென்று கை நீட்ட வேண்டிய அவசியம் அவருக்கு ஏன் ஏற்படப் போகிறது? மகனுடைய நலனுக்காக அவர் அவனிடம் உதவி கேட்டு எழுதப் போக, சில மாதங்களாக அஞ்சு பைசா கார்டுக்குக் கூட பஞ்சமாகி விட்டது மகனுக்கு.

வேதராமனின் நெஞ்சைக் கிள்ளிய துயரம், பச்சைப் புண்ணாய் உளைந்தது. அவருடைய மனப்பிணியை ஆற்றும் மருந்து மகனிடமிருந்து எங்கே கிடைக்கப் போகிறது?

'....கிரிஜா மாமி, பெண்கள் பள்ளி ஒன்றில் ஆசிரியைப் பணி புரிவதாகத் தெரிகிறது...."

மகனைப் பற்றிய சிந்தனைப் பொதியை மனதிலிருந்து உதறி எறிந்து விட்டு, நிம்மதியாக நித்திரையை வரவழைக்க முற்படுகையில், பறந்து வந்து உடையில் ஒட்டிக் கொள்ளும் இலவம் பஞ்சைப்போல, பாலனுடைய கடிதத்தின் வாசகம், உள்ளத்தில் ஒட்டிக் கொள்கிறது. மீண்டும் ஆற்ருமை...ஆதங்கம்...

மனைவி உத்தியோகத்துக்குச் சென்று ஊதியம் தேடவேண்டிய அவசியம் அவர் மகனுக்கு ஒருபோதும் நேர்ந்திராது; ஆயினும் ஆசை யாரை விட்டது? அதிகப் படியான வரவு வந்தால் வாழ்வின் சுகங்களை மென்மேலும் அதிகரிக்கச் செய்யலாம அல்லவா ?

இரவின் பின் சாமத்தில் கண் அயருவதற்கு முன், கிழவரின் உள்ளத்தில் ஒரு தீர்மானம் உருவாகிறது. மறுநாள்:—

மாத முழுவதும் சாப்பாட்டுக்காக வேண்டும் என்று ஒதுக்கி வைத்திருந்த, நெல் மூட்டை ஒன்றை, மணியக்காரரிடம் போனவிலைக்கு விற்று, பணத்தைப் பெற்றுக்கொண்ட வேதராமன், இதயத்தில் உதயமான திட்டத்தைச் செயலாக்க மாலையில், கைத்தடியை ஊன்றிய வண்ணம் தள்ளாடித் தள்ளாடி, ஒன்றரை மைல் நடந்தே கடந்து ரெயில் நிலையத்தை அடைந்தார். இரவு பட்டணம் புறப்படும் ரெயில் கிழவரைச் சுமந்து சென்றது.

:: ::

"...அடேடே... அப்பாவா ?... வாருங்கள்.... வருவதாக கடிதம்கூடப் போடாமல்... திடீரென்று...."

திகைப்புடன் வரவேற்ற மகனுடைய குரலுக்குப் பின்னணியாக, மருமகளின் மென்மையான குரல், உதிரும் மலரிதழ்களாய் வெளிவருகிறது.

"வாருங்கள் ... சௌக்கியம் தானே?..."

"என்னவோ, நினைத்துக் கொண்டேன்; புறப்பட்டு விட்டேன்... கடிதம் போடாமல் வந்ததால் உனக்கு ஒன்றும் அசௌகரியம் இல்லையே..." என்று இதழ்கள் சொற்களை உதிர்க்கின்றன.

மூர்த்தியின் முகம் கறுத்துச் சிறுக்கிறது.

'அதென்னப்பா, அப்படிச் சொல்லி விட்டீர்கள்?....

வணங்கி எழுந்த மருமகளின் பின்னால், ஒளிந்து கொண்டு, ஆச்சரியம் தளும்பும் விழிகளை அகல விரித்து தம்மையே கூர்ந்து நோக்கும் சின்னஞ்சிறு உருவத்தை முன்னால் இழுத்து.

"தாத்தாடா...... உன் தாத்தா...... நமஸ்தே சொல்லு......" என்று மூர்த்தி கூறுகிருன். சிவந்த தளிர்க் கரங்களின் பிஞ்சு விரல்கள் கூடி இளந்தாமரை மொட்டாகக் கூப்புகின்றன. அடுத்த கணம் அப்பால கன் உள்ளே ஓடி மறைந்துவிடுகிருன். 'அறை'க்குழந்தையாக அவனைப் பார்த்ததுதான். 'தாத்தா' என்கிற நினைவும், நேசமும் இப்போது அவனுக்கு எப்படியிருக்கும்?

"நாலு வயசாகிறது... பிரபு என்று கூப்பிடுகிறோம்... உங்கள் பெயர்தான் வைத்திருக்கிறது. நர்சரி வகுப்பிலே சேர்த்திருக்கிறது......"

அந்நியருக்கு அறிமுகம் செய்விப்பது போல பேரனைப்பற்றிய விபரங்களை மகன் கூறுகையில் கிழவருக்கு நெஞ்சம் கொதிக்கிறது. 'அவள்' இருந்தால் இப்படியெல்லாம் ஏற்படுமா?......

தான் வளர்த்து ஆளாக்கிய மகனின் இல்லத்தில், இன்று, தயக்கத்துடன் அந்நியனைப்போல அடியெடுத்து வைக்க வேண்டியதாயிருக்கிறது! ஐந்து வருட கால இடைவெளியில் அறவே அற்றுப்போன பாசத்தைப் புதுப்பித்துக்கொள்ள, இன்னமும்கூட அவனுக்கு மனதில்லையா?... ஒப்புக்காக நாலு வார்த்தை பேசி விட்டு உட்புறம் சென்றவன், தன் கடமைத் தளையிலிருந்து தப்பித்துக்கொள்ளப் பார்க்கிருனே ?.....

வந்ததும் வராததுமாய் மகனிடம் குற்றப் பத்திரிகை படிக்க விரும்பாதவராய் வேதராமன் வாளாவிருந்தார். காபியும் சிற்றுண்டியும் அருந்தி விட்டு, வெளிவராந்தாவில் அமர்ந்து கொண்டிருந்தவருடைய செவிப்புலன்கள், உள்ளேயிருந்து எழுந்த உரையாடலில் ஈர்க்கப்பட்டன.

"ஏதாவது விசேஷம் இல்லாமல், இத்தனை வருஷம் கழித்து, இப்படி சொல்லாமல் கொள்ளாமல் புறப்பட்டு வந்திருக்கமாட்டார்.... எவ்வளவு நாட்கள் இருப்பாரோ?... நீ எப்படி வேலைக்குப் போவாய் கிரிஜா?......."

மூர்த்தியின் குரல் மெதுவாக ஒலிக்கிறது.

"தலைமையாசிரியை மிகவும் கண்டிப்பானவள். எனக்கு லீவுகூடக் கிடைக்காதே......"

"என்ன செய்வதென்று எனக்குப் புரியவில்லை கிரி......"

"இதிலென்ன குழப்பம்?... "வீட்டில் பொழுது போகவில்லை; படித்த படிப்பும் வீணுகிறது; வேலைக்குப் போகிருள்." என்று சொல்லுங்களேன்..."

"நாம் மாட மாளிகை வாங்கி, கூட கோபுரம் அமைத்து, செல்வத்தின் சுகத்தில் திளைத்து, சீரும் சிறப்புமாய்க் கொழிக்கிறோம் என்று அவருக்கு ஏற்கனவே நினைப்பு. இப்போது நீவேறு சம்பாதிக்கையில்... ..."

"நம் நிலைமையைப்பற்றி விளக்கமாக ஒன்றுமே அவரிடம் கூறவேண்டாம். தற்சமயம் நீங்கள் லீவில் இருப்பதாக மட்டும்...."

வேதராமனுடைய முகத்தில் கனன்று கொண்டிருந்த கோபத்தில், கழுத்து நரம்புகள் புடைத்தெழுகின்றன.

'அவள் அவனுக்கு உத்தரவு போடுகிருள், நம் நிலையைப்பற்றி விளக்கம் கூருதீர்கள் என்று.... அதற்கு அவனும்......'

இப்படியும் ஒரு ஆண்மகனு ?

"...சமையல் எல்லாம் செய்து தயாராக வைத்திருக்கிறேன்....பிரபுவை பள்ளியில் விட்டு விட்டு அப்படியே

தானும் போய்வருகிறேன்... சாயங்காலம் சீக்கிரமாகவே வந்து விடுவேன்...''

சிங்கப்பூர் செருப்புகள் ஒலிக்க, அவசரம் அவசரமாக மருமகள் கிளம்புகையில் கிழவர் நிமிர்ந்து நோக்குகிறார். சூலின் அழகு மெருகிடும் உடலின் சுமையில் அவளுக்கு மூச்சு இரைக்கிறது. . 'இந்த நிலையிலும் இவள் இப்படி 'அரக்கப் பரக்க' வேலைக்குச் செலல வேண்டியது அவசியம் தானா?.., ஹூம்! பணத்தாசை. அந்த ஆசையின் அசுர ஆட்சிக்கு அடிமையாகித் தானே அன்பைக் கூட மறந்துவிடுகிறது மனம்!"

மனைவியின் கூடவே வாசல் வரை வந்த மூர்த்தி, வராந்தாவில் தந்தையின் அருகே நாற்காலி ஒன்றில் அமருகிறான்,

"வீட்டில் பொழுது போகவில்லை.... இங்கு பக்கத்திலேயே ஒரு பள்ளியில் உபாத்தியாயினியாக வேலை பார்க்கிறாள்...''

"உம்.... நீ ஆபீஸ் போகவில்லையா?.... ஏதோ மருந்துக் கம்பெனியில் இருக்கிறாயாமே?''

மூர்த்தியின் முகம் 'சட்'டென்று மாறுதலடைகிறது.

''ஆமாம் அப்பா!... என்ன குமாஸ்தா வேலை?.... வாங்குகிற சம்பளம் சிறு குடும்பத்தைக் கூடத் தாங்கும் நிலையில் இல்லை. பட்டம் பெற்றவன் இப்படி வீணாக அவஸ்தைப் படுவானேன் என்று தான் கம்பெனியில் சேர்ந்தேன். இப்போது ஒரு வாரம் லீவில் இருக்கிறேன்...''

அந்த 'உபாத்தியாயினி'யிடம் 'பாடம்' கற்றதைத் தானே இவன் இங்கே ஒப்புவிக்கிறான்!

மகனிடம் நேரிடையாகவே விஷயங்களை விண்டு கேட்டுவிட வேண்டும் என்கிற தவிப்பை, சிரமப்பட்டு அடக்கிக் கொள்கிறார் வேதராமன். பொறுத்திருந்து பார்த்துத்தான், அவனை பணத்தின் மயக்கத்திலிருந்து விடுவித்து பாசத்தளையில் கட்டுப்படச் செய்ய வேண்டும்!

:: ::

சாப்பாடானதும் பூந்தமல்லியில் இருக்கும் மகள் நீலாவைக்கண்டு வரப்புறப்பட்டார். நீலாவை அழைத்துவந்து மூர்த்தியின் வீட்டில் ஒய்வுக்காக விட்டு விட்டு, தானும் ஒரு மாதகாலம்கூட இருந்து, பாலும், பழங்களும, 'டானிக்'குமாக வாங்கிக் கொடுக்கச்செய்து கவனித்தால்......

அப்போது அவளைப் பேணும் பொறுப்பை மூர்த்தி ஏற்றுக்கொண்டுதானே ஆகவேண்டும்!

பஸ் நிலையத்தை அடைந்தவர், தற்செயலாக, தம்முடன் ஒன்றாக தட்டெழுத்துப் பயிற்சி உபாத்தியாயராக வேலை பார்த்த, சினேகிதர் மணியத்தைச் சந்தித்தார் குசலப்ரச்னம் முடிந்தபின், மணியன் ஏதோ கேட்கத் தயங்கியவர்போல் வேதராமனின் முகத்தையே கூர்ந்து நோக்கியவண்ணமிருக்கையில்,


நல்ல தமிழில் நடுநிலையுடன் விரைவாகச் செய்தி தரும் ஒரே நாளிதழ்

## தமிழ் நாடு

மதுரையிலும், சென்னையிலுமிருந்து ஒரே நேரத்தில் வெளியாகிறது.

நிருவாக ஆசிரியர்:
திரு. கருமுத்து தியாகராசன்.

★

சந்தா விபரம் (தபால் மூலம்)

| | ரூ. ந.பை. | | ரூ. ந.பை. |
|---|---|---|---|
| ஆண்டுச் சந்தா | 31—00 | 3 மாதச் சந்தா | 7—75 |
| 6 மாதச் சந்தா | 15—50 | 1 மாதச் சந்தா | 2—60 |

மற்ற விபரங்களுக்கு:

சென்னை அலுவலகம்
40, ஒயிட்ஸ் ரோடு,
சென்னை-14.

மதுரை அலுவலகம்
திருப்பரங்குன்றம் ரோடு,
மதுரை-3.


"என்ன, ணியம்ம? என்ன யோசனை?... ஏதாவது கேட்கவேண்டுமா.'' என்று வினவினார் வேதராமன்.

''இல்லை, வேதராமா! உன் பிள்ளை மூர்த்தி, மாம்பலத்தில்தானே இருக்கிறான்... வீடு காலிசெய்ய வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருந்தானே?...''

"ஏன்?... இப்போது இருக்கும் இந்த வீட்டிற்கு என்ன?.... சிறு பங்களாவைப்போன்று, அழகாக, தனிமையாக இருக்கிறதே?......

"விஷயம் தெரிந்துதான் நீ கிராமத்திலிருந்து வந்திருக்கிறாய் என்றல்லவா நினைத்தேன்?....''

கிழவரின் உள்ளம் பரபரக்கிறது.

''என்ன விஷயம், மணியம்?...... சொந்த வீடு வாங்கியிருக்கிறானா?......எங்கே?......இதுவரை என்னிடம் சொல்லவில்லையப்பா!......மார்புக்கு மிஞ்சினால் மகன்கூட எதிரிதான் இக்காலத்தில்.......''

உணர்ச்சிக் குவியலாய் அவர் சொற்களை உதிர்க்கையில், மணியம் ஒரு கணம் தயங்கி விட்டுக் கூறுகிறார்.

'' சொந்தவீடா!... இந்த வீட்டிற்கே இரண்டு மாத வாடகை பாக்கியாம். இவ்வளவு வாடகை கொடுக்க இனி கட்டாது என்கிறான். பட்டணத்தில், தனியாக சௌகரியமாக வீடு வேண்டுமென்றால்.

நூறுக்குக் குறைந்து எங்கே கிடைக்கிறது?... அதுவும் தவிர, மூர்த்தி நாலைந்து மாதமாக வேலையில் இல்லை......"

"வேலையில் இல்லையா?.... மருந்துக் கம்பெனி ஒன்றில் இருந்தானே?...."

"மருந்துக் கம்பெனி முதல், மாங்காய் ஊறுகாய்க் கம்பெனி வரை பார்த்தாயிற்று.. ஒரு வருடமாக அவனுக்குப் போதாத காலம். ஒன்றும் சரிப்பட்டு வரவில்லை. குழந்தையை நர்சரி வகுப்பில் சேர்த்து விட்டு அவன் மனைவிதான் வாத்தியாரம்மா வேலை பார்த்து குடும்பத்தைச் சமாளித்து வருகிறாள். ஓய்வு நேரத்தில் தையல் வகுப்புக்கூட நடத்துகிறாளாம். மூர்த்தியை, இந்த மாதம் பதினைந்தாம் தேதி வாக்கில் மவுண்ட் ரோடில் ஏதோ ஒரு கம்பெனியில் வேலைக்கு எடுத்துக் கொள்வதாய்ச் சொல்லி யிருக்கிறார்களாம்...."

"எனக்கு எந்த விஷயமும் அவன் கடிதம் கூட எழுதவில்லை. போன வருடம் வரை கையிலிருந்த வேலையை, குமாஸ்தா வேலை என்று குறை கூறி, புறக்கணித்து விட்டு இப்போது இப்படி அவஸ்தைப் படுவானேன்?... இந்த நாளில் இவன்களெல்லாம் பெரியவர்கள் பேச்சை எங்கே மதிக்கிறார்கள்... அவனவன்...."

"வயசு காலத்தில் அப்பா கிராமத்தில் தனியாக இருக்கிறார் என்பதை எண்ணும் போது எனக்கு ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது... ஆனால் இங்கே வந்தால் என் கஷ்டங்களைப் பார்க்க அவர் சகிக்க மாட்டார். அதனால் தான் நான் அவரை வரவழைத்துக் கொள்ளவில்லை,' என்று என்னிடம் கூறி மிகவும் வருத்தப்பட்டான். உனக்குக் கூட இவை பற்றி ஒன்றும் எழுத வேண்டாம் என்றான்; மனது கேட்கவில்லை இன்றைக்குச் சொல்லிவிட்டேன்..."

இதற்குள் மணியன் எதிர்பார்த்துக் காத்திருந்த பஸ் வந்துவிடவே, அவர் புறப்பட்டு விட்டார். மகளைப் பார்க்கும் உத்தேசத்தைக் கைவிட்டு விட்டு, வேதராமன் வீட்டிற்கே திரும்பினார். அவர் உள்ளே நுழைகையில், கிரிஜா சிற்றுண்டி தயாரித்துக் கொண்டிருந்தாள்! மூர்த்தி தூங்கிக்கொண்டிருந்தான்.

"இன்று என்னவோ தலைமையாசிரியை நல்ல மகிழ்வுடன் இருந்தாள்... இரண்டு நாள் லீவு பெற்றுக் கொண்டு வந்து விட்டேன்..." என்று கூறிச் சிரித்தாள் மருமகள்.

"நான் இரவு ரெயிலுக்கு ஊருக்குக் கிளம்புகிறேன் அம்மா!..."

கிரிஜா திடுக்கிட்டாள். மூர்த்தியை எழுப்பி, அவசரமாகச் செய்தியைத் தெரிவித்தாள்.

"என்னப்பா! காலையில் தானே வந்தீர்கள்?....... அதற்குள்..."

"என்னவோ உன்னைப் பார்க்க வேண்டும்போல் இருந்தது; வந்தேன். ஊரில் அறுவடை சமயம். உடனே போகவேண்டும்..."

தந்தையின் மனப்போக்கை அறிந்திருந்த மூர்த்தி மறுத்துச் சொல்ல இயலாமல் தவித்தான். "என்னவோ! அப்பாவின் சுபாவமே அலாதி தான்......" என்று கிரிஜாவிடம் கூறிப் பெருமூச்செறிந்தான்.

ஊருக்குப் புறப்பட்டு வந்து ஒரு வாரம் கழிந்தது. வேதராமன் மனம் நிறைந்த திருப்தியுடன் மகனுக்குக் கடிதம் எழுதத் துவங்குகிறார். வழக்கத்துக்கு மாறாக அமைந்துவிட்டிருந்த அக் கடிதத்தைப் பல — முறை படித்துப்பார்த்து நிறைவு கொண்டார்,

"...இங்கிருக்கும் வீட்டையும் நிலத்தையும் விற்றுவிட்டேன். உடலில் வலுவிருக்கும்போது, ஓய்வுபெற்று வீணே உட்கார்ந்திருக்க நான் விரும்பவில்லை. அங்கு தட்டெழுத்துப் பயிற்சிப் பள்ளி ஒன்று நடத்த உத்தேசம். என் நண்பர் மணியத்தின்மூலம் அதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்தாகிவிட்டது. சில தினங்களில் பணத்துடன் புறப்பட்டு உன்னிடம் வந்து ஆவன கவனிக்கிறேன். கிரிஜாவை உடனடியாக வேலையை 'ராஜிநாமா' செய்யச்சொல்லு. நீலாவிற்கும் நானே பணம் அனுப்பிவிட்டேன். நீ எதற்கும் கவலைப் படவேண்டாம். உன் வீட்டுக்காரருக்கும் வாடகைப் பணம் அனுப்பியாகிவிட்டது. மற்றவை நேரில்.

அன்புடன்

**வேதராமன்**

கடிதத்தைத் தபாலில் சேர்க்கையில் கிழவரின் மனது நிறைந்து தளும்பியது.

மகன் செய்யத் தவறிய கடமையை நினைவூட்டச் சென்றவர் தம் கடமையைத் தள்ளாத வயதிலும் தொடர்ந்து செய்யப் பட்டணம் புறப்படுகிறார்.



# மலரா மொட்டு

★

"ஜீவா"

வீதியோரத்தில் சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந்தனர். தன் வீட்டுத் திண்ணையில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த அருந்தவம் சிறார் ஆடும் பல வித விளையாட்டுகளில் மிகவும் லயித்திருந்தாள். கோலி, பம்பரம் ஆடுவது, மணல் வீடு கட்டுவது, சிறு சோருக்குவது முதலிய விளையாடல்களைவிட, சில பிள்ளைகள் விளையாடிய அம்மா, அப்பா விளையாட்டைத்தான் அவள் மிகவும் ரஸித்தாள். அம்மாவாக நடித்த ஒரு சிறுமி அப்பாவாக நடித்த ஒரு சிறுவனேடு பிணங்கிக்கொள்வதுபோல் பாவனை செய்ததைக் கண்டு அவள் கல கலவெனச் சிரிக்கலானுள். இவளுடைய இச்சிரிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தது அவள் வீட்டுக்கு முன் ஓடிவந்து நின்ற ஒரு குதிரை வண்டி. இதைப் பார்த்துத் திடுக்கிட்ட அவள் வண்டிக்குள் இருப்பவர்கள் யார் எனப் பார்த்தாள். இதற்குள் மற்ருெரு குதிரை வண்டியும் அதன்பின் வந்து நின்றது.

இரண்டு வண்டிகளிலும் வயது முதிர்ந்தவர்களும் நடுத்தர வயதுள்ளவர்களுமாக ஆண், பெண்கள் இருந்தனர். அவர்கள் இடையே இருபது வயது மதிக்கத்தக்க ஒரே யொரு இளைஞன் மட்டும் காணப்பட்டான். இரண்டாவதாக வந்த குதிரை வண்டியிலிருந்து இறங்கிய அவன் அருந்தவத்தைக் கண்டு அப்படியே நின்றுவிட்டான். வண்டிகளில் வந்திருப்பவர் யார் என ஆராய்ந்துகொண்டிருந்த அருந்தவம் அவ்விளைஞன் தன்னை வெறித்து நோக்குவதைக்கண்டு விந்தையாகப் பார்த்தாள். அவன் ஏன் அப்படித் தன்னைப் பார்க்கிருன் என அவள் தன்னையே கேட்டுக்கொண்டாள்.

இதற்குள் வண்டிகள் வந்த சப்தங் கேட்டு வெளியே வந்து எட்டிப் பார்த்த அகிலாண்டம்மாள் உடனே விஷயத்தை ஊகித்துக்கொண்டவளாய், " அருந்தவம், இங்கே வா! அங்கே என்ன வேடிக்கை? யாரோ வருவதைப் பார்த்தும் கம்பம் மாட்டம் நிக்கறியே! உனக்கு வெட்கமில்லே? போ கழுதே உள்ளே" என மெல்லக் கடிந்துகொண்டாள்! அத்துடனில்லாமல் அவள் பரபரப்பாக உள்ளே ஓடி, "சிவா, சிவா, எங்கேடி இருக்கே? சீக்கிரம் வா, தலையை சீவிக்கோ, மூஞ்சைக் கழுவி நெற்றிக்கு இட்டுக்கோ. அந்தப் பனாரஸ் சேலையை எடுத்துக் கட்டிக்கிட்டு வா, ஓடு" எனப் படபடப்புடன் சொல்லிவிட்டுத் திரும்பினுள். உள்ளே நுழைந்த அருந்தவம் அன்னையினுடைய படபடப்பையும் பேச்சையும் கண்டு ஒன்றும் புரியாமல் திகைத்தாள்,

வண்டிகளில் வந்தவர்கள் வீட்டுக்குள் நுழையலாயினர். முன்னதாக வந்த மங்கையரைப் பார்த்து அகிலாண்டம்மாள், " வரணும், வரணும்" என முகத்தை மலர்ச்சியாக வைத்துக்கொண்டு வரவேற்கலானுள். வந்த பெண்மணிகளும் புன்முறுவல் புரிந்தவாறு உள் வாயிலை அடைந்தனர். அவர்களைத் தொடர்ந்து வந்த ஆடவர்களுக்கு அகிலாண்டம்மாள் அடக்க வொடுக்கமாக ஒதுங்கி நின்று வழி விட்டாள். அவள் வலது கை ஏற்கனவே உடம்பை மூடியிருந்த முந்தானையை இன்னும் நன்ருகத் தள்ளிவிட்டது. பின் அகிலாண்டம்மாள் வேலைக்காரியை நோக்கிச் சைகை காட்ட, அவள் வந்தவர்களுக்குக் கால் கழுவத் தண்ணீர் செம்பை எடுத்துக் கொடுக்கலானுள். இதற்குள் அகிலாண்டம்மாள் கூடத்தில் ஜமக்காளத்தை விரித்துப் போட்டு விட்டுக் கூடத்தை அடுத்தாற் போலுள்ள அறையின் முன் கதவோரமாக நிற்கலானுள். அவளுக்கு முன்பே அங்கு போயிருந்த அருந்தவம் தாயை நோக்கி "இவர்கள் யாரம்மா?" என மெல்லக் கேட்டாள்.

" ஐயோ, பெண்ணே ! இவ்வளவு வயசாயும் உனக்கு ஒன்றும் தெரியல்லையே! புதுசாக யாராவது வந்தா எதுக்காக வருவாங்க? பெண் பார்க்கத்தான் வருவாங்க......" என மெல்லச் சொல்லிய அகிலாண்டம்மாள், "அதிருக்கட்டும், அருந்தவம். அவர்கள் உட்காருவதற்குள்ளே எதிர்த்த அறைக்குள்ளே போயிடு, கதவை ஒருக்கணித்துக்கோ. அவர்கள் போகிற வரையிலே நீ வெளியே தலைக்காட்டக்கூடாது, தெரியுமா?" என்று கூறி அவளை உந்தினுள். தாய் எவ்வளவுக்கெவ்வளவு கெடு பிடி பண்ணினுளோ அவ்வளவுக்கவ்வளவு அசமந்தாக அருந்தவம் நடந்துகொண்டாள். அவள் சாவதானமாகக் கூடத்தைக் கடந்து எதிர் அறைக்குப் போகையில் வந்தவர்கள் அவளைக் கவனிக்கலாயினர். இளைஞனே சூழ்நிலையையே மறந்துவிட்டான். பருகத் தொடங்கிவிட்டிருந்த பாயசத்தை மீண்டும் ஆவலோடு எடுத்துப் பருகுவது போல, அவன் கண்கள் அருந்தவத்தின் சௌந்தரியத்தை அவள் பின்னேயே தொடர்ந்து சென்று ரசிக்கலாயின. அவன் நிலையை உணர்ந்த பெரியவர் ஒருவர் அவனை மெல்லத் தொட்டு உட்காருமாறு சைகை செய்தார். " இது உங்கள் குழந்தைங்களா?" என்று கேட்டுக்கொண்டே அவரும் மற்றவர்களுடன் உட்காரலானுர். மங்கையர் மட்டும் அகிலாண்டம்மாள் இருக்கும் அறையோரமாகப் போய் அமர்ந்தனர்.

"ஆமாம்" என்று அகிலாண்டம்மாள் இழுப்பாகச் சொல்லி விட்டு மங்கையரை நோக்கி, "நீங்க எங்கிருந்து வந்திருக்கிறீர்கள் என்று நான் தெரிஞ்சுக்கலாமோ? ......ஐயா ஆபீசுக்குப் போயிருக்கார். அநேகமாக அவர் வருகிற சமயம்தான். கொஞ்சம் தாமதிக்கலாமில்லையா?" என மரியாதை தொனிக்கப் பேசி அவர்கள் வாயாலேயே வந்த விஷயத்தை வினவினுள்.

" அவசரமில்லை, சாவகாசமாக ஐயா வரட்டும்" என்று மற்ருெரு கிழவர் கூறி, "ஒன்றுமில்லை நாங்கள் வந்த விஷயத்தை உங்களிடம் சொல்வதற்கென்ன! எங்க பையனுக்குக் கலியாணஞ் செய்ய நிச்சயித்திருக்

கிறோம். எங்கெங்கோ பெண் பார்த்தோம், எதுவும் பிடிக்கவில்லை. ஒன்றிருந்தா ஒன்று இல்லை. பணமிருந்தா குணமில்லை. குணமிருந்தா அந்தமில்லை. அழகும், அந்தஸ்தும், குணமும் இருந்தா நம்ம மரபையொட்டியதாய் இல்லை. 'குரங்காய் இருந்தாலும் குலத்தில் கொள்ளு' என்று நம்ம பெரியவங்க சொல்லிட்டுப் போயிருக்காங்க, இல்லையா? இப்படிப் பார்த்துக்கிட்டிருக்கச்சே தட்சிணாமூர்த்திப் பிள்ளை சொன்னார், இந்த மாதிரி இன்ன இடத்தில் பெண் இருக்கிறதென்று. 'நீங்க முதலிலே போயி பாருங்க; உங்களுக்குப் பெண் பிடிச்சுப் போயிடுத்துன்னா வந்து சொல்லுங்க. அப்புறம் கலியாணத்தை முடிச்சிவைக்கறது என் பொறுப்பு' என்று சொல்லி அனுப்பினார். அவரை உங்களுக்குத் தெரியுமோ இல்லியோ? அவர் உங்க வீட்டுக்காரருக்கு ஒன்றுவிட்ட சகோதரரின் மச்சினராம்.

அவர் எங்களுக்கும் உறவுதான். அதாவது எங்க தாய் வழியிலே முப்பாட்டனாருக்குப் பேத்தி வயிற்றுப் பேரப்பிள்ளை. அந்தச் சம்பந்தத்தினாலே நீங்களும் நெருங்கின உறவுதான் என்று சமீபத்திலேயே தெரிஞ்சுது. எல்லாம் போக்குவரத்தா இருந்தாதானே இவர்கள் நம்ம உறவு என்பது தெரியும். இடையிலே எப்படியோ விட்டுப்போயிட்டா அப்புறம் புது சம்பந்தம் போலத்தான் ஆயிடுத்து இல்லியா?'' என்று தாங்கள் வந்த விஷயத்தை விவரித்து மெல்ல உறவும் கொண்டாடலானார்.

அகிலாண்டம்மாள் மரியாதைக்காக 'ஊம்' கொட்டினாளே யொழிய, அவள் கவனமெல்லாம் சிவயோகம் தான் சொன்னபடி அலங்காரம் செய்துகொள்கிறாளா என்று அறிவதிலேயே இருந்தது.

''உங்களுக்கு இரண்டு பெண்கள்தானா?'' என்று அகிலாண்டம்மாளை நோக்கிக் கேட்டாள் ஒரு மூதாட்டி.

''இல்லை; ஒரு பையனும் இருக்கான்!''

''இப்ப போன பொண்ணு தான் மூத்ததுங்களா!'' என மற்றொரு மங்கை கேட்டாள்.

இக் கேள்வியை காதிலேயே வாங்கிக் கொள்ளாதவள்போல் அகிலாண்டம்மாள், ''இதோ வந்து விட்டேன்.'' என்று சொல்லியவாறு உள்ளே போக முயற்சித்தாள்.

பிள்ளையின் தாய், ''நாங்க பொண்களைப் பார்க்கலாமா?'' என்று நயமாகக் கேட்டாள்.

''அவர் வரட்டுமே!''

''அதற்கென்ன! அவர் வருகிறபோது வரட்டும். பொண்ணைப் பார்த்துட்டோமானா, அவர் வந்ததும் விஷயத்தைப் பேசி முடிக்கச் சௌகரியமாகயிருக்கும்'' என்று முதலில் பேசிய பெரியவர் சொன்னார்.

அகிலாண்டம்மாள் தலையை அசைத்து விட்டு உள்ளே போனாள். சிவயோகம் தன்னைச் சிங்காரித்துக் கொண்டிருந்தாள். ஆனால், அவள் முகத்தில் சோகம் படர்ந்திருந்தது.

''ஆச்சா, சிவா!'' என்று கேட்டுக்கொண்டே அகிலாண்டம்மாள் அவளை அணுகினாள்.

சிவயோகம் நெற்றியில் திலகமிட்டவாறே, ஊம் என்றாள். அவள் கடைசியாக ஒருமுறை நிலைக் கண்ணாடியில் தன்னைப் பார்த்துக்கொண்டாள்.

அகிலாண்டம்மாளும் அவள் அலங்கரிப்பை முழுதும் கவனித்துவிட்டு புடவை கொசுவத்தைச் சீர்திருத்திக் கூந்தலைப் படிமானமாகச் சீவி விட்டாள். 'சரி, வா' என்று அவள் சிவயோகத்தைத் தன்னுடன் வரச் சொன்னாள். உட்புறக் கதவு வழியாக அவள் தன் பெண்ணை மகளிர் இருக்கும் இடத்திற்கு அழைத்து வந்தாள். சிவயோகம் துயரமே உருவமாக அன்னையுடன் வரலானாள்.

அருந்தவம் இருக்கும் அறைப் பக்கம் பார்த்துக்கொண்டு தங்களுக்குள் 'குசு குசு' வென ஏதோ பேசிக்கொண்டிருந்த ஆண்களும் பெண்களும் அகிலாண்டம்மாள் வந்த அரவத்தைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தனர். அவள் பக்கத்தில் நின்றிருந்த சிவயோகத்தைக் கண்டு அவர்கள் வியப்பும் திகைப்பும் கொண்டனர். இளமை கொழிக்கும் அவளுடைய அழகு அவர்களை முற்றுங் கவர்ந்தது. அதே சமயத்தில் அவர்கள் மனக் கண்முன் அருந்தவத்தின் உருவம் தோற்றமளித்தது. அலங்கார பூஷிதையாய் இருக்கும் சிவயோகம் அழகியா? சாதாரணமாயிருக்கும் அருந்தவம் அழகியா? என்று அவர்கள் இருவருடைய அழகின் தாரதம்மியத்தையும் கட்புலனில் நிறுத்தி ஆராய்ச்சிசெய்யலாயினர். சிலருக்கு சிவயோகம் அருந்தவத்தைவிட எழிலாயிருப்பதாகப் புலப்பட்டது. இன்னும் சிலருக்கு இந்த இரு பெண்களுமே ஒரே அச்சில் வார்த்த சொர்ண விக்கிரகங்கள் போலப் பட்டது. ஆனால் இருவரில் யார் மூத்தவள் என்பதை அவர்களால் அறிய முடியவில்லை. அருந்தவம் சிவயோகத்தைவிடச் சிறிது உயரமாயிருந்தாள். ஆனால் சிவயோகம் அருந்தவத்தைக் காட்டிலும் உருண்டு திரண்டு காணப்பட்டாள். அகிலாண்டம்மாள் சிவயோகத்தை அலங்காரஞ் செய்துகொண்டு வரச் செய்திருப்பதால் இவளே பெரியவளாயிருக்க வேண்டும் என்று பெரும்பாலோர் தீர்மானித்தனர்.

இவ்வளவுக்கும் இளைஞன் மட்டும் அருந்தவம் இருக்கும் பக்கமே நாட்டமாக இருந்தான். அருகிருந்த பெரியவர் சிங்காரித்துக்கொண்டு வந்திருக்கும் பெண்ணைப் பார்க்குமாறு தூண்டவே, அவன் சிவயோகத்தைப் பார்த்தான். ஆயினும் அவன் பார்வை அவள்பால் நிலைக்கவில்லை. அவள் அழகு என்னவோ அவன் உள்ளத்தைக் கவரவில்லை. மீண்டும் அருந்தவத்திடமே அவன் நாட்டஞ் சென்றது.

''குழந்தையை இப்படிக் கொஞ்சம் வரச் சொல்லுங்களேன்; பார்க்கலாம்...'' என்று பிள்ளையின் தகப்பனார் சொன்னார்.

அகிலாண்டம்மாள் சிவயோகத்தைப் பார்த்தாள். அவள் வெட்கம் தாங்காமல் அன்னையின் பின்னே போய் மறைந்து கொண்டாள்.

''எங்க நடுவே வருவதற்கு என்ன வெட்கம், அம்மா! பிள்ளையும் பெண்ணும் ஒருத்தருக்கொருத்தர் நேருக்கும் நேர் பார்த்துக் கட்டிக்கொள்ளும் இந்தக் காலத்திலே, பெண் பார்க்க வந்த எங்களது எதிரே வருவதற்குக் கூட நீ கூச்சப்படுவது அதிசயமாகத்தான் இருக்கு.... வா, அம்மா, சும்மா! நாங்க

ஒன்னும்......'' என்று மற்ருெரு முதியவர் கூறி நிறுத்திஞர்,

பிள்ளையின் தாய், ''நாங்க ஒன்னும் அந்நியர்களில்லையம்மா, வெட்கப்படாதே! தாத்தா பார்க்கனுமென்கிருர். இப்படி வா, அம்மா !'' என்று கூறியவாறு எழுந்து சிவயோகத்தின் கையைப் பிடித்து முன்னுக்குக் கொண்டு வர முயன்ருள். இதே சமயத்தில் அகிலாண்டமும் தூண்டவே சிவயோகம் நாணத்தால் முகம் சிவக்க மெல்ல நடந்துசென்று அனைவருக்கும் வணக்கஞ் செலுத்திவிட்டுத் தலை குனிந்தவாறே விரைந்து உள்ளுக்குத் திரும்பிஞள். அப்போதும் இளைஞன் அவளை ஏறெடுத்துப் பார்க்க முயலவில்லை. பக்கத்தில் இருப்பவர்களின் வற்புறுத்தலிஞல் அவன் அவளை ஒரு விநாடிதான் பார்த்தான்.

தாய் சொன்னவாறு அறைக் கதவை ஒருக்கணித்து வைத்திருந்தாலும், தன் இயற்கைப்படி ஓரிடத்தில் ஒடுங்கி யிராமல் புத்தகத்தை யெடுப்பது போலவும் வேறு சாமான்களை யெடுப்பதுபோலவும் அறையில் குறுக்கும் நெடுக்குமாக உலாவியவாறு கூடத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளைக் கவனித்துக் கொண்டிருந்த அருந்தவத்தைச் சௌகரியமாய்ப் பார்ப்பதற்கு அவ்விளைஞனுக்கு வாய்ப்புக் கிடைத்தது. அவன் பக்கத்திலிருந்த பெரியவரைத் தீண்டி அருந்தவத்தைக் காட்டி இரகசியமாக ஏதோ சொன்ஞன்.

உடனே பெரியவர், ''ஆமாம்; இந்தக் குழந்தை பெருசுங்களா? அதோ ரூமில் இருக்கிறதே, அது பெருசுங்களா?'' என்று அகிலாண்டம்மாளைப் பார்த்துக் கேட்டார்.

இதற்கும் அகிலாண்டம்மாள் பதில் சொல்லவில்லை. எதற்கோ வேலைக்காரியைத் தேடுவது போல் பாவனை செய்தாள். அவள் முகத்தில் வேதனை காணப்பட்டது.

பெரியவர் தொடர்ந்து, ''ரூமில் இருக்கிற குழந்தைக்கு இன்னுங் கலியாணம் ஆகலேங்களா?'' என்று கேட்டார்.

இதற்குப் பதில் சொல்லாமல் மௌனமாயிருப்பது நன்ருயிராதென்று எண்ணிய அகிலாண்டம்மாள், ''இல்லேங்க'' என்று மெல்லச் சொன்ஞள்.

இதைக் கேட்டதும் இளைஞன் முகத்தில் மலர்ச்சி ஏற்பட்டது. அவன் மீண்டும் பெரியவரிடம் ஏதோ மெல்லச் சொல்லவே அவர், ''நாங்க ரூமிலிருக்கிற குழந்தையைக் கேட்டா கொடுப்பீங்களா? சின்ன பொண்ணுயிருந்தாக்கூடப் பரவாயில்லே'' என்று கேட்டார்.

அகிலாண்டம்மாள் மனக் கிலேசத்துடன் சில விநாடிகள் சும்மா இருந்து பின், 'எல்லாம் ஐயா வந்தா கேளுங்கோ; அவர் என்ன சொல்வாரோ? மேலும் அவ ஒசந்த படிப்புக்குப் படிக்கிரு. அதை முடிக்காம கலியாணம் பண்ணிக்க மாட்டாளாம். அதஞல்தான்.......'' என்று இழுப்பாகக் கூறி நிறுத்திஞள்.

அன்னையின் முகத்தில் மண்டிக்கிடந்த சோகத்தையும் பெண் பார்க்க வந்தவர்கள் கேள்விக்குச் சரியாகப் பதில் சொல்ல முடியாமல் திணறுவதையும் கண்டு சிவயோகத்தின் உள்ளத்தில் துக்கம் அதிகமாயிற்று. அதை மறைக்கவேண்டி அவள் திடீரெனப் பின்பக்கம் போய்விட்டாள். தாயின் சங்கட நிலை அருந்தவத்துக்கும் ஆற்ருமையைத்தான் உண்டுபண்ணியது. தன்னைத் திருமணஞ் செய்து கொடுப்பதற்குத் தடையாயிருக்கும் காரணத்தைச் சொல்லி விடுவதற்கென்ன? அம்மா ஏன் மறைக்க முயல்கிருள்? என்று அவள் எண்ணிஞள். தன்னிடம் இருக்கும் குறைபாட்டின் தன்மை எப்பேர்ப்பட்டது என்பதை அறிந்து கொள்ளாமல் அவள் அன்னைக்காகப் பச்சாதாபப்பட்டாள்.

''ஆமாம்; ஆமாம், அருந்தவத்தின் இஷ்டப்படி பரீட்சை யெழுதி முடித்தால் தான் அவள் கலியாண விஷயத்தைப் பற்றி நாங்களும் யோசிப்போம். அவள் பெரியவளா யிருந்தால் என்ன?'' என்று சொல்லிக் கொண்டே அப்போது தான் உள்ளே நுழைந்த சிவானந்தம் பிள்ளை, நடையில் செருப்பைக் கழற்றி வைத்து விட்டு வரலாஞர்.

பெண் பார்க்க வந்தவர்கள் அனைவரும் திரும்பி அவரைப் பார்க்கலாயினர். ''வாருங்கள்; வாருங்கள். உங்களைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிருேம்.'' என்று பெரியவர் சொல்ல மற்றவர்கள் சிவானந்தம் பிள்ளைக்கு வணக்கஞ் செலுத்தினர். பதிலுக்கு வந்தனஞ் செய்துசெய்துகொண்டே, ''இப்போதான் வந்தீர்களா?'' என்று கேட்டுக்கொண்டே, ''இருங்கள்; இதோ ஒரு நொடியில் வந்துவிடுகிறேன்'' எனச் சொல்லியவாறு சிவானந்தம் பிள்ளை தலைப்பாகை, கோட்டு, சரட்டு முதலியவைகளை ஒவ்வொன்ருகக் கழற்றி ஸ்டாண்டில் மாட்டிவிட்டுப் புறக்கடைப் பக்கம் போஞர். அகிலாண்டம்மாளும் அவரைப் பின்தொடர்ந்தாள்.

சில விநாடிகள் பிள்ளை வீட்டாரிடையே அமைதி நிலவியது. இளைஞன்தான் மௌனத்தைக் கலைத்தான்; ''அவர் சொல்லியதைப் பார்த்தா இந்தப் பெண் தான் பெரிசு போலிருக்கே! அப்படியாஞல் அதுதான் வேணுமென்று வற்புறுத்தி அவர்கள் சம்மதத்தை எப்படியும் வாங்கிடுங்க'' என்று பெரியவரையும் தந்தையையும் நெருங்கி மெல்லச் சொன்ஞன்.

''கேட்கிருேம்; தம்பி! ஆஞல் அவர் அப்படிக் கொடுக்கமாட்டார் போலிருக்கே!'' என்ருர் பெரியவர்.

''ஏன்? சின்னப் பொண்ணுக்குத்தான் என்ன? இன்னங் கேட்டா பெரிசைவிட, அது கண்ணுக்கு நிறைஞ்சிருக்கு'' என்று கூறியவாறு இவர்களின் இரகசிய ஆலோசனையில் கலந்துகொண்டார் மற்ருெருவர்.

''என்னைக் கேட்டா; சின்னப் பொண்ணையே பண்ணிக்கலாமென்பேன். பெரிசு பார்ப்பதற்கு ஆண் பிள்ளையைப் போலிருக்கு'' என்று தம் கருத்தை வெளியிட்டார் மைத்துனர் முறை கொண்ட மனிதர்.

தந்தை மகனைப் பார்த்தார். இளைஞனுக்கு முகம் சுருங்கிவிட்டது.

பெரியவர் பிள்ளையின் தந்தையை நோக்கி, "தம்பிக்குப் பெரிசுதான் பிடிச்சிருக்கு போலிருக்கு. அவன் இஷ்டத்தை கெடுப்பானேன்? அவர் வந்தா கேட்டுத் தான் பார்ப்போமே, என்ன சொல்கிறார் என்று."

"கலியாணம் பண்ணிக்கப் போகிறவன் அவன். அவன் இஷ்டத்துக்கு மாறாக நடக்கணும் என்று நான் சொல்லவில்லை. பெரிய பொண்ணைக் கொடுக்க முடியாது என்றால் அதற்காக சின்னப் பொண்ணை விட்டுட்டுப் போய்விட வேண்டாம் என்று தான் சொல்ல வந்தேன்."

"இல்லை; இல்லை, இரண்டிலொன்றை எப்படியும் முடித்துவிடவேண்டும். இப்படி பார்த்துக்கொண்டே போனால், வருகிற ஆவணி மாதத்தில் கூட அழகேசனுக்குக் கலியாணம் நடக்காது .."

தந்தையின் இம்மொழியைக் கேட்டு அழகேசன் எரிச்சல் கொண்டான். "ஆவணியில் முடியாவிட்டால் என்ன குடியா முழுகிப் போய்விடும்? எனக்கு ஒன்றும் கலியாணத்துக்கு அவசரமில்லை. பெரிய பெண்ணை நமக்குக் கொடுப்பதென்று சொன்னா, அவள் படித்து முடிக்கிறவரை நான் காத்திருக்கத் தயார். இதை அவரிடம் சொல்லுங்க" என்று கோபத்தில் தன் அபிப்பிராயத்தை வெளியிட்டுவிட்டான்.

எல்லோரும் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துக் கொண்டனர். அழகேசன் தாங்கள் பேசிக் கொண்டது அருந்தவத்தின் காதில் விழுந்துவிட்டதோ என்ற எண்ணத்துடன், அவள் எங்கிருக்கிறாள் என்று அறிய மெல்ல எட்டிப்பார்த்தான். அருந்தவமோ தங்கையிடம் காணப்பட்ட மாறுதல்களையும், தாய் வந்தவர்களுக்குச் சரியாகப் பதில் சொல்லமுடியாது அல்லலுற்ற நிலையையும் சிந்தித்தவாறே வலக்கோடியில் போடப்பட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்து மேஜை மீதிருந்த புத்தகமொன்றைப் புரட்டிக் கொண்டிருந்தாள். இதிலிருந்து அவள் தங்கள் பேச்சைக் கவனிக்கவில்லை என அழகேசன் உணர்ந்து ஆறுதலடைந்தான்.

இத் தருணத்தில் சிவானந்தம் பிள்ளை மேல் துண்டினால் முகத்தைத் துடைத்துக் கொண்டே வந்தார். பிள்ளை வீட்டார் அவர் உட்காருவதற்கு இடமுண்டாக்க நகர்ந்து உட்கார்ந்தனர்.

"பரவாயில்லை, நீங்கள் இருங்கள்" என்று சிவானந்தம் பிள்ளை சொல்லியவாறு உட்கார்ந்து, "தட்சிணா மூர்த்தி உங்களுக்கு உறவாமே! அவனா உங்களை இங்கு அனுப்பினான்?" என்று கேட்கலானார்.

"ஆமாம், அவர் எங்களுக்குச் சொந்தம் தான்... இவருக்கு..." என்று பெரியவர் ஆரம்பித்தார்.

"அதிருக்கட்டும். நீங்கள் யாருக்குப் பெண் பார்க்கிறீர்கள் ...?"

"இவருடைய பிள்ளைக்குத்தான்" என்று பெரியவர் அழகேசனின் தந்தையைச் சுட்டிக் காட்டி, "இவருக்கு ஒரே பிள்ளைதான். ஏதோ சுமாராகச் சொத்துச் சுதந்திரம் எல்லாம் இருக்கிறது. கஷ்டமில்லாமல் வாழ்க்கை நடத்தலாம்...." என்றார்.

"சொத்து சுதந்திரத்தை யெல்லாம் யார் கேட்டது? ஐயா !.... எங்களுக்குப்பணம் பெரிசில்லே... அது சரி, பிள்ளை படிக்கிறாரா? அல்லது ஏதேனும் உத்தியோகம்...."

"பத்தாவது வரை படிப்பை முடித்துக்கொண்டு இப்போது பாரி கம்பெனியில், கிளார்க்காய் வேலை பார்க்கிறான்..."

"ஓ! அப்படியா, சந்தோஷம்" என்று சொல்லியவர் தற்செயலாக அழகேசனைப் பார்த்து, "இந்தப் பிள்ளையாண்டான் யார் என்று நான் அறிந்துகொள்ளலாமோ?" என்று ஆலோசனையோடு கேட்டார்.

இந்தக் கேள்வி எல்லோரையும் திடுக்கிட வைத்தது.

ஆனால் பெரியவர் சாதுரியமாக, "இவனா? இவன் மாப்பிள்ளைக்கு ஒன்றுவிட்ட சகோதரன்...." என்றார்.

"அதுதானே கேட்டேன்? இந்தப் பிள்ளையாண்டானைப் பார்த்தா (அழகேசனின் தந்தையைக் காட்டி) அவர் முகச் சாயலாக இருக்கிறதே! ஒரு வேளை பிள்ளையோ என்று எண்ணினேன்."

"தாயாதிப் பிள்ளையோ இல்லியோ! எல்லாம் ஒன்றைப்போல் இருக்கிறது. மாப்பிள்ளையை அசப்பில் பார்த்தா இந்தப் பிள்ளையாண்டானைப் போலவே இருப்பான்..." என்று பெரியவர் சாமர்த்தியமாகப் பேசினார்.

தன்னைச் சுட்டிக் காட்டியபோது வெட்கத்தால் தலைகுனிந்து கொண்ட அழகேசன் பெரியவர் பேச்சைக் கேட்டு உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான். மற்றவர்களும் ஒருவர் முகத்தை மற்றொருவர் ஜாடையாகப் பார்த்துக் கொண்டனர். 'மாப்பிள்ளையை அசப்பில் பார்த்தா இந்தப் பிள்ளையாண்டானைப் போலவே இருப்பான்' என்று பெரியவர் சொன்னபோது உள்ளிருந்த சிவயோகத்தை வேலைக்காரி தூண்டிப் பார்க்கச் செய்தாள். 'மாப்பிள்ளை இவனைப் போலிருந்தா பரவாயில்லை' என்ற எண்ணத்தால் அகிலாண்டம்மாளின் முகத்தில் திருப்தியின் அறிகுறி தென்பட்டது. அருந்தவத்தின் காதிலும் பெரியவர் பேச்சு விழுந்தாலும் அவள் அசிரத்தையாகவே இருந்தாள்.

சிவானந்தம் பிள்ளை அழகேசனை மறுபடியும் சில விநாடிகள் பார்த்துவிட்டு, "மாப்பிள்ளை எப்படியிருப்பான் என்பதைப் பற்றி இப்போது பேச்சே அவசியமில்லையே! இந்தப் பிள்ளையாண்டானைப் போல் இருக்கட்டும், இல்லை; இந்தப் பிள்ளையாண்டானாகவேதான் இருக்கட்டுமே! — முதலில் உங்களுக்கு எங்கள் பெண்ணைப் பிடித்திருக்கிறதா என்று சொல்லுங்கள். இன்னும் யாரேனும் உறவின் முறையார் வந்து பார்த்தாக வேண்டுமா? உங்களுடைய முடிவான அபிப்பிராயம் தெரிந்த பிறகு நாங்கள் பிள்ளையை வந்து பார்க்கிறோம். பிள்ளையைப் பார்த்துத்தானே முடிவு சொல்லவேண்டும்?..." என்று கேட்டார்.

"அது வாஸ்தவந்தான். நீங்கள் வந்து பிள்ளையைப் பாருங்கள்... நாங்கள் பார்க்க வேண்டியவர்களெல்லாம் பார்த்தாகிவிட்டது." என்று பெரியவர் சொல்லிய வாறு அழகேசன் தந்தை முதலியவர்களைக் குறிப்பாக நோக்கி, "எங்களுக்கு இரண்டு பெண்களுமே பிடித்து விட்டது. ஆனால் உள்ளேயிருக்கும் குழந்தை பெரிசோ, சிறுசோ தெரியவில்லை. அதை......" என்று கூறிக் கொண்டு வந்தார்.

சிவானந்தம் பிள்ளை குறுக்கிட்டு, "அதைப்பற்றி முன்னமேயேதான் சொல்லிவிட்டோமே! படிப்பைமுடிக் காமல்..." என்று பேசி வருகையில், பெரியவர் இடை மறித்து, "அந்தக் குழந்தையின் இஷ்டப்படியே படிப்பை முடிக்கட்டும். அதுவரை நாங்கள் பொறுத்தி ருக்கிறோம்......" என்று அழகேசன் அபிப்பிராயத்தைப் பிரதிபலித்தார்.

"அந்த விஷயமெல்லாம் அப்புறம் பார்த்துக்கொள் வோம். சின்னப் பெண் உங்களுக்கு......"

சிவானந்தம் பிள்ளையின் பேச்சை அழகேசன் தந்தை இடைமறித்து நிறுத்தினர். "இதையும் எங்கள் வழியிலேயே கட்டிக்கொள்கிறோம். இந்தப் பிள்ளை யாண்டானுக்கும் வருகிற தை மாதத்தில் கலியாணம் செய்யணும் என்று ......"

சிவானந்தம் பிள்ளை படபடப்பாக, "அதெல்லாம் சரிதான்னு! இப்போ உங்களுக்குச் சின்ன பெண் வேண்டாம். அவ்வளவுதானே ! ......" என்றார்.

"நாங்கள் அப்படிச் சொல்லவில்லையே! மாப்பிள் ளைக்குப் பெரிசு பொருத்தமா இருக்கும் என்று நினைச் சோம், மற்றபடி......" என்று இழுத்தார் அழகேசன் தந்தை.

"ஏன்? சிறுசையே தான் முடிச்சுடுவோம்" என்று இதுவரை பேசாமலிருந்த அழகேசனின் தாய் தன் அபிப்பிராயத்தை வெளியிட்டாள்.

"சாவகாசமாக யோசித்து முடிவு செய்யுங்கள். அவசரமொன்றுமில்லை....... சரி! அகிலம். காபி பல காரம் எல்லாம் கொண்டா......" என்று உள்பக்கம் நோக்கி உத்திரவிட்டார் சிவானந்தம் பிள்ளை.

"அதற்கென்ன ! சாப்பிடாமலா போகப் போகி றோம்? பரவாயில்லை, இருக்கட்டும். முதலில், நீங்கள் நல்ல வார்த்தை சொல்லுங்கள்..." என்றார் பெரியவர்.

"நாங்கள் பிள்ளையை வந்து பார்க்கவேண்டாமா ? 'நாளைக்குக் கலியாணம் ! இன்னைக்கு பிடி தாம்பூலம்' என்கிற மாதிரி யிருக்கிறதே, நீங்கள் அவசரப்படு வது?" என்று கூறியவாறே சிவானந்தம் பிள்ளை எழுந் தார்.

"அதற்கில்லை ; வருகிற ஆவணியிலேயே கலியா ணத்தை முடித்து விடணும் என்று ..."

"என் அண்ணுவுக்கும் மாமனுருக்கும் சொல்லி அழைத்துக்கொண்டு அடுத்த வாரம் வருகிறோம் ; பிள்ளையைப் பார்க்க" என்றார் சிவானந்தம் பிள்ளை.


எங்கள்

**மீனுக்ஷி மெட்டல் இண்டஸ்ட்ரீஸ்**

**எவர்சில்வர் பாத்திரங்கள்**

**உழைப்புக்கு உறுதியானது.**

★

அனைவரின் ஆதரவைப்பெற்று, கைராசியுள்ள எங்கள் மலைவாசல் பாத்திரக்கடையில் வெண்கலம், பித்தளை, தாம்பரப் பாத்திரங்கள் உங்கள் விருப்பத்திற்கேற்றவாறு பெற்றுக்கொள்ளலாம்.

★

**A. P. அருணசலம் செட்டியார் சன்ஸ்,**

மலைவாசல் பாத்திரக்கடை,

**திருச்சிராப்பள்ளி-2.**

தந்தி : ஹால்மார்க். போன் : **2088.**


பிள்ளை வீட்டார் எழுந்திருக்கலாயினர். அழகே சன் முகத்தில் சிந்தனை ரேகைகள் படர்ந்தன.

*(2)*

அழகேசன் மேன் மாடியில் உள்ள சோபா வொன் றின் மீது சாய்ந்து வானவெளியை நோக்கியவாறு தீவி ரமான சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். எதையோ எடுக்க மேலே வந்த அருந்தவம் உல்லாசமாக "தண் டனிட்டேன் என்று சொல்லடி, என் சுவாமிக்கு.. நான்" என்ற இராமலிங்க சுவாமிகள் பாடலை அடிக்குரலில் பாடிக்கொண்டே கூடத்துக்குள் நுழைந்தாள். அழ கேசன் அங்கிருப்பதை அவள் கவனிக்கவே யில்லை. சிந்தனையில் ஆழ்ந்திருந்த அழகேசனும் முதலில் இவ ளைக் கவனிக்கவில்லை. அருந்தவம் அவன் இருக்கும் பக்கமாகச் சென்றபோதுதான் காலடியரவம் அவனு டைய காதில் விழுந்தது. மனைவிதான் வருகிருள் என எண்ணி அவன் அலட்சியமாயிருந்தான். அருந்தவம் பாடிவந்த குரல் வேற்றுமை அவனை நிமிர்ந்து உட்கார வைத்தது.

இதற்குள் பீரோவைத் திறந்து ஒரு புத்தகத்தை யெடுத்துக் கொண்டு திரும்பிய அருந்தவம் எதிர் சோபாவில் தங்கையின் கணவன் அமர்ந்திருப்பதைக் கண்டு விதிர்ப்புற்றாள். அடுத்த கணம் அவள் அவ் விடத்தை விட்டு அவசர அவசரமாகப் போக முயன் ருள். இடை நேரத்தில் தன்னைச் சமாளித்துக் கொண்ட அழகேசன், "அருந்தவம், இரு. ஏன் போகி ருய்..." என்று துணிவாகக் கூறியவாறு சரியாக நிமிர்ந்து உட்கார்ந்தான்.

இப்பேச்சு அருந்தவத்தைத் தடை செய்து விட்டது. மந்திரத்தால் கட்டுண்ட பாம்பு போல், அவள் போகவும் மாட்டாமல் இருக்கவும் மாட்டாமல் தயங்கி நின்றுவிட்டாள்.

அவளை அப்படியே விழுங்கிவிடுவதுபோல் வெறித்துப்பார்த்துக் கொண்டிருந்த அழகேசன், "அருந்தவம், உங்கள் வீட்டு விருந்தாளியாக வந்திருக்கும் என்னை ஏறெடுத்துக்கூடப் பார்க்க மாட்டேனென்கிருயே! இதுவா விருந்தாளிகளை உபசரிக்கும் அழகு? அதுவும் உங்கள்வீட்டு மாப்பிள்ளைக்குக் காட்டும் மரியாதை இதுதாஞ?......." என்று தமாஷாகக் கேட்டுப் பேச்சைத் தொடங்கினன்.

எதிர்பாராத விதமாக ஏகாந்தத்தில் எதிர்ப்பட்ட அதிர்ச்சியால் அடைந்த மருட்சி மெல்ல நீங்கப்பெற்ற அருந்தவம், "ஏன்? உபசரணைக்கு என்ன குறைவாம்? ஒரு வாரமாகத்தான் உங்களுக்கு ராஜோபசாரம் நடக்கிறதே! போதாக் குறைக்கு நாளை தீபாவளிக்கு இன்றைக்கே தடபுடல் படுகிறது. கோடிப்பட்டு வேஷ்டியென்ன! சரிகைக்கரை போட்ட அங்கவஸ்திரமென்ன! வைர மோதிரமென்ன! எல்லாம் அப்பா உங்களுக்காக வாங்கி வந்திருக்கிருர். ராஜா நீங்கள் கோபித்துக் கொள்ளப்போகிறீர்கள் என்று சிவா அம்மாவுடன் பறந்து பறந்து வேலை செய்கிருள்! அப்படியிருக்க......" என்று கேட்டு நிறுத்தினுள்.

அருந்தவம் பேசும் போது ஏற்படும் அதரத் துடிப்பில் காணப்பட்ட அழகிலேயே உள்ளத்தைப் பறிகொடுத்து மயங்கியிருந்த அழகேசன், "அது கிடக்கட்டும், அருந்தவம்! நான் இங்கே வந்திருக்கும்போதெல்லாம் நீ ஏன் என் எதிரிலேயே வரமாட்டேனென்கிருய்? ஏன் என்னைப் பார்த்தால்........" என்று கேட்டு நிறுத்தினன்.

அருந்தவம், "அதெல்லாம் ஒன்றுமில்லை. அம்மாவின் கண்டிப்பான உத்திரவு, நீங்கள் இங்கு வந்திருக்கும் சமயத்தில் உங்கள் எதிரில் நடமாடக்கூடாது, பேசக்கூடாது என்று. இதற்குக் காரணம் என்னவென்று யோசித்து யோசித்துப் பார்க்கிறேன். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை......" என்று யோசனையோடு சொல்லிவிட்டு, "நீங்கள் இங்கே இருப்பது எனக்குத் தெரியாது. காபி சாப்பிட்டுவிட்டு வெளியே போனீர்கள் என்றுநினைத்தேன். இல்லாவிடில் நான் மேல்மாடிக்கே வந்திருக்க மாட்டேன்....இப்போது நீங்கள் இருக்கும் சமயத்தில் நான் இங்கு வந்திருப்பது தெரிந்தால் அம்மா என்னைக் கோபித்துக்கொள்வாள். நான் போகிறேன்......" என்று கூறிப்போக முயன்ருள்.

கள்ளங் கபடமற்ற குழந்தையைப் போல் அவள் பேசுவதைக் கேட்டு அழகேசன் ஆச்சரியமுற்ருன். அவன் அருந்தவத்தைத் தடுத்து, "இரு, அருந்தவம்! நீ என் எதிரில் ஏன் வரக்கூடாதாம். நான் உன்னை விழுங்கிவிடுவேஞமா? உன்னை விழுங்குவதற்கு நான் என்ன புலியா? சிங்கமா? உம், உங்க அம்மா அசல் நாட்டுப்புறம் போலிருக்கே.... அதனுல் தான் அவர்கள் கூடவயசுக் குமரி போலஎன் எதிரிலே வரக் கூச்சப் படுகிருர்கள்!... சுத்தக்கட்டுப் பெட்டி" என்று ஏளனமாகப் பேசினுன்.

அருந்தவம், "என்னை எதற்காகக் கூப்பிட்டீர்கள்? ஏதாயினும் வேணுமா? சொன்னுல் உடனே கீழே போய்சிவாவிடம் கொடுத்தனுப்புகிறேன்......" என்ருள்.

அழகேசனுடைய கண்கள் அவளுடைய செளந்தரியத்தில் லயித்திருந்ததால் ஒன்றும் பேசாமலிருந்தான்.

அருந்தவம் அவனை ஒருவிதமாகப் பார்த்துவிட்டு "என்ன, என்னை எதற்கோ கூப்பிட்டுவிட்டு மெளனஞ் சாதிக்கிறீர்கள். ஏதாயினும் சொல்வதானுல் சீக்கிரம் சொல்லுங்கள்...... இல்லையானுல், சிவாவை இங்கு அனுப்பட்டுமா?" என்று கேட்டாள்.

அழகேசன் உணர்வு பெற்றவனுய், "இரு; அருந்தவம், ஏன் இப்படி அவசரப்படுகிருய்?... இப்படி வாயேன். ஒரு சேதி சொல்கிறேன். கேட்டுவிட்டுப் போ.... நான் உன்னைத்தனியாகக்கண்டு என் மனத்தை வாட்டி வரும் ஒரு விஷயத்தை உன்னிடம் சொல்லி ஆற்றிக் கொள்ள வேண்டுமென்று, இங்கே வரும்போதெல்லாம் பிரயத்தனப்பட்டிருக்கிறேன். இதுவரை அதற்குச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை...... இன்றுதான் ......" என்று இழுத்தான்.

அருந்தவம் வியப்புணர்ச்சி தாங்காமல் அழகேசனை ஏறிட்டுப் பார்த்தாள்,

அவள் முகமாறுதலைக் கடைக்கணித்தவாறிருந்த அழகேசன், "ஆமாம். உனக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கும். ஆனுல் விஷயத்தைக் கேட்ட பிறகு என் பால் கட்டாயம் அநுதாபங் கொள்வாய். நான் உன்னை முதன் முதலாகப் பார்த்ததும் என்னைப் பிடித்துக் கொண்ட மோஹினியாகிய நீ என்னை விடாமல் அல்லும் பகலும் ஆட்டி வருகிருய்... நான் என் செய்வேன்?..." என்று கூறிப் பெருமூச்செறிந்தான்.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?... உங்களுடைய கண்களுக்கு நான் என்ன மோஹினிப் பிசாசாகவா தோன்றுகிறேன்?" இப்படிச் சொல்லும்போது அருந்தவம் புன்னகை புரிந்தாள்.

"மோஹினிப் பிசாசு அல்ல; மோஹினி தேவதை நீ. இந்தத் தேவிக்குப் பக்தனுக வேண்டுமென்றுதான் நான் தவங்கிடந்தேன். சதிகாரர்கள் என்னை ஒரு சாதாரணப் பெண்ணுக்குத் துணையாக இருக்குமாறு செய்துவிட்டார்கள்."

"என்ன, என்னென்னவோ பேசுகிறீர்களே!"

"என் உள்ளத் தாபத்தை நீ எங்கே உணரப் போகிருய்? நீ தான் குழந்தை போல இருக்கிருயே!..." என்று அழகேசன் ஆற்ருமையோடு பேசத் தொடங்கி, "அதிருக்கட்டும். போன ஆனி மாதத்தில் எங்கள் வீட்டாருடன் பெண் பார்க்க வந்தேனே; உனக்குத் தெரியுமோ?" எனக் கேட்டான்.

"தெரியாமலென்ன? அதுதான் அம்மா, அப்பா எல்லாம் இன்னமும் சொல்லிச் சொல்லிச் சிரிக்கிருர்களே! பெண்ணை நேரே பார்த்துக் கட்டிக்கொள்ள மாப்பிள்ளை என்ன உத்தி செய்து கொண்டு வந்தார், பார்த்தாயா? என்று."

"என்ன உத்தி பண்ணிக்கொண்டு வந்து என்ன பிரயோஜனம்? நான் பார்த்து ஆசைப்பட்ட மனமோஹினியை மணந்துகொள்ளக் கொடுத்து வைக்க வில்லையே ..!"

"நீங்கள் பேசுவதெல்லாம் புதிராகவே இருக்கிறதே!"

பழைய நினைவிலேயே ஆழ்ந்திருந்த அழகேசன் அவள் சொல்வதைக் கவனியாது, "நாங்கள் வண்டியில் வந்த போது நீ தெருத் திண்ணையில் நின்றிருந்ததும், நான் வண்டியை விட்டு இறங்கும் போதே உன்னைப் பார்த்து நின்று விட்டதும் உனக்கு ஞாபகமிருக்கிறதா?..." என்று கேட்டு நிறுத்தினான்.

"அதையெல்லாம் இப்போது ஏன் ஞாபகப் படுத்திக்கேட்கிறீர்கள்?..."

"காரணமில்லாமலா? அன்று உன்னைப் பார்த்த மாத்திரத்திலேயே என் உள்ளத்தை உன்னிடம் பறிகொடுத்து நின்றவன் தான் அதை மீட்க முடியாமல் இன்னமும் திண்டாடிக் கொண்டிருக்கிறேன். 'நாம் நினைத்தபடி கிடைக்காத உன்னை, நினைத்துக்கொண்டிருப்பது தவறு' என்று நான் எத்தனையோ முறை என் உள்ளத்தை உன்னிடமிருந்து மீட்டுக் கொள்ள மிகவும் முயன்றேன். ஆனால் பயன் படவில்லை. நாளுக்கு நாள் உன் நினைவு வளர்ந்து என்னை அரித்துத் தின்றுகொண்டல்லவா வருகிறது?.."

அழகேசன் கண்களில் நீர் பனித்தது. அவன் ஆற்றாமையோடு மேலும் பேசத் தொடங்கி, "நான் இவ்வளவு தூரம் வேதனைப் படுவதற்கு என் பெற்றோரும் உற்றாரும் தான் காரண பூதர்கள். அவர்கள் மட்டும் நான் சொன்னபடி உறுதியாக இருந்தார்களானால், என் காதல் கட்டாயம் நிறைவேறியிருக்கும். அச்சமயம் உங்க அப்பாவும் ரொம்பப் பிகு பண்ணினார். அதைப் பார்த்து எங்க மனிதர்கள் மருண்டுபோய், தங்களுக்குப் பிடித்த சின்ன பெண்ணையும் விட்டு விட்டுப் பின்னால் திரியவேண்டாம் என்றெண்ணி, என்னை வலுக்கட்டாயப் படுத்தி உன் தங்கையை என் தலையில் கட்டிவிட்டார்கள்...!" என பெருமூச்சுடன் கூறி முடித்தான்.

அருந்தவம் ஒன்றும் பேசாமலிருந்தாள். ஆனால், அவள் முகத்தில் பச்சாதாப உணர்ச்சி பிரதிபலித்தது.

அழகேசன் தலைநிமிர்ந்து அருந்தவத்தை நோக்கி, "அருந்தவம், இவ்வளவு தூரம் நான் விஷயத்தை எல்லாம் சொல்லி வந்ததிலிருந்து என் நிலையை நீ நன்கு புரிந்துகொண்டிருப்பாய் என்று நம்புகிறேன். என்னிடம் உனக்கு அநுதாபம் ஏற்பட்டிருக்கிறதல்லவா!...... நீ என்னைப்பற்றி என்ன நினைக்கிறாய், அருந்தவம்?" என்று கேட்டான்.

அருந்தவம் லேசாகப் புன்னகை செய்து, "உங்களைப்பற்றி நான் என்ன நினைக்கப் போகிறேன்?" என்றாள்.

"இல்லை, நான் உன்னை ஒன்று கேட்கிறேன். உண்மையாகச் சொல். உனக்கு என் மீது அன்பு உண்டா?"

"இதென்ன கேள்வி? என் அருமைத் தங்கைக்குக் கணவராக வந்திருக்கும் உங்கள்மீது அன்பில்லாமல் வெறுப்பா இருக்கும்?"

"அதைச் சொல்லவில்லை. என்மீது அந்தரங்க அன்பு கொண்டிருக்கிறாயா? என்று கேட்கிறேன்......"

அருந்தவம் அழகேசனை விந்தையாக நோக்கினாள்.

"நான் கேட்பது உனக்கு உண்மையிலேயே புரியவில்லையா, அருந்தவம்? அப்படியானால், வெளிப்படையாகவே கேட்கிறேன். நான் உன்னைக் கலியாணஞ் செய்துகொள்ள விரும்புகிறேன் என்று வைத்துக்கொள். நீ மனப்பூர்வமாக என்னை மணந்துகொள்ளச் சம்மதிப்பாயா?......."

"என்ன, என்னைக் கலியாணஞ் செய்துகொள்ள விரும்புகிறீர்களா? என் தங்கையை......"

"ஏன்? உன் தங்கையைக் கலியாணஞ் செய்துகொண்டால், உன்னைக் கலியாணஞ் செய்துகொள்ளக் கூடாதென்று ஏதேனும் விதி இருக்கிறதா? என்ன! முட்டாள் ஜனங்கள் ஏதாயினும் சொல்லலாம், தங்கச்சியை முதலில் கட்டிக்கொண்டு இரண்டாவதாக அக்காவைக் கலியாணஞ் செய்துகொள்கிறானே என்று. ஊரில்லாத புது வழக்கமாயிருந்தாலென்ன? நாம் செய்து காட்டுவது, மற்றவர்களுக்கு.......!"

"ஒரு கலியாணத்துக்கு மேல்......"

"ஏன்? நீயும் நம்ம சட்டசபையில் யாரோ சில பிரகஸ்பதிகள் சேர்ந்துகொண்டு, பலதார மணங்கூடாதென்று சட்டஞ் செய்யப்போகிறார்களாமே, அவர்களைப் போல் அபிப்பிராயப்படுகிறாயா? மனுஷத்தத்துவத்தை யறியாமல் மனம் போனபடி காரியஞ் செய்யும் அவர்களுடன் சேர்ந்து நீயும்......"

அழகேசனின் விபரீதப் பேச்சு அருந்தவத்துக்கு வியப்புக்கு மேல் வியப்பைத்தான் வளர்த்தது.

அழகேசன், "அதெல்லாம் இருக்கட்டும், அருந்தவம்! நீ சொல். நான்உன்னைக் கலியாணஞ் செய்துகொள்ளத் தீர்மானித்துவிட்டேன். உன் அபிப்பிராயமென்ன? என்னை விவாகஞ் செய்துகொள்ள விருப்பந்தானே!—சொல்; உன் உள்ளத்தைத் திறந்து சொல்—மௌனத்தால் என்னைக் கொல்லாதே. என் வாழ்வு நீ சொல்லும் ஒரு மொழியில் தான் இருக்கிறது. அருந்தவம், சொல்லேன்...வாய்திறந்து" என்று கெஞ்சினான்.

அருந்தவம் அழகேசனை அனுதாபத்தோடு பார்த்தாள். அவன் சொல்லும் ஒவ்வொரு சொல்லும் அவளுக்கு மன வேதனையையுண்டு பண்ணியது. அவன் கேட்ட கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்றே அவளுக்குத் தோன்றவில்லை. சில விநாடிகளுக்குப் பின் அவள் தடுமாற்றத்துடன் பேசலானாள் —"இதுவரை எனக்குக் கலியாணத்தைப் பற்றிய எண்ணமே ஏற்படவில்லை?... அப்படியிருக்க, உங்கள் கேள்விக்கு நான் என்ன....?"

அதற்கு மேல் அவள் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவரவில்லை.

Telegrams: COOPFIRE. Telephone: 23261

The Co-operative Fire &
General Insurance Society Ltd.,
Post Box No. 1249,
MADRAS-1.
(The First of its kind in India)

PRESIDENT:
Dr. P. Natesan, M.B., B.S.

TRANSACTS:
Fire Insurance of all descriptions, Burglary, Motor Vehicles, Fidelity Guarantee, Marine, Erection and Cash-in-Transit Insurances -
ASSETS AND FUNDS EXCEED Rs. 26 LAKHS
For Particulars apply to the Society at Madras
OR
the Branch Offices at the following places.
15-B, North Maravaneri Extension,
HASTHAMPATTI, SALEM-7.
"Chandra Vilas Buildings"
HIGH ROAD, TINNEVELLY JUNCTION.

V. R. Ramachandran,
DEPUTY REGISTRAR -
CHIEF EXECUTIVE OFFICER.

"படிப்பு முடிந்த பிறகு கலியாணஞ் செய்துகொள்ளப் போவதாகத் தான் முன் சொல்லி வந்தாயாமே! அப்படியிருக்க இன்னும்...'' என்று அழகேசன் யோசனையோடு அவளை நோக்கி "இல்லை; நீ வேறு யாரையாயினும் கலியாணஞ் செய்துகொள்ள முடிவு செய்திருக்கிருயா? அதையாயினும் சொல். என்னிடம் எப்படிச் சொல்வது என்று எண்ணவேண்டாம். நீ வேறு யாரையாயினும் காதலித்துக் கலியாணஞ் செய்துகொள்ளத் தீர்மானித்தால், நான் அதைக் கெடுக்க மாட்டேன்... சொல்; அருந்தவம்'' எனக்கேட்டான்.

அருந்தவம், ''ஐயோ இது என்ன! இப்படியெல்லாம் என்னன்னவோ பேசுகிறீர்களே! உண்மையாகச் சொல்கிறேன், இந்தக் கணம் வரை எனக்குக் காதல், கலியாணம் என்பதைப்பற்றியெல்லாம் சிந்தனையே ஏற்பட்டதில்லை.......''

அழகேசன், ''ஏது? நீயும் பெரிய தேச சேவகியாய்விட்டாற்போலிருக்கிறது. அதனுல்தான், பாவம், கலியாணத்தைப் பற்றிக்கூட உனக்கு சிந்தனையெல்லாம் உண்டாகவில்லை போலும்!'' என்று கேலியாகப் பேசினுன்.

இவ்விதம் அவன் இடைமறித்து பேசுவதைக் கவனியாமல் அருந்தவம் தொடர்ந்து பேசுகையில்:– ''அது மாத்திரமல்ல; காதல் என்ருல் என்ன? கலியாணம் பண்ணிக்கொள்வது எதற்கு? என்றே எனக்கு விளங்கவில்லை. ஆணும் பெண்ணும் கலியாணஞ் செய்துகொள்வதென்ற விஷயமே 'எனக்கு விசித்திரமாகத் தோன்றுகிறது. சிறு பிள்ளைகள் பொம்மைகளை வைத்துக்கொண்டு "அம்மா, அப்பா'' விளையாட்டு விளையாடுகிருர்களே! அதைப் போலத்தான் இந்த கலியாணச் சடங்கைக் குறித்துக் கருதுகிறேன். அப்படியிருக்க...''

இப்பேச்சு அழகேசனுக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணியது. ஆகவே, அவன் இடைமறித்து "இது தான் ஸ்திரீ சாகஸம் என்பது. அருந்தவம்! உன்னுடைய சாதுரியப் பேச்சை நான் மெச்சுகிறேன். ஆனுல் அதில் நான் மயங்கிவிடமாட்டேன். நீ இவ்விதம் பேசி என்னை ஏமாற்றிவிட முடியாது. நான் உன்னை லேசில் விடமாட்டேன்......'' என்று பேசிக்கொண்டே வந்தவன் மன உணர்ச்சியைத் தாங்கமாட்டாமல் ஆவேசங் கொண்டவன்போல் எழும்பிச் சிறிது தூரத்தில் நின்றிருந்த அருந்தவத்தின் கைகளைப் பிடித்து இழுத்துத் தான்.

சிறிதும் எதிர்பாராத வகையில் அழகேசன் பிடிப்பில் சிக்கிய அருந்தவம் தன்னை விடுவித்துக்கொள்ள முடியாமல் தத்தளித்தாள். அழகேசனின் வெறிச் செயல் அவளை மூச்சுத் திணறவைத்தது. அவள் சிறிது முன் கலியாணச் சடங்கைப் பற்றிச் சொல்லியதுபோல் அழகேசன் கையில் விளையாட்டுப் பொம்மை போலச் சிக்கிக்கொண்டு திண்டாடினுள். சிறுவர்கள் கையில் சிக்கி அல்லல்படும் பொம்மைபோல் அவள் உணர்ச்சியற்றுக் காணப்பட்டாள்.

வெறியுணர்ச்சி சிறிது அடங்கிய பிறகுதான் அழகேசன் அருந்தவத்தின் உணர்ச்சியற்ற நிலையை உணரலானுன். அவனுக்கு உண்டான திகைப்புக்கு அளவேயில்லை. இத்திகைப்பினுல் அவன் பிடி சிறிது தளர்ந்தது. அருந்தவம் துவண்டு கீழே விழலானுள். இதற்குள் அழகேசன் அவளைத் தாங்கி பிடித்துத் தூக்கி சோபாவில் அமர்த்தினுன். அருந்தவம் தன்னை சமாளித்துக் கொள்ள முயன்றவளாய் எழுந்திருக்கலானுள். அலங்கோலமாய்க் கிடந்த தன் ஆடைகளைத் திருத்திக் கொண்டாள். அப்போதும் அவளுக்கு மேல் மூச்சு வாங்கியது.

இதற்குள் அழகேசன் அருந்தவத்தின் நிலையை ஒருவாறு புரிந்து கொண்டான். அவனுக்கு உண்டான ஏமாற்றம் சொல்லிமுடியாது. தன் உள்ளத்திலும் இரத்தநாளங்களிலும் இருந்து பீறிட்டெழுந்த உணர்ச்சி தணிக்கப்பட்டது அந்தரத்தில் நின்ற நிலையில் இந்த ஏமாற்றத்தையும் தோல்வியையும் அவனுல் தாங்க முடியவில்லை. ஆகவே அவன் உடம்பு பதறலாயிற்று.

''அருந்தவம், அப்படியானுல் ...... நீ! ... நீ!........',
ஏமாற்றத்தால் அவன் உள்ளத்தில் உண்டான ஏக்க ஒலியெல்லாம் இவ்வார்த்தைகளில் வெளிப்பட்டது. அவனுல் மேலே பேச முடியவில்லை.

அருந்தவம் ஒன்றும் பேசாமல் தலைகுனிந்து நின்ருள்.

அழகேசனுக்கு இச்சமயம் பழைய நினைவுகளெல்லாம் மனக்கண்முன் வந்து நின்றன. அருந்தவத்தைப் பற்றித் தங்கள் உறவினர் கேட்டபோது அகிலாண்டம்மாள் காட்டிய தயக்கம், சிவானந்தம் பிள்ளையின் மழுப்பலான பதில், அக்காவைப்பற்றி அதுவும் அவள்

கலியாணத்தைப்பற்றி பேச்சு எழும்போதெல்லாம் சிவயோகம் காட்டிய வருத்தம், கூடமான பதில் ஆகியவை குறித்து அழகேசனுக்கு இப்போதுதான் பொருள் விளங்கியது. ''ஐயோ! அருந்தவம்!'' என்று தன்னையறியாமலேயே அழகேசன் அலறினான். அவன் வெறியுணர்ச்சியெல்லாம் அடங்கித் துயரமாக மாறியது. ''அருந்தவம் நீ மலரா மொட்டு. அறிவில்லாதவர்கள் உன்னைப் பூப்பிலி என்று பழிக்கலாம். ஆனால், மற்றப் பெண்களைப்போல, நீ அரும்பி போதாகி மலர்ந்து ஆடவர்களால் மோந்து கசக்கி எறியப்படும் மலர் அல்ல என்பதை அவர்கள் எப்படி அறிவார்கள்? நீ என்றும் வாடா மலர் மொட்டு நீ நித்திய கன்னி. உன் கன்னிமை உயிர் உள்ளளவும் அழியாது. உன் அழகைக் கண்குளிரக் கண்டு மகிழலாம். ஆனால், அனுபவிக்க முடியாது. உணர்ணு மூலை உமாதேவியைப்போல, நீ தெய்வமாக வைத்துப் போற்றத் தக்கவள். தெய்வப் பிறவியான உன் முன் என் வெறியெல்லாம் மாய்ந்து ஒழிந்தது. மிருக நிலையிலிருந்து இன்றுதான் நான் மனிதனானேன். என்னை மனிதனாக்கிய உனக்கு நான் ஏழேழு பிறப்பும் கடமைப்பட்டவன்......'' என்று மொழி மலர்களால் மன உருக்கத்தோடு அவளை அர்ச்சிக்கலானான்.

இத்தருணத்தில் யாரோ கீழிருந்து படிகளின் வழியாக வரும் காலடி யோசை கேட்கவே, அழகேசன் பேச்சை நிறுத்தினான். அவன் மொழிகளைக் கேட்டு நின்றிருந்த அருந்தவமும் திடுக்கிட்டு அவன் பிடிப்பினின்று தன் கைகளை விடுவித்துக்கொண்டாள். பரபரப்பாகக் கலைந்திருந்த கூந்தலைக் கோதிக்கொண்டு, குனிந்து உடை ஒழுங்காக இருக்கிறதா எனப்பார்த்து விட்டு அவ்விடத்தினின்றும் நடக்கலானாள். அழகேசன் பரிதாபமாக அவளைப் பார்த்தவண்ணமே, அவன் பற்றியிழுத்தபோது அவள் கையிலிருந்து நழுவிவிழுந்து கிடந்த புத்தகத்தை யெடுத்து அவளிடம் கொடுத்தான். அருந்தவம் திரும்பி அதை வாங்கிக்கொண்டு நடந்தாள்.

இதற்குள் மேலே வந்துவிட்ட சிவயோகம், 'என்ன அக்கா! இங்கேயா இருந்தாய்?' அருந்தவம். எங்கே அருந்தவம்'என்று அம்மா உன்னைக்கூப்பிட்டுக் கொண்டு இருந்தார்களே!'' என்று கேட்டுக்கொண்டு எதிரே வந்தவள் அருந்தவத்தின் முகத்தைப்பார்த்துத் துணுக்குற்று நின்றுவிட்டாள். அதே சமயம் அவள் கண்கள் கணவன் இருக்குமிடத்தை நோக்கின.

அருந்தவம் போவதையே பார்த்துக்கொண்டிருந்த அழகேசன், சிவயோகம், தன்னை நோக்கிப் பார்வையைச் செலுத்தியதுமே சடக்கென முகத்தைப் பின்பக்கம் திருப்பிக்கொண்டு எதையோ எடுப்பது போலப் பாவனை செய்யலானான்.

இதற்குள் அருந்தவம் கீழே இறங்கிவிட்டாள். சிவயோகம் கணவன் இருக்கும் திசையையும் அக்கா போகும் திசையையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு, ஆழ்ந்த யோசனையோடு அழகேசனை அணுகலானாள்.



# சின்னப் பெண்ணே!

★

அய்யம்பேட்டை அமுது

வண்ணப்பூ வார்ந்தசோலை
வளமான மாலைவேலை
எண்ணம்போல் ஆடிப்பாடி
மகிழும் கண்ணே — உந்தன்
கண்ணிரண்டும் மயங்குவதேனோ
சின்னப் பெண்ணே!

பொங்கும் நல்ல இளமையிலே
பூக்கும் காதல் சோலையிலே
தங்கிருந்து புதுமைக் காண்பாய்
சின்னப் பெண்ணே! — அங்கு
தாவிவரும் இனிமை காண்பாய்
சின்னப் பெண்ணே!

மாலைமலர் அரும்பெடுத்து
மயக்கும் வெள்ளை நிலவெடுத்து
உன்னைக் காண வந்திடுவார்
சின்னப் பெண்ணே! — நீ
ஓரிடத்தில் நின்றிடுவாய்
சின்னப் பெண்ணே!

ஓடிவரும் அருவியிலே
பாடிவரும் இளமையிலே
தேடிநின்று காத்திருப்பார்
சின்னப் பெண்ணே! — அத்தான்
நாடிநின்று ஏங்கிடுவார்
சின்னப் பெண்ணே!

# இருப்பும் சிரிப்பும்

★

புரிசை சு. முருகேசன்

"இருப்பிற் கேற்ற சிரிப்பு" என்பது, பழமொழி. இதில் வரும் இருப்பென்ற சொல்லின் பொருளாகப், பொருளுடைமை, கையிருப்பு, என்பதையே நாம் கொள்ளுகிறேம். பெரும் பொருளுடையார் சிலர் முகத்தில் சோகம் தாண்டவமாடுவதை யன்றி மருந்துக்கும் சிரிப்பு வருவதில்லை. அவர்களைவிட ஆயிரம் பங்கு தாழ்ந்த எளிய மக்களும் பலர் துன்பத்தையும் இன்பமாகக் கருதி எப்பொழுதும் சிரித்த முகத்தோடு காட்சி யளிக்கவும் காண்கின்றேமல்லவா? இதை நோக்கினல் நாம் இருப்பிற்குக் கொண்ட பொருள் விருப்பிற்கிடமாகக் காணேமே. அது, வெறுப்பிற்கும் இடந்தருகிறதே. அறுவடை நாளில் இருளர் எலி வளைகளைத் தோண்டுகிறர்கள். அதில், அவர்களுக்குக் கலங்கணக்காகவும் சில சமயங்களில் நெல் கிடைத்துவிடுகிறது. எறும்பு வளைகளிலும் சிறு தானியங்கள் சில சமயங்களில் குவியல் குவியலாகக் காணப்படுகின்றன. இதை நோக்க எலிகளும், எறும்புகளும் இருப்புடையவைகள்தான், சிரிப்பி லவைகளும் பங்கு பெறுமோ ?

பட்டும், வயிர நகைச் செட்டும் தகதகக்கும் மடந்தையர் சிலரிடத்தில் படர்ந்த நகை முகமே காண்பதில்லை, மங்கல அணியன்றி பிறவணி காணு மான் விழியார் பலர் மாருத நகைமுகச் செல்விகளாக இருத்தலையும் நன்கறிவோம், காரணமென்ன? அவர்கள், நமக்குத்தான் வகை வகையான நகைகளுளவே முக நகையில்லாவிட்டால் என்னெனக் கருதுகிறர்களா? இதெல்லாம் கூர்ந்து நோக்கும்பொழுது இருப்பென்பது இந்தப் பொருளிருப்பைவிட வேருக ஒன்றுளதெனத் தோன்றுகிறது. அது எது? உள்ளம் உடைமை. யார் சொல்லுகிறது? வள்ளல் வள்ளுவர்தான் வழங்குகிறர். "உள்ளம் உடைமை உடைமைப் பொருளுடைமை நில்லாது நீங்கிவிடும்" "வெள்ளத்தனைய மலரீட்டம் மாந்தர் தம் உள்ளத்தனைய துயர்வு"

மக்களுக்கு மேல்நோக்கும், கீழ்நோக்கும் வேண்டும். எது எதற்கு மேல்நோக்கம் வேண்டும், எவற்றிற்குக் கீழ்நோக்கம் வேண்டும் என்ற சிந்தனைச் செல்வமும் வேண்டும். மேலுள்ளாரை நோக்கும் நேரத்தில் கீழ்நோக்கம் கொண்டாலும், கீழ்நோக்கும் முறையீடுகளில் மேல்நோக்கங் கொண்டாலும் துன்பமேயெய்தும். இந்நோக்கத்தின் பாகுபாடே நின்ற நிலையிலேயே இன்பத்தை அளிக்கவல்லது.

ஒரு ரெயில் பிரயாணம்; வண்டி புறப்படும் இடத்தில் ஏறிய இருவர் மேலுள்ள இரண்டு பலகைகளில் ஏறிப் படுத்துக்கொண்டார்கள். பின்னர் வந்த பலரும் கீழிடங்களில் வசதியாக அமர்ந்துவிட்டார்கள். அடுத்த ரெயில் நிலையத்தில் ஏறியவர் நிற்கத்தான் நேர்ந்தது. அதற்கும் பிந்திய நிலையம் சேர்ந்தது ரெயில். அங்கு வண்டிக்கு வந்த இருவரில் ஒருவர் ஏற முடியாமலே நின்றுவிட்டார், ஒருவர் வாயிற்படியில் ஏறி தொத்திக் கொண்டார். வண்டி ஓடுகிறது, நேரமும் ஓடுகிறது. ஆனல் சிலருக்கு மாத்திரம் வண்டியும் காலமும் நகருவதாகவே தெரியவில்லை அப்படி ரெயிலும் இரவும் சிலருக்கு ஓடுவானேன்? சிலருக்கு உறங்குவானேன் அவ்வவர்கள் நோக்கந்தான் காரணம். மேல் பலகைகளில் படுத்துத் தூங்குகின்ற வர்களைக் கண்டு கீழேயிருப்பவர் இந்த சுகம் நமக்கில்லையே யெனக் கருதினர்கள். இருப்பவர்களைப் பார்த்து நெஞ்சம் எரிந்தார்கள். நிற்பவர்களில் சிலர் நிற்பவர்கள் வாழ்வு வழியில் நிற்பவர்களுக்கு வருத்தத்தை விளைவித்தது. இவர்கள் எல்லோரிலும் இடர்பட்டார் ஏறமுடியாத ஒருவர். முழுதும் துக்கமயமாகவே யிருந்தது நன்ருகப் படுத்துறங்கும் பேர்வழிகளிலும் ஒருவர் படுக்கை கொண்டுவராமற் போனேமே, ரெயில் பலகையில் போட்டு நம்மையிப்படி ஆட்டிப் படைக்கிறதேயென அழுதுகொண்டு தான் கிடந்தார் பாவம். இந்த அழு மூஞ்சிகளுக்கிடையில் மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டே ஓ இந்த சந்திப்புக்கு வந்துவிட்டதா பொழுதும் விடியும் போல் தெரிகிறதே நல்ல ஓட்டம் நல்லவோட்டமென ரெயிலின் வேகத்தை மெச்சிக் கொள்பவர்களும் சிலர் இருந்தார்கள். இவர்கள்தான் துன்பத்தில் இன்பம் காண்கின்றவர்.

இருப்பவர் துன்பத்தைப் படுத்துள்ளவர் கருதினல், நிற்பவர்கள் துன்பத்தை இருப்பவர்கள் எண்ணினல், வழியில் நிற்பவர் துன்பத்தை உள்ளே நிற்பவர் உன்னினல் ஏறமுடியாதவரும் "சீட்டு கிடைத்துவிட்டது, மற்றவர்களைவிட அடுத்த வண்டிக்கு நாம் தான் முதல் ஆள், பார்க்கலாம்" என எண்ணினல் அனைவருக்கும் அந்தந்த இருப்பிலிருந்தே உள்ளம் குளிருமல்லவா? இவர்களில் கிடைத்ததைக் கீழ்மையாகக் கருதி கிடைக்காததற்கு ஏங்கி யிடருழந்தவர்களா? கிடைத்ததே போதுமென மற்றவர்கள் துன்பத்திற்கிரங்கி மகிழ்ந்தவர்களா? யார் இருப்புடையவர்? யாருக்கும் வரும் சிரிப்பு? "செல்வம் என்பது சிந்தையின் நிறைவே" "அல்கா நல்குரவு அவா எனப்படுமே" குமரகுருபரர் எடுத்துக்கொடுக்கும் இருப்பு இதுதான்.

வெயிலில் அலைந்து திரிந்து, உடம்பெலாம் வேர்த்து வீடு சேர்ந்த மக்கள், குளிக்காமல் உண்டியும் திண்டியு மட்டும் கொண்டவர்களாகிச், சிறிதும் உடம்பழுக்கைப் போக்காமல் படுத்துக் கொண்டால், அவர்களுக்குத் தூக்கம் வருமா? இரவெல்லாம் புரண்டு புரண்டு தொல்லையுற வேண்டியதுதானே. வந்தவுடன் குளித்துச் சிறிதும் அழுக்கில்லாமல் உடம்பைத் தூய்மை செய்துக் கொண்டு அளவாக உண்டு உறங்கச்சென்ருல் எப்படி? எது, இன்பத்திற் கிடமாவது?

உடம்பில் அழுக்கு பிடிப்பது போல உள்ளத்தில் அழுக்குபடிகிறது. உடம்பின் வேர்வையைவிட உள்

ளத்தின் வியர்வே மிக அதிகமானது. உள்ளழுக்கு எது? பேராசை. உள்ளத்தின் வியர்ப்பெது? அதுதான் பொறாமை. இந்த அழுக்கும் வியர்ப்பும் அடிக்கடி போக்கவேண்டிய அழகில் பொருள்கள். ஒரு வயிரக் கல் அழுக்கில் மறைந்திருக்கும் போது, அதை ஒளி உள்ளதாக எப்படி மதிக்க முடியாதோ அதைப் போலவே, உள்ளமும் இந்த அழுக்குகளினால் மறைந்து விடுமானால் அதை உள்ளதாகக் கொள்ளவே முடியாது. உள்ளம் உள்ளதாக வேண்டுமானால், அது அழுக்கற்ற பொருளாக ஆகவேண்டும். அந்த தூய உள்ளந்தான் உடைமையாகிறது. "உள்ளம் உடைமை உடைமை" என்றது இதைத்தான். இதுதான் மிகச் சிறந்த இருப்பு.

நமது உள்ளத்தைத் தூய்மைபடுத்தி இந்த இருப்பைத் தேடித்தரும் பெரியவர்கள் மிகப் பெரிய இருப்பாளர்கள். அவர்கள் யார்? அகத்தியர் முதலாக அறங் கூற வந்த அந்தணர்கள். நீத்தார் என வள்ளுவரால் வியந்து கூறப்பெறும் இந்த பெருமக்களே இல்லறத்தாருக்குத் தொல்லறங்கள் அனைத்தையும் வரையாது வழங்கி வந்தார்கள். அம்மாதவர்கள் உரை ஒரு காதில் கேட்டு ஒரு காதில் விட்டுவிடக் கூடியதாக இருந்ததில்லை. கேட்பவர் மனதில் நிலைப்பேறாக நிற்குந் தன்மையது. "அறன் வலியுறுத்தல்" என்ற திடப்பட்ட திருப்பெயராலேயே அதன் திட்பத்தை மதிப்பிடலாம்.

இவ்வகைப் பெரியோர்கள் இருவகையான இருப்புடையவர்கள். வெளியிருப்பு ஒன்று, உள்ளிருப்பு ஒன்று. உள்ளிருப்புதான் இதுவரையில் நாம் உரைத்து வந்தது. வெளியிருப்பென்பது, உடலமைப்பால் பெறுவது. நிற்றல், நடத்தல், இருத்தல், கிடத்தல், என்ற செயல்களில் இடைப்பட்ட செயல் இருத்தல். இந்த இரு, என்ற ஏவல்வினை, இருப்பு என்ற வினைப்பெயராகிறது. இந்த இருப்பு மிக எளியது போலத் தெரிகிறது. ஆனால் இதனாலெய்தக்கூடும் பேறே மிகப்பெரியது.

தமிழகத்தின் வடபகுதிகளில் தமதிடத்திற்கு வருபவர்களை, வாருங்கள் உட்காருங்கள் என அழைப்பதும், தெளிவுடைய தென்னகமெல்லாம், வாருங்களையா இருங்கள் என வரவேற்பதும் வழக்கம். வருக, இருக்க, என்ற அழகிய சொற்கள் மக்களிடையே சிறிது திரிபுடன், வழக்கியலில் இப்படி வருகின்றன. இருத்தல் அல்லது உட்காருதல் என்பது ஒரு உயர்ந்த இருக்கையில் கால்களைத் தொங்கவிட்டுக்கொண்டு இருக்கும் இருப்பாக, அக்காலத்தில் கருதவில்லை. அக்காலத்தில் இருக்கைக்குத் தவிசு எனப் பெயரிட்டிருந்தார்கள். இந்தத் தவிசு என்பது தடுக்கு. பிங்கலம் முதலிய பொருள்விளக்க நூல்கள் இதனையே கூறுகின்றன. தவிசு – தடுக்கே என்பது சூத்திரம். இளங்கோவடிகள் இந்தத் தவிசு எதனாலானது எப்படியுள்ளதென விளக்கஞ் செய்துளார்.

வெண்மையான பனங்குருத்து ஓலையினால் கைதேர்ந்த மகளிர் பலவித நிறமும் அழகிய வேலைப்பாடும் உறச் செய்ததாம் அது. பார்க்க அழகிய அத்தடுக்குகள் இன்றும் மதுரைமாநகர் வட்டத்தில் கிடைக்கின்றன. அன்றும் அவ்வேலைப்பாடு சேரர் கோமான் வியக்கும் அளவில் மதுரையில் சிறந்திருந்தது போலும். மாதரி வீட்டில் கண்ணகி இந்தத் தவி

போட்டோ
சாமான்களுக்கும்
கலை நுட்பம் துலங்கும்
போட்டோ சம்பந்தமான
எல்லா வேலைகளுக்கும்
நம்பிக்கையான
ஊழியர்கள்
டீலக்ஸ்
போட்டோ சர்வீஸ்
கரூர்.

சையிட்டுத் தன் கணவனை அதில் இருக்கச்செய்து உணவூட்டினாள் என்கின்றார் இளங்கோ.

"தாலப் புல்லின் வால்வெண் தோட்டுக்-
கைவன் மகளிர் கவினுறப் புனைந்தச்
செய்வினைத் தவிசின் கணவனை யிருத்தி"

(தாலப்புல் – பனைமரம். வெண்தோடு - வெள்ளை ஓலை. செய்வினை - வேலைப்பாடு. தவிசு – தடுக்கு) தரைமீதன்றி மிக உயர்ந்த கால்களையுடைய இருக்கையானாலும் தடுக்கில் இருப்பதைப்போலக் கால்களை மடித்துக்கொண்டு சப்பளங்கோலி இருக்கும் இருக்கையையே அக்காலத்தில் மேலான மக்கள் கைக்கொண்டிருந்தனர். இவ்விருப்பின் பல்வேறு பிரிவுகளையே யின்றும் யோகாசனங்களெனக் கொள்கின்றோம்.

மேற்சொன்ன இருக்கையிலிருந்தே துறவறத்தார் இல்லறத்தாருக்கு அறங்களை உபதேசித்தார்கள். இந்த அமைதியான இருக்கையிலிருந்தே அறிவுவந்த மக்களோடும் மனைவியுடனும் இல்லறத்தார் அன்றாடம் ஒரு அளவிட்ட நேரங்களில் பெரியவர்கள்பால் அறங்களைக்கேட்டறிந்து வந்தார்கள். இது எந்நாளிலும் நடந்துவந்தது. நாடோறும் இதற்காக ஒரு அளவு காலம் ஒதுக்கப்பெற்றிருந்தது. தருமபுத்திரனை "நாள் தொறும் தோகைபாகன் தன் பெருங்கதையும் கேட்டுத் தங்கினன்" என வில்லிபுத்தூரர் விளம்புகின்றார். இப்படிப்பினை அறம் நிறைந்ததாய் அருளொடுவிரவிய இனிப்புள்ள ஒரு கதையொடு பொதிந்ததாய் மிளிரும். இவை நடக்குமிடம் பெரும்பாலும் நிழல்பரந்த மரத்தடிகள்.

சொல்லுவோர் உணர்வும் கேட்போர் உணர்வும் ஒருமைப்பாடாக அமைவது அவர்கள் இருக்கும் இருப்பின் தகுதியால்தான். இந்த நிலையே உள ஒருமைப்பாட்டிற்கு அமையவேண்டிய மெய்ப்பாடு. பொருளிழுந்தவனுக்குத் தலைமேல் கைவைத்துக்கொண்டு அழ வருவதும், வாதமிடுவோருக்குக் கையை உயர்த்திப் பேசவருவதும், இல்லாமை கூறுவோர் விரல்களை விரித்துக்காட்டி உரையாடுவதும்போல ஒருமையுணர்வை விரும்புவோர் இந்த சிறந்த இருக்கையிலிருந்துக் கரங்களைச் சேர்த்திக் கேட்டுவப்பார்கள். "கரங்குவிவார் உளமகிழும் கோன்" "சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்" முதலான திருவாசக நுட்பங்களை நோக்க வேண்டும்.

இப்படியிருக்க மக்களால்தான் முடியும். மிருகங்களுக்கெல்லாம் இது முடியாது. மிருகங்கள் நிற்கும் படுக்கும் இடையிலுள்ள இருத்தலென்பது அவைகளுக்கில்லை. பூனை முதலியன முன்கால்கள் நின்றபடியிருக்கப் பின் கால்களை ஒரு அளவாக மடித்துக் கொண்டு குந்துவதுண்டு. அது, செம்மையான இருக்கையாகாது. கால்நடைகளிலிருந்து மேன்மையடைந்து மனிதப் பிறப்பு தொடங்கியபிறகே இருப்பதற்குப் பழக வேண்டும்போல் தோன்றுகிறது. சிலருக்குச் செவ்வையாக இருக்கத் தெரிவதேயில்லை. அவர்கள் உட்கார்ந்ததுபோல் தோன்றினாலும் பாதங்கள் நின்றவாக்கில் ஊன்றிக்கொண்டேதானிருக்கின்றன. இருந்த பிறகும் கால்களின் வேலை முடிந்ததாக அவர்கள் கருதுவதைக் காணோம். உண்ணும்பொழுது பந்தியில்கூட இந்த லட்சணமான சிலபேரைக் காணலாம். அவர்கள் எங்கோ எழுந்து செல்ல எத்தனிக்கின்றவர்களைப் போலவே கடைசி வரையில் இருப்பார்கள். மைத்துனன் முறையுள்ள ஒரு அறிஞர் அப்படியுள்ளவர்களை அழுத்திப் பிடித்து இருத்தினாலும் அவர்கள் பழையபடியே முழங்கால்களைத் தூக்கிக்கொள்வார்கள். இந்த சங்கடங்களைக் காண்கின்றபொழுது "இருப்பதென்பது எளிதே வருவதல்ல, அது நெடுநாள் பல பிறவியின் பயனாகத்தான் நமக்கு வந்திருக்கிறது, உண்மையில் இதுவே ஒரு பெரிய இருப்புத்தான்", என்ற உட்கருத்து நமக்கு உண்டாகும்.

இந்த இருப்பிற்கேற்ற அளவில்தான் சிரிப்பும் உண்டாகிறது. சிரிப்பிற்கேற்ற உறுப்புகள் பற்களும், வாயும். மக்களுக்கிருப்பதைவிட நீண்டு பெருத்த முகமும், நெருங்கி வளர்ந்த வரிசையான பற்களும் உள்ள குதிரைகளால் நகைக்கக் கூடுமா? மற்றெந்த மிருகந்தான் நகைக்கும். எவ்வளவு அழகான பல் வரிசைகளைப் பெற்றிருந்தாலும் எந்த மிருகமும் சிரிக்க முடியாது. ஏன்? சிரிப்பதற்குள்ள மூலப் பொருள் மிருகங்களிடத்தில் இல்லை. அதனால் தான் அவற்றால் சிரிக்க முடிவதில்லை. சிரிப்பிற்கு மூலப் பொருள் என்ன? சிரிப்பிற்கு மூலப்பொருள் பகுத்தறியும் அறிவுதான்.

"தக்க இன்ன தகாதன இன்ன என்று—ஒக்க உன்னலராயின் உயர்ந்துள மக்களும் விலங்கே" என்ற முறை கொண்டால் மக்களில் கூட சிலருக்குச்


# சுவையில் சிறந்தது மணீஸ் மிட்டாய்கள்




★

தயாரிப்பாளர் அலுவலகம் :

**Mani's Confectionery Works,**
18, West Chitrai Street,
MADURAI-2.

Phone : 2291 P. B. No. 195

★

உற்பத்தி நிலையம் :

**57, அனுமார் கோவில்**
**படித்துறை,**
மதுரை.

★

சில செயல்களில் சிரிப்பு வருவதில்லே. அச் செயலின் நுட்பம் தெரியாதவர்கள் ஒன்றும் புரியாது உட்கார்ந்து தான் இருப்பார்கள். சில கதைகளேக் கேட்டுப் பலர் விழுந்து விழுந்துச் சிரிப்பார்கள், சிலர் சிரிப்பவர் களேப் பார்த்து இதில் இவர்களுக்கு இவ்வளவு சிரிப்பு வருவதேன் என எண்ணிச் சிரிப்பவர் செயலுக்காகப் புன்முறுவல் பூப்பார்கள். ஒரே செயலே நோக்கி பலர் சிரிப்பார்கள் சிலர் வெறுப்பார்கள். சிரிப்பெல்லாம் ஒவ்வொரு பொருள் கொண்டுதான் இருக்கும். வாழ்வி லும் சரி தாழ்விலும் சரி பல்லேக் காட்டிக்கொண்டே யிருப்பதும் மிகச் சிலரிடத்தில் உண்டு. அதற்கு ஏமாற்றம் நிறைந்த பேதமைச் சிரிப்பெனப் பொருள் கொள்ளவேண்டும். திருந்தாதவர்களேத் திருத்தும் கருவியாகவும் உதவுகிறது சிரிப்பு வெற்றிக்கும் வித் தாகிறது சிரிப்பு. ஆக்கவும் காக்கவும் அழிக்கவும் வல்லது சிரிப்பு.

நாட்டில், தொன்றுதொட்டு வழங்கிவரும், ஆயிரக் கணக்கான சில்லறைக் கதைகளுள. அவற்றை ஒரு முறை யிருமுறைக் கேட்டவர்களுக்கு அது சாதாரண மாகிவிடும். புதிதாகக் கேட்பவர்களுக்குக் கரும்பாகத் தோன்றும் கதைகளே சிலமுறை கேட்க நேர்ந்தால் வேப்பங்காயாகிவிடும். சிலர், மிகச் சில கதைகளேயே வைத்துக்கொண்டு இடம் மாறியும், காலம் மாறியும் சொல்வது வழக்கம். அது, அக்கூட்டத்திலுள்ள புதி தாகக் கேட்பவர்களுக்குச் சிரிப்பையும், மற்றவர்களுக்கு வெறுப்பையுந் தருகிறது.

மணவாளனேடு கண்ணகி மதுரைக்குப் புறப்பட் டாள். பேருராகிய காவிரிப்பூம்பட்டினத் தெருக்களேக் கடக்கவே நெடுநேரமும், நெடுந்தூரமு மாயிற்று. ஊர் புறத்தேயுள்ள கவுந்தியடிகள் தவப் பள்ளியை யடைந் தார்கள், கண்ணகியும் கோவலனும். கண்ணகி கண வனேப் பார்த்து, முன் பல் மாத்திரம் மெல்லெனத் தோன்ற எது மதுரை யென்று கேட்டனள். கோவலன் இதோ முப்பது காதத்தில் மிக அருகாமையிலுள்ள தெனச் சொல்லிச் சிரித்தான்.

"முதிராக் கிளவியின் முள்ளெயிறு இலங்க —
மதுரை மூதூர் யாது என வினவ
ஆறு ஐங்காதம் நம் அகநாட்டு உம்பர் —
நாறு ஐங் கூந்தால் நணித்து என நக்கு"

கண்ணகியின் முதிராக் கிளவியின் முள்ளெயிறு இலங்கத் தோன்றிய நகை அவளது கொஞ்சும் மொழி யும் விஞ்சும் அன்பும் பொருளாகத் தோன்றுவதைக் காணலாம். கோவலனது அண்மையில் எனவெழுந்த நகை, மடமையை யெழுதிய படமென விளங்கும் இவ் விளஞ் செல்விக்கா, நான் இத்துயரமளிக்கின்றே னெனக் கருதும், இரக்கப் பொருள் பொதிந்த நகை யாகும்.

செங்கயல் கொடியுடை அங்கயற்கண்ணியார் கன் னிக் காவலில் கயிலேமேல் படையெடுத்தார். பூதங்கள் எதிர்த்தன, பொருதழித்து வீழ்த்தினர். தன் படை யழியத் தகைமிகு நந்தி இறைவனே யிறைஞ்சி,

"உடையான் அடிதாழ்ந்து இவை ஓதலும்
ஓத நீத்தச்
சடையான் இள வாள் நகை செய்துத்
தருமச் செங்கண் சிலேயான் இகல்

அதிசய உரம்
பாக்டம்பாஸ்
(FACTAMFOS)
என்கிற
யானே FACT மார்க்
ஆல்வாய்
அமோபாஸ்
★ பாக்டம்பாஸ் தாவர உணவு ஆகிய நைட்ரஜனும் பாஸ்பாரிக் அமிலமும் தகுந்த அளவில் கலந்துள்ள சமசீரான ஒரு கூட்டு உரம். நெல் பயிருக்கு மிகவும் ஏற்றது.
★ பாக்டம்பாஸ் 1 டன் அளவின் சக்தி 3/4 டன் சல்பேட்டும், 1 1/4 டன் சூபர் பாஸ்பேட்டும் கலவை செய்யப்பட்ட உரத்தின் சமம். ஆதலால் சிரமம் இல்லே. செலவும் சிக்கனம்.
★ பாக்டம்பாஸ் தூவுவதற்கு ஏற்றது. உரமிடும்பொழுது காற்றடித்தாலும், சேதம் ஏற்படாது.
★ பாக்டம்பாஸ் நீண்டகாலம் வைத் திருந்து உபயோகிக்கக்கூடிய உரம்.
★ பாக்டம்பாஸ் நிலத்தில் ஆழமாகவும், துரிதமாகவும் ஊடுருவிச் சென்று இளம் பயிர்களே ஊக்குவிக்கும். அமோக வளர்ச்சியை உண்டுபண்ணும்.
பெர்டிலேசர்ஸ் & கெமிகல்ஸ்,
திருவிதாங்கூர் லிட்.,
ரிஜிஸ்டர்டு ஆபீஸ்:
ஏலூர்,
உத்யோகமண்டல்,
P. O.
கேரள ராஜ்யம்.
FACT
first in the field!

உ

தந்தி: MURUGA. முருகா    போன்: 386,

# ஜெ. மு. சாமி

உழைப்பில் சிறந்த உறையூர் சேலைகள்
உற்பத்தியாளர்கள்

நெ. 1, பெரிய சௌராஷ்டிரா தெரு,

## உறையூர், திருச்சிராப்பள்ளி-3.

—0—

கிளைகள்:—

நாகப்பட்டிணம், மதுரை &
"முருகவிலாஸ்"
ஜெயங்கொண்ட சோழபுரம்.

விடையான் வெற்றி விளைக்குந் தெய்வப்
படையான் எழுந்தான் அமராடிய
பாரில் வந்தான்"

இங்கு கணங்கள் வீழ்ந்துவிட்டனவே யென்று நந்தி தேவர் கலங்குகிறார். கயிலை முதல்வனும் அவரோடு கலங்குவதானால் அக்கலக்கம் நீக்க யாரைத் தேடுகிறது? உண்மைத் தலைவர்களுக்கு எக்காலத்திலும் எவ்வித கலக்கமும் வராது.

இங்கு இறைவன் ஏன் இப்படி இளநகை செய்கிறார்? வந்தவர் வீராப்பைத் தடுக்க மாத்திரம் நினைக்கிறார், அழித்துவிட வல்ல, ஆதலால்தான். அழித்துவிடக் கருத்திருந்தால், நன்றாகச் சிரித்திருப்பார். அப்படிச் சிரித்திருந்தால்,

"வளைந்தது வில்லு விளைந்தது பூசல் உளைந்தன முப்புரம் உந்தீபற" என்றுதானாகும். இங்கு இறைவன் சிரிப்பு என்ன சிரிப்பு? வெற்றிச் சிரிப்பு.

உள்ளத்தைக் கள்ளமிடும் சிரிப்புகூட வுண்டு. மிதிலை மாளிகையிலே கன்னிகா மாடத்திலே பூம்பொழில் நடுவிலே மலர் பறிக்கும் மங்கையரைப் பார்த்துக்கொண்டு பதுமைபோல் வைகினள் பங்கயச்செல்வி. அக் கன்னிமாடச் சோலை நகர வீதிக்கு அருகுள்ளது, அத் தெரு வழியாகச் சென்ற ஒரு மூவரில் இடையவர் பார்வையில் பட நேர்ந்தது அந்த பைந்தொடி. சிறிது நேரத்திற்கெல்லாம் மயக்கமுற்று ஓவியம்போல உரையற்று நின்றனள். தாதியர் கொண்டு சென்று அமளியில் சேர்த்தார்கள். தோகையைத் தேற்றத் துணைவியர் பலவிதமான தொண்டுகள் செய்தனர். சிறிதே கண்விழித்துத் தன் தெறுமரலைச் செப்பத் தொடங்கினாள். விண் முகில் மண் மிசை வந்ததனைய வில்லொடு நடந்த வீரனொருவன் என்னை இப்பாடு படுத்தினன். அருவரை யனைய அவன் தோள்களல்ல நீலத் திருமுடியல்ல, திங்களனைய திருமுகமல்ல, நீண்ட கைகளல்ல, அந்தப் பொல்லாத சிறுகிய சிரிப்புத்தான் என் உயிரை உண்டுவிட்ட தென்றனள் அந்த ஒண்டொடி.

"இந்திர நீலமொத் திருண்ட குஞ்சியும்
சந்திர வதனமும் தாழ்ந்த கைகளும்
சுந்தர அருவரைத் தோளு மேயல
முந்திய முறுவலென் உயிரை உண்டதே"
(முறுவல்—புன்சிரிப்பு)

இது உயிரையும் உடலையும் உற்றார் பெற்றார் உரியாரோடு கொள்ளைகொள்ளுஞ் சிரிப்பல்லவா? இந்த ஆக்கச் சிரிப்போடு அயலவள் கொண்ட நைப்பாசையைப் பற்றற அழிக்கவெழும் சிரிப்பையும் கொஞ்சம் பார்ப்போம்.

இராமனைப் பஞ்சவடியில் வஞ்சக வடிவம் கொண்ட சூர்ப்பணகை வந்து கண்டாள். வீரன் நீ யாரென வினவினான். அவள், நான் இராவணனுக்கும் குபேரனுக்கும் தங்கை, அரக்கியாகப் பிறந்ததற்கு வருந்தித் தவஞ்செய்து இந்தத் தேவ வடிவம் பெற்றேன், உனது சிறந்த மணத்தை விரும்பி இங்கே வந்து நிற்கின்றேன் என்றாள். அப்படியா, மிக நல்லது, நீ மிகப் பெரிய இடத்துப் பெண்ணல்லவா? உனது அண்ணன்மார் என்னை என்ன செய்வார்களோ, அவர்களே வந்து மணஞ் செய்துவைத்தாலன்றி உன்னை யெப்படி மணப்பது என்றனன் இராமன். அவள், அவர்கள் உன்னனைய முனிவர்களைக் கண்டாலே வெறுப்பார்கள். என்னை மணந்துகொண்ட பிறகு அவர்களைக் கண்டால் சொந்தம்பற்றி உனக்கு வெகுமதிகளும் அரசாட்சியுந் தந்து என் பொருட்டாக உன்னை ஆதரிப்பார்கள், ஆதலால், நாம் முதலாக மணத்தை முடித்துக்கொள்வோம் என்றனள். மயக்கப் பொருள்கொண்டு தவிக்கும் அவளுரையைக் கேட்டு வள்ளல், மிக நல்லது, ஊரைவிட்டு வந்து தவம் செய்துகொண்டிருக்கும் எனக்கு தவம் பலித்துவிட்டது, அரக்கர் அருள் கிடைத்தது, அரசும் பரிசும் கிடைக்கிறது, உனது நலங் கிடைக்கிறது, இன்னும் என்ன குறையெனச் சிரித்தனன்.

"நிருதர்தம் அருளும்பெற்றேன் நின் நலம்
பெற்றேன் யாண்டும்
ஒருவறுந் தன்மையோடும் உறையவும்
பெற்றேன் ஒன்றோ
திருநகர் தீர்ந்த பின்னர் செய்தவம்
பலித்த தென்று
வரிசிலை பிடித்த வீரன் வாளெயிறு
இலங்க நக்கான்"

வீரனது இந்த சிரிப்பு ஒரு இளநகையல்ல, முறுவலல்ல, பெருஞ் சிரிப்பு. இது வெம்மை மிக்க அரக்கரென்னும் விறகுப் போரின் அடிப் பகுதியிலிட்ட நெருப்பிற்கு நிகரானதல்லவா? இதுதான் அழிக்கும் ஆற்றலுள்ள சிரிப்பு.

நுணுகி நோக்கினால் அறத்தின் அடிப்படை நகைப்பிலும், நகைப்பின் அடிப்படை அறத்திலும் அமைந்திருத்தலைக் காணலாம்.

முதல் நாள் போரில் இராவணன் உள்ள படையெலாம் ஒழிந்து போகத் தனியனாகிக் கால் நடையாக இலங்கைத் தெருவில் செல்கின்றான். பெண்களெல்லாம் பார்க்கின்றார்கள், அவர்கள் கண்களெல்லாம்

Phone: No. 92. Tel: SAREES

**PUVALUR SRI RAMAKRISHNA VILAS**

PRODUCERS OF

HIGH CLASS HANDLOOM SAREES, DHOTIES, CHOLIES ETC.,

75, Big Sourashtra Street,

Post Box No. 210

**WORIYUR :: TIRUCHIRAPALLI-3**

**Best Quality Handloom Sarees**
**Dhoties & Cholies in 5 to 10 Yards**
**100 Counts are Available Ex-Stock.**

**FAST COLOURS! CHEAP RATE!**
**SATISFACTION SURE!**

அன்றலர்ந்தத் தாமரை மலரை யொத்தது தான். ஆனால், அவை இராவணன் உடம்பை யெல்லாம் வாள் போன்று அன்று அறுக்கின்றன. மைந்தர்களெல்லாம் பேசுகின்றார்கள். அவர்கள், நெடுந்தூரம் கேழ்க்கும்படி யிரைந் தொன்றும் பேசவில்லை. ஒருவர் காதிற் கொருவர் கேழ்க்கத்தக்க அளவில் கிசுகிசுகத்த ஓசையில் தான் பேசுகிறார்கள். ஆனால், அம்மைந்தர் வார்த்தைகளெல்லாம் இராவணன் மார்பில் தைத்த இராமன் வாளிகளைப் போலவே தைக்கின்றன. இந்த அறுப்பும் குத்தும் பட்டுப் பட்டுத் துன்புற்றுச் செல்லும் இராவணனுக்கு நல்ல காலமாக ஒரு முறிப்பும் நேர்ந்து விடாதபடி கெட்டதில் ஒரு நல்லது குறுக்கிட்டுக் காத்தது.

உலகத்தில் உயர்ந்த ஒரு படைப்பாக மதிக்கப் பெற்ற சீதையும் அந்தத் தெருவிலேயே இருந்திருந்து, இந்த அவலமான நேரத்தில் அவள் கண்ணாலும் கண்டுவிட நேர்ந்திருந்தால் என்ன நேர்ந்திருக்கும்? மானங் கெட்டு மனம் உடைந்து இராவணன் கால் முறிந்து அங்கேயே வீழ்ந்து விடத்தான் நேர்ந்திருக்கும். நல்ல காலமாக அவளை இந்த வழிக்கரையில் வைக்காமல் புறச்சோலையில் வைத்தோமே முன்னமே அது ஒரு நன்மைதானெனக் கருதி நடந்தான் இராவணன்.

"வான் நகும் மண்ணும் எல்லாம் நகும்
நெடும் வயிரத் தோளான்
நான் நகும் பகைஞரெல்லாம் நகுவரென்று
அதற்கு நாணான்
வேல் நகும் நெடுங்கண் செவ்வாய்
மெல்லியல் மிதிலை வந்த
சானகி நகுவள் என்றே நாணத்தால்
சாம்புகின்றான்"

சிரிப்பிற்குள்ள வல்லமை யெல்லாம் திரட்டிக் காட்டும் கவிகளல்லவா இவைகள். இராவணனது வயிரத்தோள்கள் இந்திரனது உலகத்தவரையும், மண் முதலான ஐம்பெரும் பூதங்களின் ஆற்றலையும் எனக்குள்ள ஆற்றல் இவைகளுக்குண்டோ எனச் சிரிக்கத் தக்கனவாம். அந்த ஆற்றலெல்லாம் இன்று கெட்டுவிட்டனவே என்றால் சிரித்து எள்ளத்தகும் பகைவர்களெல்லாம் என் நிலைமையைக் கேட்டு இன்று சிரிப்பார்களே என்று நாணவில்லையாம் இராவணன். சானகியும் இதுகேட்டு நகைப்பளே யென்றுதான் வருந்துகின்றனனாம். இவன் யார்? கோள்கள் பன்னிரண்டையும் ஒரு போக்கில் திருத்திச் சிறையிட்ட தீரனாம். மதிப்புடையார் சிரிப்பிற்கு இவ்வளவு சிறப்புண்டு, செயிக்கக்கூடாததையும் செயிக்குந் திறமும் உண்டு. முடிவாக உலக முதல் எதுவோ அது ஆண் பெண் வடிவாகியிருந்த இருப்பும், அவர்களது சிரிப்புமே உலகத் தோற்றத்தின் ஒப்பற்ற முதற் பொருளாக அமைந்துளதாம் என்னும் மங்கலத்தை மனங் கொண்டு அமைவோமாக.

"மேல்நாள் அகிலந்தர மெல்லியலாய்—ஆனா
அருள்தன்னை அளித்து
ஒரு பால் தானாக நிறுத்திய
தனிப்பொருள் வாழ்க"

# தென்னாட்டுத் திருக்கோயில்கள்

வி. வி. திலக் சாஸ்த்ரி

★

"அரணை மறவேல்"

"ஆலயந்தொழுவது சாலவும் நன்று".

"கோயிலில்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்"

"திருமாலுக்கு அடிமை செய்"

என்றெல்லாம் பல நீதி மொழிகளை நம் முன்னோர் அருளினர். இவைகளை இளமையிலே பள்ளிக்கூடங்களிலேயும் போதிக்கின்றார்கள்.

ஆலயம், கோயில், கோவில் என்றெல்லாம் சொல்லும் வார்த்தைக்கு அரமனை, தேவாலயம், கடவுளிருக்குமிடம் என்று பொருள் விளங்குகிறது. இருந்தாலும் சிதம்பரம், ஸ்ரீரங்கம்ஆகிய ஸ்தலங்கள் என்ற விசேஷக் கருத்தும் அடங்கியுள்ளது.

சிறந்த தேவாலயங்களை ஆங்காங்கு அமைத்து, பல பல பெரு விழாக்களையும் வகுத்து மக்களிடையே ஆன்மீக, சமூக, பொருளாதார வளர்ச்சியைக் காண விரும்பிய பெரியோர்களின் பேருள்ளம் தான் எத்தகையது!

கோயிலில்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று அறுதியிட்டுக் கூறியதைப் பார்த்தால் நம் ஒரு இடத்தில் வாழும் முன், ஆலயத்தை அமைத்து ஆண்டவனை வழிபாடு செய்து பின்னர் நீ வாழ்க என்ற போதனையைத் தான் தெளிவு படுத்துகின்றது. இன்னமும் யோசித்தால் கோயிலிருந்தால் அங்கு நீ குடி இரு. ஏனெனில் கோயிலுள்ள இடமே நாடு என்ற கருத்தும் புலனாகின்றது.

உலகிலுள்ள எல்லா மதத்தவர்களும் மனிதனுக்கு மேற்பட்ட ஒரு சக்தி இருப்பதை ஒப்புக் கொள்கின்றனர். தம் விருப்பப்படி அதற்குப் பல பெயர் கொடுக்கின்றனர்.

"ஆதி பகவன் முதற்றே உலகு"
—திருவள்ளுவர்,
"உலகெலா முணர்ந் தோதற்
[கரியவன்..." —சேக்கிழார்.
"உலகம் யாவையும் தாமுள வாக்
[கலும்..." —கம்பர்.
"அம்மையே அப்பா ஒப்பிலாமணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே...."
மாணிக்கவாசகர்.

என்றெல்லாம் இறைவனுக்கு இலக்கணம் வகுத்துக் கூறியதைக் கொண்டே இறைவனின் தொடர்பு என்றும் எங்கும் உண்டென்பது உள்ளங்கை நெல்லிக் கனி போல் உணரலாம்.



நகரேஷு காஞ்சி என்று போற்றப்படும்
காஞ்சிபுரம் ஏகாம்பரீஸ்வரர் கோயில் பெரிய கோபுரமும்,
நான்கு கால் மண்டபமும்.



"கோவிந்தா, கோவிந்தா" என கோஷமிட்டு ஆண்டுதோறும் கோடிக் கணக்கிலே யாத்ரீகர்கள் கூடும் திருப்பதி க்ஷேத்திரத்தில் கீழ்புறம் நகரின் தடாகம், திருக்கோயில்

பிறருக்கு உதவுவதையே தம் வாழ்வாக நம் முன்ஞேர்கள் கடைப்பிடித்து வந்தனர். நிதி மிகுந்தவர் பொற்குவை தந்தனர். நிதி குறைந்தவர் காசுகள் கொடுத்தனர். ஆண்மையாளர் உழைப்பினை நல்கினர். அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளினர். அவ்வகையிலே தான் நம் நாடு பூராவிலும் ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நகரங்கள், கிராமங்கள் மட்டும் என்ன? பாதையிலே குளக்கரையிலேயும் பிள்ளையார் கோயில் பார்க்கின்ருேம் அல்லவா? இவைகள் யாவும் நம் முன்ஞேர்களின் பொன்ஞன வாழ்க்கைச் சின்னங்களே.

ஆலயங்கள் சமூக சேவை எப்படிச் செய்கின்றன? என்று கேட்பார்கள். தில்லை நடராஜ பெருமான் திருக்கோயில், ஆவுடையார் கோயில், திருப்பதி போன்ற பெரிய தேவாலயங்களில் ஏராளமான சாதம் தயாரித்து பகவானுக்கு நிவேதனம் செய்து, அதை பின்னர் ஏழை மக்களுக்கு மிகக் குறைந்த விலைக்கு வழங்குகின்ருர்கள். பல ஆலயங்களிலே சமுதாய உணர்வு ஏற்படுத்த என்றே பல விழாக்களை நாள் தோறும் வைத்திருக்கின்ருர்கள்.

திருவனந்தபுரம் ஸ்ரீ அனந்தபத்மஞப ஸ்வாமி ஆலயத்தில் பிரதி தினமும் அன்னம் பாலிப்பு நடந்து வந்தது. "ஊட்டு பறை" என்பர். பறை கொட்டி உணவு ஊட்டி வந்தனர். தம் தேவைகளைக் குறைத்து சிக்கன வாழ்வைக் கடைப்பிடித்துத் தெய்வ எண்ணத்துடன் பரோபகாரியாக முன்ஞேர்கள் வாழ்ந்தனர்.

நாம் நமது வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொண்டுள்ளோம் என்பதைச் சற்று கவனித்துப் பார்ப்போம். தினசரி தேவைகள் பன் மடங்கு பெருகின. படாடோப டாம்பீக வாழ்க்கை, செலவைப் பெருக்கியது. வருவாயில் எவ்வளவு பங்கு எது எதுக்குச் செலவு செய்கின்ருேம் என்று கணக்குப் பார்த்தால் விழிப்புக்கூட பெறலாம். ஆண்டவனின் அருள் மீது நம்பிக்கையும் இழந்து வருவதுடன், பெரியோர்களுக்குக் கொடுத்து வந்த மரியாதையையும் போக்கி வருகிறது தெரியும். இவைகள் நம் நல்வாழ்விற்கு வழி காட்டுமா?

எண்பத்து நான்கு லக்ஷம் பேதமுள்ள ஜீவராசிகள் இருப்பதாக பண்டைய நூல்கள் கூறுகின்றன. மானிடப் பிறவி ஒன்றே சிறந்ததாகும்.

"மானிடப் பிறவிதானும் வகுத்தது
மனம், வாக்கு, காயம்
ஆணிடத்து மைந்துமாடும் - அரன் பணிக்காக
அன்ருே?...." என்ற

சித்தியார் பாடல். வானிடத்தவரும் அரனை அருச்சிக்க மண்மேல் வருகின்ருர் என்ற போது, மண்ணின் பெருமையும் மனிதப் பிறவியின் பெருமையுந்தான் என்னே?

"எண்ணரியப் பிறவிதனில் மானிடப் பிறவிதான்
யாதினும் அரிது அரிது காண்"

என்ருர் தாயுமானவர்.

ஆகவே அரிய இப்பிறவியைக் கொண்டு பிறந்த இப் பிறப்பை அறுத்துக்கொள்ள வேண்டும். அது எப்படி முடியும்? ஆண்டவன் அருளிலே அசையாத நம்பிக்கை வைத்து மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்புலன்களையும் அவனுக்கே ஆக்கின், பக்தி பெருக்கு அவனருளால் ஏற்பட்டு பிறவிப் பிணியைப் போக்கும்.

**அத்தகைய பக்தியை வளர்க்கும் சக்தி பெற்ற வைகளே ஆலயங்கள்.**

ஏகன், அனேகன் என்று விளங்கி வரும் இறைவன் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் இடங் கொண்டு இயங்கி வரும் இரகசியத்தை உணர்ந்தோர் "அகக் கோயில் கொண்டார்" என்றும் பெருமைப் படத்தக்கார். புறக்கோயில் தத்துவமும் அகக் கோயிலை ஒட்டியதே என்று ஆலய அமைப்புப் பற்றி- மதில், பலிபீடம், நந்தி, கொடிக் கம்பம் இவைகளுக் கும் சிறப்பான இலக்கணங் கொள்ளுவார்கள்.

பக்தி மார்க்கத்தையும் ஞான மார்க்கத்தையும் பாரிற்களித்த பெருமை பாரதத்திற்குண்டு, தென பகுதி திருக்கோயில்களையும் வடபகுதி, வற்ருத பவித்ர தீர்த்தங்களையுங் கொண்டு பரிணமிக்கின்றது. தென் ஞட்டிலே நதிகளிருக்கின்றன. வடநாட்டிலும் கோயில்கள் உள்ளன. திருக்கோயில்களும் தீர்த்தங் களும் கொண்ட நம் இந்திய நாட்டை உலகத்தோர் கண்டு அதிசயிப்பது இயற்கை தானே.

இருநூற்றெழுபதுக்கு மேற்பட்ட சிவஸ்தலங்களும் நூற்றெட்டு வைணவ தலங்களும் தென்ஞட்டிடையே விளங்குகின்றன. இவைகளை எல்லாம் எழுத பல மலர்கள் மாலைகளாய் விடும். எனினும் குறிப்பிட்ட சிற்சில சிவ விஷ்ணு தலங்களைட்பற்றியகுறிப்புகள் வாச கர்களுக்கு ஆனந்தம் தரும். பஞ்சபூத ஸ்தலங்கள், பிருத்வி (காஞ்சிபுரம்), அப்பு (திருவானைக்காவல்) தேயு (திருவண்ணுமலை), வாயு (திருக்காளத்தி), ஆகா சம் (சிதம்பரம்), பிரதானமானவைகள்.

பஞ்ச சபைகளும், அஷ்ட வீரட்ட தலங்களும், சப்த தான தலங்களும். சப்த விடங்கள் தலங்களும் மேலானவைகளே. அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகராகிய சமயக் குரவர்களால் பாடப் பெற்றவை பல.

ஆழ்வார்கள் மங்களா சாஸனம் செய்த ஸ்ரீரங்கம், திருப்பதி, திருமாலிருஞ்சோலை, ஸ்ரீவில்லிபுத்தூர், திருக்கோஷ்டியூர், திருக்கோவிலூர் போன்ற வைஷ் ணவ க்ஷேத்ரங்களும் பாரதத்தின் பெருமையை



மாமரத்தடியிலே கடுந்தவமியற்றி பெரும் பெருமானை உமையாள் அடைந்த மாவடி சேர்வையைக் கொண்ட ஏகாம்பர நாதர் ஆலய உள் அமைப்பு.



காளஹஸ்தி. கண்ணப்ப நாயனுர் மலையையும், ஸ்வர்ணமுகி ஆற்றையும் காணுங்கள்.

புவிக்கு உணர்த்துகின்றன. சில, சிவ, விஷ்ணு க்ஷேத்ரங்களைப் பற்றி பார்ப்போம்.

## காஞ்சிபுரம்

ப்ருத்வி ஸ்தலமாகிய காஞ்சிபுரம் சிறந்த சிவ விஷ்ணு ஆலயங்களைக் கொண்ட முத்தி தரும் நகரங்களில் ஒன்று. செங்கற்பட்டு-அரக்கோணம் இடையே இவ்வூர் அமைந்துள்ளது. ஏகாம்பரேஸ்வரர் ஆலயம், காமாக்ஷி அம்மன் கோவில், குமரகோட்டம், கச்சபேஸ்வரர் கோயில், ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோயில், உலகளந்த பெருமாள் கோயில், பாண்டவபெருமாள் கோயில் என்றெல்லாம் பல பெரிய கோயில்களைக் கொண்ட க்ஷேத்திரம். பெரிய காஞ்சிபுரம், ஆட்ஸன் பேட், சின்ன காஞ்சிபுரம் என்ற பிரிவு உண்டு. ஏகாம்பரேஸ்வரர் ஆலய பெரிய கோபுரம் அழகான தொன்று. ஆலயத்துள்ளே மாவடி சேர்வை தரிசிக்க வேண்டிய இடம். தொண்டை நாட்டுத் தலங்களுள் முதன்மையானது.

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சார்ய ஸ்வாமிகள் மடம் இங்கு உண்டு. ஆதி சங்கரர் பற்றிய பல சிலா ரூபங்கள் பெரிய காஞ்சிபுரத்தில் இருக்கின்றன.

சின்ன காஞ்சிபுரத்தில் இருக்கிறது அத்திகிரி வரதராஜர் கோயில். பெருந்தேவி அம்மையார் கோயில் உள்ளே இருக்கின்றது. எழுபத்தேழு ஆலயங்களையும் தரிசிக்க யாத்ரீகர்கள் பலர் வட நாட்டிலிருந்தும் தினந்தினம் வருகின்றனர். கம்பா நதிக்கரையில் பார்வதி பூஜை செய்யும்போது சிவனருளால் வெள்ளம் பெருகுகிறது. அம்மனும் சிவ பூஜைக்குக்குறைவு உண்டாகா வண்ணம் சிவலிங்கத்தை மார்போடு தழுவின ஸ்தலம். விஷ்ணு, ப்ரம்மா, வசிஷ்டர், சூரியன், அகஸ்தியர் பூஜித்த தலம்.

## திருவானைக்காவல்

திருச்சியின் வடக்கே இரண்டு மைலிலிருக்கும் திருவானைக்காவல் அப்புலிங்க ஸ்தலமாகும். ஸ்வாமி பெயர் ஜம்புநாதர். அம்மன் அகிலாண்டேஸ்வரி. பெரும் பெருமான் தம் கரத்தாலே திருநீறு அள்ளிக் கொடுத்து கடைசி மதில் எழுப்பப்பட்டதால் வீபூதி பிரதக்ஷணம் என்றதற்குப் பெயர். காட்டானையும் சிலந்தியும் பூஜித்து முக்தி பெற்றதை புராணம் அழகாக வர்ணிக்கின்றது.

ஜம்பு முனிவரால் வழிபட்ட நாவல் மர ஸ்தலத்தில் ஒரு விசித்திர வழக்கத்தைக் காணலாம். அம்மன் எம்பெருமானை பூஜை செய்ததைக் காட்ட உச்சி காலத்தில் குருக்கள் அம்மன் வேஷம் போட்டு பூஜை செய்வதே. ஆலயத்தை அடுத்த காவிரியாற்றிலே சோழ மன்னன் நீராடிக் கொண்டிருந்தார். அவர் முத்தாரம் நீரில் வீழ்ந்து விட்டது. அரசர் அதை சிவார்ப்பணஞ் செய்தார். திருமஞ்சன குடத்துள்

புகுந்த அந்த ஆரம் அரசனின் விருப்பப் படியே அப் பெருமானின் ஆரமாகியது.



திருவண்ணுமலை ஆலய உள்மண்டபத் தோற்றம்.

## திருவண்ணுமலை

நினைத்தால் போதும்; முக்தி கொடுக்கும் திருவண்ணுமலை. தேஜோ லிங்கஸ்தலத்தை அருணுசலம் என்றும் அழைப்பார்கள். அருணுசலீஸ்வரர் ஸ்வாமி. அபீதகுசாம்பாள் அம்மன் பெயர். ஆலயத்தின் ஏழாவது பிராகாரம் மலை பிரதக்ஷணம் வரும் வழி. ஆலயம் 25 ஏகர் விஸ்தீரணம் கொண்டது. கடல் மட்டத்திற்கு மேல் 2668 அடி உயரமுள்ள திருவண்ணுமலை மலை உச்சியில் தான் கார்த்திகை மாதம் கிருத்திகை நக்ஷத்திரத்தன்று மாலை ஜோதி தீப தரிசனம் நடைபெறுவது. எல்லா திருக்கோயில்களிலும் மிகப்பெரியதும் உயரமுமான 217 அடி உயரமும் 11 நிலைகளையுங் கொண்ட பெரிய கோபுரம் திருவண்ணுமலையில்தான் இருக்கின்றது. ஆலயத்துள் .9 கோபுரங்கள் இருக்கின்றன சிவகெங்கை, பிரம்மதீர்த்தம், இந்திர தீர்த்தம் ஆகிய தடாகங்கள் முக்யமானவை. உமா தேவியார் தவமியற்றி வாமபாகம் பெற்றதும் மலை அடிவாரத்தில் இருக்கும் பவழக்குன்றிலே மாணிக்க வாசகர் திருவெம்பாவை பாடியதும் இத்தலத்தில்தான். அருணகிரி நாதர் திருப்புகழ் பாடியதும் இங்கேதான். துர்க்காம்பாள் கோவில், குமரர் கோவில், கன்னிகா பரமேஸ்வரி அம்மன் கோவில் வடவீதி சுப்ரமண்ய ஸ்வாமிகோயில், ஸ்ரீ மீனுக்ஷிசுந்தரேஸ்வரர் ஆலயம் இவைகளுடன் ஈசான்ய மடம், சேஷாத்ரி ஸ்வாமிகள் மடாலயம், ரமணுஸ்ரமம் முதலிய இடங்களும் பார்க்க வேண்டியவைகள். மலை வலவழியில் அடி அண்ணுமலை என்ற கோயிலிருக்கின்றது. ஈஸ்வரஸ்வாமிகள் என்றவர் ஆலயத்து வடமூலையில் இருந்துவந்தார். ஜடினி ஷண்முகயோகினி, எச்சம்மாள். பரனூர் கல்யாணி அம்மாள் ஆகிய மாதுசிரோமணிகளும் வசித்து வந்தனர். மலை வலவழியில் பல லிங்கங்களும் தீர்த்தங்களும் இருக்கின்றன. கோணநதியில் காட்டு சிவா என்பவரிருக்கின்ருர். 18 மைலில் சாத்தனூர் அணையும் அமைக்கப்பெற்றிருப்பது பலரை பார்க்க இழுக்கின்றது.



திருவண்ணுமலை ஆலய அறக்காவலர்
திரு. எஸ். எஸ். வி. எஸ். முத்தையா செட்டியார் அவர்களுக்கு
குமாரக் கோவில் பரிவட்டம் கட்டி சிறப்பிக்கும் காட்சி

## திருக்காளத்தி

வாயுஸ்தலமாகிய திருக்காளத்தி திருப்பதியிலிருந்து 15 மைல் வடக்கே குன்றுகளிடையே காணப்படுகின்றது. காளஹத்தீஸ்வரர் என்றும் ஞானம்பிகை என்றும் ஸ்வாமி அம்மனை அழைப்பதுண்டு. ஆலய அடியில் ஓடும் ஸ்வர்ணமுகி எனும் ஆறும், கண்ணப்ப நாயனர் மலையும், அவர் வழிபட்ட கோயிலும் ரமணீயமான இயற்கைக் காக்ஷிகளின் எடுத்துக் காட்டாகும். கண்ணப்பர் வழிபாடு செய்த திருக்கோயில் மலைமீது இருக்கின்றது. ஆகாயத் தோற்றமாக இவ்வாலயத்தையும் ஸ்வர்ணமுகி ஆற்றையும் உற்று நோக்கினல் மிகமிக ரம்யமாக இருக்கும். மலைமேலுள்ள சிவபிரானுக்குக் குடுமிதேவர் என்று பெயர். நாள் ஆறிலே அன்பு செய்து தன் கண் அப்பி சிவன் அருளைக் கண்



கண்ணப்பரை ஆட்கொண்ட ஸ்ரீ காளத்தீஸ்வரர் ஆலயம்

ணப்ப நாயனார் பெற்ற இடம். தமிழ் மக்களுக்கு மிக முக்கியமான இக்கோயில் ஆந்திர நாட்டோடு இருக்கின்றது. வேங்கடத்துடனே திருக்காளத்தியையும் தமிழ்நாட்டுடனே திருத்தணிகையைப் போல் இணைத்தால் தமிழ் அன்னை பேருவகை கொள்வாள்.

திண்ணன் ஒரு வேடன், காட்டில் வேட்டையாடினான். மலை உச்சியில் குடுமி தேவரைக் கண்டான். அவர் பால் அன்பு ஊற்று எடுத்தது தழுவினான் அபிஷேகம் நிவேதனம் மாலை சூட்டல் இவைகளைச் செய்வதாகக் கேட்டான். தானும் செய்ய எண்ணினான் வாயில் தண்ணீர் அபிஷேகிக்க. பூ பறித்தான். இறைச்சியை நிவேதிக்க செய்யவும் செய்தான். எச்சில் நீரை உமிழ்ந்து திருமஞ்சன மாட்டினான். மலர்களைச் சூட்டினான். இறைச்சியை நைவேத்யம் செய்தான். இரவில் காவல் புரிந்தான். ஒரு நாள் லிங்கத்தின் கண்ணில் இரத்தம் வழியக் கண்டான். தன் கண் ஒன்றை அம்பால் பெயர்த் தெடுத்தான். அப்பினான். ரத்தம் நின்றது, மற்ற கண்ணில் இரத்தம் வரலாயிற்று. செருப்புக் காலால் லிங்கத்தின் கண்ணை அடையாளமாகக்கொண்டு மற்றொரு கண்ணைப் பிடுங்கலானான். 'நில்லு கண்ணப்பா' என்ற குரல் வந்து கையைத் தடுத்தது. வேடனின் இப்பெருமையை விளக்கும் தலம் திருக்காளத்தி முக்கியமானது.

## சிதம்பரம்

சோழ நாட்டின் வடபாகத்தில் ஆகாய ஸ்தலமாக விளங்கும் இடம் சிதம்பரம். நடராஜப்பெருமான் ஸ்வாமி சிவகாமசுந்தரி அம்மன். தில்லைவனம், புண்டரீகம் என்றும் அழைப்பார்கள். பதஞ்சலி, வியாக்ரபாதர் இருவரும் இரண்டு லிங்கங்கள் அமைத்து பூஜை செய்த தலம். குஷ்ட நோயுடன் தவித்துக் கொண்டிருந்த சிம்ம வருடன் இங்குள்ள சிவகங்கை எனும் தடாகத்தில் ஸ்நானம் செய்து நோய் நீங்கி ஹிரண்யவருமன் ஆனதும் இங்குதான். திருக்கோயில் என்றாலே சைவர்களுக்கு சிதம்பரத்தைத்தான் குறிக்கும்.

நடராஜப் பெருமானின் சபை தங்க ஓட்டினால் அமையப்பெற்றது. கண்ணைப் பறிக்கும் இக்கோயிலைத் தரிசித்தாலே முக்தி உண்டு. வாதவூர் அடிகள் இங்கு ஈழதேச அரசனையும் புத்த குருவையும் வாதில் வென்று ஊமைப் பெண்ணான அரசகுமாரியை சைவத்தைசிலாகித்துப் பேசவைத்ததும் இங்குதான். அவர் ஐக்கியமான இடமும் இதுவே. திருநாளைப் போவார் நாயனார் தீக்குளித்து சிவபதம் அடைந்த க்ஷேத்திரம் தில்லையே. மாது சொன்ன சொல்லால் இளமை துறந்த திருநீலகண்ட நாயனார் குளத்தில் மூழ்கி இளமை பெற்ற குளமும் கோயிலும் இளமையாக்கினார் கோயில் என்று இங்கிருக்கின்றது. தில்லைக்காளி அம்மன் கோயிலும், அனந்தீஸ்வரன் கோயிலும், திருவைக்குளம், அண்ணாமலை சர்வகலாசாலை இவைகள் தில்லையை புகழ்படுத்துகின்றன. நடராஜா அருகே கோவிந்த ராஜாவும் காக்ஷிதருவது பக்தர்களுக்குப் பரமானந்தமளிக்கும். ஆருத்ரா தரிசனம், ஆனித்திருமஞ்சனம் பெருவிழாக்களும் குறிப்பாக தெருவடைச்சான் திருவிழாவும் குறிப்பிடத்தக்கவை.



சிதம்பரம் திருக்கோயிலில் தங்கத் தகடு ஜொலிக்கும் தாண்டவ மூர்த்தியின் மண்டபத் தோற்றம். இவை தங்க ஓடுகளே.



கடவுள் தந்த தமிழை வளர்த்த மதுரை மீனாக்ஷி அம்மன் பொற்றாமரை குளம்

சிதம்பர ரகசியம் என்பார்களே அதை சொல்ல முடியுமா? தரிசிக்கவேண்டியதல்லவா?

## மதுரை

பொற்றாமரைப் பொய்கையைக் கொண்ட பாண்டிய நாட்டின் தலைநகர் மதுரை தமிழ் அன்னையின் கண் ஆகும். மீனாக்ஷி அம்மன் சுந்தரேஸ்வரர் கோயில் பல மேனாட்டினரை மிரளவைத்துவிட்டது. அண்ணாந்து பார்த்தவர்கள் நினைவை மறந்ததுண்டு. வைகை ஆற்றருகுள்ள ஆலயத்தைப்பற்றி புராணத்தில் 64லீலைகள் வர்ணிக்கப்பட்டுள்ளன. மாதாமாதம் திருவிழா நடைபெறும் மதுரைக்கோவிலுக்கு இணை மதுரைக் கோவில்தான். நகர அமைப்பைப் பார்த்தால் ஆலய அழகு மிளரும். பெரிய தெப்பக்குளமும், மாரியம்மன் தெப்பக்குளமும் சிறப்புபெற்றவை. சைவசமயம்தழைக்கவும் தமிழ்த்தாய் வளரவும் மீனாக்ஷி அம்மன் ஆற்றிய அருளை யாருமே மறக்க முடியாது. தெருவெல்லாம் திருக்கோயில்கள், இரவு பகல் எல்லாம் திருவிழாதான். சங்கம் வளர்த்த இடம், பஞ்ச சபையுள் ஒன்றாகும். சித்திவிநாயகர் கோயில் பிரபலமானது. நக்கீரருக்கு நெற்றிக்கண்ணைக் காட்டிய இடமுமன்றோ! திருமலை நாயக்கர் அரண்மனை காண வேண்டிய இடம்.



சங்கம் வளர்த்த பாண்டியன் மதுரையில் அமைத்த தெப்பக்குளம்

### ஸ்ரீரங்கம்

பூவுலக வைகுண்டமாகிய ஸ்ரீரங்கம் திருச்சியின் வட மேற்கே இரண்டு மைலில் விளங்குகின்றது. கோயில் என்றாலே வைணவர்களுக்குத் திருவரங்கத்தைத் தான் குறிக்கும். ஆதி விஷ்ணு ஸ்தலம். ஸ்வாமி ஸ்ரீ ரங்கநாதர். அம்மன் ரங்கநாயகி. புஜங்க சயனம். தெற்கே திருமுகம் கொண்டுள்ள பெருமை இங்குண்டு. இருபத்தைந்து ஏகாதசிகளிலே மிக முக்கியமான ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி பிரம்மோத்ஸவம். திருமதிலுக்கு வெளியே வடக்கு வாயிலுக்கு மேல்புறம் தசாவதாரக் கோயில் இருக்கின்றது. கீழ் புறம் தென்கிழக்கிலே சிங்கப்பெருமாள் கோயில் காணலாம். சன்னதிக்கு நேரில் அம்மா மண்டபத்தில் காவிரி துலாஸ்நாநம் செய்வது மகா புண்யம். கலியுகத்திலே ஆண்டாளை ஸ்ரீ ரங்கனாதர் விவாஹம் புரிந்து கொண்டது இங்கேதான். காவிரி, கொள்ளிடம், சந்திர புஷ்கரணி இவை ஆலயத்தை அழகு படுத்துகின்றன.

பல ஆழ்வார்களுக்கு முக்தி அளித்துள்ள இத் திரு அரங்கம் ஸ்ரீ இராமச்சந்திர மூர்த்தியே பூஜித்ததாகும். இங்கு உள் பிரகாரத்திலே விநாயகர் க்ஷேத்ர பாலகராக விளங்குகின்றார். திருமஞ்சனக் காவிரியில் நூதனமாக விநாயகர் உண்டு. சுற்றுப் பிராகாரத்தில் பத்து ஆழ்வார்கள் கோயிலுண்டு. திரிசிரபுரம் உச்சிப் பிள்ளையார் கோயில் விசேஷத்துடன் ஸ்ரீரங்கமும் திருவானைக்காவலும் இரு கண்களாக தமிழகத்திலே அமைந்துள்ள பெருமையை யார் அறியார்?

### திருப்பதி

"வடக்கு மலையானே! ஏழுமலையானே!! உயிர் பிச்சை தா." என்று பிரார்த்தித்து மஞ்சள் துணியிலே முடிந்துவிட்டு மக்கள் யாத்ரா மார்க்கமாக வரும் ஸ்தலம் ஒன்றுண்டென்றால் அதுதான் திருமலை எனும் திருப்பதி க்ஷேத்ரம். ஏழு மலைகளைக் கொண்டவன். வில்வ அர்ச்சனையையும் ஏற்கும் மூர்த்தி. க்ஷூ வில் லட்சோப லக்ஷம் மக்கள் நின்று தரிசிக்கும் ஸ்தலம். பெருமாளை அண்ணாந்து பார்த்தால் பின்னு லிருப்பவன் பிடித்துத் தள்ளும் வரை தரிசித்துக் கொண்டே இருக்கச் சொல்லும் பெருமை கொண்ட ஸ்தலம். "கோவிந்தா, கோவிந்தா" எனும் பக்தர்களின் வானைப் பிளக்க வைக்கும் நாதம் கேட்டால் நாத்திகரும் ஞானம் பெற்று ஆத்திகத்திற்குச் சரணடையச் செய்யும் சிறப்புப் பெற்ற, "தன்மை கொண்ட இடம். குன்று தோறாடல் தலங்களுள் ஒன்றும் முருகன் ஸ்தலம் என்றும் மக்கள் கொள்வர். பிரார்த்தனை உண்டியைப் பார்க்காமலும், வலம் வராமலும், காணிக்கை செலுத்தாமலும் யாத்ரீகர் யாருமே வராத ஸ்தலமும் இதுவே தான். வட்டி போட்டு வாங்கும் வடக்குமலையானல்லவா? ஏழுமலையானின் தினசரி வருமானம் இவ்வளவு என்று எண்ணிப் பார்த்தாலே பிரமையாகி விடும். இவ்வளவும் மேல் திருப்பதி பற்றியே. காலை முதல் இரவு வரை பல தடவை தர்ம தரிசன முண்டு. இடை இடையே கட்டணம் செலுத்தி விசேஷ தரிசனம் செய்பவர்களு முண்டு.

புரட்டாசி மாதம் பிரம்மோத்ஸவத்திற்கு தேசம் பூராவிலிருந்தும் லக்ஷக் கணக்கான பக்தர்கள் கூடும் பெருமையை வேறெங்குமே காண முடியாது. அலர் மேல் மங்காபுரம் என்பது மலையின் கீழே தெற்கே 3-வது மைலிலிருக்கின்றது. இது திருச்சானூர் என்னும் புராண ஸ்தலம். ஸ்ரீனிவாசர் ஸ்வாமி, அலர்மேலு மங்கைத்தாய் அம்மன், திருப்பதி நகரிலேயே கோவிந்தராஜர், ருக்மணி, சத்யபாமா, ஸ்ரீ ராமர், லக்ஷ்மணர், சீதை கோயில்களும் அடிவாரத்தில் இருக்கின்றன. கீழ் திருப்பதியில் விஸ்வநாதர் விசாலாக்ஷி கோயிலிருக்கின்றது.

மேல் திருப்பதி புஷ்கரணியும், திருப்பதி நகரிலே பஸ் ஸ்டாண்ட் சமீபத்திலேயே நல்லதோர் தடாகமும் யாத்ரீகர்களின் உதவிக்கு இருக்கின்றன. மேல் திருப்பதியிலிருந்து பாபநாசம், ஆகாச கங்கை ஆகிய இடங்கள் அனைவரும் பார்க்க வேண்டியவை. வரும் யாத்ரீகர்களின் வசதிகளுக்காக திருமலை தேவஸ்தான அதிகாரிகள் பல உதவிகளைப் புரிவது போற்றத் தக்கதுமாகும். திருப்பதி எல்லோருக்கும் திருப்தி தருகின்றதென்பதைக் காணலாம்.

### திருமாலிருஞ் சோலை

திருமால் கோயில் கொண்டருளிய ஸ்தலங்களுள் திருமாலிருஞ் சோலை மிக முக்கியமானதாகும். விளம்பரம், ஆர்ப்பாட்டம் யாதொன்று மில்லாத அமைதியைக் கொடுக்கும் பிரம்மாண்டமான கோயில். அழகர் கோயில் என்றழைக்கப்படும். இதை தரிசிக்க முதலிலே நாராயணன் அருள் வேண்டும். மதுரையிலிருந்து வட கிழக்கே சுமார் 15 மைல் தூரத்தில் இருக்கும் இத் தலத்திற்கு இரயில் வசதி இல்லை. ஆண்டாள், பெரியாழ்வார் அவதரித்த இடம் என்றும் சொல்வர். கள்ளழகர், அலங்கார அழகர் என சுவாமியையும் சுந்தர வல்லித் தாயார் என அம்மனையும் அழைப்பர். இரவோ, பகலோ எப்பொழுதுமே இவ்விடம் அமைதிக்கும் தனிமைக்கும் தனிச் சிறப்பைத் தரவல்லது. இச் சோலை மலை திருப்புகழிலேயும் இடம் பெற்றுள்ளது. திருமாலிருஞ் சோலை, திருப்பதி ஆகிய இவ்விரு க்ஷேத்ரங்களிலும் முருகர் பெருமான் க்ஷேத்ர பாலகராக விளங்குவது குறிப்பிடத் தக்கது. முன்னம் ஸ்ரீரங்கத்திலே விநாயகரை க்ஷேத்ர பாலகராகக் குறிப்பிட்டோமல்லவா? திருமாலிருஞ் சோலையைத் தரிசித்தவர்கள் இந்த கோயிலைத் தரிசனம் செய்யாதவர் பிறவி பலன் பெற்றதாகாது என கூறுவது விந்தையே அல்ல.

### ஸ்ரீவில்லிபுத்தூர்

மதுரை தென்காசி இரயில் பிரிவில் பிரயாணம் செய்கின்றவர்கள் அனைவரையும் தன் அழகான கோபுரத்தைக் கொண்டு "வா வா" என்றழைக்கும் சக்தி வாய்ந்த கோயில் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் தான். சாத்தூரின் மேற்கே 25 மைலிலுள்ள விஷ்ணு க்ஷேத்ரம். ஸ்வாமி பெயர் வடபத்ர சயனர். விஷ்ணு சித்தரிடம் ஆண்டாள் வளர்ந்து வருகையில் அவ்வம்மையாரின் திடமான பிரார்த்தனையை மஹா விஷ்ணு நிறைவேற்றுவதற்கு தாமே அவரை ஸ்ரீரங்கத்திலே மணந்துகொள்ளுகின்றார். மண்டுக மஹரிஷிக்கு பெருமாள் இங்கு ப்ரத்யக்ஷமான பெருமை உண்டு.

ஸ்ரீவில்லிபுத்தூர் துளசி பிரசித்தி பெற்றது. இங்கு ஒரு நந்தவனத்திலே ஆண்டாள் உண்டானதாகக்

கொள்ளப்படுகின்றது. ஆடி மாதத்தில் பிரம்மோத்ஸ்வம் நடைபெறுகின்றது; ஐந்தாம் நாள் கருடசேர்வை கண்கொள்ளாக் காட்சியாகும். இங்கிருந்து வடக்கே மூன்று மைலில் ஸ்ரீனிவாசர் சந்நதி இருக்கின்றது. ஸ்ரீவில்லிபுத்தூரை அடுத்தும் மற்ருேர் திருவண்ணுமலை இருக்கின்றதை அன்பர்கள் நினைவு கொள்ளலாம்.

## திருக்கோஷ்டியூர்

குடை, நடை, வடை, முடி என்று காஞ்சி, ஸ்ரீரங்கம், திருப்பதி, திருநாராயணபுரம் இவற்றுள் விசேஷமானவற்றைக் குறிப்பார்கள். திருக்கோஷ்டியூருக்கு விசேஷக் குறிப்பு நம்பி அவதார ஸ்தலம்தான்.

இராமனுதபுரம் ஜில்லா திருப்பத்தூரிலிருந்து ஐந்து மைல தெற்கே அமைந்துள்ள விஷ்ணு ஸ்தலம் திருக்கோஷ்டியூர். ஸௌம்ய நாராயணர், திருமாமகள் நாச்சியார் இங்குள்ள ஸ்வாமி அம்மன் பெயர். சிவகங்கையிலிருந்து பஸ் மார்க்கமாக 15 மைலில் இருக்கின்றது. விமானத்தில் தனி மூர்த்திகள் உண்டு. எம்பெருமானுர் குரு ஆணையையும் மீறி கோபுரத்திலிருந்து மந்திர உபதேசம் செய்த மஹா ஸ்தலம் என்பதைக் கேட்டதும் எல்லோருக்குமே இத்தகைய ஸ்தலத்தை நாம் ஸேவிக்க வேண்டும் என்ற அவா உண்டாவது ஸ்வபாவம். மேலே உருவம் வைக்கப்பட்டுள்ளது பார்ப்போரை பரவசப் படுத்துகின்றது. அஷ்டாங்க விமானம், தேவ புஷ்கரணி முக்கியமானவை.

எல்லாவற்றைக் காட்டிலும் மிக முக்கியமானது இரண்யாக்ஷனைக் கொன்ற நரஸிம்மர். நின்றும், இருந்தும், நடந்தும், கூத்தாடியும் கோலங் காட்டியது மெத்தைதள்க் கோயிலுக்கு மெருகு கொடுப்பதாகும். கதம்பரிஷிக்கும் இந்திரனுக்கும் பிரத்யக்ஷ தரிசனம் தந்த இடம். மேற் கூறிய பெருமாள் கோயிலுக்குள் சிவ ஸ்தலமாக சரப லிங்கமும் உமையும் பக்தர்கள் தரிசிக்கலாம். சரப இலிங்கேஸ்வரர் நரஸிம்மரை அடக்கியதாகவும் புராணம் கூறுகின்றது. திருக்கோஷ்டியூரின் தெப்பக்குளமும் பெருமை பெற்ற புஷ்கரணி.

## திருக்கோவலூர்

''ஒருவர் உறங்கலாம்; இருவர் அமரலாம்; மூவர் நிற்கலாம்'' என்றவுடனேயே தமிழ் மக்களுக்கு நினைப்பூட்ட வல்ல விஷ்ணு ஸ்தலம் திருக்கோவலூராகும். இது தென்னுற்காடு மாவட்டத்தில் விழுப்புரத்திற்கும் திருவண்ணுமலைக்கு மிடையே தக்ஷிண பினுகின தீரத்திலே அமையப் பெற்றது. இங்கே தான் முதன் முதலாகத் திவ்ய ப்ரபந்தம் தோன்றியது. ஆகவே இதை வைணவ சமயப் பிறப்பிடமாகக் கொள்வோரும் உண்டு.

அடை மழை, அந்தி நேரம், மிருகண்டு மகரிஷி ஆஸ்ரம் இடைகழி. மழைக்காக ஒருவர் உள்ளே வந்து ஒதுங்குகிருர். பின்னர் மற்றொருவரும் அவரை அடுத்து மூன்ருமவரும் நுழைகின்றனர். இடைகழி



மயிலத்தில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமான் திருக்கோயில்

யிலோ ஒருவர் படுக்கலாம். இருவரா யிருந்தால் அமரலாம். மூவராயிருந்தால் நிற்கலாம். பார்ப்போம் மேலே. பொய்கை யாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் மூவரும் இறைவனைப் பாடிய வண்ணம் இருந்தனர். ஒரு நெருக்கம் உண்டாகி நான்காவது நபர் நுழைவது தெரிந்தது. அவர் இறைவனே என்று உணர்கின்றனர்.

மிகப் பெரிய பெருமாள் கோவில் நகரின் நடுவே இருக்கின்றது. ஒரு சிறிய கட்டை கோபுரமும் காணப்படுகின்றது. திரு விக்ரம அவதாரமெடுத்த ஸ்தலம். துர்க்கா தேவி க்ஷேத்ர பாலனம் செய்வதாகச் சொல்லுவார்கள். புஷ்பவல்லித் தாயார் சந்நதியும் பெரியதே. நன்கு பராமரிக்கப்பட்டால் வெகு அழகாக விளங்கும், ஆழ்வார்கள் காலத்திற்கு முன்னமேயே புகழ் பெற்றிருந்த கோயில். ஔவையார் திருமணம் நடத்திய கதையுமுண்டு. வாமனுவதாரி மகாபலியை மூன்றடி யாசித்தார். சுக்ராச்சாரி தடுத்தும் பலி வாக்களித்தார். முதலடி மண், இரண்டாம் அடி விண்ணுலகங்கள், மூன்ரும்அடி பலிச் சக்ரவர்த்தியின் தலை மீதே. இதை வர்ணிக்கும் திருக்கோவலூரிலே வீரட்டேஸ்வரர் கோயில், அறையணி நல்லூர், ரகோதம ஸ்வாமிகள் ப்ருந்தாவனம் ஆகியவைகளும், ஞானனந்த மஹான் எழுந்தருளி யிருக்கும் தபோவனமும் விளங்குகின்றன.



டில்லியில் உள்ள லக்ஷ்மி நாராயண் ஆலயத்தின் அழகுத் தோற்றம்

## மயிலம்

முருகப் பெருமான் திருக்கோயில் கொணடுள்ள தலங்கள் பலவற்றுள் தலையாயவை அறுபடை வீடுகள், திருப்பரங் குன்றம், திருச்செந்தூர், பழனி மலை சுவாமிமலை, திருத்தணி, பழமுதிர்சோலை இவைகள் ஆகும். இவைகள் மட்டுமல்ல, இன்னும் எவ்வளவோ முருகர் ஸ்தலங்களின் பெருமையை அருணகிரிநாதர் திருப்புகழ் மூலமாகப் பாடுகின்ருர். அத்தகைய முருகர் பெருமான் ஸ்தலங்களுள் தென்னுற்காட்டில் திண்டிவனத்தருகே உள்ள மயிலம் முக்கியமானது. அழகிய சிறு குன்றின் மீது முருகப் பெருமான் தாய் தந்தையருடன் பக்தர்களுக்கு தரிசன மளிக்கின்ருர். தென்னுற்காடு ஜில்லா மட்டிலுள்ள பல பகுதி பக்தர்கள் ஆடி கிருத்திகை தை கிருத்திகைக்கு இங்கு தசிக்கக் கூடுவார்கள். தமிழ் கல்லூரி உண்டு.

## டில்லி

வட நாட்டிலும் பல ஆலயங்கள் இருக்கின்றன. தலை நகரில் அமைக்கப் பெற்றுள்ள லக்ஷ்மி நாராயணன் கோயிலைப் பார்த்தால் வட நாட்டு ஆலயங்களின் முறையைக் காணலாம்.

ஆலயங்கள் அனந்தம். அவைகளை வர்ணிப்பது யாராலும் ஆகாத செயல். சில குறிப்புகளே முக்கிய ஸ்தலங்கள் பற்றி மலரில் கொடுத்திருக்கிறேன். இது தங்கள் ஆர்வத்தைப் பெருக்கி பல ஸ்தங்களைப் பற்றி உணரவும் நேரில் தரிசிக்கவும் உற்சாகம் தருமாயின் என் பணி பயனுடையதாகிறது.

ஓம்:

# ஓதாமல் ஒரு நாளும்....

கே. எஸ். மகாலிங்கம்

★

நமக்கு வயது வளர வளர, அறிவும் அனுபவமும் உடன் வளர்கின்றன. படித்த பெருநூல்களிலே சொல்லிய விஷயங்களை அடிக்கடி சிந்திக்கிறோம். பிறருக்கும் எடுத்தும் சொல்லுகிறோம். இப்படி ஓரளவு 'உயர்நிலை' அடைந்து விட்டதாக நம்மைநாமே நினைத்து கொள்ளும் நமக்கு, இளம் வயதிலே படித்த அரிய நீதி நூல்கள் நினைவுக்கு வருவதேயில்லை. நம் வீட்டிலோ, அன்றி வேறிடங்களிலோ சிலசமயங்களில் குழந்தைகள் அவற்றை அர்த்தம் தெரிந்தோ, தெரியாமலோ உரத்த குரலில் படிப்பதைக் கேட்கிறோம். அப்பொழுதும் அவற்றினுடைய அருமை பெருமைகளை அனுபவிக்க நம் மனம் மறுக்கிறது. காரணம், "குழந்தைகளுக்காக இயற்றப்பட்டவை குழந்தைகளுக்கே உரியன" என்ற மனப்பான்மையே.

"ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்" என்ற வரியைக் குழந்தை தனக்கேயுரிய இசையில் பாடுகிறது. அதைச் சற்றுக் காதுகொடுத்துக் கேட்டுச் சிந்தித்துப் பார்த்தால், நமக்குப் புலப்படும் உண்மைகளின் பெருமையை உணரலாம். ஆறறிவு படைத்த மனிதன் சாகும்வரைபடித்துக்கொண்டேயிருக்கவேண்டும். அறிவின் வளர்ச்சிக்கு எல்லையேயில்லை. ஒரு மொழியிலுள்ள நூல்களையெல்லாம் படித்து முடிப்பதற்கு ஆயுள்காலம் போதவே போதாது. மனித ஆயுளில் பெரும்பகுதி உறக்கத்திலும், நோயிலும், பிறவற்றிலும் வீணே கழிக்கப்படுகிறது. எஞ்சிய சிறுபகுதிக் காலத்தையாவது அறிவுக்கும், நல்வாழ்விற்கும் பயன்படும் சிறந்த நூல்களைக் கற்றுப் பயனடைகிறோமா என்றால் அதுவும் இல்லையே! எதற்கும் பயன்படாதனவும், சிற்றின்பத்தைப் பெருக்கிக் கேவல எண்ணங்களை வளர்ப்பனவுமான குப்பைகளைப் புத்தகங்கள் என்ற பெயரில் கூசாது வாங்கிப்படிக்கிறோம். நமக்குக் கிடைத்திருக்கும் குறைந்த ஆயுட்கால அளவையும் இப்படி வீணாக்கிக் கொள்ளுகிறோம்.

சோழ மன்னன் சீவக சிந்தாமணியைப் படிப்பதிலேயே காலங்கழிக்கிறானென்று, சேக்கிழார் என்ற அவனுடைய முதலமைச்சர் அறிவுகூறி அந்நூலைப் படிக்கவேண்டாமென்று தடுத்தார்! காரணம், அது மறுமைக்கு (மோட்சமடைவதற்கு) பயன்படாதென்பதே. சிறந்த இலக்கியமாயிருந்தும் சிந்தாமணி இருமை இன்பங்களும் தரும் ஆற்றல் இல்லாதது என்று கருதினார் சேக்கிழார். ஆகவே, அவ்வின்பங்களை ஒருங்கே தரவல்ல நாயன்மார்களின் வரலாறான பெரிய புராணத்தைப் பாடிக் கொடுத்துச் சோழனை மட்டுமல்ல, சைவ உலகத்துக்கே பெருந்தொண்டு செய்தார் சேக்கிழார். ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான சிந்தாமணியே இம்முறையில் விலக்கப்பட்டது என்றால், இன்று மக்கள் படித்துப் பொழுது போக்கும் புத்தகங்களைப் பற்றி என்ன சொல்வது?

"கல்வி கரையில கற்பவர் நாள்சில" என்று தொடங்கிய நாலடியார், "தெள்ளிதின் ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீரொழியப் பாலுண் குருகின் தெரிந்து" என்று நமக்குப் போதனை செய்கிறது. ஆகையால் மனிதவாழ்வு பயன்பெறுமாறு அவசியமானவற்றைப் பயிலவேண்டும்.

இன்றைய விஞ்ஞானவுலகில் வாழும் மனிதன், அவ்வப்போது புதிது புதிதாகத் தோன்றும் விஞ்ஞான நுட்பங்கள் பற்றிய நூல்களைப் படிக்கவேண்டும். உள்ளத்திற்கு உவகையும், உயிருக்கு ஊட்டத்தையும் தருவது இலக்கியம். அந்தச்சுவை இல்லையேல் வாழ்வு கருகிப் போய்விடும், ஆகவே, சிறந்த இலக்கியங்களைப் படிக்கவேண்டும். சேக்கிழார் சோழனுக்குக் கூறியதுபோல மறுமையின்பத்துக்குரியனவற்றையும் பார்க்கவேண்டும். கடவுளிடத்திலே பக்தியைப் பெருக்கும் நூல்களுக்குத் தமிழில் பஞ்சமேது? நாயன்மார்களும், ஆழ்வார்களும் உள்ளமுருகிப் பாடியிருக்கும் பாசுரங்கள் மறுமையின்பமும், இம்மையின்பமும் ஒரு சேரத்தரவல்லன. மிகவுயர்ந்த இலக்கியங்களாகவும் அதே சமயத்தில் ஆண்டவனை அடைய வழி வகுப்பனவாகவும் உள்ளவை. இப்படிப்பட்ட நூல்களை "ஓதாமல் ஒரு நாளும் இருக்கவேண்டாம்."



# "விதியின் விளையாட்டு!"

★

கி. ரா. சண்முகம்

தொடர்ந்து வானம் அழுதுகொண்டே இருந்தது! நல்ல இருட்டு!! குளிரின் வாடை நிம்மதியான தூக்கத்தில் என்னை ஆழ்த்தியது!

"க்ரீச்! க்ரீச்!!" ஏதோ ஒருவித அபயக்குரல் வெளித்தாழ்வாரத்திலிருந்து கேட்டது. திடுக்கிட்டு எழுந்து போய், விளக்கை ஏற்றிப் பார்த்தேன். அழகிய கிளிக்குஞ்சு ஒன்று மழையில் நனைந்தபடி கத்திக் கொண்டிருந்தது!

அந்த, அகதியான சிறிய ஜீவனுக்கு ஆறுதல் செய்ய நினைத்து, ஒரு தூக்குக் கூடையில் படுக்கை அமைத்து, அதில் அந்த சின்னஞ்சிறு உயிரை இருக்கச் செய்துவிட்டு, மன நிறைவோடு, மீண்டும் போய் படுத்தேன். தூக்கம் வரவில்லை.

அடிக்கொருதரம், அந்தக் கிளிக்குஞ்சு குரல் கொடுத்துக் கொண்டே இருந்தது! ஒவ்வொரு முறையும் விளக்கைப் போட்டுப் பார்த்துவிட்டு வந்தேன். அதற்குச் சிறிது ஆகாரமும் கொடுத்துவிட்டுப் படுத்தேன்.

விடியற்காலையில் எழுந்ததும் என் அடைக்கலத்தில் வந்த அந்தக் கிளிக்குஞ்சைப் பார்க்க மனம் தூண்டியது. சத்தம் ஏதும் இல்லை! ஆணியில் மாட்டியிருந்த கூடையைப் பார்த்தேன். கந்தல் படுக்கை மட்டும் இருந்தது. என்னை ஏமாற்றிவிட்டு, தன் வீடு நோக்கிப் பறந்துவிட்ட அந்த "ஓர் இரவு விருந்தாளி"யை மனதில் நினைத்து நொந்து கொண்டேன்!!

அப்போது, கட்டிலின் அடியில் என் கண்கள் ஒரு பயங்கரக் காட்சியைக் கண்டன! அந்தச் சிறு உருவம் சின்னபின்னப்பட்டு, தலைமட்டும் தனியே கிடக்கக் கண்டேன்!! கிளிக்குஞ்சின் பஞ்சு இறகுகள் மேல் என் வளர்ப்புப் பூனை நிம்மதியாகப் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தது!

இரவில் நடந்திருந்த அந்த பயங்கரக் கொலை என் கண் முன் நிழலிட்டது! என் நெஞ்சம் பதைத்தது—துடித்தது! "என்ன அநியாயம்!" என்ற குரல் என்னையறியாமலேயே வந்தது. என் சப்தம் கேட்டு பூனை விழித்துக் கொண்டது.

என் கோபக் கண்களை அந்தப் பூனை பார்த்துவிட்டு, ஒன்றுமே தெரியாதது போல் வந்து என் கால்களை நக்கியது! காலால் அதைத் தூக்கி, எற்றி எறிந்தேன்! வெளி வராந்தாவில் போய் விழுந்தது! பூனைக் குட்டி என்னைப் பரிதாபமாகப் பார்த்தது!!

"பிசி! போய்விடு! என்னைக் கொலைகாரனுக்காதே!!" என்று தொண்டை கிழியக் கத்தினேன்.

அந்த ஜீவன் என்னைத் திரும்பித் திரும்பி பார்த்தபடி வெளியே போய்விட்டது! கிளிக்குஞ்சின் தலையை கையில் எடுத்துக் கொண்டு வெளியே வந்தேன். கழுத்தில் இரத்தம் உறைந்திருந்தது! என் கண்கள் நீரைக் கக்கின. பூனை விழுந்த இடத்தைப் பார்த்தேன். அங்கு புது இரத்தம் கசிந்திருந்தது!! நான், மூர்க்கத்தனமாகச் செய்த காரியத்தால் என் "பழைய தோழன்" பூனைக்குத் தலையில் பலத்த அடி பட்டிருக்கவேண்டும்!

என் உள்ளம் தடுமாறியது!

சுமார் அறுபது நாட்கள் இருக்கும். அன்றும் இதே மாதிரி மழை தூறிக் கொண்டிருந்தது. அன்றும் எனக்கு நிம்மதியான தூக்கம்! ஏதோ ஒருவித "முனகல்" ஒலி கேட்டு வெளியே வந்து பார்த்தேன்.

தாய்ப்பூனை ஒன்று, கழுத்தில் பெரிய காயத்துடன் குற்றுயிராய், மழையில் கிடக்கக் கண்டேன். அதன் அருகே சின்னஞ்சிறிய பூனைக்குட்டி குளிரால் நடுங்கிக் கொண்டு, சுருண்டு கிடந்தது!! எனக்கு என்ன செய்வதென்றே சிறிது நேரம் புரியவில்லை!

தாயையும், சேயையும் உள்ளே எடுத்துச் சென்று தாய்க்கு முதல் உதவி செய்தேன். அந்தச் "சிறிய மலரு"க்கு துவட்டிவிட்டு, குளிரைப் போக்கி படுக்க வைத்தேன்! கெடிகாரம் மணி இரண்டடித்தது. அந்த ஒலியும் எனக்கு ஏதோ ஒரு இனந்தெரியாத பயங்கரத்தை ஊட்டியது!!

விளக்கை அணைத்துவிட்டு கட்டிலில் படுத்தேன். பலவித எண்ண அலைகள்!

விடிந்து எழுந்ததும் முதன்முதலாக அந்த இரு ஜீவன்களைப் போய்ப் பார்த்தேன்.

அந்தத் தாய்ப்பூனை "நீண்ட தூக்க"த்தில் இருந்தது! பிஞ்சுக் கால்களால் தன் தாயைத் தொட்டு விளையாடிக் கொண்டிருந்தது, குட்டிப் பூனை! தன் எதிர்காலம் எத்தகைய சூன்யம் நிறைந்திருக்கும் என்பதை அறியாது, தாய் உயிருடன் இருப்பதாக நினைத்து, அதனுடன் விளையாடிக் கொண்டிருந்தது, கவலையற்ற அந்தச் சிறு உயிர்!!

என் தோட்டத்தில் தாய்ப் பூனையைப் புதைத்து, அதன் மேல் ஒரு துளசிச் செடியைநட்டேன்!

அன்றிலிருந்து, என் உயிர்த்தோழன் அந்தச் சின்னஞ்சிறு பூனைக்குட்டிதான்! எங்கு போகுமோ, என்ன செய்யுமோ அதெல்லாம் எனக்குத் தெரியாது! சாப்பிடும் நேரத்திற்கு விநாடி பிசகாமல் "ஆஜர்" கொடுத்துவிடும்! அது இல்லாமல எனக்கும் ஏனோ சாப்பிட மனம் வராது!

ஆனால், இன்று? என் மனம் கல்லாகிவிட்டதே!

தாய்ப்பூனை புதைக்கப்பட்ட இடத்திற்கு அருகே கிளிக்குஞ்சையும் புதைத்தேன்! துளசிச் செடியையும் நட்டேன்! என் கண்ணீரால் அந்தப் புனிதமண்ணை நனைத்தேன்!!

அதனை ஆதரித்துக் காப்பாற்றிவிட்டதாக நான் கொண்ட நினைப்பு? என் செயலே அதற்கு முடிவாக இருக்க நேர்ந்த விதியின் செயல்!! என்னை விஞ்சிவிட்டது. என் உள்ளம் குமுறி அடங்கிற்று.



Phon: 698.
Grams: COPPERCO

உயர்தர பித்தளை தகடுகளுக்கும்
பித்தளை வில்லைகளுக்கும்
'இண்ட்கோ மெட்டல்ஸ்'

## திருச்சிராப்பள்ளி
## கூட்டுறவு மெட்டல் ரோலிங் மில்ஸ் லிட்.,

A-2, இன்டஸ்ட்ரியல் காலனி - திருச்சிராப்பள்ளி-10.

சென்னை ராஜ்யத்திலுள்ள எல்லா கூட்டுறவு பாத்திர உற்பத்தி சங்கங்களுக்கும் மூலப் பொருள் வழங்கும் தலைமை ஸ்தாபனம்.

(சென்னை அரசாங்க தொழில் வர்த்தக இலாகாவின் மேற்பார்வையில் இயங்குவது)

M. இராமகிருஷ்ணன்,
ஒர்க்ஸ் சூப்பரிடன்டன்ட்.

S. செங்கமலம் பிள்ளை,
தலைவர்.

# பயிர்தொழிலில் பண்டையத் தமிழகம்

★

ரகுபதி சாமிநாதன்

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

உலகில் மனித உணர்வுகளுக்கேற்ப நாகரிகமும், பண்பாடும் வளர வளரப் பல்வகைத் தொழில்களும் வளர்ந்தன. வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்தில்தான் உலக நாகரிக வரலாற்றின் முதற்சின்னம் தோன்றி வளரலாயிற்று என்பது அறிஞர் பலருடைய கருத்து. தன்னைச் சுற்றி இயற்கையன்னை கொட்டிக் குவித்திருந்த வளமான செல்வங்களையெல்லாம் தமிழன் தன் அறிவாற்றலாலும், தொழில் நுணுக்கத் திறனாலும் தனதாக்கிக் கொள்ள முயன்றதால்தான் இன்றைக்கு ஐயாயிரம் ஆறாயிரம் ஆண்டுகட்கு முன்னரேயே அவனுக்கு முழுநிறை வாழ்வு கிடைத்தது. மின்னாற்றலையும், அணுவாற்றலையும், வேறு பல அறிவியலின் அருஞ்சாதனைகளையும் அவன் அறியாதிருந்தான் ஆயினும், அவனுடைய இன்பமயமான நல்வாழ்விற்குத் தேவையான பல பொருள்களையும் தன் தொழில் திறத்தால் ஆக்கக் கற்றுக் கொண்டிருந்ததைக் கண்டு உலகம் வியந்தது; பாராட்டியது. தொழிலின் அடிப்படையிலேயே அந்தணர், அரசர், வேளாளர், வணிகர், கொல்லர், தச்சர், ஆயர், பரதவர், எயினர் போன்ற குலப் பிரிவுகள் தோன்றியிருந்தமை அவர்களுடைய பண்பட்ட நாகரிகத்தையே காட்டுகின்றது.

மனித நாகரிக வரலாற்றின் முதற்படி நீரையும், நிலத்தையும் இணைத்து உழுது பயிரிடக்கற்றுக் கொண்டதுதான். தமிழகமும உழவுத் தொழிலில் உயர்வு பெற்று விளங்கியது'

தமிழகத்திலே, காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வையை, பொருநை போன்ற ஆறுகளின் நீர்ப்பெருக்கினால் வளம்பெற்ற நீடுகதிர்க் கழனிகளே மிகுதி. ஆற்று வளம் பெறாத நிலங்களில் குளங்களையும், கிணறுகளையும் வெட்டி வளம் பெருக்கினர். இவ்வாறுகளையும், நீர்நிலைகளையும் சுற்றிக்கிடந்த இருஞ்சேற்று அகல் வயல்களில் நெல்லும், கரும்பும், வாழையும் கணக்கின்றி வளர்ந்தன. மதகுகளையும், வாய்க்கால்களையும் அமைத்து வேண்டும்பொழுது விளைநிலங்களுக்கு வேண்டும் நீரைப் பாய்ச்சுவர்.

"குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்"
"வயல் அமர் கழனி வாயிற் பொய்கை
கயர்ஆர் நாரை உகைத்த வாளை"

எனும் சங்க நூற்பகுதிகள் குளங்களையடுத்திருந்த வயல் வளத்தைப் பாடுகின்றன.

இவ்விளை நிலங்களில் அயராது உழைத்த உழவர்கள் தொழில் திறமை மிக்கவர்கள். மண்ணைப் பொன்னாக்கி, உலகை உண்பித்த பெருங்குடி மக்களாகிய இவர்கள் வேந்தரால் படையும், கண்ணியும் கொடுக்கப் பெற்றுச் சிறப்புறுதல் உண்டு என்பதைத் தொல்காப்பியம் கூறும்.

"குழநிறை வல்சிச் செஞ்சாலுழவர்
நடைநவில் பெரும்பகடு புதவில்பூட்டிப்
பிடிவாயன்ன மடிவாய் நாஞ்சில்
உடுப்புமுக முழுக்கொழு மூழ்கவூன்றித்
தொடுப்பெறிந் துழுத துளர்படு துடவை"
என்பது உழவர்தம் தொழில் முறையை விளக்கும்

பெரும்பாணாற்றுப் படைப் பகுதியாகும். தொழில் வல்ல பெரிய எருதுகளை வீட்டு முற்றத்திலேயே நுகத்தில் பூட்டிக் கொண்டு, பிடி யானையின் வாயைப் போன்ற வளைந்த கலப்பையை, உடும்பு முகம் போன்ற கொழு மறையும்படி ஊன்றி, நன்கு வளைய வளையச் சாலிட்டு உழுவர். இவ்வாறு உழுது பண்படுத்திய பின், நீர் நிரம்பிய வயற்சேற்றில் உழத்தியர் நாற்று நடுவர்.

"நீர்மிகு செறுவில் நாறுமுடியழுத்த நின்
நடுநரொடு நீ சேரியாயின்"

என்னும் நற்றிணைக் குறிப்பு இதனையுணர்த்தும். முல்லை முதலிய நிலங்களில் வெட்டிப் பண்படுத்திய கொல்லையில் ஓலைக் கொட்டங்களிலே விதைகளை ஏந்தி விதைப்பதும் உண்டு.

நீர்வள மிகுதியால் பயிர்களிடையே செழித்து வளரும் ஆம்பல், நெய்தல், கோரை போன்ற களைகளைப் பிடுங்கி எறிவர். விளைந்த நெல்லையறுத்துக் களங்களில் குவித்துப் பருத்த எருமைகளை விட்டுக் கடாவிடுவர். களங்களில் குன்றெனக் குவிந்த நெல்லை மரக்கால்களைக் கொண்டு அளந்து, களஞ்சியங்களில் கொண்டு சேர்ப்பர்' களங்களில் இடப்பட்ட நெற்போர்களின் மீதேறி, விசைத்து எழுந்து. அண்மையில் வளர்ந்துள்ள செழும்பனையின் பழத்தைப்பறிக்க முயல்கின்ற உழவர் சிறுவர்களைப் பற்றிப் புறநானூறு சிறப்பிக்கும், நெல்லில், செந்நெல், வெண்ணெல் என பல வகையுண்டு.

நெல்லுக்கு வேலியாகப் பாத்திகளில் கரும்பு நடுவர்.

"கரும்பு அல்லது காடு அறியாப்
பெருந்தண் பணை" என்றும்,
"ஆடுகண் கரும்பின் வெண்பூ நுடங்கும் நாடு"

என்றும். கரும்பு விளையும் கழனிகள் சிறப்பிக்கப் படுகின்றன. அரும்பெறல் அமிர்தம் அன்ன கரும்

பினை அதிகமானது முன்னோர்களே தமிழகத்துக்குக் கொணர்ந்தனர் என்பது புறப்பாடற்கருத்து. கருப் பஞ்சாறு பிழியும் "தேம்பிழி எந்திரங்கள்" இருந்தன, இவ்வெந்திரங்களின் ஒலி களிறு பிளிறும் ஒலியைப் போன்றிருந்ததாக ஐங்குறுநூறு கூறும். ஐங்குறுநூறு கரும்பைப் 'பனவெதிர்' என்றும், மூங்கிலைச் 'சிலம் பின் வெதிரம் என்றும் குறிக்கின்றது. காலமன்றியும் இக் கரும்பினை அறுத்து ஒழியாத கழனிகளால் நாடு வளம் பெற்றது.

வளங்குறைந்த நிலப்பகுதிகளில் தினை, வரகு. அவரை, பருத்தி முதலியன பயிராயின.

"கோடைப் பருத்தி வீடுநிறை பெய்த
மூடைப் பண்டம் மிடை நிறைந் தன்ன"

எனும் புறப்பாடற்பகுதி பருத்தி விளைந்த காலத் தையும் அளவையும் குறிக்கிறது. குறிஞ்சியில் விளைந்த மிளகு மூடைகள் கடல்கடந்த நாடுகளுக்கும் ஏற்றுமதியாயின இம் மூடைகள், 'கருங்கறி மூடை கள்' என்றும், 'மிளகு வளர் மலைகள்' 'கறிவளர் சிலம்பு' என்றும் குறிப்பிடப்படுகின்றன. இவையே யன்றித் தேனும், தீம்பலாவும், கிழங்கும். மூங்கிலரிசி யும், பிறவும் உழவர் வித்தாதும் விளைந்து வளங்கூட் டின.

உழவு பற்றித் திருவள்ளுவர் கூறும் கருத்துக் களே அன்றைய உழவுத் தொழிற் சிறப்பிற்கு ஏற்ற சான்றாகும்.

வயல்களைக் குறித்த பெண்ணை. கழனி, பழனம், செறு, பணை முதலிய சொற்களும், ஏர், கலப்பை, நாஞ்சில், மேழி எனும் கலப்பையைக் குறிக்கும் சொற்களும், பயிர்த்தொழிலில் பண்டைத் தமிழன் பெற்றிருந்த பெருஞ்சிறப்பையுணர்த்துகின்றன.


## THE OMEGA INSULATED CABLE CO. (INDIA) LTD.

*Regd Office*:
122/2, MOUNT ROAD, MADRAS.

*Factory at*
AMBATTUR.

★

Commencing production of
VIR & PVC Cables by May 1964.

★

*Technical cellaborators*:
KELSEY ENGINEERING LIMITED
NORTH VANCOUVER B.C. CANADA.



## ஆரணி கோவாபரேடிவ் டவுன் பாங்கி லிமிடெட் ஆரணி, N. A. Dt.

REGD. No. 4712.

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | ரூ. | 1,00,000 |
| அலுவல் மூலதனம் | ரூ. | 8,00,000 |
| டிபாசிட்டுகள் வாங்கி இருப்பது | ரூ. | 6,66,000 |

4% முதல் 5½% வரை வட்டி வீதத்தில் பிக்ஸட் டிபாஸிட்டுகளும், மற்றும் கரண்டு, சேவிங்ஸ், ரெகரிங், தினசரி பிராவிடெண்டு பண்டு ஆகிய எல்லாவிதமான டிபாசிட்டு களும் வாங்கப்படுகின்றன.

குறைந்த வட்டிக்கு நகை ஈடு நபர் ஜாமீன், சொத்து ஈடு மீது கடன்கள் கொடுக் கப்படுகின்றன.

எல்லாவிதமான பாங்கி அலுவல்களும் திறமையுடன் ஏற்று நடத்தப்படுகின்றன.

L. ஸ்ரீராமச்சாரியர், B. A., B. L.,
பிரசிடெண்டு.


ஆண்டவன் கிரீடத்திலே
ஜொலிப்பதும் ரத்தினம்
அரசர் முடியிலே
பிரகாசிப்பதும் ரத்தினம்
அணங்குகள் ஆரத்திலே
மின்னுவதும் ரத்தினம்
அன்பர்கள் கரத்திலே
மிளிர்வதும் ரத்தினம்
T·A·S
ரத்தினம்
பட்டணம் பொடி
தபால் பெட்டி 1151, மதராஸ்-21.
S·R· ஞானம் பட்டணம் பொடியும் எமது தயாரிப்பே!

**வங்கப் பேரறிஞரின் தமிழ்க் கட்டுரை :**

# கவிஞர் ரவீந்திரர்

**விஷ்ணுபாத பட்டாசார்ஜி**

**வங்க மாதாவின் தவப்புதல்வர் இக் கட்டுரையின் ஆசிரியர். பேராசிரியர் விஷ்ணுபாத பட்டாசார்ஜீ அவர்கள் எழுத்தாளன் சிறப்பு மலருக்கென தாமே தமிழில் இக் கட்டுரையை உருவாக்கி அனுப்பி வைத்திருக்கிருர்கள். திரு. பட்டாசார்ஜீ கடந்த சில ஆண்டுகளாக முறைப்படி தமிழைப் படித்து தமிழ் இலக்கியத்தில் ஊறித்திளைக்கும் தமிழன்பர். இக் கட்டுரை மூலம் வங்கத்திற்கும்—தமிழுக்கும் உள்ள தொடர்பை வலியுறுத்துகிருர். மகா கவி தாகூரைப்பற்றிய இக் கட்டுரையை வெளியிடுவதில் எழுத்தாளன் பெருமகிழ்ச்சியும், பெருமிதமும் கொள்வது இயற்கைதானே? —ஆசிரியர்.**

சில நாட்களுக்கு முன்னுல் நான் இரண்டு கட்டுரைகளைப் படித்தேன். ஒன்று த. நா. குமாரசாமி எழுதியது; மற்றொன்று கி. சந்திர சேகரன் எழுதியது. இருவரும் தமிழ் இலக்கியத்தில் பிரசித்தமானவர்கள். 1961-ல் தாகூர் நூற்ருண்டு விழா நடைபெற்றது. அப்போது சாந்திநிகேதனத்தில் நடைபெற்ற ஆலோசனை சபைக்கு இவர்கள் வந்திருந்தார்கள். இருவரும், "தாகூரும் தமிழும்" என்பதைப் பற்றிச் சொன்னுர்கள். நான் அவர்களது கட்டுரைகளைப் படித்துப் பல விஷயங்களைத் தெரிந்து கொண்டேன்.

தமிழ்நாட்டவர் முதன்முதலில் ஆங்கிலத்தின் மூலமாகவே தாகூரைப் பற்றித் தெரிந்து கொண்டனர். தமிழர் மட்டுமல்ல; இந்தி மொழியாளரைத் தவிர மற்ற எல்லா மொழியாளர்களுமே ஆங்கிலம் வழியாகவே தெரிந்து கொண்டார்கள். ஆங்கில "கீதாஞ்சலி"யைப் படித்தபிறகுதான் தமிழ்நாட்டில் கற்றறிந்தவர் இடையே வங்க இலக்கியத்தைப் பற்றி—சிறப்பாக தாகூர் இலக்கியத்தைப் பற்றி நன்ருகத் தெரிந்து கொள்ளும் விருப்பம் ஏற்பட்டது.

மகாகவி பாரதியார்தான் முதன்முதலில் தாகூரின் கதைகளை மொழிபெயர்த்து தாகூரைத் தமிழ்நாட்டில் அறிமுகம் செய்து வைத்தார்—என்று சொல்வதில் நான் பெருமைப் படுகிறேன். பாரதியாருக்குப் பின்னுலே பிரசித்தி பெற்ற மகரிஷி வி. வி. எஸ். ஐயர் அவர்கள் தாகூரின் "காபேர் கதா" அதாவது "படித்துறையின் கதை" என்ற கதையை எழுதினுர். மகாகவி பாரதியாரும், வி. வி. எஸ். ஐயரும் ஒன்றுசேர்ந்து தாகூரின் கதைகளை மொழி பெயர்த்து வெளியிட்டார்.

1933-க்குப் பிறகு சில தமிழர்கள் வங்க மொழியைக் கற்றுக்கொண்டார்கள். அதுமுதல் நேராக வங்க மொழியிலிருந்து தாகூரின் நூல்கள் தமிழில் வர ஆரம்பித்தன. சிறுகதைகள், புதினங்கள் முதலிய பல வகை நூல்களும் வெளிவந்தன. ஆனுல், சரத்சந்திர சட்டர்ஜி அவர்களின் நூல்களைப் போலத் தாகூரின் நாவல்கள் பெரும்பாலான மக்களைக் கவரவில்லை.

உண்மையில் தாகூர் ஒரு பெரிய கவிஞர்—என்றுதான் அவரைப் பற்றி மக்களுக்குப் பரிச்சயம் உண்டு. தாகூரும் பன்முறைகளில் "நான் ஒரு கவிஞன் என்று சொல்லியிருக்கிருர். அவர் பலவகைத் துறைகளில் ஏராளமான நூல்கள் எழுதியிருந்தாலும் கிட்டத்தட்ட 65 ஆண்டுகள் அதாவது அவருடைய பதினைந்தாம் வயதிலிருந்து எண்பதாம் வயதுவரை ஓய்வு இல்லாமல் கவிதைகளையே எழுதிவந்தார்.

இது இந்த தொழில் யுகத்தில் மிகவும் ஆச்சரியமான விஷயம். ஏனென்ருல், கவிதையும், தொழிலும் பரஸ்பரம் விரோதிகள், சத்துருக்கள். முதன்முதலில் எல்லா ஆசிரியர்களும் சிலகாலம் கவிதைகள் எழுதுவார்கள். பிறகு சலித்துப்போய் 'சினிமா' கதை எழுத ஆரம்பித்து விடுவார்கள். ஏனென்ருல், 'சினிமா'தானே நம் காலத்திய கற்பக விருக்ஷம். ஆனுல் தாகூருக்குக் கவிதைதான் வாழ்வு முழுவதும் பிரதான சாதனமாக இருந்தது. அதனுல் தாகூரின் கவிதைச் சுவையை அனுபவிக்காதவர்கள் உண்மையில் துர்பாக்கியசாலிகளே.

தாகூரின் காவியங்களில் பிரதானமாக மனிதன், இயற்கை, கடவுள் என்ற மூன்று அம்சங்கள் உண்டு. அவற்றில் நான் மனிதரைப் பற்றி ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. உண்மையில் கடவுளும், இயற்கையும் தாகூரின் இலக்கியத்தில் "ஜீவநாடிகள்". இயற்கையையும் கடவுளையும் ஒதுக்கிவிட்டால் தாகூரில் ஒன்றுமே கிடையாது. கீதாஞ்சலியைப் பாருங்களேன்.

கீதாஞ்சலி நோபல் பரிசு பெற்றது. அதற்குப் பிரதானமான காரணம் என்ன? மேற்கு நாடுகளுக்கு மதத்துறையில் கீதாஞ்சலி ஒரு புதுவகை இலக்கியம். ஏனென்ருல் கடவுளை அவர்கள் "பரலோகத்தில் இருக்கும் பிதா" என்று சொல்வார்கள். தமிழிலுள்ளதுபோல "பாலே, தேனே, கனியே, கன்னலே" என்று இயற்கைப் பொருள்களாகக் குறிப்பிடுவதில்லை. "அம்மையே! அப்பா" என்று நெருங்கிய உறவினராகவும்

அழைப்பதில்லை. ஆகையால் தாகூரின் கவிதை மேல் நாட்டாருக்கு மிகவும் பிரியம் உண்டாக்கியது.

உண்மையில் தாகூர் ஒரு சன்னியாசியல்ல. அவர் கண்ணை மூடிக்கொண்டு ஜபிக்கவோ, தியானம் செய்யவோ சொல்லவில்லை. ஆனால், தாகூர் இயற்கைப் பொருள்கள் எல்லாவற்றிலும் கடவுளைக் காணுகிருர். எப்படி? ஒரு பாட்டைப் பார்ப்போம்.

"எனது ஞான குருவே! நீ எப்படிப் பாடுகின்ருய் என்பதை நான் அறியமுடியவில்லை. நினது பாட்டினைக் கேட்டு எப்போதும் நான் அமைதியான ஆச்சரியத்தில் முழுகி இன்புறுகின்றேன். நினது கீதத்தின் ஒளி உலக முழுவதும் ஜோதி பரப்பி விடுகின்றது. நினது கீதத்தின் உயிர்க்காற்று விண்ணை நிறைக்கின்றது. உனது தெய்வீக கீத ஓடை கற்பாறைகளைத் துளைத்துக் கொண்டு சுழன்ருேடுகிறது. எனது இதயம் நினது கீதத்தில் கலக்க அவாவுகின்றது. ஆனல், குரலற்றுத் தத்தளிக்கின்றது. நான் பேசுவேன். ஆனல் பேச்சு பாட்டாகப் பெருக்கெடுக்கவில்லையே! ஐயோ! தோற்றேன், தோற்றேன். ஆ! எனது இதயம் நினது கீதத்தின் முடிவற்ற வலையில் சிக்குண்டது, எனது ஞானகுருவே!"

தாகூர் பத்மா நதிக்கரையிலுள்ள 'சிலைதஹா' என்ற அழகான சிற்றூரில் இளமையின் பெரும்பகுதி நாட்களைக் கழித்தார். இங்கு இருக்கும்போதுதான் அவர் இயற்கையின் எழிலையும், மகிமையையும் பூரணமாக உணர்ந்து அனுபவித்தார். அங்கே அவர் 1888-ம் ஆண்டில் அதாவது 27-ம் வயதில் எழுதிய கடிதம் ஒன்றில் இயற்கையின் எழிலைப்பற்றி பின் வருமாறு சொல்லியிருக்கிருர்: "கல்கத்தாவில் வசிக்கும்போது உலகம் உண்மையில் எத்தனை விந்தையான அழகுடன் விளங்குகிறது என்பதை நாம் மறந்துவிடுகிருேம். ஆனல் இங்கே (அதாவது சிலைதஹாத்தில்) சிற்றூரின் கரையிலே அமைதி வாய்ந்த செடிகொடிகளுக்கிடையில் கதிரவன் மறைவதும், நதி நடுவிலுள்ள ஆளரவமற்ற திட்டில், லட்சக்கணக்கான நட்சத்திரங்கள் தோன்றுவதும் எத்தனை அதிசய சம்பவங்கள் என்பதை நாம் உணருகிருேம்".

மற்ருெரு கடிதத்தில் சொல்லுகிருர்: "நான் வானத்தை நோக்கும்போது நீர் ததும்பும் இமைகொட்டாத நீலக்கண் ஒன்று என்னையே நோக்குவதாக எண்ணுகிறேன்."

இன்னெரு கடிதத்தில் இயற்கையைத் தாயாருடன் ஒப்பிட்டு அவர் சொல்லுவதாவது: "நோயுற்ற குழந்தையைத் தாய் பார்ப்பதுபோல, கவலை தோய்ந்த முகத்துடனும், மௌனமாகவும், ஆழ்ந்த அன்புடனும் இயற்கை என்னைப் பார்க்கிறது... இந்த விண்மீன்கள் நிறைந்த வானத்தின் கீழே நான் மீண்டும் பிறந்து வாழுவேனு, இந்த அமைதியான மாலை வேளையில், இந்த ஆளரவமற்ற நதியின் மேலே, வங்க நாட்டின் இந்த அழகான கோடியிலே, நான் மறுபடியும் வருவேனு—என்று நான் பெரும்பாலான வேளைகளில் நினைக்கிறேன்."

இதுபோன்ற ஏராளமான பகுதிகளைத் தாகூரின் "சின்ன பத்ரம்" அதாவது "சிதைந்த கடிதம்" என்ற புத்தகத்தில் காணலாம். தாகூரைப் படிப்பவர்கள் இதை அவசியம் படிக்கவேண்டும். வேறு பல புத்தகங்களை ஒதுக்கிவிட்டாலும் பரவாயில்லை. ஆனல், இதைப்படிக்காவிட்டால் உண்மையான தாகூரைத் தெரிந்து கொள்ள முடியாது.

இதுவரை நாம் கடிதங்களில் இயற்கை பற்றித் தாகூரின் உணர்ச்சிகளைப் பார்த்தோம். இப்போது இனிமேல் அதை அவரது கவிதைகளில் பார்ப்போம். கீதாஞ்சலியில் ஒரு பாடலின் தலைப்பு "போகும் நாள் அன்று" (அல்லது "விடை பெறும் நாள்") இதில் தாகூர் உலகைப் பற்றியும், மனித-வாழ்க்கையைப் பற்றியும் தன்னுடைய எண்ணங்களை வற்புறுத்தி இருக்கிருர்.

நான் பிரிந்து போகும் நாளன்று
கூறுவேன் ஒன்று கேளுங்கள்:
இவ்வியனுலகில் நான் பார்த்தவை பெற்றவை
இவற்றிற்கோர் இணையும் உண்டோ?
இவ்வொளி வாரிதி நடுவே நலந்தரும் தாமரை
ஒன்றுண்டு;
அதன் நறுந்தேனை உண்டு உய்ந்தவன் நான்.
விந்தை மிகு இந்தக் கூத்துக் களந்தன்னில்,
என் விளையாட்டுக்கள் கணக்கிலவே!
இரு கண்கள் களிதீர, கண்டறியாதன கண்டேன்!
என் கைக்குள் சிக்கினன் தீண்டற்கரியவன்;
இத்துடன் என் கதையை அவன் முடிப்பினும்
முடித்துவிடட்டும்—
போகுமுன் ஒன்று கூறுவேன் உங்களுக்கு.

*(ரவீந்திரர் கவிதைத் திரட்டு)*

கவிஞர் இங்கே உலகத்தை சோதி நிறைந்த கடலுடன் ஒப்பிடுகிருர். அக்கடலின் நடுவில் மணமுள்ள தாமரைப்பூ ஒன்று இருக்கிறது. அதன் தேனைக் குடித்துவிட்டுக் கவிஞர் தன்னை உயர்ந்தவனுக நினைக்கிருர்.

இது தாகூரின் மற்ருெரு கவிதை. இதிலும் அவர் உலகம் முழுமையும் இனிமை வாய்ந்தது என்று சொல்லுகிருர்:

இனிமை மிக்கது அவ்விண்ணுலகு;
இனிமை மிக்கதே இம்மண்ணின் புழுதியும்.
நிறை வாழ்வின் இவ் வாணியை—
இம்மாபெரு மந்திரத்தை—
என் உளந்தனில் ஏற்றுக் கொண்டேன்.

*(ரவீந்திரர் கவிதைத் திரட்டு)*

இன்னெரு கவிதையில், "இலைகளின் மேல் விளையாடும் ஒளி, வானில் மிதந்து செல்லும் முகில்கள், முகத்தில் வீசும் தென்றல் காற்று—இவைகள் இறைவனின் அன்புக்கு அறிகுறி" என்கிருர். இதனல் தாகூர் இயற்கையின் மூலம் கடவுளைக் காணுகிருர் என்று நாம் அறிகிருேம்.

# கம்பனின் சோக நாடகம்

★

ரா. கி. சாரி

வாங்கரும் பாதம் நான்கும் வகுத்த வால்மீகி, இராமன் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர். இராமாயணக் காட்சிகளை நேரில் கண்டு நடந்ததை அவ்வண்ணமே எழுதியுள்ளார் என்றெல்லாம் கூறப்படுகிறது. ஆகவே, மூல காவியத்தில் ஒவ்வொரு காண்டமும் தனிப்பட்ட சில காட்சிகள், நிகழ்ச்சிகள் ஆகியவை நிரம்பினதாக உள்ளன. இராமன், சீதை, லட்சுமணன் இம்மூவர்களே எல்லாக்காண்டங்களிலும் நடுநாயகமாய் விளங்குவதனால் மற்றும் பல சுவையான சம்பவங்கள், உள்ளத்தை உருக்கும் சோகக் காட்சிகள், மனத்தைக் கவரும் உயர்வான மனிதத்தன்மை, இவைகள் எல்லாம் அவைகளுக்கு உரித்தான முக்கியத்துவத்தை ஆதி காவியத்தில் பெறவில்லை. சுருங்கக் கூறின் ஆங்கிலத்தில் rounding of characterisations, (குணச்சித்திரத்தின் பூரணத் தன்மை) என்று சொல்லும் முக்கிய அம்சம் வால்மீகியின் கண்ணோட்டத்தில் இல்லை என்ற முடிவுக்குத்தான் வரவேண்டும்!

ஆனால் கம்பனிடத்தில் ஒரு மஹா கவி, சிறந்த நாடகாசிரியன், ஒரு பெரும் விமர்சகன் இவர்களை ஒருங்கே கொண்ட ஒரு மேதையை நாம் காண்கின்றோம், ஒரே கதைதான் நிகழ்ச்சிகள் எல்லாம் மூலத்தைத் தழுவியே நிற்கின்றன. இதிலும் இராமன், சீதைக்குத்தான் முதலிடம். இருந்தாலும், வால்மீகியின் சிதைந்த அல்லது சிதைக்கப்பட்ட குணச்சித்திரங்களை செப்பனிட்டு பூரணம் வாய்ந்த சுவைச்சித்திரங்களாக காட்டுகின்றான் கம்பன். ஒரு காண்டத்திலிருந்து மற்றொரு காண்டம் சென்றாலும், முதல் காண்டங்களிலிருந்த மனதைக்கவரச் செய்த நிகழ்ச்சிகளைப்பற்றி நமக்கு கோடி காட்டும் வகையில் அவன் சில புது அம்சங்களைப் புகுத்தியிருப்பது தான் அவன் மேதை.

"காட்டிலே கழுகின் வேந்தன் செய்தது காட்ட
மாட்டேன்
நாட்டிலே குகனார் செய்த நன்மையை நயக்க
மாட்டேன்"

இந்த இரண்டு அடிகளைச் சற்று ஆராய்வோம். இவை யுத்தகாண்டத்தின் முற்பகுதியில் அமைந்துள்ளன. நம் உள்ளத்தைக் கவரும் இக் கருத்தைச் சொல்பவன் சுக்ரீவன். குகன், ஜடாயு இவர்களின் தன் நலமற்ற செய்கைகளைப் புகழ்ந்து தன்னையே இழிவுபடுத்திக் கொள்ளும் வகையில் அமைந்த பண்பும், பணிவும், கலந்த கருத்து. கம்பன் பார்வையில் சுக்ரீவன் ஓர் அரசியல் வாதி. அவன் இராமனுடன் செய்துகொண்டது ஒரு அரசியல் ஒப்பந்தம் அது கிடக்கட்டும். குகப் படலம் அயோத்தியா காண்டத்திலேயே முடிந்துவிடுகிறது. அதேபோல ஜடாயு தோன்றுகின்ற படலங்கள் ஆரணியகாண்டத்திலேயே முடிவுபெறுகின்றன. இருந்தும், யுத்தகாண்டத்திலே Flashback என்னும் வகையில் இதை நமக்கு அறிவுறுத்தும் வகையில் காண்பித்துள்ளான் கம்பன். Conceit என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். அதாவது மூல காவியத்தில் வால்மீகியினால் ஆக்கப் பெறாத பெரும் படைப்புக்களைக் கம்பன் தான் செய்துவிட்ட பெருமையை உணருகிறான்.

குகன் கம்பன் படைப்பில் தோழமையின் உருவாக நமக்குக் காட்சி யளிக்கிறான். ஆனாலும் கவிஞன் சிந்தனையில் தேக்கம் கிடையாது. மேலே எழுதிச் செல்லும் கம்பன் தோழமையின் பூரணத்துவம் குகனில் உருப் பெறவில்லை என்று உணர்ந்தான் போலும்! அதை ஆரணிய காண்டத்தில் ஜடாயு காண் படலத்திலே சித்தரித்து நம் உள்ளத்தைக் கவர்ந்து விடுகிறான் கவிஞன்.

மூலராமாயணத்தில் இராம லக்ஷ்மணர்கள் ஜடாயுவை முதலில் சந்திக்கிறார்கள். ஒரு பெரிய கழுகு. ராட்சதனைப்போல காட்சியளிக்கிறது. 'நீ யார்' என்று அதைக்கேட்கிறார்கள். அதற்கு "நான் உங்கள் தகப்பனின் நண்பன்" என்று பதில் உரைக்கின்றது. பிறகு தன் குலத்தின் பெருமையை விளக்கி "உங்களுக்கு யாதொரு தீங்கும் நேரிடாமல் நான் காப்பாற்றுவேன்" என்று சொல்லி அவர்களை வழி அனுப்பிவிடுகிறது. "உங்கள் தகப்பனின் நண்பன்" என்று அறிமுகம் செய்து கொண்ட அந்தக் கழுகு தசரதனைப் பற்றியோ, அல்லது இவர்கள் காடு வந்த செய்தியைப்பற்றியோ அறிய முன் வரவில்லை.

ஆனால் கம்பன் சடாயுவை ஒரு தமிழ்க் கிழவனாக ஆக்கிவிடுகிறான். இந்த அறிமுகத்தைப் பார்ப்போம். மூலராமாயணத்தில் இராமலட்சுமணர்களே சடாயுவிடம் பேசுகின்றார்கள். ஆனால் கம்பன் அந்தக்கிழவனையே முதலில் பேச வைத்து விடுகிறான்.

"கனப்படை வரிசிலைக் காளை நீவிர் யார்? மனப்பட எனக்கு உரை வழங்குவீர்" என்றான். தசரதன் மைந்தர்கள் என்று அறிந்தான். பொங்கிய உவகையுடன் அவர்களைத் தழுவிக்கொண்டு "வேந்தர் வேந்தன் தன் வரைத்தடந்தோள் இணைவலியோ" என்று தசரதனைப்பற்றி குசலப் பிரச்னம் செய்கிறான். தசரதன் இறந்த செய்தி கேட்டவுடனே மூர்ச்சித்து விழுகிறான். அவனை ஆச்வாசப்படுத்தி தெளிவு பெறச்செய்கிறார்கள் சிறுவர்கள், மூர்ச்சை பெற்ற கிழவன் புலம்புகின்றான். "எனது நண்பன் தசரதன் இறந்தான் என்று கேட்டும் என் ஆவி என்னை விட்டுப் பிரியவில்லை என்பதனால் நான் சிநேக தர்மத்திலிருந்து விலக்கப்பட்டவனானேன், ஐயகோ! நான் விலங்கானேன்". என்று கதறுகின்றான்.

கழுகிற்கும் தசரதனுக்கும் எவ்வகையில் தொடர்பு? இதைப்பற்றி மூலராமாயணத்தில் ஒருவித குறிப்புமில்லை. ஏதோ புராணத்திலிருந்து கிடைத்த செய்தியை வைத்துக்கொண்டு சக்ரவர்த்திக்கும் கழுகுக்குமுள்ள அசாதாரணமான உறவைத் தன் காவியத்தில் பின்னிவிட்டான். அதுமட்டும் இல்லாவிட்டால் கம்பனின் சிறப்பு இங்கு வெளியாகியிருக்காது. முன்பு சம்பராசுரனுடன் தசரதன் போர்புரியுங்கால் அவனுக்கு உறுதுணையாகயிருந்தவர்கள் இருவர். ஒருத்தி கைகேயி—ஒரு பெண்விலங்கு—மற்ரொன்று இந்தக் கழுகு-சடாயு. மனிதத்தன்மையின் சிகரத்தை எட்டிப் பிடித்த ஒரு பறவை!

சம்பராசுரனை வென்ற தசரதன் சடாயுவின் உதவியை மெச்சி "நீ உடல், நான் ஆவி" என்ற ஒரு இடையருத நட்பைக் கொண்டவன். ஒருவன் உடலாகவும், மற்ரொருவன் ஆவியாகவும் திகழும்பொழுது ஒருவன் இறப்பது எவ்வகையில் சாத்தியமாகும்? "உயிர் கிடக்க உடலை விசும் பேற்றினர் உணர்வு இறந்த கூற்றினரே" என்று யமனைப்பார்த்து ஏசுகின்ருன் கம்பன் சடாயுவின் வாயினல்! உடனே எரி புகுந்து தன் உயிரைவிட்டு தசரதனின் நட்புக்கடனையும், தன் துயரையும் தீர்ப்பேன் என்று சொன்னவனை, "எம் பெருமான்! எமைக்கைவிடின் பினையார் 'களைகண்' உளர் என்று கெஞ்சும் அச்சிறுவர்களிடம் "நீங்கள் அயோத்தி திரும்பும்வரை யான் உயிர்வைத்திருப்பேன் என்றுஉறுதிகூறுகிருன். ஜடாயு பழுத்தகிழவன் என்று முன்னமே சொன்னேம். எண்ணங்கள் தடுமாறும் வயது நிலை. முன்பே அச்சிறுவர்களைப் பார்த்து 'மனப்பட எனக்கு உரை வழங்குவீர்' என்று பேசுகிருன். மனப்பட என்ருல் தனக்கு விளங்கும் வகையில் என்று பொருள். இப்பொழுதுதான் அவன் இவர்களைப்பற்றிச் சுற்று ஆராய முற்படுகின்ருன். தசரதன் விண் அடைந்தான் என்ருல் இவர்கள் அரசர்களாக அல்லவா இருக்கவேண்டும்? இவர்கள் காட்டிற்கு ஏன் வந்தார்கள் என்றெல்லாம் யோசித்து அவர்களையே கேட்டும் விடுகின்ருன். அதுவும் சாதாரணக் கேள்வியில்லை. அரசு தங்களுக்குக் கிட்டாத வகையில் இடர் இழைத்தவர்கள் யாராயிருந்தாலும் அவர்களை சாவர் ஆக்கி தருவேன் அரசு என்று வீரம் ததும்பப் பேசுகின்ருன். பிறகு அறிந்தான் உண்மையை. தாரணி தம்பிக்கு உதவிய வள்ளலே என்று இராமனைப் புகழ்கின்ருன். பிறகு சீதையின் அறிமுகம். முடிந்ததும் அவர்கட்கு 'காக்குவென் யான்' என்று உறுதிகூறி பஞ்சவடிசேர வழி காட்டுகின்ருன் சடாயு.

இராவணன் சீதையைக் கடத்திச்செல்லுகின்ருன் அவளிருக்கும் பூமியையே தோண்டியெடுத்துச் செல்கின்ருன். சீதை அவனிடமிருந்து தன்னைக்காத்துக் கொள்ள அவனிடம் மன்ருடுகிருள். அவள் தனிமையில் இருக்கும்பொழுது அவளைக் கடத்திச் செல்வது இராவணன் போன்றவர்களின் வீரத்திற்கு இழுக்கு என்றெல்லாம்அவனுக்கு ரோசமூட்டும்வகையில்சொல்லிப் பார்க்கின்ருள். அவன் கேட்கவில்லை. காம வசப்பட்டு கண்களை இழந்தவனிடம் வீரம் எப்படியிருக்கும்? "உயிரினை உதவி பெரும்பதம் கைக்கொள்" என்று சீலதையை வணங்கினன். "மலையினும் வலிய தோளான்" இராவணன். சீதைக்கு வேறுவழியொன்றும் புலப்படவில்லை. கதறுகிருள்; மலையே, மயிலே, குயிலே கோதாவரியே என்று. அப்பொழுது ஒரு பெரும் மலை எதிர்பட்டால்போல் தெரிகிறது, "நெருப்பு இடைப்


## திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு மத்திய பாங்கு

**வரையறுக்கப்பட்டது எண். 178.**

**திருச்சிராப்பள்ளி-2.**

தபால்பெட்டி எண். 324.

தந்தி : "கோ-ஆப்பாங்கு" — தொலைபேசி : எண். 2189

**கிளைகள் :**

கரூர், அரியலூர், துறையூர், மணப்பாரை.

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் | ரூ. | 50,00,000 |
| பங்கு மூலதனம் | ரூ. | 38,76,850 |
| வைப்புகள் | ரூ. | 1,86,02,023 |
| நடைமுறை மூலதனம் | ரூ. | 5,08,52,229 |

மத்தியகால தவணை வைப்புகளுக்கு அரசினர் உத்திரவாதம் உள்ளது. தவணை வைப்புகளுக்கு $5\frac{1}{2}$ % வரை வட்டி வழங்கப்படும்.

எல்லாவிதமான பாங்கு அலுவல்களும் நடத்தப்படும். விபரங்களுக்கு பாங்கின் செயலாளருக்கு எழுதவும்.

ஜி. வரதராஜன்,
செயலாளர்.



*With the best compliments*

*of*

## The Grand Trunk Roadways

**81 Linghi Chetty Street,**

MADRAS-1.

திருச்சி மலைவாசல்

எவர்சில்வர் பாத்திரக்கடை

எங்களிடம் எல்லா பிராண்டு எவர்சில்வர் சாமான்களும், கல்யாணம், வெகுமதி, பிறந்த நாள் பரிசுகள் முதலியவைகளுக்குக் கொடுக்கக்கூடிய நவீன சாமான்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கியாரண்டியுடன் கிடைக்கும்.

சந்திரா கார்ப்பரேஷன்,

எவர்சில்வர் பாத்திர வியாபாரம்,

46, சின்னக்கடை வீதி, மலைவாசல், திருச்சி.2.

நரசிங்கபுரம் வள்ளுவர் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் No. C. 1992.

முன்னல் (P. O.) அரக்கோணம் Tq. N. A. Dt.,

எங்கள் சங்கத்தில் கைதேர்ந்த நெசவாளர்களைக்கொண்டு உயர்ந்த ரக நூலினால் 20s முதல் 60s நூல் வரையில் நெய்யப்பட்ட ஷர்ட்டிங் பீஸ்கள், வேட்டிகள், துண்டுகள், காடா, துப்பட்டிகள், சேலை முதலான ரகங்கள் குறைந்த விலையில் எந்தநேரத்திலும் கொடுக்கப்படும். தேவைக்கு ஒரு முறை நேரில் விஜயம் செய்து ஆதரிக்குமாறு கோருகிறோம்.

P. M. சண்முக பிள்ளை,
தலைவர்.

ம, தா. ருக்மணி பிள்ளை,
காரியதரிசி.

நரசிங்கபுரம்.


பரப்பும் கண்ணன் சடாயுவின் திருவுருவம். "எங்கடா போவது நில் நில்" என்று முழங்கிக்கொண்டு இராவணன் முன் தோன்றுகிறான். தன் சிறகுகளால் அந்தத்தேர் நகரவிடாது திசைகளை மறைத்துவிட்டதாக கம்பன் சொல்கிறான். சடாயு உடனே போர் செய்யவில்லை, பார்க்கிறான். சீதையை இராவணன் தீண்டவில்லை. இராவணன் மேல் சற்று அனுதாபம் உண்டாகிறது. சற்று புத்திமதி சொன்னால் சீதைக்கு விடுதலை யளித்துவிடுவான் என்று கிழவருக்கு நப்பாசை. சொல்லிப்பார்க்கிறார். ஆனால் இராவணன் கேட்பானா? "இரும்பு உண்ட நீர் மீளினும் என்னுழையில் கரும்பு உண்ட சொல் மீள்கிலள். காணுதியால்!" என்று சவால் விடுகிறான். வேறு வழியில்லை. போர் செய்து மீட்கவேண்டியதுதான் என்று நிச்சயித்து சீதைக்குத் தைரியம் சொல்லி யுத்தத்திற்கு சன்னத்தமாகிறான். போர். ஓர் கழுகு–ராட்சத வீரன். இதைப் புகைப்படமே பிடித்துக்காட்டி விடுகிறான் நம் கம்பன். போரின் முதல்பகுதி சடாயு செயித்து விடுகிறான். "மேருவைப் பறிக்க வேண்டின், விண்ணினை இடிக்க வேண்டின், நீரினைக்கலக்க வேண்டின், நெருப்பினை அவிக்க வேண்டின் இராவணனுக்கு அரிது என்" என்று மார்தட்டின அவனை இந்தக் கிழட்டுக்கழுகு உண்மையிலேயே மண்ணைக் கவ்வச்செய்து விடுகிறது. இரதம் சிதைந்து கீழே தள்ளப்பட்டு மூர்ச்சையிடுகிறான் இராவணன். பிறகு மறுமுறை போர் துவக்கம். இராட்சதனின் அம்பு, ஈட்டி, வேல் எல்லாம் பயனற்றதாகின்றன. எஞ்சினது அவன் வாள். ஆம் சங்கரன் கொடுத்த வாள். அதைப்பயன்படுத்திக் கொள்கிறான். சிறகுகள் வெட்டப்பெற்று பூமியில் தள்ளப்படுகிறான் கழுகின் வேந்தன். இந்தக்காட்சி கம்பனுக்கே பொறுக்க முடியவில்லை போலும். சங்கரன் இராவணனுக்கு ஈந்த இந்தவாள் அது ஒரு பெரிய அடாத காரியம் செய்யக் கருவியாகிறது என்று உள்ளம் நோகிறான் கம்பன். இருந்தும் ஒரு தன்னலம் கருதாத பெரும் தியாகி கடவுளையும் மீறிவிடுவான் என்று நம்பினான் கம்பன். ஏனென்றால் அவன் இந்த கட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்குமுன் சடாயு இறப்பதற்கு அவன் வயதின் முதிர்ச்சியும் காரணமாயிற்று என்று கூறுகிறான்.

"வாழ்கை நாளும் மெலியும் கடைசென்றுளது" என்று முடிக்கின்றான் கம்பன்.

சடாயுவின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. பார்க்கிறான் இராவணன் சீதையுடன் போய்க் கொண்டிருப்பதை. வருந்திக் கண்ணீர் விடுகிறான், "வந்திலர் மைந்தர் நம் மருகிக்கு எய்திய வெந்துயர் துடைத்தனென் என்னும் மெய்ப் புகழ் தந்திலர், விதியினார் தரும வேலியைச் சிந்தினர், மேலினிச் செயல் என் ஆம் கொலோ? விதி என்பது தருமத்தையே கெடுத்துவிட்டதே! இனி என்ன ஆகப்போகின்றதோ என்று அஞ்சித் துடித்துக் கொண்டிருக்கின்றான் சடாயு.

பிறகு இராமனும் இலட்சுமணரும் அவ்விடம் வருகிறார்கள். வீழ்ந்திருக்கும் சடாயுவைப் பார்த்து விட்டு கண்கலங்க புலம்புகிறான் இராமன்:

> தம் தாதையரைத் தனையர் கொலை நேர்ந்தார்
> முந்து ஆரே உள்ளார்? முடிந்தானே முன் ஒருவன்.

எந்தாயே! எற்காக நீயும் இறந்தனையால்
அந்தோ! வினையேன் அரும கூற்றம் ஆனேனே!
என் தாரம் பற்றுண்ண ஏன்றாயை, சான்றோயை
கொன்றானும் நின்றான்; கொலையுண்டு நீகிடந்தாய்.
வன் தாள் சிலை ஏந்தி வாளிக் கடல் சுமந்து
நின்றேனும் நின் றேன் நெடுமரம் போல்
நின்றேனே!

என்று தன் செயலற்ற தன்மையைக் குறித்து வருந்துகிறான் இராமன். பிறகு சடாயு சற்று உயிர்ப்புறுகிறான். இராமனைத் தேற்றுகிறான். "விதியை ஒருவனாலும் மாற்ற முடியாது, மனித குலத்தைப் படைத்த பிரம்மா கூட விதிக்கு உட்பட்டவன்'' என்று 8 பாட்டுக்களில் விதியின் தத்துவத்தை விளக்குகிறான். இராமாயணத்தில் இதுவரை கண்டிராத ஒரு திருப்பம். இராமனுக்கு முதல் தடவையாக கோபம் உண்டாகிறது. "ஊறின உதிரம், செங்கண் உயர்த்தன உயிர்ப்புச் செந்தீ ஏறின புருவம் மேல் மேல்'' என்று இராமனின் கோப உணர்ச்சியை நமக்குக் காட்டுகிறான் கம்பன்.

ஆனால் சடாயு கிழவன், அனுபவத்திலும் முதிர்ந்தவன். வீணாகக் கோபிப்பதில் அர்த்தமில்லை என்றும், ராவணனின் மாட்சியையும் எப்படி தேவர்களும், மற்றும் சந்திரன், சூரியன், காற்று இவைகளும் அவனுக்கு அடங்கியுள்ளார்கள் என்பதைச் சொல் சொல்கிறான். மேலும்

வம்பு இழை கொங்கை வஞ்சி வனத்திடை
தமியள் வைக
கொம்பு இழை மானின் பின் போய்
குலப்பழி கூட்டிக் கொண்டீர்"

என்று இராமனை ஏசுகின்றான். மேலும் சீதையை மீட்டு மறுபடியும் தருமம் நிலைபெறச் செய்வது உன் கடமை என்று கடைசி முறையாகச் சொல்லி விட்டு சடாயு உயிர் நீத்தான்.

தன் உயிர்த்தோழன் தசரதன் இறந்துவிட்டான் என்று கேட்ட சடாயுவின் பிரிவாற்றாமை, தன்னை எப்படியும் அரக்கனிடமிருந்து மீட்டுத் தன் கற்பை காப்பாற்றுவான் என்று நம்பியிருந்த சீதைக்கு சடாயுவின் தோல்வியினால் உண்டான பெரும் ஏமாற்றம், வருத்தம். தன் தந்தையின் உடலாகத் திகழ்ந்தவன் வனத்தில் தங்களைக் 'காக்குவென்' என்று உறுதி கூறி காக்கும் வகையிலேயே தன் உயிரை ஈந்த அந்த உத்தமனின் முடிவால் நேர்ந்த இராமனின் அளவிட முடியாத துக்கம், இராமன் தன் செயலற்ற தன்மையைக் குறித்து ஏங்குதல் மேலும் நமக்கெல்லாம் படிப்பினையாக கவிஞனின் விதியின் தத்துவத்தை விளக்கும் நம் மனத்தைத் தொடும் வகையில் அமைந்த கவிதைகள் இவைகளெல்லாம் சேர்த்து இந்த சடாயுவின் கதை நமக்கு ஓர் சோக நாடகத்தின் இலக்கியமாக அமைந்துவிடுகிறது.



புதிய வெண்ணெய், நெய் & தயிர் எங்களிடம் கிடைக்கும்
தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள்
S. சபாபதி—S. S. டெய்ரி
ஊத்துக்குளி R. S., கோவை மாவட்டம்.

# AROUND TEMPLES OF ART

T. M. BHASKAR TONDIMAN, M.A., I.A.S. (Rtd.)

Excepting Literature the most eloquent record of man's sense of value consists in the art and architecture of the age to which he belongs. In them the deepest of feelings and the perennial aspirations of humanity stand materialised in brick stone and pigment. This is even more true of temples which are erected in a spirit of reverence and dedication and are, as such, projections of the religious consciousness of the people. The Hindu Temple thus becomes a complete symbol for the union of the individual with the divine. Its upward movement and lofty spires express something of the human desire to reach out into the infinite.

I am one who has seen a good number of the temples of South India, especially those in the Tamilnad which is dotted with thousands of temples. Many of them are old and some are in ruins. Apart from the famous temples, a good number of them are in villages. A large majority of these temples are simple and unostentatious structures with no great artistic merit. But the bigger ones are monuments of considerable antiquity, the oldest of them dating back by fourteen centuries from now. Besides their antiquity and artistic excellence, an interesting fact about them is that these temples have gone through a long evolutionary process and are documents of the history of South Indian culture. We are quite familiar with the imposing temples of the Dravidian Dynastic periods. The Pallavas, the Cholas and the Naiks were indefatigable builder and renovators of temples in Tamilnad. The elegance and beauty of the cave temples of Mamallapuram, the Stately grandeur of the Tanjore Vimana and the Madurai Gopurams and the rich and exquisite carvings of Krishnapuram and Tenkasi are all living monuments of Temple architecture which flourished in our Tamilnad.

After having studied the art and architecture of these temples I wanted to see and study the architecture of the temples which are north of Venkatam. Hence I made a tour of the Northern part of India with two of my friends (of Coimbatore). The entire journey was by motor car and we covered over eight thousand miles in two and a half months. It was a fact-finding tour in the course of which I visited almost all the cave temples of Western India and other temples of all the States except Kashmir and Assam.

After the temples in Mysore and its adjacent places, the first place of visit worth mentioning was Badami, once the capital of the Chalukyan Rulers. There are four caves, three of which are dedicated to the Hindu Pantheon. The period of excavation is said to be the latter half of fifth century (i. e.) a little earlier than the cave temples of Mamallapuram. The outer side of these three cave temples is comparatively plain, except for a running border of grotesque ganas (Dwarfs). The interior is carved with a wealth of beautiful sculptures. The decoration is excellent but the general plan is somewhat uncertain. Presumably the Hindu temples of that period were at an early stage of development. Two of these cave temples are dedicated to Vishnu, one of these two is the biggest of the group. Both these temples penetrate unusually deep into the rock and the facade of each consists of a colonnade of four pillars forming the verandah, with two pillars forming an entrance to the Central Hall. The fourth cave is a Jain temple. It is smaller in size and has distinguishing features designed to suit Jain ritual. The Sandhya Tandava of Siva, the Ardhanariswara, the Mahishamasuramardhani, the Vaikuntanatha, the Narasimha and the Varaha are all bas-reliefs of colossal size and they are executed with a perfection worth recording.

The other cave temples of importance visited by me are, of course, Ajanta and Ellora. Rock temple architecture has reached its zenith in these two places. The architecture of these two cave temples was sculpture on a mass scale. The architects of these cave temples seem to have had a keen sense of beauty and advanced technical knowledge. It is interesting to note at Ellora, that the excavation has usually proceeded from the top downwards, the natural rock surface below providing the platform and eliminating the

necessity for scaffolding. The Ajanta caves are excavated out of amygdaloid trap rock, and are situated in the scarped side of a deep ravinge, which is shaped like a crescent. They are entirely Buddhist and date from 200 B. C. to 650 A. D. Out of thirty excavations four are Chaitya halls and the rest are Viharas. The decoration motifs differ with the age of excavation. The Hinayana and Mahayana phases are also well defined, the former being simpler and the latter much more decorative and characterized by images of the Buddha. The caves are unique in that they combine three forms of art — architecture, sculpture and painting. Yet Ajanta is more known for its fresco paintings. The frescoes on the ceiling and walls of Cave No. 1 include a court scene depicting the reception of a Persian Envoy; a painting of Prince Mahajanaka's coronation, the conversion of the Buddha's half brother Nanda, a Naga ruler, his wife and ladies of the court and the famous standing Bodhisatva holding a lotus in the hand.

The Ellora cave temples are unique in another sense. One can see three styles of architecture at one place, the Hindu, Jain and Buddhist all being located side by side. It is a place where three religions meet. The Kailas temple dedicated to Siva is the noblest and the most magnificent and is perhaps the grandest monolithic excavation in the world. It represents Siva's celestial abode Mount Kailas. The remarkable imagination which conceived it and the unstinted labour involved in executing the work have received the approbation of all art critics. Percy Brown is notably eloquent. "This plastic decoration is Ellora's crowning glory; something more than a record of artistic form. It is a spiritual achievement each portion being a rich statement glowing with meaning. The Kailas is an illustration of one of these rare occasions when men's minds, hearts and hands work in unison towards the consummation of an ideal." Kailas stands in the middle of a vast court in which are carved colossal elephants and other animals. Rawana lifting Kailas is the main sculpture pannel at the bottom of the temple and it is executed dexterously. The next best in this group of Ellora caves are the Jain caves. The most interesting among these are the Indra Sabha and Jagannath Sabha. The statue of Indra on the loggia with an elephant at its feet is an exquisite piece of sculpture.

Though Ajanta and Ellora are masterpieces of the art of architecture, sculpture and painting, one cannot have a complete appreciation of the cave temples of Western India without seeing the Elephanta caves.

Situated in the island of Elephanta, six miles from Bombay Harbour, these caves of the 8th century A. D. can be visited by regular ferry service. The island derives its name from the giant carving of an elephant which once stood at the old landing place. The Ganesh Gumpha is the outstanding cave temple in this island. It has been excavated in a rocky terrace, the outside consisting of a columned verandah. The sculptured masterpiece in this cave temple is a three-faced image representing the Maheswara aspect of Siva. Other interesting sculptures in the cave are of Ardhanariswara, the Lord who is both Male and Female, the marriages of Siva with Parvathi, Bhairava, Siva in the Tandava Dance. I don', want to drag you further to Kailas, Karloni Bhaja and Bedra caves where the sculptures cannot be said to be of as high an order as that of Ellora and Ajantha.

After seeing the cave temples of Maharashtra one gets into the Madya Pradesh to see the temples at Khajuraho which is perhaps the most developed and refined expression of Indo-Aryan architectural genius. A unique feature of the Khajuraho temples is that they are not enclosed within walls but stand on a high terrace of solid masonary. The Khajuraho temples are not imposing in size. But they have achieved a grandeur, through their graceful proportions and superb surface decoration. The exterior of the temples decorated with parallel friezes in high relief displays a rare wealth of forms both human and divine pulsating with life and warmth and moving in a pageant of unending variety and presenting themes of inexhaustible interest. The graceful animation of these life-like forms, the consummate skill with which they are executed in the stone walls and the vast variety and ingenuity of the techniques employed are unparalleled in any other style of temple architecture. It is true that eroticism is a recurrent theme in the shrines at Khajuraho. Whatever the significance of these sculptures may be, it is fairly clear from the intrinsic artistic merit that the sculptors who fashioned them found the temple walls an easy canvas for the candid depiction of such a common theme as the elemental love of man and woman.

Of the six main regional developments into which, the temples of North India divide themselves the one in Orissa is the most individual in

*Grams*: SCREWMANS. *Phone*: 1240

SANKHU BRAND

*For Quality*

WOOD SCREWS & WIRE NAILS

★

*Contact*

SCREWMANS

INDUSTRIAL ESTATE P. O.

VIJAYAWADA - 7.

character. Although Orissa presents a fairly large variety of styles in temple architecture, it has nevertheless a characteristic genius of its own and its temples have been described as one of the most compact and homogeneous architectural group in India. All Orissan temples follow a common structural plan. Bhuvaneshwar has the richest profusion of temples and is known as the temple town of Orissa not only because of the large number of temples found there but also because it is the home of the famous Lingaraja temple. Another notable example of the Orissan temples is the well known temple of Jaganath at Puri. Magnificent in its isolation, the temple of Siva at Konarak about forty miles east of Bhuwaneshwar has been hailed as the supreme achievement of the architectural genius of Orissa.

The Somnath Shrine of Gujarat, the Viswanath temple at Banares, the Golden Temple at Amirtsar do deserve mention as outstanding works of art of a later period. This talk will not be complete if I don't mention the group of Jain temples of Gujarat and Rajasthan especially the famous Dilwara temples of Mount Abu. There is a cluster of Jain temples in Jamnagar and Junagath, principal towns in Gujarat. All these temples are of the same pattern and they are marvels in marble. But of all these Jain temples, the Dilwara temples of Mount Abu are of outstanding merit. A notable feature of decoration in these temples is the exuberance of detail and the effective repetition of the same motif. Constructed entirely of white marble, the Vindha Vasahi temple is perhaps the oldest and most complete example of Jain architecture. The temple consists of an open portico and a vestibule both formed by a simple grouping of Pillars. The octogonal dome of the shrine is formed by eleven concentric rings containing patterns of endless variety and is upheld by eight carved columns. The vertically carved reliefs illustrate incidents from Jain literature and legend. The striking feature of the second temple called the Teypala temple is the pendant of the dome which according to Ferguson hangs from the centre more like a lustre of crystal drops than a solid mass of marbl.e

It is true that some of the North Indian temples are of colossal size. But most of them are small constructions certainly incomparable with the magnificent and stately gopurams of South Indian temples. Yet it cannot be denied that the outstanding quality of all these North Indian Temples is their spiritual content. The religious and philosophic qualities of the Indian mind are better reflected in these works of art i. e. temple architecture than in any other form. A visit to these temples and a study of their art and architecture will help to integrate the nation emotionally better than even the spoken and the written word. The unity of sentiment that runs through all this variety of forms brings home the message of the oneness of India, borne on the wings of art. Nothing can erase this sense of oneness if it is engraved in the silent language of the stones.

# GREATNESS OF TAMIL LITERATURE

★ *By* KALI PRASAD KHAITAN, BAR-AT-LAW., CALCUTTA.



★

*Shri Kali Prasad Khaitan — a leading Counsel, is a scholar and great admirer of Tamil Literature. He is one of the Patrons of the Tamil Writers Association, Calcutta and inaugurated the All India Tamil Writers Conference, Calcutta, tn 1960 in which the Federation of All India Tamil Writers was formed. The photo shows Dr. Khaitan inauguarting the Federation.*

★

In this age of spurious spirituality and reckless materialism, South India has not yet lost her soul, and she never will.

I am proud beyond measure to be adopted and initiated into your great BROTHER-HOOD, notwithstanding by shortcomings.

Sanskrit was the unifying speech of India. Great in Sanskrit, South India was equally great in building up the Tamil language and literature before any other language now current appeared in history. The honour to Tamil goes at least two thousand years back. She can, therefore, speak to the rest of India as a grand old lady of beauty, experience, wisdom and love for mankind.

The temples and images of South India are among the wonders of the world — one vast amphitheatre of spirituality, arts, grandeur and breadth of social outlook. Their life, after the necessary purificatory bath and adaptation to modern conditions will be the inspiration for India to again occupy her proper place in the family of nations.

Germany inspite of her misfortunes and mistakes makes her influence felt all over the world because of her triple strength in (1) science (2) music and fine arts and (3) philosophy.

South India possesses the same strength. Such mighty temples and irrigation works could not have been brought into being but for a high level of science. In music, dance, sculpture and other forms of art the supremacy of South India is conceded. In philosophy and literature, I need only mention three out of many Achariyas, Sankarachariya, Ramanujachariya and Sayanachariya.

Tamil poetry has been a revelation to me in even in translation. I express my deep indebtedness so Sri P. N. Thiagarajan, Sri O. S. V. Maniam, Sri A. S. Krishnan and Sri S. V. Raghavan and the other friends without whose help I could not have had a glimpse of Tamil literature even at second hand in a short time.

Future India will learn to bow down in praise of the great departed soul, V. V. S. Aiyar, who like many other Mahatmas left his mortal frame in the waters. Gratitude is also due to Prof. Swaminathan, Prof. A. Srinivasa Raghavan, the other translators of some of the poems of Subramaniya Bharati. And to Prof. K. A. Nilakanta Sastri for his splendid History of South India and to the writers of articles published in various journals.

The value of the medium of translations gives rise to the thought that we would be blind without English, deaf without Sanskrit and Shruti, dumb without our mother tongue, devoid of taste without Tamil and Bengali and devoid of vitality as a nation without Hindi.

There are four Himalayan peaks of contribution to literature in Tamil so far as I have been able to learn so far.

(1) For organisation of Society - Tiruvalluvar
(2) For the purification of Society - Sri Andal
(3) For the strengthening of Society - Kamba Ramayanam
(4) For the emancipation of Society - The Great Bharati.

Incidentally I may just mention the three Himalayan peaks in musical literature.

(1) Ram Bhakti — Thyagaraja Brahma.
(2) Subramaniya Bhakti — Muthuswami Dikshidhar
(3) Shakta Bhakti — Syama Shastri.

They have become a part of the life of Tamilians but they are not in Tamil.

It depends upon how a North Indian approaches even translations of Tamil literature as to what and how much he will get out of it.

(1) Butterfly which flits about superficially and makes a greater show of himself than of anything else.
(2) The honey bee which gathers much of flavour but cannot discriminate in the result between one flower and another.
(3) The nightingale which proclaims aloud and sweetly the glory of her main theme
(4) The eagle which sees and misses nothing and whose two strong wings maintain the balance perfectly.

I may here quote the famous words of Vidyapati:

सुरपति पाये लोचन मांग्यो,
गुरूड मांग्यो दारवी ।
नन्देरि नन्दन मैं देरिव आतो,
मन मनोरन्थ राखी ॥

Recently I had the privilege to speak briefly about the Tirukkural. I ventured to point out that there is a perfect arrangement and sequence from the First Chapter to the last of the 133 Chapters. The Book seemingly appears to be divided into three parts, perhaps to avoid any controversy as to the adhikar of the poet to deal with the fourth state of human life. But there is unmistakable clue that in the first 38 Chapters the poet deals with the ideal scholar. In the next 40 Chapters he deals with politics ending with the ideal warrior. In the next thirty chapters, he deals with the economic life of the nation and holds up the agriculturist as the ideal. In the last 25 Chapters he deals with man and woman and how they help and sport with each other. This last section of 25 Chapters itself supplies the clue that the woman may be looked upon as a woman by one whose vision is centred on domestic life or in sex relationship.

She is keerti or fame to the hero. She is a celestial of the solitudes and is thus the Goddess ideal to a Godly purusha.

The post of Tirukkural was blessed with a help - mate who was all three in one. The post gathered iron nails of truths and sutras, which she boiled into soft fragrant rice with her supreme esthetic senses and which the post then passed through the grand technique of poetry. So I venture to imagine. I recall another such union of tallents of Jaidev of the North with his wife Padmavati of the South.

India will ever honour her two weavers of immortality, Kabir of the North and Tiruvalluvar of the South.

Andal in her Tiruppavai is wonderfully sweet and apparently naive. But the poem of 30 verses contains the quintessence of thought as to how simple bhakti organised on a mass scale can render the greatest service to mankind.

In the first 5 stands, she mentions the five factors which regulate action. With marvellous skill she shows that God has done, His duty and that you have to do yours, with regard to each of the five factors. In the next ten stands, she deals with the ten kinds of neglectors of duty and religion and how to deal with each case. The psychological insight shown both as to the maladies and as to the cures is unique. The next seven verses deal with the fascinating game that takes place between knowledge and bhakti on the seven well-known ladders of wisdom. The last eight verses deal with the eight forms of bondage as also the eight forms of death from both of which there is freedom by the eight forms of divine power. The other poem of Sri Andal which is known as "Varanamaieram" is in the form of an account of the dream marriage between Sri Andal and Sri Krishna. In ten verses, it deals beautifully with ths rise of Krishna bhakti from the popular level of enjoyment of Sringar-rasa and road-side utsavams to the highest position in Hindu theology. When Krishna bhakti became the state religion, then Sri Krishna and bhakti rode on a elephant and took their bath which purified society and religion. The eleventh and the last verse gives the assurance that posterity will be improved by singing this song of the dream marriage. And so it will if it understands what the dream marriage is.

Andal of the South with her blessed virginity, and

Mira of the North with her blessed widowhood are perhaps the two greatest women composers that the world has ever seen.

Andal is still wearing the flowers which Sri Krishna would love to receive from her body.

The Alwar and Nainmar saints led up spiritual thought and emotion to the climax reached in the Kamba Ramayana. Its supreme merit is the best recommendation; but to North Indians, it is of further interest because it was the first instance of a new turn iven to epic poetry in being written in the language of the people, an example which was followed by Tulsidas in his Ram Charit Manas. By a lucky chance I have been able to notice that in the flow of Ram Katha, Tulsidas has systematically interpreted the Sam Veda. It is possible that the Kamba Ramayana was his precursor even in this respect. If so, it would be a discovery of the highest value in the literary world because the Sam Veda and the other Vedas would be better understood in the light of the principles of interpretation of the devoted Mahatmas who are now recognised as of the highest authority,

The above shortly is the background in which Bharathi appeared.

It was said by Deshabandhu Chittaranjan Das at the trial of Sri Arabinda that Sri Arabinda would be known as "The poet of patriotism and The prophet of nationalism". These words are equally true about Bharati . But sa Sri Arabinda was, so was Bharati, much greater than

those words indicate. Both were immortal spirits. But as time goes Sri Arabinda will be more in head and Bharati will be more in the heart of India. Both have raised Pandichery to a place of pilgrimage.

Bharati has at least written one poem which is one of the greatest which has ever been written in any human language so far as I have been able to know from such sources of information as have been available to me.

The peom is "Why Do You Cover Your Eyes?"

God as knowledge claims to be straight and to the point and complains that bhakti is covering her eyes. Perhaps the reproach is that bhakti loves long stories, elaborate temples and images, rituals and hymns, rags and raginis, dances and poses and yet seems to close her eyes and to have no real darsan or philosophy and seems not to see Him at all, inspite of all her devotion.

Bhakti first asks, Are you straight and to the point ?

When I was Sita, you took fourteen years and much rambling to reach me.

When I was Arjun, you took eighteen chapters to tell me what you could have in one sloka.

When I was Prahlad, you came promptly no doubt out of a pillar but you lost your temper for a long time and I was hard put to it to calm you down.

When I was Yasodhara, it took you many years to come my way and even then you took long to understand me and give me your blessings.

I never closed my eyes.

As Sita, my eyes were with my heart and that was with You. It was Ravan who closed his eyes to Your greatness, inspite of all his scholarship.

As Arjun, I was never tried of seeing your eyes and in fact received divya dristi from you. It was Dritharashtra who was blind inspite of his emperorship of India.

As Prahlad, I saw what was coming. I saw what was happening. I saw you as you were. It was my father who did not see until it was too late.

As Yasodhara, I saw you and nothing else. In fact, there was nothing else for me to see. It was some of your disciples who failed to see Your soul of compassion.

And then, did I shut my eyes of *You* ?

When I was Sita, you closed your eyes to justice and fair play and love and sent me out of sight.

When I was Arjun, you closed your eyes at Dwarka and left me to manage your favourite wives, the 16,000 or so of Vedic mantras, as best as I could.

When I was Prahlad, when you ultimately calmed down, You closed your eyes and slept like a true lion and is a bad lover. May be you are still asleep.

When I was Yasodhara you sat still with eyes closed or wrap t in deep meditation, so that your disciples preached and did what they liked in your name.

To a person who closes his eyes, everyone in the world appears to have closed his eyes. Oh Param Purusha, eyes or no eyes, I love you.

Within the earth, as Sita,
Ruling the earth, as Partha,
Serving the earth, as Prahlad,
Loving the earth, as Yasodhara,

I love you,
I love you,
I love you,
I love you.

Thus is a world spiritually short-sighted, almost to the point of blindness, Bharati has given the best of vision, and better still, the spirit of devotion.

The choice of the four names is a stroke of genius.
Sita as the ideal andha bhakta represents the cream of the Ramayan.
Arjun as the ideal Jigyasu, represents the arrow mark of Mahabharata.
Prahlad as the ideal artharthi, represents the big question mark of revolution in the Puranas.
Yasodhara as the ideal consort of the gyani Buddha represents "The Light of Asia".

From another point of view, Bharati has given equal representation to the male and female spirits in devotion, just like Ardha Nariswar, he has created Ardha Nari Bhakta. He has given the best and noblest interpretation of the greater Indian life, culture and religion. And he has made North, South, East and West meet not in Bharat alone and but beyond. He has given a novel group photograph of the spirit of India, as should be seen by the present and future generations. It is tempting to imagine oneself as Ram, Krishna, Nrisinha and Buddha. It is heroic to take the part of Sita, Arjun, Prahlad and Yasodhara.

'Krishna of the Gita and the bhakti lore is his master and the same Krishna is his servant. Either way Bharati had to suffer so that mankind could benefit by that relationship. Sri Krishna was not to blame. Sri Krishna pointed out the path of honour without ingiminy, of the nobel prize and the world's homage, the path of Rabindranath. Both Rabindranath and Bharati worshipped the Mother. But Bharati chose to worship Her in his own way. Rabindranath was the Luckier child of the two. Bharati was a martyr.

To Bharati,
Our mother is a spirit wild,
A spirit mad and stark;
How could the son of such a mother be otherwise ?
The mother is not only mad but sleepy.
" Thousands on thousands of thy sons,
Are gathered here to pay thee homage,
To bless thy name and to serve thee.
How strange that thou shouldst be wrapt in sleep !
Awake, mother, awake !"

* * * * *

"Thy children are calling to you
And thou a mother, couldst thou sleep?
Did ever mother's heart fail to melt at the
prattle of the child ?
Queen, Sovereign Bharat,
We stand singing thy praise in the eighteen tongues of thy realm ;
Come, mother, shed on us thy grace and lift us to the good.
Fount of our life, mother, awake."

Bharati "pined alone"
"And an astrologer came,
And he looked wise,
And said that the stars were to blame"

"And then one day,
I dreamt
Some one came.
Who He is, I know not,
And He touched my heart;
I woke up to ask him
'Who are you?'
But He had vanished
Leaving in my heart
The thrill of a new delight"

• • • • •

I think and think
And ask myself, 'Who is He?'
And lo! before my eye
Stands
The Form of The Lord."

May Andal's and Bharati's dream fill the world !


# MEENAKSHI GROUP OF MILLS

**MADURAI** (South India).

*Manufacturers of:*

**Single Yarn in counts 16s to 100s, carded and combed, in hanks and in cones for Weaving and Hosiery Factories and Grey Gada. Grey and Bleached Mulls, Long-Cloth, Dyed Cloth etc.**

1. The Sree Meenakshi Mills, Ltd., Madurai.
2. The Sree Meenakshi Mills, Ltd., Paravai.
3. Thiakesar Alai, Manaparai.
4. Alagappa Textiles (Cochin) Ltd., Alagappanagar.
5. Thiagarajar Mills, Kappalur.
6. Rukmini Mills Ltd., Silaiman.
7. Sree Sivakami Mills Ltd., Thenur.
8. Saroja Mills Ltd., Coimbatore.
9. The Coimbatore Kamala Mills, Ltd., Coimbatore.
10. Sri Sarada Mills Ltd., Podanur.
11. Sree Rajendra Mills Ltd., Salem.
12. Loyal Textile Mills Ltd., Kovilpatti.
13. Virudhunagar Textile Mills Ltd., Sulakarai.
14. Parvathi Mills Ltd., Quilon.
15. Vijayamohini Mills Ltd., Trivandrum.
16. Kerala Lakshmi Mills Ltd., Trichur.

# KALKI: A PROFILE

★

PA. NAA. THIAGARAJAN

Shri R. Krishnamoorthy, better known to the literary world as 'KALKI' was born on 9th September 1899 in "Manal Medu"—a village in the Cauveri delta district of Tanjore. In response to the call of the father of the Nation young Krishnamoorthy left the college and joined the non-co-operation movement in 1921. Later when Rajaji founded the Gandhi Ashram at Tiruchengode, Krishnamoorthy joined him. It was Rajaji who first found the powerful talent of this young man as a writer and gave him encouragement by making him the editor of 'Vimochanam' an official organ of the Gandhi Ashram. Then in 1923 he became a Sub-Editor of 'Nava Sakthi' a nationalist periodical which was edited by Shri Thiru V. Kalyanasundaram Mudaliar, one of the foremost congress leaders and scholars in Tamil of that time. Here Kalki was assigned the responsibility of covering the various district and provincial annual conferences of the congress organisation. He was also assigned the responsibility of the column writer which he discharged very creditably under the pseudonyam "Theni" (bee). He started contributing short stories and articles to Navasakthi in the pen name 'Thumbi and Kalki' in addition to his allotted work. Although his association with Navasakthi was for a short period, within this period his writing won the admiration of the Great Tiru Vika. He left 'Navasakthi' to take over the editorship of 'Ananda Vikatan' a popular weekly magazine. In fact Shri S. S. Vasan provided him with a powerful forum to exhibit his all round literary talents and he in his turn as editor built up Ananda Vikatan by his sweat and toil. He was the editor of Ananda Vikatan till 1939 when he offered individual satyagraha and courted arrest. He was sentenced three months rigorous imprisonment.

In 1942, he started his own weekly 'Kalki' which attained great popularity as a Tamil Weekly.

One of the most outstanding Tamil Writers of the modern age Kalki a household name in Tamil Nad was often compared to Alexander Dumas for works in fiction and to Sir Walter Scott for his historical Novels. He was regarded as the creator of the modern journalistic style in Tamil prose which became very popular even among those who were under the influence of English and who were till then of the opinion that it would not be possible to write intricate and difficult subjects like economics, science and politics in Tamil.

Kalki who blazed a new trail in Tamil writing has left behind monumental works. Thiruvazhundur Sivakozhundu is one of his short stories which produces a feeling of nostalgia for the good old days of the nagaswaram masters. Veenai Bhavani is a sole stirring story of an outstanding veena artist who worshipped the 'nadhabrahmam' and considered that art as above all the material things in the world. Sushila M. A. is an inimitable parody on the alleged fast of a member of the Dravida Kazhagam in connection with the anti-Hindi agitation when Rajaji introduced Hindi as a compulsory subject in the lower secondary schools when he was the Chief Minister of Madras in 1937. The characterisation of *Hitler Guruswamy* is indeed a marvellous creation of Kalki. His novels 'Kalvanin Kathali' and 'Thiagabhoomi' were read by thousands of people when they were serialised in Ananda Vikatan. Many of us still remember how anxiously we used to wait to read the story of 'Thiagabhoomi' which depicted the social structure

of a Hindu Brahmin family of 1935s in Tamil Nad.

It is Kalki who infused interest in the minds of Tamil readers for the novels based on Historic themes. His great historical trio "Parthibhan Kanavu", "Sivakamien Sabhadam" and "Ponniyen Selvan" were his *magnum opus* and best sellers in Tamil Nad. It was Kalki who first started writing historical Novels with realism in Tamil. The golden age of the great Chola and Pallava empires of Tamil Nad, the patronage they extended for the development of fine arts and literature, the highly cultured life of the Tamil people of that age were depicted with realism in these novels with good amount of accuracy in data.

His social Novel 'Alai Osai' which won the Sahitya Akadami's posthumous award was a wonderful creation with the background of Indian political life during the period 1930 and 50. It is unfortunate that no steps have so far been taken to get this novel translated in other regional languages by the authorities of the Sahitya Akademi. I hope that they will at least now do the needful so that the readers in other parts of the country will have an opportunity to read Kalki's writing in their own languages.

He was the master of writing pen pictures. His book on "Three months rigorous imprisonment" is the best pen picture of jail life of congressmen of South India. His powerful editorials dealing with the politics, financial issues and other problems facing the country won the appreciation of the entire Tamil population.

In those days of freedom movement through his powerful editorial in Ananda Vikatan and later in his own journal "Kalki", he kindled nationalism in the minds of the Tamil people. As a matter of fact in those days Satyamoorthy's eloquence and Kalki's writeups were the sole strength of the congress in Tamil Nad. Even those who had difference of opinion with him in the political field, used to read his editorials and appreciate the convincing clarity with which he was treating the subject and the cherished style of his language. It was Kalki who made the reviews of music performances and other fine arts lively with humour.

He was a towering personality in the social and cultural life of Tamil Nad for nearly four decades. There was no cultural or literary functions and projects in which Kalki did not participate. As the founder president of the Tamil Writers Association Madras, as the Secretary of the Kamban Kazhagam and the Secretary of the Tamil Akademy he distinguished himself as a very able administrator also.

To put it in short, gifted with the talent of not only looking askance at Society but also cracking jokes at his own expense, Kalki symbolised the manysided culture of Tamil Nad. There was nothing he touched of which he did not make a success, whether it was politics, music, other fine arts or Tamil writing. On each pursuit he bestowed a characteristic concentration of mind and pen and never faltered whatever the criticism would be.

It is nine years now since Kalki died a premature death. His life was full of hectic activity, toil, strife and sacrifice. Still he lives among us through his writings. His numerous literary creations, his popular weekly Kalki which he founded, popular weekly Ananda Vikatan which was nurtured by him for many years, the Bharati Memorial at Ettayapuram which Kalki built from public donations and the Gandhi Memorial at Adayar Madras which was possible only due to the untiring efforts of Kalki, stand as monuments for his outstanding contribution for the development of literature, fine arts, political awakening and single minded devotion to the country.

# TAMIL LITERARY JOURNALS

★

"SOMALAY"

Tamil has a rich literary heritage; output of prose literature in the 19 th and 20 th centuries has been remarkable both in quality and quantity. This is equally true of the Tamil Press. I shall endeavour to survey the literary journals in Tamil and those in English pertaining to Tamil.

I hope to classify the journals into such broad categories as:

1. the scholarly journals
2. the popular journals
3. the socio-cum-political journals
4. the literary pages of the dailies and the weeklies
5. journals devoted to poetry
6. journals having religious, caste and regional backgrounds
7. literary reviews
8. House journals
9. School and college publications
10. Government publications and
11. Tamil journals published from outside of India

*The Scholarly journals:*— This group of journals has been mainly publishing comments on Sangam literary topics and articles of very high academic calibre by erudite scholars of Tamil. This style of writing adopted by them sounds pedantic; unduly long sentences, high-sounding words and cumbersome phrases are their favourite usages. Of late, some of these contributors are using a simpler style. This publications have a limited circulation confined to certain sections. But their influence and reference value are significant. It may be mentioned here that tributes to deceased scholars consume considerable space.

Of the defunct journals, *Kalanilayam* (ed. T. N. Seshachalam) and *Pulavarulagam* (ed. Jagaveerapandiyan) have played a great part in infusing popular interest in the great epic Kambaramayanam.

The *Sen Tamil*, the *Tamil Pozhil* and the *Sen-Tamil Selvi* are being issued as the organs of the Madurai Tamil Sangam, the Karanthai Tamil Sangam and the Tirunelveli South India Saiva Siddhantha works publishing society respectively.

*The Popular Journals:*— Among literary journals founded to enrich the Tamil language and also reach a wide circle of readers, the now defunct *Chintanai*, *Sakthi*, *Manikkodi* and *Kirana Oolian* deserve pride of place.

Manikkodi did yeomen service to a revival of literary activity. It brought out a school of Tamil Fiction consisting of Kupara, B S. Ramiah, N. Pitchamoorthi and a host of others who can as well be called the Manikkodi group.

Several of them first saw their writings in print in the Kirama Oolian, which was published from Thuraiyur, Trichy. Thiruloka Seetharam, Vallikkannan and last but not least, A. V. R. Krishnaswami Reddiar wielded their facile pens and threw themselves heart and soul into the paper. Their burning enthusiasm and the wide ground that a mofussil journal covered were unparalleled.

Kalamohini also published from Trichy owed its fame to Salivahanan and V. R. Rajagopalan.

Sakthi, edited by Vai Govindan proved a great success as an illustrated monthly. It brought to its readers a wealth of rare information on various subjects and featured literary articles by some of the creative writers of this generation. *Thingal* had in it traces of Sakthi, and was even more shortlived than Sakthi. Next in the casuality list is *Ponni*. It came out with bold views on literary and social problems. It carried articles of literary value and yet had a popular appeal. It gained vast support from the Puritants (Thani Thamil Movement) and captured the hearts of the youth of Tamil Nad.

*Tamil Thenral* (ed. V.V. Ramaswami) and *Kaveri* (ed. N. R. Ramanujam) issued respectively from Virudhunagar and Kumbakonam respectively catered to the literary tastes of different groups of people.

Of the existing literary journals, the oldest is *Kalaimagal*. It into being in 1932 with K. V. Jaganathan as Editor, under the patronage of a galaxy of writers and scholars headed by Mahamahopadhyaya Swaminatha Iyer. The first issue contained articles

from many distinguished contributors and the subjects covered were encyclopaedic. Not a single story was published. Today Kalaimagal is found in almost every Tamil home, thanks to its metamorphosis from journal to magazine.

All publications which aim at high circulation figures have to keep down their standards and cater to popular taste. This is one of the hard facts of the present situation.

*Amudasurabi*, patterned on the Kalaimagal, serialises novels and features a few literary essays.

*Kalaikkathir*, brought out by a philanthropic industrialist of Coimbatore, raised high hopes when it was first issued in 1948. Even though it successfully solved its teething troubles, the journal has still its problems. Of late, it has not been able to maintain its earlier form at, size and standard. In fairness to Kalaikathir, we must recognize the spurt it gave to the writing of scientific papers and books in Tamil.

*Anukkathir*, a recent incursion into the Tamil journalistic field is modelled on Kalaikkathir and is manned by some former members of the Kalaikkathir establishment.

*Socio-cum-political journals : India* (ed. Subramaniya Barathi) and *Navasakthi* (ed. Thiru Vi. Ka.) did a lot of spade-work in the field of Tamil writing by propagating revolutionary ideas and chaste style. Thus they were the forerunners to the better known papers of later days. But, these two journals were too closely identified with the personal philosophies and policies of the editors. As a result, they are not looked upon as longstanding institutions.

*Thamarai*, founded and edited until his death by P. Jeevanandam, has a literary flavour about it. Writers holding leftist views and propagating them to the Tamil readers with a missionary spirit use this forum. Such of them as have studied Tamil literature to a considerable depth write on literary topics.

*Amaichan* is the latest entrant to the field. Though its compass is limited to the community development blocks, one comes across articles of literary significance combined with a sense of subdued humour, as also a translated digest of a foreign-language book.

*Literary pages of the dailies and the weeklies.*

All the Tamil dailies have a Magazine section as part of the Sunday issue. But they leave a great deal to be desired. To read, week after week, the same person's writings is boring even to the most patient of us. Unless editors and managements consist of really enlightened persons who have a passion for Tamil and until they begin to pay adequate remuneration for contributions, there is no likelihood of an improvement in the existing state of affairs. There must be a regular search for new talent and what is more, the talented must feel that their contributions will be accepted on merits.

Now we come to the popular weeklies. In point of mass circulation, the Tam l weeklies stand foremost in India. They mainly cater to the tastes of women and the teen-ager students. Obviously they are full of light reading materials. The Ananda Vikatan has to its credit the serialisation of Swaminatha Iyer's autobiography and the encouragement it has given to writers of fiction and to playwrights. Recently, it has published multi-lingual editions of books like C. Subramaniam's travelogue. Despite its political preoccupations, the Kalki has always given its readers a fairly reasonable quota of literary articles. The Kumudam extracts some quotations from books of literary value and has serialised a book on Tamil shorthand. The Swadesamitran weekly prints articles on temples and inscriptions and on the great Tamil classics.

On Deepavali, Pongal and other festive days. these weeklies bring out bumper numbers. These are a landmark in Tamil publishing and the literary value of these souvenirs enhances with the passage of time

*Journals devoted to poetry.*

Ancient Tamil literature is almost exclusively poetry. Modern writing is mostly prose; but, in point of numbers, the prose-writers out-number the budding poets. In providing a maiden medium for these ambitious men and women, talented poets like Barathidasan, Kannadasan and Thiruloka Seetharam have given their helping hands through KUYIL, THENRAL and SIVAJI. The latest debut is Kavithai (ed. Thesini).

*Journals having religious, caste and regional backgrounds.*

The Siva cult of Hindu religion is identified with Tamil language and its growth. The best of Tamil poems are the religious outpourings of Manikkavasakar and other saints. As a result of this tendency, learned articles of a literary character find a way out in Siddhantham, Kumarakurubaran, Gnanasambandam, Tamilakam etc. which are the mouth-pieces of the Saiva Siddhantha Samajam, the Religious Mutts at Tirupanandal, Dharmapuram and Kunnakkudi.

Founded as a local paper at Karaikudi by Roya Chokkalingam, *Oozhian* moved to Madras and for a time it created a sensationin political as well as literary circles. Its encouragement of new talent is also commendable. Its contemporary, the *Kumaran* (ed. S. Murugappa) was one of the first papers to discover the

genius of R. P. Sethu Pillai and of Kavimani. It had a glorious career of 25 years, ending with a competition among budding poets.

Arya Vaisyan, Senguntha Mithran, Muslim Murasu, Mahajanam and a host of other papers flood the market They have their regular clientale. For want of other mediums, many a good writer send their contribution to one or other of these. It is therefore advisable to keep in close touch with the literary outputs of these publications. *Kurinji*, (ed. Nedumaran and published from Madurai) is the latest entry to Tamil journalism. It has the look of *The Time*. But for its prejudices and lack of balanced views, it can be a successful proposition.

'VANJI NADU' caters to the Tamils of Kerala; its anuual members are superb.

*Literary reviews.*

It is difficult to pick up any literary review of substance which is regularly brought forth. The *Bharathi* published by the Madras Tamil Writers' Association, carries news and articles of interest to the writers. Almost covering the same ground is the *Ezhuthalan* (The Writer) published and edited by A. V. K. Reddiar from Tiruchirapalli. It has an English section and also publishes in Tamil, articles by non-Tamil writers. Its annual numbers are a veritable mine of reference information for the professional writer.

The *Puthaka Nanban* published quarterly by the Southern Languages Book Trust contains translated articles from writers in the other Dravidian languages and American and British writers. It digests news and events in the publishing field and gives a list of books released from time to time.

*Ezhuthu* and *Saraswathi* deal with modern literature. They are issued by "creative" writers and their sycophants who bring foreign influences to present-day Tamil writing.

*House Journals*: With the increasing tempo of industrialisation in Tamilnad, there is bound to be a proportionate increase in the number of house journals, i. e. journals published by the Public Relations Departments of industrial units for circulation among staff, labour and customers. They will be well advised to have a substantial Tamil section in their journals So far, only Electolite (Seshasayee Bros.) and TVS NEWS have Tamil sections.

*School and College Publications*: These are legion. I would however draw specific attention to the KURUKULAM of the Hindu Religious School Wallajabad.

The Alagappa College Magazine (Karaikudi), The Presidencian (Presidency College, Madras), the P. S. G. Arts College Magazine (Coimbatore) and the Magazines of the Thiyagarajar College, Madurai, the Sir Thiyagaraya College, Madras and the Pachaiyappa's College, Madras are of literary value.

*Government Publications*: An improvement in the content and style of Tamil publications of the Madras Government is noticeable in the post-independence era. The GRAMA NALAM publishes folk-songs in its issues.

The Oriental Manuscripts Library and the Tanjore Saraswathi Mahal Library present research papers in their bulletins.

Soviet Land and American Reporter — published by the Information Service of U. S. S. R. and U. S. A. — through their Tamil editions keep us in touch with literary events and personalities of their countries. Their feature articles are written in chaste language and a direct, simple style combined with choice diction is employed by them to put across their ideas to the readers.

*Tamil journals published outside India*: Ceylon—he home of two million Tamils — has produced many good writers and research scholars. In addition to the features of magazine-pattern, the Sunday edition of the THINAKARAN gives pride of place to literary articles *Eelakesari*, *Eelanadu* and *Sri Lanka* have each a history of its own and their services to Tamil literature is something of eternal value.

In Malaysia the *Tamil Nesan* and the now defunct *Tamil Murasu* have been ardent champions of Tamil. The special numbers of the Tamil Murasu should put us in India to shame.

*Publications in English*: Of the journals which are no longer coming out, mention must be made of J M. Nallasamy Pillai's Siddhantha Deepika for its steadfast services to Tamil.

THE TAMIL CULTURE, (ed. Dr. Xavier, S. Thaninayagam) is the organ of the Academy of Tamil Culture. It is a quarterly publication of considerable merit and acts as a clearing house of information on activities bearing on Tamil throughout the world. One wishes that there was more support for such an outstanding journal.

THE HINDU publishes articles bearing on Tamil literature, history and culture in its Sunday issues. Whenever there is a pressure on space, the editor has a problem and this is easily solved. The first casuality is the Tamil section of the Book-Review column.

*Conclusion*: In spite of the great progress that modern Tamil literature is making, there is not even a solitary journal of real literary value. Meagre capital resources, the high price of printing paper, labour problems, absence of advertisers' support, unfair competition from the low-priced weeklies — all these are problems difficult of solution. It is upto some non-profit organisation to sponsor a literary journal with a nominal-interest loan *and* subsidy from the Government.

# TAMILNAD AND BENGAL

★

Dr. SUNITI KUMAR CHATTERJI,
*Chairman, Legislative Council, West Bengal, Calcutta.*

It seems there is a special affinity between Tamilians and Bengalis, and the personality of Ramakrishna and Vivekananda, as the two great religious and social builders of modern India, has been instrumental in bringing these two peoples close to each other. There is just a little knowledge, among a very limited number of educated Bengalis, it must be confessed, of the great contribution made by Tamilnad to the common culture and heritage of India, through the Sangam literature and through the devotional compositions of the Saiva Nayanmars and the Vaishnava Azhvars. The Kural has been translated in its entirety in Bengali, although unfortunately, not directly from Tamil but through an English translation, that of Sri Srinivasa Ayyangar. One Vaishnava religious leader of Bengal, who is a member of the Sri-Sampradaya, has established a Vishnu Temple by the side of the Bhagirathi river in the village of Khardaha, a few miles from Calcutta (to the north), and from this temple he is bringing out texts belonging to the Ramanuja School, both in Sanskrit and Tamil (mention is to be made of his Edition in Bengali characters of portions of the Nalayira Prabandham, with Bengali translation and commentary). My own personal reminiscenses of the greatness of Tamil spiritual culture go back to the days when I was a boy at School and had occasion, for the first time, to listen to the throbbing music of the verses of Manikkavachakar, although of which I did not understand a word. But it made a tremendous impression upon me when I heard this music by some Tamil singers attached to the Kandaswami Temple built by the Nattukottai Chettiyars in Calcutta. Since then I have not been able to leave alone Early Tamil Literature, which I have enjoyed all these years, mainly in English translations I feel very sad at the deficiency of the Bengali language in not having enough Tamil texts in translation. Our Tamilian friends, resident in Calcutta, are trying to remove this deficiency for Bengali, which many of them during their sojourn in this city have acquired as a second mother-tongue.

எமது வெளியீடுகள் : ஜெயகாந்தன் எழுதியவை

சிறுகதைகள் :

| | |
|---|---|
| யுகசந்தி | 5. 50 |
| சுமைதாங்கி | 2. 50 |
| மாலை மயக்கம் | 2. 50 |
| இனிப்பும் கரிப்பும் | 2. 50 |
| ஒரு பிடி சோறு | 2. 50 |
| தேவன் வருவாரா ? | 3. 00 |

நாவல்கள் :

| | |
|---|---|
| பிரம்மோபதேசம் | 1. 75 |
| வாழ்க்கை அழைக்கிறது | 3. 00 |
| யாருக்காக அழுதான் ? | 2. 00 |
| கை விலங்கு | 1. 75 |

எமது விற்பனை உரிமை நூல்
இன்றைய
இந்திய இலக்கியங்கள்
ஒரு கருத்துக் கோவை
சாகித்திய அக்காதெமி வெளியீடு
டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்
முன்னுரையுடன் கூடியது.
விலை ரூ. 12/-

மீனாட்சி புத்தக நிலையம், புத்தகம் வெளியிடுவோர், விற்பனையாளர்,
60, மேலக்கோபுர வாசல், மதுரை. [தொலைபேசி 2971]

# NELLAIYAPPAR
## OR
# LORD OF THE PADDY

*By* L. C. RICHARD

★

"Give us this day our daily rice" is a prayer which can be very properly addressed to Nelveli Nathar of Tirunelveli. In fact the answer to one such memorable prayer is believed to have originated the name and fame of the temple and town now standing on the banks of the Tambaraparani river irrigating the paddy flats for miles around. Veda Sarma, a devotee of Lord Siva was in the habit of worshipping Him with grains of paddy after his morning ablutions in the river near Sindupoondurai. Once upon a time a great famine came over the land and paddy had become scarce – even the little that was necessary for the devotion. With great difficulty Veda Sarma collected a handful in the bamboo forest and leaving it near the temple to dry had gone to the river for his ceremonial bath when the rains came. Fearing the loss of his few grains of paddy, Veda Sarma rushed back only to find that a hedge had risen all round his offering, keeping the water away; and the sun actually shining over it all. Veda Sarma praised the Lord who made the sacred hedge for the paddy and preserved his daily



Tirunelveli Sri Nellaiyappar temple vista of Pillars with statues



Nellaiyappar Temple — A close-up

bread! The manifestation of the Lord Shiva in this aspect is worshipped as Vrihi Vriteswarar and is actually the 'adi-lingam' of the temple. It is found installed in a small shrine below ground level in an insignificant position within the main temple.

2. Except for the fact that the temple precincts are divided into two equal portions of 378′ by 350′ each - the northern half for Lord Nellaiyappar and the southern half for his consort Kanthimathi Amman, the original plan has been grossly disregarded in actual use. Only the outer prakarams admit of a complete prathishta. There is obstruction some where or other in the inner prakarams. A great deal can be done by way of restoring the plan to the beauty and convenience of the original conception. The outer Prakarams and the thousand pillared mantapam of Brahadiswarar temple in Tanjore, for example, give a sense of magnitude and perspective to the edifice which the closed - in prakarams of the Nellaiyappar temple fail to achieve. It seems to me that the Kanthimathi Amman temple has its lay-out better preserved than the Nallaiyappar's. The sangilimantapam, kilikkudu mantapam and unjal mantapam around the Pothamarai on one side is balanced by the 1000 pillared mantapam (10 x 100) on the south and Karimari tank on the west; and the vasantha mantapam is picturesquely on the north - west.

3. Amongst the other important shrines in the Nellaiyappar temple are Sri. Natarajar, Subramanyar and Kanthimathi Amman. The Peria



Stone statues — Nellaiyappar temple

Natarajar, as it is called, is of bronze and life-size. Lord Subramanya with six faces is seated on a Peacock and has been faultlessly executed out of one stone. Kanthimathi Amman has the biggest sannithi next to the Lord.

4. Some of the peculiarities of the Nellaiyappar temple are worth noting. The Vinayagars here have a clock-wise twist of their trunks. A stone Natarajar, perfect in execution - known as Sandhanam Natarajar is ignored by worshippers in favour of the Periya Natarajar. A recumbent Padmanabhaswami is found in a cell above Nellaiyappar to the left of Venu Vaneswarar. Its hand is pointing at a Lingam under a bamboo tree - the Sthala Viruksha! The statue looks very ancient and is admitted in this Siva temple as a subordinate deity, doing obeisance to the Over - Lord Siva. And the shrine of Anavardikhan in the South-eastern corner of the outer prakaram is found neglected too. A replica of Lord Nellaiyappar was installed here to enable a Muslim ruler to have a glimpse through a window in the outer wall. His wife was cured of a great illness on his propitiation to Lord Nellaiyappar. The window is now bricked up.

5. Of the two ceremonial tanks in the temple only the Pothamarai with its pillared cloisters is now used. It is flushed but its water is liable to be contaminated by the irrigation channel where from it is drawn. The Karumari tank must have originally served the Vasantha Mantapam but is now in utter disuse.

6. The Somavara mantapam is famous for its richness of floral designs on the pillars. Two pillars known as Indira Vimanams, are strikingly like the vimanas over the main entrance to the temple. Art critics have admired the simulation of wooden rafters and beams and ornamental work in the stone of which the mantapam is constructed in its entirety. The sangili mantapam between the temple of Kanthimathi and Nellaiyapper may be considered superior to the Somavara mantapam only because of greater light and air it admits and the impressive arrangement of yalis on either side.

7. The wood work in the Nellaiyappar temple is awe-inspiring. The porch, as you enter, is richly adorned with the leelas. The main doors are similarly decorated with panels in bold relief. The facade of woodwork before the image of Dakshinamurthi is an excellent piece of art. The ceiling of the Thambara Sabhai (Thirunatha Sabhai) is a spiritual treat to the devoted Hindu who seeks for a complete pantheon.

8. The important festivals are Thirukalyanam in Aippasi (October) and the car festival in Ani (May and June). It attracts great crowds from the entire district, the car being the biggest and most richly decorated.

9. The statues in Nellaiyappar temple are of a rare order. At the entrance to Swami Sannithi four statues of more than life size in standing postures depict Pakadu, Veerabhadran, Karnan and Arjunan. These bear a striking resemblance to the figures put up before the rangamantapam in Krishnapuram temple. Other secular groups of statues adorn the pillars in the



Pillar—Sri Nellaiyappar temple

mani-mantapam and serve to draw the masses. Perhaps the most popular is the statue of Bheeman made of wood about 18 feet tall which has been mounted on wheels and is taken out



Kanthimathi Amman Temple
showing Pothamarai and the pillared cloisters in the foreground.

during the major festivals. The 'araichi mani' before Nellaiyappar Sannithi is usually rung on historic occasions and is declared to have been sounded on the first day of our National Independence. There is a wonder at this spot. The clusters of pillars here emit various musical notes on being struck with the palm of the hand and it is believed that at one time the art of evoking a harmony out of these was well known to the local priests. There is yet another wonder. Two granite beams of vast dimensions are holding intact, despite a vertical crack in each of them and the archakas maintain they are joints and not cracks and that they have been there as far back as any one could remember. Considering that it is not less than a thousand years old it is certainly a miracle to hold out so long.

10. The inscriptions - there are quite a maze of them - would suggest that the Pandyas and Cholas ruled here. Five Vatteluthus A.D.950 refer to Vira Pandya. Rajendra Chola has some dated A. D. 1011-44. The temple has a definite plan and though started in the time of the early rulers of the place must have been under construction during various regimes. The statues of ten Nayak kings adorn the southern prakaram and it is generally believed that these are Karthakkals who have either contributed to or supervised the erection of the temple at some stage of the long process. They have not yet been identified.


**The Mathurai District Central Co-operative Bank Ltd., Madurai.**

*Telegrams* : "CENCOBANK". *Telephone* : 2134, 4023 & 4024. POST BOX No. **14.**

*Branches* : DINDIGUL, THENI, PALNI, CUMBUM AND TIRUMANGALAM.

| | | | |
|---|---|---|---|
| Authorised Share Capital | ... | Rs. | 1,00,00,000 |
| Paidup Share Capital | ... | Rs. | 57,63,000 |
| Reserve Fund | ... | Rs. | 16,00,000 |
| Other Reserves | ... | Rs. | 18,34,000 |
| Working Capital | ... | Rs. | 6,47,39,000 |

Bankers for all Co-operative Institutions in the District.
Drafts issued at concessional rates to all places of importance in the State.

ALL KINDS OF DEPOSITS ACCEPTED.

Rate of interest on Fixed Deposit range from 3¾ to 5½ %.
Fixed Deposits Guaranteed by the Madras State Government are now accepted at 5½ % P. A. for periods of 3 years and more.

**SAVINGS BANK ACCOUNTS.**

The rates of interest on Savings Bank account has been raised to 3 % P. A. from 1—4—1962.
Maximum Amount that can be invested in the account has been enhanced to Rs. 20,000/-.
Weekly 2 withdrawals upto Rs. 1,000/- allowed.

ENQUIRIES SOLICITED.

V. BALAGURUSWAMY, *Secretary.*

V. ALAGAPPAN, B.A., B.L., *President.*

# THE GLORY OF THE HOLY GALAXY

★

G. VANMIKANATHAN

**In their glory themselves they equal;**
**By devotion they appropriate Me;**
**By union with Me they conquer the world;**
**Failings they have none;**
**Established in unique state they are;**
**Thro' their love they enjoy bliss;**
**Duality they've transcended;**
**Do thou join them.**

Thus Lord Siva extols the qualities of His Holy Galaxy of Servants to Sundarar, His favoured friend and devotee. This poem, wherein every word is surcharged with deep meaning, appears in Sekilar's 'Chronicle of the Holy Servitors' and has within it the seeds of an elaborate thesis on the glory of the Holy Galaxy of Servitors of the Lord.

Such one thesis we find in Sekilar's Chronicle itself, in the Prologue to the work. It is appropriately called 'The Glory of the Holy Galaxy'. This galaxy was gathered for the nonce in the temple at Tiruvarur when the Lord bade Sundarar join them. Of this galaxy, Sekilar sings thus in his prologue, in the section entitled,

"THE GLORY OF THE HOLY GALAXY.'

1. In the lovely temple where abides the Lord of the heavenly host,
He who took residence in the ant-hill,—the Primordial Lord,
In its effulgent beauteous court,
Adjoining the portals of the surrounding ancient ramparts,

2. Lies the holy chamber called 'DEVASIRIYAN',
Ceaselessly filled with Brahma, the flower seated one,
Indra and Vishnu in whose wide chest
Resides She, the lotus-dweller, and other heavenly ones besides.

3. It resembled several thousands of Seas of Milk,
Filled as it was by the pure effulgence of the sacred white ash
On the bodies of the sorrow-dispelling devotees,
And by the resonance of the talisman,—the Mystic Five Letters.

4. It resembled the world entire,
As the entire world was gathered therein,
Deeming that those who worship the feet of Him,
The Cause of all, are entitled to rule the world.

5. Chosen by the Father and publicly given the acolade of Servitude,
Their bodies prickling and hearts trembling with love,
Bounden to serve with their hands,
These and countless others besides,

6. Men as pure inside as the ash
Smeared on their spotless frames resplendent with gems;
By their effulgence they lit up every side,
And shone with ineffable glory.

7. Even if the elements five their balance lose in chaos,
Never forget they the blossom-feet of Him with the Lady as his twin,
But stand steadfast by strength of far-famed path of love ;
Great Rocks of blameless character.

8. Endowed with eternal riches which never wax or wane,
Alms-bowl and red gold both with equanimity they view.
They shone with resolve which with welling love sought only to adore,
And sought not deliverance at all.

9. Wooden beads their necklace, rags their robe,
Their duty none other but God's service;
Full of compassionate love, they lacked nothing :
How can I describe their resoluteness ?

10. Of mien and garb as fancy dictates,
Unique servitors of the Dancing Lord,
Of age-long fame; how shall I
Here praise or sing their state ?

11. I shall proceed now to say how my lord,
*Alala Sundaram* of endless fame came to sing
The 'LAY OF THE SACRED SERVITORS'
About this Galaxy of Great Saints.

In the commentary to the poem which appears at the head of this article, Sri C.K. Subramania Mudaliar, the peerless devotee and commentator of Sekilar, has said thus :—"Admission to the Galaxy of the Servitors (of the Lord) is stated in Saiva Siddhanta as the acme of Siva's Grace."

This is deliverance here and here-after.

Manickavacagar's entire *Tiruvacagam* is a plea for admission to this assembly. "Initiate me in Thine assembly of servitors" he pleads to his Lord. This entreaty is the axis of his *Siva-puranam* even as the the Mystic Mantra 'Nama Sivaya' is the axis of the Yajur Veda.

Elsewhere in '*Tiruchatakam*' (verse 46) he sings :—"Would He call unworthy me too to His fold of devotees?" Manickavacagar's heart's desire was only this. The theme of Tiruvacagam is only this. In '*Koil-mootha-tiruppatikam* he sings thus :—

'Thy Mistress dwells in midmost of Thee ;
Amidst Thy Mistress dwellest Thou ;
O our Primeval Lord, whose being knows no end,
Who dwellest in the sacred golden hall !
'Midst of Thy servant if Ye both truly dwell,
Ever give me, Thy servant, the grace to dwell
Amidst Thy Servants, that my heart's desire be fulfilled'.

This is Manickavacagar's heart's desire. This is his single plea in the whole of *Tiruvacagam*. This is, indeed, *Tiruvacagam's* theme song.

Tamil-Nad is eternally indebted to Sekilar for expounding to us the pride and place of this Galaxy of the Lord's Servitors, admission to whose assembly is the heart's desire of Manickavacagar.

---

# KANNAN - MY LOVER

★

C. SUBRAHMANYA BHARATI

As a worm in the fish-hoook,
As a flickering lamp in the open,
My heart, for a long time,
Was quivering with pain.
Like a parrot encaged, I
Pined away long in loneliness.
All the things my mind despised-
All those that I can least be without. 1

As I lay tossing on my lonely bed,
Even the sight of my sweet mother
Cloyed me with surfeit.
You all pained me with your prolonged speeches.
I dreaded then with your company, so much,
As I would a terrible scourge. 2

Eat could I not,
Sleep could I not,
I hated scents and flowers alike.
Listless I grew and
Confounded was may brain ; and
I craved in vain for peace-
Just for a trice. 3

Milk tasted bitter and
The bed I felt irksome.
Even the prattle of the pretty parrot
Grated in my luckless ears.
Physicians of renown
Gave me up for lost;
The astrologer at the bridge, too,
Of malefic planets bespoke. 4

I dreamt, however, a delightful dream in which
A vision faint and sweet touched my heart;
Whose it was I peered through in vain to see.
I also stirred from bed some questions therefor to put
But disappointing vanished the charming sight.
Albeit, my heart swelled with a novel joy. 5

Entranced I became,
Restless was I no more.
The home, the chamber and all their environs
Pleased me as before.
The Light of Love lit up my heart, and
Together with it joy for all things.
Fright fled away and
Beauty dawned on me. 6

As often as I thought of him
I was salved and soothed;
And a freshening peace
Suffused in me.
Revolved I the vision
Many times in my mind
To discover whose it might be;
And lo! there danced before my eyes
The alluring form of Kannan—the Divine. 7

*—Translated by V. G. Srinivasan*
*from the Tamil originals.*



# THE BEACON FESTIVAL AT TIRUVANNAMALAI

—[V. V. TILAK SASTRY]—

★



*Tiruvaunamalai Temple*

For over several thousands of years, Tiruvannamalai, known in Puranic literature as ARUNACHALA has been a famous place of pilgrimage for numberless devotees spread all over India. Arunachala the hill of Holy Beacon has instilled devotion into several souls and in addition to that has also produced great souls who have illuminated the spiritual firmament of our sacred Bharatha Varsha (Mother land) amongst whom were Bhagavan Sri Ramana Maharishi, Sri Seshadri Swami and Guru Namasivayar.

South India is famous for its larger numbers of shrines. Of these 275 shrines five saivite Sthalams are known as "PANCHA BOOTHA STHALAM" viz.,

1. Prithvi (Earth) Sthalam - Kancheepuram and Tiruvarur.
2. Appu (Water) Sthalam - Tiruvanai Kaval near Tiruchirapalli.
3. Theyu (Fire) Sthalam - Tiruvannamalai.
4. Vayu (Air) Sthalam - Kalahasthi and
5. Akasa (Ether) Sthalam - Chidambaram.

The word Arunachala is composed of two words Aruna and Achala. Aruna means free from bondage, free from action, righteous, silent, brightening siva and beneficient. Achala means motionless steady. The true inner meaning of the word is that salvation only becomes possibly concentrating on one's own true self, excluding all extraneous thoughts in the silent, perfect being, Shiva, the ever brilliant the mere sight of whom eradicates hordage and makes one free. There is no way to attain salvation other than this.

## SACRED PLACE.

The secret and sacredness of the Tiruvannamalai town is said: By being born in Tiruvarur, by seeing Chidambaram and by dying in Benares one will attain salvation. But the very thought of Arunachala will save one.

To think of Arunachala is itself salvation. Therefore it is superior to all other holy places. Here is the heart seat of Shiva and the world. Many Vishnus, ninety-six Brahmas, several Munies, Devas and Sidhas have worshipped here and attained the eight Siddhis like Anima and also Jnana. It is oldest of the old and the newest of the new. Yes, it is greater than Kailas also. It is ever alive with the devotional Tamil songs of the devotees. All the other shrines as compared to this are like fire-flies before the sun. The Arka, Daiva, Amara and Trisula mountains to the east, south, west and north of this place are inhabited by Indra, Yama, Varuna and Kubera respectively, while on the other four Agni, Nirruthi, Vayu and Eesana stand, guard and pray. On the right side



YOUNG RAMANA

is south Pennai ; on the left is Seyyar and in the middle is the river Kamala and these three shine like the three parts of wealth Ida, Pingala and Sushumna. Devas came here as men and thinking of Arunachala performed Tapas and thus conquered the three deceptions and attained salvation. To live in this holy place is the wealth of grace even like worldly riches to poormen. As there is no ghee without milk, no fire without fume, so there is no salvation without this holy place. Even Yogees, if they do not think of this place will not attain salvation.

In the winter when white clouds are floating round the top of the mountain, it looks like Chandrasekara seated on his white bull. The clouds that gather round the sun are greater than either the moon or the Ganges. The parrots bole-bamboos make sweet melodious music and think themselves superior to Gandharvas, musicians of the heaven.

On the historical side too the great town Tiruvannamalai is a beautiful and famous place of wet lands abounding mountains and is the foremost in the Kingdom of Thondaimandalam.

Vallala Maha Raja was ruling this about 600 years ago and Prabhuda Deva Raya in 1450 A. D. and afterwards Kings beginning with Subbaji Rao ruled over it. The town is beautified by a number of things forming like an ornament to one another by the celestial hill of great gems called Arunachal surging the heavens, adjoining it in the east the sky scraping spires seeming as though they are the pet children of the hill, the outer walls of the temple, the temple of Shiva and the mansioned streets round.

The temple is built analagons to the constitution of the limbs a Siddha Purusha (Perfect Man) in conformity with the principle of Tatwa that the towers are the nine gates, the five rounds (Prakaras) are the five koshas.

Every year the festival of Karthigai Deepam is celebrated in the month of Karthigai (November-December) with the Dwajam (Flag) hoisted on the Utharadam day. After nine days of the great festivity the Bharani Deepam is lit before the **Sanctum Sanctorium** (inner shrine) in the early hours of the morning of the Krithika Nakshatra day (Tenth day). In the evening at dusk the Krithigai day synchronising with the full moonday while the panchamoorthies are present at the sixteen Pillared Mantapam in front of the Mukhamantapam with the Bharani Deepam the "Jyothi" is lit on the top of the mountain (in the big copper vessel) filled with mixture of ghee, wicks and camphor, in the midst of fire works.



*The huge pot in which the sacred Karthika Deepa is lighted.*

Devotees within radius of fifty miles see and enjoy this Jyothi. On the festival days beautiful and huge silver Vahanams are dragged through the main four streets on days and nights when thousands and thousands of devotees participate in the mela ( Festival ). On the second the Polar-Disc and silver Indra Pedestral ; on the third the demon mount ; on the fourth the Silver Kamadhenu (Cow) and Karpaka (tree) Vricksham ; on the fifth the silver bull mount ; on the sixth the silver chariot ; on the seventh the great chariot (Ratham); on the eighth the Lord as a beggar ; on the ninth the Kailasa Mount ; these take place in order and Krithigai Beacon on the top of the mountain is lit on the 10th.

## INTRINSIC TRUTH ABOUT SEEING THE LIGHT :

Body is the hill ; mind the vessel ; bone the wick ; incessant meditation the ghee ; breath the camphor and wisdom the fire. To light this flame and dispel the darkness of ignorance is the effect produced on one who sees the light.

Among persons who having worshipped Arunachala have attained greatness are, Brahma and Vishnu, Gantama, Uma, Ashta Vasus, Chandra (Moon), Pulaka, Pangu Muni, Pratardana, a

Northern king - Vajrangada Pandya, Vallala Raja and a good number of twentieth century saints and seers. Dispute between Brahma and Vishnu as who is greater and the end the Burning of Kama (God of love) on the more important incidents of this end being well known to one and all. The Goddess Uma attains the left side of the lord by her penance is only at this shrine.

Among the recent seers of the sacred shrine the names of Bhagavan Sri Ramana Maha Rishigal, Seshadri Swamigal, Esana Ghnana Desikar, Jatini Shanmukha Yogini, Guha Namasivayanar and Virupaksha Devar are more famous and important.

In and outside of the Arunachaleswarer Temple and in the way of coming around the Hill Arunachala we have got a number of theerthams (Tanks) among which Shiva Ganga, Brahma Theertham, Indra Theertham, Simha Theertham and Nandhi Theertham are more divine one.

Just as in the face all that is perceived shines only by the light of the eyes so also in the world, all the places shine by the Arunachala Jyothi. The Karthigai Deepam lit on the top of the elevated hill of knowing is brilliant as the sapphire (jewel) set on the crown of mother earth.

May such an Arunachala Jyothi, the lamp of wisdom, bless the world with a higher life of hereditary happiness!


இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு
மத்திய பாங்கு லிமிடெட்,
6, மேலமாசி வீதி,
மதுரை-1.

தந்தி : "Ramcenbank" தொலைப்பேசி எண் : 2444
தபால் பெட்டி நெ : 96
கிளைகள் : காரைக்குடி & ஸ்ரீவில்லிபுத்தூர்.
ஏ. கே. திருவேங்கிடப்ப நாயக்கர் (தலைவர்)

| | | | |
|---|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் ... | ரூ. | 40.00 | லக்ஷம் |
| செலுத்தப்பட்ட மூலதனம் ... | ரூ. | 34.19 | ,, |
| க்ஷேம நிதி ... | ரூ. | 8.00 | ,, |
| இதர ரிசர்வ் நிதிகள் ... | ரூ. | 10.82 | ,, |
| அலுவல் நிதிகள் ... | ரூ. | 325.39 | ,, |
| சர்க்கார் எடுத்துள்ள பங்கு ... | ரூ. | 2.70 | லக்ஷம் |

மாவட்டத்திலுள்ள எல்லா கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும், மத்திய பாங்காய் செயலாற்றுகிறது.

எல்லாவித டிபாசிட்டுகளும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

பிக்சட் டிபாசிட்டின் வட்டி விகிதங்கள் 4 சத விகிதம் முதல் 5½ சதவிகிதம் வரை.

தயவுசெய்து மற்ற விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

எஸ். சிவராஜன், பி.ஏ., எச்.டி.சி.,
காரியதரிசி.



சண்முகா தியேட்டர்

இராமநாதபுரம்.

—★—

சகல நவீன வசதிகளுடன் அமைந்துள்ள
நமது தியேட்டருக்கு

உங்கள் வருகையை எதிர்பார்க்கிறோம்.

★

உங்கள் கட்டிட வேலைகளுக்கு வேண்டிய

மரம், ஓடு, இரும்பு சாமான்கள்

மிகவும் குறைந்த விலையில்
கிடைக்கும்.

S. துரைச்சாமி பிள்ளை & பிரதர்ஸ்,
இராமநாதபுரம்.

"சூரியா காபி"

சுவையில் சிறந்தது.

—0—

★ எலக்டிரிக் சாமான்கள்

★ ரைஸ்மில் சாமான்கள்

★ சைக்கிள் சாமான்கள்

கிடைக்குமிடம்

"சுந்தர் எலக்டிரிக் அன்ட் சைக்கிள் ஸ்டோர்ஸ்"

உரிமையாளர்:-

A. K. M. ராமசாமி செட்டியார் அன்ட் சன்ஸ்,

பெரிய பஜார்,

இராமநாதபுரம்.



வள்ளுவர் நகர்
காலனி
போன் எண்: 3423



ஆபீஸ்
போன் எண்: 4014

மதுரை திருவள்ளுவர் நெசவாளர்
கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம்
லிமிடெட், A. 2317.

51, லெக்ஷ்மிபுரம் 1-வது தெரு, மதுரை.

விற்பனை நிலையம்:—

20, லெக்ஷ்மிபுரம் குறுக்குத் தெரு, மதுரை.

100s × 80s கைத்தறி நூல் & கோடம்பாக்கம்
நாகரீகமான பேட்டு & சாதா டிசைன் சேலைகள்
உற்பத்தி & விற்பனையாளர்கள்

வள்ளுவர் கோ-ஆப்

சேலைகளையே வாங்கி பயனடையும்படி
பொதுமக்களையும் வியாபாரிகளையும்
பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

J. K. நாகய்யர், தலைவர்.



தொலைபேசி : 2144 & 2059

மாணவர்களுக்கும் — பள்ளிக்கூடங்களுக்கும்
அச்சுக்கூடங்களுக்கும் — பத்திரிகாலயங்களுக்கும்
ஸ்தலஸ்தாபனங்களுக்கும் — அரசாங்க அலுவலகங்களுக்கும் ★
வியாபாரிகளுக்கும் — ஏனைய பொதுமக்களுக்கும்

— தேவையான —

எல்லாவிதமான உயர்ந்த ரக பேப்பர்கள்
ஆர்ட் பேப்பர்கள் — கலர் கார்டுபோர்டுகள்
திருமணத் தாள்கள் — திருமணக் கார்டுகள்
தாம்பூலப் பைகள் — கவர்கள்
பைண்டிங் அட்டைகள் — காலிகோ கிளாத்

யாவும் எங்களிடம் நியாயமான விலையில் கிடைக்கும்.

மீனுக்ஷி பேப்பர் ஸ்டோர்ஸ்,

95, பெரியகடைத் தெரு, திருச்சிராப்பள்ளி-8.

எங்கள் விற்பனை நிலையம் :— 76, தேரடிக்கடைத் தெரு, திருச்சிராப்பள்ளி-2.

# TIRUKOILUR

★

G. C. Pattabiram

Tirukoilur in South Arcot district is well connected by road and rail and there are many places for the comfortable stay of the traveller. Tiruvannamalai and Sattanur dam are near by and accommodation is also available for the tourist in these places.

Tirukoilur is sacred to Vaishnavites as it is here that the Divya Prabhandam first came into being and the first three Alwars met each other and sang the glories of Lord Vishnu here. It was a stormy night and a way-farer who was drenched in rain came to Tirukoilur and was lying down at a Dehali (a thatched terrace known in Tamil as Rezhi) by the courtesy of a pious house holder. Another one came and he was also accommodated there and there was not enough space to lie down and hence both of them sat together. A third traveller came there for a shelter and he was also accommodated and there was enough space for all the three of them only to stand. The first of them hailed from Kanchipuram and was known as Poygai Alwar. The second was from Mahabalipuram and was called Bhutatalwar and the third was from Mylapore and was known as Peyalwar. They were all imbibed with religious fervour and were moving throughout Tamilnad worshipping the God in several temples for which Tamilnad was always famous.

When these three recognised one another they shared their religious experiences. It was very dark and they had a feeling that the Dehali was getting more and more cramped. They also felt on their person the pressure of the body of an unknown stranger in their midst. They suspected that a fourth man had entered into the Dehali without their knowledge. As it was dark it was not possible for them to find an explanation. Poygayar at once sang a poem in Tamil constituting the entire world of matter as the lamp, the ocean as the ghee and the bright sun as the flame. Perhaps he had witnessed the enchanting sun rise in the sea coast and painted that beautiful scene in musical Tamil. Still the feeling of pressure continued and the cause of the pressure was unvisible though they were all able to see the place in which they were all standing. Bhutatalwar thought that the object that was exerting pressure was not perceptable to physical eye and heence lit the second lamp with intense love as receptacle, yearning as ghee and the mind pining away in bliss as the wick. Thus he lit the Gnana Dipa that will dispel the darkness of ignorance that usually envelopes the soul. As soon as this Gnana dipa was lit the darkness vanished and the third, Peyalwar had the vision of Lord and he gives a beautiful pen picture of the Person who was the cause of the pressure in poetic Tamil. The other two Alwars also enjoyed the beautific vision. The three bhaktas then began to sing the glory of the Lord in hundred verses each and they form part of Iyarpa, a portion of the Divya Prabandam. The Brahman of the Upanishads revealed itself to them and in musical and rhythmic Tamil poems they restated the truth of the Upanishads in the language of the land and thus Divyaprabandam was born at this sacred place in a stormy night.

This enchanting episode perhaps proves that God is always there when Bhaktas sit together and sing His glory. This memorable incident has attracted the Vaishnavite philosopher Vedanta Desika. He writes in a beautiful Tamil poem that this Satya Dipa lit in a small insignificant Dehali in a stormy night at Tirukoilur was able to dispel the darkness throughout the world and illuminated the path of Vedanta. He has also referred to this incident in a Sanskrit verse wherein he compares the Lord to a sugar-cane being crushed in a crushing mill constituted by three Alwars as a result of which the sweet nectar of the Prabandas began to flow out like the sugar cane juice flowing out of the crushing mill. From that sacred night Vishnu acquired the two new names of Dehalisa and Baktopamardana Rasika.

It was Peyalwar who first had a vision of Lakshmi and Narayana and gives a beautiful pen picture of the vision in chaste Tamil. According to him it was not Purusha or the Masculine or stree or the feminine. It was a harmonious blend of the two namely Tirumal (Tiru is Lakshmi and Mal is Vishnu). The old sacred srutis showed them separately by separate sooktas but the Gnana Dipa lit at Tirukoilur revealed ot the Alwars that it is one and inseparable. This idea is brought out clearly in the poetic description of the God head in the memorable lines of Peyalwar who was first to see the vision as soon as the first two Alwars lit the lamp of wisdom.

The Vishnu temple here is very big and it is adorned by huge and majestic Gopurams. It is situated in the important part of the town known as Melur. The presiding deity here is Trivikrama known in Tamil as Ulakalanda Perumal. The first three Alwars and Thirumangai Alwar have visited this place to worship the Lord and have referred to His greatness in Divyaprabandam. Thirumangai Alwar refers to the fertile valley on the Pennar in which this famous temple is situated. Though the moola bhera is made of wood it is majestic and aweinspiring. We find the bronzes of the first three Alwars in the Garbhagraha. Major portion of the

NE

LATEST
IN
RADIOS

★

TRANSISTOR
PIANO KEY
HI - FI
BAND SPREAD
PRINTED CIRCUIT
RADIO GRAMS

Over 9 Makes & 40 Models.

★

THE RADIO HOUSE
Singaratope, Tiruchi-8.
East Main St., Tanjore & Pudukottai.

OTHER OFFICES:
PHOTO HOUSE,
Nethaji Road, Tiruchi-2.
SHANTHA STORES & AGENCIES:
West Bouleward Road, Tiruchi-2.

temple has been built during the Nayak rule as many of them were pious Vaishnavites. We have a small shrine for Durga though it is a Vaishnavite temple. There are also separate sub shrines for Lakshminarayana, Lakshmivaraha, Lakshminarasimha and Rama. We have also shrines for Tirukachinambi, Ramanuja and Manavalamamuni who were all exponents of Visishtadvaita philosophy. We have also many sculptures of Nayak kings.

The Shiva temple dedicated to Virateswara is in Kilur on the southern bank of the river Pennar. It is a small one when compared with the Vishnu temple. It is one of the eight Samhara kshetras of Shiva known as Attaviratams and here Shiva killed the demon Andhakasura. Both Appar and Sambandar have visited this temple to worship Virateswara. There is a beautiful Chola bronze of Andhakasura Samhara murthy and it is majestic and artistic. This is a rare Chola bronze. The moola bhera of Parvati known as Sivanandavalli is also a very beautiful sculpture. There is a Ganesha inside the temple which was worshipped by the Tamil poet Avvayar. According to tradition here famous Vinayakar Ahaval was adressed to this deity. By His grace she was able to reach Kailasa ahead of Cheraman Perumal and Sunderar. On the northern bank of Pennar in Ariyanainallur we have a small shrine for Shiva which has been immortalised in Thevaram hymns by Sambandar. The railway station and the police station for Tirukoilur are situated near the temple. The temple is built on a small rock on the bank of the river Pennar and is situated on an ideal place noted for scenic beauty. Tirukoilur is also very sacred for Madhwas as here we have a Brindavanam for Raghutamaswamy. About ten miles from Tirukoilur we have Tiruvarangam famous for its Ranganatha temple. The moola bhera of Ranganatha is gigantic and majestic. There are beautiful images of Rama and Andal.

Tirukoilur is also famous in ancient Tamil literature as the headquarters of the Malayaman chieftains who were famous for their valour and love for literature and generosity. Both Avvayar and Kapilar who were famous Tamil poets were connected with this place. The famous chieftain Pari's daughters Angavai and Sangavai were married here. Kapilar took charge of the girls after the death of his patron Pari and after performing their marriage here to a Malayaman known as Deivigan, he committed suicide as he could not bear the separation of his generous patron Pari. Even now a small rock here is called Kapilar rock and there is a Linga which according to tradition was worshipped by Kapilar. Hence Tirukoilur is an ancient place well known in Tamil sacred and secular literature and its many temples prove its importance.

—★—

# CULTURE AND THE UNIVERSITY

★

Kodumudi Rajagopalan

Men and peoples must live in accordance with laws of evolution and harmony. To pretend to elude these laws, their imperative mandate, fatally leads men to error and nations to chaos. Life is richest in events and more prodigal in satisfactions when it is adjusted to the inscrutable physical and moral laws that regulate it. The nature of things, which according to Gita, does not advance by leaps and bounds, but gradually, shows the logical succession of events and the **Supreme Will of God**, which, if obeyed, brings balance, proportion and harmony.

Therefore, the constant concern of a single national leader or of a collective high command should be to unite or combine the aspirations of the people into a unique ideal in accordance with a national sentiment of a high order, i - e a sentiment that does not breed hatred.

Noble National sentiment is the basis of all cultures of old and modern.

*Liberty of Sentiment and Opinion*:

Let the most different sentiments and the most contrary opinions be manifested; let the spark of inspiration kindle new ideas extending the field of culture! But a single leader or a collective leadership must not ignore these manifestations and must guide them towards the fulfilment of the lofty aims his or its country desires to attain. However extraordinary the creative talent of man, however astounding the realisations of his intelligence, this talent and this intelligence must be expressed in tune with a national spirit. Each people has its own peculiar characteristics, principles consubstantial with its being, a destiny dictated by Providence, which constitute its true personality. The maintenance of this national personality-which defines a country - demands the renunciation of individual aspirations and respect for that immaterial, untouchable and marvellous intangible; the genius of each people.

*Noble Meaning of Culture*:

This renouncement and this respect cannot exist and subsist spontaneously. Like any other sentiment, they must be cultivated. And because of their paramount importance they deserve the special care, the vigilant supervision of the highest and most learned political organisations of a country. Because the matter concerns the preservation of the national spirit and its loftiest expressions, no deviation must be tolerated. We must believe that the preservation and progress of culture are extremely important as the true source of the happiness of all the peoples. We must also believe that culture is not only a moral formation and a weapon with which to maintain the portion of each man in the daily struggle but also the indispensable instruments by means of which political life will develop within an atmosphere of tolerance, harmony, mutual understanding and fearlessness.

*Difficult Movements*:

If neglected, culture loses itself in a sea of doubts and uncertainties, and the task of recovering what is lost is always very difficult; the destruction of a country's culture is nothing but equivalent to the loss of its national being. Our great country has passed through difficult moments, but only a few years ago we were able to affirm, witnessing the magnificent resurgence of our country. We must not fail to realise that, when a country finds itself after long years of trivial speculation and influences foreign to its traditional spirit and heritage, culture becomes a weapon of unsuspected possibilities. For this reason, now we have faith in our glorious future. Mere faith will not effectively lead us to that glorious future. We must pay real attention to the integral probelm of our culture which must embrace education from its primary stages to the highest spheres of learning.

*Economic and Social Reform Come First*:

Our Government's various planned development projects and activities considered all these problems, but more urgent necessities delayed their final study and the signal for action. It was necessary to social problems first in order to give general stability to the population, to acknowledge its right to a better standard of living, and to adopt the measures ensuring this improvement. This dynamic task was followed by the consolidation of our economy so that our country should never lack the resources which make it powerful.

***Justice and Politics:***

Political reorganisation on a rational basis was necessary to establish the sway of our **Constitution and the Rule Of The Law** and to eradicate from men and institutions the vices and corruptions into which they had fallen through long years of lies, fraud and weakening of our true national spirit and Character, accustomed to rely on our own resources and to have Confidence in God's Providence. The country also needed justice which would not seek sophistical interpretations of the Law to deprive the humble of the rights they are acknowledged to-day; it was the people that severely showed the road towards freedom.

*Sources of Culture:*

All this once achieved, the road leading to the consolidation of our culture was open. For in our inspiration for the greatness of our country, we will spare no effort to obtain the best for our country. For this reason, we wish for a great India; great by reason of her generosity; great by reason of its immense man-power, of its will to develop, of its path of peace and the wealth God has showered upon her; great by reason of the unselfish soul and qualities of her sons and finally, great by reason of her contribution towards the progress of universal culture.

How will we follow this road? Exalting the qualities of the spirit, safeguarding the liberty of whoever feels "quid divinum" that guides him towards art, letters or science, and rewarding and stimulating those outstanding in intelligence, who contribute most to the prestige of India.

*We Do Not Want an Imposed Culture:*

Let it be very clear that we do not desire either an official or imposed culture; we do not advocate uniform moulds for our intellectuals, artists and scientists; we do not accept robots, men servile to the voice of command. We desire a free and independent University; a University above tutelage and interference. We desire a University with an **Indian Spirit**, which, inspired by a proud civilization and the culture we inherited through ages, will make our country not a blind absorber but a noble creator. Our intellectual spheres must be called upon to further this crusade of public well-being tending towards the best utilisation of spiritual activities. These efforts must surpass themselves day after day. We cannot afford to work to favour either one party, or one sector, or one group, or one class. We must all work for the honour of our country and the happiness of all our fellow-men. The Government can help to the necessary extent and only to the necessary extent. We must realise that only the specialised organisations and free private bodies must take up the initiative for our cultural development.

Our cultural patrimony is formed by history, language, religion, respect for the family, popular poetry, folklore, and popular dance and drama. We must promote the teaching of the origin and evolutionary development of our national history, turning back to the currents of civilization from which it springs. Family traditions - so close y linked with our religion - must be preserved and exalted, considering each individual as the actual or potential head of a family; the more perfect his education and formation, the higher will be the level of culture of our country.

*Folklore:*

The study of popular poetry will also be one of our concerns; the knowledge of this philosophical and artistic expression of the past will be the source of inspiration for the present. Folklore must be studied; popular sentiment, expressed in dance, drama, music and song, must be considered as an exponent of culture and as the basis for the development of new forms of artistic expression.

Another manifestation of intellectual excellence is the devotion of the people towards the outstanding men and events of history. This feeling must be encouraged amongst the people.

The State must encourage and help cultural activities, but it must not absorb or interfere with individual action, the real and creative power of lofty spiritual expressions.

*University Education:*

In the field of culture, university education occupies a prominent place, for it must be looked upon as the best evidence of the scientific level attained by a country. Precisely for this reason, we will have to concern ourselves with the improvement of higher studies in our country. We must note with a clean insight that higher studies should be not only more comprehensive but extended to all the spheres of the population. This problem must be studied objectively, without passion, with-

out being blinded by an unfounded optimism, born of patriotic sentiments, or by pessimism, fruit of political prejudice.

*Culture Without Real Meaning*:

Naturally, presenting the case in these words, we might arrive at the mistaken conclusion that, if professionals were good, the educational centres where they were formed were also good, and that, in consequence, there was nothing to be done in the matter of Universities–Nothing is further from the truth. Our universities, even to - day, merely serve to give students a verbalist and hollow culture, without real depth, and in which theory is not being supplemented by practice, and even less by scientific investigation. Up to the present, our professionals and scientists have been obliged to teach themselves; they were formed, technically and scientifically, outside the halls of study.

However, we cannot admit that, if results were good, it is immaterial whether knowledge was acquired inside or outside Universities, for not all students are capable of forming themselves nor can we accept the waste of time implied by post-university formation, especially when university education is deficient. In these conditions, scientists lose their youth in vain studies and only begin to produce when maturity has arrived. The harmful results that a shorter period of useful activity and a lower number of persons with high intellectual level represent for our Republic are easily appreciated.

*Professors Without Vocation*:

This deficiency is partly due to the university system established by our laws and customs. The blame must also fall on the professors who do not dedicate themselves to their noble task. Used to believe that the functions and obligations of a professor are merely those of dictating class for less than an hour, and not even daily, the real fact is that professors neither live with their students nor serve as their guides and mentors. Generally, they devote the main part of their time to private work, which is economically more profitable, and only devote to teaching remainder. The post of professor is, with honourable exceptions, merely a means to defray expenses, a degree to dazzle society, a bait to attract more private clientele.

*Education Out of Reach for The Humble*:

Moreover, higher studies in our country is out of reach for the humble. To enter a Faculty it is necessary to enjoy certain economic standing, for two reasons: because studies are comparatively costly and because modest families need to increase their income with the work of their young members, barely reaching fifteen years of age. Therefore we must decide that capacity, not money, should enable tsudents follow higher studies; and put these studies within the reach of those who, although lacking economic means, deserve to be helped, and reject those who lack capacity, although they be wealthy.

*Raising of The Level of Science*:

The work of a single national leader or of a collective leadership must tend to the two roads: (1) the raising of the level of science and of educational efficiency (2) and the granting of facilities to enter universities for those of every social sphere qualified to follow higher studies. The magnitude of the aim makes unadvisable a rapid change in the present situation and obliges us to act by successive stages.

*The University in the Future*:

Our University of the future must no longer be a factory of faculty degrees but a true centes of scientific investigation and higher studies. The University must also affirm and encourage a national and historical conscience; organise scientific investigation in such a manner as to encourage those who have vocation and capacity to undertake it; compile, organise, and disseminate lenaring and culture; stimulate the progress of applied science and technical creation; form a teaching staff exclusively devoted to university scientific life; promote and establish free tution; create and upkeep institute for investigation, finishing and specialised courses; publish scientific works, and encourage the development of scientific, social, juridical, economic, literary and artistic studie and activities.

*Improvements for Professors*:

In order that this aim may be more than a written and unapplied definition, certain obligations can be imposed on professors. The professors, on their part must gladly accept this imposition. There can be no difference of opinion when we press for adequate remuneration for our professors. Certain obligations to be imposed on professors besides those of lecturing and taking examinations are such as presenting yearly their programme of studies and propose a



"To conserve that freedom and integrity of our territory, we must gird up our loins and face this gratest menace that has come to us since we became independent. We have therefore, to build up our strength and power to face this situation adequately and with confidence .............. We must steel our will and direct the nation's energies and resources to this one end".

—JAWAHARLAL NEHRU,
*Prime Minister of India.*

*TO BUILD UP THE NATION'S STRENGTH IS TO INCREASE PRODUCTION.*

★

APEEJAY GROUP ENTERPRISES

BOMBAY — MADRAS — CALCUTTA — JULLUNDUR — NEW DELHI.


plan of theoretical and practical education, discharge special posts, collaborate in university publications and in the investigations carried out in scientific institutes, report on new scientific and educational developments and on bibliographical movements, and establish with their students and colleagues a relationship of understanding and harmony facilitating a true social conception of university functions and activities. All this, apart from the right to be appointed **full time.**

*Chair And Investigation*:

It is to be appreciated that the guiding idea is that a Chair in a University be supplemented by work in institutes for investigation as the chair is the very basis of the University system. But to render the work fruitful, the chair must be supplemented by the institute, equipped with the best human and material elements, and dedicating its efforts not only to seminary practices but also to scientific research. Our supreme aspiration in this matter can be achieved through the association of institutes in order to compare doctrines and results and to coordinate the activities of related disciplines.

*Scholarships for Poor Students*:

Scholarships fulfill two ends: free education and partial or total economic compensation to the family of the student for the loss of his contribution to the family income. It is superfluous to add that the selection of scholarship students must be scrupulously effected, not only as regards intellectual capacity but also economic situation.



# THE OMEGA INSULATED CABLE CO. (INDIA) LTD.

★

*Regd Office:*

122/2, MOUNT ROAD, MADRAS.

*Factory at*

AMBATTUR.

★

Commencing production of

VIR & PVC Cables by May **1964.**

★

*Technical collaborators:*

KELSEY ENGINEERING LIMITED

NORTH VANCOUVER B.C. CANADA.

# பாரதி காட்டும் பாதை

★

ரா. உமாமகேசுவரன்

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்
வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனைசெய்வோம்

என்ருர் கவியரசர் பாரதியார்.

நம் நாட்டு மக்களில் எழுபத்தைந்து சதவீதத்தினர் விவசாயத்தையே தங்களது ஜீவனோபாயமாகக் கொண்டவர்கள். 'சோழ வள நாடு சோறுடைத்து' என்று நம் தமிழ் நாடு புகழ் பெற்றிருந்தது. அப்படிப்பட்ட நாட்டில் தான், 'வெறும் சோற்றுக்கோ வந்ததிந் தப்பஞ்சம்?' என்று பாரதியார் கேட்கும் அவலநிலை ஏற்பட்டிருக்கிறது.

இங்கே நம் நாட்டில் ஏக்கருக்கு விளைச்சல் எவ்வளவு? அமெரிக்காவிலும், ரஷ்யாவிலும், இங்கிலாந்திலும் நிலைமை என்ன?

வித்தியாசம் மலையளவு.

நம் நாடு நிலவள, நீர்வளத்தில் குறைந்ததா? இல்லை. பின் ஏன் இந்த வித்தியாசம்?

அந்நியர் ஆதிக்கத்தில் நம் நாட்டில் விவசாயிகளின் நிலைமை மோசமாக இருந்தது. வறுமையில் உழன்று வாடினர்கள். அரசாங்கம் அவர்களுக்கு ஒரு வசதியும் அளிக்காததாலும், வேறு துணைத் தொழில்கள் இல்லாததாலும் கடனாளியானர்கள். 'கெட்டும் பட்டணம் சேர்' என்று இருந்த கொஞ்ச நஞ்ச நிலபுலன்களையும் விற்று விட்டு விவசாயத்தைக் கைவிட்டு நகரங்களுக்குச் சென்றனர். இதை உணர்ந்தே காந்தி மகான் சொன்னர்: 'கிராமத்திற்குப் போ. குடிசைத் தொழில்களை அபிவிருத்தி செய்' என்று. அகில இந்திய கிராம சேவா சங்கம், மாகாண கிராம கைத்தொழிற் சங்கம் போன்ற க்ஷேமாபிவிருத்தி சங்கங்களை நிறுவி அவை மூலம் அரும்பெரும் தொண்டாற்றினர்.

விவசாயம் பாழானதற்கு இரண்டு காரணங்கள், ஒன்று இயற்கை உத்பாதம், அதாவது பருவ மழை இல்லாதுபோவது. மற்ருென்று, உழவை நாம் வந்தனை செய்யாதது. உழவுத்தொழிலை நாம் போற்ருதது. உபதொழில்களை நம் கிராம மக்கள் பேணுததும் ஒரு காரணமே.

விவசாயமும் தொழிற் கல்வியும் தனித்தனியாக இல்லாமல் இரண்டும் ஒன்றே, ஒன்றுக் கொன்று துணை என்பதை ஜனங்கள் உணர வேண்டும். ஊக்கமும் உற்சாகமும் உழைப்பும் முயற்சியும் ஏற்பட்டாலன்றி தரிசு நிலங்களை நன்செய்களாக மாற்ற இயலாது. சர்க்காரின் திட்டங்கள் மட்டும் போதாது, மக்களின் ஒத்துழைப்பும் வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக உழவை வந்தனை செய்யும் மனோபாவம் வளர வேண்டும். குறைகளைச் சொல்வதைவிட, என்ன செய்தால் நிறைவு பெறலாம் என்பதைச் சிந்திக்க வேண்டும். சிந்திக்கப் பழக வேண்டும், நவீன முறைகளைப் பயன்படுத்தப் பழக வேண்டும்.

பாரத சமுதாயம் பாரதி காட்டிய பாதையில் சென்று நலன் பெறும் என்று உறுதி பூண்டு உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்.


மடம் சாந்தி விநாயகர்
கைத்தறி நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட்.,

No. U. 866

பொதட்டூர்பேட்டை, P. O., செங்கல்பட்டு ஜில்லா.

★

எங்களிடம் 20-ம் நெம்பர் – 45"—40" வேஷ்டிகள், 40-ம் நெம்பரில் கலர் புடவைகள் 7 கெஜமும் 40-ம் நெம்பர் வேஷ்டிகள் 52", 48". 20-ம் நெம்பர் துண்டுமடிகள் 4×6, முதலிய ரகங்கள் தயார் செய்து வருகிறேம்.

தங்கள் தேவைகளுக்கு எங்கள் சங்கத்திற்கு ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

★

P. G. ஷண்முக முதலியார், தலைவர்.
P. C. சுப்பிரமணி முதலியார், உபதலைவர்.



கூட்டுறவே நாட்டுயர்வு!

குருவராஜபேட்டை கூட்டுறவு
நெசவாளர் உற்பத்தி & விற்பனை
சங்கம் லிமிடெட்,

R. C. No. 1226.

குருவராஜபேட்டை, P. O.
வ. ஆற்காடு (Dt.)

———

எங்கள் சங்கத்தில் கைதேர்ந்த நெசவாளர்களைக்கொண்டு நேர்த்தியான 20s 50×12 காடா, 20s 4×8, 20s 4×9, 20s 4×10 வேஷ்டிகளும் 20s 4×6, 20s 4×7 துண்டுகளும் 20s 2×6 போர்வைகளும் கலர் சர்டிங்குகளும் உற்பத்தி செய்கிறேம். தேவைக்கு நேரிலும், தபால் மூலமாகவும் சப்ளை செய்கிறேம்.

இப்படிக்கு,

கி. க. அண்ணுமலைமுதலி, காரியதரிசி.
P.R. SHANMUGAM, தலைவர்.

சிறப்பு மலர்

# கவிஞர் உலகம்

ஒரு யுகத்தில் உதித்த கவிஞர் அனைவரும் செய்யும் தவத்தாலே ஒரு மகாகவி தோன்றுவான். ஒரு மகாகவி தோன்ற வேண்டுமானால் காலத்தின் தேவையைப் பாடும் கவிஞர் எண்ணற்றோர் கவிதை வேள்வி செய்துதான் ஆகவேண்டும்.

பெற்ற பிள்ளைகள் எல்லாம் முழுவாழ்வு வாழ்ந்துவிடுவதில்லை. கவிஞன் இயற்றும் கவிதைகளும் அப்படித்தான். தான் அறிந்த அறிவை வைத்துக் கவிதைகளை எடை போடுவது பேதைமை. காலமே கவிதைகளை எடைபோட வல்லது

காலத்தாற் சாகாத கவிதைதனைய உருவாக்கக் கவிஞன் நெடிய தவத்தில் தொடர்ந்த ஈடுபாட்டுடன் வாழ்கிறான். அவனது ஒவ்வொரு மூச்சும், தும்மலும், விம்மலும், சிரிப்புமே ஒரு கவிதைக்கு நெடிய ஆயுளைத்தர ஆதார சக்தியாக விளங்குகின்றன.

அடுத்து வரும் பக்கங்களில் ஒரு மகாகவி உதயமாக யோக நிலையில் கவிதை வேள்வி புரியும் கவிஞர்களின் இதயக் குரல், காலத்தின் தாபத்தைக் காட்டும் ஏக்கம் கலந்து ஒலிப்பதைக் காணலாம்.

"ரெட்டியார்"

# யான் பெற்ற இன்பம்

★

சாலை இளந்திரையன்

இந்த மாநிலத் துள்ளொரு மானிட
 னாக வந்து பிறந்த மகிழ்ச்சியை
எந்த சொல்லில் விரித்து விளக்குவேன்?—
 ஏது சொல், இவ் உலக மொழிகளில்!
சிந்து பாடிச் சிலிர்க்குது, நெஞ்சகம்;—
 தேனில் தேனில் திளைக்கிறது உள்மனம்!
"இந்த இன்பம் எதற்கிணை?" என்பிரேல்,
 இல்லை இந்தப் பெருநிலைக்கு ஈடிணை!

பித்துக் கொண்டு பிதற்றும் மொழிகளைப்
 பேணி வைத்துப் படிக்கப் பலர்களாம்;—
செத்துப் போன பிறகும் எனதுபேர்
 செப்பி இன்புறக் கோடி மனிதர்கள்!
சொத்துத் தேடிச் சுகங்கள் குவித்தவர்
 சொல்லிச் சென்றது செய்யத் தயங்குவோர்,
வித்துப் போன்றஎன் சொற்களை அன்புடன்
 வேண்டிப் பெற்று வளர்த்து மகிழ்கிறார்!

"நான் உரைக்கும் கருத்துச் சிறந்தது,
 ஞாலத் தீர்! இது கொள்க" எனச் சொலும்
மேல்நி லைக்கெனை யானுயர்த் திக்கொள்ளும்
 பேதை மைக்கும் மதிப்பிருக் கின்றது!
தேன்பெய் தாலென நெஞ்சம் இனிக்கிறேன்;
 தீர வீரத் தியாக நெறியினோர்,
ஊன்கொ டுத்துயிர் ஊன்றி அதிலொரு
 உள்ளம் தன்னை வளர்த்துள ரல்லவோ?

என்னை இப்படி ஆக்கி நிறுத்திட
 இந்த மாநிலம் கொண்ட உழைப்புகள்
என்ன என்று கணிக்க இயலுமோ?—
 எத்த னைப்பெரும் பேரருள், அம்மவோ!
தென்னை நல்லிள நீர்பெற, நாம்சில
 செய்த துண்டு;அழுக் காயினும் ஊற்றினோம்!
என்னை இப்புவி பெற்று வளர்த்திட
 என்ன நன்றி இதற்குப் புரிந்துளேன்?....

2

பத்து மாதம் சுமந்து சுமந்தெனைப்
 பையப் பைய வளர்த்துரு வாக்கியே,—
கத்தும் என்குரல் கேட்கும் விருப்பினால்,
 காசி னிக்கெனைக் காட்டிய அன்னையைப்
பத்தி செய்து வணங்குதல் போதுமோ?—
 பாத பூசை புரிவது போதுமோ?
பித்தம் நீங்கி, உயிர்கள் அனைத்தையும்
 பேணிப் பேணி வளர்த்து நிறைகுவேன்...

நான் பிறந்து மொழிச்சொல் பயின்றதும்,
 தத்துப் பித்தென்று பேசிய வார்த்தையில்,
தேன்இ ருந்ததோ?—அன்னையும் தந்தையும்
 தேடி வந்தஎன் உற்றமும் சுற்றமும்
ஏன்வி ழுந்தெனை மொய்த்தனர்?—அள்ளியே
 எத்த னைச்சுவை முத்தம் பொழிந்தனர்!
யான்பி றந்திடப் போவதை முன்னறிந்து
 இங்கு முந்திப் பிறந்திருந் தார்களோ?

அந்த நாளில் வியப்புடன் நோக்கிட,
 ஆண்கள் பெண்கள் தனித்தனி ஆடைகள்;—
எந்த ஊர்க்கும் இடுப்புக் குதிரைகள்
 ஏறிச் சென்று திரும்பும் பெருமைகள்;—
நொந்து நான்படுத் தாலெனைச் சுற்றியே
 நோவு நீர்நிறை பற்பல கண்ணுகள்;—
வந்த நோயகன் றாலன்று வீடெலாம்
 வந்து பொங்கித் ததும்பும் மகிழ்ச்சிகள்!

அள்ளித் தெள்ளப் புழுதி தெருக்களில்;
 ஆலி லைச்சுளகு அங்குள சாலையில்!
பிள்ளைச் சின்னஞ் சிறுசுக ளோடெலாம்
 பேண,—என்றன் தமக்கையைப் போலவே,—
வெள்ளை நெஞ்ச மிகச்சிறு தாய்மைகள்!
 மேவு நீரற்ற சந்தன மென்றுயாம்
அள்ளிப் பூசும் அழுக்குக் களையவர்
 ஆடை யால்துடைத்து அள்ளிடும் அன்புகள்!

எங்கள் ஊரிடை ஓடுமவ் ஓடைக்கே
 எத்த னைக்கவி பாடினும் போதுமோ?
பொங்கி ஓடும் பெருமழை நாளிலே,—
 போவ மோ,கிட்ட? ஓடி விலகுவோம்!
எங்கும் வெம்மை எழுப்புமச் சித்திரை
 எங்க ளுக்குக் குளிப்புப் பருவமென்று,
எங்கள் ஓடை எளிய தெளிந்தநீர்
 ஏந்தி யேவரும்;—நீந்தித் திளைப்பமே!

சோற்றுக் காய்ச்சல், சுகத்துக் கலைச்சலில்
 சோர்ந்து சண்டை பிடித்ததுண்டு;—ஆயினும்,
ஊற்றுக் கண்திறந்து ஓடும் பெருக்கென,—
 ஒற்றை ஒற்றை மனிதரும்,—என்னிடம்
போற்றத் தக்கன கண்ட பொழுதெலாம்
 போற்றிப் போற்றிப் பொழிந்தனர் அன்பினை!
ஏற்றி வைத்தனர் இச்சிறு கன்றினை;—
 என்ன பேரருள்! எத்தனை நல்லுளம்!

3

காலை வந்ததும் பாடி எழுப்பிடக்
 கற்கண்டுத்துளிச் சிட்டுக் குருவிகள்;
வேலை செய்து களைத்த மனத்தினை, -
 விந்தைப் புன்னகை என்னுமோ ரூட்டினால்,
காலம் பார்த்துப் புதுக்கி வளர்த்திடக்
 காத லூறிய கண்ணுக் குலமகள்!
காலை மாலை பகல்களென் றின்றியே
 கண்ணில் நெஞ்சில் கலக்கும் அழகுகள்!

சுற்றி யுள்ள சுகங்கள் நினைக்கையில்.
 துள்ளித் துள்ளும் இதயக் கடலலை;
கற்றுக் கொண்ட குரலை மிழற்றியே
 காக்கைக் குஞ்சு மகிழ்ந்து குதிக்குது;
வற்றிப் போன குளத்தின் வெடிப்பிலே
 வந்த தோர்இலை பச்சை விரிக்குது;
மற்றப் பச்சை இலையினில் ஓர்பனி
 மாணிக்கச் சிரிப்பு ஏந்தி அசையுது!

தங்கச் செந்நெல் மணிக்குலே ஏந்தியே
சாய்ந்த செந்நெல் தமிழ்நட மாடுது;
செங்கல் தேய்த்துக் குவித்த பொடியது
"சிவ்"வென்று ஏறி விசும்பில் படருது;
பொங்கும் தங்க ஒளியில் புவியினைப்
வெட்டுச் செங்கதிர் மூக்கி எடுக்கவும்,
எங்கும் மாலை மயக்கு விரியவே
ஏழை நெஞ்சம் பருகித் திளைருது!

சின்ன தாய்ஒரு தென்றல் திரியுது;
தீண்டி விட்டதோ, இன்பக் குளிப்படா!
என்ன வேலையில் ஏறி இருப்பினும்
இந்தப் "பிள்ளை" இறுகத் தழுவிடில்,
அன்ன யாவும் மறந்து விலகிடும்;—
ஆழ நெஞ்சில் குளிர்ச்சி குமிழிடும்!
கன்னந் தேடிக் கனிமுத் தளிக்கவே
கையும் வாயும் கிடந்து துடிக்குமே!

நெஞ்ச மேடை நிறைந்து கனக்குது;
நித்தம் அங்கு மகிழ்ச்சிக்கும் மாளமே!
கொஞ்ச மோ, எழில்? கொஞ்சச் சுவைகளோ?—
கூட்டங் கூட்டங் குழுமிக் கிடக்குதே!—

பஞ்சமற்ற புவிப்பெரும் பேறெழில்
பாய்ந்து வந்தெனை அள்ளித் தழுவுதே!
பஞ்சம் வைத்துப் பதைக்கும் மனிதனே,
பாரடா, உனக்கு எத்தனை இன்புகள்!

என்றனுக்கெழிற் புன்னகை ஏந்திட,
எங்கும் தாவர வண்ணச் சிலிர்ப்புகள்!
என்றன் பிள்ளைமை நெஞ்சம் உவந்திட,
எத்தனைவடி வான விலங்குகள்!
நின்று நெஞ்சில் வரைந்து களித்திட,
நேரில் எத்தனை மானிட ஓவியம்!
சென்று போன பழங்கதை எத்தனை,
தேம்பும் போது மனத்தைத் திருத்தவே!

மானிடன்தனக் கென்றிங்கு மானிடம்;—
மற்ற யாவும் அவன்தனக் காகவே!
யானிதைப்புரிந்து ஏறி மகிழ்கையில்,
என்றன் உள்ளம் மிழற்றுதல் கேண்மினோ:
"யான்செய் குற்றம் அனைத்தும் பொறுத்து, எனக்கு
ஏற்றம் தந்து, அதில் இன்ப மடைந்திடும்
தேன்செய் நெஞ்சினர் உள்ள உலகிலே
சேர்ந்த இன்பினுக்கு ஏதிணை, ஏதிணை!"



# செஞ்சொற் சிலம்புடையாள்

நாவற்குழியூர் நடராஜன்

★

(பொருள் தேடிப் பிறநாடு செல்வேன் என்ற தலைவனுக்குத் தோழி சொல்லியது)

குடியாட்சி யதனாலே குலவும் சிறுபான்மை
மிடியாட்சி யென்ன வதைக்கும் சுறவோட,
படித்துயர்ந்த மொழிசெல்லாப் பண்டமா யாகிவிடத்
துடிக்கின்ற அறிஞரெனத் துவள்கின்ற அலைமோதும்,
அமைச்சர் அவையில் ஆளில்லாக் குலமென்ன
இமைப் பொழுதும் அமைதியுறு ஏழ்கடற் சமுத்திரம்;

எண்ணென்ற இழையூடு இயலென்ற பாவோடிப்
பண்ணின்று பலவாகிப் படர்தமிழ்க் கலையாளைக்
கண்ணென்று கூறிஅக் கடலோடிப் பொருள் செயும்
வண்ண மறியேன்யான், வல்லார்க் கியைவதோ!

மண்கண்ட பெருமாடல் மருவுண்ட மொழிகூறு
விண்கண்ட பொருளாய புறமோடு அகமேவு
பண்கண்ட தமிழாளைப் படரெவ்வ முறவிட்டுக்
கண்கண்ட பெருமநீ கடல்கடந் துழல்வையோ!

செஞ்சொற் சிலம்புடையாள் சிறுமை யடைய இவண்
வெஞ்சொற் சிலகற்று வேற்றுநாட் டயர்ந்துழைக்க
விஞ்சு விசையாய் விரையுந் தலைவா உன்
கொஞ்சு மொழியாளின் கோலம் இனியென்னும்!

அதனால்,

அற்புதப் பொருள்செய் விற்பனர் துணையொடு
கற்பூ ரம்முதல் வெற்பூர் பொறிவரை
நற்பல னளிக்கும் பற்பல பொருள்கள்
சற்சனர் கூட்டி உற்பத்தி செய்து
விற்பனை யாக்கி வேற்றுநாட் டவரின்
கற்பனைக் கெட்டாக் கவின்பல பெற்றுப்
பொற்புறு நல்ல பொருளா தாரம்
உற்றுயர் வெய்தின் மற்றெக் குறைகளும்
அற்றழிந் தோடி, ஞானம்
பெற்றவர் உளம்போற் பெருநிறை வுறுமே.

# எனது பகைவன்

குயிலன்

உயிருக்குயிரே உறுதுணையே
உதவிட வந்தே நிற்கின்றாய்
அயர்ந்து சோரும் நேரத்தில்
அன்பே உன்குரல் கேட்கின்றேன்.

கோட்டைக் கப்பால் நிற்கின்றாய்
குரலை மட்டும் கேட்கின்றேன்
பூட்டைத் திறக்க வழியின்றிப்
புலம்பித் தனியே தவிக்கின்றேன்.

பகைவன் வருவான் என்றஞ்சிப்
பலநா ளாக உருவாக்கி
வகையாய் எழுப்பிய கோட்டை மதில்
வளர்ந்தே மலையாய் நிற்கிறது.

கட்டி முடித்த கோட்டைக்குள்
கண்டேன் எனது பகைவனையே
முட்டி அழுது பயனென்ன ?
முடிவே இல்லாப் போராட்டம்.

உலகில் எங்கும் அவனில்லை
உள்ளே பகைவன் இருக்கின்றான்
கலகம் செய்யும் அவனோடு
காலம் எல்லாம் வாழ்கின்றேன்,

கட்டிய கோட்டை சிறை யாச்சு
காவல் கைதி நானானேன்
நெட்டுயிர்ப் போடே நிற்கின்றேன்
நீங்கா துறையும் பகைவனுடன்

அறியா மையினால் பகைவன் மேல்
அடித்த அடியின் தழும்பெல்லாம்
இறைவா என்மேல் விழக்கண்டேன்
எனது பகைவன் நானேயோ ?

என்னைக் காக்கக் கட்டியது
எனக்கே சிறையாய் மாறியது
உன்னை யன்றி எனை மீட்க
உலகில் வேறே கதியேது !

## வரம் !

என். எஸ். சிதம்பரம்

வடிவுடையாய், நீயுமென்பால் வரங்கொடுக்க வந்தால்
வையகத்தின் உயிர்களெல்லாம் வாழ்வுறச்செய் யென்பேன்!
மிடியுடையார் வண்ணமெனை மேன்மையிலே வைத்து
மேவுமன்பால் பணிசெய்யும் விருப்பளிப்பாய் என்பேன் !
நடிக்குமொரு வஞ்சர்தமை நண்ணியென்றும் உள்ளம்
நையாத நிலைமையினை நல்கிடுவாய் என்பேன் !
வடிக்குமின்பக் கவிபாடி வந்தபயன் தேடி
வனப்புறும்உன் அடிநாடும் வகைதாஎன் பேனே!

திருவுடையாய், வரங்கொடுக்கச் சேயேன்பால் வந்தால்
தீங்கெவர்க்கும் நினையாத திறமருள்வாய் என்பேன்!
பொருளுடையார் பாற்சென்று போற்றிசெய்து நின்று
புந்திமயங் காததொரு பொற்பினைத்தா என்பேன்!
அருளுடையார் தமைக்கூடி அறிவின்ப மெய்தும்
அரியசுகப் பெரும்பேற்றை அளித்திடுவாய் என்பேன்!
தெருளுடைய மனங்கொண்டு திசையெங்கும் உனது
தெய்வமணங் கண்டிடுமோர் சீர்தாஎன் பேனே!

பதமுடையாய், வரங்கொடுக்கப் பரிந்தென்பால் வந்தால்
பார்க்கின்ற பொருளிலெல்லாம் பரமுன்னைக் காணும்
இதமுற்றும் மதமற்றும் இருக்கச்செய் யென்பேன்!
எவ்வுயிரும் வாழயெண்ணும் இதயந்தா வென்பேன்!
விதம்விதமாய்ப் பலவரங்கள் விழைந்தேன்என் றாலும்
விளங்குமுனைக் கண்டவுடன் விழைந்தவற்றை மறந்துன்
பதத்தின்மேல் ஆசைவைத்துப் பாருமறந் துனையே
பார்த்தபடி இருப்பனெனில் பாக்கியவான் யானே!

## நேரு மகன்

“ஜகன்”

ஆரமுதச் சாறுமொழி கூறியுல கோருறவிற்
சாருமுறை தேறி,மிக வே
ஆட்டிப்ப டைக்குமனுக் கூட்டைப்பி ளக்குமதிர்
வேட்டைக்கி ளப்பி யெதிரே
ஈருலகக் கூறுகளாய் வேறுபடு போரணிகள்
வேராறுவ தாக, அமை தி
ஈட்டிச்சு கம்பெறப்பண் பாட்டைப்பு குத்தியறம்
கூட்டிச் சிறக்க, நடுவே
சீருலவு பாரதமி தாகுமணித் தேருயரச்
சாரதிய தாகி வள மார்
தேட்டைப்பெ ருக்கி தொழில் நாட்டைப்பு குத்தியுணர்
வூட்டிச்செ லுத்தும்வழி யே
வீரமக னுகவினை நேருமகன் போலரசை
ஆரொருவ ரேநடத்து வார் ?
வீட்டிற் சிலை வடித்து ஏட்டிற்க வி தொடுத்து
சூட்டிப்பு கழ்மணக்க வே !

# எழுத்தாளர்க்கு.

அரங்க சீனிவாசன்

விண்ணமுதை நறுந்தேனைக் கலந்து, மூன்று
விதக்கனியைப் பிழிந்து, பசும் பாலும்கூட்டி,
வண்ணமிகு செந்தீயைக் குளிர்ந்த நீரை
மாருதத்தை வான்தென்றல் கொழுந்தைச் சேர்த்துப்
பண்ணமையப் பாடல், சிறு கதைகளோடு
பகர்தரு கட் டுரைகளெனப் பக்குவஞ்செய்(து)
எண்ணம் இனித் திட,உணர்ச்சி பெருக நல்கும்
எழுத்தாள சோதரரே! இயம்பக் கேண்மின்!

மாமலரின் மென்மையினை, மணத்தை! நல்ல
வண்ணத்தை, மதுவுண்டு மயங்கிப் பாடும்
காமரத்தின் நல்லிசையைத், தோகை மஞ்ஞை
களிநடத்தைக், குயிலிசையைக், கதிர் நிலாவை,
தேமதுர யாழொலியைக், காதல் மாதர்
செப்புநறுங் குதலையினைத், தென்றற் காற்றைக்,
காமர்நெடு வானத்தின் விரிவை, நீண்ட
கடல்முழக்கை எழுத்தினிலே காட்ட வல்லீர்!

கற்பனைகள் மிகஅருமை, அருமை; உங்கள்
கவிதையுளம் கண்டுவிய வாதார் இல்லை.
அற்பமெனும் நிகழ்ச்சிகளும் நுமது பேனா
ஆற்றலினால் உள்ளத்தைத் தொடுவ துண்மை.
பற்பலவாம் தொண்டுகளில் எழுத்துத் தொண்டே
பயனுடைய தொண்டென்றால் மறுப்பார் உண்டோ?
விற்பதற்கு விலையுண்டோ? எழுத்துச்செல்வம்?
மெச்சுதற்கு வாயுண் டோ? எம் மனோர்க்கே.

உருக்குலைந்த சமுதாயம் கொண்டநோயை
ஒழிப்பதற்கு மருத்துவர்நீர் அன்றி உண்டோ?
திருக்கிளரும் தமிழ்நாடு மறுமலர்ச்சி
சேர்ந்திடவே இன்றுமது சேவை வேண்டி
இருக்கிறது; பக்குவம்கண் டெளிய போக்கில்
எழுதுகின்ற நும்முடைய இலக்கியத்தால்
உருக்குமனத் தமிழர்தலை நிமிர்தல் நோக்கி
உலகில்பல் நாட்டினரும் வணக்கம் செய்வார்.

நாட்டினில் நம் சமூகத்தை உயத்தல் ஒன்றே
நம் கடமை எனக்கொண்டு நாட்டுமக்கள்
தேட்டமுறச் சுவையமைய எளிமை தோன்றச்
செழுந்தமிழும் வளமடையச் சீலம் ஓங்கத்
தீட்டிடுவீர் கட்டுரைகள்; கணக்கி லாத
சிறுகதைகள் வரைந்திடுவீர்; தேர்ந்து தேர்ந்து
பாட்டுநனி புனைந்திடுவீர்; எழுத்தாளர்க்குப்
பாரதி காட்டிய பாதை இதுவேயன்றோ?

# நீ போய்ச் சொல்வாய்

கவிஞர் சக்திக்கனல்

குறத்தி சொல்வது:—

"வேங்கைமரம் புலிபோல பூத்துத் தோன்ற
வெறியானை சினங்கொண்டு வேரில் பாய்ந்தே
பாங்கான தந்தங்கள் மரத்தில் ஏறிப்
படஅதனை மீட்டிடவே பிளிறக் காட்டில்
வீங்குதுயர்க் குரல்எட்டுத் திக்கும் பாய்ந்தே
வெளிபள்ளத் தாக்கொலிக்கும் மலைநா டா!கேள்
தூங்குகிற நேரத்தில் பாம்புக் கூட்டம்
தொடர்காட்டில் நடைபோட்டு வருகின்றாய்நீ!

இன்பத்தைப் பெறவந்தாய் அவளோ உன்றன்
இடைதழுவி ஒளிபெற்றாள்! விடியற் காலம்
விண்பட்ட விசும்புநனை பயிராய் ஆனாள்!
விரைகின்றாய்! அவள்மீண்டும் வாடிப் போகப்
புண்பட்டாள் சருகானாள் பொலிவி ழந்து
போனாளே! வறுமையிளம் பிள்ளை யானாள்!
கண்கெட்டுப் போனதுபோல் கலங்க மாலைக்
கருக்கிருளை முன்னனுப்பி நீயும் வந்தாய்!

அஞ்சாத நெஞ்சோடு கள்ளர் அஞ்சும்
அல்லிருளில் வருகின்றாய் வரவேற் கின்றாள்!
துஞ்சாது காதல்விளை யாட்டைச் செய்தே
தோகைமயில் உடல்வாடப் போகின் றாய்நீ!
எண்சாணும் ஒருசாணாய் இளைத்தி ளைத்தும்
இரவில்நீ வந்தவுடன் வனப்புப் பெற்றும்
பஞ்சையென மாறுமிவள் தோற்றம் கண்டே
பழிகூறும் உலகமதை எண்ணிப் பாராய்!"

குறத்தியிடம் தலைவன் சொன்னது:—

என்றிட்ட தோழியிடம் தலைவன் சொல்வான்:
"எழிலான சிறுகுறத்தி! இதைநீ சொல்வாய்
குன்றெல்லாம் வேங்கைமரம் பூத்துக் கொட்டிக்
குலுங்கிமலர் உதிர்காலம் வருவ தற்குள்
சென்றிங்கே திரும்பிடுவேன் தெரிவிப் பாயே!
சிற்றிடையைத் தேனடையைச் சீக்கி ரத்தே
நின்றிட்ட வேல்முருகன் ஆல யத்தே
நிச்சயம்நான் மணம்புரிவேன்! நீபோய்ச்
[சொல்வாய்!"



# காணிக்கை

கலைமோகன்

இளமையின் பசுமைமாறு தினியதாம் பருவம்தன்னில்
  இசையென மழலைகொஞ்சும் மதலையர் விழிநீர்சோரத்
தழுவியே அழியாவன்பால் தன்னிகர் யாதென்றுன்னித்
  தருக்கொடு வாழ்ந்தேனென்றோ தனியென நீத்தாயென்னை ?

சுடரிலா விளக்காய்சந்தம் நிறைவிலா மனையாய்சிந்தைக்
  குளமெலாம் சேறாய்வீணத் தனமதாய் வேம்பாய்நாளும்
முடவனாய் முறுவல்பூவா முகத்தனாய் முழுமைகெட்டே
  மணமிலா மலராய்மண்ணிற் கிளையிலா மரமாய்நின்றேன் !

கடுமையின் துளியும்நாவின் சொல்லிலே கண்டாய்கொல்லோ
  கவலையின் நிழலில்நின்னைக் கனவிலும் விடுத்தேன்கொல்லோ
படுமனத் துயரம்தன்னைப் பன்னவோ பன்னவோயான்
  பழகிய போதென்பால்நீ பகைத்தவோர் குற்றம்என்னோ ?

உலகிதன் முன்னாலன்றே உடலிரண் டென்றேகொண்டோம்
  உயர்வதாம் உள்ளம்தன்னில் ஒன்றென விணைந்தோமன்றே
அலகிலா இன்பும்துன்பும் அடைந்தெனை அணைத்தபோதுள்
  அயர்விலாத் -துணையாய்வாய்ந்தே அகமுடன் வாழ்ந்தாயன்றே?

பஞ்சரக் கிளிபோலெண்ணிப் பஞ்சரத் துடலைச்சாய்த்துப்
  பஞ்செனப் பறந்தாய்கொஞ்சும் பனிமொழி விள்ளாதன்றே
வஞ்சமே நெஞ்சில்துய்த்தோ வகையிலா தென்னைவாட்ட
  வஞ்சியே மணியே முத்தே வாசமே மறைந்தாய்செப்பு !

# மனைவிளக்கு

தமிழழகன்

வானப் பிறையை வாங்கிடுவாள் ;—முக
வனப்பாய் நுதல்மேல் தாங்கிடுவாள் !
ஊனை உயிரை உலுக்கிடுவாள் ;—என்னுள்
உணர்வினைக் கொஞ்சிக் குலுக்கிடுவாள் !

சோகப் புயலைக் கிள்ளிடுவாள்;—மனச்
சுமையை விழியால் அள்ளிடுவாள் !
மோகப் படலம் புரட்டிடுவாள் ;—அதில்
முத்துக் கடலும் திரட்டிடு வாள் !

குழிந்திடக் கன்னம் கூட்டிடுவாள் ;—அங்குக்
குங்கும வர்ணம் தீட்டிடு வாள் !
பிழிந்துமே இன்பம் பெருக்கிடு வாள் ;—அதில்
பெண்மைச் சுமையை உருக்கிடு வாள் !

நாணம் துளும்பச் சென்றிடுவாள் ;—பின்னர்
நளினம் சிலம்ப நின்றிடு வாள் !
காண அவளொரு காவியமாம் ;—என்றன்
காதல் மனைவிளக் கோவியமாம் !

# பெ...ரு...மூ...ச்...சு !

ரா. பொன்ராசன்

உள்ளம் நிறைத்ததைச் சொல்லில் வடித்திட
ஓர்வகை நான்அறி யேன் — அதைக்
கல்லிற் செதுக்கிக் கவினெழில் கூட்டவும்
கைத்திறம் பெற்றறி யேன

அந்திக் கதிரவன் சந்திக்கும் வானத்து
அழகினை நான்உணர் வேன் — அது
சந்தித்த நல்லெழில் தன்னைவண் ணத்தாலே
சாதிக்க நான்அறி யேன்

எட்டா உயரத்தில் கட்டிய தூக்கணாங்
கூட்டினை நான்அறி வேன் — எனக்(கு)
எட்டும்வ ரைக்கும் முயன்றும தைப்போல
கட்டும் வகைஅறி யேன்

வண்ண மலர்களின் கிண்ணத்தி லேமது
வாய்கொளும் வண்டறி வேன் — அந்த
வண்டினைப் போல வகைதெரிந் தேஏதும்
வட்டிக்க நான்அறி யேன்.

உள்ளத்துத் தத்துவம் ஒவ்வொன்றும் கற்றோர்
உணர்த்திட நானுணர் வேன் — ஆனால்
கள்ளத் தனம்செயும் உள்ளத்தி னைமட்டும்
கட்டும் வகையறி யேன்

இத்தனை யும்அறி யாமல் இருப்பினும்
என்னையே நான்புகழ் வேன் — ஏதோ
மெத்தப் படித்திட்ட மேதாவி யைப்போல
மேதினி ஏய்த்திடு வேன் !

# தித்திக்கும் தேன்தமிழ்

இளங்கோவன்

வாயாலே கடித்துத்தின் றாலும், சாறாய்
  வடிகட்டிக் குடித்தாலும் கரும்பி னிக்கும்;
காய்மாறிப் பழுத்துவிட்ட கனியைப் பல்லால்
  கடித்தாலும் நறுக்கியுண்டா லும்சு வைக்கும் ;
சேய்ஒன்று பிறந்ததனால் மற்றச் சேயைத்
  தெருவினிலே விரட்டாது தாயின் பாசம் ;
ஓயாத உழைப்பாலே களைத்த போதும்
  உள்ளத்தில் நினைத்துவிடில் தமிழி னிக்கும்.

''தேன்'' என்றால் தித்திப்பு நாவில் வந்து
  சேர்வதில்லை; ''சருக்கரையே'' என்றால் கூட
வான்சுவையை உணர்வதில்லை; ''பணந்தான்'' என்றால்
  மாநிலத்தில் பிணங்களுமே எழுவ தில்லை;
''மீன்'' என்றால் உயிருடனே இருந்திட் டால்தான்
  வெண்கொக்கும் விரும்பிஇரை யாக்கும் ; ஆனால்,
நான் எங்கே இருந்தாலும் ''தமிழே'' என்றால்
  ஞாலத்தில் இனிமைவந்தென் இதயம் சேரும்.

பசும்பாலைப் பக்குவமாய்க் காய்ச்சி வாதாம்
  பருப்புடனே சீனியையும் கலந்தேன்; பின்னர்க்
கசப்பில்லா அமிழ்தம்போல் வேக மாகக்
  காலிசெய்து கிண்ணத்தை வைத்து விட்டேன் ;
தசைப்பருத்த உடல்போன்ற மலைவா ழையைச்
  சாப்பிட்டேன்; நாவில்சுவை கண்டேன் ; ஆனால்
வசப்படுத்த அவைகளினால் முடிய வில்லை
  வண்டமிழைப் படித்தேன் ; நான் மயங்கி விட்டேன்.

# பாவமுதே, கண்வளராய்!

கவிஞர் தே. ப. பெருமாள்

எம்மிதயத் தொட்டில்மிசை
இருந்தாடும் பூங்குயிலே!
பம்மிவரும் பொன்முகிலே!
பாவமுதே, கண்வளராய்!

பாட்டரவம் காற்றில்விடும்
பறவையினை இருள்துரத்தக்
கூட்டிலது வந்தமர்ந்து,
குதுகுதுப்பாய்த் துயில்கொளும்!

படபடத்த தேன்வண்டும்
பண்ணொலியைத் தாழ்த்தியதே;
தடம்தவழும் தாமரையும்
தான்குவிந்து தூங்கியதே!

வான்மதியும் தாரகையாம்
வனப்பொளிரும் மலர்வீசித்
தான்புரிந்த பூங்களியில்
தளர்ந்துதலை சாய்த்தனனே!

வெளிக்கதவம் அடைத்தேகம்
வேலைப்பெண் தாளிட்டாள்:
ஒளிமுகையே, நீ இன்னும்
உறங்காமல் இருப்பதுவோ?

வாசமலர்த் தென்றல்பெண்
வளர்ந்துவரும் சுகக்கனவை
ஆசையுடன் கொணர்ந்தனளே,
அதைப்பெறநீ, கண்வளராய்!

காலக் கரையோரம்
கண்டெடுத்த சுதந்திரத்தின்
கோலச் சுடர்க்கொழுந்தே!
கோமளமே, கண்வளராய்!

வீரர் பரம்பரையின்
வெற்றிக் குலவிளக்கே!
சீரான காந்தியுகத்
திருமணியே, கண்வளராய்!

கொடும்பகை மறைவிருந்தே
குதிபேயாய் வளையிடும்;
அடுந்திறல் வெற்றிக்கே,
அயர்வகற்றக் கண்வளராய்!

நிலவமுதும் சுவைத்தேனும்
நிறைஞானப் பிழிசாறும்
கலவையினில் காலையொலி
கவிகேட்கக் கண்வளராய்!

புதுத்தமிழ் இலக்கியத்தின்
பொற்பேழை திறந்தெடுக்கும்
நிதிகொள்ள, என்னிதய
நித்திலமே, கண்வளராய்!

கலைமகள் கீழ்த்திசையில்
காட்டவரும் பொன்முகத்தைப்
பாலகனே, நீகாணப்
படுத்தின்னே கண்வளராய்!

# கவிதை

என். ராகவன்

மந்திர வசியக் கவிதையினுல் — தமிழை
மாற்றியமைத்த பாரதி, என்
சிந்தையில் ஆயிரம் ஆயிரமாம் — கவிதைச்
சித்திரம் எழுதி எக்களித்தான்!

வண்ணக் குயிலைச் செதுக்கிவைத்தான்; — அதில்
வானத்தமுதைப் பதுக்கிவைத்தான்;
கண்ணம்மாவைப் படைத்தளித்தான் — என்னில்
கற்பனை வெறியை முடுக்கிவிட்டான்!

ஊனும் உயிரும் கிளுகிளுக்க — என் தன்
உள்ளில் புகுந்த கற்பனையால்
யானடைந்த இன்பலயம் — தனை
யாரிடம் சொல்லி மகிழ்வேனடா!

பல்கிப் பெருகும் கற்பனையை — அமுதப்
பாடல் வடிவில் வடித்தெடுத்துச்
சொல்ல முனைந்தேன் சொற்களில்லை — அந்தச்
சோகத் துடிப்பில் வெய்துயிர்த்தேன்.

காரிகை கற்றேன் கவிஎழுத — தொல்
காப்பியம் பயின்றேன் பாட்டியற்ற,
போகராதி உருப்போட்டேன், — அந்தப்
பெருமிதத்தில் கவிபுனைந்தேன்,

ஏடெடுக்கும் முன்னாலே — என்முன்
எதுகை வந்து குதித்ததடா!
பாடல் எழுதும் முன்னாலே — மோனை
பாய்ந்து வந்து நின்றதடா!

எழுதிய தெல்லாம் கவியாச்சு! — இப்போது
எண்ணிய தெல்லாம் பாட்டாச்சு!
பழுத்த கவிஞனாகிவிட்டேன்! - சொல்
பஞ்சமில்லை பாடுதற்கே!

சொற்கள் கூட்டம் சூழ்ந்துநின்று — நான்
சொல்லுங் கவியை நிறைத்தபின்னர்
கற்பனை வற்றி மறைந்ததடா! — ஐயன்
கவிதை எள்ளி நகைத்ததடா!

# மனப் பறவையே!

கவிஞர் இளங்கம்பன்

கனக்கின்ற உடலோடும், கவலையோடும்
கனவோடும் நினைவோடும் கலங்கு கின்ற
எனைத்தூக்கி எப்படியோ மேலே சென்று
எழிற்கோல வெள்ளத்தில் நீந்த வைத்து
புனைகவிதைப் பொருள் வழங்கிப் புளகத் தோடு
போய்வானில் சிறகடித்து வட்டம் போடும்
மனப்பறவை யே! நின்றன் செயலை எண்ணி
மருட்கையிலே கிடக்கின்றேன்; மீண்டேனில்லை.

மந்தையிலே தொடராத ஆவைப் போல
மாலையிலே இணையாத பூவைப் போலச்
சந்தையிலே விலைபோகாப் பொருளைப் போல
சார்பில்லா நிலையினிலே மயக்கத்தோடு
சிந்தையிலே சேர்வாழ்வுச் சுமையைத் தூக்கிச்
சிரமொடிய நிற்குமெனை எண்ணுக் கெட்டா
விந்தையிலே நீயுந்தான் கத்தரித்து
விண்ணெல்லாம் பவனிவரச் செய்கின்றாயே!

# என்றலும் சிறப்புறுவேன்

புலவர் ம. க. சிவசுப்பிரமணியன்

இருளகற்றும் ஒளியதனின் இயல்பு பற்றி
இருவிழியும் இல்லாத சிறியேன் எற்குத்
தெருளறவே செப்பிடுவீர்; தெய்வம் தந்த
தேட்டாகும் பார்வையினை அறியேன் ஐயா!
பொருளென்ன ஒளியென்றல்? படைத்தோ ஹும்யார்?
பொழுதெல்லாம் கண்டவற்றைப் பேசுகின்றீர்!
மருளறவே விழிப்பார்வை மாண்பை யெல்லாம்
மகிழ்ந்துரைப்பீர் ஒளியாமல் எளியே னுக்கே!

பகலோனும் பிரகாசக் கதிர்கள் வீசிப்
பாருக்கே வெளிச்சமதைப் பரிந்தே யீந்து
தகதகத்துத் திகழ்கின்றன் பின்னர் விண்ணில்
தண்ணிலவு வண்ணமுறும் தன்மை யாவும்
புகல்கின்றீர் எனக்கொன்றும் புரியவில்லை!
புடைசூழும் வெப்பத்தால் பகலை யோர்ந்தேன்!
பகலிரவைப் படைக்கின்ற கதிரோ னும்தான்
பார்ப்பதற்கே எவ்வாறு தெரிவான் சொல்வீர்!

கண்திறந்து விழிக்குங்கால், நண்ப ரோடு
கலந்துவிளை யாடுங்கால் பகலை யாக்கிக்
கொண்டேன்நான்; உறங்குங்கால் இரவைக் காண்பேன்'
கொடுத்துவைத்த தவ்வளவுதான், என்ன செய்வேன்?
மண்ணகத்தீர்! பெருமூச்சு விடுதல் கேட்டேன்.
முழுக்குருடாய் ஆதியிலே பிறந்தேன் என்ற
எண்ணத்தால் வருத்தமில்லை, இழப்பும் இல்லை;
என்றலும் ஊனத்தைப் பொறுத்துக் கொள்வேன்.

பிறப்பிலுள குறைபாட்டைப் பற்றி யென்பால்
பகராதீர்; பகர்ந்தாலோ இன்பம் குன்றும்!
துறந்துவிட்டேன் விழிநுகர்வு; அல்லும் நாளும்
துலங்குமெற்கு ஒன்றக! அந்த கத்தைப்
பெறலானேன் என்றலும் நட்புச் சூழப்
பேசுங்கால் இதழ்விரித்துப் பாடுங் காலும்
சிறப்புறுவேன், மன்னனெனச் செகத்தி ருப்பேன்!
சிரிப்புதிர்ப்பேன் விழியிழந்த சிறியேன் யானே!

("The Blind Boy" என்ற ஆங்கில கவிதையின் தழுவல்)

# "நீயிருக்கப் பயமில்லை"

கரூர் இரா. பாண்டுரங்கம்

நீயிருக்கப் பயமில்லை
நின்னருளுக் குறைவில்லை
தூயஅன்பிற் கெல்லையில்லை
துணையெனக்கு வேறில்லை

உடலெடுத்தேன் உலகினிலே
உண்மையென்ற நிலையறியேன்
கடவுளென்ற தத்துவத்தில்
கந்தய்யா உனையடைந்தேன்

தாயன்பே சிறப்பென்பார்
தவநிலையே பெரிதென்பார்
காயவுடல் தனைமறப்பார்
காணுமுந்தன் நிலையறியார்

நினையாமுன் பார்த்திருப்பாய்
நினைத்திடிலோ முன்வருவாய்
உனையன்றி உள்ளமதில்
ஓம்முருகா யாருமில்லை

# உலகம் வாழ...

தமிழ்ச் செழியன்

சிற்பத் தழகைக் காண்கின் றீர்
சித்தம் மயங்கிக் களிக்கின் றீர்
சிற்பம் வடித்துத் தந்தவனைச்
சிந்தித் திடவும் மறந்தீர் ஏன்?

கவிதை கண்டு களிக்கின் றீர்
கருத்துச் செறிவில் திளைக்கின் றீர்
கவிதை வடித்துத் தந்தவனைக்
கருத மறுத்தீர் ஏனையா?

ஆடை நெய்தான் நெசவாளி
அரையில் கட்டிக் கொண்டீரே
ஆடை நெய்து தந்தவனை
அடுத்து மதிக்க மறந்தீர் ஏன்?

பட்டை எடுத்தே உடுத்துகிறீர்
பட்டை உமக்குக் கொடுத்திட்ட
பட்டுப் பூச்சி பட்டதுயர்
பார்க்க மறுத்தீர் ஏனையா!

உழைப்பைக் கண்டு பாராட்டும்
உணர்வால் மட்டும் பயனில்லை
உழைப்போன் வாழ்வில் ஒளிவேண்டும்
உலகம் அன்றே வாழ்வுபெறும்.

# செந்தாமரை நீயோ?

எம். மாரிமுத்து

ஏழைக் கடலின் மகவாய்ப் பிறந்து
தென்றல் தாலாட்ட உறங்கி வளர்ந்து
குளிர்ந்த நிலவில் பெண்ணாக மலர்ந்து
துடிக்கும் அலையின் அணைப்பை மீறியே
துள்ளிக் குமுறி ஓடினாய் முகிலே!
உயிரும் உலரும் நிலைதனை கண்டோ
அழுது கண்ணீர் மழையென கரைந்தாய்?
பரந்த உலகை நோக்கி நடந்து,
குளத்தில் மேனி பார்த்து நாணி,
சோலையில் ஒளிந்து ஆடைதனை மாற்றி,
மலைகளே காப்பென மயங்கி நின்றாய்!
விலகி நின்றாலும் வீணர் கற்பனை,
காதல் கொள்ளும் கணப் பொழுதில்!
பாசம் கொண்ட உடன் பிறந்தார்
கலங்க கண்டு உச்சியில் நின்று
நீயேன் வீணில் விரதம் பூண்டாய்?
தர்மம் காக்க உன்னைக் கொடுத்து
சிந்திய உதிரம் ஓடிய அருவியில்
பூத்தது செந்தா மரையும் நீயோ?

### வங்க மாநிலத்திற் சிறந்து விளங்கும்

# வங்க இலக்கிய நிலையங்கள்

—[ "சோமலெ" ]—

★

**வங்காள சாகித்ய பரிஷத்:**

வங்க இலக்கியக் கழகங்களுள் ஒன்ருன இப் பரிஷத் 1893-ஆம் ஆண்டில் வட கல்கத்தாவில் மஹாராஜ வினய் கிருஷ்ண தேவரின் இல்லத்தில் "வங்காள இலக்கியச் சங்கம்" என்ற பெயருடன் நிறுவப்பட்டது. முதலில் இது ஆங்கிலம் வங்கம் ஆகிய இருமொழிகளிலும் இலக்கியச் செய்திகளைக் குறித்து ஆயும் சங்கமாக இயங்கியது. இப் பரிஷத் வங்கப் புலவர்கள், எழுத்தாளர்கள் ஆகியோர்களுடைய நூல்களில் 80000 நூல்களும், 6000 பழைமையான அரிய ஏட்டுச் சுவடிகளும் உள்ள ஓர் நூல் நிலையத்தைக் கொண்டுள்ளது. உலோகச் சிற்பங்கள், பழைய நாணயங்கள், படங்கள், சில பழம் புலவர்கள், எழுத்தாளர்கள் கையாண்ட பொருள்கள் முதலியன அடங்கிய காட்சி நிலையம் ஒன்றும் சாகித்ய பரிஷத்தில் இருக்கிறது.

1894-ஆம் ஆண்டில், வங்க சாகித்ய பரிஷத் என்ற இப்போதைய பெயருடன் இது வேருேரிடத்திற்கு மாற்றப்பட்டது. இதன் தற்போதைய முகவரி, 243—1, அப்பர் சர்க்குலர் ரோடு, கல்கத்தா-6 என்பதாகும். இப் பரிஷத் கட்டிடம் உள்ள மனை மஹாராஜா மனிந்திர சந்திர நந்தி என்பவரால் 1901-ஆம் ஆண்டில் நன்கொடையாக வழங்கப்பட்டது. கட்டிடத்தின் பாதி பாகம் லால்கோலா, ராஜா ஜோகிந்திர நாராயணன் ராய் அவர்களுடைய நன்கொடையால் கட்டப்பட்டது. வங்க மொழி இலக்கியங்களுள் பழைமையானதும், 66 ஆண்டுகள் நிரம்பியுள்ளதுமாகிய இப் பரிஷத் வங்க இலக்கியங்கள், காலசாரங்கள் பற்றி இன்றும் தொடர்ந்து கவனித்து வருகிறது.

இப் பரிஷத், புகழ் பெற்ற வங்க எழுத்தாளர் சிலருடைய நூல்களை வெளியிட்டதுடன், ஏட்டு வடிவத்தில் இருந்த பழைய வங்க நூல்கள் பலவற்றை உரை விளக்கத்துடன் வெளியிட்டும் உள்ளது. பரிஷத்தின் சார்பில் வரலாறு, இலக்கியம், கலாசாரம் ஆகியவற்றைக் குறித்து ஆராயும் பொருட்டு மாதக் கூட்டங்களும் நடைபெறுகின்றன. பரிஷத்தின் சார்பில் மூன்று மாதத்திற்கு ஒரு முறை வெளிவரும் வெளியீடு, வங்கப் பத்திரிகைகளுள் எல்லாம் பழைமையானது ஆகும்.

பரிஷத்தின் காட்சி நிலையம் 1924-ல் கட்டப்பட்ட ரமேஷ் பவன் என்னும் கட்டிடத்தில் இருக்கிறது. வங்க மாநில அரசாங்கம் அக்கட்டிடத்தைப் பழுதுபார்க்கும் செலவிற்காக 1955-ல் 10000 ரூபாய் நன்கொடை அளித்தது. வங்கமொழி இலக்கியங்களைக் குறித்து மற்ற மொழியினர் அறிந்துகொள்வதற்கும், மற்ற மொழிகளில் உள்ள இலக்கியங்களைக் குறித்து வங்க மொழியினர் அறிந்து கொள்வதற்கும் ஏற்ப நூல்கள் வெளியிடுதல், மொழிபெயர்த்தல் முதலிய செயல்களைச் செய்யப் பரிஷத் ஏற்பாடு செய்து வருகிறது.

**நிகில பாரத வங்கபாஷா பிரசார சமிதி:**

வங்க மொழி, வங்க இலக்கியம் ஆகியவற்றைப் பரப்பும் பணியில் ஈடுபட்டுள்ள குறிப்பிடத்தக்க ஸ்தாபனம் இது.

வங்காளிகள் அல்லாதவர்கள் வங்க மொழியைக் கற்பதற்கு உதவும் பொருட்டு வங்கமொழி வகுப்புக்களை இந்தச் சமிதி நடத்தி வருகிறது. நாட்டில் உள்ள பல பல்கலைக்கழகங்களிலும் வங்க மொழி, வங்க இலக்கியங்களைக் குறித்துச் சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்துவதற்கு இந்தச் சமிதி ஏற்பாடு செய்துள்ளது. பல பல்கலைக்கழக நூல் நிலையங்களுக்கும் வங்க மொழியில் அமைந்த அரும்பெரும் நூல்களை வழங்கியுள்ளது. இந்தச் சமிதியின் முயற்சியால் மேற்கு வங்காளத்திற்கு அப்பாலும் வங்க மொழிப் பயிற்சி ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டுள்ளன. அதற்காக இந்தச் சமிதிக்கும், மேற்கு வங்காள அரசாங்கத்திற்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வங்க இலக்கியப் பிரிவிற்காக ஒரு பதவியும் ஏற்படுத்தப்பட்டுவருகிறது.

இந்தச் சமிதி பாஷாபாரதி என்ற பெயருடன் ஒரு வெளியீட்டை மாதம் இருமுறை வெளியிட்டுவருகிறது. தமிழ் எழுத்தாளர்கள் வங்கமொழி வளர்க்கும் இவ்விரு சங்கங்களுடன் தொடர்பு கொண்டு தமிழ் மொழிக்கும், வங்க மொழிக்கும் இடையே கலாசாரப் பிணைப்பு வளர ஆவன செய்வார்கள் என்று நம்புகிறேன்.



# காந்தியடிகள் கற்ற குறள்

காந்தி அண்ணாமலை

★

**காந்தி அடிகள் செட்டி நாடு வருகை**

மகாத்மா காந்தியடிகளை நான் கண்டேன், பேசினேன், அவருடைய அறிவுரையைப் பெற்றேன் என்று சொல்லும் போதே எனக்கு ஒரு பெருமிதம் உண்டாகிறது. என்னுடைய வாழ்நாளில் நான் பெற்ற இணையற்ற பெரும் பேறாகவே அந்தக் காட்சியைக் கருதுகிறேன்.



திரு. காந்தி அண்ணாமலை

காந்தியடிகளுடைய பெருமை எங்கும் பரவிவந்த காலம் அது. அவர் தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். நான் அப்போது குழந்தைப் பிராயம் உடையவன். காந்தியடிகள் எங்கள் ஊராகிய பள்ளத்தூருக்கு அருகில் உள்ள கானாடு காத்தானில் வந்து தங்கினார். அவர் தினந்தோறும் காலையில் உலாவச் செல்வது வழக்கம். அந்த முறையில் கானாடு காத்தானிலிருந்து ஒரு நாள் காலை நடந்தே பள்ளத்தூர் வந்து விட்டார். உலாவ வந்தது மாதிரியும் ஆயிற்று. ஒரு புதிய ஊரில் உள்ளவர்களைத் திருப்திப் படுத்தின மாதிரியும் ஆயிற்றென்று எண்ணியிருந்திருப்பார் போலும்.

அவருடைய வருகையை அறிந்தே பள்ளத்தூர் அன்பர்கள் அவரை வரவேற்கச் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்தார்கள். ஒரு பெரிய மைதானத்தில் கூட்டத்துக்குத் திட்டம் செய்திருந்தார்கள். மகாத்மா வந்தார். அடேயப்பா! எத்தனை கூட்டம், நானும் கூட்டத்தோடு கூட்டமாகப் போனேன், அவருக்குமுன் தட்டுத் தட்டாகப் பழங்களைக் கொண்டுவந்து வைத்தார்கள். எல்லாவற்றையும் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கும்படி சொன்னார். தீண்டாமை ஒழிப்பைப் பற்றியே அன்று அவர் பேசினார்.

நான் சிறுபிள்ளை! அவர் பேச்சை கவனித்துத் தெரிந்துகொள்ளும் தகுதியில்லாதவன். ஆனாலும் சட்டை இல்லாமல் சரிகை அங்கவஸ்திரம் இல்லாமல் தலைப்பாகை இல்லாமல் உடம்பைத் திறந்து போட்டுக் கொண்டிருந்த ஒருவருக்கு இத்தனை கூட்டம் கூடுகிறதே என்ற வியப்பு மாத்திரம் உண்டாயிற்று. அவருடைய புன்முறுவல் பூத்த முகம் மாத்திரம் என்னுடைய இளைய நெஞ்சத்தில் நன்றாகப் பதிந்து விட்டது. அவருக்கு அருகில் சென்று அவரைத் தொட்டுப்பார்க்க வேண்டுமென்று ஓர் ஆவல் எழுந்தது. என்ன பைத்தியக்கார ஆசை! அந்தக் கூட்டம் எங்கே! நான் எங்கே? நெடுந்தூரத்தில் இருந்தபடியே அவரைத் தரிசிக்கும் பாக்கியம் மட்டும் அன்று எனக்குக் கிடைத்தது.

பள்ளத்தூரில் அவரைப் பார்த்த பிறகு நான் பர்மாவுக்குச் சென்று விட்டேன். அங்கே நான் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தேன். அப்போது ஒரு முறை பர்மாவுக்கு மகாத்மா வந்தார். அப்போது கூட நெடுந்தூரத்திலிருந்துதான் பார்க்க முடிந்தது. ஆனாலும் அவரைப்பற்றி நான் அதிகமாக உணர்ந்து கொண்டேன். நான் காங்கிரஸ் நிகழ்ச்சிகளை யெல்லாம் பிறர் வாயிலாகக் கேட்டுத் தெரிந்து கொண்டேன். அந்தக் காலம் முதற்கொண்டு எனக்கு காந்தி என்றால் தெய்வம். கதர் ஆடையையே அணிந்தேன். கதர்க் குல்லாய்களைப் பலருக்கு வாங்கிக்கொடுத்தேன். எப்படியோ என்னை எல்லோரும் காந்தி அண்ணாமலை என்று அழைக்கத் தொடங்கினார்கள். அதற்கு முன் நான் வெறும் அண்ணாமலைதான்.

நான் மீண்டும் இந்தியாவுக்கு வந்தேன். ஒரு சமயம் மகாத்மா காரைக்குடிக்கு வந்தார். அப்போது நான் காங்கிரஸ் தொண்டன், காந்தியடிகள் தங்கியிருந்த இடத்தில் நான் ஒரு காவலனாக இருந்தேன். ''அவர் தூங்குகிறார், இப்போது போகக் கூடாது, அவர் பிரார்த்தனை செய்கிறார், இப்போது உள்ளே விடமாட்டோம்'' என்று சொல்வது என்வேலை. அப்போது மகாத்மாவை அருகிலிருந்து பார்க்கும் பேறு எனக்குக் கிடைத்தது.

கூட்டுறவே நாட்டுயர்வு!

A. 1663, ஆண்டிப்பட்டி
கூட்டுறவு பண்டகசாலை லிட்.,
ஆண்டிப்பட்டி. :: மதுரை ஜில்லா.

எங்களது கூட்டுறவு பண்டகசாலையில் உயர்தரமானமில், கைத்தறி & பட்டு ஜவுளிகளும், மேட்டூர் மல் & லாங்கிளாத் ஜவுளிகளும், பல சரக்கு மளிகை சாமான்களும், உணவுப் பொருள்களும் மொத்தமாகவும், சில்லரையாகவும், விலை சகாயமாய்க் கிடைக்கும்.

உயர்தரமான சங்கர் மார்க் போர்ட்லண்டு சிமெண்ட், பெர்மிட்டின் பேரில் சப்ளை செய்யப்படும்.

● மேலும் மதராஸ் ஷாவாலஸ் கம்பெனியின் நக்ஷத்திர மார்க் கலப்பு உரங்களும் கிடைக்கும்.

சுமார் 21 வருட காலமாக, இந்த கூட்டுறவு பண்டகசாலையின் மூலமாக பொதுமக்களுக்கு நாங்கள் சேவை செய்து வருகிறோம்.

இப்படிக்கு,

V. நடராஜன், காரியதரிசி.

M. வீரப்பன் செட்டியார், தலைவர்.

இந்த நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் விடச் சிறப்பானது, நான் இன்று நினைத்தாலும் எனக்கு ஒரு தனியான கிளர்ச்சியை உண்டாக்குவது இனிச் சொல்லப் போவதுதான்.

திரிபுராவில் காங்கிரஸ் நிகழ்ந்தது. அதற்கு காந்தியடிகள் வரவில்லை, அவர் ராஜ்கோட்டில் உபவாசம் இருந்தார். அவரைக் காணாதது எனக்குப் பெரிய ஏமாற்றமாக இருந்தது. ஆனாலும் அவர் வசிக்கும் சேவா கிராமத்துக்காவது போய்ப்பார்த்துவிட்டுப் போகலாம் என்று எண்ணினேன். அதற்கு வாய்ப்பாக ஒருவேலையும் அங்கே இருந்தது. எங்கள் பக்கத்துப் பையன் ஒருவனை வார்தாவிலுள்ள நயிதாலிம் சங்கத்தில் சேர்க்க வேண்டியிருந்தது. ஆதலின் திரிபுராவிலிருந்து வார்தா சென்றேன். சேவா கிராமம் போனேன். அந்தப் பையனை அங்கே சேர்த்தேன். அப்போது அங்கே இருந்த அசோக்பாபுசௌதிரி என்பவர் எனக்கு பழக்கமானார். காந்தியடிகளைப் பார்த்துப் பேசவேண்டும் என்று இந்த என்னுடைய ஆர்வத்தை அவரிடம் சொன்னேன். அவர் பின் ஒரு முறை வந்தால் ஆறுதலாகப் பேசலாம் என்று சொன்னார். காந்தியடிகள் தங்கும் குடிசையையும் அதன் சுற்றுப்புறங்களையும் பார்த்துவிட்டு வந்துவிட்டேன்.

மறுபடியும் பர்மாவுக்குச் சென்று அங்கேயே தங்கிவிடுவது என்ற உறுதியோடு பயணத்துக்கு ஏற்பாடு செய்தேன். அதற்குமுன் தமிழ்நாட்டுப் பெரியோர்களையும், அகில இந்தியத் தலைவர்களையும் தரிசித்து அவர்களுடைய ஆசீர்வாதத்தைப் பெறவேண்டும் என்பது என் ஆசை. முக்கியமாக மகாத்மா காந்தியை இந்த முறை அவசியம் பார்த்துவிட்டுதான் பர்மா போக வேண்டும் என்ற ஆர்வம் கட்டுக்கடங்காமல் இருந்தது. சென்னைக்கு வந்து தமிழ் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களையும், தமிழ்க் கடல் மறைமலையடிகளையும், தமிழத் தந்தை திரு. வி. க. வையும் தரிசித்து ஆசிபெற்றேன். பிறகு வார்தாவை நோக்கிப் புறப்பட்டேன்.

மகாத்மாவைக் கண்டால் இன்ன இன்னபடி நடக்கவேண்டும், இன்ன இன்ன கேள்விகளைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று பிறமாதமாக யோசனை செய்துகொண்டே போனேன். ஆசைக்கு அளவுண்டா?

வார்தாவில் போய் இறங்கினேன். சேவா கிராமத்தையும் அடைந்துவிட்டேன், அப்போது மாலை நேரம். அப்போதே காந்தியடிகளைப் பார்க்க விரும்பினாலும் மறுநாளும் இருந்து நிதானமாகப் பார்க்கலாம் என்ற எண்ணத்தால் அப்படிச் செய்யவில்லை. திரு. அசோக் பாபு சௌதிரி எங்களுக்குத் தங்க இடங்கொடுத்தார். காலையில் காந்தியடிகளைக் காணலாம் என்று சொன்னார்.

எனக்கு இரவு தூக்கம் லேசில் வரவில்லை. மறுநாள் மகாத்மாவைக் காணப்போகிறோம் என்ற உணர்ச்சியில் மிதந்தேன். ஆனால் பிரயாணம் பண்ணின அலுப்பினால் துயில் மெல்ல என்னை வந்து தழுவியது.

## தேடிவந்த தெய்வம்

விடிந்தது. எழுந்தேன். காலைக் கடன்களை முடித்துக்கொண்டு நான் தேடிவந்த தெய்வத்தைத் தரிசிக்கப் புறப்பட்டேன். அன்பர் சௌதிரி அவர்கள் உடன் வந்தார். நாங்கள் போகும் நேரம் காந்தியடிகள் உலாவப் புறப்படும் நேரம் ஆனாலும் அமர்ந்து எங்களை வரவேற்றார் அந்தப் பெருமான். நான் செட்டிநாட்டிலிருந்து வந்திருப்பதைச் சௌதிரி பாபு சொன்னார். காந்தியடிகள் என்னுடைய ஊரைப் பற்றிக்கேட்டார். நான் சொன்னேன். பர்மாவுக்குப் போக இருப்பதைப் பற்றியும் கூறினேன்.

உலாவப் புறப்படும் நேரம் என்பதை மகாதேவ தேசாய் அங்கே வந்து தம் கண் பார்வையால் குறிப்பித்தார். நான் அதை உணர்ந்து கையெழுத்து ஒன்று வேண்டுமென்று என்னிடமிருந்த சிறு குறிப்புப் புத்தகத்தைப் துணிவுடன் நீட்டினேன்.

''பணம் கொடுத்தால்தான் போடுவேன் என்பது தெரியுமா?'' என்றார்.

''நன்றாகத் தெரியும்'' என்றேன்.

''ஐந்து ரூபாய் ஹரிஜன நிதிக்குத் தரவேண்டும் தெரியுமா?'' என்றார்.

''அப்படியே தருகிறேன், ஆனால் ஒரு சிறிய வேண்டுகோள்.''

''என்ன?''

''தாங்கள் தென்னாப்பிரிக்காவில் இருந்தபோது தமிழ் எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டதாக எழுதி

யிருக்கிறீர்களே. தயவுசெய்து தமிழிலே கையெழுத்துப் போட்டுத் தரவேண்டும்'' என்று சொன்ன போது அவர் புன்னகை பூத்தார்.

''அப்படியா? அப்படியானால் இன்னும் ரூபாய் கூடத் தரவேண்டும்'' என்றார்,

''நான் பர்மா போகிறேன். சிக்கனமாகச் செலவு பண்ணவேண்டியவன், நான் பணக்காரன் அல்ல.'' கல்கத்தா வழியாகப் போகிறேன் என்றேன்.

''கல்கத்தா பெரிய ஊர். ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். கண்டபடி செலவழித்தால் பாங்க்ரப்ட் ஆகிவிடுவாய்'' என்று கூறினர்.

பிறகு ''பணம் கூடத் தந்தால்தான் தமிழில் கையெழுத்துப்போடுவேன்', என்றார்.

என் மடியில் வைத்திருந்த பர்ஸ் அப்போது நழுவிக் கீழே விழுந்தது. அது எப்படி விழுந்தது. ஏன் விழுந்ததென்று எனக்குத் தெரியவில்லை.

''பார்த்தாயா! பணம் தானே உன்னிடமிருந்து நழுவி எனக்கு வரப்போகிறது. ஆறு ரூபாய் தந்துவிடு'' என்று சொல்லி சிறித்தார்.

எனக்குத் தெரியும் அது அதிகம் என்று. ''அப்படியானல் எனக்கு ஏதாவது ஒரு நீதியும் சேர்த்து எழுதித் தாருங்கள்'' என்று விடாப்பிடியாகப் பேரம் செய்தேன்,

''சரி'' என்று சொல்லிக் கையெழுத்தும் புத்தகத்தில், ''நீரில் எழுத்தாகும் யாக்கை'' என்று எழுதி அடியில் மோ. க. காந்தி என்று கையெழுத்திட்டார். என் காரியம் பலித்தது என்று எனக்கு உள்ளூற அளவற்ற களிப்பு உண்டாயிற்று.

''இது குறள் தானே?'' என்று கேட்டார் காந்தியடிகள். குமர குருபர முனிவர் பாடிய நீதி நெறி விளக்கத்தில் உள்ள ஒரு பாட்டின் ஓர் அடி அது. ஆனாலும் மகாத்மா என்றே படித்த அதை நினைவில் வைத்துக் கொண்டு எழுதினரே, அதுவே பெரிதல்லவா? நான் குறள் என்று சொல்லவில்லை, பேசாமல் இருந்தேன். ''இதற்குப் பொருள் உனக்குத் தெரியுமோ?'' என்று கேட்டார்,

தெரிந்தாலும் அவரிடம் தெரியும் என்று சொல்லத் தைரியம் வரவில்லை. தெரியாது என்று சொன்னேன். அவர் நீரில்—எழுத்து—ஆகும்—யாக்கை என்று ஒவ்வொரு சொல்லாக எடுத்துச் சொல்லி அதற்குப் பொருள் சொன்னர். காந்தியடிகளை அந்தக் கணத்தில் எனக்கு ஆசிரியராகப் பாவித்து, எனக்குக் கிடைத்த பேற்றை எண்ணி உணர்ச்சிப் பெருக்கில் ஆழ்ந்தேன்.

மகாதேவ தேசாய் மீண்டும் உலாவப் போக வேண்டுமென்பதைக் குறிப்பித்தார். காந்தியடிகள் உடனே எழுந்தார். உலாவப் புறப்பட்டுவிட்டார். அந்தக்கூட்டத்தில் முன்னே கையில் கம்பு ஒன்றைத் தாங்கித் திருமதி மீராபென் நடந்தார். பின்னே காந்தியடிகள் சென்றார். உடன் சிலர் சென்றார்கள்.

அவர்களுடன் நானும் போனேன். அப்பா! என்ன வேகமாக நடந்தார் அந்தக் கிழவர்! இரண்டு மைலுக்கு மேல் நடந்து திரும்பினர். அதுவரை சென்று நின்றேன். பாரதநாட்டைச் சுதந்திர வாழ்வுக்கு வேகமாக அழைத்துச் சென்ற அந்த மகானுடைய நிமிர்ந்த நடையிலே இருந்த காம்பீர்யத்தை என்னவென்று சொல்வேன் அந்த நடையில் உள்ள ஒழுங்கைச் சொல்வேனு! வேகத்தைச் சொல்வேனு?

நான் சேவா கிராமத்தை விட்டுப் புறப்பட்டேன். பர்மாவை அடைந்தேன். பாரத தேசந்தன்னை வாழ்விக்க வந்த காந்தி மகாத்மாவின் திருக்கரத்தால் எழுதித்தந்த அந்த அழகிய நீதி நெறி விளக்க அடியும் அவருடைய தமிழ் கையெழுத்தும் நான் என்றும் போற்றும் மாமணியாகத் திகழ்கின்றன. நீரில் எழுத்தாகும் யாக்கை என்று அவர் எழுதித் தந்தது உண்மை தான். ஆனல் அந்த மகானுடைய உருவம் உள்ளத்தே நான் பதித்துக்கொண்ட திருமேனி இன்றும் மங்கா ஓவியமாக இருக்கிறது. 'நீரில் எழுத்தாகும் யாக்கை' என்றுதான் எழுதித் தந்தார். ஆனல் நேரில் அவர் எழுதிய அவ்வெழுத்து இன்றும் என்னிடம் இருக்கிறது. அதை நிழற்படம் எடுத்துப் பல அன்பர்களுக்குக் கொடுத்து மகிழ்கிறேன். எனக்கு அந்த எழுத்தில் மகாத்மா காந்தி இன்னும் வாழ்கிருர்.

குங்குமப்பூ
55 வாசனை 55
புகையிலை

55
REGD No. 201384
குங்குமப்பூ
A.V.P&SONS.TRICHI.2
வாசனைப் புகையிலை

இரண்டு நயாபைசா பொட்டலங்களாக எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பாளர்:— A. V. பொன்னையா நாடார், & சன்ஸ், மலைவாசல், திருச்சி-2.

## தேசீய நூல் நிலையத்தில் தமிழ் நூல்கள்:

# சில சொந்த நினைவுகள்

**பி. என். வெங்கடாச்சாரி**

★

என் வாழ்க்கையில் முதன் முறையாக தேசீய நூல் நிலையத்திற்குள் 1953-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஒரு நாள் நான் நுழைந்தேன். வாசகனாக அல்லாமல் உத்தியோகஸ்தனாக. இந்த நூல் நிலையம் எவ்வளவு பெரியது, தேசத்துக்கு இதன் அவசியம் எத்தகையது என்பதை எல்லாம் அப்போது நான் அறியேன். அவ்வளவு பிரம்மாண்டமான ஒரு நூல் நிலையத்தை அதற்கு முன் கண்டிராத எனக்கு பிரமையே பிடித்துவிட்டது. பெருத்த முகப்பு ஹாலும் அதைத் தாண்டி விஸ்தாரமான படிப்பறையையுமாக, சரித்திரப் பிரசித்தி பெற்ற "பெல் வெடியரில்" அமைந்த அந்நூல் நிலையம் எனக்கு மலைப்பையே தந்தது. அந்த நூல் நிலையத்தில் நானும் ஒரு உத்தியோகஸ்தனுனே என்கிற பெருமை உள்ளூற. என்னையும் அப்போதைய நூல் நிலைய அதிகாரியையும் தவிர வேறுயாரும் தெற்குக் கோடியிலிருந்து வந்தவர்களில்லை. என் சகாக்கள் மிக்க அன்புடன் என்னை வரவேற்ருர்கள். நூல் நிலையத்தைச் சுற்றி என்னை அழைத்துப் போனுர்கள். சுற்றிலும் ஏராளமான புத்தகங்களை எதிர்பார்த்த எனக்கு வியப்பே காத்திருந்தது. படிப்பறை அலமாரிகளில் சில ஆயிரம் நூல்களே இருத்தன. மற்ற குவியல்கள் எங்கிருக்குமோ என்று வியந்தேன். பின்னர் என்னை வளைந்த படிக்கட்டுகளின் வழியே படிப்பறையின் கீழிருந்த நிலவறைக்கு அழைத்துச் சென்ருர்கள். இறங்கும்போதே கும்பல் கும்பலாக நூல்கள் கண்ணில் பட்டன. மிகப் பெரிய நிலவறை அது. முன்னுளில் வைசிராய்களின் சாப்பாட்டறையாக அது இருந்ததாம். அவ்வளவு பெரிய ஹாலைக் காண்பது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. வங்காளப் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டதும் அங்கு 20,000 க்கு மேற்பட்ட நூல்கள், எல்லாத் துறை பற்றியும், சேகரிக்கப்பட்டிருப்பதாகவும் வங்காள இலக்கியத்தில் அதுபோன்ற குவை பிறிதில்லை என்றும் அறிந்தேன். என் மொழியின் நிலை என்ன, குறைந்தது சில ஆயிரங்களாவது இராதா என்று எண்ணியவனுய்த் துழாவினேன். அந்தோ! 200–க்கு மேற்படாத சிறு குவையே எனக்குக் காட்டப்பட்டது. தேசீய நூல் நிலையத்தில் என்ருவது ஒரு நாள் என் மொழியின் 10,000 புத்தகங்கள் சேராதா என்று ஏக்கமே எழுந்துவிட்டது. ஆர்வத்தோடு அந்தக் குவையை ஆராய்ந்தபோது அவை வெவ்வேறு பஞ்சாங்கங்களின் பதிப்புகளும், அரசாங்க அறிக்கைகளும், மதராஸ் பல்கலைக்கழகத்தின் முக்கியமான சில நூல்களுமே என்று கண்டேன். இது போதாது என்று தோன்றியது. ஆனுல் அப்போது ஒரு விஷயம் எனக்குத் தெரியாது. உலகில் எந்த நூல் நிலையமும் பெருமையுடன் சேகரிக்க விரும்பும் சில அருமையான நூல்கள் அங்கு இருந்தன என்பதுதான் அது.

அங்கு ஆங்கிலப் பகுதியில் நான் வேலை பார்த்த முதல் சில மாதங்களில் தேசீய நூல் நிலையத்தின் குறிக்கோளை அறிந்துகொண்டேன். மிகக் குறுகிய காலத்திற்குள் பாரத அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட மொழிகள் அனைத்திலுமுள்ள எல்லா நூல்களையும் விலை கொடுத்து வாங்கியும், நன்கொடை வாயிலாயும் சேகரித்து விடவேண்டும் என்பதே அது. பின்னர் அடுத்த சில ஆண்டுகளில் தமிழ்ப் பகுதியை விஸ்தரிக்க வேண்டிய பொறுப்பு எனக்கு வந்தது. அரசாங்கத்தின் தாராள உதவியால் மொழி நூல் சேகரிப்பு மெல்லப் பெருகலாயிற்று. தேசீய நூல் நிலையம் உண்மையாகவே தேசீய தகுதியைப் பெறலாயிற்று. பல்வேறு இந்திய மொழிகளிலும் நூற்களைச் சேகரிப்பதில் தேசீய நூல் நிலையம் குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றதற்கு முக்கியகாரணம் அதன் நூல் நிலைய அதிகாரி திரு. பி. எஸ். கேசவனே எனலாம். நூற்களைச் சேகரிப்பதில் தனக்குள்ள ஆர்வத்தைப் பார்த்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டும். இத்தகைய மேதையின் கீழ் பணி புரியும் பேறு இக்கட்டுரை ஆசிரியனுக்கு கிடைத்தது. தெற்கிலிருந்து பிரமுகர்கள் வரும்போதெல்லாம், அவர்களுக்கு அவர் விடுக்கும் வேண்டுகோளைக் காணும் வாய்ப்பும் கிடைத்தது. தமிழ் நூல்களைப் பொறுத்தவரை, அவருடைய முயற்சி வீணுகவில்லை.

நூற்களைச் சேகரிப்பதில் முக்கிய சங்கடம் என்னவென்ருல், தமிழில் உள்ள நூல்கள் பற்றிய விரிவான, சரியான பட்டியல் இல்லாததேயாகும். இத்துடன் தமிழ் நாட்டில் எந்த நூல் நிலையத்திலும் அச்சேறிய தமிழ் நூற்கள் அனைத்தும் இல்லை. ஜி. யு. போப் அவர்களால் 1909-இல் ஆக்கப்பட்ட பிரிட்டிஷ் மியூஸியம் பட்டியல்களையும் அதன் துணை நூலாக 1932-ல் எல். டி. பார்னெட் அவர்களால் ஆக்கப்பட்ட நூலையும் தவிர நூற்களை தேர்ந்தெடுக்க வேறு குறிப்பேடுகள் இல்லை. தமிழ் நாட்டிலுள்ள பிரசுரகர்த்தர்களிடமிருந்து இப்பால் வெளியான நூற்கள் அனைத்தையும் விரைவில் சேகரித்துவிட்டோம். அப்போதும் கூட 1900–க்கு முன்பு வெளியான நூல்களின் கதி மாருதிருந்தது. அகஸ்மாத்தாக இக்கட்டுரை ஆசிரியன் சென்னையில் ஒரு குறிப்புப் புத்தகத்தைப் பார்க்க நேர்ந்ததால், சில முக்கியமான நூல்களைக் காண முடிந்தது. இந்த ஆதாரத்தைக் கொண்டு, 2000–க்கு மேற்பட்ட மிக அபூர்வமான பழைய நூற்கள் வாங்கப்பட்டன. 19–ம் நூற்ருண்டில் வெளியான பல இலக்கியங்களும், இலக்கண நூல்களும், தாண்டவராய முதலியாரால் 1825–இல் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட பஞ்சதந்திரக் கதை, பெஸ்கியின் சதுரகராதி (1860), சுப்பராயசெட்டியார் என்பவரால் தொகுக்கப்பட்ட சிலப்பதிகாரத்தின் முதற் பதிப்பும்

(1876) பல ஆசிரியர்களால் தொகுக்கப்பட்ட நன்நூல், தொல்காப்பியம், சங்க நூல்களும் சேகரிக்கப்பட்டவைகளில் குறிப்பிடத்தக்க நூல்களாகும். இத்தகைய அரிய சேகரிப்புப் பிறகும் "காந்தி சகாப்தம்" எனப்படும் காலத்தில் வெளியான நூல்கள் முழுதாகத் கிட்டவில்லை. எனவே தேடும் படலம் துவங்கிற்று. இச் சந்தர்ப்பத்தில்தான் திரு கொடுமுடி ராஜகோபாலன் வந்து சேர்ந்தார், நூல் நிலைய அதிகாரியின் வேண்டுகோளுக்கு உடனே இணங்கி வெளியே கிடைக்காத நூல்களைச் சேகரிப்பதில் துணை புரிவதாக அவர் கூறினார். இதைத் தொடர்ந்து கட்டுரை ஆசிரியன் சென்னை வந்ததும் திரு. கொடுமுடி ராஜகோபாலன் மூலம் சுமார் 600 புத்தகங்கள் வரை கிடைத்தன. விடுதலைக் காலத்துக்கு முன்னுள்ள காலத்தில் சிறந்த நூல்கள் அவை. முதல் முதலாக வெளியான மகாகவி பாரதியின் நூல்கள், தினமணி காரியாலயம், மணிக்கொடி பிரசுரம், நவயுகப் பிரசுராலயம், சக்தி காரியாலயம் ஆகியவற்றால் வெளியிடப்பட்ட நூல்கள் – இவற்றின் கதைப் புலன்கள் எல்லாம் அக்கால அரசியல் சூழ்நிலையே – குறிப்பிடத்தக்கவை. நல்ல அச்சும் அமைப்புமாக அவற்றில் பல இயங்கின. கொடுமுடி ராஜகோபாலனுடன் கொண்ட இத் தொடர்ப்பு மூலம் இப்பால் "வையாபுரி பிள்ளை சேமிப்பு" என வழங்கும் மிகச் சிறந்த நூற்சேமிப்பு சாத்தியமாயிற்று. காலஞ்சென்ற பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் புதல்வி திருமதி சரோஜினி மூலம் இக் குவை கிடைத்தது நூல் நிலையத்தின் பாக்கியமே. அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் மாநாட்டையொட்டி நூல் நிலையத்தின் முன் அமைந்த அலங்காரப் பந்தலில் கல்கத்தா நகரப் பிரமுகர்கள் பலர் முன்னிலையில் இந் நூற்களின் அன்பளிப்பு விழா 1960 நவம்பர் 12–ல் நடைபெற்றது. நாடெங்குமுள்ள எல்லாப் பத்திரிகைகளும் இந்த அரிய அன்பளிப்பை வெளியிட்டுப் பெருமைப் படுத்தின.

1960–நவம்பர் 13-ஆம் தேதி நடைபெற்ற அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் அமைப்பு மாநாட்டிற்கு வருகை தந்த திருச்சித் தமிழ் எழுத்தாளர் சங்கத்துத் தலைவர் திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் மிகப் பழைமையான இலக்கிய அரசியல் வாரமாதப் பத்திரிகைகளின் பயிண்டு வால்யும்கள் பலவற்றை தேசிய நூல் நிலையத்திற்கு நிலைய அதிகாரி திரு. பி. எஸ். கேசவன் அவர்களிடம் அளித்து மகிழ்ந்தார்கள்.

"யுகங்களினூடே தமிழ் இலக்கியம்" என்னும் பொருட்காட்சி நூல்நிலையத்திலுள்ள தமிழ் இலக்கியப் பகுதியின் சிறப்பைப் பொது மக்கள் அறிய உதவிற்று. தமிழ்ப்பகுதிக்கு வையாபுரிப் பிள்ளையின் பெயரால் வழங்கப்பட்ட நூற்குவை பெரும் சிறப்பைத் தருவதாயிற்று. சேர்க்கப்பட்ட 3380–க்கு மேற்பட்ட நூற்களில் 1299 தமிழ் நூல்கள். 248 கையெழுத்துப் பிரதிகளும் நூல் நிலையத்துக்குக் கிடைத்தன. வையாபுரிப் பிள்ளையால் தொகுக்கப்பட்ட தமிழ் இலக்கிய, இலக்கண நூற்கள் 36 இருந்தன. சிறு மாறுதல்களோடு இவை அச்சேறலாம் (அறுவகை உரைகளுடன் பிங்களந்தை, பதிற்றுப்பாட்டுக்கு முதற் சொல்லகராதி, அகராதி மோனை, அகராதி எதுகை, உரிக்கோள் நிகண்டு முதலியன அவற்றுட் சில.) ஓலைச் சுவடிகளில் கம்ப ராமாயணப் பாடல்களும், கலையகராதிக்குத் தேவையான ஆதாரங்களைக் கொண்ட ஓலைச் சுவடிகளும் இத் தொகுப்பில் காணப்பட்டன. இவற்றுடனும் சேர்ந்து தமிழ்ப் பகுதியில் 8000-க்கு மேற்பட்ட நூற்கள் சேர்ந்துவிட்டன.

இப்பால் அண்மை ஆண்டுகளில் நூல் நிலையத்தின் தமிழ்ப் பகுதியின் தலைவராய் பணிபுரிந்து வரும் இளைஞரும், உற்சாகமான உழைப்பாளியுமானவருமான நண்பரால் குறிப்பிடத்தக்க நூல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. அவரது முயற்சியகளால் தமிழ்ப் பகுதியின் வறுமை நிலை வெகுவாக மாறிற்று. சென்ற ஆண்டில் காரைக்குடியிலுள்ள ராஜா முத்தையா என்பவரிடமிருந்து 2000-க்கு மேற்பட்ட நூற்கள் வாங்கப்பட்டன. சிவக் கொழுந்து தேசிகரால் 1832–ல் முதல் முதலாக வெளியிடப்பட்ட திருவாசகம் இத் தொகுப்பில் கிடைத்த விலை மதிக்க முடியாத நூலாகும். அம்மானை, பள்ளு, பரணி, கலம்பகம் என்பனவற்றில் உள்ள எல்லாமே இத் தொகுப்பில் இருந்தன.

1954–இல் வெளியான நூல் நிலையச் சட்டத்தால் நூல் நிலையத்துக்கு பிரசுரமாகும் எல்லா நூல்களும் அவற்றோடு தமிழ் நூல்களும் கட்டாயமாகச் சேர வேண்டியவையாகியிருக்கின்றன.

**அச்சேறிய பழைய நூற்கள்:**

கட்டுரையை முடிக்கு முன்பு, நூல் நிலையத்திலுள்ள அச்சான பழைய நூல்களைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். முன்னர் குறிப்பிட்டதுபோல, இவற்றில் சிலவற்றைச் சேகரித்தது நூல் நிலையத்தின் அதிர்ஷ்டமே ஆகும். தரங்கம்பாடியிலிருந்த டேனிஸ் மிஷனைச் சார்ந்த வீகென் பால்க் என்பவரால் தமிழாக்கப்பட்ட பைபிள் நூலே முதன் முதல் அச்சேறிய தமிழ் நூல். "பிப்ளியா டெமுலிகா" என்பது அதன் பெயர். தொட்டிற் பருவங் கடந்த தமிழ் அச்சுக் கலைக்கு அற்புதச் சான்று அது. டேனிஸ் மிஷன் அச்சுக் கூடத்தில் அது அச்சிடப்பட்டது. அதற்கு அடுத்ததாக வருவது, ஜான் பனியனின் 'ரக்ஷணீய யாத்ரீகம்' தமிழ் மொழிபெயர்ப்புடன் வெளியானது (1797). ஒருபுறம் ஆங்கிலமும் எதிரே தமிழ் மொழி பெயர்ப்புமாக அந்நூல் அச்சாகியுள்ளது. முதன் முதலாக வெளியான குறளும் நூல் நிலையத்தில் இருக்கிறது (1840). டபிள்யூ. எச். ட்ரூலின் ஆங்கில மொழி பெயர்ப்புடன் அடுத்து வெளியான நூல்களில் முக்கியமானது ஆங்கில தமிழ் அகராதி. சென்னைக் கருகிலுள்ள வேப்பேரியில் 1793–ல் பேப்ரிஷஸ் என்பரால் இது அச்சிடப்பட்டதாகும்.

இப்போதுள்ள நிலையில், தமிழ் இலக்கிய மாணவர்களும், மொழி யாராய்ச்சியாளர்க்கும், அச்சுக்கலையினருக்கும் நல்ல ஆராய்ச்சி தரக் கூடிய அளவுக்கு தேசீய நூல் நிலையத்தில் சேமிப்பு இருக்கிறது. காலம் செல்லச் செல்ல, இந்த அளவு பெருகி தமிழ்ப் புலவர்களை ஈர்க்கு மென்பதில் சந்தேகமில்லை.

—★—

# ஜீவ சங்கமம்

★

"தேவிகா"

"தாத்தா, அம்மா உங்களைச் சாப்பிடக் கூப்பிடரு."

கூடத்தில் சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டிருந்த கிழவரின் சிந்தனை கலையவில்லை. விட்டத்தில் சூன்யத்தையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தார். சூன்யம்! சூன்யம்! எங்கும் ஒரே சூன்யம்தான். ஆமாம். அவருக்கு இனி வாழ்வில் என்ன இருக்கிறது? அவர் சிரித்தால் தானும் சிரித்து, அவர் முகம் சிறிது வாடினாலும் பதைபதைக்கும் ஜீவன் அவரோடு இந்த நாற்பதாண்டுகளாக உறவாடிய உயிர், அவரை விட்டு ஒவ்வொரு வினாடியும் நழுவிக்கொண்டேயிருக்கிறது. இன்றிரவோ அல்லது நாளையோ அவள் ....... ஐயோ! அதன் பிறகு...... அதன்பிறகு அவர் என்ன செய்வார்? சுந்தரேசய்யரின் உடல் நடுங்கியது. உடம்பைச் சிலிர்த்துக்கொண்டார்.

"தாத்தா, அம்மா உங்களைச் சாப்பிடக் கூப்பிடரு." ராஜீ இன்னும் நின்றுகொண்டுதான் இருந்தான்,

எனக்கு ஒன்றும் வேண்டாம். நீ போய்ச் சாப்பிடுடா ராஜு. அதற்குள் அவர் மருமகளே வந்து விட்டாள். கஞ்சியாவது கொஞ்சம் சாப்பிடுங்கள். வயதான காலத்தில் இப்படி பட்டினி கிடந்தால் உடம்பு தாங்குமோ?" என்று அடக்கத்துடன் புடவைத் தலைப்பை இழுத்திப் போர்த்திக்கொண்டு கதவருகில் இருந்தபடியே கேட்டாள்.

" இல்லையம்மா. என்னைத் தொந்திரவு செய்யாதே. இப்போது எனக்குப் பச்சைத் தண்ணீர் கூட இறங்காது."

அவள் சற்றுநேரம் நின்று பார்த்துவிட்டுப் போய்விட்டாள். அப்பா! எப்படியிருந்த உடம்பு! வஜ்ரம் போலே! அறுபது வயது கிழவராகவா தோற்றமளிப்பார்? இளமையின் மிடுக்கும் கம்பீரமும் சிறிதும் குறையாமல் தன் அதிகாரத்தால் வீட்டையே நடுநடுங்க வைத்துக்கொண்டிருந்தார், ஐந்து தினங்களுக்கு முன்பு வரை. சென்ற வெள்ளிக்கிழமை மாலை அவருக்கு சந்தியாவந்தனத்திற்கு தண்ணீர் எடுக்கச் சென்ற அவர் மனைவி தலைசுற்றிக் கீழே விழுந்துவிட்டாள். அடி, எக்கச்சக்கமாகப் பட்டு உயிருக்கே அபாயமான நிலை வந்துவிட்டது. அவள் தனக்கு சக்தியிருந்தவரை அவருடைய காரியங்கள் யாவையும் அவளேதான் கவனித்துவந்தாள். அவள் படுத்துவிட்ட பிறகு அவருடைய மிடுக்கெல்லாம் குறைந்து அவருடைய இதயத்தில் எல்லையற்ற பலஹீனம் குடிகொண்டுவிட்டது. இதுநாள்வரை அவள் தான் அவருடைய வலிமைக்கெல்லாம் ஆதாரமாக நின்று அவரை இயக்கிக்கொண்டிருந்தாளோ?

அவர் உட்கார்ந்திருக்கிற இடத்திற்கு எதிரில் உள்ள அறையில்தான் ஜானகியைப் படுக்கவைத்திருந்தார்கள். பூட்ஸ்களின் ஒலி. டாக்டர் வருகிறார் போலும். கசமுச வென்ற சப்தம். அதோ டாக்டர் ஊசி போடுகிறார்.

"மிஸ்டர் ராகவன்; வெரி ஸாரி விடியற்காலம்வரை கூட தாங்காது." என்கிறார் டாக்டர். டாக்டர் போய்விட்டார். மகனும் மருமகளும் விம்மும் ஒலி.

உங்கள் அப்பா, அம்மா மேல் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறார் பாருங்கள். அம்மா நன்றாக இருந்தபோது அவர் மனம் குளிர அப்பா எதாவது பேசியிருப்பாரா? ஒரு பொருள் தன்னை விட்டுப் போகும்போதுதான் யாருக்குமே அதன மதிப்பு தெரிகிறது. அவர் மருமகள் தன் கணவனிடம் கூறுவது அவர் காதில் விழுகிறது. ஆமாம். அவள் கூறுவது முற்றிலும் உண்மைதான்.

ஜானகி தன் கணவன்மீது உயிரையே வைத்திருந்தாள். ஒருநாள்கூடப் பிரிந்திருக்கமாட்டாள். தலைச்சன் பிரசவத்திற்குப் பிறந்தகம் சென்றிருந்தாளே அதுதான் முதன் முதலாக அவரைப் பிரிந்திருந்தது. கடைசி தடவையும் அதுதான். அந்த காலத்திலேயே அவளைக் கொஞ்சம் படிக்க வைத்திருந்தார் அவள் தந்தை. அந்த அறிவைக்கொண்டு தன் கணவருக்குத் தன் அன்பையெல்லாம் கொட்டி வாரம் இரு கடிதங்கள் எழுதுவாள். ஏன்? கடைசிவரை அவள் அவரைப் பார்க்கும் பார்வையிலேயே ஆழ்ந்த அன்பு இழையோடும் தெய்வீக அன்பின் ஒளி அவள் முகத்தில் சுடர்விடும்.

மனம் ஒரு கண்ணாடி. இன்னொரு மனத்தின் அன்பு அதில் பிரதிபலிக்கும் என்கிறார்களே. அவரைப் பொறுத்தவரையில் அவர் மனம் கற்பாறையாக இறுகியிருந்தது. அன்பாக ஒரு சொல் கூறியிருப்பாரா? அப்போதெல்லாம் அவள், " இதோ பாருங்கள். யானைக்கு ஒரு காலம் வந்தால், பூனைக்கும் ஒரு காலம் வரும்." உங்கள் உயிரின் ஒவ்வொரு அணுவும், ஜானகி, ஜானகி என்று எனக்காக உருகும் நாள் வராமலா போகும். அதை நான் இறந்துவிட்டாலும் அகக் கண்களால் பார்க்கத்தான் போகிறேன்" என்று சிரித்துக்கொண்டே கூறுவாள்.

"வந்து விட்டது ஜானகி, அந்த நாள் வந்து விட்டது. இந்த ஐந்து நாட்களாக நான் உருகுவதை நீ உணர்வாயா ஜானகி? இளமையில் நீ எழுதிய கடிதங்களை இன்றுவரை உனக்குக் கூட தெரியாமல் பொக்கிஷம் போல் பாதுகாத்து வந்தேன் என்பதை நீ அறிவாயா ஜானகி, ஜானகி". அவர் உள் மனம் அரற்றியது.

அவர் எதிர் அறையை ஏறிட்டு நோக்கினார். அது சந்தடியற்றிருந்தது, மருமகள் சாப்பிடப் போயிருக்கிறாள் போலும். மெல்ல எழுந்தார். தள்ளாடிய படியே தன் மனைவி இருந்த அறைக்குச் சென்றார், அவள் அருகில் இருந்த ஸ்டூலின்மேல் உட்கார்ந்தார். 'ஜானகி,

ஜானகி' என்று இது நாள்வரை அவர் உள்ளத்தில் புதைந்திருந்த அன்பெல்லாம் ஒருங்கு சேரக் கூப்பிட்டார்.

"ஜானகி, உனக்கு என்ன செய்கிறது? பேசமாட்டாயா ஜானகி? ஆயிரம் அன்பு மொழி பேசும் உன் அதரங்கள் மூடிவிட்டனவே. ஒரு வார்த்தை ஒரே ஒரு வார்த்தை பேசமாட்டாயா? என் உயிரும் உடலும் ஒருசேர உனக்காகத் துடிப்பதை நீ அறியவில்லையா? பூவினும் மென்மையான உன் அன்பு மனம் இதை உணரவில்லையா?" கிழவர் கதறினர். அவர் கண்களினின்றும் சொறிந்த கண்ணீர்த் துளிகள் ஜானகியின் மீது விழுந்து சிதறின.

இதோ அவள் அசைகிருளே. அவள் உதடுகள் துடிக்கின்றனவே. கிழவர் அவள் அருகே குனிந்தார்.

"ஜானகி, என்ன வேண்டும்? என்னை ஏமாற்றி விட்டுப் போய்விடாதே. என்னைத் தனியனுக்கி விடாதே. ஜானகி.

மிகவும் சிரமப்பட்டு; "குங்—குமம்" என்ருள் ஜானகி. கிழவர் மேஜை மீதிருந்த குங்குமச் சிமிழியிலிருந்து குங்குமத்தை எடுத்து அவள் நெற்றியில் இட்டார்.

ஆ! அந்த முகத்தில்தான் எத்தனை ஒளி! உலகத்தில் உள்ள ஆனந்தமெல்லாம் அவள் உள்ளத்தில் நிறைந்திருந்தது. மெல்லப் புன் முறுவல் அவள் இதழ்களில் விரிந்தது. கிழவர் அவள் கரங்களை எடுத்துத் தன் இதயத்தில் பதித்துக்கொண்டார். அப்பா! அவர் துடிப்பை அவள் உணர்ந்து கொண்டுவிட்டாள். எல்லையற்ற சாந்தி அவர் முகத்தில் குடிகொண்டது.

சற்று நேரம் கழித்து அங்கு வந்த அவர் மகனும் மருமகளும் தெய்வீகக் காதலில் சங்கமித்துவிட்ட இரு ஜீவன்களின் வெற்றுடலைத்தான் கண்டனர்.

---



*Stockists* :—

★ ESSO PETROLEUM PRODUCTS
★ A. P. I. LOCKHEED PARTS
★ JAWA MOTOR CYCLES
★ CROMELITE STEEL FURNITURES

*Please contact* :—

AR. A. Shenbaga Nadar, P. V. P. Valasubramania Nadar & Co.,

*H.O.* :— 3/14, MACDONALDS ROAD, TIRUCHI-1. PHONE : 590

*Branch* :— 60, EAST BOULEWARD ROAD TIRUCHI-8.

பொதுமக்களின் ஆதரவே எங்கள் நோக்கம்

நெல் அரவைக்கும் — எண்ணெய் தயாரிப்புக்கும்
சிறந்து விளங்குகிறது

**கிருஷ்ணா ரைஸ் & ஆயில் மில்ஸ்**

காரைக்குடி—1

சுப. திருவேங்கடசாமி நாயுடு, உரிமையாளர்.

# மாதவி

★

ரமணிசுபாஷ்

அன்று எங்கள் வீடு கோலாகலமாயிருந்தது. அந்தணர்களும், முதியோர்களும், ஏழை எளியவர்களும், குழுமி இருந்தனர். நானும் தாய்மை அடைந்த பூரிப்புடன் மகிழ்ந்திருந்தேன். அது, எங்கள் அன்பில் விளைந்த அமுதமான செல்வமகளுக்கு பெயர் சூடும் நாள்.

"என் அருமை மகளுக்கு "மணிமேகலை" என்று பெயரிடு", முன்பு,

"தெளிதிரைப் பெருங்கடல் உடைகலப்பட்ட எங்கோன்" மணிமேகலா தெய்வத்தின் மகிமையால் காப்பாற்றப்பட்டான் ஆதலின்,

"விழுமந் தீர்த்த எங்குலத் தெய்வப் பெயர் இடுகென" அன்பு கணவர் மொழிந்தார். சூழ்ந்திருந்த கணிகையர் யாவரும் "மணிமேகலை" என வாழ்த்தினர்.

நானும் என் காதலரும் வந்திருந்த மறையோருக்கும், முதியோருக்கும், பொன்னும், பொருளும் வாரி வழங்கினோம். அச்சமயம் "தண்டுகால் ஊன்றி வளைந்த யாக்கை மறையோன்" ஒருவன் யாசகம் பெற வந்து கொண்டிருந்தான். அந்தோ பரிதாபம்! யானை ஒன்று வேகமாக துரத்தி வந்தது அம் முதியோனை. அப்போது, அக் கடக்களி றடக்கிய கருணை மறவர், என் பிரபுவை, இனி என்று காண்பேன்?

பரத்தையர் குலத்தில் பிறந்து ஆடல் பாடலில் சிறந்து விளங்கிய நான், அன்று கன்னித்தன்மை மாறுத கட்டழகி. என் ஆடலிலும் அழகிலும் மயங்கினர் கோவலன் என்பார். அவர் என் மாலையை விலைக்கு வாங்கினர். அவரையே என் கணவராக வரித்தேன். பல்லாண்டு காலம் சுகித்திருந்தோம். ஒரு நாள் எங்கள் வாழ்வில் விதி விளையாடியது.

அன்று காவிரிக் கரையில் ஊடிச் சென்ற அன்புக் கணவர் என்னிடம் திரும்பி வருவார் என்று நம்பியிருந்தேன். ஏமாற்ற மடைந்தேன். பிரிவுத் துயரில் ஆழ்த்திச் சென்ற அவர் என்றுமே வரமாட்டார் என்று நான் அறிந்திருக்கவில்லை "பிரிவு" என்பது எத்துணை கொடுமையானது? என் சகோதரி கண்ணகியின் துயரத்தை அதற்குமுன் நான் உணர்ந்திருப்பேனா? இப்போது உணர வைத்தார் என் கணவர்.

என்னை யாவரும் விலைமாதுதானே என்று இகழ்ச்சியாக எண்ணலாம். யாவருக்கும் இன்பமூட்டுதலும், பொருளீட்டுதலும் குலத்தொழிலாக கொண்டிருந்தாலும், கோவலனைத் தவிர ஒருவரையும் யான் மனதாலும் நினைத்தேனில்லை.

கருத்து வேறுபாடு காரணமாக என்னைத் தவருக புரிந்துகொண்டு என் கணவர் என்னை விட்டு நீங்கினர். நான் அனுப்பிய ஆள் மூலமாக அவருடைய ஐயப்பாடு நீங்கி விட்டது என்று அறிந்து நான் சற்று நிம்மதியுடனிருந்தேன். ஆனால் "ஐயகோ" கள்வனாக குற்றம் சாட்டப்பட்டு கொலையுண்டு சாகவோ என்னை விட்டுப் பிரிந்தார்? அவர் இறந்துவிட்ட சேதியறிந்து நானும் வெள்ளையுடை உடுத்தினேன், துறவறம் மேற்கொண்டேன்.

கண்ணகி பட்ட துயரம் நாடு அறியும். அவளுடைய துயருக்கு காரணம் மாதவியே என்று யாவரும் என்னை தூற்றலாம். தமது பொருள் யாவையும் விலைமாதுவிடம் இழந்து, இழந்த பொருளை யீட்டவே மதுரை மாநகரம் போந்தார் கோவலன். போன இடத்தில் வெட்டுண்டார். இதற்கெல்லாம் மாதவியே காரணம் அன்றோ என்று என்னை யாவரும் ஏசலாம்.

ஆனால் என் கணவரின் அன்புக்காக நான் வாழ்ந்தேன். அவருக்காகவே அவரை நேசித்தேன். அவருடைய செல்வத்தை விரும்பவில்லை. தமது குன்றனைய செல்வத்தை என்னால் இழக்கவில்லை. என்னுடன் அவர் வாழ்ந்தபோது என் செல்வத்தை பொருட்டாக வெண்ணாது செலவழித்தேன், தான தருமங்கள் நாங்கள் செய்தோம். என் அன்பாலும் ஆடல் பாடலாலும் அவரை மகிழ்வித்து வாழ்ந்தேன்.

என் அன்புக் கணவரின் பொருளை பறிக்கும் எண்ணத்துடன் வாழ்ந்திருந்தால், நான், என்செல்வம் சிறிதேனும் குறையத் துணிவேனா? ஊழ் வினையால் என் காதல் கணவர் என்னைப் பிரிந்தார்.

குந்தித் தின்றால் குன்றும் கரையுமல்லவா? மேலும், மேலும் சேர்த்தால்தானே செல்வம் பெருகும்? என்னிடம் ஊடிச் சென்று, கண்ணகியை அடைந்த என் கணவர் தானும் தன் வணிகக்குல வழக்கப்படி சுயமாகத் தொழில் செய்து பொருளீட்ட எண்ணினர். அந்த உறுதியினால் கண்ணகியை அழைத்துக்கொண்டு மதுரை ஏகினர். ஊழ்வினை வலிமையால், சென்ற இடத்தில் வெட்டுண்டார், இறந்தார். அன்புக் கணவரை நாங்கள் இழந்தோம். பரிதாபத்திற்கு ஆளானோம்.

திருமணச் சடங்குகள் நடைபெருத ஒருகுறை தவிர, என் இல்வாழ்வில் வேறு ஒரு குறையும் இல்லை. மாலையை யளித்து என் மணாளனை அடைந்தேன். "மாதவி" என்று ஒரு அழகிய கொடிக்கு பெயரிட்டழைக்கிறார்கள். அந்த பெயருடைய என் அழகில் அவர் மயங்கினர், நானும் அவருடைய அழகில் மயங்கினேன். அன்போடு இருவரும் பல்லாண்டுகள் வாழ்ந்தோம். மணிமேகலையைப் பெற்றோம்.

என் அழகில் மயங்கிய என் காதலர் தன் அன்பு மனைவியைப் பிரிந்து என் பின் வந்தார். நம் நாட்டில்

பலரை மணக்கும் வழக்கம் இருந்து வந்தாலும், நான் அநியாயமாக கோவலனையும், கண்ணகியையும் பிரித்தேன் என்பதை யுணர்ந்தேன். அப்படியும் அவர்கள் சேர்ந்து வாழ கொடுத்து வைக்கவில்லை. விதிவென்றது.

இன்று மணிமேகலைக்கு பெற்றேர் கண்ணகியும் கோவலனுமே யாவர். தாய் நானல்ல, கண்ணகியே மணிமேகலையின் தாய். கண்ணகி கோவலனுடன் வாழ்ந்திருந்தால் மணிமேகலை கண்ணகியின் வயிற்றில் பிறக்கும் பேறு பெற்றிருப்பாள். ஆகவே என் அருமை மகளுக்கு கண்ணகியே தாய், இந்த எண்ணத்திலேயே நான் என் மகளை தூய்மையுடன் வளர்த்தேன். அவளுடைய எதிர் காலத்தை உறுதியுடன் வரையறுத்தேன். நான் தந்தையை அறியாதவளாயிருப்பினும், என் அருமை மகள் கோவலனைத் தந்தையாக அடையும் பேறு பெற்ருள்.

என்னையும் என் மகளையும் கணிகையர்க்கு இயல்பான ஆடல் பாடல்களில் ஈடுபடுத்த என் தாயும் அரசன் முதலானேரும் விரும்பினர். ஆனல் நானே; "மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை அருந்தவப் படுத்தல் அல்லாது யாவதும் திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅள்" என்று என் தாய் சித்ராபதியிடம் கூறி நானும் என் மகள் மணிமேகலையும் அறவணடிகளைப் பணிந்து புத்த மதம் சார்ந்து விட்டோம். இவ்வாறு நான் வாழ்க்கைப்புரட்சி செய்ததற்கு பெரும் எதிர்ப்பு எழுந்தது. நான் அதற்கு அஞ்சுவேனு? இனி என் வாழ்வில் என்ன இன்பம் எஞ்சியிருக்கிறது?

சிலகாலம் கணவனுடன் வாழ்ந்திருப்பினும் இல்லற இன்பத்தைபூரணமாக நுகர்ந்தறியாள் கண்ணகி. அவள் வாழ்வில் பெருந்துயருற்ருள். பேராவலுடன் புதுவாழ்வு தொடங்கிய அவள் மதுரை நகரை அடைந்தவுடனே தன் கணவனை இழந்தாள், தன் வாழ்வையே இழந்தாள். கண்ணகியையும் கோவலனையும் நான் வேண்டுமென்று பிரிக்கவில்லை. ஆயினும் அக் குற்றத்தால் கண்ணகி பெருந்துயருற்ருள்.

அவள் வயிறு எரிந்தது. அதன் பயனுக மதுரைமாநகரமே எரிந்தது. எரிந்துபோன நகரில் பசியும், பட்டினியும் கூத்தாடியது.

எங்கும் பரவிய பஞ்சம், பசித்துன்பத்தை, மணிமேகலை நீக்கினுள். தனது வற்ருத அட்சய பாத்திரமான அமுதசுரபியின் உதவியினுல் மக்களை பசிப்பிணியினின்று காத்தாள். அன்று கண்ணகியின் சீற்றத்தால் மதுரை அழிந்தது, மக்கள் வயிறு காய்ந்தது. இன்று மணிமேகலையின் ஈகையால் மக்கள் வயிறு நிறைந்தது.

"மண்டினி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே."

இவ்வகையில் என் குற்றத்திற்கு என் மகள் மணிமேகலை பரிகாரம் தேடினுள் என்று சற்று உள்ளம் நிறைந்தேன்.

மணிமேகலையை எங்கள் குலத்தொழிலுக்குப் புறம்பானதான துறவுத் துறையில் நுழைத்து விட்டேன். என் பெயருக்கு பெருமை தேடிக்கொண்டேன். என் செல்வ மகளும் உலகிற்கெல்லாம் நன்மை பயக்கும் வாழ்வினைப் பெற்று எங்களுக்கு நற்பெயர் தேடிக் கொடுத்தாள். நானும் எஞ்சிய எனது காலத்தை துறவறத்தில் கழித்தேன். இதுவே என் சோகக் கதை.


உ

# ஜவுளி (P. R. N. & CO.) காரைக்குடி.

**இது வெறும் விளம்பரம் மட்டும் இல்லை. உண்மையே உரைக்கின்றேம்.**

பண்டிகைகளை முன்னிட்டு ஏராளமான புது டிசைன்களில் ஜவுளிகள் வந்துள்ளன.

தங்களுக்குத் தேவையான காடா, சலவை மல், பலவித உயர்ந்த சீட்டிகள், ஷர்ட்டிங், உயர்ந்த ரக சூட்டிங் (பரிசளிக்கத் தகுந்தவை) கைத்தறி நூல் சேலைகள், பட்டுப் புடவைகள், வேஷ்டிகள், Art சில்க், லான் மற்றும் ஜாக்கட்டிங் ரகங்கள் எல்லாவிதமானதும்எங்களிடம் கிடைக்கும்.

பின்னி கம்பெனியாரின் சூட்டிங், ஷர்ட்டிங்குகள் மற்றும் உயர்தர (Bintex) கைத்தறி சேலைகள், பெட்ஷீட் வேஷ்டிகள் கைலி ரகங்களும் எங்களிடம் ஏராளமாக ஸ்டாக் இருக்கின்றன. ஜவுளித் துறைகளில் தங்களுக்கு எது தேவையோ அது எங்களிடம் உண்டு.

**நிதானமான ஒரே விலை!**

டெரிலின் சூட்டிங், ஷர்ட்டிங் ரகங்கள் எங்களிடம் கிடைக்கும்.
எங்கள் விற்பனையாளர்கள் தங்களுக்கு உதவிபுரிவார்கள்.

தங்கள் வரவை அன்புடன் எதிர்பார்க்கிறேம் ★ எங்களிடம் மொத்த வியாபாரமும் உண்டு

## P. R. நாராயணசாமி அய்யர் & கோ.,

ஜவுளி வியாபாரம், கண்ணன் பஜார், காரைக்குடி.
PHONE: 135.

## P. R நாராயணசாமி அய்யர்,

Branch: FANCY HALL,
சைனு பஜார், திருச்சிராப்பள்ளி-2.
PHONE: 2165 ]

P. B. No. 401,
பெரிய கடைவீதி, திருச்சிராப்பள்ளி-8.
PHONE: 2026 & 2235

தந்தி விலாசம்: "BONTEX"

# சிந்தித்துச் செயல்படுவோம்

**[ டி. எல், பஞ்சாபகேசன் ]**

★

செப்பு மொழி பதினெட்டுடையாள் ஆயினும் சிந்தனை ஒன்றுடையாள் எங்கள் அன்னை என்று பாரத தேவியைப் பாடுகிறார் மகாகவி பாரதியார். அன்னியன் இந்நாட்டை அடிமைப்படுத்தி ஆண்ட நாட்களில், இந்நாட்டு மக்கள் அனைவரின் சிந்தனையும் "விடுதலை" என்ற ஒரே சிந்தனையை மனதில் கொள்ளும்படி அழுத்தமாகப் பாடியிருக்கிறார் மகாகவி. பாரதியின் வாக்கில் தெய்வீகத் தன்மை தாண்டவமாடியதினால் அவன் வாக்குகள் அனைத்தும் பலித்தது. பலித்து பலனளித்து வருவதையும் நாம் இன்று கண் கூடாகப் பார்த்து அனுபவித்து வருகின்றோம்.

"வள்ளுவன் குறள்" இந் நாட்டின் பொதுமறையாக நாம் இன்று ஏற்றுக் கொண்டு அதன் வழி நடக்க முயற்சித்து வருவதைப்போல், மகா கவியின் வாக்கில் உதித்திட்ட கவிகள் அனைத்தும் இந் நாட்டின் மக்கள் முன்னேற்றத்திற்குத் தேவையான வகையில் அமைந்து விட்டது. வள்ளுவனும் -மகாகவியும் அவர்கள் தங்கள் சுயநலம் கருதி எதையாவது தெரிவித்திருந்தால் அது நிலைத்திருக்க முடியாது போயிருக்கும் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. நாட்டின் தன்மை, அதன் நலம், மக்கள் வாழ்க்கைத்தரம், அவர்களின் முன்னேற்றம், பண்பாடு, கலை, மொழி, இலக்கிய வளர்ச்சி அனைத்தையும், அவர்கள் சிந்தித்து ஒரே நோக்கத்தோடு வழங்கியுள்ள இலக்கியப் படைப்புகள் அனைத்தும், இன்றும், என்றும் இந் நாட்டு மக்களாலும், ஏனைய நாட்டவராலும் போற்றி வளர்க்கப்பட வேண்டிய இலக்கிய பொக்கிஷங்களாகத் திகழ்கின்றன. இவ்வுலகம் உள்ளளவும் அது நீடித்து வளர்ந்தே வாழ்ந்து வரும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லையென உறுதியாகக் கூறிவிடலாம்.

சமயத்துறையின் முன்னேற்றங் கருதி பாக்கள் புனைந்துள்ள நாயன்மார்கள் — ஆழ்வார்கள் — வள்ளலார் போன்றவர்களின் கருத்தும் உலகமக்கள் அனைவரின் முன்னேற்றம் கருதி பாடியுள்ளதாக அமைந்திருப்பதனால்தான் அதைப் போற்றி வளர்க்கும் அளவிற்கு நம்மிடம் நிலைத்து நிற்கின்றது என்பதை நாம் உணர வேண்டும் அவர்களின் சிந்தனைகளிலும் நாட்டு மக்கள் முன்னேற்றம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு பிறந்த இலக்கியப் படைப்புகளாக இருப்பதை நாம் காண்கின்றோம் அத்தன்மையதாய் இருப்பதால்தான் அதை ஏனைய நாட்டவரும் அறியும் வண்ணம் எடுத்துரைக்கும் வாய்ப்பையுடையவர்களாக நாம் இருந்து வருகின்றோம்.

இலக்கியப் படைப்புகள் மட்டும் இருந்துவிட்டால் நாடு முன்னேற்றம் அடைந்து விடாது. அதை நல்ல வழியில் செயல்படுத்தும் கர்ம வீரர்கள் நாட்டில் அவதரிக்க வேண்டும். அந்த வழியில் வந்து உதித்திட்ட, விவேகாநந்தர் - மகாத்மா காந்தி இவர்களை இவ்வுலக மக்கள் அனைவரும் மதித்துப் புகழும் அளவுக்கு அவர்களின் தொண்டு இந் நாட்டிற்குத் தேவையாக இருந்தது. அவர்களின் சிந்தனையில் சுயநலம் சிறிதும் இன்றி, பொது நோக்கோடு தொண்டுபுரியும் தன்மையதாய் இருந்ததினால் அவர்களைப் போற்றிப் புகழ்ந்து அவர்கள் எடுத்துரைத்துச் சென்ற பாதைக்கு மக்களை அழைத்துச் செல்லும் துணிவு நமக்குப் பிறந்திருக்கிறது.

பாரத நாடு சுதந்திரம் பெற்றது மேதைகளின் சலியா சத்திய உழைப்பினால். நாட்டின் முன்னேற்றத்திற்கு பாகுபாடற்ற தன்மையில் பல வழிமுறைகளை வகுத்து அதை செயலாக்கப் பாடுபடுகிறார்கள் நாட்டை ஆள்பவர்கள். ஆளும் கட்சியினை ஆதரிப்போரும் - அவர்களை செயலாக்கவிடாமல் தொல்லைகள் விளைவிப்பவர்களும் நம்மிடை இருந்துவருகிறார்கள். அவர்கள் வகுக்கும் திட்டங்களில் ஓர் சில குறைகள் இருக்கலாம். அதை வகுப்பவர்களும் நமது மக்கள் தான் என்பதை நாம் சிந்திக்க மறந்து, அவர்கள் மீது குறைகளையும் - குற்றங்களையும் சுமத்த நாம் துணிந்து விடுகின்றோம். சாதாரண ஒரு சிறிய குடும்பத்தை நடத்தி வெற்றி காண்பதில் சிக்கல்கள் எத்தனை முளைத்து விடுகின்றன என்பதை நம்மில் பலர் மறந்து விடுகின்றனர். கருத்து வேறுபாடும் - ஒத்துழைக்காத் தன்மையும் கொண்ட ஒருசிலர் குடும்பத்தில் இருந்துவிட்டதனால் அக்குடும்பம் எவ்வாறு சீர்குலைந்து போகின்றது என்பதையும் நாம் அறிந்துள்ளோம். தெரிந்தும் தவறுகள் செய்யும் மக்கள் இனத்தை நினைக்கும்போதுதான் அவர்களின் மீது நாம் இரக்கப்படுவதைத் தவிர வேறு வழியில்லை.

இன்றைய நிலையில் நாட்டின முன்னேற்றத்திற்கு எழுத்தாளர்களின் சிந்தனை நல்லதாக அமையவேண்டும். எழுத்தாளர்கள் இந்நாட்டு மக்களில் தாங்களும் ஒருவர் என்ற கருத்தை மனதில் நிலைத்து வைத்துக் கொண்டு தங்கள் இலக்கியப் படைப்புகளை படைக்க முயன்றால்தான், அவர்கள் படைப்புகள் அனைவராலும் போற்றி வளர்க்கப்படும் சிரஞ்சீவித் தன்மையுடைய இலக்கியங்களாக பிறந்துவிடும். ஒருசில எழுத்தாளர்கள் தாங்கள் ஏதோ மொழிக்கும், இலக்கியத்திற்கும் தொண்டு புரிவதாக நினைத்து, நாட்டுக்கும், மக்கள் பண்பாட்டிற்கும் ஒவ்வாத பல கற்பனைகளை தங்கள் இலக்கியப்படைப்பில் புகுத்தி விடுகிறார்கள். அவ்வாறு படைக்கும் படைப்புகள் அன்றோடு மறைந்துவிடும் என்பதை அவர்கள் சிந்திக்கத் தவறிவிடுகிறார்கள். நாட்டிலும் தீய சக்திகளை வளர்த்து விடும் அளவுக்கு அவர்கள் இலக்கியப் படைப்புகள் விரைவில் வளர்ந்து விடுகிறது.

நாட்டின் நல்வாழ்வு எழுத்தார்களின் சிந்தனையில் தான்பிறக்கின்றது. நாடு நலம் பெற்றால் எழுத்தாளர்கள் நலம் பெறமுடியும். அதற்காக, எழுத்தாளர்கள் அனைவரும், மொழி, இன, நாடு பாகு பாடின்றி நல்லவைகளையே சிந்தித்து, தங்கள் இலக்கிய படைப்புகளை சிருஷ்டித்துக் கொடுத்தால் தான், அவர்கள் புகழும், வள்ளுவனைப் போலவும் - மகாகவி பாரதியைப் போலவும் நிலைத்து நிற்கமுடியும். எழுத்தாளர்களாகிய நாம் இதை மனதில் உறுதியாகக் கொண்டு இலக்கியப் படைப்புகளில் புகுவோமானால் புகழ் தானே வந்தடையும் என்ற நம்பிக்கையுடன் சிந்தனைகளை நல்ல முறையில் சிந்தித்துச் செயல்படுத்த முயல்வோமாக.

———